மகாகவி கம்பர்

இயற்றிய

சரசுவதி யந்தாதி, சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கைவழக்கம்

மூலமும் உரையும்

வை. மு. கோ. பதிப்பு

வை. மு. நரசிம்மன்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் கம்பெனி,

17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5.

கீலக ௵
மாசி ௴ } 1969 [விலை ரூ. 5—50

சரசுவதி யந்தாதி.

வை. மு. சடகோபராமாநுஜாசார்யரும்

சே. கிருஷ்ணமாசார்யரும்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யரும்

இயற்றிய உரையுடன்

ஆனந்தா பார்வதி அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது.

கம்பர் வரலாறு.

இவர், சோழநாட்டிலே திருவழுந்தூரில் நான்காம் வருணத்திற் பிறந்தவர்.

இவரது சமயம், வைஷ்ணவமே.

இவர், இளமையிலேயே தந்தை இறந்ததனால், போஷகரில்லாமல் தாயுடனே திருவெண்ணெய்நல்லூரில் சடையப்பரென்னும் வள்ளலினிடம் போய்ச்சேர்ந்து, அவரால் ஆதரிக்கப்பெற்று, அவர் வீட்டுப்பிள்ளைகளுக்குப் பாடசாலைக்குப்புத்தகமெடுத்துக்கொண்டு போகின்றவராய் அவர்களுடன் படித்துவந்தனர். இவர்க்குச் சரசுவதீகடாக்ஷமும், கம்பரென்னும்பெயரும் உண்டானதைப்பற்றி ஒரு கதை உண்டு: இவர் அங்ஙனம் பள்ளியிற் படித்து வருநாளில், அவ்வுபாத்தியாயர், தமக்கு வைரபுரமென்னுங் கிராமத்தி லுள்ள கம்பங்கொல்லை தினைக்கொல்லைகளைக் காப்பதற்காகத் தம்மிடத்திற் படிக்கும் பிள்ளைகளைத் தினம் ஒவ்வொருவராக அனுப்பும் முறைப்படி ஒருநாள் இப்பிள்ளையை அனுப்ப, இவரும் அன்று காலைதொடங்கிக் கொல்லையிற் காத்துவந்து நல்லவெயிலில் நித்திரை வந்ததனால், அக்கொல்லையினருகிலிருந்த காளிகோயிலிற் போய்ப் படுத்துத்தூங்கினார். தூங்குகையிற் கொல்லையில் ஒருகுதிரை வந்து மேய்வதாகக் கனாக்கண்டு எழுந்து பார்க்க, கனவிற் கண்டபடியே பயிரை அவ்வூராள்வோனாகிய காளிங்கராயனது குதிரை மேயக்கண்டு, அதனைத் துரத்தியும் அது போகாமையால் அஞ்சி நடுங்கிக் காளிகோயிலுக்கெதிரேபோய்நின்று புலம்பினார். அதுகண்டு காளி கருணை கூர்ந்து பிரசன்னையாகி, 'பிள்ளாய்! அழாதே; உன் நாவை நீட்டு' என்றாள். இவர் அங்ஙனமே நீட்ட, தேவி அதிற் பீஜாக்ஷரத்தை எழுதி அநுக்கிரகித்தனள். பின்பு இவர் திரும்பிச்சென்று கொல்லையிற் போய்ப் பார்க்க, அப்பொழும் குதிரை அப்புறம்போகாது அங்கேயே மேய்ந்து கொண்டிருந்தது. அப்பொழுது காளிகாதேவியின் அனுக்கிரகத்தாற் சரசுவதீகடாக்ஷம் பெற்ற இவரது வாக்கினின்றும், அதுகண்ட கோபத்தால், தற்செயலாக, "வாய்த்த வயிரபுரமாகாளியம்மே கேள், காய்த்ததினைப்புனத்துக் காலைவைத்துச்—சாய்த்துக், கதிரை மாளத் தின்ற காளிங்கராயன், குதிரை மாளக்கொண்டுபோ" என்று ஒருகவி உண்டாயிற்று. அங்ஙனம் இவர் பாடியவுடனே அக்குதிரை கீழே விழுந்து இறந்தது. அதனைக் கேட்டறிந்த உபாத்தியாயர் ஓடிவந்து பார்த்து, அதிகாரியின் கோபத்திற்கு ஆளாவோமேயென்று கலக்கமுற, இவர், முன்பு பாடிய வெண்பாவின் நான்காம்அடியை "குதிரை மீளக் கொண்டுவா" என்று திருப்பிப்பாட, மாண்டகுதிரை மீண்டெழுந்தது. காளிங்கராயன் இதனைக் கேள்வியுற்று அக்காலத்தில் அரசுசெலுத்தி வந்த குலோத்துங்க னென்னுஞ் சோழனுக்கு அறிவிக்க, அவன் அச்சிறுவனைத் தான்பார்க்கவேண்டுமென்று வருவித்தனன். அங்ஙனமே இவர் கோலுங்கையுமாய்ப் போய்நிற்க, அவன்,

* 'இக்கம்பனு அங்ஙனஞ் செய்தவன்?' என்றனன். இதனுலும், கம்பங்கொல்லையைக் காத்ததனுலும், இவர்க்குக் கம்பர் என்று பெயராயிற்று: இதற்கு வேறு சில காரணமுங் கூறுவர். இவர் பின்பு சோழராஜனது ஸம்ஸ்தாந வித்துவான்களுக்குத் தலைவராகி இராசசபைக்கு நாள்தோறும் சென்று சமயோசிதமாகவும் சாதுரியமாகவும் பல கவிகள் பாடிப் பிரசங்கிக்கத் தலைப்பட்டு "புவிச்சக்ரவர்த்திகள் போற்றிப் பழிச்சுங், கவிச்சக்கரவர்த்தியாங் கம்பர்" என்பது போன்ற பலவிருது கூறப் புலமை செலுத்திவந்தனர். இவர்க்கு அம்பிகாபதியென்று ஒருமகன் பிறந்து, அவனும் சிறந்த வித்துவானுகி இவரோடு ராஜசபைக்கு நாடோறும் போய்ப் பெருமைபெற்றுவந்தனன்.

கம்பர் இராமாயணம் பாடியது, சடையப்பவள்ளலினது பெருமுயற்சியால். எங்ஙனமெனின்,—அவர் மகாகவியாகிய கம்பரது புலமைத்திறம் விளங்குமாறு இவரை ஏதாவது ஒரு பிரபந்தம் பாடும்படி செய்யவேண்டுமென்று சோழராசனுக்கு அறிவிக்க, அவன் தனியே ஒருவரைப் பாடச் செய்தலினும் இருவரை ஒருசேரப் பாடும்படி செய்தாற் புலமைத்திறம் நன்ருக விளங்குமென நினைத்து, கம்பர் ஒட்டக்கூத்தர் இருவரையும் 'ஸ்ரீராமசரித்திரத்தைத் தமிழ்ப்பாவினுற் பாடி முடிக்கவேண்டும்' எனக் கட்டளையிட்டனன். கட்டளையிட்டபின்பும் கம்பர் பலநாள் பாடாமலேயிருந்து, ஒட்டக்கூத்தர் சுந்தரகாண்டம் வரையிற் பாடி முடித்து யுத்தகாண்டம் பாடிக்கொண்டிருக்கையில், மறுபடி அரசனுல் ஏவப்பட்டு, இவ்விராமாயணம் பாடினுர். பாடுகையிற் பிரதிதினம் இராப்பொழுதெல்லாம் வடமொழிப்புலவர்களை வைத்துக்கொண்டு வால்மீகம் ஆத்யாத்மம் போதாயநம் முதலிய ராமாயணங்களையும், பலபுராணங்களையும் ஆராய்ச்சி செய்து, பகற்பொழுதிலே நாளொன்றுக்கு எழுநூறு பாடல் விழுக்காடு யுத்தகாண்டம் வரையில் ஆறு காண்டமும் பதினுயிரத்துச் சில்லறை பாடல்களாற் பதினைந்து நாளிற் பாடி முடித்தனர். அங்ஙனமிருக்கையில் ஒருநாள், கம்பர், ஒட்டக்கூத்தர் வீட்டு வாயிலின் வழியே போகையில், அவர், தாம்செய்த இராமாயணம் கம்பராமாயணத்திற்கு முன் தலையெடாதென அறிந்து அதனைக் கிழித்தெறிந்துகொண்டிருக்க, கண்டு, அவ்விடஞ் சென்று, அதற்குள் யுத்தகாண்டம் வரையிற் கிழிபட்டுப் போகவே, மிச்சமான உத்தரகாண்டத்தை அப்படியே கிழியாது வைத்திருக்க வேண்டிக்கொண்டார்; அதுவே கம்பராமாயணத்திற்கு ஏழாவது காண்டமாக வழங்கலாயிற்று. கம்பர் அம்பிகாபதிக்கு விவாகம்நடத்தியபோது சடையப்ப வள்ளல் சிறிதுகாலந்தாழ்த்துவந்ததனுல் இருக்க இடம் பெருது சலதாரையோரத்தில் ஒதுங்கி நின்றதைப் பார்த்து வருந்திய தம்மனைவியை நோக்கி 'இவரை நாம் வைக்கவேண்டிய இடத்தில் மேலாகவைப்போம்' எனக்கூறியிருந்தபடி, தம்மை ஆதரித்த அச்சடையப்பப்பிரபுவை நன்றிமறவாமையால் இராமாயணத்தில் அங்கங்கே சிறப்பித்துச் சொல்லியிருக்கிருர். பின்னர் இராமாயணம், திருவரங்கம்பெரியகோயிலில் மேட்டழகியசிங்கர் சிரக்கம்பஞ் செய்யுமாறு நாதமுனிகள் திருவோலக்கத்தில் அரங்கேற்றப்பட்டது. அந்தக் காலம் முதலியவற்றை

* கம்பன் - கம்புடையவன்; கம்பு = கொம்பு. உலகவழக்கு.

"எண்ணிய*சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்பநாடன்
பண்ணிய விராம காதை பங்குனி யத்த நாளிற்
கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றினனே" எனக் காண்க.

இவர் சரசுவதியந்தாதி பாடியதைப்பற்றி வழங்குவதொரு வரலாறு :—கம்பர் ஒருகால் சோழராசனோடு மனஸ்தாபப்பட்டுச் சோழநாட்டைவிட்டுச் சேரநாடுசேர்ந்து கம்பரிடத்தில் அடைப்பக் காரனு யிருந்தவ னென்று தம்மைச் சொல்லிச் சேரராசனிடத்தில் அடைப்பைக்காரனு யமர்ந்து அங்குத் தமதுகல்வித்திறத்தைக் காட்டி அரசனுடைய அன்பையும் மதிப்பையும் பெற்றுச் சிறந்து வாழ, அதுகண்ட அந்தச் சேரசம்ஸ்தான வித்துவான்கள் பொறாமை கொண்டு ஓர் அம்பட்டனுக்குப் பொருள்கொடுத்து அவனைக்கொண்டு அடைப்பக்காரனுயிருந்த கம்பரைத் தனது தமையனென்று சொல்லிச் சாதித்து அவமானப்படுத்த முயன்றார்கள். அப்பொழுது கம்பர் சரசுவதியைத் தியானித்து 'தாயே! இந்த ஆபத்துக்காலத்தில் அடியேனைப் பாதுகாக்கும்பொருட்டுத் திருவுள்ளமிரங்கி உன்து இடக்காற் சிலம்பை என்னிடம் கொடுத்தருளவேண்டும்' என்று பிரார்த்திக்க, அவ்வாறே நாமகள் அனுக்கிரகித்ததனல், அவளுடைய வச்சிரச்சிலம் பொன்று உடனே கம்பர்கையிற் கிடைத்தது; அதனை அவர், அரசனுக்குக்காணிக்கையாகக்கொடுத்து 'இதன் இனமான மற்றொன்று என் தம்பியான இந்த அம்பட்டனிடத்தில் இருக்கிறது; அதனையும் பெற்றுக்கொள்ளவேண்டும்' என்று வேண்டினர். காண்பவர் கண்கூசும்படி சொலிக்கின்ற அவ்வொற்றைச்சிலம்பைக் கையில் வாங்கிப் பார்த்து ஆச்சரியங்கொண்ட அரசன் அந்த அம்பட்டனை நோக்கி 'உன்பங்கிலுள்ள மற்றொரு சிலம்பைக் கொண்டுவா' என்று சொல்ல, அவன்மிகஅஞ்சி 'இல்லை' என்றான். கம்பர் அதனைப் பொய்ச்சாதனை யென்று வற்புறுத்திக் கூற, அரசன்கட்டளைப்படியே ஏவலாளர் அம்பட்டனைக் கட்டியடிக்கலானார்கள். அடிபொறுக்க மாட்டாமல் அவன் 'இந்த அடைப்பைக்காரருக்கும் எனக்கும் யாதொருசம்பந்தமுமில்லை, இந்தச் சம்ஸ்தானவித்துவான்கள் என்னைக்கொண்டு இப்படி யெல்லாம் செய்வித்தார்கள்' என்று உண்மையைச் சொல்லிநிலைநிறுத்தினன். பின்பு அரசன் கம்பரை நோக்கி 'இந்த அற்புதச்சிலம்பு உனக்கு ஏது?' என, கம்பர் 'இது சரசுவதியினது' என்று சொல்லிஅதனை மெய்ப்பிக்கும் பொருட்டுச் சரசுவதியைத்தியானித்துச் சரசுவதியந்தாதி யென்னும் இந்நூலைப் பாடித் தோத்திரித்தவளவிலே, அக்கலைமகள் ஒற்றைக்காற்சிலம்பு ஒலிக்க நடனஞ்செய்துகொண்டு பிரதியக்ஷமாகத் தோன்றி 'எங்கே சிலம்பு?' என்று கம்பரைக்கேட்க, இவர் அரசன்கையிலிருந்த

---

* சகாத்தம்-சாலிவாகனசகாப்தம்: இப்பொழுது நடப்பது, 1888; ஆகவே, கம்பர்காலம் இப்பொழுதைக்கு ஆயிரவருஷங்களுக்குமுன்பு என்பர். குலோத்துங்கசோழன் காலம் எனப்படுதலால், கி. பி. 12-ஆம் நூற்றாண்டு என்பாருமுளர்.

சிலம்பை வாங்கி அத்தேவியின் இடத்திருவடிக்கு நேரே நீட்ட, அது அத்திருவடியிற் போய் ஏறினமாத்திரத்தில், கலைவாணி அந்தர்த்தானமாய்விட்டாள். அதுகண்டு வியந்தசேரன் கம்பரை நன்கு விசாரித்து அவர் இன்னுரென்ற உண்மையை அறிந்துகொண்டான்.

இவர்செய்த வேறுநூல்கள் - ஆழ்வார்நூற்றந்தாதியென வழங்குகின்ற சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கை வழக்கம் முதலியன.

இவர்காலத்துஇருந்த வித்துவான்கள் - புகழேந்திப்புலவர், ஒட்டக்கூத்தர், ஔவை முதலியோர்.

இவர் சரித்திரவிவரத்தை விநோதரசமஞ்சரி, புலவர்புராணம் முதலிய நூல்களிற் காணலாம்.

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் சயங்கொண்டான் விருத்தமென்னு, மொண்பாவி லுயர்கம்பன் கோவை யுலா வந்தாதிக் கொட்டக்கூத்தன், கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசை பாடக் காளமேகம், பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலா தொருவர் பகரொணுதே"

என்பதனுல், இவர், விருத்தம்பாடுதலில் மிகச்சிறந்தவரென விளங்கும்.

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிசொல்லும்', 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்ற பழமொழிகள் இவரது கல்வித்திறத்தை மெச்சி வழங்கியன.

ஸ்ரீ

சரசுவதி யந்தாதி.

சரசுவதியினது அந்தாதி என விரியும்; சரசுவதியின் விஷயமாக அந்தாதித்தொடையாற் பாடப்பட்டதொரு பிரபந்த மென்பது பொருள். இத்தொடர்மொழியில் தொக்குநின்ற ஆறும்வேற்றுமை யுருபின் பொருளாகிய சம்பந்தம், விஷயமாகவுடைமை; விஷ்ணு புராணம், விநாயகரகவல் என்பவற்றிற் போல. ஸரஸ்வதி என்ற வட சொல்-(எங்கும்)வியாபித்தலையுடையவளென்று காரணப்பொருள்படும். இவள் - பிரமன்மனைவி, கல்விக்குஉரிய தெய்வம். அந்தாதி - அந்தத்தை ஆதியாக உடையது; வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; வடமொழித் தொடர்: தீர்க்கசந்தி: அந்த ஆதி எனப் பிரிக்க. அந்தாதியாவது - ஒருசெய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்த செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது. இங்ஙனம் பாடும் நூலின் ஈற்றுச்செய்யுளின் அந்தமே முதற்செய்யுளின் ஆதியாக அமைதல், மண்டலித்த லெனப்படும். இது, தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றும். இதனைச் சிறுகாப்பியத்தில் அடக்கு வர் ஒருசாரார்.

இந்நூல் - முதலிற் காப்புச்செய்யுளாகவுள்ள இரண்டு வெண்பா நீங்கலாக முப்பது கட்டளைக்கலித்துறைகளால் அமைந்தது.

காப்பு.

காப்பு - காத்தல்; 'பு' விகுதி பெற்ற தொழிற்பெயர்: அது - இங்கு, காக்கின்ற கடவுளின் விஷயமான வணக்கத்துக்குத் தொழி லாகுபெயர். ஆகவே, கவி தமக்கு நேரிடத்தக்க இடையூறுகளை நீக்கித் தமது எண்ணத்தை முடிக்கவல்லதோர் பொருளின் விஷயமா கச் செய்யுந் தோத்திர மென்பது கருத்து.

இக்காப்பு இந்நூலாசிரியர்க்கு இஷ்டதேவதையும் இந்நூலுக் குத் தலைவியுமான சரசுவதியின் விஷயமான தாதலால், இதனை, வழிபடுகடவுள் வணக்கத்தோடு ஏற்புடைக்கடவுள்வணக்கமு மாகு மென்று கொள்ளலாம். (வழிபடுகடவுள் - தம்மாற் பூசிக்கப்படும் தெய்வம். ஏற்புடைக் கடவுள் - தாம் பாடத்தொடங்கிய நூலுக்கு ஏற்ற தெய்வம்.)

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை—தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

(இதன்பொருள்.) ஆய - பொருந்திய, கலைகள் அறுபத்து நான்கினையும் - அறுபத்துநான்குவகைக் கல்விகளையும், ஏய - தகுதியாக [உரியபடி], உணர்விக்கும் - (தனக்கு அடிமைப்பட்ட என்போலியர்க்குத்) தெரியச் செய்தருளுகின்ற, என் அம்மை - எனது தாய் போன்றவளும், தூய உரு பளிங்கு போல்வாள் - பரிசுத்தமான திருமேனி ஸ்படிகம்போல வெண்ணிறமாக இருக்கப்பெற்றவளும் ஆகிய சரசுவதிதேவி, என் உள்ளத்தினுள்ளே இருப்பள் - எனது மனத்திலே(எப்பொழுதும்) எழுந்தருளியிருக்கிறாள்; (ஆதலால்), இங்கு இடர் வாராது - இவ்விடத்தில் துன்பமொன்றும் வரமாட்டாது; (என்றவாறு.)

கலைகளெல்லாவற்றிற்குந் தலைவியும், அவற்றையெல்லாம் தனது அடியார்க்கு அருள்பவளும், சத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் மூன்று வகைக் குணங்களுள் சத்துவகுணத்தையே யுடையளென்பது தோன்ற வெண்ணிறமாய் விளங்குபவளும், தன் அடியாரது புலமைத் திறத்துக்கு இடையூறு நேரிடாதபடி பரிபாலிப்பவளும், ஒருகால் இடையூறு சேர்ந்தாலும் அதனை உடனே ஒழிக்கவல்லவளு மான சரசுவதியை யான் வழிபடுகடவுளாகக் கொண்டு அன்போடு தியானிக்கின்றேனாதலால், அவள் யான் நினைத்த வண்ணமாய் எனது உள்ளக்கமலத்தில் வந்து எழுந்தருளியிருக்கிறாள். ஆதலால், யான் இயற்றத்தொடங்கிய இப்பிரபந்தத்துக்கும், மற்றும் யான் விரும்பும் நற்பேறுகளுக்கும் இடையூறொன்றும் வரமாட்டா தென்று துணிந்து கூறியவாறும்.

ஆய - ஆகிய, இறந்தகாலப் பெயரெச்சம்: ய் - காலங்காட்டும் இடைநிலை. கலா, அம்பா, ரூபம், ஸ்படிகம் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. கலைஞானம் அறுபத்து நான்கு - சுருதி, ஸ்மிருதி, இதிகாசம், புராணம், தர்க்கம், வியாகரணம், சோதிஷம், வைத்தியம், சில்பம், கணிதம், சங்கீதம், நர்ட்டியம் முதலியன; அகராதியிற் காண்க. உம்மை - முற்றும்மைப்பொருளது. ஏய - செயவெனெச்சம்; ஏய் - பகுதி. மிக்க அன்புடைமையும், நன்குமதிக்கப்படுதலும்பற்றி, 'அம்மை' என்றார். இருப்பள் என்பதில், பகரவிடைநிலை - எதிர்கால முணர்த்தாது தன்மைமாத்திரத்தை உணர்த்திற்று. 'இங்கு' என்பது - மூவிடங்களுள் தன்மையிடத்தை உணர்த்தும்; என்னிடத்து என்றபடி. வாராது என்ற எதிர்மறைமுற்றில், ர் - விரித்தல் விகாரம்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந்—துடியிடையு
மல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

(இ - ள்.) (சரசுவதிதேவியினுடைய), படிகம் நிறமும் - ஸ்படிகம் போன்ற வெண்ணிறத்தையும், பவளம் செவ் வாயும் - பவழம்போலச் சிவந்த வாயையும், கடி கமழ் தாமரை பூ போல் கையும் - வாசனைவீசுகிற (செந்) தாமரைமலர் போலச் சிவந்த திருக்கைகளையும், துடி இடையும் - உடுக்கைபோன்ற இடையையும், அல்லும் பகலும் அன

வரதமும் துதித்தால் - இரவும் பகலுமாகிய எப்பொழுதும் (இடைவிடாது) தோத்திரஞ்செய்தால், கல்லும் கவி சொல்லாதோ - (அசேதனமாகிய) கல்லும் கவிபாடமாட்டாதோ? [தவறுது பாடுமென்றபடி]; (எ - று.)

எவ்வளவு அறிவினர்களும் சரசுவதியைத் தோத்திரித்தால் அவளருள்பெற்றுக் கவிபாடக் கூடுமென்று அவளுடையமகிமையை உணர்த்தியவாறு. வாழ்த்து, வணக்கம், தலைமைப்பொருளுரைத்தல் என்ற மூன்றுவகை மங்களங்களுள், முந்தின செய்யுள் - தியானமென்னும் மனவணக்கத்தை யுணர்த்தியது: இச்செய்யுள் - தலைமைப்பொரு ளுரைத்தது.

படிகநிறம், பவளச்செவ்வாய், தாமரைபோற்கை என்பன - வினை பயன் மெய் உரு என்ற நால்வகையுவமைகளில் உருவுவமை; (உரு - நிறம்.) துடியிடை - மெய்யுவமை; (மெய் - வடிவு.) உடுக்கைபோல மேலும் கீழும் அகன்று நடுச்சிறுத்திருக்கும் இடை யென்க. ஸ்படிகம், ப்ரவாளம், தாமரஸம், அநவரதம் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. கவி - தற்சமவடசொல். பாடுவோனை யுணர்த்துவதாகிய இச்சொல் - அவனால் பாடப்பட்ட செய்யுளை யுணர்த்தும்போது கருத்தாவாகுபெயராம். கடி - உரிச்சொல். கல்லும், உம் - இழிவு சிறப்பு. அநவரதமும், உம்மை - முற்றுப்பொருளது. மற்றை உம்மைகள் - எண்ணுப்பொருளன. சொல்லாதோ என்பதில், இரண்டு எதிர்மறை - உடன்பாட்டுப்பொருளை யுணர்த்தித் தேற்றக்கருத்தை விளக்கும்.

நூல்.

1. சீர்தந்தவெள்ளிதழ்ப்பூங்கமலாசனத்தேவிசெஞ்சொற்
றார்தந்தவென்மனத்தாமரையாட்டிசரோருகமேற்
பார்தந்தநாதனிசைதந்தவாரணப்பங்கயத்தாள்
வார்தந்தசோதியம் போருகத்தாளை வணங்குதுமே.

(இ - ள்.) சீர் தந்த - சிறப்பு அமைந்த, வெள் இதழ் பூ கமலம் - வெண்ணிறமான இதழ்களையுடைய அழகிய தாமரையை [வெண்டாமரை மலரை], ஆசனம் - இருக்குமிடமாகக்கொண்டு அதில் வீற்றிருக்கிற, தேவி - தலைவியும்,—செம்சொல் தார் தந்த - செவ்விய சொற்களின்வரிசையை உண்டாக்கிக்கொடுத்த [கல்வித்தெய்வமான என்றபடி], என் மனம் தாமரை ஆட்டி - எனது மனமாகிய தாமரை மலரில் வீற்றிருந்து அதனை யாள்பவளும்,—சரோருகம் மேல் - (திருமாலின் திருநாபித்) தாமரைமலரின் மேல் (தோன்றி), பார் தந்த - உலகங்களைப் படைத்த, நாதன் - தலைவனை பிரமதேவன், இசை தந்த - ஸ்வரங்களோடு வெளியிட்ட, ஆரணம்-வேதமாகிய, பங்கயத்தாள் - தாமரைமலரில் வீற்றிருப்பவளுமான சரசுவதியினுடைய, வார் தந்த சோதி - மிகுதியாக வெளிவீசுகிற ஒளியையுடைய, அம்

போருகம் தாளே - செந்தாமரைமலர்போன்ற திருவடிகளை, வணங்குதும் - வணங்குவோம், (யாம்); (எ-று.)—ஏ-ஈற்றசை.

ஆதியில் திருமால் தனதுநாபியில் தோன்றிய பிரமனுக்கு வேதங்களை உபதேசிக்க, அவன் பின்பு அவற்றை உலகத்தில் வெளியிட்டன னாதலால், 'சரோருகமேற் பார்தந்தநாத னிசைதந்த ஆரணம்' எனப்பட்டது: "தன்னுபி வலயத்துப் பேரொளிசேர், மன்னிய தாமரை மாமலர் பூத்து அம்மலர்மேல், முன்னந் திசைமுகனைத்தான்படைக்க மற்றவனும், முன்னம்படைத்தனன் நான் மறைகள்" எனத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்ததையுங்காண்க. படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிற்கும் உரிய முதற்கடவுளரான திரிமூர்த்திகளில் ஒருவனாதலால், 'நாதன்' என்றார். மனத்தாமரை - இருதயகமலம். அன்பால் நினைவாரது உள்ளக்கமலத்தில் வந்து வீற்றிருத்தல்பற்றி, 'என்மனத்தாமரையாட்டி' என்றார். தார் - மாலை. 'செஞ்சொல் தார் தந்த' என்றது, தாமரையாட்டிக்கு அடைமொழி. செவ்விய பாமாலையைப் பாடிய என்று பொருள்கொண்டு, 'என்' என்பதற்கு அடைமொழியாக்குதலும் ஒன்று. ஆட்டி - ஆளன் என்பதன் பெண்பால்; ஆள் - பகுதி, இ-பெண்பால்விகுதி, ட்-எழுத்துப்பேறு, ளகரம் டகரமானது-சந்தி.

வேதத்துக்கு உரிய ஸ்வரம் உதாத்தம் அநுதாத்தம் ஸ்வரிதம் ப்ரசயம் என நான்காம். வேதம் சரசுவதி வாழ்தற்கு இனிய உறைவிடமாதலால், 'பங்கயம்' எனப்பட்டது. மூன்றும் அடியினால், 'நாமகள்' என்னும்படி பிரமனது வேதமோதும் வாக்கில் வசிப்பவளென்பதும் தோன்றும். 'வார்தந்த' என்றதில், வார் என்ற வினைப்பகுதியின் மேல், தா - துணைவினை. வார்தல் - மிகுதல். வணங்குதும் என்ற தன்மைப்பன்மையைக் கவிகளுக்கு உரிய இயல்புபற்றி வந்ததென்றாவது, தன்னைப் போன்ற அடியார்களையும் உளப்படுத்தியதென்றாவது கொள்க. கமலாஸநம், தேவீ, மநஸ், தாமரஸம், ஸரோருஹம், நாதன், பங்கஜம், ஜ்யோதி, அம்போருஹம் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. கமலாஸநம் - தீர்க்கசந்தி பெற்ற தொடர்மொழி. ஸரோருஹம் என்பது-குளத்தில் முளைப்பதென்றும் (ஸரஸ்-நீர்நிலை), பங்கஜம் என்பது - சேற்றில் முளைப்பதென்றும் (பங்கம் - சேறு), அம்போருஹம் என்பது - நீரில்முளைப்பதென்றும் (அம்பஸ் - ஜலம்) காரணப்பொருள்படும். இவை - இங்ஙனம் தோன்றும் பிறவற்றுக்கெல்லாம் காரணக்குறியாகாது தாமரை யொன்றற்கே பெயராய் வழங்குதல் காரணவிடுகுறி. சீர் - ஸ்ரீ என்ற வடசொல்லின் சிதைவென்பர். ஆரணம்-தற்சமவடசொல்.

இச்செய்யுளில், ஒருபொருளையேகுறிக்கிற கமலம், தாமரை, சரோருகம், பங்கயம், அம்போருகம் என்ற பலசொற்கள் வந்தது, பொருட்பின்வருநிலையணி. (1)

2. வணங்குஞ்சிலைநுதலுங்கழைத்தோளும்வனமுலைமேற்
சுணங்கும்புதியநிலவெழுமேனியுந்தோட்டுடனே
பிணங்குங்கருந்தடங்கண்களுநோக்கிப்பிரமனன்பா
லுணங்குந்திருமுன்றிலாய்மறைநான்குமுரைப்பவளே.

(இ - ள்.) மறை நான்கும் உரைப்பவளே - வேதங்கள்நான்கையும் உரைக்கின்ற தன்மையுடையவளே!—(உனது), வணங்கும் சிலை நுதலும் - வளைந்த வில்லைப்போன்ற நெற்றியையும், கழை தோளும் - இளமூங்கிலைப்போன்ற தோள்களையும், வனம் முலைமேல் சுணங்கும் - அழகிய தனங்களின் மீது பரவிய தேமலையும், புதிய நிலவு எழும் மேனியும் - இளமையான சந்திரகாந்தி வீசுகின்ற [மிகவும்வெண்மையான] திருமேனிநிறத்தையும், தோட்டுடனே பிணங்கும் கரு தடகண்களும் - காதணியோடு போர்செய்கின்ற [காதளவும்நீண்ட] கரிய விசாலமான கண்களையும், பிரமன்-(உனதுகணவனை) பிரமதேவன், நோக்கி - பார்த்து, அன்பால் - அன்பினால், உணங்கும் - வாடிக் கிடக்கும்படியான, திரு முன்றிலாய் - அழகிய முற்றத்தினை யுடையாய், (நீ); (எ - று.)

நீ உனதுதலைவனை பிரமதேவனிடத்து ஊடல்கொண்டபோது அவ்வூடலைத் தணித்துக் கூடப்பெறாமல் அப்பிரமதேவன் உனது நெற்றி முதலிய அவயவங்களின் செவ்வியை நோக்கி வருந்திக் கிடக்கும் முற்றத்தினையுடையாய் நீ யென்று அவளது மிக்கபெருமையை எடுத்துப் பாராட்டிக் கூறியவாறு. "ஊடுதல்காமத்திற்கின்பமதற்கின்பங், கூடிமுயங்கப்பெறின்" என்னுந் திருக்குறளின்படி ஊடுதல் காமத்திற்கு இன்பந்தருவதாயினும், அவ்வூடலைத்தணித்துக் கூடி முயங்கப்பெறாமையால், பிரமதேவன் வாடி நிற்ப னென்க.

மகளிர்தோள்களுக்கு இளமூங்கில், திரண்டுஉருண்டுநீண்ட வடிவிலும் நெய்ப்பிலும் உவமையாம். சுணங்கு - காமவிகாரத்தா லுண்டாகும் நிறவேறுபாடு; பசலை, தேமல் எனப்படும். தோட்டுடனே பிணங்குங் கருந்தடங்கண்கள் - காதணியோடு போர்செய்யும்படியான [அதாவது - காது வரையில் நீண்ட] கறுத்த விழிகளையுடைய பெரிய கண்க ளென்றவாறு. 'மறைநான்கு முரைப்பவள்' என்றது, வேதத்திற்கு அதிதேவதை யென்றபடி; வேதங்களை எப்போதும் ஓதுகின்ற பிரமதேவனது மனைவி யென்றுமாம். முன்றில் - வீட்டின் முன்னிடம்; இல் முன் என்பன முன்றில் என்று புணர்வது, இலக்கணப் போலி. (2)

3. உரைப்பாருரைக்குங்கலைகளெல்லாமெண்ணிலுன்னையன்றித்
தரைப்பாலொருவர்தரவலரோதண்டரளமுலை
வரைப்பாலமுதுதந்திங்கெனைவாழ்வித்தமாமயிலே
விரைப்பாசடைமலர்வெண்டாமரைப்பதிமெல்லியலே.

(இ - ள்.) தண் தரளம் வரை முலை பால் அமுது தந்து-குளிர்ச்சியான முத்துமாலைகளை யணிந்த மலைபோன்ற (உனது) தனங்களின் பாலாகிய அமிருதத்தைக் கொடுத்து, இங்கு - இவ்வுலகில், எனை - என்னை, வாழ்வித்த - நன்றாகப் பெருமையோடு வாழச்செய்த, மா மயிலே - (சாயலால்) பெருமையையுடைய மயில்போன்றவளே!—விரை - நறுமணத்தையுடைய, பாசு அடை - பசிய இலைகளோடு கூடிய, வெள் தாமரை மலர் பதி - வெண்டாமரைமலராகிய ஆசனத்தில வாழ்கின்ற, மெல் இயலே - மெல்லிய தன்மையுடையவளே!—

எண்ணில் - ஆலோசித்துப் பார்த்தால், உரைப்பார் உரைக்கும் கலைகள் எல்லாம் - இவ்வுலகத்திலுள்ளார் சிறப்பித்துக்கூறுகின்ற எல்லாச்சாஸ்திரங்களையும், தரைப்பால் - இவ்வுலகத்தில், உன்னை அன்றி ஒருவர் - உன்னையல்லாமற் பிறரொருவர், தர வலரோ - கொடுக்குந்தன்மையுடையராவரோ? [ஆகார் என்றபடி.]; (எ - று.)

நீயொருத்தியே எல்லாக்கலைகளையும் அடியார்கட்குக் கொடுக்குந் தன்மையுடையாய் என்பதாம். 'தண்டரளமுலை......மாமயிலே' என்றது, அடியேனுக்கு ஞானப்பாலூட்டினதனால் யாதொன்றையும் அறியாத அடியேனை இவனையன்றி உலகத்தில் வேறுஎவருமில்லை யென்னுமாறு வாழச்செய்தவளே யென்ற குறிப்பு. பசுமை + அடை = பாசடை; பண்புப்பெயர் ஈறுபோய் ஆதி நீண்டது. பதி - வாசஸ்தானம். (3)

4\. இயலானதுகொண்டுநின்றிருநாமங்களேத்துதற்கு
முயலாமையாற்றடுமாறுகின்றேனிந்தமூவுலகுஞ்
செயலாலமைத்தகலைமகளே நின்றிருவருளுக்
கயலாவிடாமலடியேனையுமுவந்தாண்டருளே.

(இ - ள்.) இயலானது கொண்டு - கல்வியைக் கொண்டு, நின் திரு நாமங்கள் ஏத்துதற்கு முயலாமையால் - உனது திருப்பெயர்களைத் துதித்தற்கு முயலாததனால், தடுமாறுகின்றேன் - நிலைகலங்குகிறேன்: இந்த மூ உலகும் செயலால் அமைத்த கலை மகளே - இந்த மூன்றுவகை யுலகங்களையும் தன்செயலாற் படைத்தருளிய சரசுவதியே! நின் திரு அருளுக்கு அயல் ஆ விடாமல் - உனது சிறந்த கருணைக்குப் புறம்பாக விட்டிடாமல், அடியேனையும் உவந்து ஆண்டு அருள் - (உனக்கு) அடிமைப்பட்டவனாகிய என்னையும் (மற்றையடியார்களைப்போலவே) அன்புகொண்டு பாதுகாத்தருளுவாய். (எ - று.)

இந்த மூவுலகு - மேல் கீழ் நடு என்பன. சகலலோகங்களையும் படைத்த கடவுளான பிரமனது தொழிலை உபசாரமாக அவன் மனைவியின்மே லேற்றி 'இந்த மூவுலகுஞ் செயலா லமைத்த கலைமகளே' என்றார். அன்றியும், பிரமனது சத்திசொரூபமான இவள் அவனது படைப்புத் தொழிற்கு உதவியாதலுங் காண்க. இனி, உலகத்தவ ரெல்லோரையும் தனது நிகழ்ச்சியால் நடைபெறச்செய்த என்றுகூறலும் ஒன்று. கலைமகள் - கல்விக்கு உரிய மகள், இயலானதுகொண்டு என்பதற்கு - இயற்றமிழ்ப்பாடல்களினால் என்றும் பொருளுரைக்கலாம். இதில், 'ஆனது' என்றது - பகுதிப்பொருள் விகுதி; கொண்டு - மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு. முயலாமை - எதிர்மறைத் தொழிற்பெயர். முயலுதல்-பிரயத்தனப்படுதல். அயலா என்பதில், 'ஆ' என்பது - ஆக என்பதன் விகாரம். அயல் - வெளிவிலக்கு. அடியேன் - அடிமை யென்னும் பண்பினடியாப்பிறந்த தன்மையொருமைக்குறிப்புவினையாலணையும்பெயர்; உம்மை - எச்சப் பொருளோடு இழிவுசிறப்பு. நாமம் - வடசொல். (4)

5. அருக்கோதயத்தினுஞ்சந்திரோதயமொத்தழகெறிக்குந்
திருக்கோலநாயகிசெந்தமிழ்ப்பாவைதிசைமுகத்தா
னிருக்கோதுநாதனுந்தானுமெப்போதுமினிதிருக்கு
மருக்கோலநாண்மலராளென்னையாளுமடமயிலே.

(இ - ள்.) அருக்க உதயத்தினும் சந்திர உதயம் ஒத்து அழகு எறிக்கும்-சூரியோதயத்தைக்காட்டிலும் மிகுதியாக விளங்குவதொரு சந்திரோதயத்தைப் போன்று அழகியஒளியை வீசுகிற, திரு கோலம்-திருமேனியையுடைய, நாயகி-தலைவியும், செம் தமிழ் பாவை-செவ்விய தமிழுக்கு உரிய தேவதையும், திசை முகத்தால் இருக்கு ஓதும் நாதனும் தானும் எப்போதும் இனிது இருக்கும் - நான்குதிக்கையும் நோக்கிய நான்குமுகங்களால் (நான்கு) வேதங்களையும் ஓதிக்கொண்டிருக்கிற தன்கணவனை பிரமதேவனும் தானுமாக எப்பொழுதும் கூடி இனிமையாக வீற்றிருக்கின்ற, மரு கோலம் நாள் மலராள் - வாசனையுள்ள அழகிய அன்றுமலர்ந்த தாமரைப்பூவில் வாழ்பவளுமான சரசுவதி, என்னை ஆளும் மட மயில்-என்னை அடிமைகொண்டு பாதுகாக்குந் தேவதையாவள்; (எ-று.)

மடமயில்-மடப்பமுள்ள மயில்; மடப்பம்-இளமைக்குணம். மயில் போன்ற சாயலுடையவளை 'மயில்' என்றது, உபசாரவழக்கு; உவமையாகுபெயர். சரசுவதியினது அழகிய திருமேனி வெண்ணிறமாய்ச் சூரியனொளியினும் மேலாகப் பிரகாசித்தல்பற்றி, 'அருக்கோதயத்தினுஞ் சந்திரோதயமொத்து அழகெறிக்குந் திருக்கோலம்' எனப்பட்டது. அருக்கோதயத்தின் என்றதில், ஐந்தனுருபு - எல்லைப் பொருளது; உம் - உயர்வுசிறப்பு. அர்க்கோதயம், சந்த்ரோதயம் - குணசந்திபெற்ற வடமொழித்தொடர்கள்; 'அ ஆமுன் உ ஊவரின் இரண்டும்கெட ஓர் ஓகாரம் தோன்றும்.' அருக்கனது உதயம், சந்திரனது உதயம் என ஆறும்வேற்றுமைத்தொகை. நாயகி - நாயகனென்பதன் பெண்பால். செந்தமிழ் - சுத்தமான தமிழ், கலப்பில்லாத தமிழ். இதற்கு மாறுனது, கொடுந்தமிழ் எனப்படும். இருக்கு - ருக் என்ற வடசொல்லின் விகாரம்; இது, நான்குவேதங்களில் ஒன்றற்குச் சிறப்புப்பெயராவதோடு எல்லாவேதங்கட்கும் பொதுப்பெயராகவும் நிற்கும். நாள் மலர் - புதிய மலர். (5)

6. மயிலேமடப்பிடியேகொடியேயிளமான்பிணையே
குயிலேபசுங்கிளியேயன்னமேமனக்கூரிருட்கோர்
வெயிலேநிலவெழுமேனிமின்னேயினிவேறுதவம்
பயிலேன்மகிழ்ந்துபணிவேனுனதுபொற்பாதங்களே.

(இ-ள்.) மயிலே-(சாயலில்) மயில் போன்றவளே! மடம் பிடியே - (நடையழகில்) இளமையான பெண்யானை போன்றவளே! கொடியே - (மெல்லியவடிவங்கொண்டு ஒல்கிஒசியுந்திறத்தில்) பூங்கொடிபோன்றவளே! இள மான் பிணையே - (பார்வையழகில்) இளமையான பெண் மான் போன்றவளே! குயிலே - (இனியகுரலில்) குயில்போன்றவளே! பசு கிளியே - (இனிமையாகக் கொஞ்சிப் பேசுதலில்) பச்சைக்கிளி

போன்றவளே! அன்னமே - (நடையழகில்) அன்னப்பறவை போன்றவளே! மனம் கூர் இருட்கு ஓர்வெயிலே-(ஜனங்களுடைய) மனத்தின் மிக்க அஜ்ஞாநமாகிய இருளைப்போக்குதற்கு ஒப்பற்றதொரு சூரியகாந்திபோன்றவளே! நிலவு எழு மேனி - சந்திரகாந்திபோன்ற வெள்ளொளி விளங்குகின்ற திருமேனியையுடைய, மின்னே-மின்னல் போலப் பிரகாசிப்பவளே! இனி வேறு தவம் பயிலேன் - இனி வேறு தவமெதனையும் செய்யமாட்டேன்: மகிழ்ந்து உனது பொன் பாதங்களே பணிவேன்-மகிழ்ச்சிகொண்டு உனது திருவடிகளையே வணங்குவேன்; (எ-று.)—ஈற்று ஏகாரம்- பிரிநிலை; மற்றவை-விளியுருபு.

மயில் முதலியன-உவமையாகுபெயர். பிடி-யானையின் பெண்மைப் பெயர்; இதன் ஆண்பால்-களிறு. பிணை-மானின் பெண்மைப்பெயர்; இதன் ஆண்பால் - கலை. கூர் - உரிச்சொல். புறவிருளை நீக்குகின்ற வெயிலினும் அகவிருளைநீக்குகின்ற இதற்கு உள்ள சிறப்பு விளங்க ''ஓர்வெயில்'' என்றார். நிலவு - நிலா என்பதன் விகாரம். பொன் - அழகு. பொற்பாதம்-பொன்போலச் சிறந்த பாதமுமாம்; பொன்னணி யணிந்த பாதமெனினுமாம்; இப்பொருளில், பொன்-கருவியாகுபெயர். மயில்-மயூரம், அன்னம்-ஹம்ஸம்; வடசொற் சிதைவுகள். (6)

7. பாதாம்புயத்திற்பணிவார்தமக்குப்பலகலையும்
வேதாந்தமுத்தியுந்தந்தருள்பாரதிவெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம்புயத்திலிருப்பாளிருப்பவென்சிந்தையுள்ளே
யேதாம்புவியிற்பெறலரிதாவதெனக்கினியே.

(இ-ள்.) பாத அம்புயத்தில் பணிவார் தமக்கு-(தனது) திருவடித் தாமரைகளில் விழுந்து வணங்குபவர்களுக்கு, பல கலையும்-பலவகைச் சாஸ்திரங்களையும், வேதாந்த முத்தியும்-வேதாந்தத்திற் கூறப்படுகிற மோக்ஷத்தையும், தந்து அருள் - கொடுத்தருள்கிற, பாரதி - பாரதி யென்னும் ஒருதிருநாமமுள்ளவளும், வெள் இதழ் - வெண்ணிறமான இதழ்களையுடைய, பூ-அழகிய, சீத அம்புயத்தில் - குளிர்ந்த தாமரை மலரில், இருப்பாள் - வீற்றிருப்பவளுமான சரசுவதி, என் சிந்தையுள்ளே இருப்ப-எனது மனத்திலே வீற்றிருத்தலால், இனி எனக்கு புவியில் பெறல் அரிது ஆவது ஏது ஆம் - இனிமேல் எனக்கு உலகத்தில் பெறுதற்கு அரியதாகும் பொருள் யாதாகும்? [யாதுமில்லை யென்றபடி]; (எ-று.)

யான் சரசுவதியை இடைவிடாது தியானித்து அவளுடைய மாறுக்கருணையைப்பெற்றேனாதலால், இனி எனக்கு எல்லாப்பேறுகளும் எளிதிற் கைகூடு மென்பதாம். பாதாம்புஜம், வேதாந்தம், சீதாம்புஜம் - தீர்க்கசந்திபெற்ற வடமொழித்தொடர்கள். அம்புஜம்- நீரில்தோன்றுவது: அம்பு-நீர். வேதாந்தம் என்பது - வேத அந்தம் எனப்பிரிந்து, வேதத்தின் ஈற்றுப்பகுதியும் தேர்ந்தகருத்துமாகிய உபநிஷத்துக்களைக் குறிக்கும். பூர்வகாண்டம் உத்தரகாண்டம் என வேதம் இரண்டாகப் பகுக்கப்பட்டு, அவற்றில் யாகாதி கிரியைகளைக் கூறுகிற முந்தினபாகம் கருமகாண்டம் என்றும், கடவுளைப்

பற்றிக் கூறுகிற பிந்தியபாகம் ஞானகாண்டம் அல்லது பிரமகாண்டம் என்றும் கூறப்படும். முக்தி என்ற வடசொல் - எல்லாப்பற்றுக்களையும் விட்டு அடையுமிடம் என்றும், பாரதீ என்ற வடசொல் - எல்லாவற்றையும் பரிப்பவள் என்றும் [பரித்தல் - நிர்வகித்து நடத்தல்] காரணப்பொருள்படும். புவி-வடசொல். (7)

8. இனிநானுணர்வதெண்ணெண்கலையாளையிலகுதொண்டைக்
கனிநாணுஞ்செவ்விதழ்வெண்ணிறத்தாளைக்கமலவயன்
றனிநாயகியையகிலாண்டமும்பெற்றதாயைமணப்
பனிநாண்மலருறைபூவையையாரணப்பாவையையே.

(இ - ள்.) இனி நான் உணர்வது - இனிமேல் யான் தியானிப்பது,—எண் எண் கலையாளை - அறுபத்துநான்கு கலைஞானங்கட்கும் உரியவளும், இலகு தொண்டை கனி நாணும் செம் இதழ் - விளங்குகின்ற கொவ்வைப் பழம் (ஒப்பாகமாட்டாது) வெள்குதற்குக் காரணமான சிவந்தவாயிதழையும், வெள் நிறத்தாளை- வெண்மையான திருமேனி நிறத்தையும் உடையவளும், கமலம் அயன் தனி நாயகியை - தாமரைமலரில்வாழ்கிற பிரமனுடைய ஒப்பற்ற மனைவியும், அகில அண்டமும் பெற்ற தாயை - எல்லா அண்டகோளங்களையும் பெற்ற தாயும், மணம் பனி நாள் மலர் உறை - வாசனையையுடைய குளிர்ந்த அன்றுபூத்த தாமரைப்பூவில் வீற்றிருக்கிற, பூவையை - கிளிபோன்றவளும், ஆரணம் பாவையை-வேதங்கட்கு உரிய அதிதேவதையுமான சரசுவதியையேயாம்; (எ - று.)

எண்ணெண்கலை-பண்புத்தொகைப் பன்மொழித்தொடர். தொண்டை-ஓர்கொடி. தொண்டைக்கனி நாணுஞ் செவ்விதழ்-கொவ்வைக்கனியினும் மிகச் சிறந்த இதழ் என்றபடி. நாணும் இதழ்-பெயரெச்சம் காரியப்பொருளது; 'நோய்தீரும்மருந்து' என்றவிடத்திற் போல. செவ்விதழ் வெண்ணிறத்தாள்'என்றவிடத்து முரண்தொடை இருத்தல் காண்க. அஜன் என்ற வடசொல், அயன் என விகாரப்பட்டது; திருமாலினிடத்துத் தோன்றியவனென்று பொருள்படும்; அ-விஷ்ணு. பூவை, பாவை-உவமையாகுபெயர்கள். (8)

9. பாவுந்தொடையும்பதங்களுஞ்சீரும்பலவிதமா
மேவுங்கலைகள்விதிப்பாளிடம்விதியின்முதிய
நாவும்பகர்ந்ததொல்வேதங்கணான்குநறுங்கமலப்
பூவுந்திருப்பதம்பூவாலணிபவர்புந்தியுமே.

(இ - ள்.) பாவும்-பாடல்களும், தொடையும்-தொடைகளும், பதங்களும்-சொற்களும், சீரும்-சீர்களும், பல விதம் ஆ மேவும்-பலவகையாக அமையப்பெற்ற, கலைகள் - நூல்களை, விதிப்பாள்-நிர்வகிப்பவளான சரசுவதிக்கு, இடம்-இருப்பிடங்களாவன,—முதிய விதியின் நாவும்-(எல்லாப்பிராணிகளுக்கும்) மூதாதையான பிரமனுடைய நாக்கும், பகர்ந்த தொல் வேதங்கள் நான்கும் - (அவனால்) சொல்லப்பட்ட பழமையான நான்கு வேதங்களும், நறு கமலம் பூவும் - வாசனையையுடைய வெண்டாமரைமலரும், திரு பதம் பூவால் அணிபவர் புந்தி

யுமே - தனது திருவடிகளை மலர்களைக்கொண்டு இட்டு அருச்சிக்கின்ற அடியார்களுடைய மனமுமேயாம்; (எ - று.)

பா - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா முதலியன. துறை, தாழிசை, விருத்தம் என மூன்று வகையான இவற்றினினங்களும், பாஎன்றதில் அடங்கும். தொடை - எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது. அது, எதுகை மோனை முரண் முதலாகப் பலவாம். பதங்கள் - பகுபதமும், பகாப்பதமும்; பெயர் வினை முதலிய சொற்களெனினுமாம். சீர் - ஓரசைச்சீர் முதலியன. இவற்றின் தன்மையை, இலக்கண நூல்களிற் காண்க. தொடையும், சீரும் - பாவின் உறுப்பு. கலைகள்விதிப்பாள் - கல்வித்தெய்வ மென்றபடி. விதி - படைத்தற் கடவுள். அவன் பிதாமகன் எனப்படுகின்ற முதன்மை தோன்ற, 'முதியவிதி' என்றார். தொல் வேதம் - பண்புத்தொகை. வேதம்-ஒருவராலும் ஆக்கப்படாமல் கடவுள்போல நித்தியமாக வுள்ளதென்பது தோன்ற, 'தொல்வேதம்' எனப்பட்டது. இதனை ஆதியில் திருமால் பிரமனுக்கும், பின்பு பிரமன் மற்றையோர்க்கும் வெளியிட்டுக் கூறினரே யன்றி, யாரும் இதனைச் செய்தவரல்லரென அறிக. இதுபற்றி, வேதத்துக்கு 'செய்யாமொழி' என ஒருபெயர் வழங்கும். வேதம் என்ற வடசொல் - நன்மைதீமைகளை விதிவிலக்குக்களால் அறிவிப்பதென்று பொருள்படும்; வித் - அறிவித்தல். வேதங்கள் நான்கு-ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்பன. புந்தி - புத்தி என்ற வடசொல்லின் விகாரம். (9)

10. புந்தியிற்கூரிருணீக்கும் புதியமதியமென்கோ
வந்தியிற்றோன்றியதீபமென்கோ நல்லருமறையோர்
சந்தியிற்றோன்றுந்தபனனென்கோமணித்தாமமென்கோ
வுந்தியிற்றோன்றும்பிரான்புயந்தோயுமொருத்தியையே.

(இ - ள்.) உந்தியில் தோன்றும் பிரான் புயம் தோயும் ஒருத்தியை - (திருமாலினது) நாபித்தாமரையினின்று தோன்றிய கடவுளான பிரமதேவனுடைய தோள்களைத் தழுவுகிற சரசுவதியாகிய ஒருத்தியை, - புந்தியில் கூர் இருள் நீக்கும் புதியமதியம் என்கோ - (ஜனங்களுடைய)மனத்தின் மிக்க அஜ்ஞானமாகிய இருளைப் போக்குகிற புதியசந்திரனென்றுசொல்வேனோ! அந்தியில் தோன்றிய தீபம் என்கோ - மாலைப்பொழுதில் ஏற்றப்பட்டுவிளங்குவதான விளக்கென்று சொல்வேனோ! நல் அரு மறையோர் சந்தியில் தோன்றும் தபனன் என்கோ - சிறந்த அருமையான வேதங்கட்கு உரியவரான பிராமணர்கள் நமஸ்காரஞ்செய்கிற காலைச்சந்தியிலே உதித்துவிளங்குகிற சூரியனென்று சொல்வேனோ! மணி தாமம் என்கோ - இரத்தின ஹாரமென்று சொல்வேனோ! (எ - று.)

மிகப்பிரகாசிக்கிற சரசுவதியினது திவ்வியசொரூபம் சந்திர சூரிய அக்கினியர் என்னும் முச்சுடராகவும், இரத்தினமாலையாகவும் விகற்பிக்கலாம்படியுள்ளதென்பது, தேர்ந்த கருத்து.

புறவிருளை நீக்குகின்ற சந்திரனினும் இதற்குஉள்ள மேம்பாடு விளங்க, 'புதிய மதியம்' என்றார். மதியம், அம் - சாரியை. ஸந்த்யா

என்ற வடசொல், அந்தி என்றும், சந்தி என்றும் விகாரப்பட்டது. பகலோடு இரவு சேருஞ் சமயத்தையும், இரவோடு பகல் சேருஞ்சமயத்தையும் உணர்த்தும் இப்பொதுப்பெயர்-இங்குச் சிறப்பாய் முறையே மாலைச்சந்தியையும், காலைச்சந்தியையும் குறித்தது. என்கோ - என்கு ஓ எனப் பிரிக்க. என்கு - என்பேன்; என் - இடைச்சொற் பகுதி, கு - தன்மையொருமை விகுதி; [நன் - வினை - 8.] இதுவே எதிர்கால முணர்த்தும்; [நன்-பத-18.] இனி, 'என்கவோ' என்பது, 'என்கோ' என விகாரப்பட்ட தென்றலு மொன்று: என்பேனாகவோ என்று பொருள்; வியங்கோள்முற்று, தன்மையொருமைக்கு வந்ததென்க. தீபம், தபநன், தாமம், புஜம் - வடசொற்கள். (10)

11\. ஒருத்தியையொன்றுமிலாவெஃமனத்தினுவந்துதன்னை
யிருத்தியைவெண்கமலத்திருப்பாளையெண்ணெண்கலைதோய்
கருத்தியையைம்புலனுங்கலங்காமற்கருத்தையெல்லாந்
திருத்தியையான்மறவேன்றிசைநான்முகன்றேவியையே.

(இ - ள்.) ஒருத்தியை - ஒப்பற்றவளும், ஒன்றும் இலா என் மனத்தின் உவந்து தன்னை இருத்தியை - யாதொருநற்சிந்தனையுமில்லாத எனது மனத்திலே மகிழ்ச்சிகொண்டு தன்னை வீற்றிருக்கச் செய்தவளும், வெள் கமலத்து இருப்பாளை - வெண்டாமரைமலரில் வீற்றிருப்பவளும், எண் எண் கலை தோய் கருத்தியை - அறுபத்து நான்கு கலைஞானமும் நிறைந்த மனத்தையுடையவளும், ஐம்புலனும் கலங்காமல் கருத்தை எல்லாம் திருத்தியை-(தன் அடியார்களுடைய) பஞ்ச இந்திரியங்களும் நிலைகலங்காதபடி (அவர்களுடைய) மனத்தையெல்லாம் திருந்தச்செய்பவளும், திசை நால் முகன் தேவியை - நான்குதிசையையும் நோக்கிய நான்கு முகங்களையுடையவனான பிரமனது மனைவியுமான சரசுவதியை, யான் மறவேன் - நான் (ஒருகாலும்) மறக்கமாட்டேன் [இடைவிடாமல் எப்பொழுதும் தியானிப பேன்என்றபடி]. (எ - று.)

ஒருத்தி-ஒன்று என்பதன் அடியாகப் பிறந்த பெண்பாற்பெயர்; இதன் ஆண்பால்-ஒருத்தன், ஒருவன்; இதில், து-சாரியை. 'ஒன்றுமிலா என்மனத்தின் உவந்து தன்னை இருத்தி'—அடியவர்க் கெளியளாய் அவர்மனத்தில் வந்து வீற்றிருக்கும் பேரருளுடையவ ளென்றபடி. ஒன்று - எண்ணலளவாகுபெயர்; உம் - இழிவுசிறப்பு. இருத்தி, இரு என்பதன் பிறவினையான இருத்து - பகுதி. திருத்தி, திருந்து என்பதன் பிறவினையான திருத்து-பகுதி: இரண்டிலும், இ-கருத்தாப் பொருள்விகுதி. எண்ணெண்கலை - பண்புத்தொகைப் பன்மொழித் தொடர். கருத்தி; இ பெயர்விகுதி. இங்கே, பொறி, புலன் எனப்பட்டது; ஐம்பொறி-மெய் வாய் கண் மூக்குச் செவி. அவை நிலைகலங்குதலாவது-தீநெறியால் ஐம்புலன்களிற்செல்லல். ஐம்புலனும், உம்மை-முற்றுப்பொருளது. மனத்தின், இன்-ஏழனுருபு. (11)

12\. தேவருந்தெய்வப்பெருமானுநான்மறைசெப்புகின்ற
மூவருந்தானவராகியுள்ளோருமுனிவரரும்
யாவருமேனையவெல்லாவுயிருமிதழ்வெளுத்த
பூவருமாதினருள்கொண்டுஞானம்புரிகின்றதே.

(இ - ள்.) தேவரும் - தேவர்களும், தெய்வம் பெருமானும் - அத் தேவர்கட்குத்தலைவனாகிய இந்திரனும், நால் மறை செப்புகின்ற மூவரும் - நான்கு வேதங்களினாலுஞ் சொல்லப்படுகிற (அயன் அரி அரன் என்னும்) திரிமூர்த்திகளும், தானவர் ஆகி உள்ளோரும் - அசுரர்களாயுள்ளவர்களும், முனி வரரும் - இருடிசிரேட்டர்களும், யாவரும் - (மற்றும் உயர்திணையின்பாற்பட்ட) அனைவரும், ஏனைய எல்லா உயிரும் - மற்றை [அஃறிணையாகவுள்ள] எல்லாவுயிர்களும், ஞானம் புரிகின்றது - அறிவுகொண்டிருத்தல், இதழ் வெளுத்த பூ வரு மாதின் அருள் கொண்டே - வெண்ணிறமான இதழ்களையுடைய தாமரைமலரில் வாழ்கிற சரசுவதியினுடைய கருணையினாலேயாம்;

உயர்திணையும் அஃறிணையுமாகிய எல்லாவுயிர்களும் கொள்ளும் இயற்கையறிவுக்கும் செயற்கையறிவுக்கும் சரசுவதியின் அருளே காரண மென்பது கருத்து. மூவர் - தொகைக்குறிப்பு. தானவர் - (காசியபமுனிவரது மனைவியருள்) தநு என்பவளது புதல்வர்; வட மொழித் தத்திதாந்தநாமம். முநிவரர் - வடமொழித் தொடர். ஏனைய -ஏனை யென்னும் இடைச்சொல்லடியாப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம். வெளுத்தஎன்பதில், வெண்மையென்னும் பண்பினடி விகாரப்பட்டு வினைத்தன்மையடைந்த வெளு என்பது - பகுதி. அடைமொழி கொடாமல் 'பூ' என்றால், அது - எல்லாமலர்களிலும் சிறந்ததாகிய தாமரையைக் குறிக்கும். மாது - விரும்பப்படும் அழகுடைய பெண். புரிகின்றது - நிகழ்காலத் தொழிற்பெயர். (12)

13. புரிகின்றசிந்தையினூடேபுகுந்துபுகுந்திருளை
யரிகின்றதாய்கின்றவெல்லாவறிவினரும்பொருளைத்
தெரிகின்றவின்பங்கனிந்தூறிநெஞ்சந்தெளிந்துமுற்ற
விரிகின்றதெண்ணெண்கலைமாதுணர்த்தியவேதமுமே.

(இ - ள்.) புரிகின்ற சிந்தையினூடே - (தன்னை) விரும்பிப் பயில்கின்றவர்களுடைய மனத்தினுள்ளே, புகுந்து புகுந்து - (அவர்கள் பயிலப் பயில) நன்றாகச் சென்று ஊன்றி, இருளை அரிகின்றது - (அவர்கள் மனத்திலுள்ள அஜ்ஞாநமாகிய) அகவிருளை அழிக்கின்றதும்,—ஆய்கின்ற எல்லா அறிவின் அரு பொருளை தெரிகின்ற இன்பம் கனிந்துஊறி-(நுட்பமாக) ஆராய்கிற எல்லாருடைய அறிவினாலும் அருமையான தத்துவப்பொருளை அறிந்து அதனால் (அவரவர்) அடைகிற ஆனந்தம் முதிர்ந்து ஊறப்பெற்று, நெஞ்சம் தெளிந்து முற்ற-(அவர்களுடைய) மனம் தெளிவடைந்து முதிரும்படி, விரிகின்றது-(அம்மனத்திற்) பரவுகின்றதும்,— எண் எண் கலைமாது உணர்த்தியவேதமே-அறுபத்துநான்குகலைகளுக்கும் உரிய மகளான சரசுவதியினாற் சொல்லப்பட்ட வேதமேயாம்; (எ - று.)—வேதமும் என்ற உம்மை - அசைநிலை.

'புரிகின்ற சிந்தையினூடே புகுந்து புகுந் திருளை அரிகின்றது' என்றது - பொதுப்பட வேதம்தன்னை யோதி உணர்வாரது அறியாமையைப்போக்கி அவர்க்கு நல்லறிவுச்சுடர் கொளுத்துந் தன்மையை விளக்கும். 'ஆய்கின்ற......விரிகின்றது' என்றதனால், நுட்பமாக

வேதாந்தத்தைஆராய்பவர் உண்மைப்பொருளையுணர்ந்து அதனால் ஆனந்தமடைந்து மனந்தெளிந்து மேன்மையடையுந்திறம் விளக்கப் பட்டது. வேதம், வித்யாசொரூபமாதலால், 'கலைமாதுணர்த்திய வேதம்' எனப்பட்டது. சிந்தையினூடு, ஊடு - ஏழனுருபு, இன் - சாரியை. புகுந்து புகுந்து, அடுக்கு - இடைவிடாமைப்பொருளது. அரிதல் என்னும் வினையின் ஆற்றலால், இருளின் திணிமை விளங் கும். நெஞ்சம், அம் - சாரியை. (13)

14. வேதமும்வேதத்தினந்தமுமந்தத்தின்மெய்ப்பொருளாம்
பேதமும்பேதத்தின்மார்க்கமுமார்க்கப்பிணக்கறுக்கும்
போதமும்போதவுருவாகியெங்கும்பொதிந்தவிந்து
நாதமுநாதவண்டார்க்கும்வெண்டாமரைநாயகியே.

(இ-ள்.) நாதம் வண்டு ஆர்க்கும் வெள் தாமரைநாயகி-இனிய ஓசையையுடைய [ரீங்காரஞ்செய்யுந்தன்மையுள்ள]வண்டுகள் ஒலிக்கப் பெற்ற வெண்டாமரைமலரில் வீற்றிருக்கின்ற தலைவியானவள்,—வேதமும்-எல்லாவேதங்களும், வேதத்தின் அந்தமும் - அந்த வேதங் களின் அந்தங்களும் [உபநிஷத்துக்களும்], அந்தத்தின் மெய் பொருள் ஆம் பேதமும் - அந்தஉபநிஷத்துக்களிற்கூறப்பட்டுள்ள உண்மையான பொருள்களாகிய கடவுளரின் பேதங்களும், பேதத்தின் மார்க்கமும் - அந்தந்தக்கடவுளரைப்பற்றிய பலவகைச்சமயங்களின் வழிகளும், மார்க்கம் பிணக்கு அறுக்கும் போதமும் - (பற்பலவகைப் பட்ட) அந்தச்சமயவழிகளின் மாறுபாட்டை யொழித்து உண்மையை வெளிப்படுத்தும் நல்லறிவும், போதம் உரு ஆகி எங்கும் பொதிந்த விந்துநாதமும்-ஞானசொரூபமாகி எல்லாவிடங்களிலும் மறைந்துறை கின்ற விந்துநாதமும், (ஆவள்); (எ - று.)—வினைமுற்று வருவித்து உரைக்கப்பட்டது.

சரசுவதியானவள் வேதம் வேதாந்தம் கடவுளின்மூர்த்திபேதம் பலவகைச்சமயம் உண்மையறிவு விந்துநாதம் ஆகிய எல்லாப் பொருள்களாகவும் பரிணமித்திருப்பளென்பது கருத்து. வேதத்தின் பிரிவு இரண்டனுள் யாகாதிகிரியைகளைக் கூறுகிற பூர்வபாகத்தைக் கர்மகாண்டமென்றும், பகவானைக்குறித்துக் கூறுவதும் வேதத்தின் தேர்ந்த கருத்துமான உத்தரபாகத்தை உபநிஷத் என்றும் வேதாந்தமென்றும் பிரமகாண்டமென்றும் கூறுவர். கடவுளரின் பேதமாவது வேதாந்தத்திற்கூறப்பட்ட பிரமன் விஷ்ணு சிவன் முதலிய மூர்த்திபேதங்கள். மார்க்கப்பிணக்கறுக்கும் போதமாவது - அக்கடவுளரைப்பற்றிய பலவகைச்சமயங்களிலும் சற்சமயம் இது வென்று துணிந்து உண்மையறியும் தத்துவஞானம். விந்து - தாது, நாதம்-இந்திரியம்; என்றது, எல்லாப்பொருள்கட்கும் காரணமாகியும் காரியமாகியும் நிற்பவ ளென்றபடி. (14)

15. நாயகமானமலரகமாவதுஞானவின்பச்
சேயகமானமலரகமாவதுந்தீவினையா
லேயகமாறிவிடுமகமாவதுமெவ்வுயிர்க்குந்
தாயகமாவதுந்தாதார்சுவேதசரோருகமே.

(இ - ள்.) நாயகம் ஆன மலர் அகம் ஆவதும் - (சரசுவதி வீற்றிருக்கும் பெருமையுடைமையால் எல்லாமலர்களுள்ளும்) தலைமை யாகிய மலராகப் பெறுவதும், ஞானம் இன்பம் சேய் அகம் ஆன மலர் அகம் ஆவதும் - ஞானநலங்கனிதலாகிய குழந்தை வளருமிட மான மலராகப்பெறுவதும், தீவினையால் ஏய் அகம் மாறிவிடும் அகம் ஆவதும் - (முற்பிறப்பிற்செய்த) பாவத்தினாலுண்டாகிய செருக்கு நீங்குதற்குஉரிய இடமாகப்பெறுவதும், எ உயிர்க்கும் தாய் அகம் ஆவதும் - எல்லாவுயிர்கட்கும் தாய்வீடாகப்பெறுவதும், (யாதெனின்),—தாது ஆர் சுவேத சரோருகம்-(சரசுவதிவசிக்கின்ற) மகரந்தப்பொடிகள் நிறைந்துள்ள வெண்டாமரைமலரேயாம்; (எ-று.)

சரசுவதி வீற்றிருக்கப்பெற்ற பேறு கிடைத்தலால் 'நாயகமான மலரகமாவது' என்றும், பேரின்பத்திற்குக்காரணமான கல்விக்கு உரிய மகள் இருத்தலால் 'ஞானவின்பச்சேய்கமான மலரகமாவது' என்றும், தன்னைத்தியானித்தவர்க்கு முற்பிறப்பின் தீவினையைநீக்கிப் பரிசுத்தராக்குந் தன்மையுடைமையால் 'தீவினையாலேயகமாறி விடுமகமாவது' என்றும், எல்லாவுயிர்களையும் படைக்குங் கடவுளான பிரமதேவனது மனைவியாதல்பற்றித் தாயானசரசுவதிக்கு இருப்பிட மாதலால் 'எவ்வுயிர்க்குந்தாயகமாவது' என்றும் வெண்டாமரை மலரைச் சிறப்பித்துக்கூறினர். (15)

16. சரோருகமேதிருக்கோயிலுங்கைகளுந்தாளிணையு
முரோருகமுந்திருவல்குலுநாபியுமோங்கிருள்போற்
சிரோருகஞ்சூழ்ந்தவதனமுநாட்டமுஞ்சேயிதழு
மொரோருகமீரரைமாத்திரையானவுரைமகட்கே.

(இ - ள்.) ஒர் ஒர் உகம் ஈர் அரை மாத்திரை ஆன உரைமகட்கு- ஒவ்வொருயுகமும் ஒருமாத்திரைப் பொழுதாகப்பெற்ற கல்வித்தெய்வ மாகிய சரசுவதீதேவிக்கு,—திரு கோயிலும் - அழகிய இருப்பிடமும், கைகளும்—, தாள் இணையும்-இரண்டு திருவடிகளும், உரோருகமும்- தனங்களும், திரு அல்குலும்—, நாபியும் - கொப்பூழும், ஓங்கு இருள் போல் சிரோருகம் சூழ்ந்த வதனமும் - மிக்கஇருளைப்போன்ற [மிகக் கறுத்த] கூந்தல் சூழப்பெற்ற திருமுகமும், நாட்டமும் - திருக்கண் களும், சேய் இதழும் - சிவந்த அதரமும், (ஆகிய இவ்வுறுப்புக்கள்), சரோருகமே-செந்தாமரைமலர்களேயாம்; (எ-று.)

சரசுவதியின் எல்லாஅவயவங்களும் தாமரைமலர்போன்றன வென்பதாம். உரோருஹம்-மார்பில் முளைத்துள்ளது; சிரோருஹம் - தலையில்முளைத்துள்ளது; வடமொழிக்காரணப்பெயர்கள். யுகங்கள் நான்கு-கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன. இந்தச்சதுர்யுகம் ஆயிரங்கழிந்தால் பிரமனுக்கு ஒருபகலாம்; பின்னும் ஓராயிரங் கழிந்தால் ஓர் இரவாம். மாத்திரை - கண்ணிமைப்பொழுது அல்லது கைந்நொடிப்பொழுது ஒன்று கொண்டது. மிகப்பெரிய காலவளவாகிய யுகமொன்றுதானே பிரமனுக்கு மிகச்சிறியபொழு தாகுமென அவனது ஆயுளின் பெருக்கங் கூறியவாறு. சரசுவதி அந்தப்பிரமதேவனது மனைவியாய் அவனைவிட்டுப்பிரியாமல் எப்

பொழுதும் அவனுடன் உறைபவளாதலால், அவளது ஆயுளும் அவ்வாறே பெருக்கமுடையதாகு மென ஈற்றடியால் விளக்கப் பட்டது. (16)

17. கருந்தாமரைமலர்கட்டாமரைமலர் காமருதா
ளருந்தாமரைமலர்செந்தாமரைமல ராலயமாத்
தருந்தாமரைமலர்வெண்டாமரைமலர் தாவிலெழிற்
பெருந்தாமரைமணக்குங்கலைக்கூட்டப்பிணைதனக்கே.

(இ - ள்.) தா இல் எழில் - குற்றமில்லாத அழகையுடைய, பெரு தாமரை மணக்கும் - சிறந்த தாமரைமலரிற் பொருந்தி வசிக்கின்ற, கலை கூட்டம் பிணைதனக்கு - கலைஞானங்களின் தொகுதிக்கு உரிய வளான பெண்மான்போன்ற சரசுவதிக்கு,—கண் தாமரை மலர் கரு தாமரைமலர் - கண்களாகிய தாமரைமலர்கள் கருநெய்தல்மலர் போலும்; காமரு தாள் அரு தாமரை மலர் - (யாவராலும்) விரும்பப் படுகிற [அழகிய] திருவடிகளாகிய அருமையான தாமரைமலர்கள், செம் தாமரை மலர் - செந்தாமரைமலர்போலும்; ஆலயம் ஆ தரும் தாமரை மலர் - எழுந்தருளியிருக்கு மிடமாக அமைந்த தாமரை மலர், வெள் தாமரை மலர் - வெண்டாமரைமலராம்; (எ - று.)

கவி, சமத்காரமாக, கருந்தாமரை செந்தாமரை வெண்டாமரை என்ற மூன்றுவகைத் தாமரைமலரையும் கலைமகளோடு இயைபு படுத்தி யுரைத்தார். கருநெய்தல் கருந்தாமரை யெனப்படுதலை, அதற்கு வடமொழியில் வழங்கும் 'நீலாம்புஜம்' என்ற பெயரினாலும் அறிக. மகளிர்கண்ணுக்குக் கருநெய்தல்மலருவமை - கருமை மென்மை அழகுகளுக்கு. 'கண்டாமரைமலர்' என்ற பாடம் இலக்கணத்துக்கு ஒத்தது: "ணனவல்லினம் வரட் டறவும்" என்ற சூத்திரத்து "அல்வழிக்கு அனைத்துமெய் வரினு மியல்பாகும்மே" என்றது காண்க. பெரியோருடைய பாதத்தை 'திருவடித்தாமரை' என்றும், அவர்களுடைய கையை 'கைத்தாமரை' என்றும் இவ்வாறு உபசாரமாகக் கூறுந்தகுதிபற்றி 'கண்தாமரைமலர்', 'தாள் தாமரை மலர்' என்றார். காமரு என்பது - காமம் மருவு என்பதன் விகாரம். ஆலயம்-வடசொல். ஆ-விகாரம். தா - உரிச்சொல். மணத்தல்-கூடு தல். 'பெருந்தாமரை மணக்கும்' என்பதற்கு - சிறந்த தாமரை மணம் வீசுகின்ற என்று பொருள் கொள்ளினுமாம்; தாமரை மலரில் எப் பொழும் வசித்தலும், பதுமினி யென்னும் உத்தமசாதிமாதரின்மேனி தாமரைமணம்வீசுமென்ற நூற்கொள்கையும், இங்ஙனங் கூறுதற் குக் காரணங்களாம். இனி, தாமரைமலர் மணம்வீசுதற்குக் காரண மான என்றலு மொன்று. இவளுடைய திருமேனியின் ஸ்பர்சத்தால் தாமரை மலர் மணம்வீசுமென இவளுடைய திவ்வியகந்தத்தின் சிறப்பை யுணர்த்தியபடி. அன்றி, பெருந்தாமர் - பரந்தாமர்; சிறந்த சோதியையுடைய கடவுள்; இங்கே பிரமதேவர். அவரை, மணக்கும்- மணஞ்செய்துகொண்ட என்று உரைக்கவும் இடமுண்டு. பிணை- உவமையாகுபெயர்;கண்ணேக்கில் உவமம்.சொற்பொருட்பின்வருநிலை யணி. நான்காமடியில், மானின் பரியாய நாமமாகிய மரை கலை பிணை என்ற சொற்கள் அமையவைத்தது, ஒருவகைக் கவிசாதுரியம். (17)

18. தனக்கேதுணிபொருளென்னுந்தொல்வேதஞ் சதுர்முகத்தோ
னெனக்கேசமைந்தவபிடேகமென்னு மிமையவர்தா
மனக்கேதமாற்றுமருந்தென்ப சூடுமலரென்பன்யான்
கனக்கேசபந்திக்கலைமங்கைபாதகமலங்களே.

(இ - ள்.) கனம் - மேகம்போன்ற, கேசம் பந்தி-கூந்தற்பாரத்தை யுடைய, கலை மங்கை - கல்விமகளான சரசுவதியினுடைய, பாதம் கமலங்கள் - திருவடித்தாமரைமலர்களை,—தொல் வேதம் - அநாதியான வேதம், தனக்கே துணி பொருள் என்னும் - தனக்கே உரியதென்று நிச்சயிக்கப்பட்ட பொருள் என்று சொல்லும்; சதுர் முகத்தோன் - நான்குமுகத்தவனான பிரமன், எனக்கே சமைந்த அபிடேகம் என்னும்-எனக்கே உரியதாக அமைந்தகிரீடமென்று சொல்வான்; இமையவர் தாம்-மற்றைத்தேவர்கள் தாங்கள்,மனம் கேதம் மாற்றும் மருந்து என்ப - (தங்கள்) மனத்திலுள்ள (அறியாமையாகிய) நோயைத் தீர்க்கும் மருந்து என்று சொல்வார்கள்; சூடும் மலர் என்பன் யான் - யான் தலையின்மேற் சூடும் பூவென்று சொல்வேன்; (எ-று.)

இது, பலபடப்புனைவணி; வடநூலார் உல்லேகாலங்காரம் என்பர். ஒருபொருளைப் பலர் பலதன்மைகளினாலே பலபொருளாகச் சொல்லுதல், இதன் இலக்கணம். தனக்கே, எனக்கே, ஏ - பிரிநிலை. அபிஷேகம் வடசொல். "சில்லரிக் கிண்கிணிமென் தெய்வமலர்ச் சீறடியைத், தொல்லை மணிமுடிமேற் சூட்டினான்" என்றபடி ஊடல் தணிக்குங்காலத்துக் கணவன் மனைவியின் பாதத்தை முடிமேற் கொள்வதோர் இயைபுபற்றி, பிரமன் அதனை அபிஷேகமென்பானாயினான். மநஃ கேதம் - வடமொழித்தொடர். கேதம் - துன்பம். என்ப - பலர்பால்முற்று; என் - இடைச்சொற்பகுதி, ப - விகுதி; இதுவே எதிர்காலங் காட்டும். கநம், கேசபங்க்தி என்ற வடசொற் றொடர்கள் விகாரப்பட்டன. கேசபந்தி - மயிரொழுங்கு. (18)

19. கமலந்தனிலிருப்பாள் விருப்போடங்கரங்குவித்துக்
கமலங்கடவுளர்போற்றுமென்பூவைகண்ணிற்கருணைக்
கமலந்தனைக்கொண்டுகண்டொருகாற்றங்கருத்துள்வைப்பார்
கமலங்கழிக்குங்கலைமங்கையாரணிகாரணியே.

(இ - ள்.) கமலந்தனில் இருப்பாள் - தாமரைமலரில் வீற்றிருப்பவளும், கடவுளர் - தேவர்கள், விருப்போடு - விருப்பத்துடனே, அம் கரம் கமலம் குவித்து - அழகிய கைகளாகிய தாமரைமலர்களைக் கூப்பி [அஞ்சலிசெய்து], போற்றும் - துதிக்கின்ற, மெல் பூவை - மென்மையான கிளிபோன்றவளும், ஆரணி - வேதங்களின் சொரூபமாயிருப்பவளும், காரணி - (எல்லாவற்றிற்கும்) காரணமாயிருப்பவளும் (ஆகிய), கலை மங்கை - கலைமகள்,—ஒரு கால் தம் கருத்துள் வைப்பார் கம் மலம் - (தன்னை) ஒருமுறை தமதுமனத்தினுள் வைத்துத் தியானிப்பவர்களுடைய அறிவின்குற்றங்களை,—கண்ணில் கருணை கமலந்தனை கொண்டு கண்டு - (தனது) திருக்கண்களினின்று வெளியாகிற அருள்வெள்ளத்தைக்கொண்டு (அவர்களைக்) கடாக்ஷித்து, கழிக்கும்-போக்கி விடுவாள்; (எ - று.)

கமலம் என்ற வடசொல் - முதலிரண்டடிகளில் தாமரையென்ற பொருளிலும், மூன்றுமடியில் நீர்என்ற பொருளிலும் வந்தது. கம் - அறிவு; இந்திரியமுமாம். இதற்குத் தலையென்று ஒருபொருளுள்ள தனால், கமலம் என்பதற்கு - தலைவிதியென்று பொருள்கொள்ளு தலும் ஒன்று; அன்றி, கமல மென்பதை அகமலம், அல்லது பாத கமலம் என்பதன் முதற்குறைவிகார மெனக் கொண்டாலும் பொருள் படும். மனக்குற்றம் அல்லது பாவதோஷம் எனக் காண்க. விருப்பு- அன்பு, பக்தி; விரும்பு என்ற முதனிலைதிரிந்த தொழிற்பெயர். கடவுளர் - (இவ்வுலகசம்பந்தத்தைக்) கடத்தலையுடையவர். கடவுள் என்பதில், உள் - தொழிற்பெயர்விகுதி. 'ஒருகால்' என்பதனை 'கண்டு' என்பதோடு சேர்த்து ஒருமுறை அருளுணைக்கணு செய்த மாத்திரத்தில் தீர்த்திடுவாள் என்றுங் கொள்ளலாம். (19)

20. காரணன்பாகமுஞ்சென்னியுஞ்சேர்தருகன்னியரு
நாரணனாகமகலாத்திருவு மொர்நான்மருப்பு
வாரணன்றேவியு மற்றுள்ளதெய்வமடந்தையரு
மாரணப்பாவைபணித்தகுற்றேவலடியவரே.

(இ - ள்.) காரணன் - காரணமென்னும் ஆகமத்தில் எடுத்துச் சொல்லப்பட்டவனான சிவபிரானது, பாகமும் - இடப்பக்கத்திலும், சென்னியும் - முடியின்மேலும், சேர்தரு - (முறையே) சேர்ந்துள்ள, கன்னியரும் - இளமகளிரான பார்வதி கங்கை யென்பவர்களும்;— நாரணன் ஆகம் அகலா திருவும் - திருமாலினது மார்பை விட்டுநீங் காத [மார்பில்நித்தியவாசஞ்செய்கிற] இலக்குமியும்,—ஓர் நால் மருப்பு வாரணன் தேவியும் - ஒப்பற்ற நான்குதந்தமுள்ள ஐராவத மென்னும் யானையையுடையவனான இந்திரனதுமனைவியாகிய இந்தி ராணியும், மற்று உள்ள தெய்வம் மடந்தையரும் - மற்றைய் தேவ மாதர்களும், (ஆகிய அனைவரும்), ஆரணம் பாவை பணித்த குறு ஏவல் அடியவரே - வேதங்களின் சொரூபமான சரசுவதிதேவி கட் டளையிட்ட சிறியஏவல் தொழில்களைச் செய்யும் அடியார்களே யாவர்;

என்றது, அறிவுக்குஉரிய தெய்வமான சரசுவதியினது தலை மையை மிகுதியாகப் புகழ்ந்து துதித்தவாறும். காரணம் - சைவாகம நூல் இருபத்தெட்டில் ஒன்று; இங்கே காரணன் என்றது, உப லக்ஷணவகையால் எல்லா ஆகமங்களினாலும் பிரதிபாதிக்கப்படுகிறவ னென்றவாறும். இனி, யாவர்க்கும் முதல்வராகிய திரிமூர்த்திகளில் ஒருவனென்றகருத்தால் காரணன் எனக் கூறியதாகக் கொள்ளு தலும் ஒன்று. மலையரசனாகிய இமவானினது பெண்களாகிய உமை கங்கை என்ற இருவரும் சிவபிரானைச்சேர்ந்தனராதலால், 'காரணன் பாகமுஞ் சென்னியுஞ் சேர்தரு கன்னியர்' எனப்பட்டனர். கங்கை யைச் சிவபிரானுக்கு மனைவியென்றற்குக் காரணம் - சிவபிரானை நீங் காது சேர்ந்திருத்தலும், குமாரனையுண்டாக்குதற்குச் சிவபிரான் வெளிப்படுத்திய அனற்பொறிகளை யேற்றுக்கொண்டமையுமாம்.

உமை சிவன்பாகஞ்சேர்ந்த கதை:—பிருங்கி யென்னும் மகா முனிவர் தன்னையிலக்கிச் சிவபிரானை மாத்திரம் பிரதக்ஷிணஞ்செய் யக்கண்ட பார்வதிதேவி, தன்பதியை நோக்கி 'முனிவர்என்னைப்பிர

தக்ஷிணம் செய்யாமைக்கு ஏது என்?' என்று வினவ, சிவபிரான் 'இம்மைமறுமைப்பயன்களைப் பெற விரும்புபவர் உன்னையும், முத்தி பெற விரும்புபவர் என்னையும் வழிபடுவர்' என்ன, அதுகேட்ட தேவி பெருமானைப் பிரியாதிருக்குமாறு தவம்புரிந்து வாமபாகம் பெற்றன ளென்பதாம்.

கங்கை சிவபிரான் சென்னி சேர்ந்த கதை:—சூரியகுலத்துத் தோன்றிய பகீரதசக்கரவர்த்தி, கபிலமுனிவரதுகண்ணின் கோபத் தீக்கு இலக்காய் உடலெரிந்து சாம்பலாய் நற்கதியிழந்த தனது மூதாதையரான சகரபுத்திரர் அறுபதினாயிரவரையும்நற்கதி பெறு விக்கும்பொருட்டு நெடுநாள் தவஞ்செய்து கங்காநதியைத் தேவலோ கத்திலிருந்து கீழுலகத்துக்குக் கொணர்கையில் அதனது விசை யோடுவரும் வெள்ளப்பெருக்கை ஏற்றுக்கொள்ளுதற்கு ஏற்ற வலிமை பூமிக்குஇல்லையென்ற காரணத்தால் அவ்வரசன் சிவபிரா னைப்பிரார்த்திக்க, அவன்வேண்டுகோளின்படி அப்பெருமான் அந்நதி யைச் சடைமுடியிலேற்றுப் பின்பு சிறிதுசிறிதாகப் பூமியில் விட்டரு ளின னென்பதாம்.

காரணம், பாகம், வாரணம் - வடசொற்கள். கந்யா, நாராயணன் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. சேர்தரு, தாஎன்ற துணை வினை விகாரப்பட்டது. குறுமை + ஏவல் = குற்றேவல்; பண்புஈறு போய்த் தன்ஒற்று இரட்டிற்று. ஓர் - ஒன்று என்பதன்விகாரம்; உகரம்பெருமலும், முதல்நீளாமலும் நின்றது. (20)

21\. அடிவேதநாறுஞ்சிறப்பார்ந்தவேதமனைத்தினுக்கு
முடிவே தவளமுளரிமின்னே முடியாவிரத்ன
வடிவே மகிழ்ந்துபணிவார்தமதுமயலிரவின்
விடிவே யறிந்தென்னையாள்வார்தலந்தனில்வேறிலையே.

(இ - ள்.) அடி வேதம் நாறும் சிறப்பு ஆர்ந்த - திருவடிகள் வேதங்களில் வாசனைவீசப்பெறுகிற மேன்மைநிறைந்த, வேதம் அனைத்தினுக்கும் முடிவே - வேதங்களெல்லாவற்றுக்குந் தேர்ந்த கருத்தாகவுள்ளவளே! தவளம் முளரி மின்னே - வெண்டாமரைமல ரில் வீற்றிருக்கிற மின்னற்கொடிபோல விளங்குபவளே! முடியா இரத்ன வடிவே - அழியாத இரத்தினம் போலப் பிரகாசிக்கிற வடிவ முடையவளே! மகிழ்ந்து பணிவார்தமது மயல் இரவின் விடிவே - அன்புகொண்டு வணங்கும் அடியார்களுடைய அஜ்ஞான மயக்க மாகிய இருளிரவை யொழிக்குஞ் சூரியோதயமாகவுள்ளவளே! என்னை அறிந்து ஆள்வார் - எனதுநிலைமையை அறிந்து என்னை அடிமை கொண்டு பாதுகாப்பவர், தலந்தனில் - இவ்வுலகத்தில், வேறு இல்லை - (உன்னையன்றி) வேறு யாருமில்லை; (எ - று.)—ஏ-தேற்றம்.

தமக்குக் கலைமகளையன்றி வேறுகதியின்மையை வெளியிட்டார். 'அடிவேதம்நாறும் சிறப்பார்ந்த' என்றது, சரசுவதிக்குஅடைமொழி; அவளுடைய திருவடி வேதங்களிற்பரிமளித்தலாவது - வேதங்களில் எங்கும்இடைவிடாது துதிக்கப்படுதல். திருவடித்தாமரையென்னும் வழக்கை உட்கொண்டு, 'அடிநாறும்' என்றன ரென்க. இனி, திருவடி

கள் வேதங்களின்வாசனைவீசப்பெற்ற என்று பொருளுரைத்தாலும் முன்போலவே கருத்துக்கொள்ளலாம் (வில்லிபுத்தூரார் பாரதத்தில் "கங்கையு நான்மறையுந் துளவும் கமழ் கழலிணை", "கங்கையினறலுங் காளியன்முடியுங் காளிந்திக்கரையுமே கமழும், பங்கயமலர்கள்" என்றவை இங்கு ஒப்புநோக்கத்தக்கன.) வேதம் அனைத்தினுக்கும் முடிவு - வேதங்களின் உத்தரபாகமும் தேர்ந்தகருத்துமான வேதாந்தத்திற் சித்தாந்தஞ்செய்யப்பட்ட மெய்ப்பொருளாக வுள்ளவளென்றபடி; வேதாந்த சொரூபமாகவுள்ளவ ளென்றலும் ஒன்று. தவளம், ரத்நம்- வடசொற்கள். முளரி-முட்களையுடைய அரியையுடைய தெனப் பொருள்படுங் காரணக்குறி. வேற்றுமைத்தொகையன்மொழி. அரி = அரை; தண்டின் மேற்புறம். மின்-உவமையாகுபெயர். விடிவு-பொழுது விடியுங்காலம்: சூரியோதயம். தன் அடியார்களின் அகவிருளை யொழிப்பவளென்பது, 'பணிவார்தமது மயலிரவின் விடிவே' என்பதன் கருத்து. (21)

22. வேறிலையென்றுனடியாரிற்கூடிவிளங்குநின்பேர்
கூறலையானுங்குறித்துநின்றே னைம்புலக்குறும்பா
மாறலைகள்வர்மயக்காமனின்மலர்த்தாணெறியிற்
சேறலையீந்தருள்வெண்டாமரைமலர்ச்சேயிழையே.

(இ - ள்.) வெள் தாமரை மலர்- வெண்டாமரைப்பூவில் வீற்றிருக்கின்ற, சேயிழையே - செவ்விய ஆபரணங்களையுடையவளே!— வேறு இலை என்று-(உன்னையன்றி)வேறு (கதி) இல்லையென்று நிச்சயித்து, உன் அடியாரில் யானும் கூடி-உனது அடியார்களில் நானும் ஒருவனைச் சேர்ந்து, விளங்கும் நின் பேர் கூறலை குறித்து நின்றேன் - சிறப்புப்பெற்று விளங்குகிற உனதுதிருநாமங்களைச் சொல்லுதலைக் குறிக்கொண்டுநின்றேன்; ஐம்புலம் குறும்பு ஆம் - பஞ்சஇந்திரியங்களின் பொல்லாங்குகளாகிய, மாறு அலை கள்வர் - எதிர்த்து (வழி) பறிக்கிற திருடர்கள், மயக்காமல்-(என்னை) மய்ங்கச்செய்யவொட்டாதபடி, நின் மலர் தாள் நெறியில் சேறலை - உன்னுடைய திருவடித் தாமரைகளின் வழியே செல்லுந்திறத்தை, ஈந்து அருள் - (எனக்குக்) கொடுத்தருள்வாய்; (எ-று.)

("நல்லவை செய்யத் தொடங்கினும் நோனுமே, அல்லன அல்லவற்றிற் கொண்டுய்க்கும் - எல்லி, வியனெறிச் செல்வாரை யாறலைத் துண்பார், செலவுபிழைத் துய்ப்பபோல்" என்றபடி) நேர்வழியிற் செல்பவரை வழிக்கொள்ளைக்காரர் அதைவிட்டுக் கொடுவழியிற் செல்லும்படி சூழ்ச்சிசெய்வதுபோல எனதுபஞ்சஇந்திரியங்கள் என்னைமயக்கித் தீநெறிச்செலுத்தாதபடி, நீ என்பக்கல் அருள் செய்து என்னை உன்திருவடியை விடாது பின்பற்றிச் செல்லுதலாகிய நன்னெறியிற் செலுத்தவேண்டுமென வேண்டியபடி.

பேர் - மரூஉ. 'குறும்பாமாறலைகள்வர்' என்னுந்தொடரை குறும்பாம் ஆறு அலை கள்வர் எனப்பிரித்து, ஆறு அலை கள்வர் - வழிபறிக்குந் திருடர் என்று பொருள்கொள்ளுதல் பொருந்துமாயினும் மோனைத்தொடைக்குச் சேராமை அறிக. அலைகள்வர் - பிறவினையில்வந்த வினைத்தொகை. சேறல் - செல்லுதல்; தொழிற்

பெயர்; செல் - பகுதி, தல் - விகுதி, பகுதிமுதல்நீண்டது - விகாரம், தகரம் றகரமான விடத்து லகரம் கெட்டது - சந்தி. சேயிழை-பண்புத்தொகையன்மொழி; செம்மை + இழை = சேயிழை; இங்கே, செம்மை - அழகு; நிறமெனக் கொள்ளலாகாது; "வெள்ளைக்கலை யுடுத்து வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை......தாய்" ஆதலால். கள்வர், கள் - பகுதி, வ் - பெயரிடைநிலை. (22)

உ3. சேதிக்கலாந்தர்க்கமார்க்கங்களெவ்வெவர்சிந்தனையுஞ்
சோதிக்கலா முறப்போதிக்கலாஞ்சொன்னதேதுணிந்து
சாதிக்கலா மிகப்பேதிக்கலா முத்திதானெய்தலா
மாதிக்கலாமயில்வல்லிபொற்றாளையடைந்தவர்க்கே.

(இ-ள்.) ஆதி - பழமையான, கலா மயில் - கல்விக்கு உரிய மயில் போலுஞ் சாயலுள்ள மகளும், வல்லி - பூங்கொடிபோன்றவளுமான சரசுவதியினது, பொன் தாளை-அழகிய திருவடிகளை, அடைந்தவர்க்கு - சரணமடைந்தவர்களுக்கு,—தர்க்க மார்க்கங்கள் சேதிக்கல் ஆம் - (தம்மையெதிர்த்து வாதப்போர் செய்பவர்களுடைய) வாதநெறிகளைக் கண்டித்தல்இயலும்; எவ்வெவர் சிந்தனையும் சோதிக்கல் ஆம் - யார் யாருடைய மனத்தின் நிலைமையையும் ஆராய்ந்தறிதல் இயலும்; உற போதிக்கல் ஆம்-(எல்லோர்க்கும் எல்லாவிஷயங்களையும்)நன்றாகச் சொல்லியுணர்த்துதல் இயலும்; சொன்னதே துணிந்து சாதிக்கல் ஆம் - தாம் சொன்ன பொருளையே சித்தாந்தமாக நிச்சயித்து நிலைநாட்டவல்ல திறமை உண்டாம்; மிக பேதிக்கல் ஆம் - (தமது கொள்கைக்கு மாறாகப் பிறர்சொன்ன பூர்வபக்ஷங்களையெல்லாம்) மிகுதியாகக் கண்டிக்குந் திறம் உண்டாம்; முத்தி தான் எய்தல் ஆம் - மோக்ஷத்தை எளிதில் அடைதல் கைகூடும்; (எ-று.)

சரசுவதியைச் சரணமடைந்தார்க்கு அவளருளால் இம்மையிலுண்டாகும் வாதசக்தி போதநாசக்தி முதலிய சக்திவிசேஷங்களும், மறுமையில் முத்தியும் கைகூடுகிற சிறப்பை இதில் வெளியிட்டார்.

சேதிக்கல், சோதிக்கல், சாதிக்கல், பேதிக்கல் என்றவற்றின் பகுதி - வடமொழியடியாப்பிறந்த வினை; கு - சாரியை, அல் - விகுதி. தர்க்கமார்க்கம், சிந்தநா, முக்தி, ஆதி, வல்லீ - வடசொற்கள். கலா - வடசொல், ஆவீறு ஐயாகாது நின்றது. எவ்வெவர் என்றதில், அடுக்கிநின்ற வினா - எஞ்சாமைகுறிப்பது சொன்னது - இறந்தகால வினையாலணையும்பெயர்; இதில், 'இன்' இடைநிலை முதல் தொக்கது. எய்தல் என்ற தொழிற்பெயரில், எய்து - பகுதி, அல் - விகுதி: (அம்புசெலுத்துத லென்னும் பொருளில், எய் - பகுதி, தல் - விகுதி.) (23)

உ4. அடையாளநாண்மலரங்கையிலேடுமணிவடமு
முடையாளைநுண்ணிடையொன்றுமிலாளையுபநிடதப்
படையாளையெவ்வுயிரும்படைப்பாளைபதுமநறுந்
தொடையாளையல்லது மற்றினியாரைத்தொழுவதுவே.

(இ - ள்.) நாள் மலர் - அன்றுமலர்ந்த தாமரைப்பூப்போன்ற, அம் கையில் - அழகிய் கைகளில், ஏடும் - ஏட்டுப் புத்தகத்தையும், அணி வடமும் - அழகிய ஜபமாலையையும், அடையாளம் - தனக்கு உரிய அறிகுறியாக, உடையாளை - கொண்டுள்ளவளும், நுண் இடை ஒன்றும் இலாளை - நுட்பமான இடை சிறிதும்இல்லாதவளும், உடநிடதப் படையாளை - உபநிஷத்துக்களைத் தன் பரிவாரமாக வுடையவளும், எ உயிரும் படைப்பாளை - எல்லாப்பிராணிகளையும் சிருஷ்டிப்பவளும், நறு பதுமம் தொடையாளை - வாசனை வீசுகிற செந்தாமரைமலர்மாலையை யுடையவளுமான சரசுவதியை, அல்லது - அல்லாமல், இனி மற்று யாரை தொழுவது - இனிமேல் (யான்)வேறு யாரை வணங்குவது? (எ - று.)

வேறுயாரையும் வணங்கே னென்றும், பிறரெவரும் வணங்கு தற்கு உரியவரல்லரென்றும், கூறியபடியாம். இனி, 'இனி' என்றது-அவளைச்சரணமடைந்தபின்பு என்றபடி. சரசுவதி இடக்கையிற் புத்த கத்தையும், வலக்கையிற் படிகமாலையையும் உடையளென அறிக. இவை சரசுவதிக்கு அடையாளமாகக் கூறப்படுதலை, பெருந்தே வனார் பாரதத்தில் "புத்தகமு ஞானத்துமுத்திரையும் பொற் பளிங்கும், வைத்த கமண்டலமும் வன்னிகையும் - முத்து, வடங் கொண்ட மார்பினள்" என்றதனாலும், கம்பராமாயணத்தில் "புத்தகம் படிகமாலை குண்டிகை பொருள்சேர் ஞான, வித்தகந் தரித்த செங்கைவிமலை" என்றதனாலும், காண்க. இனி, நாள் மலர் என்பதற்கு - புதிய தாமரை மலர்களையும் என்று பொருள் கொண்டு, நான்குகைகளுள் மற்றைய இரண்டில் தாமரைமலர்களைத் தரித் துள்ளா ளென்றலு மொன்று.

இனி, அடையாளமென்றது, ஞானமுத்திரையாகவுமாம்; அதாவது - பிறர்க்கு நல்லுணர்வை உபதேசிக்கும் அறிகுறி; அது - கட்டைவிரல்நுனியையும் சுட்டுவிரல்நுனியையும் ஒன்றுசேர்த்து மற்றை மூன்று விரல்களையும் நேர்நிற்க வைக்கும் நிலை. படிகமாலை, ஜபமந்திரத்தைத் தொகையிடுதற்கு உரியது. மணிவட மெனப் பதம்பிரித்து உரைத்தல், மோனைத்தொடைக்கு இயையாது. இடை மிகச்சிறுத்துள்ள தென்னும் பொருளில் அதிசயோக்திவகையால் அதை இல்லையென்றே சொல்லுங் கவிமரபு பற்றி, 'நுண்ணிடை யொன்றுமிலாள்' என்றார். உபநிஷதம், பத்மம் - வடசொற்கள். உபநிடதப் படையாள் என்றது - உபநிடதுக்களுக்குத் தலைவி யென்றும், அவற்றால் வழிபட்டுத் துதிக்கப்படுபவ ளென்றுங் கூறிய படியாம்; மூன்றாமடியில் 'படையாள்;' 'படைப்பாள்' என்ற சொற்கள் இங்கு வெவ்வேறுபொருளில் வந்தாலும் ஒன்றுக்கொன்று எதிர் மறையான பொருளுந் தரக்கூடியதனால் அவற்றைஒருங்குதொடர வைத்தது, தொடைமுரண்; "மொழியினும்பொருளினும்முரணுதல் முரணே" என்றார் தொல்காப்பியனார். இது - சொல்தொடை முரண். இரண்டாம் அடியில், 'உடையாள்' 'இலாள்' என்பன வந்தது, பொருள்தொடைமுரண். தொடை - தொடுக்கப்படுவது. மற்று - இடைச்சொல். தொழுவது என்ற தொழிற்பெயர் - இங்கே வினைமுற்றாய் நின்றது. (24)

25. தொழுவார்வலம்வருவார்துதிப்பார்தந்தொழின்மறந்து
விழுவாரருமறைமெய்தெரிவாரின்பமெய்புளகித்
தழுவாரின்னுங்கண்ணினீர்மல்குவாரென்கணுவதென்னை
வழுவாதசெஞ்சொற்கலைமங்கைபாலன்புவைத்தவரே.

(இ - ள்.) வழுவாத - தவறுபடாத, செம் சொல் - செவ்விய சொற்களையுடைய, கலை மங்கைபால் - கல்விக்கு உரிய மகளான சரசுவதியினிடத்தில், அன்பு வைத்தவர் - பக்தியுள்ளவர்கள்,— (அப்பிராட்டியை), தொழுவார் - நமஸ்கரிப்பார்கள்; வலம் வருவார்- பிரதக்ஷிணஞ்செய்வார்கள்; துதிப்பார்- தோத்திரம்பண்ணுவார்கள்; தம் தொழில் மறந்து - தமதுசெயலை மறந்து [பரவசப்பட்டு], விழுவார்-கீழ்விழுவார்கள்; அரு மறை மெய் தெரிவார் - (அறிதற்கு) அரிய வேதங்களின் உண்மைப்பொருளை உணர்வார்கள்; இன்பம் - ஆனந்தத்தால், மெய் புளகித்து - உடல் மயிர்சிலிர்க்கப்பெற்று, அழுவார் - புலம்புவார்கள்; இனும் - இன்னும், கண்ணின் நீர் மல்குவார் - ஆனந்தக்கண்ணீர்பெருகப்பெறுவார்கள்; என் கண் ஆவதுஎன்னை - (இப்படிப்பட்ட செயல்களுள்) என்னிடத்து உண்டாவது யாது? [எதுவுமில்லை என்றபடி.]

பக்திகாரியமான மெய்ப்பாடொன்றும் என்னிடத்தில் இல்லை யென்று கவி தமது விநயத்தை வெளியிட்டபடியாம். இனும் - தொகுத்தல். என்கண், கண் - ஏழனுருபு. (25)

26. வைக்கும்பொருளுமில்வாழ்க்கைப் பொருளுமற்றெப்பொருளும்
பொய்க்கும்பொருளன்றிநீடும்பொருளல்லபூதலத்தின்
மெய்க்கும்பொருளுமழியாப்பொருளும்விழுப்பொருளு
முய்க்கும்பொருளுங்கலைமானுணர்த்துமுரைப்பொருளே.

(இ - ள்.) வைக்கும் பொருளும் - (பாடுபட்டுத் தேடி) வைக்கும், (பொன்னும் மணியும் நெல்லுமாகிய) செல்வங்களும், இல்வாழ்க்கை பொருளும் - சம்சாரவாழ்வி லுள்ள (மக்களும் சுற்றமுமாகிய) ஐசுவரி யங்களும், மற்று எ பொருளும் - (ராஜாங்கம் வாகனம் அடிமை என்னும்) மற்றை ஐசுவரியங்களும் (ஆகிய அஷ்டைசுவரியங்களும்), பொய்க்கும் பொருள் அன்றி - நிலையின்றி அழியும் பொருள்களாகு மேயல்லாமல், நீடும் பொருள் அல்ல - (அழிவின்றி) நீடூழிகாலம் நிலைத்துநிற்கும் பொருள்களல்ல; பூதலத்தில் மெய்க்கும் பொருளும்)- - நிலவுலகத்தில் [இம்மையில்] அழியாதுநிலைத்துநிற்கும் பொரு ளும், அழியாபொருளும் - (மறுமையில்) அழிவில்லாத ஐசுவரியமும், விழு பொருளும் - (இவற்றினும்) சிறந்ததான முத்திச்செல்வமும், உய்க்கும் பொருளும்-(முத்தியிற்) சேர்ப்பதான தத்துவப்பொருளும், கலை மான் உணர்த்தும் உரை பொருளே - கல்விக்கு உரிய மகளான சரசுவதி சொல்லுஞ் சொற்களின் பொருளேயாம்; (எ - று.)

செல்வப்பொருள்போலன்றிக் கல்விப்பொருள் சாசுவதமா யிருக்குந் தன்மையும், சரசுவதியின் உருவமான சொல் நித்திய

மென்றலும், இங்கு விளக்கப்பட்டன. இல் - வீடு: அதில் வாழ்தல் - இல்வாழ்க்கை. வாழ்க்கை - கைவிகுதி பெற்ற தொழிற்பெயர். விழு - சிறப்பையுணர்த்தும் விழுமம் என்னும் உரிச்சொல்லின் விகாரம். மான் - உவமையாகுபெயர். (26)

27. பொருளா லிரண்டும்பெறலாகுமென்றபொருள்பொருளோ
மருளாதசொற்கலைவான்பொருளோபொருள்வந்துவந்தித்
தருளாய்விளங்குமவர்க்கொளியாயறியாதவருக்
கிருளாய்விளங்குநலங்கிளர்மேனியிலங்கிழையே.

(இ - ள்.) வந்து - (அருகில்) வந்து, வந்தித்து - (தன்னை) நமஸ்கரித்து, அருள் ஆய் - (தனது) திருவருளுக்கு இலக்காகி, விளங்குமவர்க்கு - சிறப்புற்றவர்களுக்கு, ஒளி ஆய் - பிரகாசமாகி [புலனாய்த்தோன்றி], அறியாதவருக்கு இருள் ஆய் - (தனதுமகிமையை) உணராதவர்களுக்குப் புலனாகாதுநின்று, விளங்கும் - சுயம்பிரகாசமாய் விளங்குகின்ற, நலம் கிளர் மேனி - அழகுமிக்க திருமேனியையும், இலங்கு இழையே - விளங்குகிற ஆபரணங்களையுமுடையவளான சரசுவதியே! பொருளால் இரண்டும் பெறல் ஆகும் என்ற பொருள் பொருளோ - ('அறம் பொருள் இன்பம் என்ற திரிவர்க்கத்தில் இடையிலுள்ளதான) பொருளினால் (அறமும் இன்பமுமாகிய மற்றை) இரண்டுபொருள்களையும் அடையலாம்' என்று சிறப்பித்துக் கூறப்பட்ட செல்வப்பொருள் சிறந்த பொருளாமோ? [ஆகா], மருளாத சொல் கலை பொருளோ வான் பொருள் - அறியாமையது மயக்கத்தை யொழிக்கிற சொற்களையுடைய கல்விப்பொருளோ வெனின் சிறந்த பொருளாம்; (எ-று.)

கலைமகளாகிய உனக்கு உரியதான கல்விப்பொருளே சிறந்த பொருளாமென்றும், மற்றை அழியுந்தன்மையதான செல்வப்பொருள் அப்படிப்பட்ட சிறந்தபொருள் அன்றென்றும் கவி தாம் சரசுவதியின் விபவத்தை அறிந்து பாராட்டுந்தன்மையை அப்பிராட்டியின் சந்நிதியிலே விண்ணப்பஞ்செய்ததாகும், இது. பொருளா லிரண்டும் பெறலாகுமென்ற பொருள் - "அறனீனுமின்பமு மீனுந்திறனறிந்து, தீதின்றிவந்தபொருள்", "ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொரு, ளேனையிரண்டு மொருங்கு", "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவணதெய்த இருதலையுமெய்தும் நடுவணது எய்தாதா னெய்தும் உலைப்பெய்து, அடுவதுபோலுந் துயர்", "பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே யம்மூன்றும், ஆராயிற் றானே யறம்பொருளின்பமென்று, ஆராரிவற்றி னிடையதனை யெய்துவார், சீராரிருகலையு மெய்துவர்", "இல்லார் இருமையும் நல்ல எய்தார்", "வறியார் இருமை யறியார்" என்பன காண்க. வான் - உரிச்சொல். முதலடியில், ஓகாரம் - எதிர்மறை; இரண்டாமடியில், ஓகாரம் - தெரிநிலை. (27)

28. இலங்குந்திருமுகமெய்யிற்புளகமெழுங்கண்கணீர்
மலங்கும்பழுதற்றவாக்கும்வலிக்குமனமிகவே
துலங்குமுறுவல்செயக்களிகூருஞ்சுழல்புனல்போற்
கலங்கும்பொழுதுதெளியுஞ்சொன்மாதைக்கருதினர்க்கே.

(இ - ள்.) சொல் மாணை கருதினர்க்கு - சொற்களுக்கு உரிய மகளான சரசுவதியைத் தியானித்தவர்களுக்கு,—திரு முகம் - அழகிய முகம், இலங்கும் - (மலர்ந்து) விளங்கும்; மெய்யில் - உடம்பில், புளகம் எழும் - மயிர்ச்சிலிர்ப்பு உண்டாம்; கண்கள் நீர் மலங்கும் - கண்களில் ஆனந்தபாஷ்பம் ததும்பும்; பழுது அற்ற வாக்கும் வலிக்கும் - குற்றமில்லாத வாய்ச்சொல்லும் உறுதிபெறும்; மனம் மிகவே துலங்கும்- மனம் மிகுதியாகத் தெளிவுபெறும்; முறுவல்செய களி கூரும் - புன்சிரிப்புஉண்டாம்படி சந்தோஷம் மிகும்; சுழல் புனல் போல் கலங்கும் பொழுது தெளியும் - நீர்ச்சுழிப்படுகிற நீர்போலக் கலக்கமுண்டாம் பொழுது அக்கலக்க மொழியும்; (எ - று.)

"உறுங் கவலொன் றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வி" ஆதலால், 'சுழல்புனல்போற் கலங்கும்பொழுது தெளியும்' எனப்பட்டது. வாக்குவலிக்கும் என்பதற்கு - சிறந்தசொற்கள் வெளிவருமென்றும், செல்வாக்குஉண்டாகு மென்றுங் கருத்துக் காண்க. வாக் - வடசொல். செய - தொகுத்தல். (28)

29. கரியாரளகமுங்கண்ணுங்கதிர்முலைக்கண்ணுஞ்செய்ய
சரியார்கரமும்பதமுமிதழுந்தவளநறும்
புரியார்ந்ததாமரையுந்திருமேனியும்பூண்பனவும்
பிரியாதென்னெஞ்சினுநாவினுநிற்கும்பெருந்திருவே.

(இ - ள்.) பெருந் திருவே - (உன்னைச்சரணமடைந்தவர்க்குப்) பெருஞ்செல்வமுண்டாதற்குக்காரணமான கலைமகளே!—(உனது), கரி ஆர் அளகமும் - கருநிறம்பொருந்திய முன்னெற்றிமயிரும் [கூந்தலும்],—கண்ணும் - கண்களும்,—கதிர் முலைக்கண்ணும் - ஒளிபொருந்திய முலைக்கண்களும்,—செய்ய - சிவந்த, சரி ஆர் - வளையல்கள் நிறையஅணியப்பெற்ற, கரமும் - கைகளும்,—பதமும் - திருவடிகளும்,—இதழும் - அதரமும்,—தவளம் நறும் புரி ஆர்ந்த தாமரையும் - நல்லமணமுடையதும் முறுக்குடையதுமான வெண்டாமரை மலரும்,—திருமேனியும் - உடம்பின்நிறமும்,—பூண்பனவும்-அணிந்து கொள்ளும் ஆபரணங்கள் முதலியனவும், (ஆகிய உனதுசம்பந்தம் பெற்ற எல்லாப் பொருள்களும்), பிரியாது - விட்டுப்பிரியாமல், என் நெஞ்சினும் - எனது மனத்திலும், நாவினும் - நாக்கிலும், நிற்கும் - நிலைபெற்றிருக்கும்; (எ - று.)

என்றது, எப்பொழுதும் நான் உனது சம்பந்தம்பெற்ற பொருள்களையே நினைத்தலும் புகழ்தலும் செய்வே னென்றவாறு. அளகம் - அலகம், வடசொல். (29)

30. பெருந்திருவுஞ்சயமங்கையுமாகியென்பேதைநெஞ்சி
லிருந்தருளுஞ்செஞ்சொல்வஞ்சியைப்போற்றி லெல்லாவுயிர்க்
பொருந்தியஞானந்தருமின்பவேதப்பொருளுந்தருந் [கும்
திருந்தியசெல்வந்தருமழியாப்பெருஞ்சீர்தருமே.

(இ - ள்.) பெரு திருவும் சயமங்கையும் ஆகி - ஸ்ரீமகாலக்ஷ்மியின் சொரூபமும் ஜயலக்ஷ்மியின்சொரூபமுமா யுள்ளவளும், என்பேதைநெஞ்சில் இருந்து அருளும் - எனது அறிவின்மையை யுடைய மனத்தில் வீற்றிருக்கின்றவளும் (ஆகிய), செம் சொல் வஞ்சியை - செவ்வியசொற்களுக்கு உரிய மகளான சரசுவதியை, போற்றில் - துதித்தால்,—(அவள்), எல்லா உயிர்க்கும் - (துதிக்கின்ற) அச்சனங்களெல்லோர்க்கும், பொருந்திய ஞானம் தரும் - நிலையான நல்லுணர்வை அளித்தருள்வாள்; இன்பம் வேதம் பொருளும் தரும் - பேரின்பத்தைக்கூறுகிற வேதத்தின்பொருளையும் விளக்கியருள்வாள்; திருந்திய செல்வம் தரும் - சுத்தமான செல்வத்தைக் கொடுத்தருள்வாள்; அழியா பெரு சீர் தருமே - அழிவற்றதான பெரியமுத்திச்செல்வத்தையுந் தந்தருள்வாள்; (எ - று.)

அழியாப்பெருஞ்சீர் - என்றும் அழிதலில்லாத பெருங்கீர்த்தியெனினுமாம். வஞ்சி - நீர்வஞ்சிக்கொடி; அதுபோல மெல்லியளாய் ஒல்கியொசியும் மகளுக்கு, உவமையாகுபெயர். (30)

சரசுவதியந்தாதி முற்றிற்று.

இந்தச் சரசுவதியந்தாதி அச்சாகுங்கால், இப்பதிப்பினைப் பார்வையிட்டுப் பிழைதிருத்திச்செம்மையுற ஆக்கியவர், சென்னை விவேகாநந்தர்கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பேராசிரியர், வித்வான். C. ஜெகந்நாதாசார்யர், M. A., (Hist), M. A. (Tamil), L. T., P. O. L. Dip. Geog. அவர்.

செய்யுள்முதற்குறிப்பகராதி.

சடகோபரந்தாதி.

மூலமும் உரையும்

ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர்

அருளிய பதவுரை விசேடவுரையுடன் கூடியது.

அரவிந்தா பிரிண்டர்ஸில் பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீ

சடகோபரந்தாதி.

முகவுரை.

மகாகவியாகிய கம்பர் நம்மாழ்வார் என்னும் சடகோபர் விஷயமாகப் பாடிய அந்தாதிநூலுக்குச் சாலச் சிறந்த உரை அடியேனது ஞானாசிரியரான உரையாசிரியச் சக்கரவர்த்தி **ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் ஸ்வாமிகளால்** அருளிச்செய்யப்பட்டிருப்பது பிரசித்தம். இவ்வந்தாதி இலக்கிய இலக்கணநயங்களோடு தத்துவார்த்தங்கள் செறிந்த நூலாகலின், தமிழ்பயிலவிரும்புவோர் அனைவர்க்கும் இது இன்றியமையாதது என்னத் தட்டில்லை. இந்நூலின் உரையாக்கத்தில் அச் சீரிய பண்புகள் மிளிர்தலைக் காணலாகும். இவ்விரிவுரைநூல் அடியேனால் செவ்வன் பார்வையிட்டுச் செப்பஞ்செய்து, இஞ்ஞான்று நல்ல பதிப்பாக வெளியிடப்படுகிறது. திருவாளர். V. M. நரசிம்மன் (பொறியியல் வல்லுநர்) தமிழ்த்தாய்க்குச் செய்துவரும் தலைசிறந்த தொண்டில் இவ்வெளியீடு குன்றிலிட்ட விளக்காகும்.

எனது காலத்தையெல்லாம் வீணாக்காமல் தமிழ்த்துறையிற் செலுத்தி எனக்குத் தோன்றாத்துணையாய்நின்று திருவருள்புரியும் அருட்பெருங்கடலை அநவரதமும் எண்ணியெண்ணி வாழ்த்துகின்றேன்.

பிலவங்க ஸ்ரீ
மார்கழிமீ
1968
திருவல்லிக்கேணி

வி. ஜெகந்நாதாசார்யர்.

மூன்றும் பதிப்பு—1968

நூல் எழுந்த வரலாறு.

சடகோபரந்தாதி என்ற நூலை இயற்றியவர் கம்பர். இவர் இராமாயணத்தை ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றக்கருதி அங்குச் சென்று ஸ்ரீவைஷ்ணவசமயாசாரியரான ஸ்ரீமந்நாதமுனிகள் அநுமதிப்படி ஒருமண்டப கைங்கரியஞ்செய்து முடித்துச் சுப தினத்திலே அரங்கேற்றத் தொடங்குகையில், நம்பெருமாளாகிய ஸ்ரீரங்கநாதன் அர்ச்சகமுகமாக ஆவிர்ப்பவித்து 'நீ நம்சடகோபனைப் பாடினையோ? பாடினால்தான் நாம் உனது ராமாயணத்தைத் திருவுள்ளம்பற்றுவோம்; இல்லாவிடின் அது நமக்கு அங்கீகாரமாகாது' என்று அருளிச்செய்ய, அங்ஙனமே கம்பர் நூறுகட்டளைக் கலித்துறையிற் சடகோபரந்தாதியைப் பாடினர். பின்பு, இராமாயணம், நாதமுனிகள் திருவோலக்கத்திலே மேட்டழகிய சிங்கர் சிரக்கம்பஞ் செய்யுமாறு அரங்கேற்றப்பட்டது. அக்காலம் முதலியவற்றை

"எண்ணிய *சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன்
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன் [வாழ்வு
பண்ணிய விராம காதை பங்குனி யத்த நாளிற்
கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே"

எனக் காண்க.

---

* சகாத்தம் - சாலிவாகநசகாப்தம்: இப்பொழுது நடப்பது, 1889; ஆகவே, கம்பர்காலம் இப்பொழுதைக்கு ஆயிரவருஷங்களுக்குமுன்பு என்பர். குலோத்துங்கசோழன் காலம் எனப்படுதலால், கி. பி. 12-ஆம் நூற்றாண்டு என்பாருமுளர்.

அரவிந்தா பிரிண்டர்ஸ், 19, கிருஷ்ணப்ப மேஸ்திரி தெரு, சென்னை-3

ஸ்ரீ

ஆழ்வார் நூற்றந்தாதி

என்கிற

சடகோபரந்தாதி.

சடகோபரது அந்தாதி என விரியும்; சடகோபர்விஷயமாக அந்தாதித் தொடையாற் பாடப்பட்டதொரு பிரபந்தம் என்பது பொருள்: இத்தொடர் மொழியில் தொக்குநின்ற ஆரும்வேற்றுமையுருபின்பொருளாகிய சம்பந்தம், விஷயமாகவுடைமை; விஷ்ணு புராணம், விநாயகரகவல் என்பவற்றிற்போல, சடகோபரைப் பற்றிய அந்தாதி என விரித்தால், இரண்டாம் வேற்றுமையுருபும் பொருளும் உடன்தொக்க தொகையாம்.

'சடகோபர்' என்பது - ஸ்ரீவைஷ்ணவமதத்திற் சிறந்தமெய்யடியாரென்று கொண்டாடப்படுகிற ஆழ்வார்கள் பன்னிருவரில் ஐந்தாமவரான நம்மாழ்வாரது திருநாமங்களி லொன்று. பாண்டியநாட்டில் தாமிரபர்ணி நதிதீரத்தி லுள்ளதான திருக்குருகூரில் வேளாள வருணத்தவராகிய திருவழுதிவளநாடரென்பவரது சந்ததியிலே காரியென்பவர்க்கு உடையநங்கையார் திருவயிற்றில் திருவவதரித்த இவர், பிறந்தபொழுதே தொடங்கி அழுதல் பால்குடித்தல் முதலிய குழந்தைச்செய்கையொன்றையுங் கொள்ளாமலே வாட்டமின்றிப் பரிபூர்ணராய் வளர்ந்துவருகிற ஆச்சரியத்தைத் தாய்தந்தையர் கண்டு இவரை அத்திருப்பதியிலுள்ள திருமாலின் திருக்கோயிலிற் கொண்டுபோய் விட, இவர் அங்குஇருந்த ஒருபுளியமரத்தின்கீழ்ச்சென்றுவீற்றிருந்து பதினாறு பிராயமளவும் கண்திறவாமல் மௌனமாக எழுந்தருளியிருந்த பின்பு, மதுரகவிகள் இவ்வாழ்வாருடைய மகிமையையறிந்து வந்து அடைந்து அடிமைத்தொழில் செய்துவருகையில், ஆழ்வார் இருக்கு யசுர் அதர்வணம் சாமம் என்ற நான்குவேதங்களின் சாரார்த்தங்கள் முறையே அமையத் திருவிருத்தம் திருவாசிரியம் பெரியதிருவந்தாதி திருவாய்மொழியென்னும் நான்குபிரபந்தங்களை அருளிச்செய்து உலகத்தை உய்வித்தன ரென்று வரலாற்றின் சுருக்கம் அறிக. கர்ப்பத்திலிருக்கிறபொழுது ஞானமுடையனவாயிருக்கின்ற குழந்தைகளைப் பிறந்தஉடனே தனதுஸ்பரிசத்தால் அஜ்ஞானத்துக்கு உள்ளாக்கி அழுதல் அரற்றுதல் முதலியன செய்யும்படி பண்ணிவிடுந் தன்மையதான சடமென்னும் வாயு, இவ்வாழ்வார் அவதரித்தபொழுது இவரையும் தொடுதற்கு வர, அப்பொழுது இவர் அதனை உங்காரத்தால் ஒறுத்துஓட்டி யொழித்ததனால், சடகோபர் என்று இவர்க்குத் திருநாமமாயிற்று: எம்பெருமானுடைய திவ்யமங்கள குணகணங்களாகிய அமுத

வெள்ளத்திலே முழுகி மிகவும்ஈடுபட்டு நன்றாக ஆழ்ந்திடு பவராதல்பற்றி 'ஆழ்வார்கள்' என்று பெயர்பெற்ற பரமபாகவதர் களில் இவர் பிரதானராதலால், 'ஆழ்வார்' என்பது இவர்க்குச் சிறப்புப்பெயராக வழங்கும். மாறன்,பராங்குசன்,வகுளாபரணன், திருநாவீறுடையபிரான், திருக்குருகூர்நம்பி, குருகைப்பிரான் முதலிய திருநாமங்களும் இவர்க்கு உண்டு.

அந்தாதி - அந்தத்தை ஆதியாகவுடையது, அன்மொழித் தொகை; வடமொழித்தொடர், தீர்க்கசந்தி: அந்த ஆதி எனப் பிரிக்க. அந்தாதியாவது-முன்நின்ற செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்து வருஞ் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது; இங்ஙனம் பாடும் நூலினது ஈற்றுச்செய்யுளின் அந்தமே முதற்செய்யுளின் ஆதியாக அமையவைத்தல், மண்டலித்த லெனப்படும். இது, தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்றாம். பதிற்றந் தாதி, நூற்றந்தாதி என்ற வகைகளில் இந்நூல், நூற்றந்தாதி யாம்; அதாவது - நூறுவெண்பாவினாலேனும், நூறு கட்டளைக் கலித்துறையினாலேனும் அந்தாதித்தொடையாற் கூறுவது. இந் நூல்-அந்தாதித்தொடையா லமைந்த நூறுகட்டளைக்கலித்துறை களை யுடையது. சொற்றொடர்நிலைச்செய்யுள் பொருட்டொடர் நிலைச்செய்யுள் என்ற வகையில், இது, சொற்றொடர்நிலை; "செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே" என்றார் தண்டியலங் காரத்தும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுளியலில் "விருந்தேதானும், புதுவதுகிளந்த யாப்பின்மேற்றே" என்பதனால், 'விருந்துதானும் பழங்கதைமேலதன்றிப் புதிதாகத் தாம்வேண்டியவாற்றால் தொடுக்கப்படுந்தொடர்நிலைமேலது' என்று கூறினமையின், இந் நூல், அங்ஙனங்கூறிய விருந்தாமென்று உணர்க. அச்சூத்திரவுரை யில் அந்தாதியும் கலம்பகமும் முதலாயின உதாரணங் காட்டப் பட்டுள்ளவாறுங் காண்க. இனி, இதனைச் சிறுகாப்பியத்துள் அடக்குவர் பிற்காலத்தார். இப்பிரபந்தம், தோத்திரரூபமானது.

சிறப்புப்பாயிரம்.

1. **தேவிற்சிறந்ததிருமாற்குத்தக்கதெய்வக்கவிஞன்**
பாவிற்சிறந்ததிருவாய்மொழிபகர்பண்டிதனே
நாவிற்சிறந்தவம்மாறற்குத்தக்கநன்னாவலவன்
பூவிற்சிறந்தவாழ்வான்கம்பநாட்டுப்புலமையனே.

(இதன்பொருள்.) தேவில் - (பிரமன் ருத்திரன் இந்திரன் முதலிய) தேவர்களனைவருள்ளும், சிறந்த-மேம்பட்டவனான, திருமாற்கு-ஸ்ரீமந்நாராயணனுக்கு, தக்க - தகுந்த, தெய்வம் கவிஞன்-தெய்வத்தன்மையுள்ள கவிபாடவல்ல புலவன், பாவில் சிறந்த திருவாய்மொழி பகர் பண்டிதனே-எல்லாப்பாடல்களிலும்

மேம்பட்ட திருவாய்மொழியென்னுந் திவ்வியப்பிரபந்தத்தைத் திருவாய்மலர்ந்தருளிய ஞானபண்டிதரான நம்ஆழ்வாரேயல்லது வேறில்லை; (அவ்வாறே), நாவின்சிறந்த அ மாறற்கு தக்க நல் நாவலவன் - (அங்ஙனம்பாடவல்ல) நாவினுற்சிறந்த அச்சடகோ பர்க்குத் தக்க கவிபாடவல்ல சிறந்தபுலவன், பூவில் சிறந்த ஆழ்வான் கம்பநாட்டுப் புலமையனே - இந்நிலவுலகத்திற் சிறந்த கம்பநாட்டாழ்வாரென்னும் வித்துவானேயல்லது வேறில்லை; (என்றவாறு.)

தேவாதிதேவனுன திருமாலின் வைபவத்துக்கு ஏற்றபடி கவி பாடவல்லவர் சடகோபரே; அச்சடகோபருடைய வைபவத்திற்கு ஏற்றபடி கவிபாட வல்லவர் கம்பநாட்டாழ்வாரே என்பது கருத்து. ஏகாரமிரண்டும் - பிரிநிலையோடு, தேற்றம். இச்செய்யுளில் முன்னிரண்டடியை உபமானமாகவும், பின்னிரண்டடியை உபமேயமாகவுங் கொண்டு எடுத்துக்காட்டுவமையணி யென்னலாம். திருமால் - திருமகள்கொழுநனுன ஸ்ரீமகாவிஷ்ணு. தேவிற் சிறந்த திருமால் - "பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புநதம், ஆவிற்கு அருமுனியா யானைக்கு அமரரும்பல், தேவில் திருமா லெனச்சிறந்த தென்பவே" என்றுர் கவிசாகரப்பெருந் தேவனுரும். தெய்வக்கவிஞன் - எல்லாப் பொருளையும் உள்ளபடி உணர்ந்து அங்ஙனமே உரைக்குந் திவ்வியஞானத்தையுடைய கவி; பரதேவதையான திருமாலின் திருக்கல்யாண குணங்களையே பாடுங் கவி.

ஆழ்வாரை "தெய்வக்கவிஞன்" என்றற்கும் திருவாய்மொழியை 'பாவிற் சிறந்தது' என்றற்கும் ஏற்றதொரு வரலாறு வருமாறு:—நம்மாழ்வாரது சிஷ்யரான மதுரகவியாழ்வார், அச்சடகோபர் திருநாட்டையலங்கரித்த பின்பு, அந்த ஆசிரியரைப் பிரிந்ததற்கு மிக இரங்கி அரிதில் தேறி, அர்ச்சாரூபமான ஆழ்வார் விக்கிரகத்தை ஏறியருளப்பண்ணி ஆழ்வாரவதாரஸ்தலமான திருக்குருகூரென்னுந் திருநகரியிலே பிரதிஷ்டை செய்து, அந்தத் திவ்விய மூர்த்திக்கு நித்திய நைமித்திக உத்ஸவங்களையெல்லாம் சிறப்புற நடத்திக் கொண்டு வந்தார். அத்திருவிழாக்களில், 'வேதந்தமிழ்செய்தமாறர் வந்தார்,' 'திருமாலுக்குஉரிய தெய்வப் புலவர் வந்தார்', 'அளவிலாஞானத்து ஆரியர் வந்தார்' என இவை முதலாக அநேகவிருதுகளைக் கூறித் திருச்சின்னம் ஒலிமுழங்குதலைக் கேள்வியுற்றவளவிலே, மதுரைச் சங்கத்தாரது தூண்டுதலால் அவர்கள் மாணுக்கர்கள் வந்து எதிரிட்டு 'உங்கள் ஆழ்வார் பக்தரேயன்றிப் பகவானல்லரே: அவர் சங்கமேறிய புலவரோ? அவர் பாடிய திருவாய்மொழி முதலியன சங்கமேறிய செய்யுளல்லவே: அவரை வேதந்தமிழ்செய்தவ ரென்று சிலாகிப்பது தகுதியோ?' என்று பல குதர்க்கம் பேசி விருதுகளைத் தடுத்திட்டனர்; அதற்கு மதுரகவிகள் மனம்பொறுது வருந்தி 'இவர்கட்குக் கர்வபங்கமாம்படி தேவரீர் செய்தருளவேண்டும்' என்று ஆழ்வாரையே பிரார்த்திக்க, சடகோபர் ஒரு கிழப்பிராமணவடிவத்தோடு வந்து திருவாய்மொழியில், "கண்ணன்கழலிணை, நண்

ணும்மனமுடையீர், என்னுந் திருநாமம், திண்ணம்நாரணமே" என்ற பாசுரத்தின் முதலடியை ஒரு சிற்றேட்டில் எழுதிக் கொண்டுபோய்ச் சங்கப்பலகையில் வைத்திட்டால் அவர்கள் செருக்கு அடங்கும் என்று கூறியருளினார்; அங்ஙியமனத்தின் படியே சடகோபபக்தர், கண்ணன்கழலிணையை யெழுதிய ஏட்டை யெடுத்துப்போய் வைத்திட்ட மாத்திரத்தில், சங்கப்புலவர்கள் ஏறியிருந்த பலகை பொற்றாமரைப் பொய்கையில் மூழ்கித் தன் மேலிருந்த புலவர்களையெல்லாம் நீரில்வீழ்த்தி உடனே எழுந்து தன்மீதுவைத்த சிறுமுறியை மாத்திரம் ஏந்திக்கொண்டு மிதந்தது; அப்பொழுது நீரில்விழுந்து அமிழ்ந்து தடுமாறி எழுந்து மெல்ல நீந்திக் கரை சேர்ந்த சங்கப்புலவர்கள், சகலவேதசாஸ்திரங்களை யும் பிறர்கற்பியாமல் தாமேயுணர்ந்த பகவதம்சமான ஆழ்வா ருடைய தெய்விகபாண்டித்தியத்தை யுணர்ந்து இறுமாப்பு ஒழிந்து, தாம் முன்பு அபசாரப்பட்டதற்கு அநுதாபமுற்று, அதனைக்ஷமிக்கும்பொருட்டு அவரது மகிமைதங்கியபிரபாவத்தைக் குறித்துத் தோத்திரமாகத் தனித்தனி ஒவ்வொருபாடல்பாடி வெளியிடுபவரானார்கள்; அங்ஙனம் வெளியிடுகையில், அப்பாடல் கள் யாவும் "சேமங் குருகையே செய்ய திருப்பாற்கடலோ, நாமம் பராங்குசமோ நாரணமோ—தாமம், துளவோ வகுளமோ தோளி ரண்டோ நான்கு, முளவோ பெருமானுனக்கு" என்ற இப்பாடல் வடிவாகச் சிறிதும் வேற்றுமையின்றி ஒற்றுமைப்பட்டிருக்கக் கண்டு அவர்களனைவரும் 'இதுஎன்ன அற்புதம்! இதுவும் ஆழ் வாரது தெய்வத்திருவருளே' என்று அதிசயப்பட்டு, "ஈயாடு வதோ கருடற்கெதிரே இரவிக்கெதிர் மின்மினி யாடுவதோ, நாயோடுவதோ வுறுமிப்புலிமுன் நரிகேசரி முன் நடையாடுவதோ, பேயாடுவதோ வழகூர்வசிமுன் பெருமான்வகுளாபரணன்னருள் கூர்ந், தோவாதுரையாயிரமாமறையின் ஒருசொற்பொறுமோ வுலகிற்கவியே" என்பது முதலாகச் சிற்சிலகவிகள்பாடிப் புகழ்ந்து அன்று முதல் ஆழ்வார்க்கு விருதுகூறல் முதலிய சகல வைபவங்களையும் முன்னினும் பலமடங்கு மிகுதியாக நடப்பித்து வந்தார்கள் என்பதாம்.

ஆழ்வார் பிறந்தபொழுதே தொடங்கி அழுதல் பால்குடித் தல் முதலிய லோகவியாபாரம் ஒன்றுமின்றி உலகநடைக்கு மாறாக இருந்ததனால், இவர்க்கு 'மாறன்' என்று திருநாமமாயிற்று; வலியவினைகட்கு மாறாக இருத்தலாலும், அந்நியமதஸ்தர்களை அடக்கி அவர்கட்குச் சத்துருவாயிருத்தலாலும்,பாண்டியநாட்டில் தலைமையாகத்தோன்றியதனாலும் வந்த பெயரென்றலு முண்டு. கம்பநாட்டுப்புலமையன் - கம்பநாட்டில் தோன்றிய புலவன்; "கம்பநாட்டாழ்வான்கவி," "தெய்வப்புலமைக்கம்பநாட்டாழ் வார்," "கம்பநாடன்," "கம்பநாடுடையவள்ளல்" என்பனவுங் காண்க. இவர், ஆழ்வார்கள் பன்னிருவரி லொருவரல்லராயினும், அவர்கள்போலப் பக்தியிற் சிறந்தவரென்பது பற்றி, ஆழ்வார் என்று வழங்கப்பட்டனர். இப்பெயரால் மற்றுஞ்சிலபக்தர்களை வழங்குவதை, பரதாழ்வான் சத்துருக்நாழ்வான் பிரகலாதாழ் வான் கஜேந்திராழ்வான் சுதரிசநாழ்வான் கூரத்தாழ்வான் வில்லி

புத்தூராழ்வார் முதலிய பெயர்களிலுங் காண்க. அன்றியும், நம்மாழ்வார்விஷயமாக 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்ற பதிற்றந்தாதியைப் பாடிய மதுரகவிகளை 'மதுரகவியாழ்வார்' என்றல்போல, நம்மாழ்வார்விஷயமாக 'சடகோபரந்தாதி' என்னும் நூற்றந்தாதியைப் பாடிய கம்பநாடரையும் 'கம்பநாட்டாழ்வார்'என்று சொல்லத்தகும்; "மன்றேபுகழுந்திருவழுந்தூர்வள்ளல்மாறனை முன், சென்றேமதுரகவிப்பெருமாள் தென்தமிழ்த்தொடையில், ஒன்றேபதிகமுரைத்தவன்பொன்னடியுற்றுநின்றான், என்றே பதிகம்பதிகமதாக விசைத்தனனே" என இந்நூலினிறுதியில் வருஞ் சிறப்புப்பாயிரச்செய்யுள்கொண்டும், மதுரகவியாழ்வாரும் கம்பநாட்டாழ்வாரும் ஒருபுடையொப்புமையுடையராத லுணர்க. மற்றும், ஸ்ரீராமபக்தியை மிகுதியாகவுடைமைபற்றிப் பரதன் 'பரதாழ்வான்' என்று வழங்கப்படுதல்போல, ஸ்ரீராமபக்தியை மிகுதியாகவுடைய கம்பநாடரும் 'கம்பநாட்டாழ்வார்' என்று வழங்கப்படுதற்கு ஏற்றவராவர். இனி, வாழ்வான் என்று எடுத்து, நிலவுலகத்துச் சிறந்த வாழ்வையுடையவ ரென்றலும் ஒன்று.

'தேவ' என்ற வடமொழி, தமிழில் 'தே' என்று சிதைந்து வழங்கும்; இதனைத் தமிழ்மொழியே யென்பாரு முளர். 'தே' என்ற ஓரெழுத்தொருமொழியின்மேல், 'இல்' என்ற ஏழனுருபு சேரும்போது, இடையில் வகரவுடம்படு மெய்பெற்று 'தேவில்' என்று நின்றது; "ஏமுன் இவ்விருமையும்" என்றார் நன்னூலார். திருவாய்மொழி - மேன்மையான வாய்மொழிகளினாலாகிய பிரபந்தம்; அடையடுத்த கருவியாகுபெயர். நாவிற்சிறந்தமாறன் - 'திருநாவீறுடையபிரான்' என்று ஆழ்வார்க்கு ஒரு திருநாமமிருத்தலுங் காண்க. நாவலவன் - கவிபாடுதல் பிரசங்கஞ்செய்தல் முதலிய நாவின்வல்லமை யுடையவன். புலமை - கல்வித்தேர்ச்சி: அதாவது - பலவேறுவகைப்பட்ட நூலுணர்ச்சிகளை யெல்லாம் ஒருங்கே கொண்ட பேரறிவுடைமை; பாண்டித்தியம்: அதனை யுடையவன், புலமையன்.

இக்கவி, அபியுக்தரி லொருவர் செய்தது. இது, வைஷ்ணவ சம்பிரதாயத்தில் '**தனியன்**' எனப்படும். (நூலினுள் அடங்காது தனியே பாயிரமாய் நிற்றல்பற்றியது, அப்பெயர்: 'அன்' விகுதி - உயர்வுப்பொருளது.) அடுத்த மூன்றுசெய்யுள்களும் இவ்வாறே. (1)

2. ஆரணத்தின்சிரமீதுறைசோதியையந்தமிழாற்
பாரணஞ்செய்தவனைக்குருகூரனைப்புற்பலவா
தாரணுமெனவேத்தித்தொழக்கவிநல்குகொடைக்
காரணனைக்கம்பனைநினைவாமுட்களிப்புறவே.

(இ - ள்.) ஆரணத்தின் சிரம்மீது - வேதமுடிவிலே, உறை - பொருந்திய, சோதியை - பரஞ்சோதிஸ்வரூபியான ஸ்ரீமந்நாராயணனை, அம் தமிழால்-அழகிய தமிழ்ப்பாசுரங்களினால், பாரணம் செய்தவனை - பாடியனுபவித்தவரான, குருகூரனை - திருக்குரு

கூரில் அவதரித்தவராகிய நம்மாழ்வாரை, பல் பல ஆ - பல்பல வகையாக, நாரணன் ஆம் என ஏத்தி தொழ - அந்த நாராயண மூர்த்தியே யாவரென்று துதித்து (அனைவரும்) வணங்கும்படி, கவி நல்கு - கவிபாடிய, கொடை கார் அணனை - அருட்கொடையினால் மேகத்தைப்போல்பவராகிய, கம்பனை - கம்பநாட்டாழ்வாரை, உள் களிப்பு உற - மனத்தில் ஆனந்தம் உண்டாகி மிகுமாறு, நினைவாம் - (எப்பொழுதும்) சிந்திக்கக்கடவோம், (யாம்);

வேதத்தின்பிரிவு இரண்டனுள், யாகம்முதலிய கிரியைகளைக் குறிப்பதான கர்மகாண்ட மெனப்படுகிற பூர்வபாகம் தவிர, பகவானைக்குறித்ததாய் உபநிஷத் என்றும் வேதாந்தம் என்றும் பெயர்சொல்லப்படுகிற பிரமகாண்டமாகிய உத்தரபாகம்,'ஆரணத்தின்சிரம்' எனப்பட்டது. அவ்வுபநிஷத்துக்களில் நன்குபிரதிபாதிக்கப்படுகிறவனும்,சூரியன் முதலிய சுடர்களின் ஒளியெல்லாவற்றினும் மேம்பட்ட ஒளிவடிவமா யுள்ளவனுமான கடவுளென்பார் 'ஆரணத்தின் சிரமீதுறைசோதி' என்றார்; "வேதாந்தவிழுப்பொருளின் மேலிருந்த விளக்கு" என்றார் பெரியாழ்வாரும்.'தமிழ்' என்பது-இங்கு, அப்பாஷையிலாகிய செய்யுள்கட்கு ஆகுபெயர். அவற்றிற்கு அழகு - சுருங்கச் சொல்லல் முதலியன. "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம், கண்ணனெம்பெருமான்" என்னும்படி, ஆழ்வார்எம்பெருமானைத்தியானித்துக் கவிபாடித்துதித்து ஆனந்தமனுபவித்தலையே தமக்குத் தாரகபோஷக போக்கியங்களாகக் கொண்டு வளர்ந்தவராதலால்,"சோதியையந்தமிழாற் பாரணஞ்செய்தவன்" என்றார். இத்தொடர்க்கு - எம்பெருமானைத் தாம்பாடும் இனியபாடல்களாகிய அமிருதத்தைக் கொண்டு திருப்தி செய்வித்தவரென்றும் பொருள் கொள்ளலாம். குருகூரன் - திருவவதார ஸ்தலத்தினால் வந்தபெயர்; குருகூர் - நூற்றெட்டுத்திருமால்திருப்பதிகளுட் பாண்டியநாட்டுத் திருப்பதி பதினெட்டில் ஒன்று. செய்தவனை, குருகூரனை என்று விசேஷணம் விசேஷ்யம் என்ற இரண்டிலும் வேற்றுமையுருபு விரித்தது, வடமொழிநடை: காரணனை, கம்பனை என்றவிடத்தும் இது காண்க. பற்பலவா - ஆழ்வாரைச் சிறப்பித்தும், திருவாய்மொழியைச் சிறப்பித்தும், அது கற்றோரைச் சிறப்பித்தும், தலைவன்கூற்றாகச் சிறப்பித்தும், தலைவிகூற்றாகச்சிறப்பித்தும், தாய்கூற்றாகச்சிறப்பித்தும், தோழிகூற்றாகச் சிறப்பித்தும் பிறவகைகளாற் சிறப்பித்தும் இப்படி பலபடிகளாக என்க.

ஆழ்வாரைப் பகவானுடைய அம்சமென்று பாத்மபுராணம் கூறுகின்றதற்கு ஏற்ப, 'நாரணனும்' எனப்பட்டது; "நாராயணவடியேனுடுந்தமிழ்வேதபாராயண சடகோபா" என்பர் பிள்ளைப்பெருமாளையங்காரும். 'அணவுபவன்' என்றது, 'அணன்' என்று விகாரப்பட்டு நின்றது; 'அந்தணர்' என்பதற்கு - ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'அந்தத்தை அணவுபவர்' என்று விரித்துக் காரணப் பொருளுரைத்தது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. கொடைக்காரணன்-"கைம்மாறுவேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோவுலகு" என்றபடி மேகம்போலப் பிரதியுபகாரத்தை

விரும்பாமல் வரையாது கொடுக்கும் ஞானவண்மையை யுடையவ னென்க; "காரணக்கொடையான் கம்பன்" என்ற கம்பராமாயணச் சிறப்புப்பாயிரமுங் காண்க: இனி, கொடைக்காரணன் என்பதற்கு-கொடைக்குக் காரணமானவன் [அதாவது - கொடையைச் செய்பவன்] என்று பொருள்கொள்ளுதலும் ஒன்று. 'நினைவாம்' என்ற தன்மைப்பன்மை, உலகத்தாரை உளப்படுத்தியது. 'கம்பனை நினைவாம்' என விரித்தல்விகாரம்பெற்ற பாடமும் உண்டு; அது, ஓசைநயத்துக்குச் சிறக்கும். (2)

3. நஞ்சடகோபனைப்பாடினையோவென்றுநம்பெருமான்
விஞ்சியவாதரத்தாற்கேட்பக்கம்பன்விரைந்துரைத்த
செஞ்சொலந்தாதிகலித்துறைநூறுந்தெரியும்வண்ண
நெஞ்சடியேற்கருள்வேதந்தமிழ்செய்தநின்மலனே.

(இ - ள்.) வேதம் தமிழ் செய்த நின்மலனே - வேதங்களைத் தமிழ்த்திவ்வியப்பிரபந்தங்களாக அருளிச்செய்த குற்றமற்ற ஸ்வாமி!—நம் சடகோபனை பாடினையோ என்று -'நம்ஆழ்வாரைத் துதித்துப் பிரபந்தம் பாடினையோ?' என்று, நம் பெருமாள் விஞ்சிய ஆதரத்தால் கேட்ப - ஸ்ரீரங்கநாதன் மிக்க அன்புகொண்டு வினவியருள, (அதனை யநுசரித்து), கம்பன் விரைந்து உரைத்த - கம்பர் விரைவாகப்பாடின, செம் சொல் அந்தாதி கலித்துறை நூறும் - செந்தமிழ்ச் சொற்களாலான அந்தாதிப்பிரபந்தத்திலுள்ள நூறுகட்டளைக் கலித்துறைகளையும், தெரியும் வண்ணம் - அறிந்து கொள்ளும்படி, அடியேற்கு நெஞ்சு அருள் - தாசனுன எனக்கு மனப்பரிபாகத்தை அளித்தருள்வாயாக; (எ - று.)

என்று அபியுக்த ரொருவர் ஆழ்வாரைப் பிரார்த்திக்கிற வகையாக இந்நூற்குப் பாயிரம்பாடின ரென்க; அடுத்தசெய்யுளும் இத்தன்மைத்தே:"எங்கள்கதியே இராமாநுசமுனியே,சங்கை கெடுத்தாண்ட தவராசா - பொங்குபுகழ், மங்கையர்கோ னீந்த மறையாயிரமனைத்துந், தங்குமனம் நீ எனக்குத்தா" என்ற பெரிய திருமொழித்தனியனும் இவ்வகை வாய்பாடு அமைய இருத்தல் காண்க.

நம்சடகோபனைப்பாடினையோ வென்று நம்பெருமாள் விஞ்சிய ஆதரத்தாற்கேட்ட விவரம், கம்பர்வரலாற்றிற் கூறப்பட்டது. சடகோபர் நம்பெருமாளால் 'நம்ஆழ்வார்' என்று அபிமானித்து விசேஷகடாக்ஷஞ் செய்யப்பட்டு மற்றையாழ்வார்களனைவரினும் உயர்வுபெற்றதனால், 'நம்மாழ்வார்' என்று பெயர்பெற்றனர்; 'நம்பெருமாள்' என்ற பெயரும் உயர்ச்சியை விளக்கும்; "நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை, யென்ப ரவரவர்தம் ஏற்றத்தால்" என்ற உபதேசரத்தினமாலையைக் காண்க.பெருமாள் = பெருமான்: பெருமையுடையவன்; இதில், பெருமையென்ற பகுதி ஈற்று ஐகாரம் மாத்திரம் கெட்டு 'பெரும்' என நின்றது; 'ஆன்' என்ற ஆண்பால்விகுதி 'ஆள்' என ஈறுதிரிந்தது: 'ஆள்' என்ற பெண்பால் விகுதியே சிறுபான்மை ஆண்பாலுக்கு வந்ததென்றலுமொன்று: அன்றி, பெருமையை ஆள்பவனெனக் கொண்டால்,

'ஆள்' என்ற வினைப்பகுதி கருத்தாப்பொருள்விகுதி புணர்ந்து கெட்டதென வேண்டும். 'வேதம்' என்பது - (அறியவேண்டு மவைகளையெல்லாம்) அறிவிப்பதுஎன்று காரணப்பொருள்படும். 'விரைந்துஉரைத்த' என்றதனால், இவ்வந்தாதி ஆசுகவியாகப் பாடப்பட்டதென்பது போதரும். அடியேன் - அடிமையென்னும் பண்பினடியாப் பிறந்த தன்மையொருமைக் குறிப்பு வினையா லணையும்பெயர்.

இப்பொழுதைக்குச் சற்றேறக்குறைய 460 - வருடங்கட்கு முன்புஇருந்த ஸ்ரீபிள்ளைலோகாரியசீயர் தாமியற்றிய உபதேசரத் தினமாலைவியாக்யாநத்தில் மேற்காட்டிய "நம்பெருமாள் நம்மாழ் வார்"என்றதொடக்கத்துப்பாசுரத்தின்கீழ் இச்செய்யுட்பகுதியை யெடுத்து மேற்கோள்காட்டியுள்ளதனால், இத்தனியன் அக் காலத்திலேயேபிரசித்தமாகஇருந்ததென்றுஅறியலாம். (3)

4. நாதனரங்கனயந்துரையென்னநற்கம்பனுன்றன்
பாதம்பரவியபைந்தமிழ்நூறும்பரிவுடனே
யோதும்படியெனக்குள்ளந்தனையருளோதரிய
வேதந்தமிழ்செய்தமெய்ப்பொருளேயிதென்விண்ணப்பமே.

(இ - ள்.) ஒது அரிய-ஓதியுணர்தற்கு அரியனவான, வேதம்- வேதங்களின் ஸாரார்த்தங்களை, தமிழ்செய்த - தமிழ்த் திவ்வியப் பிரபந்தங்களாக அருளிச்செய்த, மெய்பொருளே - உண்மையான பரம்பொருளே!—நாதன் அரங்கன் - ஸ்ரீரங்கநாதன், நயந்து - விரும்பி, உரை என்ன - '(நம்சடகோபனைப்)பாடு' என்று நியமித் தருள, நல் கம்பன் - சிறந்த கம்பநாட்டாழ்வார், உன்தன் பாதம் பரவிய-உன்னுடையதிருவடிகளைத் துதித்த, பைந் தமிழ் நூறும் - பசுந்தமிழ்ச்சொற்களால் தொடுத்த நூறுபாசுரங்களையும், பரி வுடனே ஓதும்படி - அன்போடு கற்றுஉணரும்படி, எனக்கு உள் ளந்தனை அருள் - அடியேனுக்கு மனப்பரிபாகத்தை அளித்தருள் வாய்; இது என் விண்ணப்பமே - இதுவே (உன்பக்கல்) அடி யேன் செய்யும் விஜ்ஞாபநம்; (எ - று.)

"சொல்லின்தொகைகொண் டுனதடிப்போதுக்குத் தொண்டு செய்யும், நல்லன்பரேத்துமுன்நாமமெல்லா மென்றன்நாவினுள் ளே, அல்லும் பகலு மமரும்படிநல்கு அறுசமயம், வெல்லும்பரம விராமாநுச விதென்விண்ணப்பமே" என்ற இராமாநுசநூற்றந் தாதித்தனியன் இவ்வகைவாய்பாடு அமைய இருத்தல் காண்க.

நாதன்அரங்கன்-யாவர்க்குந்தலைவனும் ஸ்ரீரங்கத்திற்கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனுமான நம்பெருமாள். நற்கம்பன்- ஞானத்திலும் குணஞ்செயல்களிலுஞ் சிறந்த கம்பன். செந் தமிழை 'பைந்தமிழ்' என்றல், ஒருவகைக்கவிமரபு. தமிழுக்குப் பசுமை - இனிமையுமாம். ஆழ்வார் பகவானது அம்சமாதலால், அவரை 'மெய்ப்பொருளே' என்று விளித்தார். விண்ணப்பம் - விஜ்ஞாபநம் என்ற வடசொல்லின் சிதைவு. (4)

சடகோபரந்தாதி.

நூல்.

1. வேதத்தின்முன்செல்கமெய்யுணர்ந்தோர்விரிஞ்சன்முதலோர்
கோதற்றஞானக்கொழுந்தின்முன்செல்ககுணங்கடந்த
போதக்கடலெங்கடென்குருகூர்ப்புனிதன்கவியோர்
பாதத்தின்முன்செல்லுமேதொல்லைமூலப்பரஞ்சுடரே.

(இ - ள்.) தொல்லை - பழமையானதாயும், மூலம் - (எல்லாவற்றிற்கும்)மூலகாரணமாயும், பரம்-(எல்லாவற்றிற்கும்)மேலானதாயுமுள்ள, சுடர் - ஜ்யோதிஸ்வரூபமாய் விளங்குகிற ஸ்ரீமந் நாராயணன்,—வேதத்தின் முன் செல்க - வேதங்களைக்கடந்து சென்றாலுஞ் செல்லட்டும்: மெய் உணர்ந்தோர் - தத்துவங்களையாராய்ந்து அறிபவர்களான முனிவர்களும், விரிஞ்சன் முதலோர் - பிரமன்முதலான தேவர்களுமாகிய அனைவருடைய, கோது அற்ற ஞானம் கொழுந்தின் முன் - குற்றமற்ற ஞானத்தின்முடிவைக் கடந்து, செல்க-சென்றாலுஞ்செல்லட்டும்; குணம் கடந்த போதம் கடல் - எண்ணளவுகடந்த ஞானம் நிறைந்த கடலாகிய, எங்கள் தென் குருகூர் புனிதன் - அழகிய திருக்குருகூரில் அவதரித்த பரிசுத்தமூர்த்தியான நம்ஆழ்வார் அருளிச் செய்த, கவி - பாசுரத்தினது, ஓர் பாதத்தின் முன் - ஓர் அடியைக் கடந்து, செல்லுமே - செல்லமாட்டுவனோ? [செல்லமாட்டான் என்றபடி]; (எ - று.)

ஸ்ரீமந்நாராயணன் சடகோபருடைய கவியின் ஒருபாதத்தைக் கடக்கமாட்டான் என்பதற்குத் திருஷ்டாந்தமாக, கீழ் "தேவிற் சிறந்த" என்ற பாயிரச்செய்யுளி னுரையிற் காட்டிய "கண்ணன் கழலிணை" என்ற அடியைப்பற்றிய வரலாற்றைக் கூறுவர். ஆழ்வாரருளிச்செய்த திருவாய்மொழி முதலிய திவ்வியப்பிரபந்தங்களிலுள்ள ஒவ்வொருசெய்யுளின் ஒவ்வோர் அடியும் ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யஸ்வரூபத்தை ஐயந்திரிபற நன்குஉணர்ந்து தெளிவாக வெளியிடுதலால், அப்பரமன் அதனைக்கடந்துசெல்லமாட்டாது அதனுள்ளே அடங்கிநிற்பன் என்பதாம். பரமாத்மஸ்வரூபத்தைமுற்றுமுணர்ந்து தெரிவித்தலில் ஆழ்வார்க்குஉள்ளஞானாதிசயத்தை விளக்கியபடியாம். அந்தத் திவ்வியஞானத்தின் வரம்பின்மை விளங்கவே, 'குணங்கடந்த போதம்' என்றார். எண்ணிலாக்காட்சி [அநந்தஞானம்] என்றபடி. குணம்-எண்கூட்டிப் பெருக்குதல். போதக்கடல் - நீர்நிறைந்த கடல்போல ஞானம் நிறைந்த கடல் என்க. இனி, 'குணம்கடந்த' என்பதற்கு - கருணை முதலிய சாத்துவிககுணங்களின் முடிவெல்லையில்நின்றவென்று உரைப்பினும் அமையும்; "குணமென்னுங்குன்றேறி நின்றார்" என்றாற்போல. அருள், ஐம்பொறியடக்கல், தவம், பொறுமை, மெய்யுணர்வு, மேன்மை, மௌனம், வாய்மை என்ற எட்டும்

சாத்துவிககுண மெனப்படும். இனி, 'குணங்கடந்த' என்பதற்கு - காமம் கோபம் முதலிய இழிகுணங்க ளில்லாத என்று உரைப் பாரு முளர்; பரமாத்மாவை 'நிர்க்குணன்' என்றாற்போல. குணங் கள் தந்த என்று பதம்பிரித்து, (எம்பெருமானுடைய அடியவர்க் கெளிமைமுதலிய) திருக்கல்யாணகுணங்களைச் சொல்லிவெளி யிட்டுதவிய என்றலும் ஒன்று. 'புனிதன்கவியோர்பாதம்' என் றது, திருவாய்மொழியின் முதற்பாசுரத்தின் முதலடியான "உயர் வறவுயர்நலமுடையவன் யவனவன்" என்றதை என்பர் ஒருசாரார்; அதிலே பரப்பிரஹ்மஸ்வரூபம் அடங்கியிருத்தல் காண்க.

பரமாத்மாவினுடைய ஸ்வரூபத்தை நாடிச்சொல்லிக்கொண் டே சென்றவேதம் அதன்முடிவு தனக்கு எட்டாமையால் மீண்ட தென்பது, அவ்வேதஞ்சொல்வதனாலேயே தெரிகிறது; ஆகவே, 'வேதத்தின்முன்செல்க' என்றது அமையும்; கோயில்களில் உத்ஸ வங்கண்டருளுகிறபொழுது எம்பெருமான் நடுவேஎழுந்தருள, வட மொழிவேதம் அவனை எட்டமாட்டாது நாடித்தொடர்ந்துசெல்லு தற்கு அறிகுறியாக எம்பெருமானுக்குப்பின்னே பாராயணஞ் செய்யப்பட்டுவருதலும், தமிழ்வேதமாகிய திவ்வியப்பிரபந்தம் அவனதுசொரூபத்தை யுணர்ந்து முன்செல்லுதல் தோன்ற முன்னே ஓதப்படுதலுங்காண்க; "தொடர்ந்தாரணமுழங்கப் பஞ்ச வர்க்குத் தூதுநடந்தான்" என்ற சிலப்பதிகாரத்தையும், "கடந்த ஞானியர் கடவுளர் காண்கலாக்கழலிணை சிவப்பேறத், தொடர்ந்த நான்மறை பின்செலப் பன்னகதுவசன்மாநகர்க்குதூது, நடந்த நாய கன்," "உரலும் வேதமுந் தொடர," "சுரருடனே, முனிவர்க ளுஞ் சுருதிநான்கும், தேடுகின்றபதஞ்சிவப்பத் திருநாடுபெறத் தூதுசெல்ல" என்ற வில்லிபுத்தூரார் பாரதத்தையும் நோக்குக. முன் - இடமுன். இனி, வேதத்தின்முன்செல்க என்பதற்கு - வேதத்தினது முதன்மை கழிக என்று உரைப்பாரு முளர்; பிறவற் றிற்கும் இவ்வாறே. மெய்யுணர்ந்தோர் - பிறப்புவீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களாலன்றி உண்மை யால் ஆய்ந்து உணர்பவர். திருமாலின் திருநாபிக்கமலமலரினின்று தோன்றியவன் படைத்தற்கடவுளாதலால், விரிஞ்சனை முதலா கக் கூறினார். "பத்துடையடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரியவித் தகன்" ஆதலாலும், "தனக்கும் தன்தன்மையறிவரியான்" ஆதலா லும், மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன் முதலோர் கோதற்றஞானக் கொழுந்தின்முன் செல்வன்; "ஆரேயறிவா ரனைத்துலகுமுண்டு மிழ்ந்த,பேராழியான்தன் பெருமையைக்-கார்செறிந்த,கண்டத்தா னெண்கண்ணன் காணான்" என்று திருமழிசையாழ்வார் அருளிச் செய்தமையுங்காண்க."ஓதியோதியுணருந்தொறுமுணர்ச்சியுதவும், வேதம்வேதியர் விரிஞ்சன்முதலோர்தெரிகிலா, ஆதிதேவரவரெம் மறிவினுக்கறிவரோ" என்றார் இராமாயணத்திலும். மெய்யுணர்ந் தோர் என்பதை விரிஞ்சன்முதலோர்க்கு அடைமொழியாக்கினும் அமையும். தொல்லை - அநாதி. தொல்லை மூலம் - ஆதிமூலம்.

தென்குருகூர் - தென்னாடாகிய பாண்டியநாட்டிலுள்ள குரு கூர் எனினுமாம். செல்லுமே, ஏ - எதிர்மறை. 'செல்லுமோர்' என்றும் பாடமுண்டு.

எல்லா நூல்களும் மங்கலமொழி முதல்வகுத்துக்கூறவேண்டுவது மரபாதலால், 'வேதம்' என்று தொடங்கினர். (1)

2. சுடரிரண்டேபண்டுமூன்றாயினதுகடீர்ந்துலகத்
திடரிரண்டாய்வரும்பேரிருள்சீப்பனவெம்பிறப்பை
யடரிரண்டாமலர்த்தாளுடையான்குருகைக்கரசன்
படரிருங்கீர்த்திப்பிரான்றிருவாய்மொழிப்பாவொடுமே.

(இ - ள்.) சுடர் - ஒளிகள், பண்டு - முன்பு, இரண்டே - இரண்டேயிருந்தன; (பின்பு),—துகள் தீர்ந்து - குற்றமில்லாமல், உலகத்து இடர் இரண்டு ஆய் வரும் பேர் இருள் சீப்பன - உலகத்தில் இருவகைப்பட்ட துன்பங்களாய்வருகிற பெரியஇருளை நீக்குபவையான, எம் பிறப்பை அடர் இரண்டு ஆம் மலர் தாள் உடையான் குருகைக்கு அரசன் படர் இருங் கீர்த்தி பிரான் திருவாய்மொழி பாவொடும் - எமது பிறவித்துன்பங்களையழிக்கின்ற தாமரைமலர்போன்ற இரண்டு திருவடிகளை யுடையவரும் திருக்குருகூர்க்குத்தலைவரும் பரவிய மிக்ககீர்த்தியையுடைய பெருமானுமாகிய நம்ஆழ்வாருடைய திருவாய்மொழிப்பிரபந்தத்தின் பாசுரங்களோடு (கூடி), மூன்று ஆயின - மூன்றாய்விட்டன; (எ - று.)

சுடர் பண்டுஇரண்டே: (பின்பு) பேரிருள் சீப்பனவான திருவாய்மொழிப்பாவொடும் மூன்றாயின என்க. சூரியன் சந்திரன் என்ற இரண்டு சோதிகளையும் 'இருசுடர்' என்றும், அவற்றோடு அக்கினியையுங்கூட்டி 'முச்சுடர்' என்றும் உலகத்திற் சாதாரணமாக வழங்குவார்கள்; அங்ஙனம் ஸாமாந்யமாகக்கூறப்படும் பொருளன்று, இங்குக் குறிக்கப்பட்டது. இங்கு, விசேஷமாக 'சுடர் இரண்டே பண்டு' என்றது - இராமபிரானையுங் கண்ணபிரானையும் குறித்தது. "பல்லாயிரமிருள்கீறிய பகலோனென வொளிரும், வில்லாளன்" என்பதுமுதலிய இடங்களில் இராமனைச் சூரியனென்றமை காண்க. 'உலகங்களாகிய தாமரைகளெல்லாம் மலரும்பொருட்டுத் தேவகியாகிய கிழக்குச்சந்தியில் ஸ்ரீமந்நாராயணனாகிய சூரியன் உதித்தருளினன்' என்ற ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலியவற்றில் கிருஷ்ணன் சூரியனெனப்பட்டுள்ளான். இவர்களை முறையே 'ராமதிவாகரன்' என்றும், 'அச்யுதபாநு' என்றுங் கூறுதல், பெருவழக்கு. இவர்களைச் சூரியனென்றற்குக் காரணம்- உலத்திற் பயங்கரமாய்ப் பரவிய கரிய பெரியவடிவமுடைய இராக்கதர் முதலிய துஷ்டர்களாகிய இருளை அறத்தொலைத்துச் சிஷ்டர்களுடைய முககமலங்களை மலர்த்தி விளங்குதல். 'பண்டு' என்றது - திரேதாயுக துவாபரயுகங்களி லென்றபடி. 'பண்டு' என்றதற்கு எதிராக, 'பின்பு' என்று வருவித்தது, கலியுகத்தைக் குறிக்கும். துவாபரயுகாந்தத்திலே கண்ணன் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளியவுடன் கலியுகம்பிறந்த நாற்பத்துமூன்று நாளில் ஆழ்வார் அவதரித்து முப்பத்தைந்து வருஷம் இவ்வுலகத்தில் வாழ்ந்திருந்தன ரென்று உணர்க. திருவாய்மொழிப் பாடல்களை மூன்றாவதுசுடராகச் சேர்த்ததற்குக் காரணம், 'உலகத்திடரிரண்டாய்வரும்பேரிருள் சீப்பன' என்ற அடைமொழி

னுல் விளங்கும். ("வாய்ந்தவளவயல்சூழ் தண்வளங்குருகூர்ச் சடகோபன், நேர்ந்த ஓராயிரத்திப்பத்து அருவினைநீறுசெய்யுமே," "வல்வினைதீர்க்குங்கண்ணனை வண்குருகூர்ச்சடகோபன், சொல் வினையாற் சொன்னபாட லாயிரத்துள்ளிவைபத்தும், நல்வினை யென்றுகற்பார்கள் நலனிடைவைகுந்தம் நண்ணித், தொல்வினை தீர வெல்லாரும் தொழுதெழவீற்றிருப்பாரே," "காரிமாறன் சடகோபன் சொல்லாயிரத்திப்பத்தால், வேரிமாறுதபூ மேலிருப் பாள்வினை தீர்க்குமே," "சடகோபன்சொல்லாயிரத்துளிப்பத்தும், கண்டுபாடவல்லார் வினைபோம்" என்று பதிகங்களிற் பயன்கூறிய படி) திருவாய்மொழிப்பாசுரங்கள் தம்மை ஓதியவரதுவினை களைத் தீர்ப்பனவாதல் காண்க. அச்சந்தருதலால், வினை 'இருள்' எனப்பட்டது.

'இடரிரண்டு' என்றது - நல்வினை தீவினைகளை; நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாதலால், அதனையும் தீவினையோடொப்ப 'இடர்' என்றே கூறினர். இங்கு 'நல்வினை' என்றது, அழியுந்தன்மை யனவான சுவர்க்கவின்பம் முதலிய காமியங்களைத் தருவனவாகிய யாகம்முதலியவற்றின் பயனை. இவை முக்திக்கு நேரேகாரண மாகிய தத்துவஞானத்தை யுண்டாக்காமைமாத்திரமேயன்றித் தீவினைபோல அது நிகழவொட்டாமல் தடைசெய்து நிற்றலு முடையனவாம், ஆதலால், இந்நல்வினை தீவினை இரண்டும் ஒருவ னுக்கு ஞானத்தைத்தடுத்துப் பந்தமுறுத்துவதிற்பொன்விலங்கும் இருப்புவிலங்கும்போலத் தம்முள் ஒப்பனவாமென்க. ஆனது பற்றியே, பிறரும், "இருள்சேரிருவினையுஞ் சேரா விறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார்மாட்டு" என்ருர். இங்கு "சுட ரிரண்டேபண்டு" என்று அடைமொழியொன்றும்கொடாமற்கூறி மூன்ருவதுசுடரெனப்படுகிற திருவாய்மொழிப்பாவிற்கு 'துகள் தீர்ந்து உலகத்து இடர் இரண்டாய்வரும் பேரிருள் சீப்பன' என்ற அடைமொழி கொடுத்ததனுல், அச்சுடரிரண்டினும் இச்சுடர்க்கு விசேடங் கூறியவாரும். 'ஆதித்யராமதிவாகர அச்யுதபாநுக் களுக்குப் போகாத உள்ளிருள் நீங்கி, சோஷியாத பிறவிக் கடல் வற்றி, விகஸியாத போதிற்கமலம் மலர்ந்தது வகுளபூஷண பாஸ்கரோதயத்திலே" என்னும் ஆசார்யஹ்ரு தயவாக்கியம் நோக்கத்தக்கது. சூரியன் முதலிய முச்சுடர் கள் நீக்கமாட்டாத இருள் என்றற்கு, 'பேரிருள்' என்ருர்; அங்ங னங் கூறியது, ராமதிவாகர அச்யுதபாநுக்களுக்கும் நீக்குதற்கு அரியது என்றவாறுமாம். ராமகிருஷ்ணுதி அவதாரங்கள் உல கத்தை நல்வழிப்படுத்துதலிற் பயன்பட்டவிதம் போதாதென்று அதன்பின் எம்பெருமான் பிரபஞ்சத்தவரைப் பிறவிப்பெருங்கடலி னின்று கரையேற்றிக் கைப்பற்றுதற்கு ஆழ்வார்களை அவதரிப் பித்தான் என்பது, ஐதிகியம். தன்னைச் சரணமடைந்தவர் களுடைய கருமங்களைத் தொலைத்துப் பிறப்பையொழித்து அவர் களை முத்தியிற் சேர்க்குந் திருவடிகளை யுடையா னென்பார், 'எம்பிறப்பைஅடர் இரண்டாம் மலர்த்தாளுடையான்' என்ருர். 'வெம்பிறப்பு' என்று பதம் பிரித்தல் மோனைத்தொடைக்குச் சிறவாது. இரண்டாம் மலர்த்தாள் - உபயதிருவடித்தாமரை. இரு

வாய்மொழிப்பிரபந்தமாகிய சூரியனுக்கு அதன் பாடல்கள் ஆயிரத்தையும் ஆயிரங்கிரணமாகக் கருதுக.

'பா' என்ற பால்பகா அஃறிணைப்பெயர் இங்குப் பன்மைப் பொருளதாதலால், அதனை 'சீப்பன' என்ற பலவின்பால் வினையாலணையும் பெயர் கொடுத்து விசேடித்தனர். திருவடிக்குத் தாமரைமலர் உவமை - செம்மை மென்மை அழகுகட்கு. மலர் என்ற பொதுப்பெயர், சிறப்புப்பற்றி, தாமரைமேல் நின்றது. படர்தல் - எங்கும் பரவுதல். (2)

3. பாவொடுக்குந்நுண்ணிசையொடுக்கும்பலவும்பறையு
நாவொடுக்குந்நல்லறிவொடுக்கும்மற்றுநாட்டப்பட்ட
தேவொடுக்கும்பரவாதச்செருவொடுக்குங்குருகூர்ப்
பூவொடுக்கும்மமுதத்திருவாயிரம்போந்தனவே.

(இ-ள்.) குருகூர் பூ ஒடுக்கும் - திருக்குருகூரில் அவதரித்தருளின ஆழ்வாருடைய திருவாய்மலரினுள்ளே (எம்பெருமானால்) நிறைத்துவைக்கப்பட்ட, அமுதம் திரு ஆயிரம் - அமிருதம்போலினிய திருவாய்மொழி ஆயிரஞ்செய்யுள்கள், போந்தன - (அங்கு நின்று) வெளிப்பட்டன: (அவை), பா ஒடுக்கும் - இயற்றமிழ்ச் செய்யுளிலக்கணங்களைத் தம்முள் அடக்கிக்கொண்டுள்ளன; நுண் இசை ஒடுக்கும்-நுட்பமான இசைத்தமிழினிலக்கணங்களைத் தம்முள் அடக்கிக்கொண்டுள்ளன; பலவும் பறையும் நா ஒடுக்கும் - பலவிஷயங்களையுங் கூறுகிற நாடகத்தமிழினிலக்கணங்களைத் தம்முள் அடக்கிக்கொண்டுள்ளன: நல் அறிவு ஒடுக்கும் - நல்ல அறிவுகளைத் தம்முள் அடக்கிக்கொண்டுள்ளன; மற்றும் நாட்டப்பட்ட தே ஒடுக்கும் - உலகத்தில் நிலைநிறுத்தப்பட்ட மற்றைத்தெய்வங்களையெல்லாம் ஒடுங்கச்செய்வன; பர வாதம் செரு ஒடுக்கும்-அந்நியமதஸ்தர்களின் வாதப்போர்களை அடங்கச்செய்துவிடுவன; (எ - று.)

பா ஒடுக்கும் - "எழுத்துப்பதின்மூன்று இரண்டுஅசை சீர் முப்பது ஏழ் தளை ஐந்து, இழுக்கிலடி தொடைநாற்பதின்மூன்று ஐந்துபா இனம்மூன்று, ஒழுக்கியவண்ணங்கள் நூறு ஒன்பதுஒண் பொருள்கோள் இருமூ, வழுக்கில் விகாரம் வனப்புஎட்டு யாப்புள் வகுத்தனவே" என்று தொகுத்து உணர்த்தப்படும் இயற்றமிழ்ப்பாவினிலக்கணங்கள் பலவற்றையும் தம்முள்ளே சுருங்கக் கொண்டுகாட்டும் என்றபடி. நுண்இசை ஒடுக்கும் - குறிஞ்சி, செருந்தி, இந்தளம், கொல்லி, காமரம், தக்கேசி, பஞ்சமம், கைசிகம், காந்தாரம், பாலையாழ் முதலிய பண்களாதியவற்றைத் தம்முள்ளே கொண்டு காட்டுமென்றபடி; "பண்ணிற் பன்னிருநாமப்பாட்டு" என்று திருவாய்மொழியில் வருதலுங் காண்க. 'பலவும்பறையும் நாவொடுக்கும்' என்பதற்கும் இங்ஙனமே கண்டுகொள்க. "எழுத்து அசை சீர் பந்தம் அடி தொடை நிரைநிறை ஓசை தளை இனம் யாப்புப் பாத்துறை பண் இசை தாளம் பத்து நூறு ஆயிரம் முதலானசெய் கோலம் இதுக்கும் உண்டு" என்ற ஆசார்யஹ்ருதய வாக்கியமுங்காண்க. செவிகருவியாக நுண்ணிதின் உணரப்படு

தலால், இசைக்கு 'நுண்' என்ற அடைமொழி கொடுத்தனர். இயலுக்கும் இசைக்கும் பொதுவாதல்பற்றி நாடகம் 'நா' எனப்பட்டது; நா = நடு.

'நல்லறிவு ஒடுக்கும்' என்பதற்கு - நல்லஅறிவை அடங்கியிருக்கச்செய்யும் என்று உரைப்பாருமுளர். ("நாட்டினான் தெய்வமெங்கும் நல்லதோரருள்தன்னாலே", "இறுக்குமிறையிறுத்துண்ண எவ்வுலகுக்கும் தன்மூர்த்தி, நிறுத்தினான் தெய்வங்களாக அத்தெய்வநாயகன்தானே", "வணங்குந்துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால், பிணங்குஞ்சமயம் பலபலவாக்கி அவையவைதோறு, அணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்தி பரப்பிவைத்தாய்" என்றபடி) எம்பெருமான் தானே, ஸத்வகுணம் மிக்கவராய்த் தன்னைப் பற்றுமளவுடையரன்றியே யிருக்கும் ரஜோகுணதமோ குணங்களால் மிக்கவர்க்கு ஏற்றபடி பலதேவதைகளை நியமித்து வைத்துள்ளானாதலால், 'நாட்டப்பட்டதே' என்றார். தன்னரசு நாடாக ஸ்வதந்திரராய்க் கண்டபடி திரிகிறவர்களுக்கு அவரவர் குணத்துக்குஏற்ப ஒவ்வொருதெய்வத்தை அமைத்துக்காட்டி அதனை வழிபடும்படிசெய்து அவர்களை அடக்கிவைத்தால் அங்ஙனம் ஒருப்பட்டசேதனர்கள் பின்புநாளடைவிலே வேதமுதலிய நூல்களைக்கொண்டு அச்சிறுதெய்வங்களுக்கும் பரதேவதையான தனக்குமுள்ள வாசியை யறிந்து தன்பக்கல்வந்துஉய்வார்கள் என்பது, ஸர்வேசுவரனது திருவுள்ளமென்க. 'நாட்டப்பட்ட' என்ற சொல்லின் ஆற்றலால், பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணன் அந்தத்தேவதாந்தரங்களுக்கு அந்தராத்மாவாக நில்லாவிடின் அவர்கள் கொள்கொம்பு பெறாத கொடிகள்போல அலைந்து நிலைகுலைவரென்பது போதரும். ("பேசநின்ற சிவனுக்கும் பிரமன்றனக்கும் பிறர்க்கும், நாயகனவனே கபால நன்மோக்கத்துக் கண்டுகொண்மின்" என்றும் மற்றும்பலவாறும்) திருவாய்மொழிப்பாசுரங்கள் நாராயணனுடைய பெருமையையும் மற்றைக்கடவுளரின் சிறுமையையும் நன்குவெளியிட்டு, கொடி கொள்கொம்பை மூடிப்படர்ந்திடாதபடி செய்தலால், 'மற்றுநாட்டப்பட்டதே வொடுக்கும்' எனப்பட்டது. ("இலிங்கத்திட்டபுராணத்தீரும் சமணரும் சாக்கியரும், வலிந்து வாதுசெய்வீர்களும் மற்றும் நுந்தெய்வமுமாகி நின்றான்,மலிந்து செந்நெல் கவரிவீசும் திருக்குருகூரதனுட்,பொலிந்து நின்றபிரான் கண்டீரொன்றும்பொய்யில்லை போற்றுமினே" என்றும் மற்றும் பலவாறும்) தமது பிரபந்தங்களிற் கூறியதத்துவார்த்தங்களைக்கொண்டு பிறமதங்களாகிய யானைகளைச் செருக்கடக்கி அவற்றிற்கு ஆழ்வார் மாவெட்டியென்னுங் கருவிபோன்றவராய்ப் பராங்குசரென்று ஒருதிருநாமம் பெறுதல் தோன்ற, 'பரவாதச் செருவொடுக்கும்' என்றார்.

இரட்டுறமொழிதலென்னும் உத்தியால் 'பூ' என்பதை 'பூ' எனவடமொழியாகவும், 'பூ' எனத் தென்மொழியாகவும் வைத்து இருபொருளும்ஒருங்கே கொள்ளப்பட்டது. 'குருகூர்ப்பூ' என்றது - திருக்குருகூரில் தோன்றிய ஆழ்வாரைக்குறித்தது; 'ஸ்வயம்பூ' என்ற பிரமன்பெயரும், 'ஆத்மபூ' என்ற மன்மதன்பெயரும்,

'அக்நிபூ' என்ற முருகன்பெயருங் காண்க. 'பூ' என்ற தமிழ்ச்சொல் - அதும்போன்ற வாயையுணர்த்தும்போது உவமையாகுபெயராம். வடமொழி வேதங்கள்போலவே தமிழ்வேதமாகிய திவ்வியப் பிர பந்தங்களும் அபௌருஷேயமும் நித்தியமுமாமென்பதும், செய்யா மொழியாகிய அவற்றை எம்பெருமான் தானே ஆழ்வார்கள் நாவி லிருந்து பாடிப் பிரகாசிப்பித்தானென்பதுமாகிய ஆன்றோர்கொள் கைகள், 'குருகூர்ப்பூவொடுக்கும் அமுதத்திருவாயிரம் போந்தன' என்பதில் தோன்றும். "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலை கள் சொன்னேன்" என்றபடி அமிருதம்போ லினிய ஆயிரம் பாசு ரங்க ளென்பார், 'அமுதத்திருவாயிரம்' என்றார்; உவமத்தொகை; திருஎன்ற அடைமொழி, மேன்மையைக் குறிக்கும். ஆயிரம் - ஆயி ரஞ்செய்யுள்களுக்கு எண்ணலளவாகுபெயர்.

ஒடுக்குந்நுண் ஒடுக்குந்நல், ஒடுக்கும்மற்று, ஒடுக்கும்மமுதம் என்றவற்றின் இடையிலுள்ள நகரமகரவொற்றுக்கள்-விரித்தல் விகாரம். வாதச்செரு-சொற்போர். 'பலவும் பறையும் நா வொடு க்கும்' என்பதற்கு-பலவற்றையும் பிதற்றுவதான (பிறசமயவாதி களின்) நாக்கை ஒடுங்கச்செய்யு மென்று உரைத்தலும் ஒன்று; 'திருநாவீறுடையபிரான்' என ஒருதிருநாமம் ஆழ்வார்க்கு வழங்குதல் காண்க: வீறு - ஒப்புயர்வற்ற சிறப்பு. நுண்இசை ஒடுக்கும் என்பதற்கு - "முன்னல்யாழ்பயி லுானரம்பின் முதிர் சுவையே," "நுடங்குகேள்வியிசையென்கோ" என்றபடி நுண் ணிதினுணரத்தக்க கீதம்போலினிய பரம்பொருளைத் தம்முள்ளே கொண்டு காட்டு மென்று உரைப்பாரு முளர். 'மற்றும் நாட்டப் பட்ட தே வொடுக்கும்' என்பதற்கு - பிறதெய்வங்களையும் தம் முள் அமையவைத்திருக்குமென்று உரைப்பினும் இழுக்காது; ("நக்கபிரானோடயனு மிந்திரனும் முதலாக, ஒக்கவுந்தோற்றிய வீசன்மாயன்", "கள்வா எம்மையும் ஏழுலகும் நின்னுள்ளே தோற்றிய இறைவவென்று, வெள்ளேறன் நான்முக னிந்திரன் வானவர், புள்ளூர்திகழல்பணிந்தேத்துவரே," "தளிர்மதிச்சடைய னென்கொ நான்முகக்கடவுளென்கோ," "நீராய் நிலனாய்த் தீயா ய்க் காலாய் நெடுவானாய்ச், சீரார்சுடர்களிரண்டாய்ச் சிவனா யய னாய்," "முனியே நான்முகனே முக்கண்ணப்பா" என்பவை முதலியன காண்க.

'பாவொடுக்கும்' என்றதை, "எழுத்தசைசீரடிசொற்பொருள் யாப்பு, வழுக்கில்வனப்பணிவண்ணம்—இழுக்கின்றி, என்றெவர் செய்தன வெல்லா மியம்பின, இன்றிவ ரின்குறள்வெண்பா" என் றாற்போலக் கொள்க. (3)

4\. தனமாஞ்சிலர்க்குத்தவமாஞ்சிலர்க்குத்தருமநிறை
கனமாஞ்சிலர்க்கதற்காரணமாஞ்சிலர்க்காரணத்தி
னினமாஞ்சிலர்க்கதற்கெல்லையுமாந்தொல்லையேர்வகுள
வனமாலையெம்பெருமான்குருகூர்மன்னன்வாய்மொழியே.

(இ - ள்.) தொல்லை - பழமையான, ஏர் - அழகிய, வகுளம் வனம் மாலை எம்பெருமான் குருகூர் மன்னன் வாய்மொழி - மகிழ

மலர்களினுலாகிய அழகிய மாலையையுடையவரும் எமக்கு இறைவரும் திருக்குருகூர்க்குத் தலைவருமான ஆழ்வாருடைய திருவாய் மலரினின்று வெளிப்பட்ட சொற்களாகிய திருவாய்மொழி முதலிய பிரபந்தங்கள்,—சிலர்க்கு—, தனம் ஆம் - செல்வமாம்; சிலர்க்கு,—தவம் ஆம்—; சிலர்க்கு—, தருமம் நிறை கனம் ஆம் - தருமம் நிறைந்த சிறந்தகாமபுருஷார்த்தமாம்; சிலர்க்கு—, அதற்கு ஆரணம் ஆம் - அந்தக்காமவின்பத்திற்கு உரிய வேதமாம்; சிலர்க்கு—, ஆரணத்தின் இனம் ஆம் - வேதத்தின்வருக்கமாம்; (சிலர்க்கு—,), அதற்கு எல்லையும் ஆம் - அவ்வேதத்தின் முடிவாகிய வேதாந்தமுமாம்: (எ - று.)

சிலர்க்கு - ஒவ்வொன்றை வேண்டுகிற அந்தந்த அதிகாரிகளுக்கு ஏற்பவென்க. ("அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே," "அறம் பொருளின்பமும் வீடும் பயக்கும், புறங்கடை நல்லிசையு நாட்டும் - உறுங்கவலொன்று, உற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங் கில்லை,சிற்றுயிர்க்குற்ற துணை" என்றவாறு) கல்வி திரவிய சம்பாதனத்துக்குக் காரணமாகிற வரையில் திருவாய்மொழிமுதலிய பிரபந்தங்களும் பொருளீட்டத்திற்கு ஏதுவாதலால், ('பொருளிலார்க் கிவ்வுலகமில்,' "பொருளுடையான் கண்ணதேபோகம்,' என்பவற்றை மேற்கொண்டு) பொருட்செல்வத்தை வேண்டுகிற சிலர்க்கு, அப்புருஷார்த்தத்தை விளைக்குமென்பார், 'தனமாம் சிலர்க்கு' என்றன ரென்பர்; காரணம்,காரியமாக உபசரிக்கப்பட்டது. ("செல்வரை யெல்லாருஞ்செய்வர் சிறப்பு", "தம்கைத்து உடையார்க்கும் எவ்வூரும் ஊர்" என்றபடி) செல்வமுடையார்க்கு எங்கும் உபசாரங்கள் நடத்தல் போலவே, ("கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு", "யாதானு நாடாமா லூராமா லென்னொருவன், சாந்துணையுங்கல்லாதவாறு" என்றபடி) திருவாய்மொழி ஓதினார்க்கு எங்கும் உபசாரங்கள் நிகழ்தல்பற்றி, பொருட்செல்வம்போலு மென்றபொருளில் 'தனமாம்' என்றனரெனினும் அமையும். செல்வம்போல மிக விரும்பிப் பாதுகாக்கப்படும் பொருளாமென்பது கருத்து. ("அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து, தீதின்றிவந்தபொருள்" என்றபடி) பொருள் அறத்துக்கும் இன்பத்துக்கும் காரணமாகிற சிறப்புடைமைபற்றி முதலிற் கூறப்பட்டது. ("வேண்டிய வேண்டியாங்குஎய்தலாற் செய்தவம், ஈண்டுமுயலப்படும்" என்றபடி), தன்னைப்பயின்றவர்க்கு வீடுபேறுமுதலாக வேண்டிய பயன்களை வேண்டியபடியே பெறுவிக்கின்ற தவம்போல, இத்திவ்வியப்பிரபந்தமும் தன்னை ஓதினவர்க்கு இம்மைமறுமைவீடுகளில் வேண்டியபயன்களை உண்டாக்குதலால், 'தவமாம் சிலர்க்கு' எனப்பட்டது:(அதனை, "பாதமடைவதன் பாசத்தாலே மற்றவன்பாசங்கள் முற்றவிட்டுக், கோதில்புகழ்க் கண்ணன் தன்னடிமேல் வண்குருகூர்ச்சடகோபன் சொன்ன, தீதிலந்தாதி ஓராயிரத்துள் ளிவையுமோர் பத்திசையொடும் வல்லார், ஆதுமோர் தீதிலராகி இங்குமங்கு மெல்லாமமைவார்கள் தாமே" எனக் காண்க.) ("விளக்குப்புக இருள்மாய்ந்தாங்கு ஒருவன், தவத்தின்முன் நில்லாதாம் பாவம்" என்றபடி) தவம் பாபக்ஷய ஹேதுவாதல்போல, அருளிச்

செயலும் ஓதுவாரது தீவினைதீர்தற்கு மூலமாம் என்பதுபற்றி, 'தவமாம்சிலர்க்கு' என்றனரென்றுங் கொள்க. சதுர்வித புருஷார்த்தங்களுள் தர்மபுருஷார்த்தமாம் என்பது 'தவமாம்' என்றதன் தாற்பரியம்.

நான்கு உறுதிப்பொருள்களுள் மூன்றாவதற்கு உள்ள சிறப்புப்பற்றி, அது, 'கனம்' என்ற பெயராற் குறிக்கப்பட்டது; ("சேமநல்வீடும் பொருளுந் தருமமுஞ் சீரியநற், காமமு மென்றிவை நான் கென்பர்" என்ற இராமாநுச நூற்றந்தாதியில் 'சீரிய நற்காமம்' என்றதையும், அதன்வியாக்கியானத்தில் 'சாஸ்திரங்களிலே சிலாகிக்கப்பட்டதாய்ப் போக்யமாய் விஹிதமாய் ஸ்வயம் புருஷார்த்தமான காமம்' என்றதையுங் காண்க.) இங்கு இன்பமென்றது, ("காதலிருவர் கருத்துஒருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" எனப்படுகிற) உலகவாழ்க்கைச் சிற்றின்பத்தை யன்று; "நான்கினுங் கண்ணனுக்கே, ஆமதுகாமம் அறம்பொருள் வீடிதற்கென் றுரைத்தான், வாமனன் சீல னிராமாநுச னிந்தமண்மிசையே' என்றபடி) எம்பெருமானைச் சேரவேண்டுமென்று அவன் பக்கலிலே உண்டாகின்ற அபேக்ஷையையே கூறியது. "கோவிந்தா, எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உன்றன்னோடு, உற்றோமே யாவோம் உனக்கே நாமாட்செய்வோம், மற்றை நங்காமங்கள் மாற்று" என்றதுங் காண்க. லோகநாயகனுடைய சேர்க்கையை அபேக்ஷிக்கின்ற பேரின்பக் காதல், வேதாந்த நிர்ணயத்தின்படி அன்பு செலுத்தவேண்டிய இடத்தில் அன்பைச் செலுத்தியதாதலால், சிற்றின்பக்காதல்போலன்றி, சகலபாபநிவ்ருத்திக்கும் வீடுபேற்றுக்குமே காரணமாதல்பற்றி, 'தருமம்நிறைகனம்' எனப்பட்டது. பரமாத்மாவினது தலைமையும், ஜீவாத்மாவினது அடிமையும், ஜீவாத்மா பரமாத்மாவுக்கே உரியதாயிருக்கையும், புருஷோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்குமுன் உலகம் முழுவதும் பெண்தன்மைய தாதலும், ஜீவாத்மாவினது ஸ்வாதந்திரியமின்மையும், பாரதந்திரியமும், தாம் எம்பெருமானது சேர்க்கையால் இன்பத்தையும் பிரிவினால் துன்பத்தையும் அடைதலும், அவனையே தாம் கரணங்களெல்லாவற்றாலும் அநுபவித்து ஆனந்தித்தலும் முதலிய காரணங்களால் ஆழ்வார் தம்மைத் தலைமகளாகவும் எம்பெருமானைத் தலைமகனாகவுங்கொண்டு அருளிச்செய்த இன்பச்சுவைமிக்க பாடல்களைக் கருதி, 'தருமநிறை கனமாஞ்சிலர்க்கு' என்றார். "கண்ணிற் காண்பரேல், ஆடவா பெண்மையை அவாவுந் தோளினாய்," "வாராகவாமனனே அரங்கா வட்டநேமி வலவா ராகவா உன்வடிவுகண்டால் மன்மதனும் மடவாராக ஆதரஞ்செய்வன்" என்ப வாதலாலும், தண்டகாரணிய வாசிகளான முனிவர்கள் இராமபிரானது சௌந்தரியாதிசயத்தில் ஈடுபட்டுத் தாம் பெண்தன்மையைப் பெறவிரும்பி மற்றொருபிறப்பில் ஆயர்மங்கையராய்க் கண்ணனைக் கூடினரென்பது ஐதிகியமாதலாலும், எம்பெருமானது திவ்விய சௌந்தரியத்தில் ஈடுபட்டு அவனது உத்தமபுருஷத் தன்மையைக் கருதியதனால் அப்பொழுதே அவனைக் கிட்ட வேண்டும்படியான ஆசையைப் பெற்ற ஆழ்வார் அங்ஙனம் அவனைக் கிட்டப்பெறாமையாலே ஆற்றாமைமீதூர்ந்து

தளர்ந்து அத்தளர்ச்சியினாலே தாமானதன்மை குலைந்து ஆண் பெண்ணும்படியான நிலைமை தோன்றி ஒருபிராட்டிநிலையை அடைதல் அமையும். அங்ஙனம் நாயகியாகிய நம்மாழ்வார் தலை மகள் வார்த்தை தாய்வார்த்தை தோழிவார்த்தைகளால் தூது விடுதல் இரங்குதல் வெறிவிலக்குதல் காலமயக்கு நலம்பாராட்டு உருவெளிப்பாடு முதலிய பல அகப்பொருளிலக்கணத் துறைகள மையுமாறு பாடிய பாசுரங்கள் காமசாஸ்திரமாதல்பற்றி, 'அதற்கு ஆரணமாம்' என்றார். சிருங்காரரசப்பிரதானமான அகப்பொருட் கிளவித்துறைகளை ஞானநூலாகிய தோத்திரப்பிரபந்தங்களிற் கூறுதற்குக்காரணம் - கடுத்தின்னாதானைக் கட்டிபூசிக் கடுத்தின் பிப்பார்போலச் சிற்றின்பங் கூறும்வகையாற் பேரின்பத்தைக் காட்டி நாட்டுதலென்பர். இங்ஙனம் அந்யாபதேசமாகக் கூறிய சிற்றின்பத்துறைச் செய்யுள்கட்கெல்லாம் ஸ்வாபதேசமாகப் பேரின்பத்தின்பாற்படுத்தும் உள்ளுறைபொருள் உண்டென் பதையும் உணர்க.

'ஆரணத்தின் இனமாம்' என்றது - ஆழ்வார் அருளிய நான்குபிரபந்தங்களும் நான்குவேதமாதலால், அவ்வேதங்களின் சித்தாந்தமான உபநிஷத்துக்களின்சாரமான அர்த்தங்கள் ஆழ்வா ரருளிச்செயல்களிற் பொதிந்திருத்தல்பற்றி, 'அதற்கு எல்லையு மாம்' எனப்பட்டது; என்றது, "கூறுதல்வல்லாருளரேற் கூடுவர் வைகுந்தமே" என்றபடி திவ்வியபிரபந்தங்கள் மோக்ஷசாதனமாம் என்றவாறு. எனவே, நாற்பயனாகிய நான்கையும் ஆழ்வார் பிரபந் தங்களால் அடையலாமென்பது இச்செய்யுளில் விளக்கப்பட்ட தென்க.

"ஆரணங்காணென்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின், காரணங்காணென்பர் காமுகர் காமநன்னூலதென்பர், ஏரணங்கா ணென்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர், சீரணங்காய சிற்றம்பலக்கோவையைச்செப்பிடினே" என்ற திருக்கோவையார்ச் சிறப்புப்பாயிரத்தோடு இதனை ஒப்பிடுக.

தொல்லை, ஏர் என்ற இரண்டும்-வாய்மொழிக்கு அடை மொழி. ஆழ்வார் திருவாய்மலரினின்று வெளிப்பட்ட தமிழ் வேதங்கள் சமஸ்கிருதவேதங்கள் போலவே அநாதியாமென்ற கருத்து அமைய 'தொல்லைவாய்மொழி' எனப்பட்ட தென்க. தம் பக்கல் திருவுள்ளமுவந்து திருக்குருகூர்ப் பொலிந்து நின்றபிரான் பிரசாதித்த மகிழமலர்மாலையைத் தரித்ததனால், ஆழ்வார்க்கு, 'வகுளாபரணர்' என்று ஒருதிருநாமம் வழங்கும். "வண்குருகூர் நகரான், நாட்கமழ்மகிழ்மாலை மார்பினன் மாறன் சடகோபன்" என்று ஆழ்வார் தாமே தம்மைக் கூறியிருத்தலுங் காண்க. "தாமம் துளவோ வகுளமோ" என்றபடி ஆழ்வார் ஸ்ரீமந்நாராயண னது அவதாரமே யென்ற ஒற்றுமை விளங்க, மகிழம்பூமாலை யாகிய திருத்துழாய்மாலையையுடைய எம்பெருமான் என்றதாகவும் கொள்ளலாம். அன்றியும், வநமாலை என்றதொரு திவ்வியமாலை திருமாலுக்கு உரியதாதலை 'வநமாலீ' என்ற அவனது திருநாமத் தினால் உணர்க.

'வாய்மொழி' என்று திருவாய்மொழியைக் குறித்தது, மற்றைப் பிரபந்தங்கட்கும் உபலக்ஷணம். (4)

5. மொழிபலவாயினசெப்பம்பிறந்ததுமுத்தியெய்தும்
வழிபலவாயவிட்டொன்றுயதுவழுவாநரகக்
குழிபலவாயினபாழ்பட்டதுகுளிர்நீர்ப்பொருநை
சுழிபலவாயொழுகுங்குருகூரெந்தைதோன்றலினே.

(இ - ள்.) குளிர் நீர் - குளிர்ந்த நீரையுடைய, பொருநை - பொருநை யென்னும் மறுபெயருள்ள தாமிரபர்ணிநதி, சுழி பல ஆய் ஒழுகும் - அநேக நீர்ச்சுழிகளோடுகூடிப் பாயப்பெற்ற, குருகூர் - திருக்குருகூரிலே, எந்தை - நம்ஆழ்வார், தோன்றலின் - திருவவதரித்ததனாலே,—மொழி பல ஆயின - பலபாஷைக ளுள்ளே, செப்பம் பிறந்தது - (ஆழ்வார் பாசுரம் அருளிச்செய்த பாஷையாகிய தமிழ்ஒன்றுக்கே 'செந்தமிழ்மொழி' என்னும்படி) செவ்வை தோன்றிற்று: முத்தி எய்தும் வழி பல ஆய விட்டு ஒன்று ஆயது-விடுபெறுவதற்கு உரியவழிகள் பலவானவை நீங்க ஒன்றே முத்திமார்க்கமாய் நின்றது; வழுவா நரகம் குழி பல ஆயின பாழ்பட்டது - தவறாத நரகக்குழிகள் பலவாயிருந்தவை பாழாய் விட்டன; (எ - று.)

'மொழிபலவாயின' என்றது சிங்களம் முதலிய பதினெட்டுத் தேசபாஷைக ளாகியவற்றை; அவற்றுள்ளே எம்பெருமானால் திருவுள்ளமுவந்து கொண்டாடப்பட்டு அவனுக்குமுன்னே பாராயணஞ்செய்யப் பெறுபவை தமிழ்த்திவ்வியப்பிரபந்தங்களே யாதலால், 'இந்தப் பாஷைக்கே செவ்வி உண்டாயிற்று' என்றார். இத்தகையமேம்பாட்டுக்குக் காரணம் மற்றையாழ்வார்களுமாயினும், அவர்களில் அவயவியாகிய நம்மாழ்வாரைக்கூறியதில் அவயவமாகிய மற்றையாழ்வார்களும் அடங்குவர்; (இங்ஙனம் அங்கியும் அங்கமுமாக உருவகப்படுத்துமிடத்து, நம்மாழ்வார்க்கு, பூதத்தாழ்வாரை முடியாகவும், பொய்கை பேயாழ்வார்களைக் கண்களாகவும், பெரியாழ்வாரை முகமாகவும், திருமழிசையாழ்வாரைக் கழுத்தாகவும், குலசேகராழ்வாரையும் திருப்பாணாழ்வாரையும் கைகளாகவும், தொண்டரடிப்பொடியாழ்வாரை மார்பாகவும் திருமங்கை யாழ்வாரை நாபியாகவும், மதுரகவியாழ்வாரைப் பாதமாகவும் உரைப்பது மரபு: இதன்விவரணம் விரிப்பிற் பெருகும். இப்படி உறுப்பியும் உறுப்புமாக நிரூபித்தற்கு ஏற்ற காரணம், நம்மாழ்வாரது தலைமை; அது எங்ஙன மெனின்:—மற்றை யாழ்வார்கள்போல இவ்வுலக வுணர்ச்சி நடையாடாநிற்க எம்பிரானருளால் ஒருகால விசேடத்திலே தத்துவஞானம்முதலியன தோன்றப்பெற்று அநுபவித்தவரன்றி, இவர், திருத்துழாய் பரிமளத்துடனே அங்குரிக்குமாறுபோல அவதரிக்கும் பொழுதே இயற்கையில் ஞானபக்திகளை யுடையராய் அங்ஙிலை என்றும் மாறாதிருந்தன லென்க.)

வெவ்வேறு மதங்களில் அந்தந்த மதத்துக்கு உரிய தெய்வத்தை வணங்குதல் முதலாகக் கூறப்பட்ட முக்தி மார்க்கங்க

ளெல்லாம் பூர்வபக்ஷமாய் மறுக்கப்பட்டுத் தலைகாட்டாது ஒழிய, திருமாலை வழிபடுதலொன்றே முக்திமார்க்கமென்று ஆழ்வார் சித்தாந்தஞ்செய்து நிலைநிறுத்தியிருத்தல்பற்றி, 'முத்தியெய்தும்வழி பலவாய விட்டு ஒன்றாயது' என்றார்; அன்றி, வீடுபேற்றுக்குச் சாதனமாக ஓதப்படுகிற கர்மம் ஞானம் முதலியவற்றை மறுத்து எம்பெருமானைச்சரணமடைதலான பிரபத்தியொன்றே முத்திக்கு நேரான உபாயமென்று நிலைநாட்டியதனால் 'முத்தியெய்தும்வழி பலவாயவிட்டு ஒன்றாயது' என்றதாகவுங் கொள்ளலாம். தீவினை செய்தவர்அடைதல் தவறாதனவும் அங்ஙனங் கொடுவினைசெய்து புக்குஅழுந்தியவர் மீளுதற்கு அரியனவுமான நரகபேதங்க ளென்பார், 'வழுவாநரகக்குழி பலவாயின' என்றார். அந்நரகவகைகள் அநேகம்ஆயிரங்க ளென்று புராணம் கூறும். 'ஆழ்வாரருளிச் செயலைக் கைப்பற்றி உலகத்தவர் பலருந் திருமாலடியார்களாய்த் தீவினை தவிர்ந்து உய்தலால், 'வழுவாநரகக்குழிபலவாயின பாழ் பட்டது' எனப்பட்டது; "அறிவிலாமனிசரெல்லாம் அரங்கமென் றழைப்பராகில், பொறியில்வாழ் நரகமெல்லாம் புல்லெழுந் தொழியுமன்றே," "காவலிற் புலனைவைத்துக்கலிதன்னைக்கடக்கப் பாய்ந்து, நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள்மீதே, மூவுலகுண்டுமிழ்ந்தமுதல்வ நின்நாமம்கற்ற, ஆவலிப்புடைமை கண்டாய் அரங்கமாநகருளானே," "பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம், நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை, கலியுங் கெடுங் கண்டுகொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல், மலியப்புகுந்திசைபாடியாடி யுழிதரக் கண்டோம்" எனக் காண்க. வெள்ளத்தின்மிகுதியால், சுழி பலவாய் ஒழுகும். 'குருகூர் எந்தை தோன்றலின்' - திருக்குருகூரிலே எம்பெருமானான ஸ்ரீமந்நாராயணன் ஆழ்வாராக அவதரித்ததனால் எனினுமாம்.

'முக்தி' என்ற வடசொல் - பற்றுக்களை விட்டு அடையுமிடமென்று காரணப் பொருள்படும்; வீடு என்ற தமிழ்ச்சொல்லும் இப்பொருளதே. எந்தை - எம்தந்தை: எமது ஆசிரியன், எமது தலைவன், எமது கடவுள். (5)

6. தோன்றாவுபநிடதப்பொருடோன்றலுற்றார்தமக்குஞ்
சான்றாமிவையென்றபோதுமற்றென்பலகாலுந்தம்மின்
மூன்றாயினவுநினைந்தாரணத்தின்மும்மைத்தமிழை
யீன்றான்குருகைப்பிரானெம்பிரான்றனிசைக்கவியே.

(இ - ள்.) பல காலும் தம்மில் மூன்று ஆயினவும் நினைந்து - பல இடங்களிலும் ஒருங்குகூறப்பட்டுத் தமக்குட் சேர்ந்துள்ளனவான ஸ்வரூபம் உபாயம் புருஷார்த்தம் என்ற மூன்றையும் (யாவருமறியவேண்டியவை யென்று) திருவுள்ளத்திற்கொண்டு (அவற்றை வெளியிட்டு), ஆரணத்தின் மும்மை தமிழை ஈன்றான் - வேதங்களின் ஸாரார்த்தம் அமைந்தனவும் இயல் இசை நாடகமென்னும் மூன்றுவகைத் தமிழிலக்கணங்க ளமைந்தனவுமான திவ்வியப்பிரபந்தங்களைத் திருவாய்மலர்ந் தருளியவரும், குருகை

பிரான்-திருக்குருகூரில் அவதரித்த பரமோபகாரியும், எம்பிரான் தன்-எமக்குத்தலைவருமான நம்ஆழ்வாருடைய, இசை கவி இவை-பண்ணிசையோடு கூடிய இந்தத்திருவாய்மொழி முதலிய பாசுரங்கள், தோன்று உபநிடதம் பொருள் தோன்றல் உற்றார்தமக்கும் சான்று ஆம்-புலப்படுதற்கு அரிய உபநிஷத்துக்களின் மகாவாக்கியார்த்தங்கள் புலப்படப் பெற்றவர்களான (ஸ்ரீமதுரகவி ஸ்ரீமந் நாதமுனி முதலிய) மகான்களுக்கும் மெய்ப்பொருளின் உண்மை விளங்குதற்கு ஏற்ற சாட்சியாம்: என்ற போது - இங்ஙனமாகிய போது, மற்று என் - இன்னம் இவற்றிற்கு என்ன சிறப்பு வேண்டும்! [மற்றொன்றும் வேண்டா என்றபடி]; (எ - று.)

கடல்கடைந்து அமுதமெடுப்பார்போல, அளவிறந்த வேதங்களின் அந்தமாய் உணர்தற்குஅரியனவா யுள்ள உபநிஷத்துக்களைப் பலபடியால் ஆய்ந்துஉணர்ந்து பரவஸ்துநிர்ணயஞ் செய்யப் புகுவார்க்கு, ஆழ்வாரருளிச்செயல்கள் "கண்ணனல்லால்தெய்வமில்லை", "அத்தெய்வநாயகன்தானே" என்று ஐயந்திரிபறத் தெளியச்சொல்லிப் பரம்பொருளைப் பிடித்துக்காட்டிக் கொடுத்தலால், 'தோன்றுவுபநிடதப்பொருள் தோன்றலுற்றார்தமக்குஞ் சான்றுமிவை' எனப்பட்டது. இப்படி ஸர்வப்ரமாணங்களினும் மூலப்ரமாணமான சுருதிகளிலும் மேம்பாடு கூறியபின்பு, இதற்கும் மேலாக அருளிச்செயலுக்கு யாதொருசிறப்பும் சொல்லவேண்டுவதில்லை யென்பார், 'என்றபோது மற்றென்' என்றார். 'பலகாலுந் தம்மில்மூன்றாயின' என்றது, சித் அசித் ஈச்வரன் என்ற தத்துவத்திரயத்தை யெனினுமாம். ஆழ்வாரருளிச்செயல் மும்மைத் தமிழாதல், கீழ் மூன்றாங் கவியில் விளக்கப்பட்டது. ஆரணத்தின் மும்மைத்தமிழை யீன்றான்—"வான்திகழுஞ்சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல், ஆன்றதமிழ்மறைகள் ஆயிரமும் - ஈன்ற, முதல்தாய் சடகோபன்"எனப் பின்புள்ளார் அருளிச்செய்ததுங் காண்க. இசைக்கவி—"இசை, கூட்டி வண்சடகோபன் சொல்லமை, பாட்டோராயிரம்", "பண்ணிற் பன்னிருநாமப்பாட்டு", "பண்டலையிற் சொன்ன தமிழாயிரம்", "செயிரில் சொல்லிசை மாலையாயிரம்", "பண்கொளாயிரம்"என்பன, திருவாய்மொழி.

'மும்மை' என்பது - மூன்றின் தன்மையை யுணர்த்தாமல், மூன்று என்னும் எண்ணையே உணர்த்திற்று: இதில், மைவிகுதி - தன்மையையுணர்த்தாமல், தன்மையையுடைய பொருளையே உணர்த்தியதனால், பகுதிப்பொருள்விகுதி யென்னும் ஸ்வார்த்த பாவதத்திதப்ரத்யயம்: "தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்," இருமைவகை தெரிந்து" என்பவற்றிலும் இது. (6)

7. கவிப்பாவமுதமிசையின்கறியொடுகண்ணனுண்ணக்
குவிப்பான்குருகைப்பிரான்சடகோபன்குமரிகொண்கன்
புவிப்பாவலர்தம்பிரான்றிருவாய்மொழிபூசுரர்தஞ்
செவிப்பானுழைந்துபுக்குள்ளத்துளேநின்றுதித்திக்குமே.

(இ - ள்.) கவி பா அமுதம் - (தான்பாடும்) பாசுரங்களாகிய பரவிய இனிய உணவை, இசையின் கறியொடு - பண்ணிசை

களாகிற கறிவருக்கத்துடனே, **கண்ணன் உண்ண குவிப்பான்** - திருமால் அமுதுசெய்தருளும்படி மிகுதியாகச் சேர்த்துப் பரிமாறு பவரும், குருகை பிரான் - திருக்குருகூர்க்குத் தலைவரும், சடகோ பன் - சடகோபனென்னுந் திருநாமமுடையவரும், குமரி கொண் கன் - குமரியாற்றுக்குத் தலைவரும், புவி பாவலர்தம் பிரான் - உல கத்திலுள்ள கவிசனங்கட்கெல்லாம் தலைவருமான நம் ஆழ்வா ருடைய அருளிச்செயலான, திருவாய்மொழி - திருவாய்மொழி யென்னுந் திவ்வியபிரபந்தமானது,—பூசுரர்தம் செவிப்பால் நுழைந்து - அந்தணர்களுடைய காதுகளிலே (குருமுகமாகச்) சென்று, உள்ளத்துள்ளே புக்கு - (அவர்களுடைய) மனத்திலே புகுந்து, நின்று - (அங்கு) நிலைபெற்று, தித்திக்கும் - இனிமை விளைக்கும்; (எ - று.)—ஈற்று ஏகாரம் - தேற்றம்.

'கவிப்பாவமுதம் இசையின்கறியொடு கண்ணனுண்ணக் குவிப்பான்' என்றது, **உருவகம்**; எம்பெருமான் அன்புடன் திருச் செவிசார்த்தித் திருப்தியடையுமாறு இனிய இசைக்கவிபாடுபவ னென்றவாறு. "அட்டுக்குவிசோற்றுப்பருப்பதமும் தயிர்வாவியும் நெய்அளறும்" என்றாற்போல,'பாவமுதம்' எனப்பட்டது. உணவு உண்பார்க்குக் கறி இன்றியமையாத் துணையாயிருந்து சுவைமிகுத் தல்போலக் கவியமுதுக்கு இசை கறியென்க. அடியவர்க்கு எளியவ னுன மூர்த்தியென்பார், கண்ணன் என்ற பெயராற் கூறினார். திரு வாய்மொழி ஆயிரத்திற்குமேலும் உள்ளதுபற்றி, 'குவிப்பான்' என்றது. குமரியென்னும் நதியையுடைய பாண்டியநாட்டில் தலைமைபெற்று விளங்குகிறவரென்பது, 'குமரிகொண்கன்' என்ப தன் கருத்து. நாவில்மாத்திரமே தித்தித்து வாய்வழியாய் வயிற்றி னுட் புகுந்து ஜீர்ணிக்கிற தேனும் பாலும் கன்னலும் அமுதும் போலன்றி, திருவாய்மொழியமுதம் செவிவாயிலாக நுழைந்து உள்ளத்துள்ளே புக்குநின்று தித்திக்குமென்க; இதில் **வேற்றுமை யணி** தொனித்தல் காண்க: இதனை, "சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய" என்றாற்போலக் கொள்க.

இசை இன் கறி என்றுபிரித்து, இசையாகிய இனியகறி யெனினுமாம். கறிக்கப்படுவது கறி யெனக் காரணக்குறி; செயப் படுபொருள் விகுதி புணர்ந்துகெட்டது: கறித்தல் - கடித்துத் தின்னுதல். கண்ணன் - 'க்ருஷ்ணன்' என்ற வடசொல்லின் சிதைவு; அது கருநிறமுடையவ னென்றும், பிறவாறும்பொருள் படும்: இது - திருமாலின் ஓர் அவதாரப்பெயரன்றி, பொதுப் பெயருமாம். பாவலர் - பாடல்பாடவல்லவர்; பா - செய்யுள். பூசுரர் - பூமியில் தேவர்போலச் சிறப்புப்பெற்று விளங்குபவர்; "நிலத்தேவர்" என்றார் ஆழ்வாரும். தலைமைபற்றி,முதல் வருணத் தவர் எடுத்துக் கூறப்பட்டனர்.

"மறைப்பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து, துறைப்பாற்படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமுதம், கறைப்பாம் பணைப்பள்ளியானன்பரீட்டங் களித்தருந்த, நிறைப்பான் கழலன் றிச் சன்மவிடாய்க்கு நிழலில்லையே" என்ற பிள்ளைப்பெருமாளை யங்கார்பாடல் இங்கு நோக்கத்தக்கது. (7)

8. தித்திக்குமூலத்தெளியமுதேயுண்டுதெய்வமென்பார்
பத்திக்குமூலம்பனுவற்குமூலம்பவமறுப்பார்
முத்திக்குமூலமுளரிக்கைவாணகைமொய்குழலா
ரத்திக்குமூலங்குருகைப்பிரான்சொன்னவாயிரமே.

(இ - ள்.) குருகை பிரான் சொன்ன ஆயிரம் - திருக்குருகூர்க்கு இறைவரான நம் ஆழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்கள்,—தித்திக்கும் மூலம் தெளி அமுதே-இனிமை விளைக்கின்ற பழமையான தெளிவுகொண்ட அமிருதமென்பது மாத்திரமோ? தெய்வம் உண்டு என்பார் பத்திக்கு மூலம்-தெய்வம் உள்ளது என்கிற ஆஸ்திகர்களுடைய பக்திக்குக் காரணமும், பனுவற்கு மூலம் - மற்றைய பிரபந்தங்கள் பலவற்றிற்கும் முதனூலும், பவம் அறுப்பார் முத்திக்கு மூலம் - பிறப்பையொழிக்க விரும்புபவர்களான முமுக்ஷுக்கள் முக்தியடைவதற்கு முக்கிய சாதனமும், முளரி கை வாள் நகை மொய் குழலார் அத்திக்கு மூலம்-செந்தாமரைமலர் போன்ற கைகளையும் ஒளியுள்ளபற்களையும் அடர்ந்தகூந்தலையுமுடைய மாதர்களின் விஷயமான ஆசையை அறக்கெடுப்பதற்கு ஏதுவுமாம்; (எ - று.)

ஆழ்வாரருளிச்செயலாகிய தென்மொழிவேதம் வடமொழி வேதம்போலவே அநாதியான முதனூலென்பதுபற்றி, அந்தஅமுதுக்கு 'மூலம்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" "அளவுக்குமிஞ்சினால் அமிருதமும் விஷமாம்" என்ற குற்றங்கள் இந்த ஆராவமுதுக்கு இல்லையென்பது தோன்ற, 'தித்திக்குமூலத் தெளியமுது' என்றன ரென்னலாம். அமுதே, ஏ - வினா. பரபக்தி பரஜ்ஞாநம் பரமபக்தி என்பவை யெல்லாம் ஆழ்வாரருளிச்செயல்களில் விளங்க உரைக்கப்பட் டிருத்தலால், 'உண்டுதெய்வமென்பார் பத்திக்குமூலம்' என்றார். 'பனுவற்கு மூலம்' என்றது, பிற்பட்ட ஆழ்வாராதியர்களுடைய பிரபந்தங்கள் நம்மாழ்வாரருளிச்செயல்களைச் சொற்பொருட்கருத்துக்களில் அடியொற்றியிருத்தல்கொண்டு; (இதற்கு உதாரணமாக, நம்மாழ்வார் "விளரிக்குரலன்றில் மென்பெடை மேகின்ற முன்றிற் பெண்ணை, முளரிக்குரம்பை" என்றதைத் திருமங்கையாழ்வார், "முன்றிற்பெண்ணைமேல் முளரிக்கூட்டகத்து, அன்றிலின்குரல்" என்றதும், நம்மாழ்வார் "மணியே முத்தமே யென்றன் மாணிக்கமே" என்றதைத் திருமங்கையாழ்வார் "முத்தினை மணியை மணிமாணிக்கவித்தினை" என்றதும் முதலியன காண்க.) 'பவமறுப்பார் முத்திக்கு மூலம்' என்றதற்குக் காரணம் - வீடுபேற்றிற்கு நல்ல உபாயமான சரணாகதியை விவரித்திருத்தல். (கொண்டபெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும், கண்டதோடு பட்டதல்லாற் காதல்மற்றி யாதுமில்லை, எண்டிசையும் கீழும் மேலும் முற்றவும் உண்டபிரான், தொண்டரோமா யுய்யலல்லாலில்லைகண்டீர் துணையே", "துணையும் சார்வுமாகுவார்போற் சுற்றத்தவர் பிறரும், அணையவந்த ஆக்கமுண்டேல் அட்டைகள்போல் சுவைப்பர், கணையொன்றாலே யேழ்மரமுமெய்த எம்கார்முகிலைப், புணையென்றுய்யப் போகிலல்லா லில்லை

கண்டீர் பொருளே" என்று உறுத்திக்கூறி), தேகபந்துக்களும்ஸம்பந்தபந்துக்களும் ஐஹிக பந்துக்களுமான மனைவி முதலிய ஆபாஸ பந்துக்களின் பாசத்தை விட்டு ஆத்மபந்துவும் ஆபத்பந்துவும்ஸர்வ தேச ஸர்வகாலபந்துவுமான எம்பெருமானைப் பற்றும்படி உணர்த்தியதனால்,'மொய்குழலாரத்திக்கு மூலம்'எனப்பட்டது. திருவாய்மொழி ஆயிரத்து நாற்றிரண்டு செய்யுள்களாயினும், சொச்சத் தொகையைக் குறிக்காது பெருந்தொகையைமாத்திரமே குறித்து 'ஆயிரம்' என்றார்; எம்பெருமானுடைய ஆயிரத்தெட்டுத் திருநாமங்களை 'ஸஹஸ்ரநாமம்' என்றாற்போல: நூறுபதிகத்திலுமுள்ள நூறுதிருநாமப்பாட்டுகளையும் ஒதுக்குமிடத்து ஆயிரத்திரண்டே யாகு மன்றோ.

பனுவல் - நூல். முளரி-முட்களையுடைய அரியையுடைய தெனக் காரணப்பொருள்படும். அரி=அரை: தண்டின் சுற்றுப் புறம். 'மொய்குழலார்' என்றது, இலக்கணையால், அவர்கள்மீது கொள்ளும் அவாவை யுணர்த்திற்று.கையழகு, பல்வரிசையினழகு, கூந்தலழகு முதலியவற்றைக்கொண்டு பெண்டிர் ஈடுபடுத்த ஆடவர் அவற்றில் ஈடுபடுதல் இயல்பென்பது தோன்ற, அவர்களை 'முளரிக்கை வாணகை மொய்குழலார்' என்று வருணித்தனர். 'மூலம்' என்றசொல் ஒருபொருளிலேயே பலமுறைவந்ததனால், சொற்பொருட்பின்வருநிலையணி. (8)

9\. ஆயிரமாமறைக்குமலங்காரமருந்தமிழ்க்குப்
பாயிரநாற்கவிக்குப்படிச்சந்தம்பனுவற்கெல்லாந்
தாயிருநாற்றிசைக்குத்தனித்தீபந்தண்ணங்குருகூர்ச்
சேயிருமாமரபுஞ்செவ்வியான்செய்தசெய்யுட்களே.

(இ - ள்.) தண் அம் குருகூர் - குளிர்ச்சியான அழகிய திருக்குருகூரில் அவதரித்த, சேய் - குமாரரும், இரு மா மரபும் செவ்வியான் - (தாய்மரபு தந்தைமரபு என்ற) இரண்டு சிறந்தவம்சங்களிலும் மேன்மையையுடையவருமான ஆழ்வார், செய்த - அருளிச்செய்த, செய்யுட்கள் - பாசுரங்கள்,—ஆயிரம் மா மறைக்கும் அலங்காரம் - மிகப்பலவாகவுள்ள சிறந்தவேதங்கட்கெல்லாம் அழகுசெய்வனவாம்; அருந் தமிழ்க்கு பாயிரம்-(இன்சுவையினால்) அருமைமிக்க தமிழ்ப்பாஷைக்கு முகவுரையுமாம்; நால் கவிக்கு படிச் சந்தம் - நால்வகைக்கவிகளுக்கும் மாதிரிக்காப்பியமுமாம்; பனுவற்கு எல்லாம் தாய் - எல்லாநூல்களுக்கும் தாயுமாம்; இரு நால்திசைக்கு தனி தீபம்-எட்டுத்திக்குக்கும் ஒப்பற்ற விளக்குமாம்; (எ - று.)

ஆழ்வாரருளிச்செயல்கள்,அளவிறந்த வேதங்களிலே எளிதிற் காண வொண்ணாதபடி மறைந்துகிடந்த தத்துவப்பொருள்களையெல்லாம் எடுத்துத்தெளிவுபடச் சொல்லி விளக்கி அவ்வேதங்களின்சிறப்பைப் பிரகாசிப்பித்தலால், 'ஆயிரமாமறைக்கும் அலங்காரம்' எனப்பட்டன. ஆயிரம் சாகைகளாகவுள்ள பெரிய ஸாமவேதமாகிய விருக்ஷம் முழுவதுக்கும் அழகுசெய்வன வென்றும் பொருள்கொள்ளலாம்; திருவாய்மொழி ஸாமவேதத்தின் ஸாரமாத

லால். பாயிரம் - முகவுரை, நான்முகம். ("மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்," 'அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்க மாகிய திங்களும் ஞாயிறும் போல'த்) திருவாய்மொழி எல்லா நூல்கட்கும் தலைமையாகவைத்து முதலிற் கூறப்பட்டு விளங்கு தலால், 'அருந்தமிழ்க்குப் பாயிரம்' என்றார். "ஆயிரமுகத்தா னகன்றதாயினும், பாயிரமில்லது பனுவலன்றே" என்றபடி நூற்கு இன்றியமையாச்சிறப்பினதான பாயிரம்போலத் திருவாய் மொழி தமிழ்க்கல்விகேள்விகட்கெல்லாம் இன்றியமையாச் சிறப்பின தென்பதும், 'பருப்பொருட்டாகிய பாயிரங் கேட் டார்க்கு, நுண்பொருட்டாகிய நூல் இனிதுவிளங்கும்' என்றபடி ஒருநூலின்பாயிரம் ஓதினார்க்கு அந்நூல் இனிது விளங்குதல் போலத் திருவாய்மொழியோதினார்க்கு எல்லாநூல்களும் இனிது விளங்கு மென்பதுபற்றியும் 'அருந்தமிழ்க்குப் பாயிரம்' என்ற தாகவுங்கொள்ளலாம்.

நாற்கவி-ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, விஸ்தாரகவி என்பன. ஆசுகவியாவது - ("மூச்சுவிடுமுன்னே முந்நூறு நானூறும், ஆச்சென்றா லாயிரம்பாட் டாகாதோ," "இம்மென்னு முன்னே எழுநூறு மெண்ணூறும், அம்மென்றா லாயிரம்பாட்டா காதோ," "எழுந்தஞாயிறு விழுவதன்முன் கவிபாடின தெழு நூறே", 'நிமிஷக்கவிராயர்' என்னும்படி) விரைவிற்பாடுங் கவி. மதுரகவி-சொற்பொருள்களின் இனிமையமையப் பாடுங் கவி. சித்திரகவி-பலவகை மிறைக்கவி விசித்திரங்களமையப் பாடுங் கவி. விஸ்தாரகவி - ஒரு பொருளையே விரித்துப் பாடுங் கவி. படிச் சந்தம் - மாதிரிக்குக்காட்டும் அழகியவடிவம்; (திருக்கோவையாரில் "கடிச்சந்தயாழ்கற்ற மென்மொழிக்கன்னியனநடைக்குப், படிச் சந்தமாக்கும் படமுளவோ நும்பரிசகத்தே" என்றவிடத்து, பேரா சிரியர், 'படிச்சந்தமென்பது - ஒன்றன்வடிவையுடைத்தாய் அது வென்றே கருதப்படும் இயல்புடையது; படிச்சந்தமென்பது - ப்ர திச்சந்தமென்னும் வடமொழிச்சிதைவு' என்று உரைப்பர்.) திரு வாய்மொழி முதலியன, மதுரகவியாழ்வார் கேட்டுக்கொண்டேவர நம்மாழ்வார் தட்டுத்தடையின்றிச் சொல்லிக்கொண்டே வந்த வையும் எம்பெருமானை யநுபவித்ததனாலான ஆனந்தம் உள்ளடங் காமல் மேல்வழிந்து பிரபந்தரூபமாக வெளிவந்தவையு மாதலால் ஆசுகவிக்கு எடுத்துக்காட்டும், ஆதிதொடங்கி அந்தம்வரையிலும் செவிக்கினியசெஞ்சொல்லாய்த் தெளியமுதாதலால் மதுரகவிக்கு எடுத்துக்காட்டும், கரந்துறைசெய்யுளென்னுஞ் சொல்லணியின் இலக்கணவகையால் பிரணவமகாமந்திரத்தின் மூன்றுஎழுத்துக் களும் திருவாய்மொழியின் முதற்பாட்டின் முதல்மூன்றடிகளிலே அமையும்படி "உயர்வற உயர்நலமுடையவன்யவனவன், மயர்வற மதிநல மருளினன் யவனவன், அயர்வறு மமரர்க ளதிபதி யவன வன், துயரறு சுடரடி தொழுதெழென் மனனே' 'என்று அருளிச் செய்தது முதலியவற்றால் சித்திரகவிக்கு எடுத்துக்காட்டும், பதினொருபாடல்களையுடைய நூறுபதிகங்களின் வடிவமாகப் பகவத்விஷயம் ஒன்றையே குறித்து ஆயிரங்கவிகளுக்கு மேலாய்ப்

பாடியுள்ளதனுல் விஸ்தாரகவிக்கு எடுத்துக்காட்டு மாதல் காண்க.

பிற்பட்ட மற்றையாழ்வார்களுடைய பிரபந்தங்கட்கெல்லாம் முதனூலாதலாலும், யாக்கைநிலையாமை செல்வநிலையாமை முதலிய வற்றை எடுத்து விளக்கி அறநூலுக்கும், "நும்மெய்வருத்திக் கை செய்தும்மினே" என்று பொருள்தேடுமுபாயங்கூறிப் பொருள் நூலுக்கும், களவும் கற்புமாகிய அகப்பொருள்துறைகளைப் பல வாற்றாற்காட்டி இன்பநூலுக்கும், முக்திபெறுமுபாயத்தை யுணர்த்தி வீட்டுநூலுக்கும் ஆதாரமாதலாலும், 'பனுவற்கெல் லாம் தாய்' என்றனர். தாய் - தாய்போலத் தன்னுட்கொண்டு தரு மென்றபடி. 'நாற்றிசைக்குத் தனித்தீபம்' என்றது "உலகத்து இடாிரண்டாய்வரும் பேரிருள்சீப்பன" என்றபடி, சூரியசந்திர அக்கினிய ரென்னும்முச்சுடர்க்கும் நீக்கலாகாத அஜ்ஞானமாகிற அகவிருளை அனைவர்க்கும் நீக்குதலா லென்க. 'தனித்தீபம்' என்றது - வெளியிருளை நீக்குகிற சாதாரணமான தீபத்தினும் உள்ளிருளைநீக்குகிற இந்தத் திவ்வியபிரபந்ததீபத்திற்கு உள்ள சிறப்பை உணர்த்துவதோடு, 'புறத்திருளை யொழித்தற்குப் பல சுடர்களுள்ளன: அகத்திருளையழித்தற்கோ இஃதொன்றே உள் ளது' என்ற ஏற்றத்தையுங் காட்டும்; இதனை 'வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள், பொள்ளென நீக்கும் புறவிருளைத்- தெள்ளிய, வள்ளுவரின்குறள்வெண்பா வகிலத்தோ, ருள்ளிரு ணீக்கு மொளி," "வையத்துவாழ்வார்க, ளுள்ளிருணீக்குமொளி" என்றாற்போலக் கொள்க.

தண், அம் என்ற அடைமொழிகள் - முறையே குருகூரின் நீர்வள நிலவளங்களை யுணர்த்தும். சேய் - செல்மையுடையவன்; செம்மை - ஞானச்செவ்வி: 'செய்யவனென்பது சேய்என விகாரத் தால் நீண்ட தென்றுமாம்' என்பர் நச்சினார்க்கினியர். இருமாமரபு- இருமுதுகுரவர்மரபு. இருமாமரபும் செவ்வியான் - இருகுலத்தி லும் கோடாத ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயையுடையவன்; இவருடைய திருத்தந்தையாரான காரியாரும் திருத்தாயாரான உடைய நங்கை யாரும் ஆகிய இருவரும் வம்சபரம்பரையாகத் திருமாலடிக்கே தொண்டுபூண்டொழுகுஞ் சிறந்தகுலத்தவராதலை யறிக; (இவ் வாழ்வார்தாமே "எந்தைதந்தைதந்தைதந்தைதந்தைக்கும்முந்தை" என்று அருளிச் செய்கையாலே ஏழாட்காலும் புறந்தொழாமே குடிகுடியாட்செய்யுந் தொண்டக்குலத்திலே பிறந்து ஏழாட் காலும் பழிப்பிலரா யிருப்பர்; எங்ஙனேயென்னில்:—திருவழுதி வளநாடரென்றொருவர்; அவர்பிள்ளை அறந்தாங்கியார்; அவர் பிள்ளை சக்கரபாணியார்; அவர் பிள்ளை அச்சுதர்; அவர் பிள்ளை செந்தாமரைக்கண்ணர்; அவர்பிள்ளை செங்கண்ணர்; அவர் பிள்ளை பொற்காரியார்: அவர்பிள்ளை காரியார்; அவர்பிள்ளை மாறன். இவர்கள் தாம் இக்கிரமத்திலே ஸந்தானபரம்பரையாகக் குடியடியராய்ப் பழவடிமையாய் வழிவழிவந்து ஆட்செய்யுந் தொண்டரான இத்திருவம்சத்திலே, பொற்காரியார் என்கிறவர், உலகெல்லாம் வாழும்படி தம்முடையபுத்ரரான காரியாருக்கு விவாஹம்பண்ணுவிப்பதாகத் திருவண்பரிசாரத்திலே காரியாரைக்

கொண்டுபோய்த் தமக்குஸமாந ஸம்பந்தயோக்கியராய் வைஷ்ணவஸந்தாநிகரான திருவாழ்மார்பர் திருமாளிகையிலே எழுந்தருளி அவரைப்பார்த்து 'உம்முடைய புத்ரியாரான உடைய நங்கையாரை நம்முடையபுத்ரரான காரியாருக்கு விவாஹம்பண்ணித்தரவேணும்'என்று தமரும் பிறரு மறியப்ரஸங்கித்துக்கேட்க, திருவாழ்மார்பரும் மிகவும்ஸந்துஷ்டராய்க் கொண்டு ஸம்மதித்து, கலியாணம்கோடித்து' என்ற குருபரம்பராப்ரபாவவாக்கியம் இங்கு நோக்கத்தக்கது. "கேசவன் தமர்கீழ்மேலெமரேழெழு பிறப்பும், மாசதிர துபெற்று நம்முடையவாழ்வு வாய்க்கின்றவா" என்றார் திருவாய்மொழியிலும்.)

செய்யுட்களென்ற ஒரு பொருளினிடத்து, 'மறைக்குஅலங்காரம்' முதலாகப் பலபொருள்களின்தன்மையை ஆரோபித்துக் கூறியது, **பலபடப்புனைவணி**; கீழ்வந்த "தனமாஞ்சிலர்க்கு" என்ற செய்யுளும் இவ்வணியின்பாற்படும்; இதனை வடநூலார் உல்லேகாலங்கார மென்பர். "நெஞ்சுக்கிருள் கடிதீபம் அடங்காநெடும் பிறவி, நஞ்சுக்குநல்லவமுதம் தமிழ் நன்னூற்றுறைக, ளஞ்சுக்கிலக்கியம் ஆரணசாரம் பரசமயப், பஞ்சுக்கனலின் பொறி பரகாலன்பனுவல்களே" என்ற பெரியதிருமொழித் தனியனோடு இச்செய்யுளை ஒப்பிடுக.

ஆயிரம்ஆம் மறை என்று பதம்பிரிப்பினுமாம். 'செய்யுட்களாயிரம்' என்று கூட்டுதலும் ஒன்று.

இச்செய்யுளில் 'பனுவற்கெல்லாம்தாய்' என்றும், கீழ்ச்செய்யுளில் 'பனுவற்குமூலம்' என்றும் கூறியவற்றிற்கு நிதரிசனமாக விநோதரசமஞ்சரியில் வருவதொரு விஷயம்:—'திருவள்ளுவர் குறள்செய்தகாலத்தில், அவரும் ஔவையும் இடைக்காடரும் சந்தித்த சமயத்தில், வள்ளுவரை நோக்கி மற்றைஇருவரும் 'நீர் செய்த நூல் எத்தன்மைத்தாகியது?' என்று வினவ, அவர் 'அகஸ்தியராற் பிரசித்தம் பண்ணப்பட்ட இயல் இசை நாடகம் என முத்திறத்ததாகிய தமிழும், என்னாற்செய்யப்பட்ட குறளும், உடையநங்கையின் திருக்குமாரராகிய சடகோபர் அருளிச்செய்த திருவாய்மொழியின் புத்ரஸ்தானமாகிய வழிநூலாம்' என்னுங் கருத்தை உள்ளமைத்து "குறுமுனிவன்முத்தமிழும் என்குறளும் நங்கை, சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்" என்று சொன்னதையும்; அதுகேட்டு, ஔவை, 'அர்த்தபஞ்சகத்தையும் சதுர்விதபுருஷார்த்தத்தையும் அறப்பால்முதலிய முப்பாலுள் அடக்கி அமைக்கப்பட்ட உண்மைப்பொருளாகிய எவ்வகைப்பட்ட வேதங்களுக்குஞ் சம்மதமான மேலானபொருளை, குளிர்ச்சிதங்கிய தாமிரபருணிதீரத்திலிருக்குந் திருக்குருகூரிற் காரிமுதலியார்புதல்வராய் அவதரித்த நம்மாழ்வாரது திருவாய்மொழியாகிய திரவிடவேதமென்று சிலர் சொல்லுவார்கள்; நான், அவர்கள் சொல்லை மறுத்து, அக்குறளை, இந்த உலகத்திற்குத் தாயாகிய ஸ்ரீமந்நாராயணனாற் பிரமனுக்கு உபதேசிக்கப்பட்டுவந்த கீர்வாணவேதமென்றே சொல்லுவேன்' என்னுங் கருத்தை உள்ளிட்டு "ஐம்பொருளும் நாற்பொருளும் முப்பொருளிற் பெய்தமைத்த, செம்

பொருளை யெம்மறைக்குஞ் சேட்பொருளைத் - தண்குருகூர்ச், சேய்மொழிய தென்பர் சிலரி யானிவ்வுலகின், தாய்மொழிய தென்பேன் தகைந்து" என்று சொன்னதையும்; இடைக்காடர் 'திரவிட வேதமாகிய சேய்மொழியையும் கீர்வாணவேதமாகிய தாய்மொழியையும் ஆராய்ந்து சொல்லுமிடத்தில், இரண்டும் ஒன்றேயாம். திருவாய்மொழியை யாவரும் சங்கையின்றி வேதமென்றேசொல்லுவார்கள். திருவாய்மொழியைப்போலச் சிறந்தநூல்கள் அநேகம் உண்டு என்று சிலர் குதர்க்கஞ் செய்தாலும், நான், அவர்களை மறுத்து, அவைகளும் இந்தக்குறளும் அத்திருவாய்மொழியினது சாயையா யிருப்பவைகளென்றே சொல்லுவேன்' என்னுங் கருத்தை யடக்கி, "சேய்மொழியோ தாய்மொழியோ செப்பிலிரண்டு மொன்றவ், வாய்மொழியை யாரு மறையென்ப - வாய்மொழிபோ, லாய்மொழிகள் சாலவுளவெனினு மம்மொழியின், சாய்மொழி யென்பேன்யான் தகைந்து" என்று சொன்னதையும் நினையாமற்போனேமே' என்பது. (9)

10. செய்யோடருவிக்குருகைப்பிரான் றிருமாலைநங்கள்
கையோர்கனியெனக்காட்டித்தந்தான்கழற்கேகமலம்
பெய்யோமவன்புகழேத்திப்பிதற்றிப்பித்தாய்த்திரியோ
மையோவறிதுமென்றேயுபகாரத்தினாற்றலையே.

(இ-ள்.) செய் - வயல்களில், ஓடு-விரைந்துபாய்கின்ற, அருவி - நீர்ப்பெருக்கையுடைய, குருகை - திருக்குருகூரில் அவதரித்த, பிரான் - தலைவரானஆழ்வார், திருமாலை-ஸ்ரீமந்நாராயணனை, நங்கள் கை ஓர்கனி என காட்டி தந்தான் - நம்முடைய கையிற் கிடைத்ததொரு பழத்தைப்போல (ஸ்வரூபம் நன்குவிளங்கும்படி) காட்டி உபகரித்தருளினர்; (அவன்) கழற்கே - அங்ஙனம் மகோபகாரஞ்செய்தவருடைய திருவடிகளிலே, கமலம் பெய்யோம் - தாமரைமலர்களை இட்டு அருச்சிக்கின்றோமில்லை! அவன் புகழ் ஏத்தி பிதற்றி பித்து ஆய் திரியோம்-அந்தஆழ்வாருடைய கீர்த்தியை எடுத்துத் துதித்துப் பலகாலுஞ்சொல்லி (அவ்விஷயத்திலே நம்மைப்) பித்தரென்றே (பிறர்சொல்லும்படி) பரவசமாய்த் திரிதலுஞ் செய்திலோம்!! ஐயோ-அந்தோ! உபகாரத்தின் ஆற்றலை என்றே அறிதும் - (ஆழ்வார்செய்தருளிய) உதவியின்பெருமையை என்றைக்குத்தான் அறிவோம்! (எ - று.)

என்றஇது,எவ்வாற்றானும் உணர்தற்கு அரிய பகவானுடைய சொரூபத்தை ஆழ்வார் தெளிவாகஉணர்த்திவிளக்கி எளிதிற் காட்டி யருளினமையாகிய பேருதவிக்கு உலகத்தவரனைவரும் கடமைப்பட்டிருக்கவும் பெரும்பாலார் அதனை உணர்ந்து அவர் திறத்தில் வழிபாடுசெய்தலின்றிப் பழுதேபலபகலும் போக்குதலைக்குறித்துக் கழிவிரக்கமாகக் கூறியவாறாம். அவருடைய திருவடிகளில் மலர்களைக்கொண்டு அருச்சனைசெய்தும் அவர்புகழையே எப்பொழுதும்எடுத்துச்சொல்லியும் உய்தல் தவிர, அவர் செய்த பேருதவிக்கு ஏற்றபடி பிரதியுபகாரஞ்செய்யக்கூடியதொன்று மில்லை யென்பதும் இதிற் போதரும். கையோர்கனி

யெனக் காட்டித்தருதல் - கைவசமாம்படி காட்டிக் கொடுத்தல்; ("கையிற்கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரினும்," "கையிலங்கு நெல்லிக்கனி," 'கரதலாமலகம்,' 'உயரத்திலேயிருக்கிற மகாபலமானது அடியிலேயிருக்க மடியிலேவிழும்படி கைகண்ட பலமாயிருக்கும்', "கையுறைநெல்லித்தன்மையி னெல்லாங்கரைகண்டாம்" என்பன காண்க.)

வயலை 'செய்' என்பது - கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுட் பன்றி நாட்டில் வழங்குந் திசைச்சொல். 'நன்செய்,' 'புன்செய்' என்ற வழக்குங் காண்க. அருவி - மலைநீர்ப்பெருக்கு; இங்கு, பொதியமலையினின்று வரும் பொருநையாற்றின்வெள்ளம். 'நங்கள்' என்ற தன்மைப்பன்மை - பிறரையும் உளப்படுத்தியது. கழற்கு = கழலில்: உருபுமயக்கம்; ஏ-பிரிநிலை. பிதற்றுதல் - பேசுதல்; "இசைத்த விறுத்த லியம்பல் புகறல், பிதற்ற லென்றிவை பேசுதலாகும்" என்பது, பிங்கலந்தை. அவரது புகழின்பெருமைக்கு ஏற்றபடி அதனை ஒழுங்காக எடுத்துக்கூறுந் திறமைதானும் எங்கட்கு அரிதென்பது, 'பிதற்றி' என்ற சொல்லின் ஆற்றலால் தோன்றும். பித்துஆய்த்திரிதல் - காண்பவர் பேய்பிடித்தவரென்னும்படி பரவசப்பட்டுப் பலவிடத்துஞ் செல்லுதல். "தேசனைக் காணுமிடத்து நெஞ்சாரவே துதித்தல், ஆசானை யெவ்விடத்து மப்படியே," "குரும் ப்ரகாசயேந் நித்யம்" என்றபடி ஆசார்யருடைய பெருமைகளை ஊரும் நாடும் உலகமும் எல்லாம் அறியும்படி வெளியிடுதல் தகுதியாதல் காண்க; "எண்டிசையுமறிய இயம்புகேன், ஒண்டமிழ்ச் சடகோபனருளையே" என்று ஸ்ரீமதுரகவியாழ்வார் அருளிச்செய்ததும் உணர்க. "அரங்கனுக்கடியார்களாகிய வருக்கே, பித்தராமவர் பித்தரல்லர்கள் மற்றையார் முற்றும்பித்தரே" என்றபடி பாகவதவிஷயத்திலே பக்தி காரியமான பித்து ஏறித் திரிதல் உரியதாதலால், அது வேண்டப்பட்டது; உரியவிஷயத்திற் பித்துக்கொண்டவர் பித்தராகார், உரியனவல்லாதவிஷயங்களிற் பெருவிருப்புக்கொண்டவரே பித்தராவரென்க.

நம்மாழ்வார் செய்தருளின உபகாரத்தின் வைபவத்தைப் பாராட்டி ஸ்ரீமதுரகவிகள் "அருள்கொண்டாடுமடியவரின்புற, அருளினனவ்வருமறையின்பொருள், அருள்கொண்டாயிர மின்தமிழ் பாடினன், அருள்கண்டீரிவ்வுலகினில் மிக்கதே" என்று அருளிச்செய்திருத்தல் நோக்கத்தக்கது. (10)

11. ஆற்றிற்பொதிந்தமணலின்றொகையருமாமறைகள்
வேற்றிற்பொதிந்தபொருள்களெல்லாம்விழுமாக்கமலஞ்
சேற்றிற்பொதியவிழ்க்குங்குருகூரர்செஞ்சொற்பதிக
நூற்றிற்பொதிந்தபொருளொருகூறு நுவல்கிலவே.

(இ - ள்.) ஆற்றில் பொதிந்த மணலின்தொகை - ஒருநதியிலேபொருந்தின மணல்களெத்தனையோ அத்தனையாகவுள்ள [அநந்தங்களென்னும்படி அளவிறந்தனவான], அரு மா மறைகள் வேற்றில் - (ஓதியுணர்தற்கு) அரியனவும் சிறந்தனவும் பலவேறு வகைப்பட்டனவுமாகிய வேதங்களனைத்திலும், பொதிந்த -

உள்ளடங்கிய, பொருள்கள் எல்லாம் - சகல அர்த்தங்களும்,— விழு மா கமலம் - சிறந்த பெரிய தாமரைமலர்கள், சேற்றில் பொதி அவிழ்க்கும் - சேறுள்ளவிடங்களிலெல்லாம் கட்டவிழ்த்து மலரப்பெற்ற, குருகூரர்-திருக்குருகூரிலவதரித்தவரான ஆழ்வார் அருளிச்செய்த, செம் சொல் பதிகம் நூற்றில்-செந்தமிழ்ச்சொற்களாலாகிய நூறுதிருப்பதிகங்களில், பொதிந்த-நிரம்ப அமைந்த, பொருள் - அருத்தத்தின், ஒரு கூறும் - ஒருபகுதியையாயினும், நுவல்கில-சொல்லமாட்டிற்றில; (எ - று.)—ஏ-தேற்றம்.

அளவிறந்த அரிய பெரிய பல வேதங்களிலு முள்ள பொருள்களெல்லாங்கூடி, திருவாய்மொழி ஆயிரம்பாசுரத்திற் கூறிய ஸாரார்த்தத்தின் ஒரு பகுதியளவுஞ் சொல்லினவல்ல வென்பதாம்; என்றது, சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் முதலிய அழகுகளோடு தத்துவப்பொருள்களின்ஸாரங்களை எடுத்துச்சொல்லி விளக்குந்தன்மையில் வடமொழிவேதங்களினும் இத்தென்மொழி வேதம் மிகச்சிறந்ததென்று இதன்வைபவத்தைக் கொண்டாடிக் கூறியவாறு; துதிவகையாகிய இது 'நஹிநிந்தாந்யாய'த்தால் வேதத்தைப் பழித்ததாகாதென்க. 'ஓராத்மாவுக்கு ஹிதாம்சத்துக்கு ஒருபாட்டே அமையும்படியிறே இவர் பாடிற்று' என்பர் ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை. எண்ணலளவைக்கு உட்படாதென்றற்கு, 'ஆற்றிற்பொதிந்த மணலின் தொகை' என்றார். 'மறைகள்வேறு' என்றது - ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்ற நால்வகை வேதங்களை. தாமரைக்குச் சிறப்பு - திருமகளுக்கு வாஸஸ்தாநமாதல். அது பங்கஜமாதலால், 'சேற்றிற்பொதியவிழ்க்கும்' எனப்பட்டது. இவ்வர்ணனை, மருதநிலமாகிய குருகூரின் நீர்வளத்தை யுணர்த்தும்; "செய்யதாமரைப் பழனத் தென்னங்குருகூர்ச் சடகோபன்" என்ற திருவாய்மொழியையுங் காண்க. பதிகம் - பத்து அல்லது பதினொரு செய்யுள் கொண்டது: 'தசகம்' எனப்படும்; இதனை 'திருமொழி' என்றல், வைஷ்ணவசம்பிரதாயம். (11)

[இயலிடங்கூறல்.]

12. இலவேயிதழுளவேமுல்லையுள்ளியம்பும்மொழியுஞ்
சிலவேயவைசெழுந்தேனொக்குமேதமிழ்ச்செஞ்சொற்களாற்
பலவேதமுமொழிந்தான்குருகூர்ப்பதுமத்திரண்டு
சலவேல்களுமுளவேயதுகாணென்றனியுயிரே.

(இ - ள்.) தமிழ் செம் சொற்களால் பல வேதமும் மொழிந்தான் - செவ்விய தமிழ்மொழிகளினாற் பலவகைவேதங்களின் பொருளையெல்லாம் அருளிச்செய்தவரான ஆழ்வாருடைய (திருவவதார ஸ்தலமாகிய), குருகூர் - திருக்குருகூரிலே, பதுமத்து - ஒரு தாமரைமலரிலே, இதழ் - இதழ்கள், இலவே - இலவமலரே போலும்; (அவ்விதழ்களினுள்ளே), முல்லை உளவே - முல்லையரும்புகள் உள்ளனவே, உள் இயம்பும் மொழியும் சிலவே-அவற்

றுள்ளே பேசப்படும் பேச்சுக்களும் சிலவே (உண்டு): அவை - அந்தச் சின்மொழிகள் தாம், செழுந் தேன் ஒக்குமே - சுவைமிக்க தேனையே போலும்; (மற்றும் அத்தாமரைமலரில்), இரண்டுசலம் வேல்களும் உளவே - அசைகின்ற இரண்டு வேலாயுதங்களும் உள்ளனவே; அது காண் என் தனி உயிரே - (இவை யனைத்தையு முடைய) அவ்வுருவந்தான் எனது தனிப்பட்ட உயிர்போன்ற காதலி யென்று (நீ) உணர்வாய்; (எ - று.)

ஓர் உத்தமபுருஷன் பரிவாரத்துடன் வேட்டையாடுதற்குப் புறப்பட்டு வனத்துக்குச் சென்றவனும் ஓர் உத்தமகன்னிகையும் தோழியருடன் பூக்கொய்துவிளையாடுதற்கென்று பூஞ்சோலையிற் சேர்ந்தவளவிலே, ஒவ்வொரு வியாஜத்தால் தோழியர் பிரிய அக் கன்னிகை அங்குத் தனித்துநின்ற சமயத்தில், ஒவ்வொருவியாஜத் தாற் பரிவாரங்கள் பிரியத் தனிப்பட்டவனும் அப்புருஷன் அங்கு வந்துசேர, இருவரும் ஊழ்வினைவசத்தால் இங்ஙனந் தற்செயலாய் ஓரிடத்திலே சந்தித்து ஒருவரையொருவர் கண்டு காதல்கொண்டு காந்தர்வவிவாக கிரமத்தாற் கூடி உடனே பிரிவர்; இச்சேர்க்கை, இயற்கைப்புணர்ச்சியென்றும், தெய்வப்புணர்ச்சியென்றும், முன் னுறுபுணர்ச்சி யென்றும் பொருளிலக்கணத்திற் கூறப்படும். இங் ஙனங் கலந்து பிரிந்த தலைமகன் பின்பு தனதுதோழனைத் துணை யாகக்கொண்டு மீண்டும் அத்தலைமகளைச் சந்தித்தல், முறைமை; அது, பாங்கற்கூட்ட மெனப்படும். அதற்கு உரிய துறைகள் பல வற்றில், 'இயலிடங்கூறல்' என்ற துறை, இச்செய்யுளிற் கூறியது; அதாவது - முதலிற் கலந்து பிரிந்த தலைமகன், பின்பு தன்னை யடுத்துத் தன்மெலிவைக் கண்டு 'நீ இவ்வாறு ஆதற்குக் காரணம் என்னே?' என்று வினவிய பாங்கனுக்கு, 'யான் ஒருத்திவலையிலே அகப்பட்டேன்' என்று உற்றதுகூற, அதுகேட்ட பாங்கன் 'நினது ஒழுக்கம் தக்கதன்று' என்று சிலகூறியபின்பும், தலைமகன் தெளிவுபெறாது வருந்தவே, பாங்கன் இரக்கங்கொண்டு 'நின்னாற் காணப்பட்ட வடிவம் எத்தன்மைத்து? அதனை நீ கண்ட இடம் எது?' என்று இயலும் இடமும் வினவ, அதுகேட்ட தலைமகன் மகிழ்ச்சிகொண்டு 'என்னாற்காணப்பட்ட வடிவுக்கு இயலிவை இடமிது' என்று கூறுதல்.

'இதழ்' என்றது - இங்கு, வாயிதழ்களை. அவற்றிற்கு இல வம்பூ உவமை - செம்மைக்கும், மென்மைக்கும். 'முல்லை' என்றது- அவ்வரும்புகள்போல் வெண்ணிறமான வடிவையுடைய பற்களின் வரிசையை. மொழிக்குத்தேன் உவமை - இனிமையில். கண்டவர் கண்களைக் களிப்பிக்குங் கட்டழகுபற்றி முகம் 'பதுமம்' என்றும், கூரியவடிவும் ஆடவர்நெஞ்சிற்பாய்ந்து அதன்வலிமையைக் கெடுத்து அதனை வருத்துந்திறமும் பற்றிக் கண் 'வேல்' என்றுங் கூறப்பட்டன. இன்றியமையாமையும் மிக்கஅன்புக்குஇடமாத லும் தோன்ற, 'உயிர்' என்றது. தனிஉயிர் - ஒப்பற்ற உயிர் எனினுமாம். கண்களின்பிறழ்ச்சிபற்றி, அதற்கு உபமானமான வேலுக்கு 'சலம்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. சல வேல்என்பதற்கு மாறுபாட்டையுடையவேல் என்று உரைப்பாரு

முளர். 'மொழியுஞ் சிலவே' என்றது, மிதமாகப்பேசுபவளாதலால்.

முல்லை, பதுமம், வேல் என்பன - **உருவகவுயர்வுநவிற்சி**யால் உபமேயத்தின்மேல் நின்றன. மொழியின் செழுமையைக் கருதி, அதற்கு உவமையாகிய தேனுக்குச் செழுமை அடைமொழியாக்கப் பட்டது. உணர்தற்குஅரிய வைதிக சப்தம்போலன்றி எளிதி லுணரத்தக்கவையான தமிழ்ச்சொற்களினு லென்பார், 'தமிழ்ச் செஞ்சொற்களால்' என்றார். 'பலவேதமும்மொழிந்தான்'என்றது, அநந்தமானவேதங்களின் அருத்தத்தைத் தொகுத்துச் சுருக்கிக் கூறியருளிய தென்றவாறும். இச்செய்யுளின் முதலடியிற் சொற் போக்கினுல் 'இல', 'உள' என்ற மாறுபட்டசொற்கள் அமைதல், **முரண்தொடை**யின் பாற்படும்; "மொழியினும்பொருளினும் முர ணுதல் முரணே" என்றார், ஆசிரியர் தொல்காப்பியனர். இரண்டு மூன்றுமடிகளில் சில பல என்பனவும், மூன்றுநான்காமடிகளில் இரண்டு தனி என்பனவும் வந்ததையும் தொடைமுர ணென்ன லாம். இச்செய்யுளின் மெய்ப்பாடு - உவகை. பயன் - பாங்கற்கு உணர்த்தல்.

தோத்திரப்பிரபந்தங்களில் அகப்பொருட்கிளவித்துறைகளை இடையிடையே கூறுதல் கவிசமயமாதலை இலக்கியங்கள்கொண்டு உணர்க. அருமறைப் பொருளை அருளினுல் தமிழிற்பாடியுதவியவ ரான ஆழ்வாருடைய திருமுகமண்டலத்தின் திவ்வியசௌந்தரியத் தையும், கூரியஞானவிகாஸத்தையும் திருவாய்மலரின் செவ்வியை யும், அதனகத்தேவிளங்குகின்ற சுத்தமான தந்தபங்க்தியையும், அங்குநின்றுவெளிவருகிற சுருங்கச்சொல்லல்முதலிய அழகுக ளோடுகூடிய செவ்விய தீஞ்சொற்களையுங் கண்டு அவற்றில் ஈடுபட்ட பாகவதர், தங்கள் ஈடுபாட்டைக் கண்டு உசாவிய அன்பர்கட்கு, அந்த ஆழ்வாருடைய இயல்புகளையும் திருவவதார ஸ்தலத்தையும் அவர் தங்கட்கு இன்றியமையாதவ ரென்ற அரு மையையும் எடுத்துக்கூறுதல், இதற்கு உள்ளுறை பொருளாதலை உய்த்துணர்க; விரிப்பிற் பெருகும். ஸ்வாபதேசத்தில், தலைமகள் - ஆழ்வார், தலைமகன் - பாகவதர். (12)

13. **உயிருருக்கும்புக்குணர்வுருக்கும்முடலத்தினுள்ள**
செயிருருக்கொண்டநந்தீங்குருக்குந்திருடித்திருடித்
தயிருருக்குந்நெய்யொடுண்டானடிச்சடகோபன்சந்தோ
டயிருருக்கும்பொருநற்குருகூரெந்தையந்தமிழே.

(இ - ள்.) தயிர்-தயிரையும், உருக்கும் நெய்யொடு - உருக்கு தற்குஉரிய வெண்ணெயையும்,திருடி திருடி உண்டான்-(திருவாய்ப் பாடியில்) இடந்தொறும் நாள்தொறும் எப்பொழுதும் மிகுதி யாகக் களவாடி அமுதுசெய்தருளியவனை திருமாலினது, அடி - திருவடிநிலையாகிய, சடகோபன் - சடகோபனென்னுந் திருநாம முடையவரும், சந்தோடு அயிர் உருக்கும் பொருநல் குருகூர் எந்தை - (பரிமளத்தால்) சந்தனத்தையும் (சுவையினிமையாற்)

சருக்கரையையுந் தோற்கச்செய்கின்ற பொருநையென்னுந் தாமிர பர்ணிநதி பாயப்பெற்ற திருக்குருகூரில் அவதரித்தவருமான நம்மாழ்வாருடைய, அம் தமிழ் - அழகிய தமிழ்ப்பாசுரங்கள்,— உயிர் உருக்கும் - (ஓதுகிற நம்முடைய) உயிரை(ப் பக்திமிகுதியினால்) உருகச்செய்யும்; புக்கு உணர்வு உருக்கும் - உள்ளே பிரவேசித்து (அகத்துஉறுப்பான) மனத்தை (ஆனந்தாதிசயத்தாற்) கரையச்செய்யும்; செயிர் உரு கொண்ட நம் உடலத்தின் உள்ள தீங்கு உருக்கும் - குற்றந்தானே புருஷவடிவங்கொண்டாற் போன்ற நமது தேகசம்பந்தத்தாலாகிய (காமம் கோபம் முதலிய) பொல்லாங்குகளைப் போக்கும்; (எ - று.)

உருக்குதல் - உருகச்செய்தல், நெகிழ்ந்துகரைவித்தல், மெலிவித்தல். தீங்கு - தீக்குணம், தீச்செயல்கள். உருக்கும்நெய்—'உருக்கும்' என்பது -எதிர்காலப்பெயரெச்ச மாதலால், இனிமேல் உருக்கப்படும் நெய் எனக்கொண்டு, வெண்ணெ யெனப்பட்டது; (சீவகசிந்தாமணியில் "வெம்புஞ்சுடர்" என்பதற்கு - நச்சினார்க்கினியர் 'இள்ஞாயிறு' எனப் பொருள்கொண்டு,'மேல்வெம்பும் என எதிர்காலம்நோக்கிற்று' என்றமை காண்க.) இனி, உருக்குமென்பதை, காலமுணர்த்தாது தன்மையுணர்த்தியதெனக் கொண்டு, உருக்கும் நெய் - வெண்ணெயுருக்கினநெய் [அதாவது - புத்துருக்குநெய்] என்றுங்கொள்ளலாம். பெருமாள் கிருஷ்ணவதாரத்திற் கோகுலத்திலே ஆய்ச்சியர்வைத்த பால் தயிர் வெண்ணெய் நெய் முதலியவற்றைக் களவுசெய்துஉண்டமை, பிரசித்தம். ஆழ்வார் எம்பெருமானது திருவடிகளுக்கு மிகவும் அந்தரங்கபக்தராக இருந்ததுபற்றி அப்பெருமானதுபாதுகை 'ஸ்ரீசடகோபன்' என்று இவரது திருநாமத்தை யிட்டு வழங்கப்படுதல் தோன்ற, 'உண்டானடிச்சடகோபன்' என்றா ரென்க; "முகில்வண்ணனடியையடைந் தருள்சூடியுய்ந்தவன்" என்றபடி திருமாலின் திருவடிகளைச் சரணமடைந்து அடிமைபூண்ட சடகோபன் எனினுமாம். 'சந்தோடுஅயிர்உருக்கும்' என்பதற்கு - (நீர்ப்பெருக்கு மலையினின்று விசையுடன்வந்து பெருகும்போது) சந்தனமரத்தையும் நுண்மணலையுங் கரையச் செய்துவரு மென்று உரைப்பினுமாம். பொருநை யெனினும், பொருநலெனினும் ஒக்கும். (13)

14. அந்தமிலாமறையாயிரத்தாழ்ந்தவரும்பொருளைச்
செந்தமிழாகத்திருத்திலனேனிலத்தேவர்களுந்
தந்தம்விழாவுமழகுமென்னுந்தமிழார்கவியின்
பந்தம்விழாவொழுகுங்குருகூர்வந்தபண்ணவனே.

(இ-ள்.) ஆர் தமிழ் கவியின் - (இலக்கணம்) நிரம்பிய தமிழ்ப் பாடல்கள் (சீர்கேடின்றி ஒழுகுதல்) போல, பந்தம் விழா ஒழுகும் - ஒழுங்காக [முறைமைதவறாமல்] நித்திய நைமித்திக உத்ஸவங்கள் நடக்கப்பெற்ற, குருகூர்-திருக்குருகூரில், வந்த - அவதரித்த, பண்ணவன்-பெரியவரான ஆழ்வார், அந்தம் இலா மறை ஆயிரத்து ஆழ்ந்த அரும் பொருளை - அழிவில்லாதனவும் அநேக ஆயிரம் சாகைகளாகவுள்ளனவுமான வேதங்களின் ஆழ்ந்த அருமையான ஸாரார்த்தத்தை, செம் தமிழ் ஆக திருத்திலனேல் -

செவ்விய தமிழ்த்திவ்வியபிரபந்தங்களாகச் சீர்திருத்தி அருளிச் செய்யா திருந்தனராஞல்,நிலத்தேவர்களும் தம் தம் விழாவும் அழகும் என் ஆம் - அந்தணர்களும் (அவ்வந்தணர்களில்) அவரவர் கொண்டாடிச்செய்யுந் தேவாலய உத்ஸவங்களும் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயும் யாதாய்முடியும்? [சிறிதும்சிறப்புரு என்றபடி]; (எ - று.)

பூதேவ ரெனப்படுகிற அந்தணர்கட்கு "குருகூர்ச்சடகோபன்சொற், சந்தங்களாயிரத்திவைவல்லார் முனிவரே" என்றபடி ஆழ்வாரருளிச்செயல்களை ஓதிஞல்மாத்திரமே சிறப்புண்டு என்பதும், கோயில்களில்நிகழும் நித்தியநைமித்திகஉத்ஸவங்களிலெல்லாம் தமிழ்வேதங்களையோதவேண்டுமென்பது ஸ்ரீபாஞ்சராத்திராதிசாஸ்திரசம்மத மென்பதும், "குருகூர்ச்சடகோபன் சொன்ன, குறிகொளாயிரத்துள்ளிவைபத்தும் திருக்குறுங்குடியதன்மேல், அறியக்கற்றுவல்லார் வைட்டணவ ராழ்கடல்ஞாலத்துள்ளே" என்றபடி அருளிச்செய லோதிஞலே ஸ்ரீவைஷ்ணவத்வ பூர்த்தியுண்டா மென்பதும் பற்றி, இங்ஙனங்கூறிஞர். எம்பெருமானுடைய ஐந்துவகைநிலைகளுள் பரத்வம் வியூகம் விபவம் அந்தர்யாமித்வம்என்ற நான்குக்கும் முறையே வேதம் பாஞ்சராத்திரம் இதிகாசம் ஸ்மிருதி என்பனபோல அர்ச்சாவதாரத்துக்கு ஏற்றது திவ்வியபிரபந்தங்களே யென்பதையும் உணர்க. அஃறிணையிருபாலுக்கும் பொதுவான 'எவன்' என்ற விஞவினைக்குறிப்புப் பெயர், என் என்று விகாரப்பட்டது; ஆகவே, 'நிலத்தேவர்களும் தம்தம்விழாவும் அழகும் என்னும்' என்ற முடிபு - உயர்திணையும் அஃறிணையும் அடுக்கி, மிகுதிபற்றி, அஃறிணைமுடிக்குஞ் சொல்லைக் கொண்ட திணைவழுவமைதியாம்: தேவர்கள் என உயர்திணைப்பொருள் ஒன்றேயாக, விழாவும் அழகும் என அஃறிணைப் பொருள் இரண்டாதல். இங்கே மிகுதி. அன்றி, 'ஆகும்' என்ற செய்யுமென்முற்றின் விகாரமான 'ஆம்' என்றது "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற், செல்லாதாகுஞ் செய்யுமென் முற்றே" என்றபடி பலர்பாலுக்கு வராமை காண்க.

(அந்தமிலாமறையாயிரத் தாழ்ந்த அரும்பொருளைச் செந்தமிழாகத் திருத்திலனேல்—'அல்பச்ருதர்கலக்கின ச்ருதி நன்ஞானத்துறைசேர்ந்து தெளிவுற்று ஆழ்பொருளையறிவித்தது', மேகம் பருகினஸமுத்ராம்புபோலே நூற்கடல்சொல், இவர்வாயன வாய்த் திருந்தினவாறே ஸர்வதாஸர்வோப ஜீவ்யமாமே' என்ற ஆசார்யஹ்ருதயவாக்கியங்கள் நோக்கத்தக்கன.)

முறைகேடின்றித் திருவிழாநடத்தற்கு, தமிழ்க்கவியின் முறைகேடின்மையை உவமைகூறியதஞல், இந்நூலாசிரியரது பாஷாபிமானம் விளங்கும். பண்-பெருமை; அதனையுடையவன், பண்ணவன். **(14)**

15. பண்ணப்படுவனவும்முளவோமறையென்றுபல்லோ
ரெண்ணப்படச்சொற்றிகழச்செய்தானியலோடிசையின்
வண்ணப்படைக்குத்தனித்தலைவேந்தன்மலருகுத்த
சுண்ணப்படர்படப்பைக்குருகூர்வந்தசொற்கடலே.

(இ - ள்.) இயலோடு இசையின்வண்ணம் படைக்கு-இயற்றமிழ்த் துறைவகைகளும் இசைத்தமிழ்த்துறைவகைகளு மாகிய சேனைகட்கு, தனி தலை வேந்தன் - ஒப்பற்ற தலைமைபூண்ட அதிபதியும்,—மலர் உகுத்த சுண்ணம் படர்-பூக்கள்சிந்திய மகரந்தப் பொடிகள் பரவப்பெற்ற, படப்பை - மருதநிலத்துஊராகிய, குருகூர்-திருக்குருகூரில், வந்த-அவதரித்த, சொல் கடல் - சொற்கள் நிறைந்த கடலுமாகிய ஆழ்வார்,—பண்ணப்படுவன மறையும் உளவோ என்று பல்லோர் எண்ணப்பட - (நூதனமாகச்) செய்யப்படுவனவாகிய வேதங்களும் உண்டோவென்று பலபேராலும் கருதப்படுமாறு, சொல் திகழ-சொற்கள் சிறப்புற்று விளங்க, செய்தான்-(தமிழ்த்திவ்வியப் பிரபந்தங்களை) அருளிச்செய்தனர்;

ஸம்ஸ்கிருதவேதம்போலவே தமிழ்மறையாகிய திவ்வியப்பிரபந்தங்களும் நித்தியமென்பது, ஆன்றோர்கொள்கை. திவ்வியப் பிரபந்தங்களை ஆழ்வார்கள் இயற்றியதாகச்சொல்லுதல் என்னெனின், வடமொழிவேதங்களை அன்னவடிவங்கொண்ட திருமாலினிடம் உபதேசம்பெற்ற பிரமன் தனது வாக்கினால் வெளியிட்டமாத்திரத்தைக்கொண்டு "முன்னம் திசைமுகனைத்தான் படைக்க மற்றவனும், முன்னம்படைத்தனன் நான்மறைகள்" என்று பிரமன் தானே அவற்றைப்படைத்ததாகச் சொல்லுதலும், பின்பு அவ்வடமொழி வேதங்களின் ஒவ்வொருபகுதியை ஒவ்வொருமுனிவர் ஒவ்வொரு சமயத்தில் வெளியிட்டதுகொண்டு அந்தப்பகுதியை அந்தந்தமுனிவரியற்றியதாக அவரவர்பெயரையிட்டுவழங்குதலும் போலவே, எம்பெருமான் திருவருளால் உணர்த்த ஆழ்வார்கள் திவ்வியபிரபந்தங்களை யுணர்ந்து வெளியிட்ட மாத்திரத்தைக் கொண்டு அவர்கள் செய்ததாகச் சொல்லுதலும் உபசாரவழக்காம் என்பது, சம்பிரதாயம். ஸம்ஸ்கிருத வேதம் அபௌருஷேயமும் நித்தியமுமாய் 'செய்யாமொழி' என்று பிரசித்திபெற்றிருத்தலையும், திருவாய்மொழியில் "குருகூர்ச்சடகோபன், சொல்லப்பட்ட வாயிரம்" என்றாற்போலப் பலவிடங்களில் வருதலையும், அதுவடமொழியும் இதுதென்மொழியுமாய் நின்று சிலவேறுபாடுடையனபோலத் தோன்றினும் உய்த்துணருமிடத்துக் கருத்து வேறுபடாமையையுங் கண்டு, 'பண்ணப்படுவனவும் உளவோ மறை' என்று பல்லோர் எண்ணுவரென்க; இதனை, "செய்யாமொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த, பொய்யாமொழிக்கும் பொருளொன்றே" என்றாற்போலக் கொள்க.

இயலோடிசையின் வண்ணப்படைக்குத் தனித்தலைவேந்தன்-முத்தமிழ்த் துறைகளை ஒழுங்குபடுத்திநடத்துபவ னென்க. வண்ணம்-விதம். சுண்ணம் - சூர்ணம் என்ற வடசொல்லின் சிதைவு. 'சுண்ணம்படர்' என்பது, சுண்ணப்படர் என்று வலித்தல் பெற்றது. நீர்நிறைந்த கடல்போலச் சொற்கள் நிரம்பிய ஆகரமென்பார், 'சொற்கடல்' என்றார், 'அருட்கடல்' என்றாற்போல: உருவகம். பண்ணப்படுவனவும், உம் - இறந்ததுதழுவிய எச்சம்; செய்யாமொழியாகிய மறையைத் தழுவுதலால். சொற்று இகழச் செய்தானென்று பதம்பிரித்து, (பகவத்விஷயமான திவ்வியபி,

பந்தங்களாக) கூறி (விஷயாந்தரங்களை) இகழப்பண்ணினு னென்று உரைப்பாரு முளர். (15)

**16. கடலைக்கலக்கியமுதமரர்க்களித்தான்களித்தார்
குடலைக்கலக்குங்குளிர்சங்கினுன்குறையாமறையின்
றிடலைக்கலக்கித்திருவாய்மொழியெனுந்தேனைத்தந்தா
னடலைப்பிறப்பறுத்தென்னையுமாட்கொண்டநாயகனே.**

(இ - ள்.) களித்தார் குடலை கலக்கும் - செருக்கிய பகைவர்களுடைய குடலை (அச்சத்தால்) கலங்கச்செய்கின்ற, குளிர் சங்கினுன்-குளிர்ந்த சங்கத்தையுடையவனுன திருமால், கடலை கலக்கி - திருப்பாற்கடலைக் கலங்கச்செய்து [கடைந்து], அமுது அமரர்க்கு அளித்தான் - (அதனினின்று எழுந்த) திவ்வியாமிருதத்தை (யெடுத்து)த் தேவர்கட்குக் கொடுத்தருளினுன்; (அதுபோல),— நடலை பிறப்பு அறுத்து என்னையும் ஆட்கொண்ட நாயகன் - துன்பத்தைச் செய்கிற பிறப்பையொழித்து என்னையும் அடிமைகொண்டருளின தலைவரான ஆழ்வார், குறையா மறையின் திடலை கலக்கி - குறைவில்லாத வேதமாகிய (ஏறுதற்குஅரிய) மேட்டை அளவின்மையையொழித்து அளவுடையதாக்கி, திருவாய்மொழி எனும் தேனை தந்தான் - திருவாய்மொழியென்கிற திவ்வியபிரபந்தமாகிய தேனை (மனிதர்கட்கு)க் கொடுத்தருளினுன்; (எ - று.)

இச்செய்யுளிலுள்ள இரண்டுவாக்கியங்களில், முந்தினது உபமானமும், பிந்தினது உபமேயமுமாய் நிற்க, இடையில் உவமவுருபு இல்லாமையால் **எடுத்துக்காட்டுவமையணி.**

திருப்பாற்கடல்கடைகையில், மந்தரமலையாகியமத்தைச் சுற்றிய வாசுகியென்னும் மகாநாகமாகிய கடைகயிற்றின் வாற்புறத்தைப்பிடித்துக்கொண்ட தேவர்களும் தலைப்புறத்தைப் பிடித்துக்கொண்ட அசுரர்களும் ஆகிய இரு திறத்தாரும் அதனை வலியப்பிடித்து இழுத்துக் கடையவல்ல வலிமையில்லாதவராய் நிற்க, அதுநோக்கி எம்பெருமான் தான் ஒருதிருமேனியைத்தரித்துத் தேவர்கள்பக்கத்திலேயும் வேறொரு திருமேனியைத்தரித்து அசுரர்கள் பக்கத்திலேயும் நின்று பாம்பின் வாலையும் தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக் கடைந்தருளியபொழுது, அமிருதத்துடன் தேவலோகத்துச்செல்வங்களெல்லாம் வெளியெழுந்தவளவிலே, அசுரர்கள் அமிருதத்தை வலியக் கவர்ந்துகொள்ளத் தொடங்க, நாராயணமூர்த்தி மோகினிப்பெண்வடிவங்கொண்டு அவ்வடிவழகினுல் அசுரர்களை மயக்கி அமிருதத்தைத் தான் கைக்கொண்டு தேவர்கட்கு அதனைப்பகிர்ந்துகொடுத்தனனென்பது, புராணகதை. இவ்வரலாற்றினுல், தன்னைச்சரணமடைந்தவரைத் தன் சிரமம் பாராமற் பரிபாலிக்கும் பகவானது **கருணை வெளியாம்.**

எம்பெருமான் தனது திருவாய்மலரில் வைத்து ஊதுந் திவ்வியசங்கமாகிய ஸ்ரீபாஞ்சசன்னியம் தனது பெருமுழக்கத்தினுற் பகைவரை அஞ்சி மயங்கி அழியச்செய்து வெற்றிகொள்ளுந் **தன்மையதாய், அவ்வழிவுத்தொழிலோடு நிற்காமல் அடியார்கட்கு**

உற்சாகத்தை விளைத்து எழுப்பவல்ல திவ்விய சக்தியையு முடைமையால், அதற்கு 'களித்தார்குடலைக்கலக்கும்,' 'குளிர்' என்ற இரண்டு அடைமொழிகள் கொடுக்கப்பட்டன. களித்தார் குடலைக் கலக்குஞ் சங்கு - "அருட்கொண்டவன்ன அரங்கர் சங்கோசையில் அண்டமெல்லாம், வெருக்கொண்டிடர்பட மோகித்து வீழ்ந்தனர் வேகமுடன், தருக்கொண்டுபோகப் பொறுதே தொடருஞ் சதமகனும், செருக்கொண்ட முப்பத்து முக்கோடிதேவருஞ் சேனையுமே," "தருணவாணிருபர் மயங்கி வீழ்தர வெண்சங்கமு முழக்கி" என்பனபோல்வன காண்க. இத்தன்மைபற்றியே, சங்கம், திருமாலின் பஞ்சாயுதங்களில் ஒன்றாயிற்று. குளிர் சங்கு—திருமால் ஞானமயமான தன் துசங்கத்தினால் துருவனை முகத்திலே பரிசித்தருளின மாத்திரத்தில், அந்த இளங் குமரன் தத்துவஞானம் உதிக்கப்பெற்றவனாய்ப் பகவானைப் பலவாறு துதிசெய்யலாயினனென்பதுங் காண்க. திருமால் திருக் கைகளிலேந்தியுள்ள சங்கம் சக்கரம் முதலியன, பகைவர்கட்கு அச்சத்தையும் அழிவையும் விளைத்தலால் ஆயுதகோடியிலும், அன்போடு தரிசிக்கின்ற அடியார்கட்கு அழகியனவாய்த் தோன்றிக் காட்சிக்கு இனிமைதந்து அலங்காரமாதலால் ஆபரணகோடியிலுஞ் சேருமென்பது சாஸ்திரார்த்த மாதலால், சங்கத்துக்கு 'களித்தார்குடலைக் கலக்கும்,' 'குளிர்' என்ற மாறுபட்ட அடைமொழி இரண்டையும் கொடுத்தமை ஏற்கும். "பெரிய பெருமாளரங்கரவர்கரத்துப், படைக்குங்கமலம் அளிக்கும் மின்னுமிப் படை படைக்கும், துடைக்கும்கதை முத்திமாற்றுது நல்கும் சுரி சங்கமே" என்றபடி சங்கம் முத்தியளிக்க வல்லதாதலால், அதனை, 'குளிர்சங்கு' என்றதாகவும் கொள்ளலாம்.

குறையாமறை - அந்தமானவேதம்; சொற்செறிவு பொருட் பொலிவுகளிற் குறைவில்லாத வேதம் எனினுமாம். மலைச்சிகரம் போன்ற மேட்டிடங்களில் தேன்கூடுகட்டுதல் இயல்பாதலால், மறை 'திடல்' எனப்பட்டது. அறிதற்குஅரிய வேதத்தின் அளவு படாமையைப் போக்கி அதனை அளவுபடுத்தி அதிலுள்ள பொருட் சாரத்தைத் தமிழ்ப்பிரபந்த மூலமாக அனைவர்க்கும் எளிதிலுணர லாம்படி தந்தருளின ரென்பது, 'குறையாமறையின் திடலைக் கலக்கித் திருவாய்மொழியெனுந் தேனைத்தந்தான்' என்பதன் கருத்து; உருவகம். இனி, மேடுபட்ட [மேலேபருத்துக்காட்டுகிற] வடிவ முடைமைபற்றித்தேன் கூண்டையே 'திடல்' என்றதாக உரைப் பாரு முளர். என்னையும் - ஆட்கொள்ளப்படுதற்குஉரிய குணம் சிறிதுமில்லாத என்னையும் என்று தனது இழிவு தோன்றக் கூறிய வாறு; உம் - இழிவுசிறப்பு. திடல்= திடர்; ஈற்றுப்போலி. திருவாய் மொழியை 'தேன்' என்றதும், அதனை அமிருதத்தோடு உவமித்ததும், இனிமைமிகுதிபற்றி. (16)

17. நாய்போற்பிறர்கடைதோறுநுழைந்தவரெச்சினச்சிப்
பேய்போற்றிரியும்பிறவியினேனைப்பிறவியெனு
நோய்போமருந்தென்னுநுன்றிருவாய்மொழிநோக்குவித்துத்
தாய்போலுதவிசெய்தாய்க்கடியேன்பண்டென்சாதித்ததே.

(இ - ள்.) நாய் போல்—, பிறர் கடை தோறும் நுழைந்து - அயலாருடைய வீட்டுவாயில்தோறும் புகுந்து, அவர் எச்சில் நச்சி- அவர்கள் உண்டு கழித்த சேடத்தை விரும்பி, பேய்போல் திரியும்- பேய்போல (ஓய்வின்றிப் பலவிடத்தும் அலைந்து) திரிகிற, பிறவி யினேனை - (இழிந்த) பிறப்பையுடையவனான என்னை, பிறவி எனும் நோய் போம் மருந்து என்னும் நுன் திருவாய்மொழி நோக்குவித்து - 'பிறப்பென்கிற நோய் நீங்குதற்குக் காரணமான மருந்து' என்று சொல்லப்படுகிற உமது திருவாய்மொழிப் பிரபந்தத்தை நோக்கும்படி பண்ணி, தாய்போல் உதவி செய்தாய்க்கு-பெற்றதாய் (தன் குழந்தைக்குக் கைம்மாறுகருதாது பலவாற்றானும் உதவி புரிதல்) போல (என் பக்கல் பூரண கிருபைவைத்து) உபகரித்தருளிய உமக்கு, அடியேன் பண்டு சாதித்தது என் - தாசனான நான் முன்புசெய்த நன்மை யாதோ? (எ - று.)

உம்பக்கல் அடியேன் செய்த நன்மையொன்றும் இன்றாதலால், நீர் என்பக்கல் நிர்ஹேதுககருணைகொண்டு என்னை ஆட்கொண்டது செய்யாமற்செய்த உதவியாகின்றது; ஆகவே, அதற்கு எதுவும் ஈடாகாது என்பதாம். நாய்போல் அலைதலின்றி ஓய்வுகொண்டு ஓரிடத்திற் சிறிதுபொழுதேனுந் தங்குதற்கு அவகாசமும்பெறாமற் செய்தற்கு வேலையுமில்லாததான கடைப்பட்ட நாய்போல என்றபடி. பேய்போல் - எங்குஞ் சுகமுறாமல் அலைகிற சன்மமேயான பேய்போல என்க. எஞ்சியது, எச்சில்எனக் காரணக்குறி. பிறவி யெனும்நோய் போம் மருந்து என்னுந் திருவாய்மொழி "ஆயிரத்து ளிப்பத்தும், உயக்கொண்டு பிறப்பறுக்கும்" என்ற திருவாய்மொழியைக் காண்க. 'நோய்போம் மருந்து' என்றவிடத்து, போம் என்ற பெயரெச்சம் - காரியப்பொருளதாய், காரணப்பெயரைக் கொண்டது. நுன் - திசைச்சொல். திருவாய்மொழி-ஸ்ரீஸூக்தி. செய்தாய்- முன்னிலை யொருமையிறந்தகாலவினையாலணையும்பெயர். துன்பந் தருதலால், பிறவி 'நோய்' எனப்பட்டது. 'பிறர்கடைதோறு நுழைந்து அவர் எச்சில் நச்சிப் பேய்போல்திரியும் பிறவியினேன்' என்றது - ஆழ்வாருடைய அடியார்களான ஸ்ரீவைஷ்ணவர்களின் எச்சிலை விரும்பி உண்டிருந்தாலும் உய்ந்திருப்பேன், அதுவுஞ் செய்திலேனே என்ற இரக்கக்குறிப்பு.

இங்கு அறிதற்கு ஏற்றதோர் ஐதிகியம் வருமாறு:—'ஒரு காலத்தில் தாமிரபருணிநதியின் வடகரையில் வசித்திருந்த யோகியொருவர் வளர்த்த நாயொன்று, தென்கரையிலுள்ள ஆழ்வார் திருநகரிக்குப் பிரதிதினமும் மத்தியானவேளையிற் போய் வீதியிலிருக்கும் வைஷ்ணவர்களுடைய உச்சிஷ்டத்தைத் தின்று வயிற்றை நிரப்பிக்கொண்டுவருகிற வழக்கப்படி ஒருநாள் போய்த் திரும்பிவர நேரப்பட்டதனால், யோகியானவர் 'நாய் இன்னும்வரவில்லையே' என்று ஆற்றோரத்தில் வந்துபார்க்கும்பொழுது, அந்நாய் நட்டாற்றில் வருகையில் அகஸ்மாத்தாக வெள்ளம்வந்தமையால் நீந்திக் காலோய்ந்துபோய் நீரில் அமிழ்ந்து இளம்பிற்று; அத்தருணத்தில் அதன்கபாலம் வெடித்து அந்த ரந்திரத்தின்வழியாய் நாயின் ஆத்மாவாகிய சோதியானது எழுந்து அமாவாசையிருளில்

அநேகம்திவட்டிகொளுத்தினதுபோலப் பிரகாசித்ததைப் பிரதியக்ஷமாகப் பார்த்து, 'அசேதனமாகிய நாயும் பெறுதற்கு அரிய பேறு பெற்றதே: இது என்னசாதனத்தை யுடைத்தாயிருந்தது? ஒன்றுமில்லாதிருந்தும், ஆழ்வார்திருநகரியின்உச்சிஷ்டத்தை யுண்டதனாலல்லவோ இப்படிச் சம்பவித்தது: இது, தபசிகள் யோகிகள் முதலானவர்களுக்கும் சித்திக்கமாட்டாதே!' என்று நினைத்து மனதுருகிக் கண்ணீர்விட்டு அழுது அவர் "வாய்க்குங் குருகைத் திருவீதியெச்சிலை வாரியுண்ட, நாய்க்கும் பரமபதமளித்தாய் அந்தநாயொடிந்தப், பேய்க்கு மிடமளித்தாற் பழுதோ பெருமாள் மகுடஞ், சாய்க்கும்படிக்குக் கவிசொல்லு ஞானத்தமிழ்க் கடலே" என்பது முதலாகச் சிலபாடல்களால் ஆழ்வாரை ஸ்தோத்திரித்தனர்' என்பது. (17)

18. சாதிக்குமேபரதத்துவத்தைச்சமயத்திருக்கைச்
சேதிக்குமேயொன்றுசிந்திக்குமேயதனைத்தெரியப் [யைச்
போதிக்குமேயெங்குமோங்கிப்பொதுநிற்குமெய்யைப்பொய்
சோதிக்குமேயுங்கள்வேதமெங்கோன்றமிழ்ச்சொல்லெனவே.

(இ - ள்.) எம் கோன் தமிழ் சொல் என - எமதுதலைவரான நம்மாழ்வாருடைய தமிழ்ப்பிரபந்தம்போல,—உங்கள் வேதம்—, —பரதத்துவத்தை சாதிக்குமே - (எல்லாப்பொருள்கட்கும்) மேலான உண்மைப்பொருளாகிய பரப்ரஹ்மத்தை (உண்டென்று நிலைநிறுத்தி)ச் சாதிக்கமாட்டுமோ? சமயம் திருக்கை சேதிக்குமே- பிறமதங்களின்மாறுபாட்டைக் கண்டித்தொழிக்க மாட்டுமோ? ஒன்று சிந்திக்குமே- யாதாயினுமொருவிஷயத்தை ஆய்ந்து ஓய்ந்து உணரமாட்டுமோ? அதனை தெரிய போதிக்குமே - அங்ஙனமுணர்ந்த பொருளைப் பிறர்க்கு விளங்க உணர்த்தமாட்டுமோ? எங்கும் ஓங்கி பொது நிற்கும் மெய்யை பொய்யை சோதிக்குமே - எவ்விடத்துஞ்சிறந்து (யாவர்க்கும்) பொதுப்படநிற்கின்ற உண்மையான விஷயத்தையும் (அதற்குமாறாகிய) பொய்யான விஷயத்தையும் பகுத்து ஆராயமாட்டுமோ? [மாட்டாளென்றபடி];

"வேதம்பஹுவிதம்; இதில், ஸம்ஸ்கிருதம் திராவிடம் என்கிற பிரிவு ருகாதிபேதம்போலே. "செந்திறத்த தமிழ்" என்கையாலே, ஆகஸ்தியமும் அநாதி. 'வடமொழிமறை' என்றது, தென்மொழிமறையை நினைத்திறே" என்னும்படி, ருக் யஜுஸ் ஸாமம் அதர்வணம் என்பவை வேதத்தின் பகுப்பாதல்போல ஸம்ஸ்கிருதவேதம் திராவிடவேதம் என்பனவும் வேதத்தின் பகுப்பேயாயிருக்க, அவ்வுண்மையையுணர்ந்து இரண்டும் சமமெனக் கருதாது பக்ஷபாதத்தால் வடமொழிவேதத்தையே சிறந்தபிரமாணமென்று கொண்டாடித் தென்மொழிவேதத்தை அங்ஙனமன்றென்று மறுக்கிற சிற்றறிவாளர்களை நோக்கி, 'நீங்கள் கொண்டாடுகிற வடமொழிவேதத்திலும், நம் ஆழ்வார் அருளிய தென்மொழி வேதம், பரப்ரஹ்மஸ்வரூபத்தையும் மற்றும் பிறப்பு வினை வினைப்பயன் வீடு அதன்காரணம் முதலிய தத்துவப்பொருள்களையும் உள்ளபடி உணர்ந்து பிறர்க்குத் தெளிவாகச்சொல்லி ஸ்வமத

ஸ்தாபநம் செய்து பரமதநிரஸநம் பண்ணுவதிற் சிறந்ததாமென்று எதிர்வாதங் கூறியவாறு மென, இச்செய்யுட்குச் சங்கதி கண்டு கொள்க. (18)

19. *சொல்லென்கெனோமுழுவேதச்சுருக்கென்கெனோவெவர்க்கு*
நெல்லென்கெனோவுண்ணுநீரென்கெனோமறைநேர்நிறுக்குங்
கல்லென்கெனோமுதிர்ஞானக்கனியென்கெனோபுகல
வல்லென்கெனோகுருகூரெம்பிரான்சொன்னமாலையையே.

(இ - ள்.) குருகூர் எம்பிரான் சொன்ன மாலையை - திருக்குருகூரில் அவதரித்த எமதுதலைவரான நம்ஆழ்வார் அருளிச்செய்த பாமாலையாகிய திவ்வியபிரபந்தத்தை,—சொல் என்கெனோ - (எல்லாவிலக்கணமுமமைந்த) சொல் என்று சொல்வேனோ? முழு வேதம் சுருக்கு என்கெனோ - வேதம் முழுவதன் சாரசங்கிரகமென்பேனோ? எவர்க்கும் நெல் என்கெனோ - எல்லார்க்கும் (ஜீவநோபாயமான) நெல்என்பேனோ? உண்ணும் நீர் என்கெனோ - (இன்றியமையாததான) பருகுதற்குஉரிய நீர் என்பேனோ? மறை நேர் நிறுக்கும் கல் என்கெனோ-தராசுதட்டு இரண்டனுள் ஒன்றில் வேதத்தைவைத்து அதற்குச்சமமாக மற்றொன்றில் வைத்துநிறுத்தற்குஉரிய எடுத்தலளவைக் கல் என்பேனோ? முதிர் ஞானம் கனி என்கெனோ - முதிர்ந்த தத்துவஞானமயமான பழமென்பேனோ? புகல வல் என்கெனோ - (மற்றும் அதன்திறத்தை உள்ளபடி எடுத்துச்) சொல்ல வல்லமை (எனக்குஉள்ளது) என்பேனோ?

'சொல்லென்கெனோ.........கனியென்கெனோ' என்றது - இங்ஙனம் பலபடியாக விகற்பித்துக் கூறலாம்படியுள்ளது ஆழ்வாரருளிச்செயல் என்றவாறும்: 'புகல வல் லென்கெனோ' என்றது - அதன்தன்மையை உரியபடி சொல்லவல்லேனல்லேன் யான்என்றபடி. 'சொல்லென்கெனோ' என்பதற்கு - எம்பெருமானுடைய புகழென்பேனோ என்று உரைப்பினும் அமையும்; சொல் - புகழாதலை "சொன்மாண்பமைந்த குழு" எனச் சீவகசிந்தாமணியி லுங் காண்க. மாலை - பெருமானது திருவடிகளிற் சூட்டும் பூமாலை போன்ற பாமாலை யென்க. 'சடகோபன்சொல்லமை, பாட்டோராயிரத்திப் பத்தாலடிசூட்டலாகு மந்தாமமே," "மொய்யசொல்லா லிசை மாலைகளேத்தி யுள்ளப்பெற்றேன்," "நாவியலா லிசைமாலைகளேத்தி நண்ணப்பெற்றேன்" என்றார் திருவாய்மொழியிலும். 'எவர்க்கும் நெல்லென்கெனோ' என்றதற்கு - தேகயாத்திரைக்கு நெற்போல ஆத்மயாத்திரைக்கு ஆழ்வாரருளிச்செயல் வேண்டுமென்பது கருத்து. கல் - படிக்கட்டுக்கல். 'உண்' என்பது, பொது வினையாகவும் வழங்கும். (19)

[செலவுணர்த்திச் செவிலியைத் தேற்றல்.]

20. *மாலைக்குழலியும்வில்லியுமாறணைவாழ்த்தலர்போம்*
பாலைக்கடம்பகலேகடந்தேகிப்பணைமருதத்
தாலைக்கரும்பினரேலென்னுமோசையையஞ்சியம்பொற்
சாலைக்கிளியுறங்காத்திருநாட்டிடஞ்சார்வர்களே.

(இ - ள்.) மாலை குழலியும் - மலர்மாலையைச்சூடிய கூந்தலை யுடையளான தலைமகளும், வில்லியும் - கையில்வில்லேந்தியுள்ள வனான தலைமகனும் (ஆகிய இருவரும்),—மாறனை வாழ்த்தலர் போம் பாலை கடம் பகலே கடந்து ஏகி - நம்மாழ்வாரை வாழ்த் தாதவர்கள் செல்லுமிடமான பாலைநிலமாகிய கொடுஞ்சுரத்தை இன்றைப்பகலிலேயே கடந்துசென்று,—பணை மருதத்து - விளை நிலஞ்சூழ்ந்த மருதநிலத்திலே, ஆலை கரும்பின் - கரும்பையாட்டுகிற ஆலையினது, நரேல் என்னும் ஓசையை - நரேல் என்று ஒலிக்கிற ஓசைக்கு, அஞ்சி - பயந்து, அம் பொன் சாலை கிளி உறங்கா - அழகிய பொன்மயமான மாளிகைவெளிகளிலமைக்கப்பட்டுள்ள கூடுகளில் வசிக்கின்ற கிளிகள் நித்திரைகொள்ளாத, திரு நாடு இடம் - சிறந்த (பாண்டிவள) நாட்டின் எல்லையில், சார்வர் கள் - சேர்வார்கள்; (எ - று.)

குழலியும் வில்லியும் கடந்தேகிச் சார்வர்க ளென்க.

இயற்கைப்புணர்ச்சி, பாங்கற்கூட்டம், பாங்கியிற்கூட்டம் என்பவற்றாற் களவுநெறியில் தலைமகளோடுகலந்த தலைமகன் அங்குப்பழிபரவுதலின் தோழியால் உணர்த்தப்பட்டுத் தலைமகளை உடன்கொண்டு தன்னூர்க்குச் சென்றனனாக, அங்ஙனம் தலைவன் தலைவியை இடைச்சுரநெறியாக உடன்கொண்டு போனமையைத் தோழியாலறிந்த செவிலித்தாய் அச்செய்தியைப் பெற்ற தாய்க்கு உணர்த்தி அவளிடம் அநுமதிபெற்றுத் தலைமகளைத் தேடிச்செல் லுங்காட்டுநெறியிலே, எதிர்வருபவர்களைநோக்கி 'ஓர் இளம்பெண் ஓர் இளமகனுடனே நும்எதிரேவரக் கண்டதுண்டோ?' என்று வினவ, அவ்வினவப்பட்டவர் 'நீ கூறுகின்றவர்களைக் கண்டோம்; அத்தலைவியும் தலைவனும் ஓர் இடுக்கணின்றி இன்னபொழுதில் ஊர்சேர்ந்திருப்பர்' என்றுசொல்லிச் செவிலியைத் தேற்றுதல், இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட விஷயம். இந்த அகப்பொருட் டுறைச்செய்யுளின் மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - செவிலியை எதிர்வருவார் ஆற்றி மீளச்செய்தல்.

இயற்கையழகுடன் செயற்கையழகையுமுடைய ளாதலால், 'மாலைக் குழலி' எனப்பட்டாள். இங்ஙனங் கூந்தலழகுகொண்டு தலைவனை வசீகரித்தவளென்க. கூந்தலிற்சூடியமலர்தானும் வாடியதில்லையென்பது தோன்ற 'மாலைக்குழலி' என்றதனால் அம் மடமங்கை வழிச்செலவினாற் சிறிதும்வருத்த முற்றில ளென்று குறிப்பாக உணர்த்திச் செவிலியை ஆற்றியவாறுமாம். 'வில்லி' என்றது - தலைவன் வில்வீரனாதலாற் கையிலேந்திய வில்லைக் கொண்டு அம்புஎய்து இக்கானகத்திலெதிர்ப்பட்ட கொடுவிலங்கு களை அழித்து இடையூறின்றிச் செல்கின்றன னென்ற குறிப்பு. மாறனைவாழ்த்தாதவர்கள் நாடு முதலிய நல்இடங்களை நீங்கிப் பாலைவனம்புகுவ ரெனவே, ஆழ்வாரின் அருமையைப் பாராட்டி அவர்பக்கல் அன்புபூணாதவர்கள் மறுமைப்பயனையேயன்றி இம்மைப்பயனையும் இழப்பரென்பது போதரும். 'கடந்துஏகி' என் றது - கடத்தற்கு அரியதனை எளிதிற்கடந்தன ரென்றவாறு. பணைமருதம்என்பதுமுதலாக, தலைவியுந் தலைவனுஞ்சென்றுசேரும்

நாட்டின்வளத்தை விளக்கி, அப்பதி வழிநடைவருத்தத்தை இனிதுதணிக்குந்தண்மையதென்று உணர்த்திச் செவிலியை ஆற்றியவாறும். பணை - வயல். மருதம் - நாடும், நாடுசார்ந்த இடமும். ஆலையிற் கரும்பாட்டும்போது உண்டாகிற நரேலென்னும் ஓசையைப் பூனையின்குரலென்று எண்ணி அஞ்சிக் கிளிகள் உறங்கா வென்க; இங்கு **மயக்கவணி** தொனிக்கும்.

நரேல் எனல்-ஒலிக்குறிப்பு. மாறனைவாழ்த்தும் விதம் - "மேதினியில் வைகாசிவிசாகத்தோன் வாழியே வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தான் வாழியே, ஆதிகுரு வாய்ப்புவியிலவதரித்தான்வாழியே அனவரதஞ் சேனையர்கோனடிதொழுவோன் வாழியே, நாதனுக்கு நாலாயிரமளித்தான்வாழியே நம்மதுரகவி வணங்கும் நாவீறன் வாழியே, மாதவன் பொற்பாதுகையாய்வளர்ந்தருள்வோன் வாழியே மகிழ்மாறன் சடகோபன் வையகத்தில் வாழியே" எனக் காண்க.

எம்பெருமானுடைய திருவடித்தாமரைமலர்களை முடிமேற்கொண்டு வணங்கி அந்தப் பிரணமத்தின் அமைதியால் அப்பெருமானைத் தம்வசப்படுத்தியவரும், தம்மைப்போன்ற அடியார்கட்கு நேரும் இடையூறுகளைத் தீர்த்து அவர்களைப்பாதுகாத்தற்கென்றே கையில்வில்லேந்தியுள்ள எம்பெருமானை ஏகாந்தத்திலே தரிசித்து அப்பெருமானைப்பிரிந்து உயிர்வாழமாட்டாதவராய் அவனைவிடாது தொடர்ந்தவருமான ஆழ்வார், இடையூறான கொடிய ஸம்ஸாரத்தைத் தத்வஜ்ஞாநதசையிலேயே கடந்து, நிரதிசயவின்பந்தருவதான அப்பரமனுடைய ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்வர் என்று, அவருடைய ஒழுக்கத்தைக் கண்ட உலகத்தார் அவர்பக்கற் பரிவையுடைய ஞானிகட்குக் கூறுதல், இதற்கு உள்ளுறை பொருளாம். 'திருநாடு' என்பது - பரமபதத்திற்கு ஒரு பெயராதலை யுணர்க. அங்குத் திருமாமணிமண்டபத்திலே அழிவும் ஞானஸங்கோசமு மிலராய் வாழ்கிற இனியனவே பேசு மியல்புடையரான நித்தியமுக்தர்கள் ஸர்வாந்தராத்மாவான ஸ்ரீமந்நாராயணனிடத்துப்பொங்கும்பரிவினாலே பெரியாழ்வார்போலஅஞ்சவேண்டாததற்கு அஞ்சி உள்ளுறப் பல்லாண்டுபாடுதலும் உணரத்தக்கது. ஸம்ஸாரமருகாந்தாரம் பாகவத பக்திபூணுதவர் திரிதற்கு உரிய இடமாதலால், 'மாறனை வாழ்த்தலர் போம்பாலைக்கடம்' எனப்பட்டதென்க. மற்றும் ஸ்வாபதேசார்த்தத்தின்விவரம் சம்பிரதாயம் வல்லார்வாய்க் கேட்டு உணரத்தக்கது. *(20)*

[பாங்கி நெறியருமைகூறித் தலைமகனை வரவுவிலக்கல்.]

21. ***சாரற்குறிஞ்சிதழுவும்பொழிற்றளிர்மெல்லடித்தண்***
மூரற்குறிஞ்சிநகைமுகநோக்கற்கு நீமுடுகுஞ்
சூரற்குறிஞ்சிநெறிநினைதோறுந் துணுக்கெனுமால்
வாரற்குருகைப்பிரான் றிருவாணை மலையவனே.

(இ - ள்.) மலையவனே - மலைக்குஉரியவனே! சாரல் குறிஞ்சி தழுவும் பொழில் - மலைச்சார்பாகிய குறிஞ்சிநிலத்தைச் சார்ந்த

சோலையிலே, தளிர் மெல் அடி தண் மூரல் குறிஞ்சி நகை முகம் நோக்கற்கு-தளிர்போன்ற மென்மையான பாதங்களையும் குளிர்ச்சி யான [கண்ணுக்குஇனிய] பற்களையும் குறிஞ்சியென்னும் பண் போ லினிய சொற்களையும் புன்சிரிப்பையு முடையவளான தலைவி யினது முகத்தைப் பார்த்தற்பொருட்டு, நீ முடுகும்-நீ விரைந்து வருவதாகிய, சூரல் குறிஞ்சி நெறி - பிரப்பங்காடுமிக்க மலைவழி யை,நினைதோறும் -(நாங்கள்) நினைக்கிறபோதெல்லாம், துணுக் கெனும் - (எங்கள்மனம்) திடுக்கிட்டு அஞ்சுவதாயிருக்கும்; ஆல் - ஆதலால், குருகைபிரான் திரு ஆணை வாரல் - திருக்குருகைக்குத் தலைவரான நம்மாழ்வார்மேலாணை இனி நீ இங்ஙனம் வர வேண்டா; (எ - று.)

இயற்கைப்புணர்ச்சிப்பெற்ற தலைமகன், பின்பு, தலைமகளி னது தோழியினுதவியைக்கொண்டு தலைமகளைப் பகலிலும் இரவி லும் களவுநெறியில் ஏகாந்தத்திலே சந்தித்தல், இயல்பு; அது, பகற்குறி இரவுக்குறி எனப்படும். தலைமகனது வேண்டுகோளின் படி ஒருநாளிரவிற் குறிப்பிட்டதொருசோலையிடத்தே அத்தலை மகனையுந் தலைமகளையுஞ் சந்திக்கச்செய்த தோழி, பின்பும், அக் களவொழுக்கத்தையே வேண்டிய தலைமகனுக்கு, அவன்வரும் நெறியினது அருமையையும் அதுகருதித் தாங்கள் அஞ்சுதலையுங் கூறி, 'இனி அங்ஙனம் வரற்பாலையல்லை' என்று விலக்குதல், இச் செய்யுளிற் குறித்த அகப்பொருள் துறை; இது, 'ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி' எனப்படும். (ஆறு - வழி.) 'தலைவன்வரும் வழி, மிகவும்இன்னாது, நீருடையது, கல்லுடையது, ஏற்றிழிவுடையது, கள்ளர் புலி கரடி யானை பாம்பு முதலிய கொடியபிராணிகளை யுடையது' என்று கவலுங் கவற்சியாற் சொல்லுவதென்க. இதில், மெய்ப்பாடு - அச்சம். இதன்பயன் - வெளிப்படையாகவந்து மணஞ் செய்துகொள்ளுதலை வற்புறுத்துதல். முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்ற ஐவகை நிலங்களுள் மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சியா மென்பதும், "போக்கெல்லாம்பாலை புணர் தல்நறுங்குறிஞ்சி, ஆக்கஞ்சேரூடலணிமருதம் - நோக்குங்கால், இல்லிருக்கைமுல்லை இரங்கல்நறுநெய்தல்,சொல்லிருக்குமைம்பாற் றொகை" என்றபடி புணர்ச்சிக்கு உரிய இடம் குறிஞ்சியென்பதும் அறியத்தக்கன. தலைமகன், குறிஞ்சிநிலத்திற்குஉரிய மக்கள் கோ லத்தனாய் வந்துள்ளானாதலால், 'மலையவனே' என்று விளிக்கப் பட்டான். மலையவ னென்பது - குறிஞ்சிநிலத்தலைவன்பெயர்.

சாரல் - மலையைச்சார்ந்தது, மலைப்பக்கம்; தொழிலாகுபெயர். 'தளிர் மெல்லடித் தண்மூரற் குறிஞ்சிநகை' என்பது - உம்மைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய், தலைவியை யுணர்த்தும். இரண்டாம்அடியில், 'குறிஞ்சி' என்ற பண்ணின் பெயர் - அதுபோ லினிய மொழிக்கு உவமையாகுபெயராம். துணுக்கெனல் - அச்சக்குறிப்பு. 'துணுக்கெனும்' என்பதற்கு 'தலைமகள்' என்ற தோன்றாஎழுவாய் வருவித்துஉரைப்பினுமாம். **ஆல் - ஆதலால் என்பதன் விகாரம்.** வாராமையை வற்புறுத்தி

'வரைந்துசெல்க' என்பதை யுணர்த்துவாள், 'குருகைப்பிரான்திரு வாணை வாரல்' என ஆணையிட்டு மறுத்தாள்.

தமோகுணப்ரசுரமாய் அநேகவித தேகவியாதி மநோவியாதிகளாகிறகொடுவிலங்குமுதலியவற்றையுடையதான ஸம்ஸாரமார்க்கத்திலேஇருந்து நேர்பட்ட இடத்தில் ஆழ்வார்பக்கல் பக்திசெய்தொழுகுகிறபாகவதர்களைநோக்கிஅன்பர்கள் இனிஇக்களவொழுக்கத்தைவிட்டுப் பிரபத்திமார்க்கத்தில் நின்று ஆழ்வார்பக்கல் இடையீடின்றி அநவரதபாவனை செய்தல் வேண்டும்' என்று வற்புறுத்துதல், இதற்கு உள்ளுறைபொருளாம்: விவரம் கேட்டுணர்க. உள்ளுறைபொருளிலே ஆழ்வாரைத் தலைமகளாகக் கொள்ளும்போது சிலவிடத்தில் எம்பெருமானைத் தலைமகனாகவும், சிலவிடத்தில் பாகவதரைத் தலைமகனாகவும், கம்பர் தம்மைத் தலைமகளாகக் கொள்ளும்போது ஆழ்வாரைத் தலைமகனாகவும் இடத்துக்குஏற்பக் கொள்க. எம்பெருமான்பக்கலிற்போல "மாயப்பிரானடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ?" என்று அவனது சம்பந்தம்பெற்ற அடியார்களிடத்தும் ஆழ்வார் மிக்க பக்தி கொண்டு அவர்களையும் தமக்குத் தலைவராகக்கொள்ளுந் தகுதியுடையராதல், ஸ்ரீவைஷ்ணவர்களைக் கிளவித்தலைமகனாகக் கொண்டதற்குக் காரணம்; "உற்றதும் உன்னடியார்க்கடிமை" என்றதுங் காண்க. (21)

22. **மலையாரமுங்கடலாரமும்பன்மாமணிகுயின்ற**
விலையாரமும்விரவுந்திருநாடனைவேலைசுட்ட
சிலையாரமுதினடிச்சடகோபனைச்சென்றிறைஞ்சுந்
தலையாரெவரவரேயெம்மையாளுந்தபோதனரே.

(இ - ள்.) மலை ஆரமும் - பொதியமலையி லுண்டாகிற சந்தனமும், கடல் ஆரமும் - கடலில்தோன்றுகிற முத்துக்களும், பல் மா மணி குயின்ற விலை ஆரமும் - பலவகைப்பட்ட சிறந்த இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற விலை மிக்க ஹாரங்களும், விரவும் - பொருந்திய, திரு நாடனை - சிறந்த பாண்டிவளநாட்டிலே அவதரித்தவரும், வேலை சுட்ட சிலை ஆர் அமுதின் அடி சடகோபனை - சமுத்திரத்தை (ஆக்கினேயாஸ்திரத்தால்) வேகச்செய்த (கோதண்டமென்னும்) வில்லையேந்திய அருமையான அமிருதம்போன்ற எம்பெருமானது திருவடிநிலையெனப்படுபவருமாகிய ஆழ்வாரை, சென்று இறைஞ்சும் - (திருக்குருகூரிற்) போய் வணங்குகின்ற, தலையார் - தலையையுடையவர், எவர் - எவரோ, அவரே - அவர் தாம், எம்மை ஆளும் தபோதனர் - எம்மை அடிமைகொள்ளுந் தவச்செல்வராவர்; (எ - று.)—ஈற்று ஏகாரம்-தேற்றம்: ஈற்றசையுமாம்.

'சடகோபனைச் சென்றிறைஞ்சுந்தலையாரெவரவரே' என்றது, ஸ்ரீமதுரகவியாழ்வார்முதலான ஸத்புருஷர்களை. 'அவரே எம்மையாளுந்தபோதனர்' என்று, ஆழ்வாரது அடியார்பக்கல் தமக்கு உள்ள அடிமைப்பக்தியை வெளியிட்டவாறும். 'அமுதினடிச்சடகோபன்' என்பதை, கீழ் 13 - ஆஞ்செய்யுளில் "உண்டானடிச்சட

கோபன்" என்றாற்போலக் கொள்க. 'மலையாரமுங் கடலாரமும் பன்மாமணிகுயின்றவிலையாரமும்விரவும்' என்றஅடைமொழி, திருவழுதிவளநாட்டின் வளங்களை யுணர்த்தும். ஆரம்-ஹாரம் என்ற வடசொல்லின் விகாரம்: "சந்தனம் மாலை பூண் ஆத்தி முத் தென, வந்தன வைந்தும் ஆரமாகும்" என்ற திவாகரத்தால், ஆர மென்பதன் பொருளை யுணர்க; "அரைக்கு மாரமு மாரமு மாரமு மணிந்து" என்றார் வில்லிபுத்தூராரும். "சந்தனப்பொதியத்தட வரை" என்றபடி, சந்தனமரங்களை மிகுதியாக வுடைமையாற் சந்த நாசல மெனப்படுகிற மலயபர்வதம் பாண்டியநாட்டிலுள்ளதனால், மலையாரம் அந்நாட்டுக்குச் சிறந்த உரிப்பொருளாயிற்று. "பூழியர் கோன் தென்னாடு முத்துடைத்து" என்றபடி பாண்டியநாட்டைச் சார்ந்த கடலில் முத்துக்கள் மிகுதியாக உண்டாவது பிரசித்தமா தலால், கடலாரமும் அந்நாட்டுக்கு ஏற்றதாதல் காண்க. 'பன்மா மணிகுயின்ற விலையாரம்'-செல்வவளத்தால் அந்நாட்டுக்குடி களிடம் அமைவன; ஆரம்-மார்பிலணிவடம்.

வேலைசுட்டது, ஸ்ரீராமாவதாரத்தில்; அவ்வரலாறு:— இராவணனாற் கவரப்பட்ட சீதாபிராட்டி இலங்கையிலிருக்கிற செய்தியை அனுமான் சென்று அறிந்துவந்து சொன்னபின்பு இராமபிரான் வாநரசேனையுடனே புறப்பட்டுச் சென்று கடற் கரையையடைந்து, கடல்கடக்க உபாயஞ்சொல்ல வேண்டுமென்று அக்கடலரசனாகிய வருணனைப் பிரார்த்தித்து அங்குத் தருப்பசய னத்திலே படுத்துச் சிலநாளளவும் பிராயோபவேசமாகக்கிடக்க, சமுத்திரராசன் அப்பெருமானது மகிமையை யறியாமல் உபேக்ஷை யாயிருக்க, ஸ்ரீராமன் அதுகண்டு கோபங்கொண்டு, அனைவரும் நடந்துசெல்லும்படி கடலை வற்றச்செய்வே னென்று ஆக்நேயாஸ் திரத்தைத் தொடுக்கத் தொடங்கியவளவிலே, அதன் உக்கிரத்தால் தபிக்கப்பட்டு வருணன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து அப்பெருமானைச் சரணமடைந்து, கடல்வடிவமான தன்மேல் அணைகட்டுதற்கு உடன்பட்டு ஒடுங்கிநிற்க, பின்பு இராமமூர்த்தி வாநரங்களைக் கொண்டு மலைகளாற் சேதுபந்தனஞ் செய்தனன் என்பதாம்.

"கற்றார்பரவு மிராமாநுசனைக் கருதுமுள்ளம், பெற்றாரெவ ரவரெம்மை நின்றாளும் பெரியவரே" என்ற இராமாநுசநூற்றந் தாதியின் வாய்பாடும் இச்செய்யுளின் வாய்பாடும் ஒருநிகராதல் காண்க. (22)

23. போந்தேறுகவென்றிமையோர்புகலினும்பூந்தொழுவின்
வேந்தேறடர்த்தவன்வீடேபெறினுமெழிற்குருகூர்
நாந்தேறியவறிவன்றிருவாய்மொழிநாளுநல்குந்
தீந்தேறலுண்டுமழுஞ்சித்தியேவந்துசித்திக்குமே.

(இ - ள்.) போந்து ஏறுக என்று இமையோர் புகலினும் - 'மேலேயுள்ளதான எங்களுலகத்துக்கு வருவாயாக' என்று இந்திராதிதேவர்கள் வேண்டும்படி (சுவர்க்கம்முதலிய மேம்பட்ட பதவி) கிடைப்பதானாலும்,—பூ தொழுவின் வேந்து ஏறு அடர்த்த வன் வீடே பெறினும் - அழகியதொழுவத்திலே தலைமைபெற்ற

எருதுகளை வலியடக்கித் தழுவியவனை திருமாலினது ஸ்ரீவைகுண்டத்தையே பெறுவதானாலும்,—எழில் குருகூர் நாம் தேறிய அறிவன் திருவாய்மொழி நாளும் நல்கும் தீம் தேறல் உண்டு உழலும் சித்தியே வந்து சித்திக்கும் - அழகிய திருக்குருகூரிலவதரித்தவரும் நாமெல்லாம் தேர்ந்து குருவாகக்கொள்ளத்தக்க ஞானியுமான நம்மாழ்வாருடைய திருவாய்மொழிப்பிரபந்தம் தன்னை அநுஸந்திக்கும் பொழுதெல்லாந் தருகிற இனிமையான சொற்பொருளின்பத்தேனை யுட்கொண்டு களித்துத்திரியும் பேறே (எனக்கு) வந்து கைகூடுவதாக: (எ - று.)

இந்திரன் முதலிய இறையவர்பதங்களி லநுபவிக்கப்படுகிற போகங்களிலும் தாமரைக்கண்ணனுலகில் நுகரப்படுகிற நிரதிசயவின்பத்தினும் திருவாய்மொழி யநுஸந்தாநத்தாலாகும் ஆநந்த ரஸம் மேம்பட்ட தென்பதையும், அதில் தமக்குள்ள ஆதராதிசயத்தையும் கூறியவாறும்; "தேவுமற்றறியேன் குருகூர்நம்பி, பாவினின்னிசை பாடித்திரிவனே" என்றார் ஸ்ரீமதுரகவிகளும். போந்தேறுக வென்று இமையோர் புகலுதல் - "மாதவன்தமரென்று வாசலில் வானவர், போதுமி னெமதிடம் புகுதுக வென்றலும்" எனக் காண்க. நாங்கள்கொண்டுவந்த விமானத்தி லேறி எங்கள் மேலுலகத்திற்குவந்து அங்குச் சீரியசிங்காதனத்திலேறி வீற்றிருக்க வென்று தேவர்கள் கூறினாலுமென விரித்துமுரைக்கலாம். தொழு - பசுக்கொட்டில். வேந்து ஏறு - செருக்குக்கொண்ட ஏறு; ராஜஸகுணம்மிக்க ஏறு என்க. ஏறு - பசுவின் ஆண்மைப் பெயர்.

ஏறடர்த்தது, கிருஷ்ணாவதாரத்தில்; அவ்விவரம்:—**கண்ணன்,** நப்பின்னையென்பவளைத் திருமணஞ்செய்துகொள்வதற்கு அவள் தந்தை கன்னியாசுல்கமாகக் குறித்தபடி, யாவர்க்கும் அடங்காத அசுராவிஷ்டமான ஏழு எருதுகளையும் ஏழுதிருவுருக்கொண்டு சென்று வலியடக்கித் தழுவின னென்பதாம்.

அறிவன் - சாஸ்திராப்பியாசத்தாலும் யோகாப்பியாசத்தாலுமுண்டாகிற உணர்வுகளினும் பலமடங்கு மேம்பட்ட எம்பிரானருளா லுண்டான மெய்யுணர்வை யுடையவர்; மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர். நாளும் - எந்தநாளும். தேறல் - தேன்; தெளிந்தது. (23)

24\. **சித்தர்க்கும்வேதச்சிரந்தெரிந்தோர்கட்குஞ்செய்தவர்க்குஞ்**
சுத்தர்க்குமற்றைத்துறைதுறந்தோர்கட்குந்தொண்டுசெய்யும்
பத்தர்க்குஞானப்பகவர்க்குமேயன்றிப்பண்டுசென்ற
முத்தர்க்குமின்னமுதஞ்சடகோபன்மொழித்தொகையே.

(இ - ள்.) சடகோபன் மொழித் தொகை - நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழிப் பாசுரங்களின் தொகுதியானது,—சித்தர்க்கும் - (அணிமாமகிமாமுதலிய) யோகசித்திகளைப் பெற்றவர்கட்கும், வேதம் சிரம் தெரிந்தோர்கட்கும் - வேதத்தின் தேர்ந்த பொருண்முடிவாகிய [வேதாந்தமெனப்படும்] உபநிஷத்துக்களை

யுணர்ந்தவர்கட்கும், செய் தவர்க்கும் - தவஞ்செய்கிறவர்கட்கும், சுத்தர்க்கும் - (மனம் மொழி மெய் என்னும் திரிகரணங்களின்) தூய்மையுடையவர்கட்கும், மற்றை துறை துறந்தோர்கட்கும் - மற்றொரு மார்க்கமாகிய இல்லறத்திலிருந்து துறவறம்புக்கவர்களான சந்நியாசிகட்கும், தொண்டு செய்யும் பத்தர்க்கும் - (பகவானுக்கும் பாகவதர்க்கும்) அடிமைத்தொழில் செய்கின்ற பக்தியையுடையவர்கட்கும், ஞானம் பகவர்க்குமே அன்றி - தத்துவ ஞானத்தையுடைய பெரியோர்கட்குமேயல்லாமல், பண்டு சென்ற முத்தர்க்கும் - முன்னமே பிறவித்துன்பங்களைக்கடந்து சென்றவர்களான முத்திபெற்றவர்கட்கும், இன் அமுதம் - இனிய அமிருதம் போல இன்சுவை விளைப்பதாம்; (எ - று.)

வேதச்சிரம்-வேதமுடி. செய்தவர் - செய்கிற தவத்தை யுடையவர்: வினைத்தொகை. சுத்தர் - பரிசுத்தாத்மாக்கள். பத்தர்-பக்திநிஷ்டர். ஞானப்பகவர் - ஞானிகள், ஞானாசாரியர். முத்தர்-ஜீவந்முக்தருமாம். இன்னமுதம் - திருப்பாற்கடலினின்று தோன்றியது அமுதம், ஆழ்வார் திருவாய் மலரினின்று தோன்றியது இன்னமுதம் என்க. சித்தர்முதல் முத்தரீறாகச் சொல்லப்பட்ட பலவகை அதிகாரிகளும் கொண்டாடி ஆனந்தித்தற்கு ஏற்ற சிறப்பு அடங்கப்பெற்றுள்ளது - ஆழ்வாரருளிச்செயல் என்பதாம்.

நிறைந்தமகிமை தைரியம் கீர்த்தி சம்பத்து ஞானம் வைராக்கியம் என்ற ஆறுக்கும், 'பகம்' என்று பெயர். அதனை யுடையவன், பகவாந்; இவ்வடசொல், தமிழில் 'பகவன்' என்று விகாரப்பட்டு வழங்கும்: பகவர் என்பது, அதன் பன்மையாய் நின்றது. (24)

25. தொகையுளவாயபனுவற்கெல்லாந்துறைதோறுந்தொட்டாற்
பகையுளவாமற்றும்பற்றுளவாம்பழநான்மறையின்
வகையுளவாகியவாதுளவாம்வந்தவந்திடத்தே
மிகையுளவாங்குருகூரெம்பிரான்றன்விழுத்தமிழ்க்கே.

(இ - ள்.) தொகை உள ஆய பனுவற்கு எல்லாம் - தொகுதியாகவுள்ளனவான மற்றைச் சமயநூல்கட்கெல்லாம், துறைதோறும் தொட்டால் - இடந்தோறும் ஊன்றிநோக்கினால் [அவற்றிலுள்ள பொருள்களிலெல்லாம் ஆராய்ச்சிசெய்தால் என்றபடி], பகை உள ஆம் - ஒருநூலிலேயே முன்னுக்குப்பின் மாறுகொளக்கூறலாகிய விரோதமும் வேதாங்கமான சாஸ்திரங்களோடு தாம் மாறுபடுதலாகிய விரோதமும் உள்ளனவாம்;மற்றும்- இதுவன்றியும், பற்று உள ஆம் பழ நால்மறையின் வகை உள ஆகிய வாது உள ஆம் - தொடர்ச்சியுள்ளனவாகிய பழமையான நான்குவேதங்களின் வகுப்புக்களிற்கூறிய பொருளோடு (மாறுபடுதலால்) உள்ளனவாகுஞ் சொற்போர்களும் (அச்சமயநூல்கட்கெல்லாம்) உண்டாகும்; குருகூர் எம்பிரான் தன் விழுத் தமிழ்க்கே- திருக்குருகூரிலவதரித்த எமதுதலைவரான நம்ஆழ்வாருடைய சிறந்த தமிழ்த்திவ்வியபிரபந்தங்களிலோவெனில், வந்த வந்த இடத்தே மிகை உள ஆம் - (மாறுபடக்கூறலும் நித்தியமான

பொருளோடு எதிர்வாதமும் இல்லாமல்) பார்த்தபார்த்த இட மெல்லாம் விசேஷார்த்தங்களை அமைந்துள்ளனவாம்; (எ - று.)

ஆழ்வாரருளிச்செயல்களானவை, மாறுகொளக்கூறல் முதலிய நூற்குற்றங்களின்றிச் சகலவேதசாஸ்திரங்களுக்குஞ் சம்மதமாய்ச் சிறந்த வேதாந்தப்பொருளையே அறிவுடையாரனைவரும் அங்கீகரிக்குமாறு இடந்தோறும் உணர்த்துதலால், எல்லாச்சமய நூல்களிலுஞ் சிறந்தன வென்பதாம்; பற்று நித்தியமாதலால் அநாதிகாலமாக இடையீடின்றிக் குருசிஷ்யக்கிரமத்திலே ஓதியுணரப்பட்டுவருந் தன்மை. இனி, பற்றுஉளவாம் என்பதற்கு - தத்துவப்பொருள்களையுணர்த்துதலில் மிக்கஅபேக்ஷையையுடையனவான என்றும்பொருள்கொள்ளலாம். (25)

26. விழுப்பாரினியெம்மையார்பிறவித்துயர்மெய்யுறவந்
தழுப்பாதொழிமினருவினைகாளும்மையப்புறத்தே
யிழுப்பானொருவன்வந்தின்றுநின்றானிளநாகுசங்கங்
கொழுப்பாய்மருதஞ்சுலாங்குருகூரெங்குலக்கொழுந்தே.

(இ - ள்.) அரு வினைகாள் -(போக்குதற்கு) அரிய கருமங்களே! இளநாகு சங்கம் கொழுப்பு ஆய் மருதம் சுலாம் - இளமையான பெண்சங்குகளுடனே ஆண்சங்குகள் மதர்ப்புக்கொண்டு மருத நிலத்திலே எங்குந் திரியப்பெற்ற, குருகூர் - திருக்குருகூரில் அவதரித்த, எம் குலம் கொழுந்து - எங்கள் குலமான வைஷ்ணவ குலத்துக்கெல்லாங் கொழுந்துபோன்றவரான நம்மாழ்வார், உம்மை அப்புறத்தே இழுப்பான் ஒருவன் வந்து-உங்களை இழுத்து அப்புறத்திலே எறியவல்ல ஒருவராய் எழுந்தருளி, இன்று நின்றான் - இப்பொழுது (எமது உள்ளத்தில்) நின்றருளினர்; இனி எம்மை பிறவி துயர் விழுப்பார் ஆர்-இனிமேல் எம்மைப் பிறப்புத் துன்பத்தில் வீழத்தவல்லவர் யாவர்? [எவருமில்லை யென்றபடி]; (ஆகவே), மெய் உற வந்து அழுப்பாது ஒழிமின் - (எமது) உடம்பிலே பொருந்தவந்து வருத்தாமல் நீங்குங்கள்; (எ - று.)

'மெய்யுற' என்பதற்கு - மெய்யாக என்று பொருள்கொண்டு, அழுப்பா தொழிமின் என்பதனோடு இயைப்பினுமாம். உம்மை அப்புறத்தே இழுப்பான்-உங்களை வைஷ்ணவ கோஷ்டியினின்றும் அப்பாலே போகவிடுவதாக ஆட்டைப்பற்றிப் புலி இழுப்பது போல இழுத்தெறிய வல்லவரென்க. ஒருவன் - ஒப்பற்ற மகா புருஷரென்றபடி. நாகு - பெண்மைப்பெயர்; இது சங்கிற்கு உரியதாதலை, "நீர்வாழ்சாதியுள் நந்து நாகே" என்ற தொல்காப்பியங் கொண்டும் உணர்க. நாடும், நாடுசார்ந்த இடமும் - மருதநிலம். கொழு பாய் மருதம் என்று பிரித்து,கலப்பைக்காறு உழுது பாயப் பெற்ற வயல்களிலே யென்று பொருள்கொள்ளினுமாம். சுலாவுதல் - சுற்றிவருதல்.

ஒருமரத்தின் அபிவிருத்திக்கு அதன்கொழுந்து காரணமாதல்போல, தொண்டக்குலத்தின் பெருக்குக்குக் காரணமானவர் நம்மாழ்வார் என்பது, 'எம்குலக்கொழுந்து' என்பதன் கருத்து;

'பிரபந்நஜநகூடஸ்தர்' என்று ஆழ்வாரை வழங்குதல் பிரசித்தம்: இங்கே 'கொழுந்து' என்றது, உவமவாகுபெயர்: இராமாநுச நூற்றந்தாதியில் "எங்குலக்கொழுந்து" என்றதன் வியாக்கியானத்தில், 'எம்குலம் - ஸ்ரீவைஷ்ணவகுலம்; அதுக்குக் கொழுந்து என்றது - வ்ருக்ஷமாய்ப் பலிக்கைக்கும் கொடியாய்ப்படர்ந்து பலிக்கைக்கும் மூலம் கொழுந்தாகையாலே, எங்கள்குலத்துக்கெல்லாம் மூலமானவரென்றபடி. கொழுந்து - தலை. அன்றிக்கே, 'எம்குலக் கொழுந்து' என்றது - எங்கள்குலமடங்கலும் ஒருவேராய் அதுக்கு எம்பெருமானார்தாம் கொழுந்தாய்க்கொண்டு, வேருக்கு 'வக்கை தட்டினால் கொழுந்து முற்படவாடுமாபோலே எங்கள் குலத்துக்கு ஒருகுறை வந்தால் முற்படத் தம்முடையமுகம் வாடியிருக்குமவரென்னவுமாம்' என்றது, இங்கும் கொள்ளத்தக்கது.

"பெற்றங்கள்மேய்க்கும் பிரானார் பேணுந் திருக்கோயில் கண்டீர், அற்ற முரைக்கின்றே னின்னம் ஆழ்வினைகாளுமக்கிங் கோர், பற்றில்லைகண்டீர் நடமின்," "திருமாலையல்லது தெய்வமென்றேத்தேன், வருமாறென் நம்மேல் வினை," "கூற்றமுஞ் சாரா கொடுவினையுஞ் சாரா, தீமாற்றமுஞ்சாராவகை யறிந்தேன் - ஆற்றங், கரைக்கிடக்குங்கண்ணன்கடல்கிடக்கும்மாயன், உரைக் கிடக்கு முள்ளத்தெனக்கு" என்ற ஆழ்வாரருளிச்செயல்களைப் பின்பற்றியது இச்செய்யுள் என்னலாம். 'இராமாநுசன் மன்னுமா மலர்த்தா, ளயரே னருவினை யென்னை யெவ்வா றின்றடர்ப்பதுவே" என்று பின்புள்ளார் அருளிச்செய்ததுங் காண்க. (26)

[பிரிவாற்றாதுவருந்துந் தலைவிநிலை கண்டு தோழி இரங்கல்.]

27. கொழுந்தோடிலையுமுகையுமெல்லாங்கொய்யுங்கொய்ம்மகிழ்க்
விழுந்தோடுவதோர்சருகும்பெறாள்விறன்மாறனென்றா [கீழ்
லழுந்தோடளருமனமுருகுங்குருகூரறையி
லெழுந்தோடவுங்கருத்துண்டுகெட்டேனிவ்விளங்கொடிக்கே.

(இ - ள்.) (இம்மெல்லியலாள்), கொழுந்தோடு இலையும் முகையும் எல்லாம் கொய்யும் - (மகிழமரத்தினது) கொழுந்தும் இலையும் அரும்புமுட்பட எல்லாவற்றையும் தனக்குக் கொண்டு தர வேண்டுவாள்; கொய் மகிழ் கீழ் விழுந்து ஓடுவது ஓர் சருகும் பெறாள் - மலர்கொய்தற்கு உரிய மகிழமரத்தின்கீழ் உதிர்ந்து (காற்றின்விசையினால் எப்புறத்தும்) ஓடுவதான சருகு ஒன்றையாயினும் பெற்றா ளில்லை; விறல் மாறன் என்றால் - பெருமையையுடைய மாறன் என்று (தலைமகனதுபெயரைச்) சொன்னால், அழும் - (ஆற்றாமையினால்) அழுவாள்; தோள் தளரும்-தோள்கள் தளரப்பெறுவாள்; மனம் உருகும்-நெஞ்சு உருகப்பெறுவாள்; குருகூர் அறையில்-(அந்தமாறனுடைய ஊராகிய) திருக்குருகூரின் பெயரைச் சொன்னால், இ இளங்கொடிக்கு - இளமையான பூங்கொடிபோன்ற இம்மங்கைக்கு, எழுந்து ஓடவும் கருத்து உண்டு - எழுந்திருந்து (இங்குநின்று அவ்விடத்துக்கு) ஓடிச்செல்லவும் எண்ணமுண்டாகின்றது; கெட்டேன்—! (எ - று.)

"தெய்வத்தண்ணந்துழாய்த் தாராயினும் தழையாயினும் தண்கொம்பதாயினும் கீழ், வேராயினும் நின்ற மண்ணாயினுங் கொண்டு வீசுமினே," "சீரரிதாழ்பொழில் மாலிருஞ்சோலையிற் செல்வர் செங்கட், போரரிதாள்புனை தாரரிதாகில் தண்பூந்துளவின், தாரரிதாவுந் தழையரிதாகில் தழைதொடுத்த, நாரரிதாகிற் பிழைப்பரிதா மெங்கள் நன்னுதற்கே" என்றபடி, தலைமகனைப் பிரிந்து அப்பிரிவையாற்றாது வருந்துகிற நிலையில் அவன் தரித்த மகிழமலர்மாலையையாயினும் பெற்றால் அதுகொண்டு ஒருவாறு தணிந்திருக்கலாமென்று கருதிய தலைமகள் அது கிடையாமையால் அதுதானே கிடையாவிடினும் அதன் சம்பந்தமுள்ள கொழுந்து இலை முகை என்பவற்றில் ஏதேனும் ஒன்றாவது கிடைக்குமாயின் அது பற்றுக்கோடாக ஆறியிருக்க நினைத்து அவற்றை வேண்டுகின்ற இயல்பு, "கொழுந்தோடு இலையும் முகையும் எல்லாம் கொய்யும்' எனப்பட்டது. அங்ஙனம் வேண்டியவற்றிலொன்றுங் கிடைத்திலதென்பதேயன்றி அம்மகிழமரத்தின்கீழே உதிர்ந்து கிடக்குஞ் சருகுதானும் கிடைத்திலதென்று இரங்குவாள், 'கொய்ம்மகிழ்க் கீழ் விழுந் தோடுவதோர் சருகும் பெறாள்' என்றார். இப்பாட்டு பாட்டுடைத் தலைவனை கிளவித்தலைவனாகக் கூறியது. பிரபந்தத்தலைவராகிய ஆழ்வார் 'வகுளாபரணர்' என்று பெயர்பெறும்படி மகிழமலர் மாலையை யுடையராதல் உணர்க. 'கெட்டேன்' என்றது-இரக்கத்தாற் சொல்லுஞ் சொல்.

சருகு-உலர்ந்த இலை. (இவள்) தோள் தளரும், மனம் உருகும்- உயர்திணைதொடர்ந்த அஃறிணைச்சினையின்வினை அவ்வுயர்திணையின் மேலேற்றப்பட்டது; திணைவழுவமைதி. இளங்கொடி - அக்கொடிபோல் மெல்லியவடிவமுடைய பெண்ணுக்கு உவமையாகு பெயர்.

கம்பநாட்டாழ்வார் நம்மாழ்வார் திருவடிகளிலேயே சேர்ந்திருக்கப்பெறாது பிரிந்து வருந்துகிற நிலையில், அவ்வாழ்வாரோடு நேரிலாவது இடையிட்டாவது சம்பந்தம்பெற்று பொருள் யாதாயினுமொன்றை அவருடைய பிரசாதமாகப்பெற்ற ஆறியிருக்கக் கருதி வேண்டுதலையும், அங்ஙனம் ஒன்றும் அவர்க்குக் கிடைத்திடாமையையும், ஆழ்வாருடைய திருநாமத்தைச் சொல்லும் போதெல்லாம் அவர் பக்திபரவசராய் அழுது உடல்சோர்ந்து மனந்தளர்தலையும், அவ்வாழ்வார் எழுந்தருளியிருக்கிற திவ்விய தேசத்திற்கு விரைந்துசென்றுசேர விரும்புதலையும், அன்பர்கள் பாராட்டி, இனி இவர்க்கு என்னாகுமோவென்று இரங்கிக்கூறுதல், இதற்கு உள்ளுறை பொருளாம்; விவரம் கேட்டு உணர்க. (27)

**28. கொடியெடுத்துக்கொண்டுநின்றேனினிக்கொடுங்கூற்றினுக்கோ
ரடியெடுத்துக்கொண்டென்பால்வரலாகுங்கொலாரணத்தின்
படியெடுத்துக்கொண்டமாறனென்றாற்பதுமக்கரங்கண்
முடியெடுத்துக்கொண்டவந்தணர்தாளென்முடியெனவே.**

(இ - ள்.) 'ஆரணத்தின் படி எடுத்துக்கொண்ட - வேதம் போலவே (ஸாரமான அர்த்தங்களைத்) தேர்ந்தெடுத்துக்கொண்டு கூறிய, மாறன் - மாறனென்னுந் திருநாமமுடையவர், என்றால் -

என்று யார்சொன்னாலும், (அவரைக்குறித்து), பதுமம் கரங்கள் முடி எடுத்துக்கொண்ட - தாமரைமலர்போன்ற தமதுகைகளைக் குவித்து அஞ்சலிசெய்து அந்தஅஞ்சலிபந்தத்தைத் தமதுசிரசின் மேற்கொள்ளுந் தன்மையரான, அந்தணர் - ஸ்ரீவைஷ்ணவர்களுடைய, தாள் - திருவடிகள், என் முடி-எனதுசிரமேற் கொள்ளப் படுவனவாம்,' என - என்றுசொல்லி, கொடி எடுத்துக்கொண்டு நின்றேன் - (பாகவதர்க்கு வழித்தொண்டன் யானென்று வெளியிடுமாறு) விருதுக்கொடி பிடித்துக்கொண்டு நின்றேன்; இனி - இங்ஙனம் யான் ஆழ்வாரடியார்க்குத்தொண்டு பூண்டபின்பு, கொடுங் கூற்றினுக்கு ஓர் அடி எடுத்துக்கொண்டு என் பால் வரல் ஆகும் கொல் - (தீவினைக்குஏற்பக்) கொடியதண்டனை செய்பவனை யமனுக்கு என்பக்கல் ஒருகாலடியையாவது எடுத்துவைத்து வருதல் கூடுமோ? [கூடாது என்றபடி]; (எ - று.)

ஆழ்வாரடியார்பக்கல் வழிபாடுபூண்ட ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திருவடியையென்முடிக்கு அணியாகக்கொண்டேனாதலால், எனதுதீவினையனைத்தும் தீர்ந்தது; இனி யமன் என்பக்கல் எங்ஙனம் வரமாட்டுவன்? என்று தனதுபெருமிதத்தை வெளியிட்டபடியாம். ஆரணத்தின்படி யெடுத்துக்கொண்ட என்பதற்கு - வேதத்தின்ஸாராம்சத்தை எடுத்துக்கொண்டு திவ்வியபிரபந்தங்களையருளிச்செய்த என்றும், வேதத்துக்குஈடாகப் பிரபந்தமருளிச் செய்த என்றும் உரைத்தலு மொன்று. (28)

29. என்முடியாதெனக்கியாதேயரியதிராவணன்றன்
பொன்முடியாற்கடறூர்த்தவில்லான்பொருநைத்துறைவன்
றன்முடியாலவன்றாளிணைக்கீழெப்பொருளுந்தழீஇச்
சொன்முடியாலமுதக்கவியாயிரஞ்சூட்டினனே.

(இ - ள்.) இராவணன்தன் பொன் முடியால் கடல் தூர்த்த வில்லான் - இராவணனுடைய ஸ்வர்ணகிரீடத்தைத் தரித்த தலைகளை(ப் பலமுறை துணித்துத்தள்ளி அவற்றை)க்கொண்டு (மிக ஆழ்ந்த) கடலையும் நிரம்பியிட்டவனை ஸ்ரீமந்நாராயணனது (அடியவராகிய), பொருநைத் துறைவன் - தாமிரபர்ணி நதிதீர தேசத்திலவதரித்தவரான நம்மாழ்வார்,—அவன் தாள் இணைக்கீழ் - அத்திருமாலினது உபயதிருவடிகளிலே, தன் முடியால் - தமதுசிரசினால் (வணங்கி), சொல் முடியால்-(தமது) சொற்களின் சேர்க்கை கொண்டு, எ பொருளும் தழீஇ - (முத்திபெறுவார்க்கு வேண்டுவனவான) எல்லாப்பொருள்களையும் ஒருங்கு தொகுத்து, அமுதம் கவி ஆயிரம் சூட்டினன் - அமிருதம்போலினிய ஆயிரம்பாசுரங்களை(ப் பாடி அப்பாமாலையை அப்பெருமானுடைய இணையடியிற்) சமர்ப்பித்தனர்; (இப்படிப்பட்ட மகாவைபவமுடைய ஆழ்வாருக்கு யான் அடிமைப்பட்டபின்பு), எனக்கு முடியாது என் - எனக்கு அசாத்தியமானது யாது? (எனக்கு) யாதே அரியது - எனக்குச் சிரம சாத்தியமானதுதான் யாது? [எதுவுமில்லை: வேண்டிய வேண்டிய நற்பயன்களெல்லாம் தவறாது எளிதிற் கைகூடுமென்றபடி;] (எ - று.)

இராமபிரான் தனது அம்புகளைக்கொண்டு இராவணனுடைய பத்துத்தலைகளையும் துணித்து இலங்கையைச் சூழ்ந்துள்ள கடலிலே தள்ளிவருந்தோறும் அவை அவனுக்குப் பிரமனளித்த வர பலத்தினால் மீண்டும்முளைத்துவர பின்பு பெருமாள் அவனதுமார் பில் அஸ்திரத்தைப்பிரயோகித்து அவனை வதைத்திட்டன னென்பது, வரலாறு. வில்லான் பொருநைத்துறைவன் - ஆறும்வேற்றுமைத்தொகை. 'இராவணன்தன்பொன்முடியாற் கடல்தூர்த்த வில்லான்' என்றதில், அவனது தலைகளின் பருமை தோன்றும். திருக்குருகூரென்ற திவ்யதேசத்தி லெழுந்தருளியுள்ள பொலிந்துநின்றபிரானையே 'இராவணன்றன் பொன்முடியாற் கடல்தூர்த்த வில்லான்' என்று குறித்ததாகக்கொண்டு, அப்பிரானுக்கு உரிய தாமிரபர்ணிநதியினது கரையிலுள்ள ஊரில் அவதரித்த ஆழ்வார் என்றலு மொன்று. 'எப்பொருளும்' என்றது - பரப்ரஹ்மஸ்வரூபமும், ஜீவாத்மாவினதுதன்மையும், பரமாத்மாவையடையும் உபாயமும், அங்ஙனமடைதலின் பயனும், அச்சரணுகதிக்குப் பகையும் என்று சகலவேதசாஸ்திரங்களிலும் சாரமாகச்சொல்லப்பட்ட அர்த்தபஞ்சகத்தை. 'எனக்கு' என்பது, மத்திமதீபமாக முன்னும் பின்னும் இயையும். தாளிணைக்கீழ்ச் சூட்டினனென்க. பொன்முடி என்றது - இங்கு, மூன்றும் வேற்றுமை யுருபும்பயனும் உடன்தொக்கதொகை. (29)

30. சூட்டிற்குருகுறங்குங்குருகூர்தொழுதேன்வழுதி
நாட்டிற்பிறந்தவர்க்காளுஞ்செய்தேனென்னை நல்வினையாங்
காட்டிற்புகுதவிட்டுய்யக்கொண்மாறன்கழல்பற்றிப்போய்
வீட்டிற்புகுதற்குமுண்டேகுறைமறைமெய்யெனிலே.

(இ - ள்.) சூட்டில் - நெற்போர்களிலே, குருகு-மருதநிலத்துப் பறவைகள், உறங்கும் - (யாதொருகவலையுமின்றி) இனிதுதுயிலப் பெற்ற, குருகூர் - திருக்குருகூரென்கிற ஆழ்வார்திருநகரியை, தொழுதேன்-சேவிக்கப்பெற்றேன்; வழுதி நாட்டில் பிறந்தவர்க்கு ஆளும் செய்தேன் - (அந்த ஆழ்வார் திருவவதரிக்கப்பெற்ற நாடாகிய, பாண்டியநாட்டிற் பிறந்த ஸ்ரீவைஷ்ணவர்கட்கு அடிமைத் தொழிலையுஞ் செய்யப்பெற்றேன்; மறை மெய்எனில் - வேதம் சத்தியமாகு மானால்,—என்னை நல் வினை ஆம் காட்டில் புகுத விட்டு உய்ய கொள் மாறன் கழல் பற்றி போய் வீட்டில் புகுதற்கும் குறை உண்டே-என்னை நற்செய்கைகளாகிற தவவனத்திலே செல்லவிட்டு (யான்) ஈடேறுமாறு (என்னை) ஆட்கொண்டருளுகிற நம்மாழ்வாருடைய திருவடிகளைச் சரணமடைந்தபின்பு (யான்) ஸ்ரீவைகுண்டத்திற் சென்று சேர்தற்கும் தடையுண்டோ? [இல்லையே யென்றபடி]; (எ - று.)

ஒருபாகவதரை ஆசாரியராகக்கொண்டு அவர்திருவடிகளிற் சரண்புகுந்து ஆட்படுதலும், அந்தக்குருவினது திருவவதார ஸ்தலத்தை வணங்குதலும், அந்தஞானசாரியரது சம்பந்தத்தை எவ்வாற்றாலாயினும் பெற்றவர்கட்கு அடிமைபூணுதலும், ஆத்மா உஜ்ஜீவித்துத் தவறாது வீடுபெறுதற்குக் காரணமா மென்பது, சத்தியமான வேதத்தின் சித்தாந்தமாகும் என்று தாற்பரியங்

காண்க. கூட்டிற் குருகு உறங்கும்—"போரிடையுறங்கு மன்னம்" என்றார் இராமாயணத்தும். கூடு - நெல்முதலியவற்றி னரிக்குவியல். குருகுஎன்பது - நீர்வாழ்பறவைப் பெயராகவும், பறவைப் பொதுப்பெயராகவும் வழங்கும். வழுதி - பாண்டியன். இங்கு 'நல்வினை' என்றது, பிரபத்திமார்க்கத்துக்கு உரிய செயல்களை. முந்துற இராமாயணமென்னும் சரணாகதிவேதத்தைத் தாம் பாடும்படி செய்வித்தது ஆழ்வார்கருணையென்பார் 'என்னை நல்வினையாங் காட்டிற் புகுதவிட்டு உய்யக்கொள் மாறன்' என்றனரென்றுங் கொள்ளலாம்; "கற்பா ரிராமபிரானையல்லால் மற்றுங் கற்பரோ, புற்பாமுதலாப் புல்லெறும்பாதி யொன்றின்றியே, நற்பாலயோத்தியில்வாழுஞ் சராசரம் முற்றவும், நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார்பெற்ற நாட்டுளே" என்று ஆழ்வா ரருளிச்செய்தது, தன்னையடுத்த சராசரங்களையெல்லாம் அன்று வைகுந்தத்து ஏற்றிய இராமபிரானது திவ்யசரித்திரத்தைக் கவிபாடுதற்குத் தூண்டுகோலாதல் காண்க. 'மாறன்கழல்பற்றிக் குருகூர்தொழுதேன் ஆளுஞ்செய்தேன்' என்று முன்பின்னாகமாற்றி அந்வயித்துப் பொருளுரைப்பினும் அமையும். மெய் - யதார்த்தபிரமாணம். வீட்டிற்புகுதற்குமுண்டே குறை—"இம்மையும்சாதித்து வானவர்நாட்டையும், நீகண்டுகொள்ளென்று வீடுந்தரும்" என்றபடி.()

31. மெய்யுமெய்யாயதுபொய்யும்பொய்யாயதுவேறுபடுத்
துய்யுமெய்யாயவுபாயம்வந்துற்றதுறுவினையைக்
கொய்யுமெய்வாள்வலவன்குருகைக்கரசன்புலமை
செய்யுமய்யன்றனக்கேதனித்தாளன்புசெய்தபின்னே.

(இ - ள்.) உறு வினையை - மிக்ககருமங்களை, கொய்யும்-அறுத்தொழிக்கின்ற, மெய் - சத்தியவாக்காகிய, வாள் - வாட்படையின் தொழிலில், வலவன் - வல்லவரும், குருகைக்கு அரசன் - திருக்குருகூர்க்குத்தலைவரும், புலமை செய்யும் அய்யன்தனக்கே - ஸ்வரூபஞானத்தை (எல்லார்க்கும்) உபதேசிக்கிற ஆசாரியருமாகிய நம்மாழ்வார்க்கே, தனி தாள் அன்பு செய்த பின் - ஒப்பற்ற திருவடிகளில் (யான்) பக்திசெய்தபின்பு,—(எனக்கு), மெய்யும் மெய் ஆயது - உண்மைப்பொருளும் உண்மையாக விளங்கிற்று; பொய்யும் பொய் ஆயது - பொய்ம்மைப்பொருளும் பொய்யாகவே புலப்பட்டது: வேறுபடுத்து - (இங்ஙனம் மெய்பொய்களைப்) பகுத்து உணர்ந்தபின்பு, உய்யும் - (ஆத்மா) உஜ்ஜீவிப்பதற்குஉரிய, மெய் ஆய உபாயம்-உண்மையான உபாயமும், வந்து உற்றது-(எனக்கு) வந்து சித்தித்தது; (எ - று.)

மெய் - பரப்ரஹ்மஸ்வரூபம், ஜீவாத்மஸ்வரூபம் முதலியன. பொய் - உடம்பு, செல்வம், யானெனதென்னுஞ்செருக்கு முதலியன. மெய்யாய - ஸ்வரூபாநுரூபமான, பயன் தவறாத; உபாயம் - சரணாகதி. மூன்றாம்அடியில், மெய் - உண்மைப்பொருளுணர்த்துந் திருவாய்மொழி. தனித்து ஆள் அன்பு என்று பதம்பிரித்து, தனியே ஆட்கொள்ளப்படுதற்கு ஏற்ற பக்தி யென்றலும் ஒன்று. மெய் மெய்யாதலும், பொய் பொய்யாதலும், வேறுபடுத்து உய்யும் மெய்யாய உபாயம் வந்துஉறுதலும், ஆழ்வாரருளிச்செயலின் அர்த்தஞானத்தால் இனிது வாய்க்கும். (31)

32. செய்யன்கரியனெனத்திருமாலைத்தெரிந்துணர
வய்யங்கரியல்லமாட்டாமறைமதுரக்குருகூ
ரய்யன்கவியல்லவேற்பிறவிக்கடலாழ்வதல்லா
லுய்யும்வகையொன்றும்யான்கண்டிலேனிவ்வுயிர்களுக்கே.

(இ - ள்.) திருமாலை - ஸ்ரீமந்நாராயணனை, செய்யன் கரியன் என தெரிந்து உணர - செந்நிறமுடையவன் அல்லது கருநிறமுடையவன் என்று ஆராய்ந்து அறிதற்கு, வய்யம் கரி அல்ல - உலகத்துஉயிர்கள் ஏற்ற சாக்ஷியாகா; மறை - வேதங்களும், மாட்டா - (அங்ஙனமே பகவானது சொரூபத்தை இன்னபடியென்று அறிதற்கு) வல்லனவல்ல; (ஆகவே), மதுரம் குருகூர் அய்யன் கவி அல்ல ஏல் - (அவனைத்தெரிந்து சொல்லுதற்கு) இனிமையான திருக்குருகூரிலவதரித்த ஆசாரியரான ஆழ்வாருடைய பாசுரங்கள் உள்ளனவல்லவானால், பிறவி கடல் ஆழ்வது அல்லால் - (உயிர்களெல்லாம்) பிறப்பாகிய கடலில் அழுந்துவதலலாமல், இ உயிர்களுக்கு உய்யும் வகை ஒன்றும் யான் கண்டிலேன் - இந்தஜீவாத்மாக்களுக்கு உய்வுபெறும் உபாயம்ஒன்றையும் யான் கண்டேனில்லை; (எ - று.)

பரப்ரஹ்மஸ்வரூபத்தை உள்ளபடி உணர்ந்து வெளியிட்டு அதனை யடையும் உபாயத்தையுங் கூறி உயிர்களைப் பிறவிக்கடலினின்று முத்திக்கரையேற்றுவது ஆழ்வாரருளிச்செயலேயல்லது யாதொன்று மில்லையென்பதாம். 'இத்தன்மைய னென்று' என்ற பொருளில் 'செய்யன்கரியனென' என்றது, ஒரு சொல்விழுக்காடு. அளவின்மையும், அச்சந்தருதலும், அலைமாறிமாறிவருதலும் பற்றி, பிறவி 'கடல்' எனப்பட்டது. செய்யன் கரியன் என்பதற்கு - வாய் கண் கை கால் என்கிற அவயவங்களிற் செந்நிறமுடையவன் திருமேனியிற் கருநிறமுடையவன் என்று உரைப்பாரு முளர். (32)

33. உயிர்த்தாரையிற்புக்குறுகுறும்பாமொருமூன்றனையுஞ்
செயிர்த்தார்குருகைவந்தார்திருவாய்மொழிசெப்பலுற்றான்
மயிர்த்தாரைகள்பொடிக்குங்கண்கணீர்மல்குமாமறையு
ளயிர்த்தாரயிர்த்தபொருள்வெளியாமெங்களந்தணர்க்கே.

(இ - ள்.) உயிர் தாரையில் புக்கு உறு - உயிர் செல்லுகிற வழியிலே உடன் சென்று கூடுகிற, குறும்பு ஆம் ஒரு மூன்றனையும் - முக்குறும்புகளையும், செயிர்த்தார் - வெறுத்தொழித்தவராகிய, குருகை வந்தார் - திருக்குருகூரிலவதரித்தவரான நம்மாழ்வாருடைய, திருவாய்மொழி - திருவாய்மொழிப் பிரபந்தமாகிய திவ்வியசூக்திகளை, செப்பல்உற்றால் - ஓதியுணரத்தொடங்கினால், —எங்கள் அந்தணர்க்கு - எங்களை ஆட்கொள்ளுதற்கு உரியவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு,—மயிர் தாரைகள் பொடிக்கும் - (உடம்பிலுள்ள) மயிரொழுங்குகள் சிலிர்ப்புக்கொள்ளும்; கண்கள் நீர் மல்கும் - கண்கள் ஆனந்தக்கண்ணீர் நிறைந்து பெருகப்பெறும்; மா மறையுள் அயிர்த்தார் அயிர்த்த பொருள் வெளி ஆம் - (பொருளுணர்தற்கு அரிய) பெருமையை யுடைய வேதங்

களின் கருத்துக்களிற் பிறசமயத்தார் சந்தேகித்த அர்த்தங்களெல்லாம் நன்கு விளங்கும்; (எ - று.)

முக்குறும்பு - உயர்குடிப்பிறந்தேனென்னுஞ் செருக்கு, கல்வியிற் சிறந்தேனென்னுஞ்செருக்கு, ஒழுக்கத்திற் சிறந்தேனென்னுஞ் செருக்கு என்பவை. இவை, தம்மையுடையார் அபிமானத்தால் தமது உயிரைப் பகவத் பாகவதர்கட்கு அடிமையென்று கொண்டு உயர்கதிபுகாது தமக்கே உரியதென்று கொண்டு இழிகதிகளிற் செல்லுதற்குக் காரண மென்பது தோன்ற, 'உயிர்த்தாரையிற் புக்குறு குறும்பாம் ஒருமூன்று' எனப்பட்டன. அவற்றை ஆழ்வார் வெறுத்திட்டமையை, அவரருளிச்செய்த பிரதமபிரபந்தமாகிய திருவிருத்தத்தின் முதற்பாசுரத்தில் "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும், இந்நின்றநீர்மை யினி யாமுறாமை" என்றது முதலியனகொண்டு உணர்க. மயிர்த்தாரைகள் பொடித்தல்-உரோமாஞ்சம். பொடித்தல் - புளகித்தல். இதுவும், கண்களில்நீர்மல்குதலும் - உவகையினாலாகிற மெய்ப்பாடு. கண்கள் நீர் மல்கும் - இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது; உபசாரவழக்கு. 'எங்கள் அந்தணர்' என்றது - ஸ்ரீமதுரகவிகள், நாதமுனிகள் போல்வாரை. (33)

34. அந்தணர்க்கோ நல்லருந்தவர்க்கோவன்றியோகியராய்
வந்தவர்க்கோமறவாதியர்க்கோமகரக்குழைசேர்
சுந்தரத்தோளனுக்கோவவன்றொண்டர்கட்கோசுடர்தோய்
சந்தனச்சோலைக்குருகைப்பிரான்வந்துசந்தித்ததே.

(இ - ள்.) அந்தணர்க்கோ - வேதியர்கட்காகவோ, நல் அருந்தவர்க்கோ - சிறந்த அருமையான தவத்தைச்செய்கிறவர்கட்காகவோ, அன்றி - அல்லது, யோகியர் ஆய் வந்தவர்க்கோ-யோகாப்பியாசஞ்செய்து வருகிறவர்கட்காகவோ, மறம் வாதியர்க்கோ - பிணக்கர்களாய்ப் பரசமயவாதஞ் செய்கிறவர்கட்காகவோ, மகரம் குழை சேர் சுந்தரம் தோளனுக்கோ-மகரகுண்டலங்கள் தாழ்ந்து தவழப்பெற்ற அழகிய திருத்தோள்களையுடைய ஸ்ரீமந்நாராயணனுக்காகவோ, அவன் தொண்டர்கட்கோ - அப்பெருமானுடைய அடியார்கட்காகவோ, சுடர் தோய் சந்தனம் சோலை குருகை பிரான் வந்து சந்தித்தது - (சந்திரசூரியர் முதலிய) விண்ணொளிகள் தன்மேற் படும்படி (அவற்றையளாவிமிகஉயர்ந்து) வளர்ந்துள்ள சந்தனமரச்சோலையையுடைய திருக்குருகூர்க்குத் தலைவரான நம்மாழ்வார் வந்து அவதரித்தது? (எ - று.)

அந்தணர் அருந்தவர் யோகியர் அவன்தொண்டர் என்பவர்கட்கு வேதத்தினுட்பொருளையும் உயர்ந்ததவத்தின்தன்மையையும் சிறந்தயோகத்தின் நிலைமையையும் அடிமைத்திறத்தையும் அருளிச்செய்து அவர்களை உய்வித்தலாலும், பரசமயவாதிகளை வென்று அடக்கித் தம்வசப்படுத்தி நல்வழிப் புகுத்துதலாலும், "கற்பகக் காவன நற்பலதோளற்கு" என்றபடி தோளழகையுடைய திருமாலுக்கு அடிமைபூண்டு அவனது மகிமைகளை வெளியிட்டுப் பாசுரம்

பாடி அவனது திருவுள்ளத்தை உவப்பித்தலாலும், ஆழ்வாரது திருவவதாரம் அந்தணர் முதலிய அனைவர்க்கும் தனித்தனி ப்ரயோஜநகரமாம் என்ற பொருளை, இங்ஙனம் விகற்பித்துக் கூறும் வாய்பாட்டினாற் பெறவைத்தார். மகரக்குழை - சுறாமீன் வடிவு தோன்றத் தொழில்செய்யப்பட்ட குண்டலம்; "சுறாநிறக் கொடுங்குழை" என்றார் சிந்தாமணியாரும். 'சுடர்தோய் சந்தனச் சோலை' என்றது - **தொடர்புயர்வுநவிற்சியணி**; சோலையின் மிக்க உயர்ச்சியை விளக்கும். (34)

35. ***சந்தியுஞ்சந்திப்பதமுமவைதம்மிலேதழைக்கும்***
பந்தியும்பல்லலங்காரப்பொருளும்பயிலுகிற்பீர்
வந்தியும்வந்திப்பவரைவணங்கும்வகையறிவீர்
சிந்தியுந்தென்குருகூர்தொழுதாட்செய்யுந்தேவரையே.

(இ - ள்.) சந்தியும் - எழுத்துப்புணர்ச்சியிலக்கணத்திலும், சந்தி பதமும் - அங்ஙனம்புணர்தற்குஉரியபதங்களி னிலக்கணத்திலும், அவைதம்மிலே தழைக்கும் பந்தியும் - அச்சொற்களிலே மிக்குவிளங்குகிற பொருளிலக்கண வகைகளிலும், பல் அலங்காரம் பொருளும் - பலவகை அணியிலக்கணவிஷயங்களிலும், பயிலுகிற்பீர் - பழகுகிற இலக்கணப்புலவர்காள்! தென் குருகூர் தொழுது ஆள் செய்யும் தேவரை - (ஆழ்வாருடைய திருவவதார ஸ்தலமான) அழகிய திருக்குருகூரைச் சேவித்து (ஆழ்வார்பக்கல்) அடிமைசெய்கிற பூதேவர்களாகிய அந்தணர்களை, வந்தியும்-நமஸ்கரியுங்கள்; வந்திப்பவரை வணங்கும் வகை அறிவீர் - (அந்த ஆழ்வாரடியார்களை) வணங்குகிற ஸ்ரீவைஷ்ணவர்களை வணங்கும் விதத்தை அறிவீர்கள்; சிந்தியும் - (அவர்களைத்) தியானமுஞ் செய்யுங்கள்; (எ - று.)

"கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக" என்றபடி கல்விக்குத்தக்க ஒழுக்கம் இல்லாதவழிக் கல்வி பயனிலதாதலாலும், சப்தசாஸ்திரம் முதலியன வேதாந்தசாஸ்திரத்திற்கு அங்கமாக உபயோகித்தற்கு உரியனவேயன்றித் தனியே தாம் வீடுபேறளிக்குந்தரமுடையன வல்ல வாதலாலும், அந்தந்தநூற் பயிற்சியுடையாரை விளித்து 'நீங்கள் ஆழ்வாரடியார்களை வணங்கியும் அவரடியார்களை வணங்கியும் உய்வீர்கள்' என்று உணர்த்தியபடியாம். 'சந்தி' என்றது-மற்றைஎழுத்திலக்கணங்கட்கும் உபலக்ஷணம். பல் அலங்காரம் - சொல்லணி பொருளணிகள். எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணி என்னும் ஐவகையிலக்கணத்தில் நான்கைக் கூறியதில், அந்நான்கினுலுமாகிற செய்யுளின்இலக்கணம் தானே அடங்கும். சந்திஎன்றதில், சொற்களின் சேர்க்கையென யாப்பையும் அடக்குதலும் ஒன்று. 'பல் அலங்காரப்பொருள்' என்பதில் பொருளிலக்கணம் அணியிலக்கணம் என்ற இரண்டையும் அடக்கி, 'அவைதம்மிலே தழைக்கும் பந்தி' என்பதில் சந்தியும் சந்திப்பதமும் என்றவற்றாலமைகிற யாப்பிலக்கணவகைகளை யமைப்பாருமுளர். (35)

[பாங்கி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடுநிற்றல்.]

36. தேவரையேறியமூதறிவாட்டியையச்சீரழித்தீர்
பூவரையேறியகோதையுள்ளம்புகுந்தாரெவரென்
றேவரையேறிமொழிகின்றபோதியம்பிற்றிறைவர்
மூவரையோகுருகூரரையோசொல்லுமுந்துறவே.

(இ - ள்.) தேவரை ஏறிய மூதறிவாட்டியை சீர் அழித்தீர் - தெய்வஆவேசங்கொண்ட முதிர்ந்த அறிவுடையளான கட்டுவிச்சியைச் சீர்கெடுத்துவிட்டீர்கள், (நீங்கள்); பூ வரை ஏறிய கோதை உள்ளம் புகுந்தார் எவர் என்றே வரை ஏறி மொழிகின்ற போது - மலர்கள் அளவாகச் சூட்டப்பெற்றுள்ள கூந்தலையுடைய இவ்விள மங்கையினது மனத்திற் புக்கு இவளைவருத்துபவர் யார் என்று நீங்கள் வினவியதைக்குறித்து (அக்கட்டுவிச்சி) நமதுஉறையுளின் எல்லையில் ஏறிவந்து விடைகூறுகிறபொழுது, இயம்பிற்று - சொன்னது, இறைவர் மூவரையோ - திரிமூர்த்திகளையோ? (அன்றி), குருகூரரையோ - திருக்குருகூர்நம்பியையோ? முந்துற சொல்லும் - என்முன்னே சொல்லுங்கள்; (எ - று.)

கட்டுவிச்சி சொன்னது இறைவர்மூவரையன்று குருகூரரையே யென்பது, இவள்கொண்டுகூறுஞ் சித்தாந்தம். களவொழுக்கத்தால் தலைமகளைக்கூடிய தலைமகன் பின்பு அவளை வெளிப்படையாக மணஞ்செய்துகொள்ளும் பொருட்டுப் பொருள்தேடிவருதற்காக அவளைப்பிரிந்துசென்று வரவுகுறித்தகாலத்தில் வாராது சிறிது நீட்டிக்க, அந்நிலையிற் பிரிவாற்றாது மிகவருந்திய தலைமகளைச்செவிலித்தாய்மார் எதிர்ப்பட்டு அவளதுவடிவுவேறுபாட்டை நோக்கி 'இவள் இங்ஙனம் மெலிதற்குக் காரணம் என்னோ?' என்று கவலைப்பட்டுக் கட்டுவிச்சியைக் குறிகேட்க, அவளும் வீடேறிவந்து தன் மரபின்படி ஆராய்ந்து இவள்பக்கல் ஆவேசித்தவர் குருகூர்நம்பியொழியத் திரிமூர்த்திகளுமல்லரென்று சிலகூற, அதுகேட்டசெவிலித்தாயர், அக்கட்டுவிச்சிவார்த்தையில்வந்த 'குருகூர்நம்பி' என்ற பெயர்க்கும், அதற்கு அடைமொழியாகவும் அதன்பரியாயநாமங்களாகவும் வந்த விசாகன் சேய் ஆறுமுகன் வேள் இளையான் அழகியான் கடவுண்மைந்தன் ஆசான் கலையுணர்புலவன் குழகன் நங்கைநந்தனன் சுவாமி மேலவர்க்கிறைவன் என்பன போன்ற சொற்களுக்கும் முருகக்கடவுளென்று பொருள் செய்துகொண்டு, அதற்கு ஏற்ப, வேலனெனப்படுகிற வெறியாட்டாளனை யழைப்பித்து அவனைக்கொண்டு, முருகக்கடவுளினாவேசத்திற்குப் பரிகாரமாக வெறியாடுவிக்க முயல, அதனையறிந்த தலைமகள் தனக்குத் தலைமகனால் நேர்ந்த நோயை இயைபில்லாத பிறர் தீர்க்கத் தொடங்குதல்குறித்து மிகவருந்தித் தோழியை வேண்ட, அவளது துன்பத்தின் மெய்க்காரணத்தை யறிந்த தோழி அச்சமயத்திற் செவிலியரைநோக்கிச் சிலகூறி வெறிவிலக்கித் தலைவியினது துன்பத்தின் உண்மைக்காரணத்தை யுணர்த்துகிற துறை, இது. இதன்மெய்ப்பாடு - பெருமிதத்தைச்சார்ந்த நகை; பயன் - அறத்தொடுநிற்றல். கட்டுவிச்சிகூறிய சொற்களின் உண்மைப்பொருளை யுணராது அவற்றிற்கெல்லாம் பிறிது பொருள்கொண்டு அதற்கு

ஏற்பமுயலுதல், அக்கட்டுவிச்சி இவளதுநோயின் காரணத்தை உள்ளபடிஉணர்ந்திலளென்று பிறர்கருதுதற்கு இடமாகி அவளது அறிவின்பெருமையைக் கெடுத்ததாக முடிதலால், 'சேரறிந்தீர்' என்றாள். அவள் அங்ஙனங் கவர்பொருள்படக் கூறினளென்று கொண்டது, அகத்தமிழிலக்கணத்திற்கு ஏற்பவென்று உணர்க. தேவரையேறிய = தேவரேறிய; ஐ - அசை. தெய்வமுன்னிலையாகக் கொண்டு குறிபார்த்து அத்தெய்வத்தின் வெளிப்பாட்டால் உண்மையையுணர்ந்து உரைக்குந் தகுதியுடையா ளாதலால், 'மூதறிவாட்டி' என்று சிறப்பித்துக் கூறப்பட்டாள்.

மூதறிவு - பேரறிவு. முதுமையை அறிவாட்டிக்கு அடைமொழியாக்கினால், பிராயம்முதிர்தலென்று பொருளாம். பூவரையேறிய கோதை - பூக்களுக்கு எல்லையான கூந்த லெனினுமாம்; ("பூவரம்பாயகோதைப் பொன்னனார்" என்ற சிந்தாமணியைக் காண்க.) அர் - பகுதிப்பொருள்விகுதியென்றும், ஐ - அசையென்றுங் கொண்டு, பூவரையேறியகோதை-பூவேறியகோதையெனினும்அமையும்; (சிந்தாமணியில் "பூவர்சோலை"என்றவிடத்து நச்சினார்க்கினியர், 'பூவர், அர் - பகுதிப்பொருள் விகுதி' என்றமை காண்க.) கோதை - பெண்ணுக்குச் சினையாகுபெயர். 'வரையேறி' என்றதை, சிறியதிருமடலில் "கட்டுவிச்சி கட்டேறி" என்றார் போலக் கொள்ளலாம். இறைவர் - தலைவர். 'இறைவர்மூவர்' என்றது, தொகைக்குறிப்பு.

நம்மாழ்வாரது சாந்நித்தியத்தைப் பெறுமல் வருந்துகிற கம்பநாடரது துயரத்தைக்கண்ட ஞானிகள், அவர்பக்கலுள்ள பரிவாலுண்டான கலக்கத்தால், அதன்காரணத்தை உணர்ந்தவருணர்த்தவுமுணராமல் மயங்கி இதர தேவதாவேசமென்று எண்ணித் தேவதாந்தரபஜநத்தாலாவது, இவரது ஆற்றாமையைத் தணிப்பிக்கலாமோ வென்று தொடங்கிய நிலையில், அக்கம்பநாடரது தன்மையை யுணர்ந்த அன்பர்கள் அம்முயற்சியை விலக்கி உண்மைக் காரணத்தை யுணர்த்தும் வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருளாம். 'தேவரையேறிய மூதறிவாட்டி'-தெய்வவுணர்வுடைய பெரியோர். 'பூவரையேறியகோதை' - ஆழ்வாரது திருவடித்தாமரை மலரை முடிக்குஅணியாகச் சூடுபவர். 'உள்ளம் புகுந்தார்' - அவரது மனத்தில் என்றும் நீங்காது குடிகொண்டுள்ளவர். 'இயம்பிற்று இறைவர் மூவரையோ குருகூரரையோ' - "தேவுமற்றறியேன் குருகூர்நம்பி, பாவினின்னிசைபாடித்திரிவனே" என்ற மதுரகவியாழ்வார்போலக் கம்பநாட்டாழ்வாரும் வேறொரு தெய்வத்தினிடத்தில் பற்றுவைத்திடாமல் நம்மாழ்வார் பக்கலிலேயே பூரணபக்திகொண்டவ ரென்க; வேதவிதிப்படி ஆசாரியனையே தெய்வமாகக்கொண்டவ ரென்றபடி. பிறவும் கேட்டு உணர்க; விரிப்பிற் பெருகும்.

இனி, இச்செய்யுட்கு வேறுதுறையமைத்துப் பொருள்கூறுவராயினும், பொருந்துமாயிற் கொள்க. (36)

37. துறவாதவர்க்குந்துறந்தவர்க்குஞ்சொல்லவேசுரக்கு
மறவாவவையிங்கோராயிரநிற்கவந்தோசிலர்போய்
மறவாதியர்சொன்னவாசகமாமலட்டாவைப்பற்றி
கறவாக்கிடப்பரங்கென்பெறவோதங்கள்கைவலிப்பே.

(இ - ள்.) துறவாதவர்க்கும் - இல்லறத்தார்க்கும், துறந்தவர்க்கும் - துறவறத்தார்க்கும், சொல்லவே சுரக்கும் - ஓதுமளவிலேயே (அறம்பொருளின்பம்வீடென்னும் நால்வகைப்பால்களையும்) மேன்மேற்சுரந்து தருகிற, அறம் ஆ அவை ஓர் ஆயிரம் - பரமதர்மரூபமான ஓராயிரம்பசுக்கள் [ஸ்ரீவைஷ்ணவ சிகாமணியான நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்கள்], இங்கு நிற்க - இவ்வுலகத்திலே சிறப்புற்றுநிற்க,— அந்தோ - ஐயோ! சிலர்—,போய் - (இவற்றைவிட்டுச்) சென்று, மறம் வாதியர் சொன்ன வாசகம் ஆம் மலடு ஆவை பற்றி - மாறுபாடுடைய வாதங்களைச் செய்பவர் சொன்ன வாசகமாகிய மலட்டுப் பசுவைப் பயன்தருவதாகக் கொண்டு, கறவா கிடப்பர் - கறந்து கொள்ள முயல்வர்: அங்கு- அந்தமலட்டுப்பசுவினிடத்து, தங்கள் கை வலிப்பு - அவர்கள் கை நோகப்பெறுவது, என் பெறவோ - யாதுபயனை யடையவோ? [அதில் ஒன்றும் பெறப்படுவதில்லையென்றபடி]; (எ - று.)

துறந்தவர் - புறமாகிய செல்வத்தினிடத்தும் அகமாகிய உடம்பினிடத்தும் உள்ள பற்றை, அவற்றின் நிலையாமையை நோக்கி விட்டவர்; இதன் எதிர்மொழி, துறவாதவர். 'அவை' என்பதை, பகுதிப்பொருள்விகுதி யென்றாவது, முதல்வேற்றுமைச் சொல்லுரு பென்றாவது, அசையென்றாவது கொள்க. அந்தோ - இரக்கக்குறிப்பிடைச்சொல்; இதனைச் சிங்களநாட்டில் வழங்குந் திசைச்சொல்லென்பர்: 'ஹந்த' என்ற வடசொல்லின் சிதைவு என்னலாம். 'மறவாதியர் சொன்னவாசகம்' என்பதற்கு - "தர்க்கச் சமணரும் சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன், சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையு, நிற்கக் குறும்புசெய் நீசரும்" முதலாகத் தாமசபுத்தியால் விபரீதார்த்தங்களைக்கற்பித்து வாதிக்கிற பரசமயத்தார்கள் சொன்ன வாக்கியங்களென்று பொதுப்பட உரை. வலிப்பு - கடுப்பு. இங்கே, கறத்தல் - உறுதிப் பொருள்களாகிய சுவைப் பயனைப்பெறமுயலுதல். கைவலிப்பு - வீண் சிரமம் என்றபடி. சிலர் என்பெறவோ மலட்டாவைப் பற்றிக்கறவாக்கிடப்பர்: அங்கு (அவர்கட்குத்) தங்கள்கைவலிப்பே (சித்திப்பது) என்று இயைத்தும் உரைக்கலாம்.

[இப்பொழுதைக்கு 90 - வருஷத்துக்குமுன்பு இச்சடகோபரந்தாதிக்குத் திரிசிரபுரம் மகாவித்வான் கோவிந்தபிள்ளையவர்கள் செய்த உரையில், இச்செய்யுளின்கீழ், 'ஆழ்வார்திருவாய்மொழி இருக்க, வேறொன்றையும்பற்றலாயிருக்கின்றதே: இது என்ன பேதைமை என்கிறது!', 'அந்தவாசகமாகிய பசு, சிஷ்யனாகிய கன்றைப் பெறுமையால், 'மலட்டுப்பசு'என்றது. "திருவாய்மொழி கற்ற, நாதமுனி உய்யக்கொண்டார் இராமர் நல் ஆளவந்தார், ஏதமில்வண்மைப்பராங்குசதாசர் எதித்தலைவர்" என்பதுபோல்,

அவ்வாசகத்துக்குக் குருபரம்பரை இல்லாமையைக்கொண்டு, 'மலட்டுப்பசு' என்றார்; ஆனால், 'மாணிக்கவாசகன் சொற்படி அம்பலவாணன் கையெழுத்து' என்கிற பிரசித்தம் உண்டே யென்றால், அந்த அம்பலவாணன நாதமுனிகளைப்போலப் பிறருக்கு உபதேசிக்கவில்லையென்று கருத்து. எழுதின மதுரகவிகள் சொன்ன 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' போல ஒருவரும் ஆசாரிய நிஷ்டைகூடி ஒன்றுஞ் சொல்லாமையாலும், மலட்டுப்பசுவென்னக் குறையில்லை' என்ற வாக்கியங்கள் காணப்படுகின்றன.] (37)

[மடலூரத்துணிந்த தலைமகளின் வழியொழுகித் தோழி இரங்கல்.]

38. ***கைதலைப்பெய்தரும்பூசலிட்டுக்கவியாலுலகை***
யுய்தலைச்செய்ததும்பொய்யென்றுமோசென்றவ்வூரறிய
வைதலைத்தேசுதுமோகுருகூரென்னுமாறறியாப்
பைதலைக்கோகுகட்டிட்டேட்டிலேற்றியபண்பனையே.

(இ - ள்.) குருகூர் என்னும் ஆறு அறியா - '(தலைமகனதுஊர்) குருகூர்' என்று வாயினாற்சொல்லும் விதத்தையும் அறியாதிருந்த, பைதலை - இளமையுடைய இம்மகளை, கோகு உகட்டிட்டு ஏட்டில் ஏற்றிய - முறைகேடு தலைக்கேறிப் பனைமடற்குதிரையின்மே லேறுமாறுசெய்த, பண்பனை - குணத்தையுடையவனை தலைமகனை, சென்று - (அவனதுஊர்க்கு யாம்) சென்று, கை தலை பெய்து - கைகளைத் தலைமேல்வைத்துக்கொண்டு, அரும்பூசல் இட்டு - (பொறுத்தற்கு) அரிய பேராரவாரத்தைச்செய்து, கவியால் உலகை உய்தலை செய்ததும் பொய் என்றுமோ - (அக்குருகூர்நம்பி) தான் பாடியபாடல்களைக்கொண்டு உலகத்துஉயிர்களைத் துன்பந்தீர்ந்து வாழுமாறு செய்தனனென்பதையும் பொய்யென்றுசொல்லி முறை யிடுவோமோ? அ ஊர் அறிய வைது அலைத்து ஏசுதுமோ-அவ்வூரி லுள்ளாரனைவரும் அறியும்படி நிந்தித்துக்கலக்கம்விளைத்துப் பழிப்போமோ? (எ - று.)

தலைமகனும் தலைமகளும் கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தமது விருப்பத்தின்படி களவுப்புணர்ச்சி புணர்ந்து, பிரிந்த பின்பு அவ்வாற்றாமை விஞ்சி அதனால் நாணம்முதலியன அழிந்து, இவர்களுள் ஒருவர் மற்றொருவரது வடிவத்தையும் ஊரையும் பெயரையும், தமது ஊரையும் பெயரையும் ஒருபடத்திலெழுதி அச்சித்திர படத்தைக் கையிற்கொண்டு பனைமடலினால் ஒருகுதிரையுருச்செய்வித்து அதன்மேல் தாம் ஏறி அதனைப் பிறராலிழுப்பித்து வீதி வழியே பலருங்கூடும் பொதுவிடங்களிலெல்லாஞ் செல்லுத லுண்டு; இது-மடலூர்தலெனவும், மடன்மாவேறுத லெனவும் படும். இதற்குப் பயன் - இவரது இக்கடுந்தொழிலைக்கண்டு அதனாற் பெருவேட்கையையுணர்ந்து உறவினராயினும் அரசராயினும் கூட்டுவிக்கக் கூடுதலாம். 'இம்மடற்றிறம்' ஆடவர்க்கே பெரும்பாலும் உரியது; அளவுக்குவிஞ்சின ஆசையின்மிகுதியால் மகளிர்க்கும்சிறுபான்மை வரும். அன்றியும், மடலூர்தல் ஆடவர்க்கே உரியதென்றும், மடலூர்வேனென்று சொல்லுதல்

இரு பாலார்க்கும் உரியதென்றும் உணர்க. இங்குக் கூறிய இது, தலைவியின் மடற்றிறம். மடலேறத்துணிந்த தலைமகளின் வருத்தங் கண்ட தோழி, அவளை வழியொழுகி ஆற்றுவிக்க வேண்டுஞ் சமயமாதலால், தானும் அவளோடு வருத்தமுற்றுக் கூறிய வார்த்தை, இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட விஷயம்.

கைதலைப்பெய்தல்,முறைப்பாட்டுக்கு உரியது; "இறையோடுயிருகையு மெடுத் தெண்ணுற முறையோ முறையோ வென" என்றூர்பிறரும்.பூசல்-பேரொலி. 'கவியால் உலகை உய்தலைச் செய்தது' என்பதற்கு-(முன்புஇராமாவதாரத்தில்) வாநரங்களினுதவியைக் கொண்டு (துஷ்டநிக்கிரகஞ்செய்து) உலகத்தை உய்வித்தமையென்றும் பொருள் கொள்ளலாம்; ஆழ்வார் திருமாலின் அம்சமுடையவ ராதலால். ஊர் - இடவாகுபெயர். பைதல் - இளமைப்பெயராதலே "சிறுகிளிப்பைதலே" என்ற திருவாய்மொழியிலுங் காண்க. கோகு உகட்டுதல் என்பது - "கும்பிடுநட்டமிட்டாடிக் கோகுகட்டுண்டுழலாதார்" எனத் திருவாய்மொழியிலும் இப்பொருளில் வந்துள்ளது; கோகு - அடைவுகேடு: உகட்டுதல்-தலைமண்டையிடுதல், மேலிடுதல். 'ஏடு' என்றது - இலக்கணையாய், பனைமடலினுலாகிய குதிரையைக் குறித்தது. பண்பிலாதானைப் பண்பனென்றது, இகழ்ச்சிக்குறிப்பாகிய எதிர்மறையிலக்கணையுமாம்.

ஆழ்வாரதுஸாந்நித்தியத்தை எவ்வாற்றாலாயினும் பெறுதற்குவிரைந்து முயல்கிற கம்பநாடர்பக்கல் பரிவுகொண்ட அன்பர்கள் இப்படி பரம பக்தி தலையெடுத்த அடியவர்க்கு ஆழ்வார் உடனே ஸாந்நித்தியந் தந்தருளாது காலநீட்டித்தலைக் குறித்துக் குறைகூறும்வகையாற் கம்பநாடரை ஆற்றுதல், இதற்கு உள்ளுறைபொருளாம்; விவரம் உய்த்துணர்க. கம்பநாடர்க்கு முதலிலே பக்தியையுண்டாக்கி அதனை அபிவிருத்தியாம்படி செய்து அவரைப் பிரபந்தம்பாடும்படி செய்வித்தது ஆழ்வாரது திருவருளே யென்பது, 'குருகூரென்னுமாறறியாப் பைதலைக் கோகுகட்டிட்டேட்டிலேற்றிய பண்பன்' என்றதனுற்போதரும். கைதலைப்பெய்தல் - தலைமேற்கைவைத்து வணங்குதலுமாம். (38)

39. பண்ணுந்தமிழுந்தவஞ்செய்தனபழநான்மறையு
மண்ணும்விசும்புந்தவஞ்செய்தனமகிழ்மாறன்செய்யு
ளெண்ணுந்தகைமைக்குரியமெய்யோகியர்ஞானமென்னுங்
கண்ணும்மனமுஞ்செவியுந்தவஞ்செய்தகாலத்திலே.

(இ - ள்.) மகிழ் - மகிழமலர்மாலையையுடைய, மாறன் - நம்மாழ்வார் அருளிச்செய்த, செய்யுள் - பாசுரங்களை, எண்ணும் - சிந்தனை செய்வதாகிய, தகைமைக்கு - பெருமைக்கு, உரிய - ஏற்ற, மெய் யோகியர் - உண்மையான ஞானபக்தியோகங்களையுடையவர்களுடைய, ஞானம் என்னும் கண்ணும் - அறிவாகிய அகக்கண்ணும், மனமும்—, செவியும் - காதுகளும், தவம்செய்த காலத்திலே—,—பண்ணும் - (குறிஞ்சிமுதலிய) பண்களும், தமிழும் - தமிழ்ப்பாஷையும், தவம் செய்தன—; பழ நால் மறையும்-பழமை

யான நான்கு வேதங்களும், மண்ணும் - பூலோகமும், விசும்பும் - மேலுலகமும், தவம் செய்தன —; (எ - று.)

ஆழ்வார் அவதரித்துத் திருவாய்மொழி முதலியன பாடிய தற்குக் காரணம், பண்முதலியன செய்த தவமென்பதாம். வடமொழிமுதலிய மற்றைப் பாஷைகளிலன்றித் தமிழிலே பண் வகைகளமைய ஆழ்வார் பாசுரம்பாடப்பெற்றமை அப்பண்ணும் தமிழும்மிக்கசிறப்புப்பெறுதற்குக் காரணமாதலால், 'அவை தவஞ் செய்தன' என்றன ரென்க. தொன்று தொட்டு உள்ள நான்கு வேதங்களும் வடமொழியிலே உணர்தற்கு அரிய மறைபொருளனவாயிருந்து எளிதிற்பயன்படாமற் போதலாகிய குறைதீர அறிதற்கு எளிய தென்மொழியில் ஆழ்வாரால் அருளிச்செய்யப் பெற்று அனைவர்க்கும் பயன்படும்படியாயினமை கருதி, "பழநான் மறை தவஞ்செய்தன" என்றார். நிலவுலகத்தார் அந்தத்தமிழ் வேதங்களை ஓதியுணர்ந்தும் ஆழ்வாரை வழிபட்டும் இம்மை மறுமைவீட்டின்பங்களில் வேண்டியவேண்டியவற்றைப் பெறுதல், 'மண் தவஞ்செய்தது' என்றதற்குக் காரணம். ஆழ்வார் எம்பெருமான்பக்கல்கொண்ட பரமபக்தியால் அர்ச்சிராதிமார்க்கமாகப் பரமபதத்துக்கு எழுந்தருளும்போது இடையிலுள்ள உலகங்களி லிருக்கிற தேவரிஷிகணங்களெல்லாம் அவரை எதிர்கொண்டு 'போதுமின் எமது இடம் புகுதுக" என்று சொல்லி வரவேற்று வணங்கித் துதித்து வழிபட்டு வழிவிட்டுப் பேறு பெற்றவரானதனால், 'விசும்பு தவஞ்செய்தது' எனப்பட்டது, மண், விசும்பு - மண்ணுலகத்தார்க்கும், விண்ணுலகத்தார்க்கும் இடவாகுபெயர். ஆழ்வார் அவதரிக்கும்படி மண்ணுலகமும், அவர் தன்வழியாக மேற்செல்லும்படி விண்ணுலகமும் தவஞ்செய்தன வென்றுங் கொள்ளலாம். 'விசும்பு' என்றது, எல்லாவுலகங்களிலும் மேம்பட்டு மேலிடத்திலுள்ளதான பரமபதத்தையுங் குறிக்கும்; ஞானங்களிந்துநலங்கொண்ட ஆழ்வார் திருநாடலங்கரித்தனரென்னும்படி தன்பக்கல் எழுந்தருளப்பெற்றமை அந்த ஸ்ரீவைகுண்டத்திற்கும் தவப்பயனென்க.

மகிழ் என்ற மரத்தின்பெயர், அதன்மலர்களினாலாகிய மாலைக்கு இருமடியாகுபெயராம். மகிழ்மாறன்-(திரிகரணத்தாலும் எப்பொழுதும் பகவானை அநுபவித்தலினால்) மகிழ்ச்சிகொண்டுள்ள மாறனெனினுமாம். 'மாறன்செய்யுளெண்ணுந்தகைமைக்கு உரிய மெய்யோகியர்' என்றது, 'குருகூர் நம்பி, பாவினின்னிசை பாடித்திரிவனே" என்று ஆழ்வா ரருளிச்செயலை வேண்டிப்பெற்று அதில் ஈடுபட்ட ஸ்ரீமதுரகவிகள் ஸ்ரீமந்நாதமுனிகள் முதலானவர்களை. அவர்கள் ஆழ்வார்பக்கல் தம்உணர்வைச்செலுத்தி மனத்தையொடுக்கி அவரைவழிபட்டு அவர்வாயினால் திவ்வியபிரபந்தங்களருளிச் செய்யக்கேட்டுக் கிருதார்த்தரானதனால், 'யோகியர்ஞானமென்னுங் கண்ணும் மனமும் செவியும் தவஞ்செய்தகாலத்திலே' என்றார். 'மாறன்செய்யும்' என்றவிடத்துத் தொக்குநின்ற ஆறும் வேற்றுமையுருபு, செய்யுட்கிழமைப்பொருளது: "கபிலரகவல்" என்றவிடத்துப் போல. (39)

40. காலத்திலேகுருகூர்புக்குக்கைக்கொண்மினேகடைநா
ளாலத்திலேதுயின்றோர்கொண்டவையிரண்டாயமைந்த
கோலத்திலேமுளைத்துக்கொழுந்தோடிக்குணங்கடந்த
மூலத்திலேசெல்லமூட்டியஞானத்தெம்மூர்த்தியையே.

(இ - ள்.) கடை நாள் - கற்பாந்தகாலத்திலே, ஆலத்திலே துயின்றோர் - ஆலிலையிலே யோகநித்திரை செய்தருள்பவரான எம்பெருமான், கொண்ட - (கருமவசத்தினாலன்றி இச்சையினால்) எடுத்துக்கொள்கிற, ஐ இரண்டு ஆய் அமைந்த கோலத்திலே - பத்துத்திருவவதாரங்களிலே, முளைத்து - அடிக்கொண்டு, கொழுந்துஓடி - கொழுந்துவிட்டு வளர்ந்து, குணம் கடந்த மூலத்திலே செல்ல மூட்டிய - இழிகுணங்களைக்கடந்த ஆதிமூலப்பொருளாகிய அந்தஸ்ரீமந்நாராயணன்பக்கலிலே (பலரும்) செல்லுமாறு (தமதுபிரபந்தமுகமாகப் பலர்க்கும்) ஆதரத்தை யுண்டாக்கியருளிய, ஞானத்து - தத்துவஞானத்தையுடைய, எம் மூர்த்தியை - எமது ஆசாரியமூர்த்தியான நம்மாழ்வாரை, காலத்திலே குருகூர் புக்கு கைக்கொண்மினே - (பழுதேபலபகலும் போக்காது) இப்பொழுதேதிருக்குருகூர்க்குச்சென்றுசரண்புக்கு உய்யுங்கள்;

'ஆழ்வாரவதரித்தருளின காலம் முந்திப்போயிற்றே, இக்காலத்து என்செய்யலாம்?' என்பாரை, நாதமுனிகள்போல ஆழ்வார்திருநகரியிலேறச்சென்று ஆழ்வாரது அர்ச்சாவிக்கிரகத்தைப் பற்றி வழிபட்டு உய்வுபெறுங்கள் என்று உபதேசிக்கிறார். "சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச்சேவித்து" என்றாற்போல, 'காலத்திலேபுக்குக் கைக்கொண்மின்' என்றார். ஆல் என்ற மரத்தின்பெயர், முதலாகுபெயராய், அதன் இலையைக் குறித்தது.

ஆலத்திலேதுயின்றகதை:— பிரமன்முதலான சகலதேவர்களுமுட்பட யாவும்அழிந்துபோகின்ற கற்பாந்தகாலத்திலே ஸ்ரீமகாவிஷ்ணு அண்டங்களையெல்லாம் தன்வயிற்றில்வைத்து அடக்கிக்கொண்டு ஏகார்ணவமான மகாபிரளயசமுத்திரத்திற் சிறுகுழந்தைவடிவமாய் ஆதிசேஷாம்சமான ஆலிலையின்மீது பள்ளிகொண்டு யோகநித்திரைசெய்கின்றனனென்பதாம்.

அப்பெருமான் துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனத்தின்பொருட்டுக் கற்பந்தோறும் உரியசமயங்களிற் கொள்ளுகிற மத்ஸ்யம் கூர்மம் வராகம் நரசிங்கம் வாமனன் பரசுராமன் தசரதராமன் பலராமன் கிருஷ்ணன் கல்கி என்ற தசாவதாரங்களின் ஸாரம் ஆழ்வார் என்பது, தேர்ந்தபொருள். ஐயிரண்டு-பண்புத்தொகை. மூட்டியஞானத்து - ஞானத்தைமூட்டிய எனினுமாம். எம்ஞானமூர்த்தி என்றுங் கொள்ளலாம். ஞானமாவது-முத்தியுணர்வு.(40)

41. மூர்த்தத்தினையிம்முழுவேழுலகுமுழுகுகின்ற
தீர்த்தத்தினைச்செய்யவேதத்தினைத்திருமால்பெருமை
பார்த்தற்கருளியபாரதத்தைப்பணித்தானுநின்ற
வார்த்தைக்குருகைப்பிரானுங்கண்டானம்மறைப்பொருளே.

(இ - ள்.) மூர்த்தத்தினை - ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தையும், இமுமூ ஏழ் உலகும் முழுகுகின்ற தீர்த்தத்தினை - ஏழுவகைப் பட்ட இந்தஉலகங்களெல்லாம் அடங்குமிடமும் ஸ்வயம்பரிசுத்த முமான பரப்ரஹ்மத்தினதுதன்மையையும், செய்ய வேதத்தினை - செவ்வியையுடைய வேதங்களையும், திருமால் பெருமை பார்த்தற்கு அருளிய பாரதத்தை-ஸ்ரீமந்நாராயணனுகிய ஸ்ரீகிருஷ்ணன் சிறந்த உண்மைப்பொருளை (அருச்சுனனுக்கு) உபதேசிக்கப்பெற்ற [ஸ்ரீபகவத்கீதை தன்னில் அடங்கப்பெற்ற] மகாபாரதத்தையும், பணித்தானும் - சொல்லியருளியவனை ஸ்ரீவேதவியாசபகவானும், நின்ற வார்த்தை குருகை பிரானும் - நிலைபெற்ற திருவாய்மொழி யாகிய திவ்விய சூக்தியையுடைய நம்மாழ்வாரும், (ஆகிய இரு வருமே), அ மறை பொருள் கண்டான் - அப்படிப்பட்ட [உணர் தற்குஅரிய] இரகசியமான வேதங்களின் சாரார்த்தங்களை அறிந்தவர்கள்; (எ - று.)

இவ்விருவருமே உள்ளபடியுணர்வாரில் தலைவராயினு ரென்ற படி. "நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும், வித்தகர்க் கல்லா லரிது" என்றவிடத்தில் 'அரிது' என்பதனைத் தனித்தனி கூட்டியுரைத்தல்போல, இங்கு 'கண்டான்' என்பதையும் 'பணித் தானுங் கண்டான், குருகைப்பிரானுங் கண்டான்' என்று தனித் தனி கூட்டி முடிக்க. 'கண்டார்' என்று பன்மையான பாடம் ஓது வாரு முளர். வியாசமாமுனிவர் ஜீவாத்மபரமாத்ம ஸ்வரூபங்களை வரையறுத்து உணர்த்துகிற வேதாந்த சூத்திரங்களைச் செய்து வெளியிட்டதும், வேதங்களை நான்காகவகுத்து ஓதுவித்ததும், பஞ்சமவேதமான மகாபாரதத்தைச் செய்து உபதேசித்ததும் பற்றி, 'மூர்த்தத்தினை......பணித்தான்' என்றார். முழுவேழுலகு - ஈரேழுலகமாகிய பிரபஞ்சம். பார்த்தன் - வடமொழித் தத்தி தாந்தநாமம்; பிருதையின்மகன்: பிருதை-குந்தி. நின்ற வார்த்தை- நிலைபெற்ற புகழுமாம். *(41)*

[பொருள்வயிற்பிரியுந் தலைவனுக்குத் தோழி தலைவியின் ஆற்ருமை கூறல்.]

**42. பொருளைச்சுவையென்றுபோவதெங்கேகுருகூர்ப்புனித
னருளைச்சுமந்தவள்கண்ணின்கடைதிறந்தாறுபட்டுக்
குருளைச்சுமந்துவெளிபரந்தோட்டருங்கொள்ளைவெள்ள
முருளைச்சுடர்மணித்தேரையந்தோவந்துதைக்கின்றதே.**

(இ - ள்.) குருகூர் புனிதன் அருளை சுமந்தவள் - திருக்குரு கூர்க்குத் தலைவனும் பரிசுத்தனுமான தலைமகனது கருணையை மிகுதியாகப்பெற்றவளான தலைமகளினது, கண்ணின் கடை - கண்களின் நுனியிடத்தை, திறந்து - திறந்து அவ்வழியாகவெளிப் பட்டு, ஆறு பட்டு - ஓர்ஆருகி, குருளை சுமந்து வெளி பரந்து ஓட்டரும் - (பலவகை) விலங்கின்குட்டிகளை இழுத்து மேற் கொண்டு வெளியானநிலமெங்கும் பரவி ஓடுவதான, கொள்ளை வெள்ளம் - மிகுதியாகிய (கண்ணீர்ப்) பெருக்கானது, உருளை

சுடர் மணி தேரை - சக்கரங்கள்பூண்டதும் ஒளிவீசும்இரத்தினங் கள் பதித்ததுமான (தலைமகனது) தேரை, அந்தோ - ஐயோ,— வந்து உதைக்கின்றதே - வந்துமோதுகின்றதே! (இங்ஙனமாக), பொருளை சுவை என்று போவது எங்கே - (தலைமகன்) செல் வத்தை இனியதென்றுஎண்ணி (அதன்பொருட்டு இவளைப் பிரிந்து) செல்வது எவ்வாறோ! (எ - று.)

தலைவன் தலைவியை மணஞ்செய்து கொண்டதன்பின்பு பிரியும் பிரிவு, ஆறுவகைப்படும்; ஓதற்பிரிவு, காவற்பிரிவு, பகை தணிவினைப்பிரிவு, வேந்தற்குற்றுழிப்பிரிவு, பொருள்வயிற்பிரிவு, பரத்தையிற்பிரிவு என: அவற்றில், இங்கு எடுத்துக்கொண்டது, பொருள்வயிற்பிரிவு; அதாவது - பொருளீட்டுதல் காரணமாகப் பிரியும் பிரிவு: தாதை மூதாதை முதலிய தன்முன்னோராற் படைக் கப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ்செய்தால் அதனால்வரும் பயன் அவர்க்குஆம்அத்துணையல்லது தனக்குஆகாமையால் தனது பொருள் கொண்டு இல்லறஞ்செய்தற்காகப் பொருள்தேடுதற் பொருட்டுச் செல்வம் நிறைந்த தலைமகன் பிரிந்துசெல்வ னென்க; அங்ஙனம்பிரியக்கருதிய தலைவன் தனதுபிரிவைத் தானே தலைவிக்கு உரைத்த லரிதென்று கருதித் தோழியைநோக்கி, 'நீ அவட்கு உணர்த்துமாற்று லுணர்த்து' என்றுசொல்ல, அங்ஙனம் தோழி உணர்த்தியவளவிலே, அதுகேட்டதலைவி மிகவருந்தி ஆற்றாது கண்ணுங் கண்ணீருமாய் மிகுதியாகப்புலம்ப, அவ்வருத்தங்கண்ட தோழி தலைவனிடம் வந்து அத்தலைவியின் பிரிவாற்றாநிலைமையைக் கூறுதல், இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட விஷயம். மெய்ப்பாடு - இளிவரலைச்சார்ந்த பெருமிதம்; பயன் - தலைமகனைச் செலவழுங்கு வித்தல்; விரைந்துமீண்டுவரக்குறிப்பித்தலுமாம்.

'குருகூர்ப்புனிதனருளைச் சுமந்தவள்' என்றது, முன்னிலைப் படர்க்கை. 'குருகூர்ப்புனிதன் போவதெங்கே' என்றுகூட்டி, அதனையும் அங்ஙனம் வந்த திணைவழுவமைதி யெனக்கொள்ளலாம். இனி, 'புனிதன்' என்றதை இயல்பாகிய அண்மைவிளி யெனினும் அமையும்; (திருக்கோவையாரிலே பொருள்வயிற்பிரிவில் ஆற்றாமை கூறலென்னுந் துறைக்கு இலக்கியமான செய்யுளில் 'மலர்க் கண்கள் முத்தம்வளர்க்கும், தேனக்கதார்மன்ன னென்னோ வினிச் சென்றுதேர்பொருளே'' என்றவிடத்து, பேராசிரியர் 'மன்ன னென்பது, ஈண்டு முன்னிலைக்கண் வந்தது; இயல்புவிளி யென் பாரு முளர்' என்றமை காண்க.) தலைவனது தலையளியை நிரம்பப் பெற்றவ ளென்பது, 'புனிதனருளைச் சுமந்தவள்' என்றதன் பொருள். 'கண்ணின்கடை திறந்து ஆறுபட்டுக் குருளைச்சுமந்து வெளிபரந்து ஓட்டருங் கொள்ளை வெள்ளம்' என்றதும், 'தேரை வந்து உதைக்கின்றது' என்றதும் - அதிசயோக்திவகையாற் கண் ணீர்ப்பெருக்கின் மிகுதியை வருணித்தவாறும். ஆறுபட்டு - நதி போன்று. (''பணைமுகக்களியானை பன்மாக்களோடு அணிவகுத் தென ஈர்த்து'' என்றபடி) யாற்றுவெள்ளம் தான்வருகிற மலை காடு முதலிய வழிகளி லுள்ள விலங்குகளை இழுத்துவரு மியல் பைக் கண்ணீர்பெருக்கைச் சிறப்பிக்கும் அடைமொழியாக்கி,

'குருளைச்சுமந்துவெளிபரந்து ஓட்டருங்கொள்ளைவெள்ளம்' எனப் பட்டது.

'குருளை' என்ற இளமைப்பெயர் - நாய்முதலியவற்றின் குட்டிக்கு உரிய தாதலை "நாயே பன்றி புலி முயல் நான்கும், ஆயுங்காலைக் குருளையென்ப", "நரியும் அற்றே நாடினர் கொளினே" என்ற தொல்காப்பியச் சூத்திரங்களாலுணர்க. இரண்டாம்வேற்றுமைத்தொகையாதலால் 'குருளைசுமந்து' என வரற்பாலது, எதுகைநயம்நோக்கி 'குருளைச்சுமந்து' என விரித்தலென்னுஞ் செய்யுள்விகாரம் பெற்றது. 'ஓட்டந்தரும்' என்பது, 'ஓட்டரும்' என்று விகாரப்பட்டது; "ஓட்டந்தெதிரா நீ யாரென" என்ற கம்பராமாயணத்திலும், "உள்ளமுருகியென்கொங்கையோட்டந்து பாய்ந்திடுகின்ற" என்ற பெரியார் திருமொழியிலும் 'ஓட்டந்தந்து' என்பது, 'ஓட்டந்து' என்று விகாரப்பட்டுவந்தமை காண்க.) உருள்வது உருளை யெனக் காரணக்குறி. பொருளைச்சுவையென்று- "வறியார் இருமையறியார்," "இல்லார் இருமையும்நல்ல எய்தார்," "அறனீனும் இன்பமுமீனும் திறனறிந்து, தீதின்றிவந்த பொருள்," பொருளாலிரண்டும்பெறலாகும்" என்று பொருளின் இன்றியமையாமையையும் பயன்களையும் பாராட்டி அதனிடத்து விருப்பம்வைத்து என்றபடி. 'உருளைச்சுடர்மணித்தேரைவந்து உதைக்கின்றது' என்றதன் உட்கோள், பிரயாணத்துக்குத் தடை செய்கின்ற தென்பது.

கம்பநாடர்பக்கல் கருணைகொண்டு அவர்க்குக் காட்சிதந்த ஆழ்வார் அங்ஙனமே ஸதாஸாங்நித்தியந்தராமற் பரம்பொருளை நாடித் திவ்வியதேசயாத்திராபேக்ஷையுடையராய் நின்ற நிலையில் அப்பிரிவை ஆற்ருது வருந்திய கம்பநாடரது நிலையை அன்பர்கள் ஆழ்வார்பக்கல் விண்ணப்பஞ்செய்தல், இதற்கு உள்ளுறை பொருள்; விவரம் தேர்ந்துணர்க. (42)

[மருங்கணைதல்.]

43. வந்தடிக்கொண்டனகொங்கைகண்மாறன்குருகைவஞ்சி
கொந்தடிக்கொண்டகுழலுங்கலையுங்குலைந்தலையப்
பந்தடிக்குந்தொறுநெஞ்சம்பறையடிக்கின்றதென்ருற்
செந்தடித்தன்னமருங்கிற்குண்டோநிற்குஞ்சிக்கனவே.

(இ - ள்.) மாறன் குருகை வஞ்சி-சடகோபருடைய திருக்குருகூரிலேயுள்ள வஞ்சிக்கொடிபோல் மெல்லிய இந்த இளமாதினிடத்து, கொங்கைகள் வந்து அடிக்கொண்டன - தனங்கள் மங்கைப்பருவந்தோன்றவந்தெழுந்து மார்பினிடமெல்லாம்தம்மிடமாகக் கொண்டன; (இங்ஙனம் தனபாரம் மிக்கதனுல்), கொந்து அடிக்கொண்ட குழலும் கலையும் குலைந்து அலைய பந்து அடிக்கும் தொறும் நெஞ்சம் பறை அடிக்கின்றது - பூங்கொத்துக்கள் நிரம்பச்சூட்டப்பெற்ற கூந்தற்பாரமும் உடுத்தஆடையும் நிலைகுலைந்து சோருமாறு (இம்மெல்லியலாள்) பந்தடிக்கும்பொழுதெல்லாம்

(இவளிடைக்கு என்னுகுமோ வென்று) என்மனம் பறையடிக்கின்றதுபோலப் படபடவென்று துடிதுடிக்கின்றது; என்றால்—, செம் தடித்து அன்ன மருங்கிற்கு நிற்கும் சிக்கனவு உண்டோ - செவ்விய மின்னலைப்போன்ற இவளிடைக்கு (இப்பாரங்களைச் சுமந்து துவளாது) நிற்கும் வன்மை உளதாமோ? (எ - று.)

இயற்கைப்புணர்ச்சி பாங்கற்கூட்டம் இவற்றின்பின்னர்ப் பாங்கியிற் கூட்டத்தால் இரவுக்குறியிலே தலைவன் தலைவியைத் தனியிடத்திற் சந்தித்துச் சிலஅன்புமொழிபேசும்போது அவள் பெருநாணினுளாதலால் அவன்முன்நிற்கமாட்டாது நாணித் தலை வணங்கி வருந்தாநிற்க, தலைவன் தனது மிக்கஆதரவினால் அவ் வருத்தந் தணிப்பான்போன்று முலையொடு முனிந்து அவளிறு மருங்குல் தாங்கி நெருங்கித் தழுவுபவனாய் அவளது இடையின் மென்மையையும் தனபாரத்தையும்பற்றிக் கவன்று உரைக்கிற வியாஜத்தால் தன்காதன்மிகுதி புலப்படச்சொல்லும் சிலவார்த்தை, இச்செய்யுளிற்குறித்த பொருள். மெய்ப்பாடு-உவகை; பயன்-தலைமகளைச்சார்தல். தலைமகள் அவ்வகை நின்றமை கண்ட தலைமகன் இவ்வகைசொல்லிச் சார்ந்தா னென்பது. இத்துறை - தணிகைப்புராணத்தில் 'வாடிடை நோக்கி வருந்தினன்போல, ஆடமைத்தோளியை யார்வமோடணைதல்' என்ற பெயராற் குறிக்கப்பட்டுள்ளது; மெய்தொட்டுப்பயிறலும் இத்தன்மைத்தே.

'மாறன்குருகைவஞ்சி' என்றது-முன்னிலைப்படர்க்கை. வஞ்சி - உவமையாகுபெயர். கொந்து=கொத்து: இதனை மெலித்தல் விகார மென்னலாம். நெஞ்சம் பறையடிக்கின்றது - "இருவர்மா மனமும் பறையறைந்தயர்வுடன்நடுங்க" என்ற வில்லிபுத்தூரார் பாரதங் காண்க. செம் தடித்து - செந்நிறமான மின்னல் எனினுமாம்.

ஆழ்வார்பக்கல் ஆதரத்தால் அவரருகில் வந்த பாகவதர், அவரது பக்தி வளர்ச்சியையும் பிரணமம் முதலிய முயற்சிகள் நிலைகுலையும்படி நேர்கிற பிரபஞ்சபோகலீலைக்கு அவர் உரியரல்லாமையையும் அவரது வைராக்கியத்தின் முதிர்ச்சியையும் பாராட்டிக்கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறை பொருள். ஸ்வாபதேசத்தில், கொங்கை - பக்தி; பகவத்பாகவதரைச் சேர்ந்து அநுபவித்தற்கு உபகரணமானதென்க. வந்து அடிக்கொள்ளுதல், அதன் முதிர்ச்சி; அதாவது - பேற்றுக்குச்சாதனமான பரமபக்தியாகப் பரிணமித்தல். கொத்தடிக்கொண்ட குழல்-விதிமுறைப்படி செய்யும் பிரணமம். கலை-"மடிதற்றுத்தான் முந்துறும்" என்றபடி அரையில் ஆடையை இறுக உடுத்துக்கொண்டு முந்துற்றுச்செய்யும் முயற்சி. இவைகுலையும்படி பந்தடித்தல் - பிரபஞ்சபோகலீலை தன்வசப்படுத்துவதாக மோதுதல். அதற்கு அவருரியரல்லரென்பது, 'நெஞ்சம் பறையடிக்கின்றது' என்றதனால் விளக்கப்பட்டது. ஈற்றடி - பக்திகாரியமான வைராக்கியத்தின் முதிர்ச்சியைத் தோற்றுவிக்கிறது; 'இடையழகென்பது, ஒன்றும்பொருந வைராக்கியத்தை' என்பர் அழகிய மணவாளசீயர்: அன்றி, வேறொன்றன் தொடர்ச்சி யுண்டானால் இடையே கெடும்படியான இடையறாத

அன்பின் மேன்மையைச் சொல்லியதுமாம்: விவரம், விரிப்பிற் பெருகும்; கேட்டுணர்க.

இனி, இச்செய்யுட்குத் துறையும் பொருளும் உள்ளுறை பொருளும் பிறவாறு உரைக்கவுங்கூடும். கல்வியிற்பெரியராய கம்பர் இயற்றிய கம்பசூத்திர மெனத்தக்க அருஞ்செய்யுள்களின் ஆழ்பொருள்களை நுண்ணிதாக உரைப்பான்புகின் வரம்பின்றிப் பெருகுமென்பது, வெளிப்படை. (43)

44. கனவாயினவுந்துரியமுமாயவையுங்கடந்து
மனவாசகங்களைவீசியமாறனைமாமறையை
வினவாதுணர்ந்தவிரகனைவெவ்வினையைத்தொலைத்த
சினவாரணத்தைக்குருகைக்கரசனைச்சேர்ந்தனமே.

(இ - ள்.) கனவு ஆயினவும் - சொப்பனுவஸ்தையின் வகைகளையும், துரியமும் - துரியாவஸ்தையையும், ஆயவையும்- மற்றும் அவற்றிற்கு இனமான ஜாக்ராவஸ்தை ஸுஷுப்தியவஸ்தை என்றவைகளையும், கடந்து—, மன வாசகங்களை வீசிய - மனோ வாக்குகளைக்கடந்த, மாறனை - மாறனென்னுந் திருநாமமுடையவரும், மா மறையை வினவாது உணர்ந்த விரகனை - சிறந்தவேதங்களை (எவரிடத்துங்) கேளாமல் (தாமே எம்பெருமானருளால்) அறிந்த ஞானவிசேஷத்தையுடையவரும்,வெவ்வினையைதொலைத்த சினம் வாரணத்தை - கொடியகருமமாகிய கட்டுத்தறியை முறித் தொழித்த கோபமுடைய யானை போன்றவரும், குருகைக்கு அரசனை - திருக்குருகூர்க்குத் தலைவருமான நம்மாழ்வாரை, சேர்ந்தனம் - சரணமடைந்தோம்; (எ - று.)

'ஆழ்வார்திருவடிகளே சரணம்' என்றபடி, அநாதிகாலமாய் எண்ணிறந்த பலபிறப்புக்கள்தோறும் மாறிமாறித் திரிந்த நாம் இன்று ஆழ்வாரைச் சேர்ந்து உய்யப்பெற்றோம் என்ற ஆநந்தாதிசயத்தாலும், ஆழ்வார் செய்தருளிய உபகாரங்களையுணர்ந்து அவரைவணங்கிக் கடமைசெலுத்தினோமென்ற மகிழ்ச்சியினாலும், இங்ஙனங் கூறினர். ஜாக்ரம், ஸ்வப்நம், ஸுஷுப்தி, துர்யம், துர்யாதீதம் என்று அவஸ்தை ஐந்து வகைப்படும். ஜாக்ரம் - விழிப்பு நிலை. ஸ்வப்நம் - கனுநிலை. ஸுஷுப்தி - மனமொடுக்கம்: அயர்ந்த தூக்கம். துர்யம் - உயிரொடுக்கம், சமாதி, ஆத்மா தன்னைத் தான் காணுதல். துர்யாதீதம் - ஜீவாத்மா ஒடுங்கிப் பரமாத்மாவைத் தரிசித்து ஆனந்தத்திலழுந்தி நிற்கும் நிலை. மதபேதத்தால் இவற்றைப் பிறவாறு உரைத்தலும் உண்டு. அவற்றையெல்லாம் பரந்த நூல்களிற் கண்டுகொள்க. 'கனவாயினவுந்துரியமுமாயவையுங் கடந்து' என்றது - ஜாக்ரம் ஸ்வப்நம் ஸுஷுப்தி துரியம் என்ற நான்கு நிலைகளையுங் கடந்த துரியாதீத நிலையிலே நின்று என்றபடி. 'மனவாசகங்களை வீசிய' என்றது - மனமும் சொல்லும் பிறபல விஷயங்களிற் செல்லுந் தன்மையைப் போக்கி அவற்றை எம்பெருமான் பக்கலிலேயே உபயோகித்த என்றபடி; அகக்கரணத்தையும் புறக்கரணத்தையும் வென்ற என்க. 'வெவ்வினையைத் தொலைத்த சினவாரணம்' என்றதில் 'சடகோ

பண்' என்ற திருநாமத்தின் பொருள் தோன்றும். கனவாயினவும் துரியமும் ஆய் அவையும் கடந்து என்று பிரித்து, எல்லா நிலைமைகளிலும் பரப்ரஹ்மமயனுய் என்று உரைத்தலும் ஒன்று. மாமறையை வினவாது உணர்ந்த விரகன் - மயர்வறமதிநலம் அருளப் பெற்றவர். மனவாசகங்கள் - பன்மை விகுதி பெற்ற அஃறிணை யும்மைத்தொகை. துர்யம் அல்லது துரீயம் - வடசொல்: நான்காவது நிலை என்று பொருள்; இதற்கு மேம்பட்டது துர்யாதீதமென்க. (44)

45. சேராதனவுளவோபெருஞ்செல்வர்க்குவேதஞ்செப்பும்
பேராயிரந்திண்பெரும்புயமாயிரம்பெய்துளவத்
தாரார்முடியாயிரங்குருகூர்ச்சடகோபன்சொன்ன
வாராவமுதங்கவியாயிரமவ்வரியினுக்கே.

(இ - ள்.) அ அரியினுக்கு - அந்த ஸ்ரீமந்நாராயணனுக்கு,— வேதம் செப்பும் பேர் ஆயிரம் - வேதங்கள் கூறிய திருநாமங்கள் ஆயிரமாம்; திண்பெரும் புயம் ஆயிரம் - வலிய பெரிய தோள்கள் ஆயிரமாம்; பெய் துளவம்தார் ஆர் முடி ஆயிரம் - சாத்திய திருத்துழாய்மாலை பொருந்திய திருமுடிகள் ஆயிரமாம்;(இப்படி எல்லாம் ஆயிரமாகவே அமையப் பெற்றுள்ள எம்பெருமானுக்கு), குருகூர் சடகோபன் சொன்ன ஆரா அமுதம் கவி ஆயிரம் - திருக்குருகூரிலவதரித்த நம்மாழ்வார் பாடிய தெவிட்டாத அமிருதம் போன்ற பாசுரங்கள் ஆயிரமும் அமைந்தன; பெருஞ் செல்வர்க்கு சேராதன உளவோ - மிக்க செல்வமுடையார்க்கு மற்றுஞ்சேராதபொருள்களும் உண்டோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

பேர் புயம் முடி என்பவற்றை ஆயிரமாயிரமாகவுடைய எம்பெருமானுக்கு ஆழ்வாரருளிச்செய்த திருவாய்மொழிப்பாசுரம் ஆயிரமும் வாய்த்தன வென்ற சிறப்புப்பொருளை, பெருஞ்செல்வர்க்கே மேன்மேற் பொருள் சேருமென்றபொதுப்பொருள்கொண்டு விளக்கியதனால், **வேற்றுப்பொருள்வைப்பணி.** பேர் ஆயிரம்- ஸஹஸ்ரநாமம். "புரமாயிரம் திருக்கண்மலராயிரம் புண்டரிகக், கரமாயிரம் கழற்கான்மலராயிரம் கண்ணிமுடிச், சிரமாயிரம் திருநாமமுமாயிரம் செய்யகையி, லரமாயிரங் கொண்ட திண்டிறலாழியரங்கருக்கே" என்ற திருவரங்கத்துமாலைச்செய்யுள் இங்குஉணரத்தக்கது. இங்கே 'ஆயிரம்' என்பது, அளவில்லாத தென்னும் பொருளது; அங்ஙனங்கொள்ளாவிடின், புயமாயிரமும், முடியாயிரமும் சேராவாம். ஆகவே, அளவற்ற கைமுதலிய சகலஅங்கங்களையுமுடையவ னென்பதாம்: அபரிமிதமாய் அற்புதமாயிருக்கிற மகாஞானமும் மகாசக்தியுமுள்ளவன் எம்பெருமான்என்பது தேர்ந்தபொருள். பெருமான் சகல இந்திரியங்களாலேயாதல் ஓர் இந்திரியத்தாலேயாதல் திருமேனியாலேயாதல் திவ்யாத்ம ஸ்வரூபத்தாலேயாதல் எல்லாவற்றையும் எப்போதும் எல்லாவிதத்திலும் அறிகின்றவனும் செய்கின்றவனுமா யிருக்கின்றானென்பதுமுக்கியமானகருத்து. இங்ஙனமேயன்றி, அநேகம்திருமுடிகள் திருக்கைகள் திருக்கண்கள் திருவடிகள் முதலான அவயவங்களாற் செறிந்

திருக்கின்றான் பகவானென்பது கருத்தன்று. அளவில்லாத கண் முதலியவற்றை யுடையவன் எப்படி அளவில்லாத காட்சி முதலானவற்றை யுடையவனாயிருப்பனோ அப்படியே பகவானும் என்று எடுத்துக்காட்டினபடியாம். மற்றும், விசுவரூபங்காட்டுகிற சமயங்களில் மாத்திரம் எம்பெருமான் பல அவயவங்களைக் கொள்ளுதலு முண்டு. இங்குச்சிலர் உலகமெல்லாம் பகவானுடைய சொரூபமாதலாலே உலகத்திலுள்ளோருடைய முடி புயம் முதலியவையெல்லாம் அவனுடையவையாமெனக் கருத்துக்கூறுவர்; அது பலவிதத்திலும் பொருந்தாதெனஅறிக. இது, திவ்வியாத்மஸ்வரூபம் கூறியபடி. ஆராஅமுதம் - உண்ணஉண்ணத் தெவிட்டாத [போதுமென்னுந் திருப்தியை யுண்டாக்காத] அமுதம். (45)

[தோழி இரங்கல்.]

46. ***அரிவளைபொன்மகிழாயிழைக்கீயுங்கொலந்திவந்து
முரிவளைமுத்துஞ்சினையுமயங்கமுறைசெறுத்து
வரிவளையுமன்னமுந்தம்மிலேவழக்காடவலம்
புரிவளையூடறுக்குங்குருகூரெம்புரவலனே.***

(இ - ள்.) முரி வளை முத்தும் - பெரியசங்கினாற் பெறப்பட்ட முத்தும், சினையும்- (அன்னப்பறவையீன்ற) முட்டையும், மயங்க- (நீர்த்துறையிலே) கலந்து மாறாடினவாக, (அவற்றைக்குறித்து), வரி வளையும் அன்னமும் - உட்சுழியையுடைய சங்கும் அன்னப்பறவையும், முறை செறுத்து தம்மிலே வழக்கு ஆட - (ஒன்றன் பொருளை மற்றொன்று தனதென்று மயங்குதலால்) நீதிமுறை கடந்து தமக்குளே [ஒன்றோடொன்று] வழக்கிட, வலம்புரிவளை ஊடு அறுக்கும் - வலம்புரிச்சங்கு சென்று நடுநின்று அவற்றின் போரை விலக்குதற்கிடமான, குருகூர் - திருக்குருகூரில் தோன்றிய, எம் புரவலன் - எமது தலைவன், அந்தி வந்து - (இன்றை) மாலைப்பொழுதில் மீண்டுவந்து, அரி வளை பொன் மகிழ் - வண்டுகள் சூழ்ந்து மொய்க்கப்பெற்ற அழகிய தனது மகிழம்பூமாலையை, ஆயிழைக்கு ஈயும் கொல் - தேர்ந்தெடுத்தணிந்த ஆபரணங்களையுடையளான இம்மடமங்கைக்குக் கொடுத்தருள்வனோ? (எ - று.)

மணந்து பிரிந்த தலைவனது பிரிவை யாற்றாது வருந்திய தலைவியின் நிலைமை கண்டு தோழி இங்ஙனம் இரங்கிக்கூறினளென்க. பிரிந்த நிலையிலே தலைவி தலைவனது மலர்மாலையைப் பெற்றாயினும் மகிழக்கருதியதனைக் குறித்து, 'மகிழ் ஈயுங்கொல்' என்றது. இது, தனதுமாலை இவளுடம்பிற்படும்படி கலவியின்பத்தைத் தந்தருள்வனோ வென்ற குறிப்புமாம்; இடக்கரடக்கலின்பாற்படும்; அன்றி, ஒளியையுடைய வளையையும் பொன்போல விரும்பப்படுகிற அருமையான மகிழ்ச்சியையுந் தருவனோ வென்றலு மொன்று; பிரிந்தகாலத்திலே கைவளைகழலுமாறு தலைவிக்கு நேர்ந்த உடல் மெலிவு மீண்டுவந்து கலந்தவளவிலே தணிதலால் அவ்வளை கழலாதவாறு மகிழ்ச்சியால் உடல்பூரிக்கச்செய்வனோ வென்பது தாற்பரியம். அரி வளை - (தான்) கவர்ந்த வளை எனினுமாம்; ஹரித்தல்-கவர்தல்: தன்பிரிவு தலைவியினுடலை மெலிவித்து வளைகழலுமாறு செய்தது பற்றி 'அரிவளை' என்றதெனக்

கொள்க. பொன்மகிழ் - பொன்நிறமான மகிழமலர் என்றும் பொருள் படும். ஆயிழை-தலைவனுக்கு மகிழ்ச்சிவிளைத்தற்பொருட்டுச் சிறந்த அணிகலங்களைத் தெரிந்தெடுத்து அணிந்து தலைவன் குறித்தகாலத்திலே மீண்டுவருவதை எதிர்நோக்கி நிற்கின்றவ ளென்றபடி. 'அந்திவந்து' என்றதைப்பிந்தின அடிகளில் வரும் நாட்டுவர்ணனையோடு சேர்த்து, மகிழ் ஈயுங்கொல் - மகிழமலர் மாலையை (இவட்குத் தாரகமாக)க் கொடுத்தனுப்புவனோ வென்று பொருள் கொள்வாரு முளர்; அவர் 'அந்திவந்து' என்பதற்கு - அந்திப்பொழுது வந்ததனு லென்று உரைப்பர்.

சங்குஈன்ற முத்தும், அன்னப்பறவையீன்ற முட்டையும் வடிவிலொப்புமையுடைமையால், அவற்றை மாறுடிச் சங்கும் அன்னமும் வழக்கிட்டன வென்க; **மயக்கவணியின்** பாற்படும்; வழக்காவது - ஒருபொருளைத் தனித் தனியே எனதுஎனது என்றிருப்பார் அதுகாரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருளின் மேல் தொடர்வது; வியவகாரம். சங்கும்அன்னமும் போராடி நிற்கையில் இவ்விரண்டும் மதிக்கத்தக்க பெரிய வெண்மையான வடிவமுடைய வலம்புரிச்சங்கு அவை அஞ்சி அகலும்படி அவற்றின்நடுவிற் சென்றதையே, மத்தியஸ்தனுய்நின்று வழக்குத்தீர்த்ததாகக் குறித்தார். வலம்புரி - வலப்பக்கமாக உட்சுழிந்திருக்கும் உத்தம சங்கம். சங்குகளில் இதற்கு உள்ள தலைமையை "இப்பியாயிரமே சூழ்ந்தஇடம்புரியென்றுகூறும், ஒப்பில்சங்காயிரஞ்சூழுறும் வலம்புரி யென்றோதும்" என்ற நிகண்டினுலும் உணர்க. எம்புரவலன் - எம்மைப்பாதுகாத்தலில் வல்லவன். தலைவிக்கும் தனக்குமுள்ள ஒற்றுமையால், தோழி, 'எம்புரவலன்' என்ருள்; தலைவியைப் பாதுகாத்தலையே தன்னையும் பாதுகாத்தலாகக் கருதுந் தன்மையள்.

ஆயிழை - வினைத்தொகை யன்மொழி. அந்தி - ஸந்த்யா; இரவொடு பகல்கூடும் பொழுதாகிய காலைச்சந்திக்கும் பகலொடு இரவு கூடும் பொழுதாகிய மாலைச்சந்திக்கும் பொதுவான இச்சொல், இங்கு, சிறப்பாய், மாலைப் பொழுதை யுணர்த்திற்று. அது பிரிந்தார்க்கு வருத்தத்தை மிகுவிக்குங் காலமும் பிரிந்து வெளிச்சென்ற ஆடவர் மீண்டுவருவதற்கு உரிய காலமு மாதல் பற்றி, 'அந்தி வந்து ஈயுங்கொல்' என அக்காலத்தில் வருதல் வேண்டப்பட்டது. முரி-மூரிஎன்பதன் விகாரம்; இதனை முத்துக்குக்கூட்டி 'பெரிய முத்து' எனக் கொள்ளுதல் ஏற்கும். சங்கிற்கு 'வளை' என்பது, உட்சுழிந் திருத்தல்பற்றிவந்த காரணக்குறி. செறுத்தல் - அழித்தல்; எங்கேனும் தடுமாற்றத்திறை குழப்பமுண்டானுல் அதனை அங்குச்சென்றுநின்று தீர்க்குந் தன்மையனை தலைவனென்பது, நாட்டுவளங்காட்டவந்த அடைமொழியினுற்போந்த பொருள்; இங்ஙனங் கூறினது, ஆறுவகைப்பிரிவினுள் இது பகைதணிவினைப்பிரி வென்பதைக் காட்டும். அஃதாவது—'இருவர் அரசர் தம்மிற்பொருப என்றவிடத்து அவரைச்சந்து செய்வித்தற்குப்பிரியும் பிரிவு, தூதுவர்போலச் சந்துசெய்வித்தற்குப் பிரியுமென்பதன்று: இருவர் அரசர் நாளைப்பொருதும் இன்றுபொருதுமென்றிருந்த நிலைமைக்கண் தான் அருளரசனுகலின் இம்மக்களும்

இவ்விலங்குகளுமெல்லாம் பட இவ்விரண்டு குலத்திற்கும் ஏதம் நிகழும்: அதனால் இப்போரொழிப்பனென்று இருவரையும் இரந்து சந்துசெய்வித்தலு மொன்று; அல்லதூஉம், தேவரும் அசுரரும் அமர்செய்த காலத்துத் தேவர்களையும் அசுரர்களையும் ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பல் யானெனப் பாண்டியன் மாகீர்த்தி சந்துசெய்வித்தது போல், இருவரின் மிக்குச் செய்தீரை யொறுப்ப லென்று சந்துசெய்வித்தலு மொன்று: இருவரையும் ஒறுக்குந்துணை ஆற்றலுடையனுகலா னென்பது; அஃதே யென்னின் தன்அகத்து இருந்துவிட அமையாதோ? அன்ன ஆற்றலனுகலான், தான் செல்லவேண்டுமோ? எனின்,—செல்ல வேண்டும்: என்னை காரண மெனின், காதலரைப்பிரிந்து ஒருகருமமுடிப்ப அதனின்மிக்க ஆள் வினையில்லை யென்பது; ஆதலாற் பிரிந்தே சந்துசெய்விக்கு மென் பது' என்ற இறையனுரகப்பொருளுரை வாக்கியங்களைக் காண்க. சங்கும், அதிற் சிறந்த சாதியான வலம்புரியும், தாமரையைவிரும் புந் தன்மையதான அன்னப்பறவையும், நீர்வளஞ்சிறந்த விடத்தி லேயே பயிலும்.

தியானநிலையில் நின்ற கம்பநாடரது அகக்கண்ணுக்கு ஆழ் வார் புலனுகி மறைந்தவளவிலே அவரது ஸதாஸாந்நித்தியத்தை யபேக்ஷித்துப் பிரிவாற்றுமையால் வருந்துகிற கம்பநாடருடைய துயரத்தை நோக்கிய அன்பர்கள் 'ராஜஸதாமஸ காரியங்களைப் போக்கிச் சாத்துவிககாரியத்தையே நிலைநிறுத்துபவரும் திவ்விய தேசத்திலவதரித்து அங்கேயே வாசஞ்செய்பவரும் அடியார்களைப் பாதுகாத்தலையே தமக்கு ஸ்வரூபமாக வுடையவருமான நம்ஆழ் வார் இக்கம்பநாடர்க்கு உரிய சமயத்தில் வந்து தமது இனிமை யைத் தந்து தலையளிசெய்யவேணுமென்று ஆதரத்தோடு கூறிய வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருள். அரிவளை பொன் மகிழ்= ஸாரக்ராஹிகள் மிகவிரும்பி விடாது சூழப்பெறுவதான தமது காட்சியின்பம்: ஆயிழை=ஆழ்வார்திருவுள்ளத்தை மகிழ்விக்கும் படியான சற்குணபூர்த்தியுடையவர்; நல்லோர்க்கு நற்குணமேஆப ரணமாம். அந்திவருதல்=உரியசமயத்தில் உபேக்ஷியாதுவருதல். (இது, தொகுத்துச்சுட்டல்; வகுத்து உணர்ந்துகொள்க.) (46)

[தலைவி கடலைநோக்கித் தேர்வழிதூர லென்றல்.]

47. புரைதுடைத்துப்பெரும்பொய்யுந்துடைத்துப்பிறர்புகலு
முரைதுடைத்தங்குள்ளவூசறுடைத்தெம்முறுபிறவித் [நைக்
துரைதுடைத்தாட்கொண்டதொண்டர்பிரான்றுறைநீர்ப்பொரு
கரைதுடைக்குங்கடலேதுடையேலன்பர்காற்சுவடே.

(இ-ள்.) புரை துடைத்து-(ஐம்பொறிகளாலுண்டாகிற) குற் றங்களைப் போக்கி, பெரும் பொய்யும் துடைத்து - (அவற்றிற் கெல்லாம் மூலகாரணமாகிற) பெரும்பொய்யாகிய மகாமாயையை யும் போக்கி, பிறர் புகலும் உரை துடைத்து - பரசமயத்தார் சொல்லும் வாதங்களைப் பொருந்தாமை காட்டிக் கழித்து, அங்கு

உள்ள ஊசல் துடைத்து - அவ்வாறு பரதத்துவ நிர்ணயஞ்செய் கிற விஷயத்திலுண்டாகிற தடுமாற்றத்தையுந்தீர்த்து, எம் உறு பிறவி துரை துடைத்து ஆட்கொண்ட - (விதிவசத்தால்) எமக்கு நேரும் பிறவித்துன்பத்தின் விரைவைத்தடுத்து எம்மைஅடிமை கொண்டருளிய, தொண்டர் பிரான் - (திருமாலின்) மெய்யடியார் கட்குத் தலைவரான நம் ஆழ்வார்க்கு உரிய, துறை - திருமஞ்சனத் துறைமுகத்தையுடைய, நீர் பொருநை - நீரான்மிக்க தாமிரபர்ணி நதி, கரை துடைக்கும் - (கடலைநோக்கித் தான் பெருவெள்ளமாக வரும் விசையினால்) கரையை உடைக்கப்பெற்ற, கடலே—! அன்பர் கால் சுவடு - (என்பக்கல் தலையளிசெய்து சென்ற) காதலரது தேர்க்கால் சென்ற வழியை, துடையேல்-அழித்திடாதே; (எ-று.)

களவினால் தலைமகளைப் புணர்ந்துநின்ற தலைமகன், அதனால் ஊரெங்கும் பழிபரவுதலை யறிந்து, அப்பழிதூற்ற லடங்குமாறு அவளைச் சிலநாள்பிரிந்திருக்கக் கருதி, அதனை அவட்குக் கூறு மலே தான் பிரிதலை அவள் அறிந்தால் வருந்துவளென்று அவ ளறியாதபடியும் ஊரார றியாதபடியும் அவள்முகங் காண்கின்ற பொழுது தான் போகமாட்டாமையாலும் இருளிலேபிரிந்து செல்ல, பின்பு அப்பிரிவையறிந்து ஆற்றாது வருந்துகின்ற தலை மகள், அவனது தேர்ச்சக்கரஞ்சென்ற சுவட்டை நோக்கி அவன் மீண்டுவருமளவும் அதனையே தனது உயிர்க்குப் பற்றுக்கோடாகப் பாவித்துப் பார்த்துக்கொண்டிருக்கையில், அங்ஙனம் பிரிந்திருந்து இரங்குமிடம் கடற்கரையாகிய நெய்தல்நிலமாதலாலே அத்தேர்க் காற் சுவட்டைக் கடலின் அலை வீசிவந்து அழிக்கப்புக அழித்தி டாதேயென்று அதனை வணங்கிவேண்டியது, இது. திணை - நெய் தல். மெய்ப்பாடு - அழுகை; பயன் - அயர்வுயிர்த்தல். உள்ளதெல் லாங்கொடுத்து உஞ்சவிருத்திபண்ணி ஜீவிப்பார்போலத் தலை வரைப்போகவிட்டு அவர்போனவழியைப்பார்த்து ஆறியிருக் கிறேன், இதனை அழித்திடாதே என்று வேண்டின னென்க. அன்பர் தேர்க்காற்சுவடு, 'அன்பர் காற்சுவடு' எனப்பட்டது; நடந்து சென்றதாகக் கொண்டு, அவரது அடிச்சுவடு என்றலு மொன்று.

ஆழ்வார் தாம் பஞ்சேந்திரியநிக்கிரகஞ்செய்து மகாமாயையை யும் ஒழித்தவராயிருத்தலோடு திவ்வியபிரபந்தங்களிலே தாம் அருளிச்செய்த உபதேசத்தால் ஐம்பொறிகளின் கொடுமையையும் மகாமாயையின் பொல்லாங்கையும் எடுத்துக்கூறி அடியார்களும் அவற்றைஒறுக்குமாறு செய்தமை தோன்ற 'புரைதுடைத்துப் பெரும்பொய்யுந் துடைத்து' எனப்பட்டது. ஆழ்வார் பிறர்புகலும் உரைதுடைத்தமை - அவரது 'பராங்குசன்' என்ற திருநாமத்தி னாலும், திவ்வியபிரபந்தங்களினாலும் விளங்கும். அவர் தடுமாற் றத்துக்கு இடமின்றிப் பரதத்வநிர்ணயஞ் செய்தமையை, அவரது அருளிச் செயல்களிற் காண்க. 'எம்' என்ற பன்மை - அவர்க்கு அடிமைப்பட்ட அனைத்துயிரையும் உளப்படுத்தும். ஆழ்வாரரு ளால் அடியார்களுடைய கருமங்களுட் சஞ்சிதமும் ஆகாமியமும் அப்பொழுதே அறத்தொலையப் பின்புநின்ற பிராரப்த கருமமும்

சார்பின்றி வலிகுறைந்து அப்பிறப்பின் முடிவோடு ஒழிதலால் அவ்வுயிர்கள் தவறுதுவிடுபெறுதல், 'எம்பிறவித்துறைதுடைத்து ஆட்கொண்ட' என்றதனுற் புலனும். ஆழ்வார்களனைவரினும் நம்மாழ்வார் அவயவியென்னும்படி தலைவராதலால், 'தொண்டர் பிரான்' எனப்பட்டனர். கரை - கடற்கரை. தாமிரபர்ணிநதி சென்று கடலிற்சேருஞ் சங்கமத்துறையிற் கடல் அலைமோதி யெதிர்த்தலால், அந்நதியின்கரையை யுடைக்கு மென்றுங் கொள்ளலாம்.

கம்பநாடர், ஆழ்வாரைப் பிரிந்து வருந்துகிற நிலையில், அவர் பக்கல் தமதுமநோரதத்தை இடைவிடாதுசெலுத்தி அதனுலேனும் ஒருவாறு ஆறியிருக்கலா மென்று நினைக்கும்போது, அம்மநோ ரதப்போக்கை இடையிற் குலையாதிருக்கவேணுமென்று ஸம்ஸார மாகிற கடலை நோக்கிப் பிரார்த்தித்துக் கூறுதல், இதற்கு உள் ளுறைபொருள். பின்புள்ளாரும் மநோரதத்தை "உள்ளமான தேர்" என்பது காண்க. அன்பர்கால்சுவடு - ஆழ்வாரது திருவடி பட்ட சுவடுமாம். ஸம்ஸாரத்தை 'கடல்' என்றது, பல துன்பங்களை மேன்மேல்தந்து அகப்பட்டவர் ஆழ்ந்திடும்படி பரவுந்தன்மைய தாதலாலும், அளத்தற்கு அரிய பரப்புடைமையாலு மென்க. ஸம்ஸாரமாவது - எம்பெருமானது லீலாவிபூதி: ஆழ்வார்பக்கல் ஈடுபட்ட தமக்குத் தீங்கு செய்திடாமைப் பொருட்டு அந்தலீலா விபூதிக்கு உள்ள ஆழ்வார்சம்பந்தத்தைஎடுத்துக் காட்டி உறவு கொண்டாடியபடி. (இது, சுருக்கம்; பெருக்கம் ஆய்ந்துணர்க.) (47)

[செவிலித்தாய் நற்றாய்க்கு இருவர் காதலு முரைத்தல்.]

48. ***சுவடிறக்கத்தொடராசைக்களிற்றைத்தொடர்ந்திரண்டு***
கவடிறக்கட்டியபாசத்தளைக்கண்பரிந்துசங்கக்
குவடிறக்குத்தியமாறப்பெயர்க்கொலையானைநங்கா
யிவடிறத்தொன்றும்படரந்திவானமிருள்கின்றதே.

(இ - ள்.) நங்காய் - மகளிரிற் சிறந்தவளே!—இரண்டு கவடு இற - (தனக்கு முன்னும் பின்னும் உள்ளனவாய்த் தன்னைக்கட்டு தற்கு ஆதாரமான) மரத்தறிகளிரண்டும் ஒடிய, கட்டிய பாசம் தளை கண்பரிந்து - தன்னைக்கட்டிய கால்விலங்காகிய சங்கிலியின் பொருத்துவாயைத் துணித்திட்டு, சுவடு இறக்க தொடர் ஆசை களிற்றை தொடர்ந்து-(மதசலம் பெருகுகிற) அடையாளம் மிகுதி யாகத் தொடர்ந்திருக்கப்பெற்ற திக்கஜத்தை (நாடிச் சென்று) அதனோடு போர்தொடர்ந்து, சங்கம் குவடு இற குத்திய - அழகிய மலைச்சிகரங்களை ஒடியுமாறு (தந்தங்களினுற்) குத்திய, மாறன் பெயர் கொலை யானை - மாறனென்னும்பெயரையுடைய கொல்லு தல்வல்ல யானையானது, படர் அந்தி வானம் இருள்கின்றதே - (பிரிந்தார்க்குத்) துன்பத்தைச் செய்கின்ற சாயங்காலத்தில் ஆகாயம் இருளடைகிறவளவிலே, இவள் திறத்து ஒன்றும்-இவள் பக்கல் (தவறாது) வந்து சேர்ந்திடும்; (எ - று.)

தலைவன் களவுப்புணர்ச்சிநேர்ந்த தலைவியை வெளிப்படை யாக மணஞ்செய்துகொண்டபின்பு வந்த மணமகனைக்கண்ட

செவிலி மகிழ்வோடு சென்று அத்தலைவி தலைவன் என்னுமிருவரும் ஒருவர்மேலொருவர் மிக்ககாதலுடையராயிருக்கிற நிலைமையை நற்றாய்க்குச் சொல்லுதல், இச்செய்யுளிற் கூறப்பட்ட பொருள். தலைவன் காவற்பிரிவு வேந்தற்குற்றுழிப்பிரிவு என்றவகைகளில் ராஜகாரியத்தால் தலைவியைப்பிரிந்து நெடுந்தூரஞ் சென்றாலும் சூரியாஸ்தமனசமயத்திற்குள் தொழில்முடித்துத் தவறாது வந்து சேர்வன்; ஓரிரவேனும் புறத்துத்தங்கான் என்று, தலைவனது காதலை அறிவித்தாள். அங்ஙனங் காதல்செய்தற்கு ஏற்றபடி தலைவி ஒழுகுகின்றன ளென்பதும், தலைவன் அந்தி நேரத்தில் வாராதிருப்பின் இவள் பொறுத்திரா ளென்பதும், அவன் வரவையே எதிர்பார்த்து நிற்கின்றன ளென்பதும் தொனித்தலால், தலைவியின்காதல் குறிப்பாக உணர்த்தப்பட்டதென்க. மெய்ப்பாடு - உவகை. பயன் - மகிழ்தல்.

தலைவனை 'யானை' என்றதனால், 'சுவடிறக்க' என்பது முதலாக யானைக்கு ஏற்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. கொலையானை - மதயானையென்றபடி; "யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்" என்றார் பிறரும். தலைவனைக் கொலையானை யென்றது, பகைவெல்லுந்திறமும் மிக்கவலிமையும் கம்பீரமான அழகியநடையுமுடைமைபற்றி. கவடு - கட்டுத்தறி. தன்னைக் கட்டிய தூண்களையும் விலங்குகளையும் முறித்துச்செல்லுதல் மத யானையினியல்பாதலால், 'இரண்டு கவடிறக் கட்டிய பாசத்தளைக் கண்பரிந்து' எனப்பட்டது; "தொடர்பிணி வெளின்முதன் முருக்கித்தோன்றியது, அடலருங் கடாக்களிற் றசனிவேகமே" என்ற சிந்தாமணியையுங்காண்க: (தொடர்பிணிவெளில்முதல்முருக்கி - காலிற்சங்கிலிபிணித்த மரத்தையுங் கம்பத்தையும் அடியிலே முறித்து.) "தூணும் விலங்கும் முறிப்பது" என்றார் பாரதத்தும். வேறொருயானையினது மதநீரின் மணம் வீசினால் அதனையுணர்ந்த வளவிலே அது பொறாது ஓடிச்சென்று அந்த யானையை எதிர்த்துப்பொருதலாகிய மதயானையினியல்பின்படி, இந்தயானை தனது வலிமைக்கு ஏற்பத் திசை யானையைத்தொடர்ந்து பொருத தென்பாள், 'சுவடிறக்கத்தொடர் ஆசைக்களிற்றைத் தொடர்ந்து' என்றாள். மலைச்சிகரத்தைக் கூரியதந்தங்களினாற் குத்திமுறிக்கின்ற மதயானையினியல்பை, 'சங்கக்குவடிறக்குத்திய' என்றார்.

உபமானமாகிய யானைக்குக் கொடுத்த அடைமொழித்தொடர்க்கு, உபமேயமாகிய மாறனென்ற தலைவனுக்கு ஏற்பவும் பொருளமைத்தல், தகுதி. சிறந்தவீரனான தலைவன் திக்குவிசயஞ் செய்பவனாய்த் திக்கஜங்களுள்ள வளவுஞ்சென்று போர் தொடர்ந்து மீளுதல் இயல்பாதலால், சுவடிறக்கத் தொடராசைக்களிற்றைத் தொடர்தல் தலைவனுக்கு அமையும். 'இரண்டு கவடு இறக் கட்டிய பாசத்தளைக் கண்பரிந்து' என்பதற்கு - உட்பகையும் புறப்பகையு மாகிய வஞ்சகவர்க்கமிரண்டும் அழிய (அவற்றைத் தொலைத்தலில்) தன்மனத்தைப்பிணிக்கின்ற பாசபந்தம்போன்ற கண்ணோட்டத்தை யொழித்து என்று பொருள் காண்க. உட்பகை - வழிபறிப்பவர் கள்ளர் கோள்சொல்பவர்

முதலிய மனிதர்களும், பன்றி புலி கரடி முதலிய மிருகங்களும். கவடு - கபடம்: வடசொல்விகாரம். பாசம் - கயிறு. தளை - கட்டு. பரிதல்-அறுத்தல். 'சங்கக்குவடிறக் குத்திய' என்பதன் பொருள்-மலைபோல அழித்தற்கு அரிய பெரியசேனைத்தொகுதி அழியுமாறு அதனைத்தாக்கிய என்பது. சங்கம் - படையில் ஓர்தொகை; ஸங்கம் - கூட்டமுமாம். எனவே, சிலேடையை அங்கமாகக் கொண்டு வந்த **உருவகவணி**யாம்.

'நங்காய்' என்றது, செவிலித்தாய் நற்றுயை முன்னிலைப் படுத்தியது; நங்கை யென்பதன் ஈறுதிரிந்த விளி. படர் - சிந்தை. இருள்கின்றது - நிகழ்காலத்தொழிற்பெயர். ஈற்றுஏகாரம் - தேற்றம்; விரைவுமாம். படர் அந்தி வானம் - அந்திப்பொழுதிற் பரவுகிற செவ்வானமுமாம்.

கம்பநாடர்பக்கல் மிக்க ஆதரத்தையுடைய பேரறிவாளரை நோக்கி, அவர்பக்கல் அன்புள்ள ஞானிகள், 'இவர்க்கு ஆழ்வார் உரியகாலத்திலே தவருது ஸாந்நித்தியந் தந்தருள்வர்' என்றுகூறி மகிழ்வுவிளைத்தல், இதற்கு உள்ளுறைபொருள். ஆழ்வாரைக் கொலையானை யென்றது, பரசமயவாதிகளை நிரஸநம்பண்ண வல்லவ ரென்பதுபற்றி. பின்புள்ளார் "இராமநுசமுனி வேழம்" என்றதும்,அங்கு வியாக்கியானத்தில் 'கஜமாகஉத்ப்ரேக்ஷிக்கிறது, விபக்ஷிகளைச் சித்ரவதம் பண்ணவும் தாம்பரிக்ரஹித்தவர்களைப் பட்டாபிஷேகயோக்யராம்படி பண்ணவும் வல்லவராகையாலே' என்றதுங் காண்க. இந்த யானைக்கு மதம் - ப்ரஹ்மாநந்தம். கவடு இறக்கத் தொடர் ஆசைக்களிற்றைத் தொடர்ந்து - (எவ்வளவு வெறுத்து ஒழித்தாலும்) நெடுங்காலப் பழக்கத்தால் ஒழிதலின்றி மிகத்தொடருந் தன்மையதான அவாவாகிய யானையை ஊக்கங்கொண்டு பொருதுஒழித்து; "அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்" என்ற திருவாய்மொழியையுங் காண்க. இரண்டு கவடு இற - அகங்காரம் மமகாரம் என்னும் இரண்டும் ஒழிய; இவை, பற்றென்ற ஒன்றின் பகுப்பாதலால், 'கவடு' எனப் பட்டன; கவடு - இருகிளையாகக் கிளைத்த மரக்கொம்பு. கட்டிய பாசத்தளைக் கண்பரிந்து - உயிரைப் பிறப்பிலே கட்டுப்படுத்துகிற பிரபஞ்சபாசபந்தத்தின் தொடர்பை அறத்தொலைத்து. சங்கக் குவடு இறக் குத்திய - சங்கப்புலவர் கூட்டமாகிய மலை நிலை கெடும்படி அதனை அடர்த்த; ஆழ்வாரருளிச்செயலின் பிரபாவத் தாற் சங்கப்புலவர்கள் கருவபங்கமடைந்து தாழ்ந்தமை முன் கூறப்பட்டது. நங்காய்-ஆத்மகுணங்களிற் சிறந்தவரே! என்று விளித்தபடி.படர்அந்திவானம் இருள்கின்றதே ஒன்றும்-பலவகைச் சிந்தையை யுண்டாக்குகிற ரஜோகுண தமோ குணங்கள் ஒன்றன்மே லொன்றுகத் தலையெடுத்து மோகாந்தகாரத்தை விளைத் திடாதபடி வந்து ஸாந்நித்தியந் தந்தருள்வ ரென்க.தொடர் ஆசைக் களிற்றை - பற்றுகின்ற ஆசையாகிய மற்ரெரு யானையை, கவடு இறக்கத் தொடர்ந்து - இருந்த இடம் தெரியாதுபோக எதிர்த்து அடர்த்து என்று உரைப்பாரு முளர். **(இது, சங்கிரகம்; விஸ்தாரங் கண்டுகொள்க.)**

இச்செய்யுளைப் பிறிதுதுறையின் பாற்படுத்தி உரையிடவுங் கூடும். (48)

49. இருளாய்ப்பரந்தவுலகங்களைவிளக்கும்மிரவி
பொருளாய்ப்பரந்ததுதான்பொதுநிற்றலின்மற்றதுபோன்
மருளாய்ப்பரந்தமயக்கத்துயக்கற்றமாறனெங்கோ
னருளாற்சமயமெல்லாம்பரனுண்டென்றறிவுற்றதே.

(இ - ள்.) இருள் ஆய் பரந்த - இருள் மிக்குப் பரவப்பெற்ற, உலகங்களை - நிலவுலகத்தின் பகுதிகளையெல்லாம், விளக்கும் - (இருளொழித்து) விளங்கச் செய்கின்ற, இரவி - சூரியமண்டலம், பொதுநிற்றலின் -(எல்லாவுயிர்கட்கும்(பொதுப்பட(உதவிசெய்து) நிற்றலால், பொருள் ஆய் பரந்தது - (உலகமுழுவதும்) காணப் படும் பொருளாய் விளங்கிற்று; அதுபோல் - அதுபோலவே,— மருள் ஆய் பரந்த மயக்கம் துயக்கு அற்ற மாறன் எம் கோன் அருளால் - (பலரும்) மருளும்படி பரவுகிற மாயையினுலாகுஞ் சோர்வு இல்லாத மாறனென்னுந் திருநாமமுடைய நம்மாழ்வாரது கருணையினல், சமயம் எல்லாம் பரன் உண்டு என்று அறிவுற்றது- எல்லாமதங்களும் பரமாத்மாவாகிய ஸ்ரீமந்நாராயணன் உளனென்று அறிந்துகொண்டன; (எ - று.)—ஈற்று ஏகாரம்-தேற்றம். தான், மற்று - அசைகள்.

புறவிருளையொழிக்கிற சூரியன்போலவே அகவிருளையொழிக் கிற ஆழ்வாரும் எல்லார்க்கும் உபகாரக ரென்பதாம். ஆகவே, அவர்பக்கல் அனைவரும் அன்புசெய்யக் கடமைப்பட்டவரென்பது போதரும். **உவமையணி.** ஆய் - ஆக்கமடைந்து, அபிவிருத்தியாகி. விளக்கும் மிரவி - விரித்தல். 'பரந்தது' என்பதற்கு, 'உலகம்' என்ற தோன்ரு எழுவாய் வருவிக்க. துயக்கு - கலக்கம். இரவி தான் பொதுநிற்றலின் எல்லாவுயிர்கட்கும் இன்றியமையாது வேண்டுந் தலைமைப்பொருளாய்ப் பிரசித்திபெற்றது; அதுபோ லவே, வகுளபூஷணபாஸ்கரரும் எல்லாச்சமயத்தார்க்கும் எம்பெரு மானுண்மையை யுணர்த்தி யுதவியதனுல் தலைமைபெற்றனரென்று கருத்துக்கொள்ளுதலும் ஒன்று. இருளொழித்து உலகத்தை விளங்கச் செய்தற்குச் சூரியன்போல, மாயையை யொழித்துப் பரமாத்மாவை விளங்கச்செய்தற்கு ஆழ்வாரென்று தாற்பரியங் கொள்ளினும் தவருகாது. (49)

50. அறிவேயுனைத்தொழுதேன்மற்றையாகமவாதியரைச்
செறிவேனெனவொன்றுசிந்தைசெய்யாதுசெய்தாரையில்லா
நெறிவேதநின்றநிலையுணர்ந்தோன்குருகூர்நிலத்தைப்
பிறிவேனெனவுமெண்ணுதென்னைவீடுபெறுத்தினையே.

(இ - ள்.) அறிவே - (எனது) உணர்வே!—மற்றை ஆகம வாதியரை செறிவேன் என ஒன்று சிந்தை செய்யாது - (வேத மிருக்க அதனைவிட்டு அதற்கு) மாருன ஆகமங்களைப் பிரமாண மாகக்கொண்டு துர்வாதஞ் செய்பவராகிய புறச்சமயத்தாரைச் சேர்வேனென்று தீயசிந்தனை யொன்றையுங் கொள்ளாமல், செய்

தாரை இல்லா நெறி வேதம் நின்ற நிலை உணர்ந்தோன் குருகூர் நிலத்தை பிரிவேன் எனவும் எண்ணுது - தன்னைச் செய்தவரேவ ரையும் உடையதல்லாததும் சன்மார்க்கத்தையே போதிப்பது மாகிற வேதத்தி லூன்றிநின்ற பரதத்துவநிலையை யறிந்தவராகிய ஆழ்வாருடைய திருவவதாரஸ்தலமான திருக்குருகூரென்னுந் திவ்வியதேசத்தை விட்டுப்பிரிவேனென்று எண்ணுதலுஞ் செய் யாமல், என்னை வீடு பெறுத்தினையே - (நீ) என்னை முத்திபெறும் படி செய்தாயே: (அந்தமகோபகாரத்துக்காக), உனை தொழுதேன்- உன்னை (நான்) நமஸ்கரித்தேன்; (எ - று.)

"நெஞ்சமே நல்லை நல்லை யுன்னைப்பெற்ரு, லென்செய்யோ மினியென்ன குறைவினம்" என்று ஆழ்வார் தம்நெஞ்சை விளித் துக் கொண்டாடியதுங் காண்க. வேதம் அபௌருஷேய மாதலால், 'செய்தாரையில்லா' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. பிரி பிறி என்ற இரண்டு வினைகளும் உளவென்ருவது, பிரிஎன்பது எதுகைநோக்கிப் பிறியெனத் திரித்துக் கொள்ளப்பட்டதென்ரு வது கொள்க. அறிவு தீவழிச்செல்லாது நல்வழிச்சென்று உதவு தலே ஆன்மா வீடுபெறுதற்குக் காரணமாதலால், இங்ஙனம் கொண்டாடப்பட்டது. பகவத்பாகவதர் உகந்தருளின நிலங் களிலே பிரவணனுதல், உயர்கதிபெறுதற்கு உரிய உபாயமென்பது போதரும். (50)

51. பெறும்பாக்கியமுள்ளபோதும்பிழைப்புமுண்டேபிறர்பால்
வெறும்பாக்கிளத்திமெலிகின்றவென்னைவினைகொடுபோ
யெறும்பாக்கியதமியேனையமரர்க்குமேறவிட்டான்
குறும்பாக்கியமுப்பகைதவிர்த்தாண்டகுருகைமன்னே.

(இ - ள்.) பெறும் பாக்கியம் உள்ள போதும் - மிக்கநன்மை பெறும்படியான அதிருஷ்டம் இருக்கிறபோதும், பிழைப்பும் உண்டே - (அந்நன்மை மிகுதிநேராமல்) தவறுதலு முண்டோ? [இல்லையென்றபடி]; (அது எங்ஙனமெனின்—), பிறர்பால்-அய லார்மீது, வெறும் பா கிளத்தி - பயனில்லாத பாடல்களைப் பாடிக் கொண்டு, மெலிகின்ற - திரிந்து இளைக்கின்றவனும், வினை கொடு போய் எறும்பு ஆக்கிய-தீவினைகளால் வலிய இழுத்துக் கொண்டு சென்று எறும்புபோல எளிமையடையும்படி செய்யப்பட்டவனும், தமியேனை-வேறுகதியற்றவனுமாகிய, என்னை—, குறும்பு ஆக்கிய முப் பகை தவிர்த்து ஆண்ட - தீமைகள் செய்யும்படியான மூன்று வகைப் பகைகளையும் போக்கி அடிமைகொண்ட, குருகை மன் - திருக்குருகூரில் திருவவதரித்த தலைவரான நம்மாழ்வார், அமரர்க் கும் ஏற விட்டான் - தேவர்களைக் காட்டிலும் மேலான நிலையை யடையும்படி செய்தருளிவிட்டனர்: (எ - று.)

இங்ஙனம், தாம்பெற்றபேற்றை மனத்திற்கொண்டாடி அதன் நிறைவினல் வாய்விட்டுக்கூறலாயின ரென்க. முந்தின வாக்கியம் பொதுப்பொருளாயும், பிந்தினவாக்கியம் சிறப்புப் பொருளாயும் நின்று ஒன்றையொன்று சாதித்தலால், **வேற்றுப் பொருள்வைப்பணி.** "அருள்பெறுவாரடியார் தம் மடியனேற்காழி

யான், அருள்தருவானமைகின்றான் அதுநமதுவிதிவகையே'' என்ற திருவாய்மொழியை அடியொற்றி 'பெறும்பாக்கியம்உள்ள போதும்'' எனப்பட்டது. 'பிறர்' என்றதில், தேவதாந்தரங்களும் அடங்கும். இறைமைக்குணங்களிலராயினோரை அவையுடைய ரெனப்புகழ்ந்து கூறுகிற பாடல்கள் பொருள்சேரா வாதலால், 'வெறும்பா' எனப்பட்டன; அக்குணங்களை முற்றவும்உடைய எம்பெருமானது புகழையும் அப்பெருமானடியார்களது புகழையும் கூறும் பாடல்களே பொருள்சேர்ந்தபாடல்களாம்: "மாரியனைய கை மால்வரையொக்குந் திண்டோ ளென்று, பாரிலோர்பற்றை யைப் பச்சைப்பசும்பொய்கள் பேசவே" என்ற திருவாய்மொழி யையுங் காண்க. தம்வசமின்றிக் கருமவசப்பட்டுத்திரிந்த தமது எளிமை தோன்ற, "வினைகொடுபோய் எறும்பாக்கிய தமியேனை' என்றார்; "இருபாடெரிகொள்ளியினுள் ளெறும்பேபோல், உருகா நிற்கு மென்னுள்ளம்'' என்றார் திருமங்கையாழ்வாரும். சிறுமைக்கு எறும்பைஎடுத்துக்காட்டுதல் இயல்பு; 'ப்ரஹ்மாதி பிபீலிகாந்தம்' என்பர். முப் பகை - காமம், வெகுளி மயக்கம் என்பன. குறும்பாக்கிய முப்பகை - வித்தியாமதம், குலமதம், சீலமதம் என்னும் முக்குறும்பாகிய பகையென்றுங் கொள்ளலாம்; "வஞ்சமுக்குறும்பாங்குழியைக் கடக்கும் நங்கூரத்தாழ்வான்'' என்றவிடத்துப்போல. அமரர்க்கும் ஏறவிட்டான் - முத்திபெற லாம்படி செய்தருளினரென்றபடி.

மன் = மன்னன்; பண்பாகுபெயர். 'அமரர்க்கும் ஏறவிட்டான்' என்றதனை, திருவிருத்தத்தில் "விண்ணுளாரிலுஞ்சீரியரே" என்றதனோடு ஒப்பிடுக; அங்கு, பரமபதத்திலுள்ளவர்களினுஞ் சிறப்புடையராவரென்று பொருள் கொண்டு, இடைவிடாது பக வதநுபவமே செய்யுமிடமான அந்தமுத்தியுலகத்திலன்றி அதற்கு விரோதியான ஸம்ஸாரத்திலிருந்துகொண்டே அங்ஙனம் நித்யா நுபவஞ்செய்பவரை நித்தியசூரிகளினுஞ் சீரியரென்னத் தட் டில்லையென்று கருத்து உரைப்பர் ஆன்றோர்: அதுவும் இங்குப் பொருந்தும். அமரர்க்கும் = அமரரினும்: உருபுமயக்கம். (51)

52. **குருகூர்நகரெம்பிரானடியாரொடுங்கூடியன்புற்**
றொருகூரையிலுறைவார்க்குமுண்டேயெம்மையுள்ளுஞ்சுற்று
மிருகூர்வினையுமறுத்திறப்பார்க்குமியற்கையவ்வூ
ரருகூரருகிலயலயலார்க்குமரியதன்றே.

(இ - ள்.) எம்மை - ஜீவாத்மாக்களாகிய நம்மை, உள்ளும் சுற்றும் - (புறத்தேயன்றி) அகத்தும் சூழ்ந்துள்ள, இரு கூர் வினையும் - மிகுதியான (புண்ணியம் பாவம் என்னும்) இருவகைக் கருமங்களையும், அறுத்து - துணித்து, இற பார்க்கும் - (அவ்வினை மரம்) வேரோடு அழியும்படி செய்யும்படியான, இயற்கை - தன் மையானது,—குருகூர் நகர் - திருக்குருகூரென்னுந் திருநகரியிலே திருவவதரித்த, எம் பிரான் - எமது தலைவரான நம்மாழ் வாருடைய, அடியாரொடும் - அடியார்களுடனே, கூடி - சேர்க் கை கொண்டு, அன்பு உற்று - (அவர்கள்பக்கல்) அன்புகொண்டு, ஒரு கூரையில் உறைவார்க்கும் - (அவர்களுடன்) ஒருமனையிலே

வசிப்பவர்களுக்கும், உண்டே - உள்ளதேயாம்; (மற்றும்), அ ஊர் அருகு ஊர் அருகில் அயல் அயலார்க்கும் - அத்திருக்குருகூர்க்குச் சமீபத்தி லுள்ள ஊர்களின் பக்கத்து ஊர்களுக்கு அடுத்த வேறு ஊர்களி லுள்ளவர்களுக்கும், அரியது அன்று - (இருவினையையும் வேரோடு இறச்செய்யும் இயற்கை) அருமையானதன்று; (எ - று.) —உண்டே, அன்றே என்ற ஏகாரம் இரண்டும் - தேற்றம்.

தீமனங்கெடுத்து நன்மனங்கொடுத்தலும், வானேறவழிதருதலும் எம்பெருமான்செயல்களல்லவோ? அவற்றை ஆழ்வார்செயலாகக் கீழ்ச்செய்யுளிற்கூறியது பொருந்துமோ? என்ன, 'அந்த எம்பெருமானது திருவவதாரமான நம்மாழ்வாருடைய அடியாரடியார்களுக்கும் அவரோடு நேரிலேனும் இடைவிட்டேனும் சம்பந்தமுடையார்களுக்கும் அந்தப் பகவத்கடாக்ஷம் கைகூடியதேயாம்' என்றவாறுகும் இது.

'எம்பிரான்' என்றது - எம்பெருமானே நம்மாழ்வார் என்றவாறு. எம்பிரானடியார்' என்றது - ஸ்ரீமதுரகவிகள், நாதமுனிகள், பராங்குசதாஸர் போல்வாரை. 'அன்புஉற்று' என்றதில், அவர்கள்பக்கல் தாம் அன்புகொள்ளுதலேயன்றி அவர்களுடைய அன்புக்குத் தாம் இலக்காதலும் அடங்கும். 'இன்புற்று' என்ற பாடத்துக்கு - அந்நல்லோர்சகவாசத்தாலாகும் ஆனந்த மடைந்து என்று பொருள். ஒருகூரையிலுறைதல் - 'தொண்டக்குடி' என்றபடி ஒருகுடியில் வாழ்தல். கூரை - வீட்டின்மேற்புறத்து வேயப்படுவது; இது, இங்கு இலக்கணையாய், வீட்டைக் குறிக்கும். எல்லாவுயிர்களையுங் கூட்டி, 'எம்மை' என்றார்: உளப்பாட்டுத் தன்மைப்பன்மை. உடம்புடன்கூடிவாழும்போதும் அதனைவிட்டு நீங்கியபோதும் உயிரைக் கருமம் விடாதுதொடர்தலால், 'உள்ளுஞ் சுற்றும் வினை' எனப்பட்டது. நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாதலால், இருவினையுங் கூறினார்; "இருள்சேரிருவினையுஞ் சேரா" என்றார் திருவள்ளுவனாரும். 'கூர் வினை' என்றதில், சஞ்சிதம் பிராரப்தம் ஆகாம்யம் என்று மூன்றுவகைக் கருமங்களும் அடங்கும். 'குருகூரருகுஊர்' என்றது, திருக்குருகூரெனப்படும் ஆழ்வார்திருநகரிக்கு அருகிலுள்ள ஸ்ரீவைகுண்டம் முதலிய நவதிருப்பதிகளை.'அவ்வூரருகில் அயல்'என்றது,திருவழுதி வளநாடுமுழுவதிலுமுள்ள எல்லாவூர்களையும். 'அதனயலார்' என்றது, எல்லாநாடுகளிலும் உள்ளாரையும். எங்கு இருந்தாலும் ஆழ்வார்சம்பந்தமுடையாரானார் உய்வுபெறுவ ரென்றபடி.

கூர் - உரிச்சொல். இயற்கை - இயல்பு. இறப்பார்க்கும் என்றவிடத்து, பார்த்தல்-செய்தலென்ற பொருளில் வந்தது; ('காண்' என்ற வினை 'செய்' என்ற பொருளில் வருதலைப் பலவிடத்துங் காண்க.) (52)

[தலைவன்பிரிந்தநிலையில் ஆற்றாத தலைவி இரங்கிக்கூறல்.]

53. அன்றாதவன்றிலையும்மன்றுவித்தென்னையன்னையுடன்
பின்றாதவண்ணமெல்லாம்பின்றுவித்துப்பிறைக்கொழுந்தை
யொன்றாதவண்ணமுபாயமியற்றியதூழ்வினையை
வென்றான்குருகைப்பிரான்மகிழேயன்றிவேறில்லையே.

(இ - ள்.) அன்றாத அன்றிலையும் அன்றுவித்து - (எவரோடும்) பகைகொள்ளாத அன்றிலென்னும்பறவையையும் (இப்பொழுது என்னோடு) பகைகொள்ளும்படிசெய்து, என்னை—, அன்னையுடன் பின்றாத வண்ணம் எல்லாம் பின்றுவித்து - (எனது) செவிலித்தாயுடனே மாறுபடத்தகாத வகையெல்லாம் மாறுபடும் படி செய்து, பிறை கொழுந்தை - இளஞ் சந்திரனை, ஒன்றாத வண்ணம்-(என்னோடு) வேறுபாடுகொள்ளும்படி, உபாயம் இயற்றியது - சூழ்ச்சிசெய்தது, (யாதோவெனில்—),—ஊழ்வினையை வென்றான் - விதியை வென்றிட்டவராகிய, குருகை பிரான்-திருக்குருகூரில் அவதரித்த தலைவரான நம்மாழ்வாருடைய, மகிழே அன்றி - மகிழம்பூமாலையே யல்லாமல், வேறு இல்லை-வேறொன்றுமில்லை; (எ - று.)—ஈற்று ஏகாரம் - தேற்றம்.

இயற்கைப்புணர்ச்சிமுதலியவகைகளால் தலைவியைக் களவிற் கூடிநின்ற தலைவன் அங்குப் பழியெழுந்ததென்று தோழியால் விலக்கப்பட்டபின்னர் அப்பழியடங்கச் சிலநாள் ஒருவழிப்பிரிந்துறைத லுண்டு; அது, ஒருவழித் தணத்த லெனப்படும். அன்றி, களவுப்புணர்ச்சிபெற்ற தலைமகன் தோழியால் வரைவுமுடுக்கப்பட்டுத் தலைமகளை வரைந்துகொள்ளுதற்கு வேண்டிய பொருள் தேடுதற்பொருட்டும் பிரிவன்; அது, வரைபொருட்பிரித லெனப்படும். அங்ஙனம் தலைமகன் பிரிந்த சமயங்களில், அப்பிரிவையாற்றாத தலைவி, நெஞ்சொடுகூறலாகத் தன்னிலேதான் இரங்குதலும், மனமொத்த தன்உயிர்த்தோழியோடு இரங்குதலுஞ் செய்வள். இங்ஙனம் இச்செய்யுட்குத் துறைப்போக்கு உணர்க.

அன்றிற்பறவை, எப்பொழுதும் ஆணும்பெண்ணுமாகிய இரட்டையாகியே நிற்கும். கணப்பொழுது ஒன்றையொன்று விட்டுப்பிரிந்தாலும் அத்துயரத்தைப்பொறாமல் ஒன்றையொன்று இரண்டு மூன்று தரம் கத்திக்கூவி அதன்பின்பும் தன்துணையைக் கூடாவிடின் உடனே இறந்துபடும். ("எரிதகைந்தன்னசெந்தலையன்றில், பிரியின்வாழாது" என்றதுங் காண்க. இதனை வடநூலார் 'க்ரௌஞ்சம்' என்பர். தமிழில் 'குருகு' எனவும்படும்.) எப்பொழுதும் இணையாகவுள்ள அந்த அன்றிற்பறவையும், அது இரவிலே பார்வை குறைந்து துணையையிழந்து நலிந்து எழுந்து பறந்து வருந்துவதும், அந்நலிவால் அது கூவுகிற குரலும் காமோத்தீபகமாய்க் காமுகரைவருத்து மென்பது, கவிமரபு. அங்ஙனம் அன்றிற்பறவை பிரிந்தநிலையிலுள்ள தனக்கு வருத்தத்தை விளைத்தலே, இங்கு 'அன்றாதஅன்றிலையும்அன்றுவித்து' என்று குறிக்கப்பட்டது. அன்றுதல்-பகைத்தல்; "அன்றிய வாணனையிரந்தோளுந் துணியவன்றாழிதொட்டானை" எனப் பெரியதிருமொழியிலுங் காண்க.

இங்கு 'அன்னை' என்றது, செவிலித்தாயை. தலைமகள் இளமையிலேயே ஒருதலைமகனிடத்து வேட்கைவிஞ்சி அவனுடன் கொள்ளுங் காதற்குறிகளைக் குறிப்பாகவுணர்ந்த செவிலித்தாய் கோபித்து 'இவள் பிஞ்சிலேபழுத்துவிட்டாள்' என்பது முதலாகச் சில சிறுபுன்சொற்கள் சொல்லி நிர்ப்பந்திக்க, அவற்றைக்

குறித்துத் தலைமகள் தான் "அன்னையென் செய்யிலென் ஊர் என் சொல்லிலென் தோழிமீர்" என்றாற்போல வெறுப்புக்கொள்ள வேண்டுதலால், 'அன்னையுடன் பின்றாத வண்ணமெல்லாம் பின்றுவித்து' என்றாள். மாலைப்பொழுதிலே விளங்குகிற பிறைச் சந்திரன் காமோத்தீபகப் பொருள்களி லொன்றாய்ப் பிரிந்தவரை வருத்துதல்பற்றி, பிறைக்கொழுந்தை 'ஒன்றாதவண்ணம்' எனப் பட்டது. ஒன்றாமை - பொருந்தாமை. ஆழ்வார், தாம் எம்பெருமான் திருவடிகளில் சரண்புகுந்து பெற்ற திருவருளால் தவறுவலியினவான வினைகளனைத்தையும் வேரோடு களைந்திட்டன ராதலால், 'ஊழ்வினையை வென்றான்' எனப்பட்டனர். தலைவனைப் பிரிந்த நிலையில், தலைவி, அவனது சம்பந்தம்பெற்ற மலர்மாலையையாயினும் தான் பெற்று ஆறியிருக்க அவாவியதனால், 'குருகைப் பிரான் மகிழேயன்றி வேறில்லை' எனப்பட்டது.

முதலிரண்டடிகளில் 'அன்றாத' 'அன்றுவித்து' எனவும், 'பின்றாத' 'பின்றுவித்து' எனவும் வந்த இடங்களில் **தொடைமுரண்** காண்க. 'கொழுந்து' என்றது - இளமையின்மேலது. இனி, நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்வதென்பது பற்றி, 'பிறைக்கொழுந்து' எனப்பட்டது. இயற்றியது - பெயர்.

நம்மாழ்வார் சிற்சிலசமயங்களிற் கம்பநாடரது அகக்கண்ணுக்குப் புலனாகி மறைய, அவ்வளவிலே திருப்திப்படாமல் ஸதா ஸாந்நித்தியத்தில் அபேக்ஷையாற் பிரிவாற்றாது வருந்துகிற கம்பநாடர், வேறுபலர்க்கு இன்பந்தருகிற பிரபஞ்சவிஷயங்கள் பலவும் தமக்குப் பிரியப்படாதபடி தம்மைச் செய்தது விதியை வென்றவரான ஆழ்வாருடைய காட்சியினிமை யென்று இரங்கிக் கூறுதல், இதற்கு உள்ளுறைபொருள். விவரம் கேட்டுணர்க. (53)

**54. வேறேநமக்கிவனன்புடைமெய்யடியானென்றுள்ளந்
தேறேனெனலதுதேறத்தகுஞ்செந்தமிழ்ப்புலவர்க்
கேறேயெதிகளுக்கின்னமுதேயெறிநீர்ப்பொருநை
யாறேதொடர்குருகூர்மறையோர்பெற்றவாணிப்பொன்னே.**

(இ - ள்.) செம் தமிழ் புலவர்க்கு ஏறே - செவ்விய தமிழ்ப் பாஷையில் தேர்ந்த பண்டிதர்களுட் சிங்கம்போன்றவனே! எதிகளுக்கு இன் அமுதே - முற்றத்துறந்த முனிவர்களுக்கு இனிமையான அமிருதம் போன்றவனே! எறி நீர் பொருநை ஆறே தொடர் குருகூர்-அலைவீசுகின்ற நீர்ப்பெருக்கையுடைய பொருநையாறென்னுந் தாமிரபர்ணிநதி இடையறாது பாயப்பெற்ற திருக்குருகூரில் திருவவதரித்த, மறையோர் பெற்ற ஆணிப்பொன்னே-வைதிகர்கள் பெரும்பேறாகப்பெற்ற மாற்றுயர்ந்த அரும்பொன் போன்றவனே!—இவன் நமக்கு வேறே அன்பு உடை மெய் அடியான் என்று உள்ளம் தேறேன் எனல் - இவன் நம்பக்கல் பொதுப்படவன்றிச் சிறப்பாக அன்புள்ள உண்மையடியவன் என்று (என்னைக்குறித்து) மனப்பூர்வமாக நம்பமாட்டேனென்று கொள்ளாதே; அது தேறத்தகும் - அங்ஙனம் மெய்யடியவனாக

(என்னை நீ) நம்பத்தகும்; (எ - று.)—குருகூர் ஆணிப்பொன் என இயையும்.

ஆதிதொடங்கி நான் உனக்கு ஆட்பட்டு உய்வுபெறாது பழுதே பலபகலும்போக்கிப் பலவேறுவகையாகத் திரிந்தமைபற்றி, என்னை இப்பொழுது நின்பக்கல் அஸாதாரணமான நிஜபக்தியையுடைய மெய்யன்ப னென்று துணியேனென மனங்கொள்ளலாகாது; "அன்றுநான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்றபடி இப்பொழுது நான் உண்மை யன்புடைய மெய்யடியவனென்பது சத்தியம் என்று ஆழ்வாரைக்குறித்துத் தமது உண்மை நிலையை விண்ணப்பஞ் செய்தவாறும். நமக்கு இவன் வேறே என்று எடுத்து, நமக்கு இவன் புறம்பானவனே என்று உரைத்தலுமொன்று.

"அரசருளேறு" என்றாற்போல, 'செந்தமிழ்ப்புலவர்க்கு ஏறு' என்றார். ஏறுபோல்பவனை ஏறுஎன்றது, உபசாரவழக்கு. அமுது, பொன் என்பனவும் இவ்வாறே. தனது பலபராக்கிரமங்களால் மிருகங்களுள் அரசாய்ச் சிறக்கிற சிங்கம்போல, தமது தெய்வப் புலமையால் செந்தமிழ்ப்புலவர்களுள் தலைமைபூண்டு விளங்குகிறவர் ஆழ்வார் என்க. சிங்கம் காளை முதலிய சிலசொற்கள், சிறப்பை யுணர்த்துவனவாய் ஆடவர்க்கு வழங்கும். யதி என்ற வடமொழி - ஜிதேந்திரியனென்று பொருள்படும்: பொறிகளையெல்லாம் அடக்கியவன். அவ்வடசொல், தமிழில் 'எதி' என விகாரப்பட்டது; எதிகளுக்கு இன்அமுது - ஐம்பொறிவென்ற முனிவர்களுக்கு அமிருதம்போலினியவர் என்க. ஆணிப்பொன் - மாற்றறிதற்குக்கொள்ளும் உயர்தரப்பொன்; இதற்குமேலே மாற்றில்லை யென்னும்படியான சிறந்தபொன் என்றும் உரைப்பர். மறையோர்பெற்ற ஆணிப்பொன் - அந்தணர்கள் விரும்பிப் பாராட்டப்பெற்றவர் என்க. மற்றையடியார்களுடைய ஞான அநுஷ்டானங்களின் தரத்தையும், மற்றைப்புலவரியற்றிய கவிகளின் தரத்தையும் அறிதற்கு அந்தணர்களால் நிதர்சநமாகக் கொள்ளப்படுபவ ரென்றுங் கொள்க. வணிகர்பெறும் ஆணிப்பொன் அது; இவரோ மறையோர்பெற்றஆணிப்பொன் என்றவாறு. தேறத்தகும் - ஒருவகை வியங்கோள். (54)

55. பொன்னையுரைப்பதப்பொன்னுடன்றேபுலமைக்கொருவ
ருன்னையுரைத்துரைத்தற்குளரோவுயர்நாற்கவியும்
பின்னையுரைக்கப்பெறுவதல்லாற்பெருந்தண்குருகூர்த்
தென்னையுரைக்குமியற்குமிசைக்குஞ்சிகாமணியே.

(இ - ள்.) பெருந் தண் குருகூர் - மகிமையுள்ளதும் நீர்வளத்தாற் குளிர்ந்ததுமான திருக்குருகூரிலே திருவவதரித்த, தென்னை உரைக்கும் இயற்கும் இசைக்கும் சிகாமணியே - தமிழ்ப்பாஷைக்கும் அதன்பகுதிகளான இயற்றமிழுக்கும் இசைத்தமிழுக்கும் தலையிலணியும் இரத்தினாபரணம்போல அணிவரும் தலைமேற்

கொண்டு கொண்டாடப்பெற்றவனே!—பொன்னை உரைப்பது அ பொன்னொடு அன்றே - (மாற்றறியுமாறு) பொன்னை (உரை கல்லில்) உரைத்துப்பார்ப்பது அதற்குச்சிறிதுமேல்கீழாகவுள்ள பொன்னுடன் வைத்து உரைத்தன்றோ? (அங்ஙனம் நோக்கப்புகுமிடத்து), உயர் நால் கவியும் பின்னை உரைக்க பெறுவது அல்லால்- சிறந்த நால்வகைக் கவிகளனைவரும் கடைசித்தரமாகச் சொல்லத் தகுவதே யல்லாமல், புலமைக்கு உன்னை உரைத்து உரைத்தற்கு ஒருவர் உளரோ - கல்வித்திறத்தில் உன்னைச்சொல்லி உனக்கு ஈடாக மற்றுஞ்சொல்வதற்கு வேறொருவர் இருக்கின்றனரோ? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)—குருகூர்ச்சிகாமணி என இயையும்.

கீழ்ச்செய்யுளில் 'செந்தமிழ்ப்புலவர்க்கேறே' என்றும், 'மறையோர் பெற்ற ஆணிப்பொன்னே' என்றும் கூறியதற்கு ஒருசார் விவரணமாகின்றது, இச்செய்யுள். மாற்றுவகையொவ்வொன்றிலும் சரியான மாற்றுள்ள உரையாணிப்பொன்னை உரைகல்லில் உரைத்து அதற்குச் சிறிதுஏற்றத்தாழ்வாகவுள்ளபொன்னின் உரையை அதனுடன்ஒப்புநோக்கிப் பொன்னின்தரத்தையறிவது இயல்பு. அங்ஙனம் செந்தமிழ்க்கவித்திறத்தில் உன்னைச் சொல்லி மற்றும் உன்னோடுசிறிதுமுன்பின்னாக ஒப்புமையுடையவரென்று காட்டப்பெறும்படி ஒருவருமில்லை; சிறந்தவரெனப்படுகிற நால் வகைக்கவிகளெல்லாரும் உன்னைநோக்குமிடத்து மிகவும் இழிவானதரத்தில் நிற்றலால் என்பது, இதன்கருத்து. அன்றே - தேற்றம். உளரோ, ஓ - எதிர்மறை.

பரதகண்டத்திலே தென்பகுதியில் வழங்கும் பாஷையாதலால், தமிழுக்குத் தென்மொழி, தென்சொல், தென்கலை என்பனபோல, 'தென்னுரை' என்றும் ஒரு பெயருண்டு. அதனை "அன்னநடையாரலரேச வாடவர்மேல், மன்னுமடலூராரென்ப தோர்வாசகமும், தென்னுரையிற் கேட்டறிவதுண்டு" எனப் பெரியதிருமடலிலுங் காண்க. அப்பெயர், எதுகைநயத்தின் பொருட்டு இடையில் ஐகாரச்சாரியைபெய்து, 'தென்னையுரை' எனப்பட்டது. இனி, ஐ - அழகிய, தென்உரை - தென்மொழி யென்றலும் ஒன்று. "குருகையர்கோன் யாழினிசைவேதத்தியல்" என்றபடி நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி முதலிய திவ்வியப்பிரபந்தங்களில் இயற்றமிழ்ப் பொலிவும் இசைத்தமிழ்ப் பொலிவும் மிக்குவிளங்குதலால், அவை தனியே பாராட்டியெடுத்துக் கூறப்பட்டனவென்க. இனி, தென்ஐ என்பதற்கும் தென்னாட்டுக்குத்தலைவனாயுள்ளவனே! என்றும், அழகிய கடவுளே! என்றும், அண்மைவிளியாகப் பொருள்கொள்ளவுங் கூடும்; அன்றி, தென்னை உரைக்கும் என்பதை இயற்கும் இசைக்கும் அடைமொழியாக்கி, அழகாகவும் வியக்கத்தக்கபடியுஞ் சொல்லப்படுகிற இயற்றமிழ்க்கும் இசைத்தமிழ்க்கும் என்னவும் அமையும். 'குருகூரென்னை' என்ற பாடம், குருகூரில் அவதரித்த எனது இறைவனே யென்று பொருள்படும்; என்ஐ = நம்ஆழ்வார்.

[மகட்பாற்காஞ்சி.]

56. மணித்தாரரசன்றன்னோலையைத்தூதுவன்வாய்வழியே
திணித்தாசழியச்சிதைமின்றலையையெந்தீவினையைத்
துணித்தான்குருகைப்பிரான்றமிழாற்சுருதிப்பொருளைப்[யையே.
பணித்தான்பணியன்றெனிற்கொள்ளுங்கொள்ளுமெம்பாவை

(இ - ள்.) எம் தீ வினையை துணித்தான் - எம்முடைய கொடிய கருமங்களைப் போக்கியருளியவரும், சுருதி பொருளை தமிழால் பணித்தான் - வேதங்களின் பொருளைத் தமிழ்ப்பாடல்களினாற் பாடியருளியவரும் ஆகிய, குருகை பிரான் - திருக்குருகூரில் அவதரித்த தலைவரான நம்மாழ்வாருடைய, பணி அன்று எனில் - கட்டளையன்றாயின்,—மணி தார் அரசன்தன் ஓலையை - அழகிய மாலையைத் தரித்த அவ்வரசனது திருமுகத்தை, தூதுவன் வாய் வழியே திணித்து - (அதனைக்கொண்டுவந்த) தூதனது வாயினுள்ளே புகுத்தி அவ்வாயை நன்றாக அடைத்து, ஆசு அழிய தலையை சிதைமின் - ('பெண்ணைக்கொடு' என்றுகேட்ட) குற்றந்தீருமாறு (அத்தூதனது) தலையைத் துணித்திடுங்கள்; எம் பாவையை கொள்ளும் கொள்ளும் - (எம்குருகைபிரானன்றி மற்றோரரசன்) எமது பெண்ணைக் கொள்வான் போலும்! கொள்வான் போலும்!! (எ - று.)

மகட்பாற்காஞ்சியென்பது-புறப்பொருள்திணை பன்னிரண்டனுள் காஞ்சித்திணைக்கு உரிய பலதுறைகளில் ஒன்று. அதாவது - நின்மகளை எனக்குத்தருக வென்றுசொல்லும் அரசனோடு மாறுபடுவது; "ஏந்திழையாட்டருகென்னும் வேந்தனோடு வேறுநின்றன்று—அளியகழல்வேந்த ரம்மாவரிவை, யெளியளெனவெள்ளியுரைப்பிற் - குளியாவோ, பண்போற் கிளவியிப் பல்வளையாள் வாண்முகத்த,கண்போற்பகழிகடிது" என்ற புறப்பொருள் வெண்பாமாலையைக் காண்க. "பேசவந்ததூத செல்லரித்தவோலை செல்லுமோ பெருவரங்களருளரங்கர் பின்னைகேள்வர் தாளிலே, பாசம் வைத்த மறவர்பெண்ணை நேசம்வைத்து முன்னமே பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா, வாசலுக்கிடும்படல் கவித்து வந்தகவிகை மா மகுட கோடி திணையளக்கவைத்த காலு நாழியும், வீசுசாமரங் குடிற்றெடுத்தகற்றை சுற்றிலும் வேலியிட்டதவர்களிட்ட வில்லும் வாளும் வேலுமே" என்றாற்போலக் கலம்பகங்களில் மறவர்வார்த்தையாக வரும் 'மறம்' என்னுந் துறை இதன் இனமாம். குருகைப்பிரானுக்கே உரிமைபூண்பவளான தமது மகளை மணம்பேசும்படி ஓர் அரசனால் ஓலைகொடுத்து அனுப்பப்பட்ட தூதன் அவ்வரசன்கட்டளைப்படி தம்பக்கல்வந்து ஓலை கொடுத்துச் சிலவார்த்தை கூறி மணம்பேசுவானாக, அம்மகட்கு உரியார் மிகக்கோபங்கொண்டு அந்த மணப்பேச்சைமறுத்து அவ்வரசனைக்குறித்துப் பரிகசித்து அத்தூதனை நன்றாகத்தண்டிக்குமாறு தமதுபரிசனங்களை நோக்கிக் கட்டளை கூறினரென்க.

'குருகைப்பிரான்பணி யன்றெனின்......தலையைச்சிதைமின்' என்றதனால் இத்தூதன்கொணர்ந்த ஓலை எமதுமகளைக்கொள்ளு

தற்கு ஏற்ற குடிப்பிறப்பு முதலிய சிறப்புக்களையுடைய குருகைப் பிரானது கட்டளையடங்கியதாயின் ஏற்றுக்கொள்ளுங்கள்; அது வன்றி, மற்றோரரசனதாயின் அதுகொண்டுவந்த இத்தூதனைத் தண்டியுங்களென்றவாறும். அம்மகட்பேச்சுக்குத்தாம் இணங்காததேயன்றி அப்பேச்சைக்கேட்டதுமாத்திரத்திலும் விருப்பங் கொள்ளாமையால், அத்தூதன் மேன்மேற்பேசாதபடி முதலில் அவன் வாயில் அவ்வோலையை அடையுங்களென்பார், 'ஓலையைத் தூதுவன்வாய்வழியே திணித்து' என்றார்; அவ்வோலையைச் சிதைத்தலும் செய்யவேண்டுமென்க. ஆசு - குற்றம்; இங்குக் குருகைப் பிரானுக்கு அடிமையென்பது பிரசித்தமாயிருந்தும் மகட்பேச வந்தது குற்றம். அவ்வரசன் எமதுமகளை ஒருகாலும் ஒருபடியாலும் கொள்ளானென்பார், இகழ்ச்சிக்குறிப்பாக 'கொள்ளுங் கொள்ளும் எம்பாவையை' என்றார்; அடுக்கு - இகழ்ச்சியை விளக்கும்.

"கண்டுகொண்டென்னைக் காரிமாறப்பிரான், பண்டைவல் வினைபாற்றி யருளினான்" என்றபடி அடிமைபூண்டஎமது அருவினையைத் தீர்த்தருளியவரும், "அவ்வருமறையின்பொருள் அருள்கொண்டு ஆயிரமின்தமிழ்பாடினான்" என்றபடி அறிதற்கரிய மறைப்பொருளை அனைவரும் எளிதில் அறிந்துஉய்யுமாறு தமிழிற்பாடியருளியவருமாகிய நம்மாழ்வார்க்கே அடிமை பூண்ட எமதுஉயிர் பிறிதொரு கடவுளர்க்கேனும் மானிடர்க்கேனும் உரிமை பூணாது என்று, அங்ஙனம் பிறர்க்கு ஆட்படுத்த முயல்வாரை நோக்கிக் கம்பநாடர் கடிந்துகூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருள். விவரம் கண்டுகொள்க.

மணித்தார் - இரத்தினஹாரமுமாம். பாவை - சித்திரப்பிரதிமை போல அழகியவள், கண்மணிப்பாவைபோல் அருமையானவள், கொல்லிப்பாவைபோலப் பிறர் மோகித்துஅழிதற்குக் காரணமாகுபவள்: உவமையாகுபெயர். "எல்லாம் வெகுண்டார் முன் தோன்றாக்கெடும்" ஆதலால், "இரவல ரிளையவரேத்து நாவலர், விரவியதூதுவர் விருத்தர் வேதியர், அரிவையர் வெஞ்சமரஞ்சுவோர் பெருங், குரவரென்றிவர்களைக் கோறல் பாவமே" என்ற நீதியைக் கோபாவேசத்தால் மறந்து இங்ஙனம் 'தூதுவன் தலையைச் சிதைமின்' என்று கொடியகட்டளை கூறினரென்க. (56)

57. பாவைத்திருவாய்மொழிப்பழத்தைப்பசுங்கற்பகத்தின்
பூவைப்பொருகடற்போதாவமுதைப்பொருள்சுரக்குங்
கோவைப்பணித்தவெங்கோவையல்லாவென்னைக்குற்றங்கண்
ணுவைப்பறிப்பினுநல்லரன்றேமற்றைநாவலரே. [டென்

(இ - ள்.) பழத்தை - (மிக்கஇனிமையாற் கனிந்த) பழம் போன்றதும், பசுங் கற்பகத்தின் பூவை - (வேண்டுவார் வேண்டும் பயன்களைத்தரும் ஆற்றலினாலும் அனைவரும் விரும்பித் தலைமேற் கொள்ளப்பெறுஞ் சிறப்பினாலும்)பசுமையான கற்பகவிருக்ஷத்தின் மலர்போன்றதும், பொரு கடல் போதா அமுதை - (உண்ண உண்ணத் தெவிட்டாமையால்) அலைமோதும் பாற்கடலினின்று

தோன்றுததோர் ஆராவமுதம்போன்றதும், பொருள் சுரக்கும் கோவை - நற்பொருளாகிய பாலை மேன்மேற்சுரக்கும் காமதேநு போன்றதும் ஆகிய, திருவாய்மொழி பாவை - திருவாய்மொழியென்னும் (தொடர்நிலைச்) செய்யுளை, பணித்த - திருவாய்மலர்ந்தருளிய, எம் கோவை - எமது இறைவரான நம்மாழ்வாரை, அல்லா-அல்லாது பிறரை முன்பு பாராட்டிப் புகழ்ந்து கவிபாடிய, என்னை—, குற்றம் கண்டு - (முன்னமே இவரைப்பாடாத) குற்றமுடையனாகஉணர்ந்து, மற்றை நாவலர் என் நாவை பறிப்பினும் - (அக்குற்றத்துக்குஏற்றதண்டனையாக) மற்றைப்புலவர்கள் எனது நாக்கைப் பிடுங்கிவிட்டாலும், நல்லர் அன்றே - நல்லவரல்லரோ? [நல்லவரேயாவர் என்றபடி]; (எ - று.)

பழமும் கற்பகமலரும் அமுதமும் பசுவும் போன்ற திருவாய்மொழியென்னுந் திவ்வியப்பிரபந்தத்தைப் பாடி உலகுக்கு உபகரித்தவரும், எல்லாவுயிர்கட்குந் தலைவருமாகிய நம்மாழ்வாரது மகிமையை உணர்ந்து அவரையேபாடுவது கடவதாயிருக்க, அதுசெய்யாது இதுவரை யான் பிறரைப் பொருள்செய்து கொண்டாடிப்பாடிய குற்றத்திற்காகத் தக்கபுலவர்கள் என்னை நாவைப் பறித்திட்டாலும் தகு மென்பதாம். பழுதேபலபகலும்போயின வென்று அஞ்சி அதுகுறித்து அநுதாபங்கொண்டு அக்கழிவிரக்கத்தாற் கூறியது இது. குற்றஞ்செய்தவர் இம்மையிலேயே தக்கவரால் தக்கதண்டனை பெறுவராயின், அவ்வளவோடு, அத்தீவினை தீர்ந்திடுதல்பற்றி அவ்வினைப்பயனால் மறுமையில் நரகமடையாரென்பது நூல்துணிபாதலால், அங்ஙனம் தமக்குநன்மைசெய்வாரை 'நல்லரன்றே' என்றார். அன்றே - தேற்றம். அன்று ஓ என்ற இரண்டுஎதிர்மறை, ஒருங்குதொடர்ந்து உடன்பாட்டுப் பொருளை உணர்த்தித் தேற்றக்கருத்தை விளக்கினவென்க.

பா - இங்கு, பாடல்களினாலாகிய பிரபந்தத்துக்குக் கருவியாகுபெயர். பாடலுக்குஉரிய இலக்கணங்களெல்லாம் நன்கு அமைந்த பாடலென்பார் 'பா' என்று சிறப்பித்துக் கூறினரெனக் கொள்ளலாம். 'கற்பகத்தின்பூ' என்றதை, "என்றும்புலராதியாணர்நாட்செல்லுகினு, நின்றலர்ந்துதேன்பிலிற்றுநீர்மையதாய்—குன்றாத, செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத்திருமலர்போல், மன்புலவன் வள்ளுவன் வாய்ச்சொல்" என்ற திருவள்ளுவமாலையோடு ஒப்பிடுக. 'பொருகடற்போதாவமுது' என்றது, இல்பொருளுவமை. 'பழகப்பழகப் பாலும் புளிக்கும்' என்ற தன்மை இத்திருவாய்மொழியமுதுக்கு இல்லையென்க. மிகுதியாக அலையெறியுமாறு கடையப்பட்ட திருப்பாற்கடலினின்று தோன்றிய அமிருதம் சிலகாலமளவும் மரணமில்லாத தெய்வப்பிறப்பின் சிற்றின்ப வாழ்க்கையையே தரவல்லதாம்; இத்திருவாய்மொழியமுதமோ எந்நாளும்அழியாத முத்தியுலகத்துப் பேரின்ப வாழ்க்கையைத் தருவதாதலால், இதனை 'பொருகடற்போதாவமுது' எனவேண்டிற்று. "துறவாதவர்க்குந் துறந்தவர்க்குஞ் சொல்லே சுரக்கும், அறவாவிவையிங் கொராயிரநிற்கவந்தோசிலர்போய், மறவாதியர்சொன்ன வாசகமாமலட்டாவைப் பற்றிக், கறவாக்கிடப்ப ரென்பெறவோ தங்கள் கைவலிப்பே" என்று

மேல்வகுத்துக் காட்டியதனைத் தொகுத்துச்சுட்டி 'பொருள் சுரக்குங்கோ' என்றார்; கோ - வடசொல். 'கோவைப்பணித்த வெங்கோவை' என்றவிடத்து மடக்கு என்னுஞ் சொல்லணி காண்க. கோ - அரசனை யுணர்த்தும்போது, தமிழ்மொழி. நாவலர் - கவநம், பிரசங்கம், போதனை முதலிய நாவின்வன்மை யுடையவர். (57)

58. நாவலந்தீவிற்கவிகளெல்லாஞ்சிலநாள்கழியப்
பூவலந்தீவதுபோல்வவல்லாற்குருகூர்ப்புலவன்
கேவலந்தீங்கறுப்பான்கவிபோலெங்கும்போய்க்கெழுமிக்
கூவலந்தீம்புனலுங்கொள்ளுமேவெள்ளங்கோளிழைத்தே.

(இ-ள்.) அம் நாவல் தீவில்-அழகிய ஜம்பூத்வீபத்தில், கவிகள் எல்லாம்-(பிறர்பாடிய)பாடல்களெல்லாம், சில நாள் கழிய-சில நாள்கழிகிறவளவிலே, பூ வலம் தீவது போல்வ அல்லால்-மலரினது (மணம் மென்மைமுதலிய) சிறப்புக் கெட்டழிவதுபோலத் தாம் கெட்டிடுமே யல்லாமல்,—தீங்கு கேவலம் அறுப்பான் குருகூர் புலவன் கவி போல் -(அடியார்களுடைய)தீவினைகளை எளிதில் தீர்த்தருள்பவரும் திருக்குருகூரில் அவதரித்த சிறந்த புலவருமாகிய நம்மாழ்வாருடைய திருவாய்மொழிப் பாசுரங்கள்போல, —எங்கும் போய் கெழுமி-எவ்விடத்தும் போய்ப் பரவி, வெள்ளம் கோள் இழைத்து-வெள்ளத்தையொத்தல்செய்து [வெள்ளம் போல்வதாய் என்றபடி], கூவல் அம் தீம் புனலும் கொள்ளுமே-கிணற்றிலுள்ள அழகிய இனிய நீரையும் கொள்ளமாட்டுமோ? [மாட்டா என்றபடி]; (எ - று.)

மணமும் பொலிவு முடையனவாய்ப் பூத்த மலர்கள் விரைவில் அச்சிறப்புநிலைகுலையப்பெற்று வாடியழிதல்போல, உலகத்திற் பிறர்பாடும் பாடல்களெல்லாம் அப்பொழுது சிறந்தனவாகக் காணப்பட்டாலும் என்றும் அழிவின்றி நிலைத்து நிற்கமாட்டா; ஆழ்வார் பாசுரங்களோ அங்ஙனமன்றி என்றும் அழியாது எங்கும் போய்ப் பரவிப் பெருவெள்ளம்போல்வனவாகிக் கிணற்றகத்து நீர்போல் அகத்துநின்ற அந்தரியாமியான பரமாத்மாவின் சொரூபத்தையும் தன்மேல் விளங்கும்படிகொண்டு வெளிக்காட்டுமென்பதாம். 'கிணற்றுநீரை வெள்ளம் கொள்ளாது' என்ற பொதுவழக்குக்குச் சிறப்பாக இத்திருவாய்மொழி வெள்ளம் எத்துணையாழ்பொருளையும் தன்னிலேபுலப்படுத்துமென்க.

இந்தப்பூமியின் நடுவிலுள்ள மகாமேருமலையை யடுத்துத் தெற்கிலுள்ள கந்தமாதநகிரியின்மேல், பதினோராயிரம் யோசனையளவுள்ளதாய்ப் பிரகாசிக்கிறதொரு நாவல்மரம் இருக்கின்றது; அதனையுடைமைபற்றி,இந்தப்பூமிக்கு ஜம்பூத்வீபம்என்கிற பெயர் உண்டாயிற்று என்று புராணம் கூறும். அது, தமிழில் நாவல்தீவு எனப்பட்டது. நாவலந்தீவு, கூவலம்தீம்புனல் என்ற விடங்களில், அம் - சாரியை யெனினுமாம். தீவு - த்வீபமென்ற வடசொல்லின் சிதைவு. கேவலம் தீங்கு அறுப்பான் - இழிவான குற்றங்களைப் போக்குபவன் எனினுமாம். தீங்கு கேவலம் அறுப்பான்-தீமைகளை

யெல்லாம் போக்குபவ னென்னவும் அமையும். கூபம் என்ற வட சொல்லின் விகாரமான கூவம் என்பது கூவல்என ஈறுதிரிந்தது. மற்றைப்புனலைக் கொள்வதேயன்றி யென்ற பொருளை யுணர்த்தலால், கூவலந்தீம்புனலும் என்ற உம்மை - இறந்தது தழுவிய எச்சம். கோள் - கொள்ளுதல்; கொள் என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர்: இது, இங்கு உவமவாசகமாய் நின்றது; கம்பராமாயணத்தில் "வாள்கொண்டகண்ணார்" என்றவிடத்திலும், கலித்தொகையில் "யாழ்கொண்டவிமிழிசை" என்றவிடத்திலும் 'கொண்ட' என்பது உவமவாசகமாய் நிற்றல்காண்க. இனி, 'வெள்ளங்கோளிழைத்து' என்பதற்கு - பிரளயவெள்ளத்துக்குப் பழிமொழிவிளைத்து என்று பொருள் செய்து, அனைத்தையும் அழிப்பதென்று பிரசித்தமான பிரளயவெள்ளத்திலும் தாம் அழியாதனவாய் அக்காலத்திலும் நிலைபெற்று என்று கருத்துக் கொள்ளுதலும் ஒன்று. (58)

59. ***இழைத்தாரொருவருமில்லாமறைகளையின்றமிழாற்***
குழைத்தார்குருகையிற்கூட்டங்கொண்டார்குமரித்துறைவர்
மழைத்தார்தடக்கைகளாலென்னைவானின்வரம்பிடைநின்
றழைத்தாரறிவுந்தந்தாரங்கும்போயவர்க்காட்செய்வனே.

(இ - ள்.) இழைத்தார் ஒருவரும் இல்லா மறைகளை - தம்மைச் செய்தவர் - யாருமில்லாத [நித்தியமான] வேதங்களை, இன் தமிழால் குழைத்தார் - இனிய தமிழ்ப்பாஷையினால் இயற்றித் தளிர்க்கச்செய்தவரும், குருகையில் கூட்டம் கொண்டார் - திருக்குருகூரில் தாம்சேர்தல்செய்தவரும் [குருகூரில் அவதரித்தவரும் என்றபடி], குமரி துறைவர் - கன்னியாகுமரி யென்னும் தீர்த்தத்துக்கு உரியவரும் ஆகிய நம்மாழ்வார், வானின் வரம்பு இடை நின்று - பரமபதத்தின் எல்லையில் நின்றுகொண்டு, மழைத்து ஆர் தட கைகளால் என்னை அழைத்தார் - மேகத்தின் தன்மை பொருந்திய பெரியகைகளினால் என்னை (அவ்விடத்துக்கு வாவென்று) அழைத்தார்; அறிவும்தந்தார் - (அங்ஙனம் அழைத்தது மாத்திரமல்லாமல் அவ்விடத்துக்கு யான் செல்லுதற்கு உரிய) தத்துவஞானத்தையும் (எனக்குத்) தந்தருளினார்; (ஆதலால்), அங்கும் போய் அவர்க்கு ஆள் செய்வன் - (யான்) அவ்விடத்தும் சென்று அந்த ஆழ்வார்க்கு அடிமைசெய்வேன்; (எ - று.)—ஈற்று ஏகாரம் - தேற்றம்.

தம்மை முத்திபெறும் விருப்பமுடையவராம்படியும், அது பெறுதற்கு ஏற்ற ஞானநலமுடையவராம்படியும் அருள்செய்த பரமாசாரியராகிய நம்மாழ்வார்பக்கல் தமக்குஉள்ள ஈடுபாட்டினால், பரமபதத்திலும் எம்பெருமானுக்கு நேரில் அடிமைசெய்யாது அவனடியார்களிற்சிறந்தவரான அவ்வாழ்வார்க்கே அடிமை செய்ய விரும்பினர் கம்பநாடரென்க.

வேதம் ஒருவராலுஞ்செய்யப்படாது பரப்பிரஹ்மம்போலவே நித்தியமாய் முக்காலத்திலும் ஒருபடிப்படநின்று அபௌருஷேய

மென்றும் செய்யாமொழியென்றும் பெயர்பெறுதலால், 'இழைத்தா ரொருவருமில்லா மறைகள்' எனப்பட்டன. கடினமான வடமொழியினின்று செவிக்கினிய செஞ்சொல்லான தமிழிற் கொணர்ந்து நயப்படுத்தினவரென்பார் 'மறைகளையின்றமிழாற் குழைத்தார்' என்றார். குருகையிற்கூட்டங்கொண்டார் என்பதற்கு - திருக்குருகூரிலே ஸ்ரீமதுரகவிகள் முதலிய அடியார்களுடைய குழாத்தை உடன்கொண்டு வாழ்ந்தவரென்று உரைத்தலும் அமையும். பாண்டியநாடு கன்னியாகுமரியென்னும் நதியையுடைத்தாயிருந்ததனால், பாண்டியனுக்கு 'குமரித்துறைவன்' என்றும், 'கன்னித்துறைவன்' என்றும் பெயர்கள் வழங்கும். கன்னியாகுமரியென்னுந் துறைமுகத்தையுடைய கடற்கரைக்குத் தலைவனென்றும் இப்பெயர்கட்குக் காரணப்பொருள் கூறலாம். துறைவனென்பது, நெய்தனிலத்தலைவன்பெயர். ஆழ்வார் பாண்டிய நாட்டில் தலைமைபெற்று அந்நாட்டுக்கு அரசர்போல விளங்கியதனால், அப்பெயராற் குறிக்கப்பட்டனர். "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு," "ஆறுவற்முதலா மந்நான்கு - மேனோருக்கு, ஊழினுரைத்தார்க்கு மொண்ணீர் முகிலுக்கும், வாழியுல கென்னாற்று மற்று" என்றபடி கைம்மாறுகருதாது வேண்டுவார்வேண்டுவனகொடுக்குங் கைகளென்பார், 'மழைத்தார்கைகள்' என்றார்; அவரதுவள்ளன்மை கைகளின் மேலேற்றிக் கூறப்பட்டது. இங்கு அர்ச்சாவிக்கிரகரூபியாய் நின்ற ஆழ்வார்க்கு அடிமைசெய்தலே யன்றி அங்கு முக்தராய் நிற்கிற நிலையிலும் அவர்க்குத் தொண்டுசெய்வேன் என்றவாறு. (59)

60. ஆட்செய்யலாவதெல்லாஞ்செய்தடியடைந்தேனதன்றித்
தாட்செய்யதாமரையென்றலையேற்றனன்றண்குருகூர்
நாட்செய்யபூந்தொடைமாறனென்றேனினிநாட்குறித்துக்
கோட்செய்யலாவதுண்டேயென்றனாருயிர்கூற்றினுக்கே.

(இ - ள்.) ஆள் செய்யலாவது எல்லாம் செய்து-அடிமையாக செய்யக்கடவ தொழில்களையெல்லாம் செய்து, அடி அடைந்தேன்-(நம்மாழ்வாருடைய) திருவடிகளைச் சரணமடைந்தேன்; அது அன்றி - அதுவல்லாமலும், தாள் செய்ய தாமரை என் தலை ஏற்றனன் - (அவ்வாழ்வாருடைய) திருவடிகளாகிய செந்தாமரை மலர்களை என் தலையிற் சூடிக்கொண்டேன்; (மற்றும்), தண் குருகூர் - குளிர்ச்சியான திருக்குருகூரில் அவதரித்த, நாள் செய்ய பூ தொடை - அன்றைநாளிற்பூத்தவையும் செவ்வியுள்ளவையுமான (மகிழ) மலர்களாலாகிய மாலையைத் தரித்த, மாறன்-மாற னென்னுந் திருநாமமுடையவன், என்றேன் - என்று (அவ்வாழ்வாருடைய திருநாமத்தையும் வைபவத்தையும் திருவவதாரஸ்தலத்தையும்) பாராட்டிக்கூறினேன்; இனி-இங்ஙனம் யான் ஆழ்வாரைச் சரணமடைந்து வழிபட்டு ஏத்தியபின்பு, என்தன் ஆர் உயிர் - எனது அருமையான உயிரை, நாள் குறித்து கூற்றினுக்கு கோள் செய்யலாவது - உடம்பினின்று நீங்குங்காலத்தைக் குறிப்பிட்டு (அச்சமயத்தில்) யமன் (வந்து குற்றவாளியெனப் பிடித்துக்) காட்டி

வருத்தஞ்செய்யும் நிலை, உண்டே- உண்டாகுமோ? [உண்டாகாது என்றபடி]; (எ - று.)

நான் ஆழ்வார்திருவடிகளைச் சரணமாக அடைந்து அவற்றைத் தலைமேற்கொண்டு அவரதுதிருப்புகழைப் பாடித் திரிகரணங்களாலும் பலவாறு அடிமைசெய்யலானேனாதலால், இனி எனது வாழ்நாள் முடியுமெல்லையைக் குறிக்கொண்டு நோக்கி அந்த அந்திமகாலத்தில் என் உயிரை நலிவு செய்வது யமனுக்கு இயலுமோ? என்பதாம். "உடலுருகி வாய்திறந்து மடுத்துன்னை நிறைத்துக்கொண்டேன், கொடுமைசெய்யுங் கூற்றமும் என்கோலாடி குறுகப்பெறா" என்ற பெரியாழ்வார்திருமொழி இங்கு நோக்கத்தக்கது. முன்னும் "கொடியெடுத்துக்கொண்டுநின்றேனினிக்கொடுங்கூற்றினுக்கோ, ரடியெடுத்துக்கொண்டென்பால் வரலாகுங்கொல்" என்றார். மகாபாகவதோத்தமராகிய ஆழ்வாரை வழிபட்டபொழுதே தீவினையனைத்தும் தீர்ந்திட்டதனால் பாவிகளைத்தண்டிப்பவனான யமன் எனது உயிர்க்கு ஊறு செய்யுமாறில்லையென்பது கருத்து. ஆழ்வார் பிறந்தபொழுதே தொடங்கி அழுதல் பால்குடித்தல் முதலிய லோகவியாபாரமொன்று மின்றி உலக நடைக்கு மாறாக இருந்ததனால், இவர்க்கு மாறன் என்று திருநாமமாயிற்று; வலியவினைகட்கு மாறாகவிருத்தலாலும், அந்ய மதஸ்தர்களை அடக்கி அவர்கட்குச் சத்துருவாயிருத்தலாலும், பாண்டியநாட்டில் தலைமையாகத் தோன்றியதனாலும் வந்த பெயரென்றலு முண்டு. (60

[தலைவனைப்பிரிந்த தலைவி தென்றற்கு வருந்தியிரங்கல்.]

61. கூறப்படாமறையின்பொருள்கூறிக்குவலயத்தோர்
மாறப்படாவினைமாற்றியமாறன்மகிழலங்க
னாறப்படாநின்றபோதமுதாகுமதன்றிநஞ்சந்
தேறப்படாதுகெட்டேன்மன்றனாறுந்தண்டென்றலையே.

(இ - ள்.) கூறப்படா மறையின் பொருள் கூறி-(எவராலுஞ்) சொல்லப்படாத [எவர்க்குஞ்சொல்லமுடியாத] வேதங்களின் ஆழ்பொருள்களை (அனைவரும் எளிதில்அறியலாம்படி தமிழினாற்) பாடியுணர்த்தி, குவலயத்தோர் மாறப்படா வினை மாற்றிய - நிலவுலகத்திலுள்ளாரது நீக்கவொண்ணாத அருவினைகளை நீக்கியருளிய, மாறன் - நம்மாழ்வார்தரித்த, மகிழ்அலங்கல் - மகிழம்பூமாலை, நாறப்படாநின்ற போது - மணம்வீசப்பெறுகிறகாலத்தில், அமுது ஆகும்-(தென்றற்காற்று) அமிருதம்போ லினியதாம்; அது அன்றி - அம்மகிழம்பூமாலை மணம்வீசப்பெறாதபோது, நஞ்சம் - விஷம்போலக் கொடுமைசெய்வதாம்; (ஆகவே), மன்றல் நாறும் தண் தென்றலை - வாசனைவீசுகிற குளிர்ந்த தென்றற் காற்றை, தேறப்படாது - நம்பத்தகாது; கெட்டேன்—! (எ - று.)

'கெட்டேன்' என்றது, மிக்கஇரக்கத்தாற்கூறும் வார்த்தை; "கேளாராயர்குலத்தவ ரிப்பழி கெட்டேன் வாழ்வில்லை" எனப் பெரியாழ்வார் திருமொழியிலுங் காண்க.

கந்தவஹனென்றும் கந்தவாஹனென்றும் பெயர்பெறுமாறு மணத்தைக்கொண்டு வீசு மியல்பினதும் பொதுப்பட எல்லா வுயிர்கட்கும் குளிர்ச்சியைச் செய்யுந்தன்மையதுமான தென்றற்காற்றானது எனதுதலைவர் சாத்திக்கொண்டுள்ளமகிழம் பூமாலையின்மேற் பட்டு அதன் நறுமணத்தைக்கொண்டு என்மேல் வீசும்போது அவரைப்பிரிந்துநிற்கிற எனக்கு அமிருதம்போல இன்பத்தைத் தருகின்றது; அதுதானே அங்குப் படாமல் அந்நறுமணங்கொணராது வெறுமையாய் வீசும்போது எனக்கு விஷம் போல மிக்க வருத்தத்தைச் செய்கின்றது; ஆதலால், தென்றற்காற்றைப் பொதுப்பட இனியதென்று நம்பக்கூடவில்லையென்று, தலைவனைப்பிரிந்து அப்பிரிவுத் துயரையாற்றாத தலைவி தென்றல்வரவுக்கு ஒருசார் வருந்தி யிரங்கிக் கூறிய வார்த்தை இது; திருவிருத்தத்தில் "மால்வரையைக், கிளர்ந்துமறிதரக்கீண்டெடுத்தான் முடிசூடுதுழா, யளைந்துண் சிறுபசுந்தென்ற லந்தோ வந்துலாகின்றதே" என்றது, தலைவனது திருத்துழாய்மாலையிற் பட்ட தென்றல் வரத் தலைவி மகிழ்ந்துரைத்த வார்த்தையாதல் காண்க. தலைவனுடம்போடு சம்பந்தப் பட்ட பொருள் தன்னுடம்பின்மீது வந்து படுகிறபோது பிரிவாற்றாமைத்துயரை ஒருவாறு தணிவித்து மகிழ்ச்சியைவிளைக்குமென்க. துணைவரோடு கூடியுள்ளார்க்கு இன்பஞ்செய்யுந் தென்றல், அவரைப்பிரிந்தார்க்குத் துன்பஞ்செய்யுமென்றல் வெளிப்படை; "தென்றலுந் தீயினிற் கொடிதாம்" என்றார் திருமங்கையாழ்வாரும். "தென்றற்கும்................அயர்ந்தா, ளென் றன்னமேயென்னைக் குமாரற்கியம்பு" என்பது, இரத்தினச் சுருக்கம்.

குவலயம் - பூமண்டலம். மாறன் என்ற பெயர்க்கு ஒருகாரணப்பொருள் கற்பிப்பார்போல, 'குவலயத்தோர் மாறப்படாவினை மாற்றிய மாறன்' என்றார்; "தொல்லைவல்வினைக்கோர்மாறன்" என்பர் பிள்ளைப்பெருமாளையங்காரும். வினை - கருமம். தம்பக்கல் திருவுள்ளமுவந்து திருக்குருகூர்ப்பொலிந்துநின்றபிரான் பிரசாதித்த மகிழமலர்மாலையைத் தரித்தலால், நம்மாழ்வார்க்கு வகுளாபரணரென்று ஒருதிருநாமம் வழங்கும். "வண்குருகூர் நகரான்-நாட்கமழ்மகிழ்மாலை மார்பினன் மாறன் சடகோபன்" என்று ஆழ்வார் தாமே தம்மைக்கூறியிருத்தலுங் காண்க. தென்றல் - தென்திசையிலிருந்து வருங் காற்று.

தமது ஞானக்கண்ணுக்கு ஆழ்வார் புலனாகி மறைந்தவளவிலே அவரது ஸதாஸாந்நித்தியத்தைப்பெறும் விருப்பினால்வருந்துகிற கம்பநாடர், லௌகிகபதார்த்தங்கள் அவரது சம்பந்தத்தையுடையனவாம்போது தமக்கு மகிழ்ச்சியையும், அவரது சம்பந்தமுடையன வாகாதபோது தமக்கு வருத்தத்தையுந் தரு மியல்பையெடுத்துக்கூறி அரற்றுதல், இதற்கு உள்ளுறைபொருள். விவரம் நோக்கிக்கொள்க. (61)

62. **தென்றலைத்தோன்றுமுபநிடதத்தையென்றீவினையை**
நின்றலைத்தோன்றுநியாயநெறியைநிறைகுருகூர்

மன்றலைத்தோன்றுமதுரகவியைமனத்துள்வைப்பா
ரென்றலைத்தோன்றெம்பிராற்களென்னுவுக்குரியவரே.

(இ - ள்) தென்தலை தோன்றும் உபநிடதத்தை - தென்திசையிடத்தே உண்டாகிய வேதாந்தமும், என் தீ வினையை நின்று அலைத்து ஒன்றும் [ஒன்றும்] நியாயம் நெறியை-எனது கொடிய கருமங்களை உறுதியாகப் போக்கிப் பொருந்திய நீதிமார்க்கமுடையனவுமாகிய, நிறை குருகூர் மன் தலை தோன்றும் மதுர கவியை -(எல்லாவளங்களும்) நிறைந்த திருக்குருகூரில் அவதரித்த தலைவராகிய நம்மாழ்வார்பக்கல் உண்டான இனியபாசுரங்களை,மனத்துள் வைப்பார்-(ஓதியுணர்ந்து) தம்மனத்தில் வைத்துக்கொள்பவர்கள், என்தலை தோன்று எம் பிராற்கள் - எனது சிரசின்மேற்கொள்ளப்பட்டு விளங்கும் எமது தலைவராவர்;என் நாவுக்கு உரியவர் எனது நாவினால் துதிக்கப்படுதற்கும் உரியவராவர்; (எ - று.)

ஸம்ஸ்கிருதபாஷை ஆதியில் வடதிசையிலே மிக்கு வழங்கியதனால், அதற்கு வடமொழி யென்று பெயராயிற்று. தமிழ்ப்பாஷை இப்பரத கண்டத்தில் தென்பகுதியாகிய குணகடல் குமரி குடகம் வேங்கடம் என்னும் நான்கெல்லையினுட்பட்ட தேசத்தில் வழங்குதலால், தென்மொழி யெனப்படும். ஞானகாண்ட மெனப்படுகிற உபநிஷத்துக்கள், வடமொழிவேதத்தின் ஒருகூறு. அவ்வடமொழி வேதாந்தத்தின் பொருள்களமைய ஆழ்வார் பாடிய பிரபந்தங்கள் தென்மொழியின வாதலால், 'தென்தலைத்தோன்றுமுபநிடதம்' எனப்பட்டன. ஒன்றும் என்பது, ஒன்றும் என நீட்டல்விகாரம்பெற்றது. ஆழ்வார் அருளிச்செய்த பிரபந்தங்களெல்லாம் சந்மார்க்கத்தையே உணர்த்துவனவும் ஆதரத்தோடு தம்மை ஓதியுணர்வாரது கொடிய கருமங்களைப் போக்கி அவர்கட்கு நற்கதி தருவனவு மாதலால், 'என் தீவினையை நின்று அலைத்துஒன்றும் நியாயநெறி' என்றார். மன் தலை-மன்னனிடத்து; தலை-ஏழனுருபு.மதுரகவி-சொல்லினிமையும் பொருளினிமையுமுடைய பாடல். பிராற்கள் =பிரான்கள்; பிராக்கள் என வழங்குதலு முண்டு; "அப்பனைப், பெருமைபிதற்றவல்லாரைப் பிதற்றுமவர்கண்டீர், வருமையுமிம்மையு நம்மையளிக்கும் பிராக்களே" என்பது, திருவாய்மொழி.ஆழ்வாரருளிச்செயல்களைப் பாராயணஞ் செய்பவர் யான் தலைமேற்கொண்டு வணங்கித் துதிக்கத்தக்கவராவ ரென்று அந்த அடியாரடியார்பக்கல் தமக்குஉள்ள ஈடுபாட்டை வெளியிட்டார். அலைத்துநின்று என மாறினுமாம். ()

63. **உரிக்கின்றகோடலினுந்துகந்தம்மெனவொன்றுமின்றி**
விரிக்குந்தொறும்வெறும்பாழாய்விடும்பிறர்புன்கவிமெய்
தெரிக்கின்றகோச்சடகோபன்றன்றெய்வக்கவிபுவியிற்
சுரிக்கின்றநுண்மணலூற்றெருக்குந்தோண்டச்சுரத்தலினே.

(இ-ள்.) பிறர் புல் கவி-அயலார்பாடுகிற புல்லிய பாடல்கள், —உரிக்கின்ற கோடலின் உந்து கந்தம் என - உரிக்கப்படுகின்ற வெண்காந்தளின்பெரிய கிழங்குபோல, விரிக்கும் தொறும்ஒன்றும் இன்றி வெறும் பாழ் ஆய்விடும் - வகுத்து நோக்கநோக்கச் சாரமொன்றுமில்லாமல் மிகவும்பயனற்றனவாய்ப்போய்விடும்; மெய்

தெரிக்கின்ற கோ-உண்மைப்பொருளை யுணர்த்துகிற தலைவரான, சடகோபன்தன்-நம்மாழ்வாருடைய, தெய்வம் கவி-தெய்வத்தன் மையுள்ள பாடல்களோ, தோண்ட சுரத்தலின் - ஆழ்ந்துநோக்க நோக்க மேன்மேல் நற்பொருள் இடையறாது வெளிப்படுதலால், புவியில் சுரிக்கின்ற நுண் மணல் ஊற்று ஒக்கும் - பூமியிலே அருவுகின்ற நுண்ணிய மணற்பாங்கிலுள்ள நீரூற்றைப் போன் றிருக்கும்; (எ - று.)

வெண்காந்தட்கிழங்கு உருவத்திற் பெரிதாயிருந்தாலும் உரித்துக் கொண்டு செல்லச்செல்ல உள்ளீடொன்றும் இலதாதல் போல, பிறர்பாடும் புன்கவிகள் மேல்நோக்கில் ஓசை குறையா திருப்பினும் பொருள் வகுத்து நோக்கிக்கொண்டு ஆழ்ந்துசெல்லச் செல்ல உள்ளே ஒன்றும் சாரமில்லாமல் பயனற்று நிற்கும் என் பது,முந்திய வாக்கியத்தின் கருத்து; "கோடலுரிபோல் ஆராயின் ஏதுமிலையாதி" என்ற கம்பராமாயணத்திலும் இவ்வுவமை விளங் கக் காண்க. வெறும்பாழ் - சுத்தசூந்யம்; இங்கே பொருட்சிறப்புச் சிறிதுமின்மை. நுண்மணற்பாங்குநிலத்தி லுள்ள ஊற்றுத் தோண்டத் தோண்ட மேன்மேல் நீர்சுரக்குமாறுபோல நம்மாழ் வாருடைய திவ்விய கவிகள் ஆழ்ந்து நோக்கநோக்க மேன்மேற் பொருள்சுரந்து கொண்டிருக்கும் என்பது, பிந்திய வாக்கியத்தின் கருத்து; "மணற்கிளைக்க நீரூறும் மைந்தர்கள் வாய்வைத்து, உணச் சுரக்கும் தாய்முலை யொண்பால்-பிணக்கிலா, வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்கு, ஆய்தொறு ஊறும் அறிவு" என்ற திருவள்ளுவமாலையும், "தொட்டனைத்து ஊறும் மணற் கேணி மாந்தர்க்குக், கற்றனைத்து ஊறும் அறிவு" என்ற திருக் குறளும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன. இரண்டும்-**உவமையணி.** இங்ஙனம், பிறர்புன்கவிக்கும் ஆழ்வார் தெய்வக்கவிக்கும் உள்ள மிக்க ஏற்றத்தாழ்வை உபமான பூர்வமாக நன்கு எடுத்துக்காட்டிய வாறும். மெய்தெரிக்கின்ற கோ - வேதசாஸ்திரங்கள் கொண்டு ஆய்ந்து அரிதிலுணரத்தக்க தத்துவார்த்தங்களைச் செந்தமிழ்ப் பாடல்கள் கொண்டு விளங்க உணர்த்தி அவ்வப்பொருளின் உண்மை நிலையை யாவரும் எளிதில் அறியும்படி செய்தருளிய பெரியோன்.

உந்துதல் - செழித்துவளர்தல். கந்தம் - கிழங்கு: வடசொல். தெரிக்கின்ற - தெரிகின்ற என்பதன் பிறவினை. (63)

64. சுரக்குந்திருவும்வறுமையுந்தீருந்தொடக்குவிட்டுக்
கரக்குமிருவினைமேன்மையுங்காணும்கயல்குதிப்பத்
திரக்குங்கழைநெடுந்தாளிற்றொடுத்தசெந்தேனுடைந்து
பரக்கும்பழனவயற்குருகூர்வளம்படுமினே.

(இ - ள்.) திரக்கும் - உறுதிபெற்ற [நன்கு வளர்ந்து முதிர்ந்த], நெடு - நீண்ட, கழை தாளில் - கருப்பந்தண்டிலே, தொடுத்த - கட்டிய, செம் தேன் - சிவந்ததேனையுடைய கூடுகள், கயல் குதிப்ப உடைந்து - (அருகிலுள்ள) கயல்மீன்கள் துள்ளி விழும்போது அவைபடுதலால் உடைபட, பரக்கும் - (அத்தேனி றால்களினின்று தேன்) பரவிப்பாயப்பெற்ற, வயல் - கழனிகளை

யுடைய, பழனம் - மருதநிலஞ் சூழ்ந்த, குருகூர் - (நம்மாழ்வார் திருவவதாரஸ்தலமான) திருக்குருகூரினது, வளம் - மகிமையை, பாடுமின் - கவிபாடித் துதியுங்கள்; (அங்ஙனம் பாடினீராயின் உங்களுக்கு), திருவும் சுரக்கும் - செல்வமும் மேன்மேற்பெருகும்; வறுமையும் தீரும் - தரித்திரமும் நீங்கும்; இரு வினை - (நல்வினை தீவினை யென்னும்) இருவினைகளும், தொடக்கு விட்டு கரக்கும் - தொடர்ச்சிநீங்கி இருந்தஇடம் தெரியாதபடி அழிந்திடும்; மேன்மையும் காணும் - எல்லாமேன்மைகளும் உண்டாகும்; (எ - று.)

என்று உலகத்தார்க்கு நல்லறிவு உணர்த்தியவாறும். தொடக்கு - கட்டு, பந்தம். கரத்தல் - மறைதல். மேன்மையும் காணும் என்பதற்கு - உயர்கதியாகிய பரமபதமும் வாய்க்குமெனினும் அமையும். 'கயல்குதிப்ப......வயல்' என்றது, ஆழ்வார்திருநகரியின் நிலவள நீர்வளச்சிறப்பை விளக்கியது. திரக்கும் - ஸ்திரமென்ற வடசொல்லின் விகாரமான திரம் என்ற பெயரின்மேற்பிறந்த பெயரெச்சம். சிந்தாமணியில் "கணைநிலைக்கரும்பு" என்றாற்போல 'திரக்குங்கழை' எனப்பட்டது. கழைத்தாள் என்பதை வடநூலார் 'இக்ஷு' தண்டம்' என்பதுபோலக்கொள்க. கரும்பில் தேனிறால் தொடுத்தலை "கரும்பின்மேற்றொடுத்த தேன்" எனச் சிந்தாமணியிலுங் காண்க. இனி, கழை என்பதற்கு - மூங்கிலென்று பொருள்கொள்ளுதல் மருதநிலவருணனைக்குச் சிறவாமையுணர்க. தேன் - தேனடைக்குத் தானியாகுபெயர். உடைந்து = உடைய: எச்சத்திரிபு. (64)

65. பாடுங்கறங்குஞ்சிறைவண்டுபாடப்பைந்தாட்குவளைத்
தோடுங்கறங்குங்குருகைப்பிரானிச்சுழல்பிறவி
யோடுங்கறங்கன்னவாழ்க்கையை நீக்கியுணர்வுதவி
வீடுந்திறந்துதந்தானையெந்நான்றும்விடகிலமே.

(இ - ள்.) சுழல் - சுழன்றுவருகிற [கருமவசத்தால் மாறி மாறிவரும் இயல்பினதான], இ பிறவியோடும் - இந்தப்பிறப்புடனே, கறங்கு அன்ன வாழ்க்கையை - காற்றாடிபோன்ற [சிறிது பொழுதேனும் ஒருநிலைநில்லாது சுழன்று அலைகிற] இப்பிரபஞ்ச வாழ்வை, நீக்கி - (அடியார்களுக்குப்) போக்கி, உணர்வு உதவி - நன்ஞானத்தை அளித்து, வீடும் திறந்து தந்தான் - பரமபதத்தையும் கதவுதிறந்து தந்தருளியவரும்,—பாடும் கறங்கும் சிறை வண்டு பாட - இசைபாடிக்கொண்டு சுழன்று மொய்க்குமியல்பினவான சிறைவளத்தையுடைய வண்டுகள் ரீங்காரஞ்செய்துகொண்டு நெருங்கிமொய்த்து மோதுதலால், பைந் தாள் குவளை தோடும் கறங்கும் - பசுமையான நாளத்தையுடைய குவளையென்னும் நீர்ப்பூங்கொடிமலரின் இதழ்களும் ஒருநிலை நில்லாது சுழலப்பெற்ற, குருகை - திருக்குருகூரில் அவதரித்த, பிரானை - உபகாரகருமாகிய நம்மாழ்வாரை, எ நான்றும் விடகிலம் - எந்நாளும் விட மாட்டோம், (யாம்); (எ- று.)

நிலவள நீர்வளம் மிக்க திருக்குருகூரில் அவதரித்துத் தம்மைச்சரண மடைந்தவர்களுடைய மாறிமாறிப்பலபிறப்பும் பிறந்

திறந்து வருந்துந் துன்பத்தைத் தீர்த்து அவர்கட்குத் தத்துவஞா ஞோபதேசமுகத்தால் வீடுபேறு வாய்க்கும்படி அருள்செய்த வரான நம்மாழ்வாரை எந்நாளும் விடமாட்டோம் யாமென்று தமது துணிவை வெளியிட்டவாறும்.

பாடுங் கறங்கும் வண்டு - பெயரெச்சங்கள் அடுக்கி ஒருபெய ரைக் கொண்டன. இனி, பாடும் - பக்கமுழுவதும் என்றலும் ஒன்று. தாள் - தண்டு. (65)

[தலைவனைப்பிரிந்த நிலையில் மாலைப்பொழுதுக்கும் இருளுக்கும் ஆற்றாத தலைவியின் துயர்கண்ட தோழி இரங்கல்]

66. விடவந்தகாரவெம்பாலிற்பராங்குசர்மெல்லியலுக்
கிடர்வந்ததாலென்றிரங்கிப்புணர்ந்திலரின்னுயிரை
படவந்தகாலன்கொலோவறியேனின்றிவ்வந்திவந்து
படவந்தகாரப்பெரும்புகையோடிப்பரக்கின்றதே.

(இ - ள்.) விடம் அந்தகாரம் - (கருநிறத்தாலும் கொடுமை யாலும்) விஷம்போன்ற இருளையுடைய, வெம் பாலில் - கொடிய (இரவாகிய காலப்) பகுதியில், பர அங்குசர் - பகைவராகிய யானை களை அடக்கி யாளுதற்கு மாவெட்டிபோன்றவராகிய [பலபராக் கிரமங்கள் மிக்க] தலைவர், மெல் இயலுக்கு இடர் வந்தது ஆல் என்று இரங்கி புணர்ந்திலர் - மெல்லியதன்மையையுடையவளான இத்தலைவிக்கு விரகவேதனை நேர்ந்ததேயென்று மனமிரங்கிவந்து கூடினாரில்லை; இன்று - இப்பொழுது, இ அந்தி வந்து பட - இந்த அந்திமாலைப்பொழுதாகிய பெருந்தீ வந்துசேர, அந்தகாரம் பெரும் புகை ஓடி பரக்கின்றதே - இருளாகிய பெரும்புகை எங்கும் விரைந்துசென்று பரவுகின்றதே! (இது), இன் உயிரை அட வந்த காலன் கொல் ஓ - (இத்தலைவியின்) இனிய உயிரை(ச் சமயம்பார்த்து)க் கொல்லவந்த யமன்தானோ? அறியேன் - அறிகின்றேனில்லை; (எ - று.)

மெல்லியல் - இங்கே, விரகவேதனையைப் பொறுக்கும் ஆற்ற லில்லாதவள் என்றபடி. காலன் - பிராணிகளின் ஆயுளைக் கணக் கிடுபவனென்று காரணப்பொருள்படும் வடசொல். 'அந்தகாரப் பெரும்புகை' என்பதை நோக்கி, செவ்வானத்தோடு கூடிய மாலைப்பொழுது செந்தீயாகக் கொள்ளப்பட்டது. "காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலைமலரு மிந்நோய்" என்றபடி சேர்க் கைக்கு உரிய காலமாகிய இரவின்தொடக்கமான மாலைப் பொழுதும், அதன்சம்பந்தமான இருளும் பிரிந்தார்க்கு அத்துயரை மிகுவிக்குமென்க.

உரியகாலத்தில் ஆழ்வாரது நிரந்தராநுபவம் தமக்குக் கிடைக்கவில்லையேயென்று மோகாந்தகாரத்திலே மிகவருந்தும் கம்பநாடரது நிலைமையை நோக்கின அன்பர்கள் இரங்கிக்கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறை பொருள்; விரிப்பிற்பெருகும். மிகக்களித்துக் கொழுத்துச் செருக்கித்திரிந்து எதிர்த்து வாதப் போர்க்குவரும் பிறமதத்தவராகிய மதயானைகளைத் தமது

பிரபந்தங்களிற் கூறிய தத்துவார்த்தங்களினால் அடக்கிக் கீழ்ப் படுத்தித் தம்வசத்தில்வைத்துநடத்துந் திறமுடையராய் அவற்றிற்குமாவெட்டியென்னுங் கருவிபோ லிருத்தலால், நம்மாழ்வார்க்கு, பராங்குசரென்று திருநாமமாயிற்று. பர அங்குசர் என்று பிரியும்: வடமொழிப்புணர்ச்சி, தீர்க்கசந்தி: பரர்-அயலார்; அங்குசம் - மாவெட்டி, தோட்டி. (66)

[உடன்போக்கில் தலைவன் தலைவிக்குத் தன்நகரணிமைகூறல்.]

67. ***பரவாதுகேட்டினிப்பையநடசுருதிப்பசுக்கள்***
சுரவாதவற்றைச்சுரப்பித்தவைசொரியும்பொருட்பால்
கரவாதுதவியமாறன்கவியனையாயினியோர்
சரவாதமிப்புறமப்புறங்காணத்தடம்பணையே.

(இ - ள்.) சுருதி பசுக்கள் சுரவாதவற்றை-எளிதிற் பொருள் புலப்படாத வேதங்களாகிய பால்சுரவாத பசுக்களை, சுரப்பித்து - அப்பொருளாகிய பாலை எளிதிற்சுரக்கும்படி செய்து, அவை சொரியும் பொருள் பால் - அவ்வேதப்பசுக்கள் மிகுதியாகப் பொழிகிற தத்துவப்பொருளாகிய பாலை, கரவாது உதவிய - லோபஞ்செய்யாது (தமது பிரபந்தங்களின் மூலமாக அனைவர்க்குங்(கொடுத்தருளிய, மாறன் - நம்மாழ்வாருடைய, கவி - பாசுரங்களை, அனையாய் - ஒத்துச் சிறப்பையும் இனிமையையுமுடைய மங்கையே!—இனி இப்புறம் - இனி (எனது ஊர்க்கு) இப்பாற்செல்ல வேண்டிய இடம், ஓர் சர வாதம் - ஓர் அம்புவீழ்ச்சியளவுதான்; அப் புறம் - அதற்கு அப்பால், அ தட பணையே காண் - முன்பு நான்சொல்லியிருக்கிற எனது ஊரின் எல்லையாகிய பெரிய மருத நிலமே காண்; (ஆகவே), இனி—, பரவாது-விரைவுகொள்ளாமல், கேட்டு - (யான் சொல்லும் வார்த்தையைக்) கேட்டுக்கொண்டு, பைய நட - மெல்ல நடப்பாய்: (எ - று.)

இயற்கைப்புணர்ச்சி பாங்கற்கூட்டம் பாங்கியிற்கூட்டம் என்பவற்றாற் களவுநெறியில் தலைமகளோடு கலந்த தலைமகன் அங்குப் பழிபரவுதலின் தோழியால் உணர்த்தப்பட்டுத் தலைமகளை உடன்கொண்டு தன்ஊர்க்குச் செல்லுதல் உண்டு; அது அகப் பொருளிலக்கணத்தில் 'உடன்போக்கு' எனப்படும். இங்ஙனம் தலைவன் தலைவியை இடையிலுள்ள பாலைநிலவழியாக உடன் கொண்டுபோதல்பற்றி, உடன்போக்கு, பாலைத்திணையின்பாற் படும்; "போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி, ஆக்கஞ் சேரூடல் அணிமருதம் - நோக்குங்கால், இல்லிருக்கை முல்லை இரங்கல் நறுநெய்தல், சொல்லிருக்கும் ஐம்பால்தொகை" என்பது காண்க. அவ்வாறு தலைமகளை உடன்கொண்டு இடைச்சுரநெறி கடந்து தன்ஊர்க்குச்செல்கின்ற தலைமகன் அவளுக்குவழி நடை யிளைப்புத்துன்பம் தோன்றாதிருத்தற்பொருட்டுத் தன துநகரி னணிமையைக்கூறுதல், இப்பாட்டிற்குறித்த விஷயம் இத் துறையை, 'புணர்ந்து உடன்போன தலைமகன் நடந்துஇளைத்த தலைவியைக்குறித்து இடந்தலைப்பெய்தமை சொன்ன பாசுரம்' என்பர் அழகியமணவாளசீயர். இதன் மெய்ப்பாடு, பெருமிதம்.

பயன், இடமணித்தென்று தேற்றுதல். பாலைவனத்து நடந்து செல்கிற ஸ்ரீராமலக்ஷ்மணர்க்கு விசுவாமித்திரமகாமுனிவன் உபதேசித்த பலை அதிபலை என்னும் மந்திரவித்தைகள் போல, இத்தலைவன்வார்த்தை தலைவிக்குத் தாபந்தணிக்கு மென்க. தலைமகனும் தலைமகளும் தாம் ஒருவர்க்கொருவர் தனிநிழலாயிருக்கையாலே இவர்கட்கு இந்நிலத்தின்கொடுமையாலுண்டாகும் இளைப்பு இல்லையேயாகிலும், பொழுதுபோக்குக்காகத் தலைவன் தலைவியை நோக்கி இங்ஙனங்கூறுவ னென்றலும் உண்டு. 'மாறன் கவியனையாய்' என்றது—"மண்டுகளாடி வைகுந்த மன்னுள்", "அரிகேசரி தென்புனல் நாடனையாய்", "பல்லுகுத்தோன்பழனம் மன்னபல்வளை" என்றாற் போலப் பாட்டுடைத்தலைவனது சம்பந்தமுடைய பொருளை உவமையாகக்கூறி அவ்வகையால் தலைவியைச் சிறப்பித்தது. 'தடம்பணை' என்றது, அவ்விடம் இவ்வழிநடை வருத்தத்தை இனிது தணிக்குந் தன்மையது என்றவாறு.

'சுருதிப்பசுக்கள்சுரவாதவற்றைச் சுரப்பித்து அவைசொரியும் பொருட்பால் கரவாதுஉதவிய மாறன்' என்றது, **உருவகம்.** கரவாது - ஒளிக்காமல்; இங்கு, வடமொழிவேதம்போல மறைபொருளினவாகவன்றி யென்றபடி: "எய்தற்கரியமறைகளை யாயிரமின்றமிழாற், செய்தற்கு உலகில்வருஞ் சடகோபன்" என்றார் பெரியாரும். கரவாதுஉதவிய மாறன் என ஆழ்வாரது வள்ளன்மையி லீடுபட்டுக் கூறியவாறு. சுருதிப்பசுக்கள் சுரவாதவற்றைச் சுரப்பித்து - பிறர்க்குஅரிய வேதங்களின் ஆழ்பொருள்களை ஆழ்வார்தாம் எளிதிற்கண்டு என்றபடி. 'மாறன்கவியனையாய்' என்றது, **உவமையணி.** ஶரபாதம் என்ற வடமொழித்தொடர், சரவாதமென விகாரப்பட்டதென்க; சரபாதம் = சரபாதஸ்தானம்; எய்தஅம்பு விழுந் தூர மென்பது பொருள்.

கொடிய சமுசார மார்க்கத்தைக் கடத்திக் கம்பநாடரைத் தாம்வாழுமிடமான பரமபதத்துக்கு அழைத்துச்செல்லும் ஆழ்வார் அவர்க்கு அந்தப்பேரின்பப்பதியின் அணிமையைக் கூறுதல், இதற்கு உள்ளுறைபொருள். "சரணமாகுந்தனதாளடைந்தார்க்கெல்லாம்,மரணமானால் வைகுந்தங்கொடுக்கும்பிரான்" என்பவாதலால், இப்பிறப்பின் முடிவிலே முத்திசித்திக்கு மென்று, சேய்மை கருதி வருந்தும் அவரை அணிமைகூறித் தேற்றியவாறும். விவரம் நுண்ணிதின் உணர்க. (67)

[பிரிவாற்றாது வருந்துந் தலைவி கார்கண்டு கலங்குதல்.]

68. தடம்பணைத்தண்பொருநைக்குருகூரர்தகைவகுள
வடம்பணைக்கொங்கையில்வைக்கின்றிலர்மற்றைமாலையெல்லா
முடம்பணைக்குந்தொறும்வெந்துகுமைந்துவெம்பாம்புமிழ்ந்த
விடம்பணைக்கொண்டனவேபனிதோய்ந்திடுமேகங்களே.

(இ - ள்.) தட பணை - அகன்ற வயல்களையுடையதும், தண் - (நீர்வளத்தால்) குளிர்ச்சியானதும், பொருநை - தாமிரபர்ணிநதி பாயப்பெற்றதுமான, குருகூரர் - திருக்குருகூரில் அவதரித்தவ

ராகிய நம்மாழ்வாருடைய, தகை வகுள வடம் - அழகிய மகிழம் பூமாலையை, பணை கொங்கையில் வைக்கின்றிலர் - (பாங்கிமார் கொணர்ந்து) பருத்த என் கொங்கைகளில் வைக்கின்றாரில்லை; மற்றை மாலை எல்லாம்-(அதுவன்றி)மற்ற மாலைகள்யாவும்,உடம்பு அணைக்கும் தொறும் வெந்து உகும் - என்உடம்பிற் சேர்க்குந்தோறும் (மேற்கொண்ட விரகதாபத்தால்) வெந்து பொடியாய் உதிர்ந்துவிடும்; (இந்நிலையில்), பனி தோய்ந்திடும் மேகங்கள் - நீர்த்துளி நிறைந்த மேகங்களோ, ஐந்துவெம் பாம்பு உமிழ்ந்த விடம் பணைக் கொண்டனவே - கொடிய ஐந்துபாம்புகள் ஒருங்கு உமிழ்ந்த விஷங்கள் திரண்டனவேயாம்; (எ - று.) —ஏ - ஈற்றசை.

(திருவிருத்தத்தில் 31 - ஆம் பாசுரத்தில் நான்காமடியாகிய "மிசைமின்மிளிரியபோவான்வழிக்கொண்ட மேகங்களே" என்ற விடத்தும் மேகங்கள்என்பது - முதல்வேற்றுமையும், ஏகாரம் - ஈற்றசையுமேயாதலும், மேகங்களேஎன விளியாகாமையும் காண்க. ஏகாரவீற்றதாதல், கட்டளைக்கலித்துறையிலக்கணம்.) தலைவன் பொருளீட்டுதற்குப் பிரிந்துசென்றபோது கார்காலத்தே மீண்டுவருவதாகக் காலங்குறித்துச் சென்றபடி அக்காலம்வந்த வளவிலும் வரக்காணுமையாலே பிரிவாற்ருது வருந்துந் தலைவிக்கு மேகங்கள் அவ்வருத்தத்தை மிகுவித்தலால் அவள் அவற்றைப் பலநாகங்கள் ஒருங்குஉமிழ்ந்த விஷங்களே இங்ஙனந் திரண்டுவந்தனவென்று பழித்துரைத்தாளென்க. தலைவனைப்பிரிந்ததனாலாகிய தாபத்தால் தலைவி வருந்தும்போது பாங்கிமார் அத்தாபத்துக்குக்காரணம் இன்னதென்று ஆய்ந்து உள்ளபடி யுணராமல் தாபசாந்தியாகச் சீதோபசாரஞ் செய்பவராய்க் குளிர்ந்தமலர் மாலைகள்பலவற்றைக் கொணர்ந்து இவளுடம்பிற்பெய்ய, "வாங்கினள் முலைக்குவையில் வைத்தனள்" என்றவாறு அவை இத்தாபத்தைத் தணிக்க மாட்டாது காமோத்தீபகமாய் இவ்வெப்பத்தை மிகுவித்து அதனால் தாம் தீந்து கரிந்து ஒழிதலால், 'மற்றை மாலையெல்லாம் உடம்பணைக்குந்தோறும் வெந்துகும்' என்றாள். "கண்ணன்கழல்துழாய்பொன்செய்பூண்மென்முலைக்கென்றுமெலியுமே" என்றபடி, தலைவனைப் பிரிந்து வருந்தும் நிலையில் அத்தலைவன் சாத்திய மாலை கிடைக்கப்பெற்றால் அதனை அவனாகவே பாவித்து உடம்பில் ஒற்றிக்கொண்டு அவனைத் தழுவி யணைத்தவள் போன்று மகிழ்வுறக்கருதின ளாதலால், அந்தத் தகுதியான பரிகாரத்தை உணர்ந்து செய்திடாததற்காகப் பாங்கியரை நொந்துரைப்பாள், 'குருகூரர் தகைவகுளவடம்பணைக்கொங்கையில் வைக்கின்றிலர்' என்றாள். 'தடம்பணைத்தண்பொருநைக்குருகூரர்' என்றது, எவ்வகைத்தாபத்தையுந் தணிக்கவல்ல நாட்டுவளமுடையவரென்ற குறிப்பு. தகை-அழகு; பெருமையுமாம்.வகுளம் - வடசொல். ஐந்துஎன்றது, அநேக மென்றவாறு; திருவேங்கடத்தந்தாதியில் "இற்றைநீடிரவொன்றுஅஞ்சுகம்தத்தை விளைக்கும்" என்றவிடத்தும் 'அஞ்சு' என்பது இங்ஙனமாதல் காண்க. ஐந்து வெம்பாம்பு - கொடிய ஐந்துதலை நாகமெனினுமாம்; இப்பொருளில் ஐந்து - எண்ணலளவையாகுபெயர். பணைக்கொள்ளுதல் - பருமைகொள்ளுதல், திரளுதல்.

சிற்சில சமயங்களில் தமது ஞானக்கண்ணுக்கு இலக்கான ஆழ்வார் மறைந்த வளவிலே அவரது இடையீடில்லாச்சேர்க்கையிலவாவினால் வருந்துகிற கம்பநாடர் தமக்கு அவ்வாழ்வார் உரிய காலத்தில் வந்து காட்சிதந்து தம்மை அவர்பக்கல் சேர்த்துக் கொள்ளாது விளம்பித்தலாலே, அந்த நற்காலத்துக்குச் சூசகமாகிற பொருள்கள் தமது வருத்தத்தை மிகுவித்தலைக்குறித்து இரங்கிக்கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருள். அப்படிப்பட்ட சமயத்தில் ஆழ்வாரது பிரசாதமான மகிழமலர்மாலை கிடைக்கப்பெற்றால் அது ஆறுதலாகுமேயன்றி மற்று எதுவும் இத்துயர்க்குப் பரிகாரமாகாதென்க. "உடுத்துக்களைந்த நின் பீதகவாடையுடுத்துக் கலத்ததுண்டு, தொடுத்த துழாய்மலர் சூடிக்களைந்தன சூடு மித்தொண்டர்களோம்" என்றபடி பகவதப்ரஸாதத்தையே விரும்பிப்பெற்று ஸ்வரூபம் நிறம்பெறும் ஆழ்வார்கள் போல, நம்மாழ்வார் சூடிக்களைந்த மாலையையே அவர்ப்ரஸாதமாக ஏற்று மகிழுமியல்பினர் கம்பநாட்டாழ்வா ரென்க.

இங்ஙனம் திருமாலடியார்க்கு ஆட்பட்டவர்க்குத் தேவதாந்தரங்களின் நிர்மால்யம் வெறுப்புக்கிடமாயினமையும் இதிற் போதரும். பிறவும் உய்த்துணர்க. இனி, இச்செய்யுளில், முதல் வாக்கியத்துக்கு - (அன்பர்கள்) ஆழ்வாருடைய போக்யதையையே [மிக்க இனிமையையே] எனது பரிபூர்ண பக்திக்கு விஷயமாக்குகின்றாரில்லை யென்றும், இரண்டாம்வாக்கியத்துக்கு - மற்றையினிமைகளெல்லாம் என்சொரூபத்துக்குச் சேராவென்றும், மூன்றாம்வாக்கியத்துக்கு - கைம்மாறுகருதாது கருணைமழைசொரிந்து உலகத்துக்கு உபகாரியாகிற ஆழ்வார்க்குப் போலியான மேகங்கள் இந்நிலையில் எனக்கு வருத்தத்தைமிகுவிக்கின்றன வென்றும் (இது, போலிகண்டு அழிதல்) உள்ளுறைபொருள்கொள்ளவும் அமையும். (68)

[பொருள்வயிற்பிரிந்து சென்று மீளுந் தலைமகன் முகிலொடு கூறல்.]

69. மேகத்தையாற்றிற்கண்டேனென்றெண்ணாதுமெய்யன் குருகூ
பாகத்தையாற்றுஞ்சொல்லாளைக்கண்ணீரின்றுளிபரந்த [ர்ப்
மோகத்தையாற்றிக்கொண்டேகண்டமாற்றமொழிந்துசிந்தைச்
சோகத்தையாற்றிக்கொண்டேதுளிதூவத்தொடங்குகவே.

(இ - ள்.) மேகத்தை ஆற்றில் கண்டேன் என்று எண்ணாது - மேகங்களாகிய உங்களை இடைவழியிலே கண்டு செய்திகூறினேனென்று (இதனை ஓர் இழிவாக நீங்கள்) நினையாமல்,—மெய்யன் குருகூர் பாகத்தை ஆற்றும் சொல்லாளை - உண்மைப்பொருளையே உணர்த்துபவரான நம்மாழ்வாரது திருக்குருகூரின் பகுதியையொத்த [மிக இனிய] சொற்களையுடையவளான என்காதலியை, கண் நீரின் துளி பரந்த மோகத்தை ஆற்றிக்கொண்டே-கண்ணீர்த் துளிபெருகுமாறு விஞ்சியுள்ள மோகத்தைத் தணிவித்துக் கொண்டே, (நீங்கள் சமீபிப்பவர்களாய்), கண்ட மாற்றம்

மொழிந்து சிந்தை சோகத்தை ஆற்றிக்கொண்டே-(நீங்கள்வருகிற வழியில் யான்மீண்டுவருதலைக்) கண்ட செய்தியைச் சொல்லி அவள் மனத்திலுண்டான விரகவேதனையைச் சாந்தப்படுத்திக் கொண்டே, துளி தூவ தொடங்குக - மழைத்துளி பெய்யத் தொடங்குவீர்களாக; (எ - று.)

ஆறுவகைப் பிரிவினுள் பொருள்வயிற்பிரிவாவது - முன்னோரால் ஈட்டப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ்செய்தால் அதனால்வரும் பயன் அவர்க்கு ஆவதல்லது தமக்கு ஆகாமையால், தமது பொருள்கொண்டு இல்லறஞ் செய்தற்காகப் பொருள் தேடுதற்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து தேசாந்தரஞ் செல்லுதல்; அங்ஙனம் பொருள்தேடப் பிரிந்துசெல்லுந் தலைவன் கார்காலத்தே மீண்டுவருவதாகக் காலங்குறித்துச் செல்வன். கற்பொடுபொருந்திக் கணவன்சொல்தவறாத தலைவி அவ்வார்த்தையை நம்பி அக்காலவரவை எதிர்நோக்கிக்கொண்டு அதுவரை பிரிவுத் துயரை ஒருவாறு பொறுத்து இல்லத்து இருப்பள். "இல்லிருக்கை முல்லை" என்பவாதலால், அங்ஙனம் இருத்தலும், இருத்தல் நிமித்தமும் - அகப்பொருளில் முல்லைத்திணையாம். அவ்வாறு பிரிந்துசென்ற தலைவன் பொருளீட்டிக்கொண்டு கார்காலத்தின் வரவைக் கண்டு இரங்கி விரைந்துமீண்டுவருகிறபோது விரைவாக முந்துற்றுச்செல்லும் மேகங்களை நோக்கி இவை தலைவியிருக்கிற விடத்தே என்னின் முற்பட்டுச் செல்லுமாயின் அதுகண்டு அவள் குறித்தகாலத்தில் என்வரவுகாணுத்துயரால் இறந்துபடக்கூடுமே யென்று அஞ்சி அம்மேகங்களை நோக்கி 'நீங்கள் முற்பட்டுச் சென்றீராயின் யான் சொல்தவறாது விரைந்து மீண்டுவருவதை நீங்கள் கண்ட செய்தியை அவட்குச்சொல்லி அவள்துயரை யாற்றிப் பின்பு உங்கள் காரியமாகிய மழைபெய்தலைத் தொடங்குவீராக' என்று அவற்றை வேண்டுதல், இச்செய்யுளிற்குறித்த விஷயம். மெய்ப்பாடு - அச்சம். பயன்- இவ்வார்த்தை செவிப்படப் பெற்ற பாகன் தேரை விரையச்செலுத்துதல்.

என்காரியமாக உங்களை நீங்களுள்ளவிடத்திற்குப் பிரயத்தன பூர்வமாகவந்து கண்டு என்குறைகூறினேனில்லை யென்றும், தற்செயலாக வழியிலே சந்தித்தவிடத்துக் காரியஞ்சொன்னே னென்றும் நீங்கள் என்மீது குறைகருதலாகா தென்பான், 'மேகத்தையாற்றிற்கண்டே னென்றெண்ணுத்' என்றான். 'மேகத்தை' என்றது, முன்னிலைப்படர்க்கை; சிந்தாமணியில் "எம்பியை யீண்டுப்பெற்றேன்" என்றவிடத்து 'எம்பியை' என்பதுபோல. 'மெய்யன் குருகூர்ப்பாகத்தையாற்றுஞ் சொல்லாள்' என்றது, பாட்டுடைத்தலைவனது சம்பந்தமுடைய பொருளை உவமைகூறி அம்முகத்தால் தலைவியைச் சிறப்பித்தது. ஆழ்வார் அவதாரஸ்தலமான திருக்குருகூர் முழுவதுமேயன்றி அதில் ஒவ்வொரு பகுதியுமே மிக இனிய தாகுதலால், அங்ஙனம் முழுவதும் இனியளாதலேயன்றி ஒவ்வோருறுப்புமே இனியளாகிற தலைவி யென்னுங் கருத்து அமைய 'மெய்யன்குருகூர்ப் பாகத்தை யாற்றுஞ் சொல்லாள்' என்றான்; இதனை - "தெய்வம்

பணிகழலோன் தில்லைச் சிற்றம்பலமனையாள்" என்றாற்போலக் கொள்க; இனி, பூமியை 'பூதலம்' என்றல்போல, குருகூரை 'குருகூர்ப்பாகம்' என்றதாகவுங் கொள்ளலாம். மோகமும், சோகமும் - மன்மதாவஸ்தைகள் ஐந்திற் சேர்ந்தவை; அவையாவன - சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்பன. இவற்றில் சுப்பிரயோகம் - சொல்லும், நினைவும்; விப்பிரயோகம்- வெய்துயிர்த்திரங்கல்; சோகம் - வெதுப்பும், துய்ப்பனதெவிட்டலும்; மோகம் - அழுங்கலும், மொழிபலபிதற்றலும்; மரணம் - அயர்ப்பும், மயக்கமும். ஐந்தாம் அவத்தையாகிய மரணம் நேர்தற்கு முன்பு நான்காமவத்தையாகிய மோகத்தை நீங்கள் நற்செய்தி கூறுதலால் முதலில் தணித்து, மூன்றாமவத்தையாகிய சோகத்தையும் தணிக்கத்தொடங்குவீராக என்றான். அதற்குள் யான் வந்து முதலிரண்டு அவத்தைகளை ஆற்றுவேனென்பது, உட்கோள். நீங்கள் முன்செல்வீராயின் "பருவமெடுத்தது வந்திலர் காதலரென்று பைம்பொ, னுருவமடப்பிடியே உயங்கேல் உயங்காத வண்ணம், பொருபகை செற்ற பொற்றேரேறி வேந்தர்பொருண் முடித்து, வருவதுரைப்பமுன்னேவந்ததா லிம்மழைமுகிலே" என்று கண்டார்கூறும்படி என்வரவுரைக்குந் தூதாவீர் என்று வேண்டியவாறும்.

இரண்டாமடியில், ஆற்றும் என்பது - உவமவாசகம். சொல்லாலே மோகத்தை ஆற்றிக்கொண்டு-இரண்டு செயப்படுபொருள்வந்த வினை. 'வார்த்தா' என்ற வடமொழி செய்தியையும் அதுகுறிக்கும் பேச்சையும் உணர்த்துதல்போல, 'மாற்றம்' என்ற தென்மொழி - சொல்லையும் அவற்றுக்குறிக்கப்படும் செய்தியையும் உணர்த்தும். மெய்யன் - யதார்த்தவாதி, தத்துவஸ்வரூபி.

கம்பநாடர்பக்கல் பூர்ணகிருபைவைத்து அதனால் உரிய காலத்திலே அவர்க்குக் காட்சிதந்து பேறளிக்குமாறு திருவுள்ளங்கொண்ட ஆழ்வார் அதற்குமுன்னமே விரைந்து வருந்துகிற அவரை உறுதிகூறித்தேற்றுமாறு, திவ்யதேசயாத்ராபரராய்ச் செல்லும் சில பாகவதரை நோக்கிக் கூறுதல், இதற்கு உள்ளுறை பொருள். இங்ஙனம் கூறுதற்குக் காரணம், மிக்க கருணையென்க. கைம்மாறு கருதாது பரோபகாரத்திற்காகவே நல்லநீரைச் சுமந்து கொண்டு உடம்புவருந்தச்சென்று ஆங்காங்குப்பெய்து எல்லாவுயிர்களையும் பாதுகாத்தல், மேகங்களின் இயல்பு; "ஆதியந்த மனந்த மற்புதமானவானவர்தம்பிரான், பாதமாமலர்சூடும் பத்தியிலாத பாவிகளுய்ந்திடத், தீதில்நன்னெறி காட்டியெங்குந்திரிந்தரங்கனெம்மானுக்கே, காதல்செய்தொண்டர்" என்றபடி இவ்வுலகத்தில் அனைவரையும் உய்வித்தற்பொருட்டு மெய்வருத்தம் பாராமல் எங்குந்திரிந்து குணரஸபூர்த்திகொண்டு நல்லொழுக்கங் காட்டிக் கைம்மாறு கருதாது உதவும் இயல்பினர் பாகவதர் ஆதலால், மேகங்களைப் பாகவதர்களாகச் சொல்லத் தட்டில்லை. எம்பெருமானோடொக்கும்வடிவு இரண்டிடத்தும் உண்டு. **கண்ணீர்த்துளிபரந்த மோகமும், சிந்தைச்சோகமும், மதனவத்தையிலொப்பப் பக்தியவத்தையிலும் நிகழும். துளிதூவுதல் =**

தாபம் ஆறுமாறு மெதுவாக இன்சொற்பேசுதல்; மற்றும் இங்ஙனங் கண்டுகொள்க. (69)

[மதங்கு.]

70. தொடங்குகின்றாணடஞ்சொல்லுகின்றேன்குருகூரர்த்தொழா
மடங்குகின்றாண்மண்டலஞ்சுற்றியாடுகின்றாண்மதங்கி
விடங்குகண்டார்பிழைப்பார்சவையீர்விரைந்தேகுமிந்தப்
படங்குவிண்டாற்பின்னைப்போகவொண்ணாதும்பதிகளுக்கே.

(இ - ள்.) சவையீர்- சபையிலுள்ளவர்களே!— சொல்லுகின்றேன்-(யான் உங்கட்கு ஓர் உறுதி) கூறுகின்றேன்; (கேளுங்கள்): மதங்கி-ஆடல் பாடல்வல்ல ஓர் இளமங்கை, நடம் தொடங்குகின்றாள் - கூத்தாடத் தொடங்குகிறாள்; குருகூரர் தொழா மடங்குகின்றாள்-திருக்குருகூரில் அவதரித்தவரான நம்மாழ்வாரைத் (தொடக்கத்திலே) தொழுது (திரையினுள்ளே) திரும்பிச்செல்லுகிறாள்; மண்டலம் சுற்றி ஆடுகின்றாள் - மண்டலமாகச்சுழன்று (அங்கிருந்தபடியே) கூத்தாடுகின்றாள்; விடங்கு கண்டு பிழைப்பார் ஆர் - (இந்த மதங்கியின்) அழகைக் கண்டால் (காதல்நோயால் மரணவேதனைப்படாது) பிழைப்பவர் எவர்? [எவருமில்லையென்றபடி]; இந்த படங்கு விண்டால் பின்னை உம் பதிகளுக்கு போக ஒண்ணாது - இந்தத்திரையை வாங்கிவிட்டாலோ (அவளைக் கண்ட) பின்பு (மோகித்துவீழ்வதேயன்றி உங்களால்) உங்களூர்க்குப் போகமுடியாது; (ஆதலால்), விரைந்து ஏகும் - (அத்திரை வாங்குதற்குமுன்னே) விரைவாக அப்பாற் போய்விடுங்கள்.

மதங்கு என்பது - கலம்பகத்துக்கு முக்கியமான உறுப்புக்கள் பதினெட்டனுள் ஒன்று; இதனை மதங்கமென்றும், மதங்கியாரென்றும் வழங்குவர். இரண்டுகைகளிலும் வாளையெடுத்துச் சுழற்றிக்கொண்டு தானும் சுழன்று ஆடுவாளோரிளமாதின் அழகுமிகுதியை ஒருவன் பாராட்டிக் கூறுவதாகச் செய்யுள்செய்வது, இதன் இலக்கணம். அங்ஙனம் ஆடுபவள், மதங்கியெனப்படுவள். மற்றும் கலம்பகவுறுப்பினுள் புயவகுப்பு மறம் முதலிய சிலவும் அந்தாதிப்பிரபந்தங்களில் அருமையாகக் கூறப்படுதல் காண்க. "போதவெனக்கெளிதானார் போதவனுக்கரிதானார், நாதரரங்கர்திருத்தாள் நாடியரங்கில் நடக்கில், ஓதுமதங்கிநடித்தால் உள்ளமதங்கியரக்காம், வேதமறைந்திடவல்லீர் விரையமறைந்து விடீரே" என்ற திருவரங்கக்கலம்பகத்து மதங்குச்செய்யுள் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. அரங்கிற்புகுந்து ஆடுவார் தொடக்கத்தில் தமது வழிபடுகடவுளைத் தொழுதல் இயல்பு. மண்டலம் சுற்றுதல்-பவுரியென்னுங் கூத்துவிகற்பம்.

ஞானங்கனிந்து நலங்கொண்ட கம்பநாடரது பக்தியதிசயத்தை யுணர்ந்த பாகவதர், அவர் ஆழ்வாரைத் தொழுதலையும், "கும்பிடுநட்டமிட்டெழுந்தாடிப்பாடியிறைஞ்சி" என்றபடி பக்தி பரவசப்பட்டுக் கூத்தாடுதலையும் உலகத்தார்க்கு எடுத்துக்காட்டி, 'இவரது நலத்தைக் கண்டால் தப்ப விரகில்லை' என்றும், 'ஞானக்

கண்ணின் காட்சியை மறைக்கும் திரிபுணர்வாகிய திரை அகல இவரது சொரூபத்தை உள்ளபடி கண்டவர் இவர்பக்கல் ஈடுபடுவதேயன்றி இவரைவிட்டு முன்பு தாம் விரும்பிய பிரபஞ்ச விஷயங்களிற்செல்ல இயலாது' என்றும் பாராட்டிக்கூறுதல், இதற்குஉள்ளுறைபொருள். அகலம் உரைத்துக்கொள்க. (70)

71. பதியந்தமிழென்னநான்மறையென்னவிப்பார்புரக்கு
மதியந்நமிலொளிமாலைகளென்னமறைத்தமிழி
னதியந்தருங்கவியாயிரஞ்செய்தளித்தானமுதம்
பொதியந்தருநதியங்குருகூரெந்தைபூசுரர்க்கே.

(இ - ள்.) பொதியம் தரு - பொதியமலையினுற் கொடுக்கப்பட்ட [பொதியமலையிலிருந்து தோன்றிவருகிற], நதி - தாமிரபர்ணிநதி பாயப்பெற்ற, அம் - அழகிய, குருகூர் - திருக்குருகூரில் திருவவதரித்த, எந்தை - எமதுதலைவரான நம்மாழ்வார்,—தமிழ் பதியம் என்ன - (மேல்நோக்கிலே காண்பவர்கள்) தமிழ்ப்பதிகங்களென்று சொல்லும்படியும், நால் மறை என்ன-(ஆழ்ந்துபொருள் நோக்குபவர்) நான்குவேதங்களென்று சொல்லும்படியும், இ பார் புரக்கும் மதி அந்தம் இல் ஒளி மாலைகள் என்ன - (பயனைநோக்கி ஈடுபடுபவர்)இந்நிலவுலகத்தை நல்வழிப்படுத்திப் பாதுகாப்பனவும் வரம்பிலாஞானமாகிய ஒளியை வெளிப்படுத்துவனவுமான ஆரங்களென்று சொல்லும்படியும், மறை தமிழின் அதிஅம் தரும் கவி ஆயிரம்செய்து - வேதங்கட்கும் தமிழ்ப்பாஷைக்கும் மிக்க அழகைத் தருகிற திருவாய்மொழியாயிரம் பாடல்களைப் பாடி, பூசுரர்க்கு அமுதம் அளித்தான் - பூதேவரெனப்படுகிற அந்தணர்களுக்கு அந்த இன்கவிகளாகிய அமிருதத்தைக் கொடுத்தருளினுர்;

திருமால் வானுலகத்தில் வாழுந் தேவர்க்கு அமிருதமளித்தாற்போல, அத்திருமாலடியாரிற் சிறந்தவராகிய நம்மாழ்வார் நிலவுலகத்துவாழுந்தேவரெனப்படுகிற அந்தணர்க்குத் திருவாய்மொழியாகிய அமிருதத்தை அளித்தன ரென்க; "மறைப்பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து, துறைப்பாற்படுத்தித் தமிழாயிரத்தின்சுவையமுதங், கறைப்பாம்பணைப்பள்ளியானன் பரிட்டங்களித்தருந்த, நிறைப்பான்" என்பர் பிள்ளைப்பெருமாளையங்காரும்.

பதியமெனினும், பதிகமெனினும் ஒக்கும். பத்துச்செய்யுள் கொண்டது, பதிக மெனப்படும். திருவாய்மொழி, நூறுபதிகங் கொண்டது; அந்நூறுபதிகந்தோறும் பத்துச்செய்யுள் ஒவ்வொரு பதிகத்தின் ஈற்றிலுமுள்ள திருநாமப்பாசுரம் நீங்க வெனக்காண்க. இனி, செய்யுளைக்குறிக்கிற பத்யம் என்ற வடசொல் பதியமென விகாரப்பட்டுவந்ததெனக் கொண்டு, தமிழ்ப்பதியம் என்ன -தமிழ்ப்பாசுரங்களென்று சொல்லும்படியும் என்று உரைத்தலும் ஒன்று. அந்தமில் மதி என்க. 'அதி' என்பது, வடசொல்லுள் மிகுதிப்பொருளதோர் இடைச்சொல். பொதியம் = பொதியில்; மலயபருவதம். பூஸுரர்-வடசொல்; வானுலகத்தில்தேவர்போல, பூலோகத்தில் அந்தணர் சிறப்புற்றுவிளங்குதலால், இப்பெயர்

பெற்றனர்; "நிலத்தேவர்" என்றார் ஆழ்வாரும். இங்கு 'பூசுரர்' என்றது, மதுரகவியாழ்வார் முதலிய வைதிகர்களை. 'கவியாயிரம்' என்றது, சொச்சத்தொகையைக் குறியாது, பெருந்தொகை மாத்திரத்தைக் குறித்தது; திருவாய்மொழிச்செய்யுள் - 1102 ஆகலின். (71)

72. **பூட்சிகண்டீர்பொய்ச்சமயப்புலவர்க்குப்போக்குவல்வாய்**
வாட்சிகண்டீர்மற்றைமாயத்தருகர்க்குமன்னுயிர்கட்
காட்சிகண்டீர்தொண்டர்க்காநந்தவாரிகண்டீரறிவைக்
காட்சிகண்டீர்பரவுங்குருகூர்வந்தகற்பகமே.

(இ - ள்.) குருகூர் வந்த கற்பகம்-திருக்குருகூரில் தோன்றிய கல்பகவிருக்ஷம்போன்ற நம்மாழ்வார்,—பொய் சமயம் புலவர்க்கு-(பிரபஞ்சத்தைப்) பொய்யென்றுகூறும் (பௌத்தமும் பிரச்சந்ந பௌத்தமுமாகிய) மதங்களிலுள்ள வித்துவான்களுக்கு, பூட்சி கண்டீர் - (வாயையடக்கும்) பூட்டு என்று அறியுங்கள்; மற்றை மாயத்து அருகர்க்கு - அவர்களினும் வேறான வஞ்சனையையுடைய ஜைநசமயத்தார்க்கு, போக்கு வல் வாய் வாட்சி கண்டீர் - (அவர்கள்மாறுபாட்டைப்) போக்குகிற வலியகூர்வாயையுடைய வாட்சியென்னுங் கருவி யென்று அறியுங்கள்; மன் உயிர்கட்கு ஆட்சி கண்டீர்- உலகத்தில் நிலைபெற்ற உயிர்களுக்கு உரிமையான அழிவற்ற பொருளென்று அறியுங்கள்; தொண்டர்க்கு ஆநந்த வாரி கண்டீர் - (தமது) அடியார்களுக்குப் பேரின்பப் பெருக்காவரென்று அறியுங்கள்; அறிவை காட்சி கண்டீர் - (மற்றும் அவர் நமது) அறிவுக்குக் காணத்தக்க பொருளாவரென்று அறியுங்கள்; (ஆகவே), பரவும் - (எல்லீரும் அவரை) வணங்கிப் புகழ்ந்து வழிபடுங்கள்; (எ - று.)— என்று உலகத்தார்க்கு உபதேசித்தபடியாம்.

பூட்சி=பூட்டு. கண்டீர் - தேற்றம். பொய்ச்சமயம் - மித்யாவாதமும், மாயாவாதமு முள்ள மதங்கள். மெய்ப்பொருளாகிய கடவுளையும் மறுபிறப்பையும் இருவினைப்பயனையும் இல்லையென்றுகூறும் லோகாயதமதமும், மற்றும் இத்தன்மையனவான மாறுபாடுகளைக் கூறும் மதாந்தரங்களும் 'பொய்ச்சமயம்' என்றதில் அடங்கும். வாட்சி=வாய்ச்சி; மரத்தைச்சீவும் ஒருகருவி; அது மரக்கோணலைத் தீர்ப்பதுபோல, இவர் மனக்கோணலைத் தீர்ப்பரென்க. இனி, 'சி' என்பதைப் பகுதிப்பொருள்விகுதியெனக் கொண்டு, வாட்சி - வாள்என்றலும் ஒன்று. "இலிங்கத்திட்டபுராணத்தீரும் சமணரும் சாக்கியரும், வலிந்துவாதுசெய்வீர்களும் மற்றுநுந்தெய்வமுமாகிநின்றான், மலிந்துசெந்நெற் கவரிவீசுந் திருக்குருகூரதனுட், பொலிந்துநின்ற பிரான்கண்டீர் ஒன்றும் பொய்யில்லை போற்றுமினே" என்று ஆழ்வார் திருவாய்மொழியில் பரமதநிரஸநபூர்வமாக ஸ்வமதஸ்தாபநஞ்செய்ததனால், 'பூட்சி கண்டீர் பொய்ச்சமயப்புலவர்க்குப் போக்குவல் வாய்வாட்சி கண்டீர் மற்றைமாயத்தருகர்க்கு' என்றார். ஜீவாத்மா நித்தியமாதலால், 'மன்னுயிர்' எனப்பட்டது. 'உயிர்கட்கு ஆட்சி' என்பதற்கு - ஜீவராசிகளை ஆளுபவரென்று பொருள் கொள்ளலுமாம்; ஆட்சி - ஆளுகை; 'சி' விகுதி பெற்ற தொழிற்

பெயர்: இங்கு, ஆளுபவர்க்கு ஆகுபெய ரென்க. ஆநந்தவாரி - வடமொழித்தொடர். அறிவை = அறிவுக்கு; உருபுமயக்கம்; அறிவைக்காட்சி - அறிவு கொண்டு காண்பதற்கு ஏற்ற பொருளென்க: அவசியம் அறியத்தக்க பொருளென்றபடி. இனி, 'அறிவைக்காட்சி' என்பதற்கு-ஞானமயமான பரப்பிரஹ்மஸ்வரூபத்தை யுணர்ந்தவ ரென்று பொருள்கொள்ளவுங் கூடும். அறிவு ஐ காட்சி என்று பிரித்து, அறிவுக்கு அழகிய காட்சிப்பொருளென்றலு மொன்று. பரவும் - ஏவற்பன்மை; பெயரெச்சமாகக் கொண்டு, அனைவராலுந்துதிக்கப்படும் குருகூ ரெனினும் இழுக்காது. கற்பகம் - உவமையாகுபெயர்; வேண்டுவோர் வேண்டுமவற்றை அருளுதலால், ஆழ்வார் கற்பக மெனப்பட்டனர். கல்பக மென்ற வடசொல் - வேண்டியவற்றைக் கல்பிப்பதென்று காரணப்பொருள்: கல்பித்தல் - உண்டாக்குதல். (72)

73. கற்றுஞ்செவியுறக்கேட்டும்பருகிக்களித்துமுள்ளே
முற்றுமுகப்பெய்துமூழ்கிக்குடைதுமுகந்துகொடு
நிற்றுநிலையுறநீந்துதும்யாநிதமாறனெம்மை
விற்றும்விலைகொள்ளவும்முரியான்கவிவெள்ளத்தையே.

(இ-ள்.) எம்மை விற்றும் விலைகொள்ளவும் உரியான்-எம்மை விற்கவும் வாங்கவும் உரியவராகிய, மாறன்-நம்மாழ்வார் அருளிச்செய்த, கவிவெள்ளத்தை - பாடல்களாகிய பிரவாகத்தை, யாம் - நாம்,—நிதம் - நாள்தோறும், கற்றும் செவி உற கேட்டும் பருகி களித்தும்-ஓதியும் (பிறர்கூறக்) காதில்நன்குகக்கேட்டும் குடித்து மகிழ்வோம்; உள்ளே முற்றும் உக பெய்தும் - அகத்திலே அவ்வெள்ளமுழுவதும் விழும்படி ஊற்றிக்கொள்வோம்; மூழ்கி குடைதும் - (அவ்வெள்ளத்தில்) இறங்கி அமிழ்ந்து நீராடுவோம்; முகந்து கொடு நிலை உற நிற்றும் - (அப்பெருக்கை) மொண்டெடுத்துக்கொண்டு நிலைபெற நிற்போம், நீந்துதும் - (அவ்வெள்ளத்தில்) நீந்துவோம்; (எ - று.)

ஆழ்வார்பாசுரங்களை வெள்ளமாக்கி, அதற்குஏற்ப, 'பருகிக்களித்தும், முற்றும் உள்ளே உகப்பெய்தும், மூழ்கிக்குடைதும், முகந்துகொடுநிலையுற நிற்றும், நீந்துதும்' என்றார்; **உருவகவணி.** ஆழ்வாரது திவ்வியப்பிரபந்தங்களிலேயே இடைவிடாது பலவாறு பயின்று அவற்றை உபயோகித்துக்கொள்வோ மென்பது கருத்து. "பருகுவனன்ன வார்வத்தனாகி............செவிவாயாகநெஞ்சுகளனாகக், கேட்டவைகேட்டவைவிடாதுளத்தமைத்தல்" முறைமையாதலால் 'கற்றுஞ் செவியுறக்கேட்டும் பருகிக்களித்தும்' என்றும், 'உள்ளேமுற்றும் உகப்பெய்தும்' என்றும் கூறப்பட்டது. உள்ளே- உள்ளத்திலே. உள்ளே முற்றும் உகப் பெய்தல்-மறந்துவிடாதபடி மனத்திலே நிரம்பப் பதியவைத்துக்கொள்ளுதல். மூழ்கிக்குடைதல் - பொருளாராய்ச்சி செய்தல். முகந்துகொடு நிற்றல் - அப்பொருளைப்பாராட்டித் தாம்உபயோகிக்குமாறு தேக்கிக்கொள்ளுதல். நீந்துதல் - அவற்றில் ஈடுபடுதல்.

தாம் ஸ்வாதந்திரியமின்றி ஆழ்வார்க்குப்பரதந்திரராய் நிற்பவரென்பதும் தம்மை அடிமையாக ஆழ்வார் ஆட்கொண்டருளியதும் தோன்ற, 'எம்மை விற்றும் விலைகொள்ளவும் உரியான்' என்றார்; அடிமைகொண்டவனென்ற பொருளை 'விற்றும் விலைகொள்ளவும் உரியான்' எனப் பிறிதொருவகையாற் கூறியது, **பிறிதினவிற்சியணி.** 'எம்மை' என்றது, இயற்கைத் தனித்தன்மைப்பன்மை: தம்மைப்போன்ற அடியார்களையுங் கூட்டிய உளப்பாட்டுத்தன்மைப்பன்மையுமாம்.

நிதம் - நித்ய மென்ற வடசொல்லின் விகாரம்; நித்த மெனவும் வழங்கும். விற்று=விற்க; எச்சத்திரிபு. விலைகொள்ளுதல் - விலைக்குக்கொள்ளுதல். (73)

[தலைவியின் கண்ணழகு கண்டு வியந்த தலைவன் கூறுதல்.]

74. ***வெள்ளம்பரந்தனவோகமலத்தன்றிவெண்மதிமேற்***
கள்ளம்பரந்தனவோமுயனீக்கிக்கவிக்கரசன்
றெள்ளம்பரந்தவயற்குருகூர்க்கொம்பின்செம்முகத்தெ
முள்ளம்பரந்தனவோகண்களோவொன்றுமோர்கிலமே.

(இ - ள்.) (இவை),—கமலத்து - (ஒரு) செந்தாமரைமலரின் மேல், வெள்ளம் பரந்தனவோ - பிரவாகம் பரவியவை தாமோ?—அன்றி - அல்லது, வெள் மதிமேல் - வெண்ணிறமான சந்திரன் மேல், முயல் நீக்கி - (களங்கமாகிய) முயலைப் போக்கி, கள்ளம் பரந்தனவோ - களவுத்தொழில் பரவியவை தாமோ,—கவிக்கு அரசன் - பாவலர்கட்கெல்லாம் மேலான தலைவராகிய நம்மாழ்வாருடைய, தெள் அம் பரந்த வயல் குருகூர் - தெளிவான நீர் பரவிப் பாயப்பெற்ற கழனிகளையுடைய திருக்குருகூரிலுள்ள, கொம்பின் - பூங்கொம்புபோன்ற இம்மங்கையினது, செம் முகத்து - சிவந்த முகத்திலே, எம் உள்ளம் பரந்தனவோ - எமதுமனம் பரவியவை தாமோ?—(அன்றி), கண்களோ - கண்கள்தாமோ?—ஒன்றும் ஓர்கிலம் - (இவற்றில்) ஒன்றையும் துணிவாக அறிகின்றோமில்லை; (எ - று.)

தலைமகன் தலைமகளைப் பூஞ்சோலையில் ஏகாந்தத்திலே தற்செயலாகச் சந்தித்தபோது அவளது கண்ணழகில் வீடுபட்டு அது குறித்து வியந்து தன்னிலே தான் சொல்லிக்கொண்டது, இது; நெஞ்சொடுகூறிய தென்க. இது நலம்பாராட்டல். 'நயப்பு' என்றும், 'கண்நயந்துரைத்தல்' என்றுங் கூறப்படும். ஒருவருள்ளக் கருத்தை ஒருவரறியாத ஒருதலைக்காமமாதலால், இது, இயற்கைப் புணர்ச்சியிலே கைக்கிளையின்பாற்படும்.

இவளது முகம் செந்தாமரை மலர் போன்றிருக்க, அதில் விசாலமாயுள்ள கண்கள் கடல்வெள்ளம்போலுதலால், 'கமலத்து வெள்ளம்பரந்தனவோ' என்றான்; "அஞ்சொற்களமுதிலள்ளிக் கொண்டவள் வதனம் மைதீர், கஞ்சத்தினளவிற்றேனுங் கடலினும்பெரிய கண்கள்" என்ற கம்பராமாயணம் இங்குக் காணத்தக்கது. தன்மனம் அக்கண்ணழகில்வீடுபட்டு மீளவொண்

ணுதபடி ஆழ்ந்திட்டதனுலும், அக்கண்களை வெள்ளமென்ருனும். மகளிர் கண்களுக்குக் கடல் உவமையாதலை, "வேல் வாள் கணை வண்டு வேலைவிடமமுதம்" என்னும் இரத்தினச்சுருக்கத்தாலும் அறிக. மதிக்கு வெண்மை - இயற்கை யடைமொழி. இவளது முகம் களங்கமில்லாததொரு சந்திரமண்டலம்போன்றிருக்க, அதிலே விசாலமாயுள்ள மையுண்டகருங்கண்கள் மிக்க அழகுடைமையாற் காண்பவர்மனத்தைக் களவுசெய்யுந் தன்மையன வாதலின் 'மதி மேல் முயல்நீக்கிக் கள்ளம்பரந்தனவோ' என்ருன். மிக்கவஞ்சனையின் வடிவமாகவேயுள்ளன இக்கண்க ளென்க. களவைக் கருநிறமுடையதென்று கற்பித்துக்கூறுதல் கவிமரபாதலை, "களவென்னுங் காரறிவாண்மை" என்ற திருக்குறள் கொண்டும் உணர்க. இப்பொழுது இருக்கிற சந்திரமண்டலம் களங்கமுடையதாதலால் இவளது முகத்துக்குஏற்ற உவமையாகாதென்பது 'வெண்மதிமேல் முயல்நீக்கி' என்றதனுற் போதரும். முகத்துக்குச் சந்திரனுவமை - கண்டவர் கண்களுக்கு மகிழ்ச்சி விளைவித்தலினும், குளிர்ந்தஒளியினும் என்க. அன்றி, செம்முகத்துக்கு வெண்மதி - நிறத்தில் நிகராகாமை காண்க. கொம்பு - பூங்கொம்புபோல் மெல்லியவடிவமுடைய பெண்ணுக்கு உவமையாகு பெயர். அவளது அவயவங்கள் அழகிய மலர் போலுதலால், அவளை 'கொம்பு' என்ருன். அவளது சிவந்தமுகத்திலுள்ள கண்கள், அவள் மேல் தனது மனத்தின் ஆசை எவ்வளவு பரவியுள்ளதோ அவ்வளவு விசாலமாயுள்ளதனுலும், அவள்முகத்தின் மேல் தன்மனம் பரந்துசென்றவாறு பரந்துள்ளதனுலும், அவற்றைக்காண்பவரது உள்ளம் காதல்மிகுதியால் அக்கண்மயமேயாகுதலாலும், அவள்முகத்திற் பதிந்த தன்மனம் அதனைவிட்டுப் போகாமையாலும் 'கொம்பின் செம்முகத்து எம்முள்ளம் பரந்தனவோ' என்ருன். இங்ஙனம் கருங்கண்களுக்குத் தன்மனத்தை உவமைகூறியது, அம்மனம் காமமயக்கத்தால் இருண்டிருத்தல் பற்றி யென்க. இப்படி பலவகையாகக்கொண்டு காட்டிய உபமானங்களெல்லாம் அவ்வுபமேயத்தின் தகுதிக்குப் போதா வென்னுங் கருத்தினுல், அந்த அதிருப்தி தோன்ற, கடைசியில் கண்கள்தாமோ என்று கூறிவிட்டான். இப்படி உபமானத்தையும் உபமேயத்தையும் ஐயமுற்று உரைத்தது, **ஐயஉவமையணி.**

இச்செய்யுளின் மெய்ப்பாடு, உவகையைச்சேர்ந்த மருட்கை; கண்ணழகின் பெருமையை வியந்து உரைத்ததனுல். இங்ஙனம் உரைத்தலின் பயன் - மகிழ்தல்.

சந்திரனிடத்திலுள்ள களங்கத்தை முயலென்றும் மானென்றுங் கூறுதல், மரபு. கவி-இங்கு, சாதிப்பெயர். ஆழ்வார் திருநாவீறுடைய பிரானுதலால், 'கவிக்கரசன்' எனப்பட்டார். தெள் அம்- வினைத்தொகை; பண்புத்தொகையெனினும் இழுக்காது. அம் - வடசொல். இங்கு, 'தெள் அம்' என்றது, சுத்தமான தாமிரபர்ணி நதிதீர்த்தத்தை. செம் முகம் - செவ்வியுள்ள முகம் எனினுமாம். 'எம்' 'ஓர்கிலம்' என்பன - தனித்தன்மைப்பன்மை. 'வெள்ளம் பரந்தன,' 'கள்ளம்பரந்தன,' 'உள்ளம்பரந்தன' என்றவை-தனித்

தனி ஒருசொல்தன்மையுற்று, தோன்று எழுவாயாக வருவிக்கப் பட்ட 'இவை' என்ற பன்மைப்பெயர்க்குப் பயனில்லையாம்.

'கண்ணழகு என்பது, ஜ்ஞாநவைலக்ஷண்யத்தை' என்பர், ஸ்வாபதேசம்வல்லார்; ஆகவே, கம்பநாடரது ஞானவிளக்கத்தைக் கண்ட ஆழ்வார், அவர்பக்கல் பெருங்கருணைகொண்டு அந்த ஞானத்தைப் பெரிதாகப்பாராட்டுதல், இதற்கு உள்ளுறை பொருள். 'அகத்தினழகு முகத்தில்தெரியும்' என்றபடி அவரது மனத்திலுள்ள அறிவின்பெருமை செவ்வியமுகத்திலே தோன்று மாகலின், 'செம்முகத்துக் கண்கள்' எனப்பட்டன. இவர்க்குப் பேரறிவு ஆழ்வாரதுசங்கற்பத்தால் [அதாவது - அவரது உள்ளத்திற்கொண்ட திருவருளால்] உண்டாயினமைபற்றி, அவர் அதனை 'செம்முகத்து எம்உள்ளம்பரந்தனவோ' என்று கொண்டாடத்தகும். இவரது முகத்தை ஆழ்வார் குளிர்ந்ததிரு வுள்ளத்தோடு கடாக்ஷித்ததனால் உண்டாகி வளர்ந்தது இவர்க் குப் பெருஞான மென்க. கவிக்கரசன் குருகூர்க் கொம்பு - ஆழ்வாரைநாடி அவரது திருவவதாரஸ்தலத்தைச்சார்ந்த கம்ப நாடர். தெள்அம் பரந்த வயல் குருகூர் - தெளிவான ஞானத்தினு லாகும் பேரானந்தம் பெருக்கெடுத்து வெள்ளமிடுந் திவ்வியதேசம் என்க. இதயகமலத்தி லெழுந்து பொங்கும் ஞானவெள்ள மாதலால், 'வெள்ளம்பரந்தனவோ கமலத்து' எனப்பட்டது. களங்கமற்ற இந்தச் சுத்தஞானத்திற்கு, பரமாத்மாவின் மனத் தையும் உட்பட வசீகரிக்குந்திறம் அமைந்திருத்தல், 'வெள்மதி மேல் முயல்நீக்கிக் கள்ளம் பரந்தனவோ' என்று பாராட்டப்பட்ட தென்க. மற்றும்விவரம் நுண்ணிதின் உணர்க. (74)

75. ஓருந்தகைமைக்குரியாருமோங்கியஞானியருஞ்
சாருந்தனித்தலைவன்சடகோபன்றடம்பதிக்கே
வாருமுமக்கொருறுதிசொன்னேனும்மயக்கமெல்லாந்
தீருந்திருக்கறுஞ்சிந்தைசெவ்வேநிற்குந்தீங்கறுமே.

(இ-ள்.) ஓரும் தகைமைக்கு உரியாரும் - (தத்துவப்பொருளை) ஆராயுந்தன்மைக்கு உரியவர்களும், ஓங்கிய ஞானியரும் - (அங்ங னம் ஆராய்ந்து தெளிந்து) உயர்ந்த ஞானத்தைப் பெற்றவர்களும், சாரும் - சரணமடையப்பெற்ற, தனி தலைவன் - ஒப்பற்ற தலைவ ரான, சடகோபன் - நம்மாழ்வார் திருவவதரித்த தலமான, தட பதிக்கே - பெருமையுடைய திருக்குருகூர்க்கே, வாரும் - வாருங் கள்; (அங்கு வருவீர்களாயின் அவர்திருவருளால்), உம் மயக்கம் எல்லாம் தீரும் - உங்களுடைய விபரீதஞானமெல்லாம் ஒழியும்; திருக்கு அறும் - மாறுபாடு நீங்கும்; சிந்தை செவ்வே நிற்கும் - மனம் (கோணாமல்) நேரே [நல்வழியிலே] நிலைநிற்கும்; தீங்கு அறும் - தீவினைகளெல்லாந்தொலையும்; உமக்கு ஓர் உறுதி சொன் னேன் - (இங்ஙனம்) உங்களுக்கு ஓர் உறுதிப்பொருள் கூறினேன்; [கேட்டு உய்வீராக என்றபடி]; (எ - று.)

என்று உலகத்தார்க்கு நல்லறிவு உணர்த்துகிற முகத்தால், அத்திவ்வியதேசமகிமை கூறியவாறும்.

வீடுபேற்றுக்குக் காரணமாகும் பரம்பொருளை உணர்தற்கு உபாயம் மூன்று; அவை - கேள்வி, விமர்சம், பாவனை என்பன: அவற்றுள், கேள்வியாவது - ஞானநுட்டானங்களை யுடையரான நல்லாசிரியர்பக்கல் உபதேசமொழிகளைக் கேட்டல். விமர்சமாவது -அங்ஙனங் கேட்ட உபதேசமொழிப்பொருளைப் பிரமாணங்களைக் கொண்டும் யுக்தியைக்கொண்டும் தெளிய ஆராய்தல். பாவனையாவது - அம்முதற்பொருளை இடையறாது கருதுதல். இம்மூன்றனுள், முதலிரண்டுநிலையளவில் நின்றவர் 'ஓருந்தகைமைக்கு உரியார்' என்றும், மூன்றாநிலையையடைந்து ஐயந்திரிபற மூலப்பொருளையுணர்ந்தவர் 'ஓங்கியஞானியர்' என்றுங் கூறப்பட்டனர். திருக்குறளில் "ஓர்த்துள்ள முள்ளதுணரின்" என்றாற்போல, 'ஓருந்தகைமைக்குரியார்' என்றார். இவர்களினும் ஞானியர் மேம்பட்டவராதலால், அவர்க்கு 'ஓங்கிய' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. இனி, 'ஓருந் தகைமைக்கு உரியார்' என்பதற்கு- அஷ்டாங்கயோகநெறியால் உண்மைப்பொருளைக் காண்பவர் [யோகிகள்] என்று பொருள்கொள்ளலும் ஒன்று. இவர்களெல்லார்க்கும் மேம்பட்டவர் ஆழ்வார் என்க. இனி ஓருந் தகைமைக்கு உரியார் - பரனையுணருமியல்பான பரபக்தியை யுடையார் என்றும், ஓங்கிய ஞானியர் - அவரிற் சிறந்தவரான பரஜ்ஞானமுடையார் என்றுங் கொண்டு, இவ்விருவகையாரும் சரணமாக அடையும் ஒப்புயர்வற்ற இறைவர், பரனையுணர்ந்து சேர்ந்து அவனைவிடமாட்டாத பரமபக்தியையுடையரான நம்மாழ்வார் என்றலும் உண்டு; பரபக்தி-எம்பெருமானைத் தரிசித்தல், பரஜ்ஞானம்-அவனைச் சேர்தல், பரமபக்தி-அவனது பிரிவுக்கு அஞ்சுதல் எனக் கொள்வது சம்பிரதாயம்.

'மயக்கமாவது மெய்ப்பொருளல்லவற்றை மெய்ப்பொருளென்று உணர்தல். விபரீதவுணர்வாவது - மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் இல்லை யெனவும், மற்றும் இத்தன்மையனவுஞ் சொல்லும் மயக்கநூல்வழக்குக்களை மெய்ந்நூல்வழக்கெனத் துணிதல்: குற்றியை மகனென்றும் இப்பியை வெள்ளியென்றும், இவ்வாறே ஒன்றனைப் பிறிதொன்றாகத் துணிதலும் அது. மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை என்பன-ஒருபொருட்கிளவி' என்று திருக்குறளுரையிற் பரிமேலழகருரைத்தது, இங்கு உணரத்தக்கது. "பொருளல்லவற்றைப் பொருளென் றுணரும், மருளான் ஆம்மாணாப்பிறப்பு" என்றபடி இம்மயக்கம் பிறப்புக்கு முதற்காரண மாதலால், இதுபற்றற ஒழிதலை முக்கியப்பயனாக முதலில் எடுத்துக்கூறினார். திருக்கு - செருக்கு வஞ்சம்முதலியன. சடகோபன் தடம்பதி = ஆழ்வார்திருநகரி. (75)

76. அறுவகையாயசமயமுமைவகைத்தாம்புலனு [கே
முறுவகையாற்சொன்னவோட்டமெல்லாமொழிவித்தொருங்
பெறுவகையாறெனச்செய்தபிரான்குருகூர்ப்பிறந்த
சிறுவகையாரவரைத்தொழுதோமெம்மைத்தீண்டுகவே.

(இ - ள்.) அறு வகை ஆய சமயமும் - ஆறுவகைப்பட்ட சமய **நூல்களும், உறு வகையால் சொன்ன - (தம்தமக்குத்) தோன்றிய**

படி கூறிய, ஓட்டம் எல்லாம் - பொருள்விரிவு முழுவதையும், ஒருங்கே ஒழிவித்து - ஒருசேரப் போக்கி, பெறு வகை ஆறு என செய்த - முக்திபெறும்படியான வழி இதுவென்று காட்டி நூல் செய்த, பிரான் - உபகாரகரும், குருகூர் பிறந்த சிறு வகையார் அவரை - திருக்குருகூரில் அவதரித்த சிறியமனிதவடிவினருமாகிய நம்மாழ்வாரை, தொழுதோம் - வணங்கினோம் (யாம்); ஐ வகைத்து ஆம் புலனும் எம்மை தீண்டுக - ஐந்துவகைப்புலன்களும் (இனி) எம்மைச் சார்வனவாக; (எ - று.)

யாம், ஆழ்வார்திருவடிகளைச் சரணமடைந்தோ மாதலால், இனி ஐம்புலன்களைக்குறித்து அஞ்சவேண்டுவதில்லை; அப்புலன் களிற் கண்டபடிசெல்லாதவாறு எமது ஐம்பொறிகளையும் மனத் தையுஞ் சீர்திருத்தி எம்மை ஆண்டருள்வர் ஆழ்வார் என்பதாம். இங்ஙனம் தாம் அச்சம்தீர்ந்த களிப்பினால், 'தொழுதோம்'என்றும், 'எம்மை' என்றும் தம்மை உயர்வுப் பன்மையாற் கூறிக்கொண் டார்.

ஐவகைத்தாம்புலன் - மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம் பொறிகளாலும் முறையே கொள்ளப்படுகிற ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை என்பன; இவை வடமொழி யில், ஸ்பர்சம் ரஸம் ரூபம் கந்தம் சப்தம் என்னும் பஞ்ச விஷயங்க ளெனப்படும். ஆழ்வாரைச்சரணமடைந்த எம்மை இனி இவை சாரக்கடவனவல்ல வென்பதும், ஒருகால் சார்ந்தா லும் ஜிதேந்திரியரல்லாதவர்க்கும் அவரருளால் நற்கதிவாய்க்கத் தடையில்லை யென்பதும் கருத்து. சொற்கிடக்கையினும் பொரு ளமைதியே முக்கிய மாதலால், 'அறுவகையாயசமயமும் உறுவ கையாற்சொன்ன' என்றும், 'ஐவகைத்தாம்புலனும் தீண்டுக' என்றும் சொற்களைத் துணித்தெடுத்துக்கூட்டி இவ்வாறு பொருள்கொள்ளப்பட்டது;ஆசிரியர்நச்சினார்க்கினியர், சீவகசிந்தா மணியுரையில், 'இத்தொடர்நிலையிற் சொற்களைத் துணித்துப் பலவிடத்தினும் எடுத்துக்கூட்டியது, செய்யுளுறுப்பு இருபத்தா றினும் மாட்டென்னும் உறுப்பாதலின்: "அகன்றுபொருள்கிடப் பினும் அணுகிய நிலையினும், இயன்று பொருள்முடியத் தந்தன ருரைத்தல், மாட்டெனமொழிப பாட்டியல் வழக்கின்" என்றும், ...தொல்காப்பியனார் கூறினார்;..............இவ்விதி, மேல்வருவனவற்றிற்குங்கொள்க' எனவும், இவ்வகையாகவே திருமுருகாற்றுப்படையுரையிலும் மதுரைக்காஞ்சியுரையிலும் உரைத்தது காண்க. இது, கொண்டுகூட்டுப்பொருள்கோளில் அடங்கும்.

ஆழ்வார், ஞானவைலக்ஷண்யத்திற் பரமபதத்து நித்ய சூரிகளோடு ஒப்பராயினும், தோற்றத்தில் எளியமனிதவடிவின ராயிருத்தலால், 'சிறுவகையார்' எனப்பட்டார்; அவர், திரு வாய்மொழியில், "உறுமோ பாவியேனுக்கு" என்ற பாசுரத்தில், தமக்கு உத்தேசியரான பாகவதர்களை "அவனடியார், சிறுமா மனிசராய் என்னையாண்டார்" என்று அருளிச்செய்ததை அடி யொற்றி, கம்பநாடர், தமக்கு உத்தேசியரான அவ்வாழ்வாரை

'சிறுவகையார்' என்றார். (இந்நூலின் ஈற்றில் வருகிற பாயிரத்தின்படி, ஆழ்வார் விஷயமாக மதுரகவிகள் 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்னும் பதிகம் பாடியதை அநுசரித்துத் தாம் இப்பிரபந்தஞ்செய்தனர் கம்பநாடர் ஆதலால், அம்மதுரகவிகளுக்கு முக்கியப்பிரமாணமான மேற்காட்டிய திருவாய்மொழிப் பாசுரத்தை இவர் அடியொற்றுதல் தகும்.)

பாகவதர்களுடைய அநுட்டானங்கள் "இடங்கொள் சமயத்தையெல்லாம் எடுத்துக்களைவனபோலே" உள்ளன வென்று ஆழ்வார் அருளிச்செய்ததைப் பின்பற்றி, அவர்செயலை இவ்வாசிரியர் 'அறுவகையாயசமயமும் உறுவகையாற்சொன்ன ஓட்டமெல்லாம் ஒருங்கே ஒழிவித்து' என்றார். உறுவகையால் - தத்தமக்குப் பொருந்தியவாற்றினால். 'எம்பெருமான் திருவடிகளைச் சரணமடைதலே அவனைப்பெறுதற்கு உபாயம்' என்று ஆழ்வார் பலபடியாலும் தமது திவ்யப்பிரபந்தங்களில் அருளிச்செய்து நிலைநாட்டியதனால், 'பெறுவகையாறெனச் செய்தபிரான்' என்றார்; கீழ் ஐந்தாஞ்செய்யுளில் "முத்தியெய்தும்வழி பலவாயவிட் டொன்றாயது................குருகூரெந்தை தோன்றலினே" என்றதுங் காண்க. வெவ்வேறுமதங்களில் அந்தந்த மதத்துக்குஉரிய தெய்வத்தை வணங்குதல் முதலாகக் கூறப்பட்ட முக்திமார்க்கங்களெல்லாம் பூர்வபக்ஷமாய் மறுக்கப்பட்டுத் தலைகாட்டாது ஒழியத் திருமாலை வழிபடுதலொன்றே முக்திமார்க்கமென்று சித்தாந்தஞ் செய்து நிலைநிறுத்தினர் நம்மாழ்வார் என்பதும், வீடுபெறுதற்குச் சாதனமாக ஓதப்படுகிற கர்மம் ஞானம் முதலியவற்றை மறுத்து எம்பெருமானைச் சரணமடைதலாகிய பிரபத்தியொன்றே முத்திக்கு நேரான உபாயமென்று தாபித்தனர் நம்மாழ்வார் என்பதும், இங்குக் குறித்த பொருள். ஆறு - வழி. பெறுவகை ஆறு - ப்ராப்திக்கு வழி. "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்ற திருவாய்மொழி, இங்குக் கருதத்தக்கது. ஒருங்கே ஒழிவித்து என இயையும். ஒருங்கே பெறுவகை ஆறு என்று எடுத்து, ஜீவான்மா பரமான்மாவை ஒருசேர்க்கையாக அடையும் உபாய மெனினுமாம்.

அறுவகையாய சமயம் - சாக்ய உலூக்ய அக்ஷபாத க்ஷபண கபில பதஞ்சலிமதங்க ளென்பர்; வேறுவகை கூறலு முண்டு. புலன் = புலம்: ஈற்றுப்போலி. ஒருங்கு - இடைச்சொல்.

இச்செய்யுள், கம்பநாடர் தாமானதன்மையில் உரைத்தது; அன்றி, தலைவிநிலையை மேற்கொண்டு உரைத்த தென்றால், பரத்தையிற் பிரிவில் மீண்டுவந்த தலைவனதுசேர்க்கைக்கு உடன்படாது தலைவி மறுத்துப் புலவி காட்ட, அதுகண்ட தோழி "தொழுது வழிபடற்பாலை பிழைப்பெண்ணல் தோன்றலையே" என்றபடி இங்ஙனம் தலைவனது குற்றத்தை நோக்கி அவன்மீது மிகுதியாகக்கோபித்தல் குலமகளது கற்புநிலைக்கு அடாது என்று சிலகூறி உணர்த்தியபின்னர், தலைவி ஊடல்

தணிந்து அவன்வரவை ஏற்றுக்கொள்பவளாய் 'அவரைத் தொழுதோம், இனி அவர் எம்மைத்தீண்டுவாராக' என்றதாகத் துறைப்போக்கு அமைத்தல் சாலும்.

ஆறுவகைப்பிரிவினுள்ளே பரத்தையிற் பிரிவைப்பற்றிய சிலவிவரம்:—"பரத்தையிற்பிரிதலென்பது - தலைமகளை வரைந்தெய்தியபின்னர், வைகலும் பாலேநுகர்வா னொருவன் இடையே புளிங்காடியும் நுகர்ந்து அதனினிமையறிந்தாற்போல, அவள் நுகர்ச்சியினினிமையறிதற்குப் புறப்பெண்டிர் மாட்டுப் பிரியாநிற்றல்; அல்லதூஉம், பண்ணும் பாடலும் முதலாயின காட்டிப் புறப்பெண்டிர் தன்னைக் காதலித்தால் தான் எல்லார்க்குந் தலைவனாகலின் அவர்க்கும் இன்பஞ்செய்யப் பிரியாநிற்ற லென்றுமாம்: அல்லதூஉம். தலைமகளை ஊடலறிவித்தற்குப் பிரித லென்றுமாம். இவ்வாறொழிந்து தனக்கின்பம்வேண்டிப்பிரிவனாயின், "கண்டு கேட் டுண் டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடிகண்ணே யுள" என்பதனால் இவளுக்குத் தலைமகளென்னும் பெயரோடு மாறுபட்டுத் தனதுபெருமையோடும் மாறுபடாநிற்கும்" என்று திருக்கோவையாருரையிலும், "பரத்தையிற்பிரிவு:—இது, தலைவன் 'பரத்தைமேற்காதலாய்த் தலைவியைப்பிரிந்து பரத்தையர் சேரியிற் போதல். 'பரத்தையிற்பிரிவு' என்று ஓதவே, 'பொது நலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின், மாண்ட வறிவினவர்" என்பதனால் தலைவன் அறிவிலனும், தலைவியிடத்து அன்புமிலனும், பெருமையுமிலனும், பட்டியுமாம் எனின், அற்றன்று: அரசுரிமையனாதலின்; அரசுரிமைக்குப் பரத்தையரினும் வரைதற்குரியராய்த் தொன்றுதொட்டு நடக்குமுறைமையாரும் வரையாத வுரிமையாய்ச் சேரியின்கணுறைவாருமாய் அவரும் பிறந்ஞான்றுதொட்டு இவர்க்கென வகுத்துரைக்கப்படுதலானும், அவரைநீக்குதல் தகுதியன்மையானும், பரத்தையிற்பிரிதல் குற்றமன்றெனக் கொள்க. அன்றியும், காலைக்கடன்கழித்தலும் ஓலக்கத்திலிருந்து நாடுகாவற்றொழில் செய்தலும், விருந்துடன் அடிசில்கைதொடலும், நாவலரோடு கல்விபயிற்றலும், ஆடல் பாடல்களிற் களித்தலும், மடவாரோடு கூடலும், துயிறலும், துயிலுணர்ந்து தேவர்ப்பராவலும் ஆகிய காலவரையறையெட்டினுள் ஆடல்பாடல் ஒன்றுதலானும்'அதற்குரியர் பரத்தையராதலானும், அதற்குரியகாலத்தில் அவரிடத்தில் மனஞ்செல்லுத லியல்பாதலானும், பரத்தையிற் பிரிதலாற் குற்றமின்றெனக் கொள்க. ஆயின், பரத்தையர்சேரியிற் செல்லு மாறு என்னையெனின்,— அவர் பலரோடும் விளையாடற்பொருட்டும்,..............பரத்தையர் சேரியிற் செல்லு மென்று உணர்க" என்று தஞ்சைவாணன் கோவை யுரையிலும் காண்க. "அஃதேயெனின், மற்றைப்பிரிவெல்லாம் வேண்டுக, ஆள்வினை மிகுதியுடைமையான்; இப்பிரிவு எற்றிற்கோவெனின்,—பரத்தையிற் பிரிந்தான் தலைமகனென்றால், ஊடலே புலவியே துனியே என்றிவை நிகழும்: நிகழ்ந்தால், அவைநீக்கிக் கூடினவிடத்துப் பெரியதோர் இன்பமாம்; அவ்வின்பத்தன்மையை வெளிப்படுப்பன அவையெனக் கொள்க" என்ற இறையனாரகப்பொருளுரையும் காணத்தக்கது.

இங்ஙனம் பரத்தையிற்பிரிந்த தலைவன் மீண்டுவந்து தலைவியின்மனையினிடத்துப் புகும்போது, அவளால் மறுக்கப் பட்டவனாய், பின்பு தோழியை வாயில்வேண்ட, அவளும் மறுத்தனளாக, அதன்பின் பாணனை வாயிலாக அனுப்ப, அவனும் தலைவியால் மறுக்கப்பட்டு நீங்கினனாக, பிறகு மகனை வாயிலாகக் கொண்டும் விருந்தினரை உடன்கொண்டும் புக, அதுகண்டு சினந் தணியவேண்டித் தோழி தலைவியைநோக்கி 'அன்பானன்றி அருளாற் பரத்தையர்க்குந் தலையளிசெய்ய வேண்டுமன்றே: புறப்பெண்டிரைப்போல யாம் அவனோடு புலக்கற்பாலேமல்லேம்: அவன்வரும்பொழுது எதிர்தொழுதும் போம்பொழுது புறந் தொழுதும் புதல்வனைப் பயந்திருக்கையன்றோ நமக்குக்கடனாவது' என்றும், நம்முடைய தோன்றலைத் தனக்குத்துணையாகக்கொண்டு வந்துதோன்றுதலான், நினது உளத்துக்கவற்சியை யொழிந்து, இனி நம் அரசற்குக் குற்றேவல்செய்வாயாக' என்றும், மற்றும் உரியபடியாகவுங்கூறி ஊடல்தணிவிக்க, அவைகேட்டுச் சினந் தணிகின்ற தலைவி தலைவனை ஏற்று எதிர்கொண்டு வழிபாடுசெய் பவளாய் "எங்கையைத் தீம்புனலாட்டிய வீரம் புலர்த்திவந்து உம், அங்கையிற் சீறடி தீண்டிச் செய்யீர்செய்யுமாரருளே" என்றாற்போலக்கூறி, அவன்வந்து தன்னைப்பரிசித்தற்கு உடன் படுவ ளென்க. இது, வழிபாடுமறுத்த தலைவி மறுத்து எதிர் கோடல் எனவும், தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல் எனவும்படும். ("பரத்தையர்சேரியினின்று மறுதந்து தோழியை வாயிலாகக்கொண்டான்: கொள்ள, தோழி புக்குப் பலகாரணமுங் காட்டினாள்: காட்டுவாள் 'நாம் இல்லிருந்து இறைவழிப்பட்டு மக்களைவளர்த்து விருந்துபுறந்தருத லல்லது போகத்து உள்ளா மன்றே; எல்லாம் ஊடலும் புலவியுந் துனியுங் கொள்ளற்பால மல்லம்; அல்லதூஉம், வண்டோரனையர் ஆடவர், பூவோரனையர் மகளிர்; என்பது என்னை? வண்டுகள் தாது ஊதுமிடத்து நன்மலரே ஊதுவேமென்னா: எல்லாமலரும் ஊதும்; இனி, பூ அவாவினக்கால், 'எம்மையே ஊதா, எல்லாப்பூவையும் ஊதின' என்று புலவாதன்றே: அதுபோல, தலைமகனும் எல்லாப்பெண் பால்களையுந் தலைப்பெய்தல் தன்மையான்; அவர்தன்மை அறிவேம்: போம்பொழுது புறந்தொழுது வரும்பொழுது முன்தொழுது ஏற்றுக்கொண்டு வழிபடுத லல்லது, மலைத்தற்கண்ணேம் அல்லம்: தலைத்திப்பற்றியமாதலே தலைமை' என்றும், இவ்வாறு வழி படாதே எம்பெருமானை வருத்தி என்செய்தும்'? என்றும் 'ஏற்றுக் கொண்டு வழிபடுவது பொருளே போலக் காட்டும்' என்றும் இங்ஙனஞ் சொல்ல, 'அஃதொக்கும்பிற' என்று அப்போதைக்குச் சிவப்பு நீங்கிற்று; 'நீங்க, 'புகுதுக' என்றாள்" என்பது, இறையனாரகப்பொருளுரை.)

இப்பொருளிற் பதவுரை வருமாறு:—அறு வகை ஆய சமயமும் - ஆறுவகைப்பட்ட காலங்களிலும், ஐவகைத்து ஆம் புலனும் உறு வகையால் - ஐந்து வகைப்பட்ட பொறிகளும் அனு பவிக்குமாறு, சொன்ன - சொல்லப்படுகின்ற, ஓட்டம் எல்லாம் - போக்குகளை யெல்லாம், ஒழிவித்து - நீக்கி, ஒருங்கே பெறு வகை

ஆறு என செய்த-(அந்த ஐம்பொறிகளும்) ஒருங்கு இன்பம்பெறும் படியான விதம் இதுவென்று (தனது சேர்க்கையினூற்) செய்த, பிரான் - உபகாரகரும், குருகூர் பிறந்த சிறு வகையார் அவரை - திருக்குருகூரில் தோன்றியவரும் சிறிய ஒழுக்கமுடையவருமாகிய தலைவரை, தொழுதோம் - வணங்குகின்றோம் (யாம்); எம்மை தீண்டுக - (இனி அவர்) எம்மைத் தழுவுவாராக எனக் காண்க.

கண்ணூற் கண்டும், செவியாற் கேட்டும், நாவால் உண்டும், மூக்கால் மோந்தும், மெய்யால் தீண்டியும் இவ்வாறு வேறுவேறு காலங்களில் வேறுவேறு பொருள்களால் அனுபவிக்கப்படும் ஐம்புலவின்பங்களையும் ஒரேகாலத்தில் தன்பக்கல் யான் அனு பவிக்கும்படி செய்த தலைவன் என்பது 'அறுவகையாயசமயமும் ஐவகைத்தாம்புலனும் உறுவகையாற்சொன்ன ஓட்டமெல்லாம் ஒழிவித்து ஒருங்கேபெறுவகையாறெனச்செய்த பிரான்' என்றதன் கருத்து; என்றது, சிற்றின்பச்சுவைமயமாயிருந்தவனென்று முந்திய நிலைமையை மகிழ்ந்து கூறியவாறும்; திருக்குறளுரையிற் காமத்துப்பாலின் தொடக்கத்திற் பரிமேலழகர் 'ஈண்டு இன்ப மென்றது, ஒருகாலத்து ஒருபொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காமவின்பத்தினை' என்றது, இங்கு உணரத் தக்கது. "வண்டமர்பூங்குழலாரை மணம்புணர்ந்த வன்றொண்டர், புண்டரிகத்தவன்வனப்பைப்புறங்கண்டதூநலத்தைக், கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றமர்ந்திருந்தார் காதலினால்" என்று பெரிய புராணத்திற் கூறியதும் இதுபற்றியே. "கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம்புலனும், ஒண்டொடி கண்ணேயுள" என்று தலைமகன் கூறினாற்போலத் தலைமகள் கூறியது, இது.

'அறுவகையாய சமயமும்' என்றது - வேறுவேறுகாலங்களி லெல்லாம் என்றபடி. 'அறுவகையாயசமயம்' என்றதில், பெரும் பொழுதுஆறும், சிறுபொழுதுஆறும் அடங்கும். பெரும்பொழுது ஆறு - இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின் பனி என்ற ஆறு பருவகாலங்கள்; இவைமுறையே, சித்திரை மாதம்முதலாக இரண்டிரண்டுமாதம் ஒவ்வொன்றும். சிறு பொழுது ஆறுவன - விடியல், நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை என்பன; இவை - முறையே, சூரியோதயகாலம்முதல் ஒவ்வொன்று பப்பத்துநாழிகை யென உணர்க.

'சிறுவகையார்' என்றது -பரத்தையரோடு கூடுதலாகிய சிறிய ஒழுக்கமுடையவரென்றபடி; இதனை, பெரியபுராணத்தில் "இன் மைமீதூர இன்பத்துறையினி லெளியரானார்" என்றாற்போலக் கொள்க. 'குருகூர்ப்பிறந்த சிறுவகையார்' என்றது - 'அவர் எம் போலல்லர், சிறந்த ஊரிற் பிறந்தவர்' என்று, முந்தியகோபத் தின் தொடர்ச்சியாற் கூறிய நிட்டூரவார்த்தையாம்; "நாடும் ஊரும் இல்லுஞ் சுட்டி, ஆடற்பூங்கொடி ஊடி யுரைத்தது" என ஊடி யுரைக்கையில் ஊர்சுட்டுமாறு உணர்க. 'சிறுவகையாரவரை' என் றது-உயர்வுப்பன்மை; 'தொழுதோம்,' 'எம்மை' என்றவை-தனித்

தன்மைப்பன்மை: புலவிக்காலத்தே தலைவி தன்னையும் தலைவனை யும் பன்மையாற் குறித்தலும் இயல்பாதலை, இலக்கியங்களிற் பல விடத்துக் காணலாம்; ஆகவே, அங்ஙனங்கூறுதல் சிறுசினத்தின் காரியமென்க. திருநீலகண்டநாயனார்பரத்தையிடத்துச்சென்று மீண்டமை யுணர்ந்த கற்பிற்சிறந்த அவர்மனைவியார் ஊடல் கொண்டு அவரதுசேர்க்கைக்கு இசையாது "தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்" என்று ஆணையிட்டு மறுத்தாற்போலப் புலவிகொண்டபொழுது 'எம்மை அவர் தீண்டலு மாகாது' என்று மறுத்தன ளாதலாலும், "கால்தான்தொடல்தொடரேல் விடுதீண்டல் எம்கைத்தலமே" என்று ஊடலில்மறுத்தல் இயல் பாதலாலும், அப்புலவிதணியும்போது 'எம்மைத் தீண்டுகவே' என்றாள். 'தீண்டுக' என்பதற்கு, 'அவர்' என்ற எழுவாய் வருவிக்கப்பட்டது; அன்றி, சிறுவகையாரைத் தொழுதோம் அவர் எம்மைத்தீண்டுக என்று மொழிமாறினுமாம்.

இச்செய்யுளின் மெய்ப்பாடு - உவகையைச்சார்ந்த வெகுளி பெருமிதமுமாம். பயன் - ஆற்றாமை நீங்குதல்.

தியானநிலையிலே கம்பநாடரது அகக்கண்ணுக்குப் புலனாகி மறைந்த நம்மாழ்வார் மீளவும் வந்து தோன்றாராக, கம்பநாடர், தம்மினும் விலக்ஷணரான வேறுபல அடியார்கள்பக்கல் அன்பினால் தம்மை அவர் உபேக்ஷித்தனர் என்றுகொண்டு கலங்கி, அக்கலக்க மிகுதியால் 'இனி அவர்தாமே வந்தாலும், மீளவும்பிரிந்து வருத்துவ ராதலால், யாம் கண்எடுத்துப் பார்ப்பதில்லை: நிரந் தரானுபவமில்லாமல் இடையீடுள்ள அவரது அநுபவம், பிரிவாற் றாமைத்துயர்க்குக் காரணமாதலால், அது எமக்கு வேண்டா என்று பிரணயரோஷங் கொண்டிருக்கிற நிலையில், அடியவரைக் கைவிடாத இயல்புடையரான ஆழ்வார் மீளவும் வந்து இவர்க்கு வந்தேறியாயுள்ள பராமுகத் தன்மையைப் போக்கி இவரை அபிமுகராக்கிக் கொள்ளுதற்குப் பலவகையால் முயன்றபோது, இவர் தமது முந்தின மநஸ்தாபம் மாறாதே நிற்க, அதுகண்ட அன்பர்கள் இவரையடுத்து, பரமாத்மாவாகிய ஆழ்வாருடைய ஸ்வாதந்திரியத்தையும், ஜீவாத்மாவுக்கு உரியதான பாரதந்திரி யத்தையும், அவர் தமது இயல்பாகிய கருணையினாற் பலரையும் ஆட்கொண்டருளுதற்கு உரிய ரென்பதையும் எடுத்துக்காட்ட, அதுகேட்டவளவிற் கம்பநாடர் மநஸ்தாபந்தீர்ப்பவராய் 'அவரைத்தொழுதோம்; இனி அவர் எம்மைத் தம்பக்கல் சேர்த்துக் கொண்டருள்வாராக' என்று கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறை பொருள்.

"அறுவகையாய சமயமும்........செய்த பிரான்' என்றது - "வேட்கையெல்லாம்விடுத் தென்னை உன்திருவடியேசுமந்துழலக், கூட்டரிய திருவடிக்கண்கூட்டினை நான் கண்டேனே," "கண்டு கேட்டுற்றுமோந்துண்டுழலும் ஐங்கருவி, கண்டவின்பம் தெரி வரியவளவில்லாச்சிற்றின்பம், ஒண்டொடியாள் திருமகளும்

நீயுமேநிலாநிற்பக், கண்டசதிர் கண்டொழிந்தேன் அடைந்தேன் உன்திருவடியே" என்றபடி எல்லாக்காலங்களிலும் புறம்பான பற்பல பிரபஞ்சவிஷயங்களில் எனக்கு உண்டாகும் ஐம்புலவாசை யெல்லாம் தன்னொருவன்பக்கலிலேயே யாகும்படி எனக்கு அருள் செய்த உபகாரகனென்றதாம். 'குருகூர்ப்பிறந்த சிறுவகையார்' —மனிதவடிவாகிய சிறுமை தோன்றத் திவ்வியதேசத்திலே திருவவதரித்த மகாபுருஷரென்றபடி. "தயி ருருக்குநெய்யொ டுண்டானடிச் சடகோபன்" என்றபடி, நம்மாழ்வார் எம்பெரு மானது திருவடிகளுக்கு மிகவும் அந்தரங்கபக்தராக இருந்ததனால், அப்பெருமானது பாதுகை 'ஸ்ரீசடகோபன்' என்று இவரது திரு நாமத்தையிட்டு வழங்கப்படும்; அத்திருவடிநிலைகள் தமது முடியின்மேல் வைக்கப்பெறும்படி வேண்டுதல் பாகவதர்க்கு இயல்பாதல்பற்றியும், ஸ்ரீவைஷ்ணவசிகாமணியான கம்பர் 'சடகோபன் எம்மைத்தீண்டுக' என்று இசைதல் ஏற்கும். மற்றும் விவரம், சம்பிரதாயம்வல்லார்வாய்க் கேட்டு உணரத்தக்கது.

இனி, திருக்குருகூரிற் பிறந்த சிறுமாமனிசர்களைத் தொழு தோம், அவர்கள் எம்மைத் (தம்திருவடிகளினால்) தீண்டுவாராக என்று உரைத்தலும் ஒன்று; அத்திவ்வியதேசத்தில் தோன்றிய அடியார்களிடத்து ஈடுபாட்டினால் இதுகூறியவாறு: கீழ் 30-ஆஞ் செய்யுளில் "வழுதிநாட்டிற் பிறந்தவர்க்கு ஆளுஞ்செய்தேன்" என்றாற்போல.

[கல்வியிற்பெரிய கம்பரது வாக்கு 'கம்பசூத்திரம்' என்னும் படி சில்வகையெழுத்திற் பல்வகைப்பொருளைச் செவ்வனே செறித்து இனிதுவிளக்கித் திட்பநுட்பஞ்சிறந்ததாதலால், அதன் பொருளை நன்குவிளக்கப் புகுமிடத்து இங்ஙனம் விரிகின்றது உரை யென உணர்க.] (76)

77. **தீண்டித்திருவடியைப்பற்றிக்கொண்டுசிந்தித்ததையே**
வேண்டிக்கொளப்பெற்றிலேன்வினையேனிவ்வெறும்பிறவி
யாண்டிற்பிறந்தவக்காலத்திலேயன்பனுயணிநீர்ப்
பாண்டித்தமிழ்த்திருநாட்டுருக்காட்டியபாவகற்கே.

(இ - ள்.) வினையேன் - தீவினையுடையேனான யான், இ வெறும்பிறவி ஆண்டில் பிறந்த அ காலத்திலே-பயனற்ற இந்தப் பிறப்பாகிய அவ்விடத்திற் பிறந்த அந்தக்காலத்திலே, அணி நீர் பாண்டி தமிழ் திருநாடு உரு காட்டிய பாவகற்கே அன்பன் ஆய்- அழகிய தன்மையையுடையதும் செந்தமிழ் வழங்குமிடமுமான சிறந்த பாண்டியநாட்டிலே திருவவதாரஞ்செய்த பரிசுத்தமூர்த்தி யான நம்மாழ்வார்க்கே பக்தனாகி, தீண்டி திருவடியை பற்றிக் கொண்டு சிந்தித்ததையே வேண்டி கொள பெற்றிலேன் - கைக ளால் தொட்டு அவர்திருவடிகளைச் சரணமாகப் பிடித்துக் கொண்டு நினைத்தவரத்தைவேண்டி அடையப்பெற்றேனில்லை;

நான் பிறந்தபொழுதேதொடங்கி நம்மாழ்வார்க்கே அடியவனுகி அவர் திருவடிகளைத்தொட்டுப் பிடித்துச்சரணமடைந்து நினைத்தவரத்தை வேண்டிப் பெற்றுக்கொண்டிலேன் என்று, இதுவரையிலும் பழுதேபலபகலும் போக்கினதைக் குறித்துக் கழிவிரக்கத்தாற் கூறினுர். முத்தியை நேரில் அடையக்கூடியதான மனிதஜன்மம் "அரிதரிது மானிடராத லரிது" என்னும்படி மற்ற எல்லாப்பிறப்புக்களினுஞ் சிறந்ததாயினும், அதனையடைந்தவர் செய்யுங்கடமையாகிய முத்திபெறும்நெறியை இவர் இதுவரை மேற்கொள்ளாததுபற்றித் தம்மை 'வினையேன்' என்றும் தமது ஜந்மத்தை 'வெறும் பிறவி' என்றும் வெறுத்துக்கூறினுர். வேண்டுவார் வேண்டும் பயன்களை அவர்வேண்டியபடியெல்லாம் அளிக்கும் ஆற்றலுடையவர்ஆழ்வார் என்பது, 'சிந்தித்ததையே வேண்டிக் கொள' என்பதனுற் போதரும். இங்கு இவர் சிந்தித்தது, முத்தி; ஆதலால், ஏகாரத்தை உயர்வுசிறப்பு என்னலாம். தமிழ் முனிவராகிய அகஸ்தியரும் பாண்டியராஜாக்களும் சங்கப்புலவர்களும் இனிதுவீற்றிருந்து தமிழ்ப்பாஷையைப் போற்றி வளர்த்த நாடாதலால், பாண்டியநாடு 'தமிழ்த்திருநாடு' எனப்பட்டது. உருக்காட்டுதல் - ரூபத்தைத் தோன்றுவித்தல், வடிவமெடுத்துப்பிறத்தல். பாவகன் என்ற வடசொல் - (தன்னையடைந்தவர்களைப்) பரிசுத்தராக்குபவ னென்றுபொருள் படும்; இக்காரணத்தால், இச்சொல் அக்கினிக்குப் பெயராதலுமுண்டு; ஆதலால், பாவகற்கு - ஜ்யோதிஸ்வரூபியான ஆழ்வார்க்கு என்று பொருள்கொள்ளவும் அமையும்: வடதிசையாத்திரை சென்றிருந்த மதுரகவிகளுக்கு நம்மாழ்வார் முதலில் திவ்வியதேஜோமூர்த்தியாய்த் தென்னுட்டிற் காட்சிதந்தன ராதலால், அவரை 'பாண்டித் திருநாட்டுருக் காட்டிய பாவகன்' என்னத்தகும்.

பிறவியிற்பிறந்த என்று எடுத்து, ஆண்டுஎன்பதை 'ஆங்கு' என்பதைப்போல அசை யெனினுமாம். நீர் - நீர்மையென்ற பண்புப்பெயரின் விகாரம். இனி, அணி நீர் - ஓர் ஆபரணம் போல அழகிதாகத் தாமிரபர்ணிநதிதீர்த்தம் பாயப்பெற்ற என்றுங் கொள்ளலாம்.

இனி, அணிநீர்ப்பாண்டித்தமிழ்த்திருநாட்டு உருக்காட்டிய பாவகற்கு - நம்மாழ்வார்க்கு, பிறந்த அக்காலத்திலே - அவர் திருவவதரித்த அந்தக்காலத்திலே, அன்பனுய்த் தீண்டித் திருவடியைப்பற்றிக்கொண்டு சிந்தித்து அதையே வேண்டிக்கொள - அன்பனுகி அவர்திருவடியைக் கைகளால்தொட்டுப்பிடித்துக் கொண்டு தியானித்து அத்திருவடியையே [அல்லது அந்தஅன்பையே] பிரார்த்தித்துப் பெற்றுக்கொள்ளும்படி, வினையேன் இவ் வெறும் பிறவி ஆண்டில் பெற்றிலேன் - தீவினையேனுன யான் இப்பொழுது வீணுகப்பிறந்தபிறப்பை அக்காலத்தில் [அத்திருநகரியிலே] பெறுதொழிந்தேன் என்று உரைகொள்ளினுமாம். ஆழ்வார் அவதரித்த அக்காலத்திலே யான் ஆழ்வார்திருநகரியிற் பிறந்து அவர்க்கு அன்புசெய்திருந்தால், மீளவும் இங்ஙனம் பிறப்பெடுத்து உழலவேண்டாதபடி வீடுபெற்று உய்ந்திருப்பேன்

என்று கழிந்ததற்கு இரங்கிக் கூறியவாரும். "புலையாம்பிறவி பிறந் தென்செய்தோம் பொன்னிபொன் கொழிக்கும், அலையார் திருவரங்கத்தெம்பிரான் நமதன்னையொடுந், தொலையாதகானங் கடந்தவந்நாள் தடந்தோறும் புல்லாய்ச், சிலையாய்க் கிடந்திலமே நெஞ்சமே கழல்தீண்டுகைக்கே" என்ற திருவரங்கக்கலம்பகத் தோடு இதனை ஒப்பிடுக. (77)

78. **பாவகத்தாற்றன் றிருவவதாரம்பதினென்றென்றிப்**
பூவகத்தாரறியாதவண்ணந்தன்னையேபுகழ்ந்து
நாவகத்தாற்கவியாயிரம்பாடிநடித்தளித்த
கோவகத்தாற்கன்றியென்புறத்தார்செய்குற்றேவல்களே.

(இ - ள்.) பாவகத்தால் - (தனது) தோற்றத்தைக் கண்டு அதனால், தன் திரு அவதாரம் பதினென்று என்று இபூ அகத் தார் அறியாத வண்ணம் - (திருமாலாகிய) தனது சிறந்த அவ தாரங்கள் பதினென்று என்று இந்நிலவுலகத்திலுள்ளார் அறிந்துகொள்ளாதபடி, தன்னையே புகழ்ந்து நாஅகத்தால் கவி ஆயிரம் பாடி-தம்மையே தாம் துதித்துத் தம்நாவினிடமாகத் திருவாய்மொழியாயிரம் பாசுரங்களைப் பாடி, நடித்து - வேருன ஒருவரைப்போலத் தம்மைக்காட்டி, அளித்த - (அப்பாசுரங்களை உலகத்தார்க்குக்) கொடுத்து அவர்களைப் பாதுகாத்தருளிய, கோஅகத்தாற்கு அன்றி - பரமபதநிலையையுடைய அத்திருமா லாகிய நம்மாழ்வார்க்கே குற்றேவல்செய்து உய்வ தல்லாமல், (அன்னியர்களுக்கு), புறத்தார் செய் குறு ஏவல்கள் - மதாந்தரங்களிலுள்ளவர்கள் செய்கிற சிறிய ஊழியங்கள், என் - யாதுபயன்தரும்? [யாதொருநற்பயனையுந் தரமாட்டா என்றபடி]; (எ - று.)

லோகாதீதமான பலவகைமகிமைகளை யுடைமையால்,நம்மாழ் வார், ஸ்ரீமந்நாராயணனது அம்ச மெனப்படுவர்; "வங்கிப்புரத்து நம்பி, எம்பெருமான்தான் இப்படிவந்து அவதரித்தா னென்பர்: இப்படிசொல்லுகைக்கு அடி, ஆழ்வாருடைய ப்ரபாவத்தாலே" என்ற பெரியவாச்சான்பிள்ளைவியாக்கியானவாக்கியம் காணத் தக்கது. ஆழ்வார் திருவாய்மொழியில் "தானேயானென்பானுகித் தன்னைத் தானே துதித்து" என்றும், "நண்ணு வசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த, எண்ணுதனக ளெண்ணும் நன்முனிவ ரின்பந் தலைசிறப்பப், பண்ணுர்பாடலின்கவிகள் யானுய்த் தன்னைத்தான்பாடித், தென்னுவென்னு மென்னம்மான் திருமா லிருஞ்சோலையானே" என்றும் பகவானுடைய ஸாந்நித்யவிசேஷம் தம்மிடத்து இருப்பதைத் தாமே அருளிச்செய்தார். ஆழ்வாரைப் பகவானுடைய அம்சமென்று பாத்மபுராணமுங் கூறும்; ஆனது பற்றியே, "நாராயணு அடியேன்நாடும் தமிழ்வேத, பாராயணு சடகோபா" என்பர் பிள்ளைப்பெருமாளையங்காரும். (இவர்க்கு இருப்பிடமான புளியமரம், எம்பெருமானுக்குத் திருப்பள்ளிமெத் தையான ஆதிசேஷனது அம்சமென்று ப்ரஹ்மாண்டபுராணத்திற்

கூறப்பட்டிருக்கிறது.) "தீவினையாளராற் கெடுக்கப்பட்ட கலியுகத்திலே, விசுவாதிகரும் விசுவமயருமான விஷ்ணு, அடியார்கள் பக்கல் மிக்க அன்பினால் அனைவரையும் பாதுகாத்தற்பொருட்டு, பக்தரூபியாய்த் தோன்றினர்" என்று ருஷிகள் சொல்வர். "அத்திரியும் ஜமதக்கியுமாகிய பிராமணோத்தமர்களுக்குப் பிள்ளைகளான தத்தாத்ரேயனும் பரசுராமனுமாக முதல்யுகத்திலே முதல்வருணத்திலும், க்ஷத்திரியரான தசரதசக்ரவர்த்திக்குப் பிள்ளையாகிய இராமபிரானாக இரண்டாம்யுகத்திலே இரண்டாம் வருணத்திலும், யயாதிசாபத்தாலே அபிஷேகப்பிராப்தியற்ற க்ஷத்திரியரில்தாழ்ந்து வைசியப்ராயரான யதுகுலத்தில்தோன்றிய வசுதேவர்க்கும் கோவைசியரான நந்தகோபர்க்கும் பிள்ளையாகிய கண்ணபிரானாக மூன்றாம்யுகத்திலே மூன்றாம் வருணத்திலும், ஆக இப்படி கிருதாதியுகக்கிரமத்திலே பிராமணாதிவர்ணக் கிரமத்தால் இந்நிலவுலகத்திலே அவதரித்துவந்த ஸர்வேசுவரன்தானே, நான்காவதான கலியுகத்திலே நான்காம்வருணத்திலே காரியார்க்குப் புதல்வராகிய நம்மாழ்வாராய் வந்து அவதரித்தனன்" என்று விவரங்கூறுதலு முண்டு. இப்படி அம்சாவதாரமென்பதன்றி, ஆவேசாவதாரமென்பர் சிலர்; 'ஸ்ரீமந்நாராயணன் வியாசர் முதலானவர்களிடம் ஆவேசித்து வேதங்களைவகுத்தல் முதலிய காரியங்களைச் செய்துமுடித்தாற்போல, நம்மாழ்வார்பக்கல் ஆவேசித்துத் தமிழ்வேதங்களை வெளியிட்டருளினான்' என்பது, அவர்கள் வகுத்துக் கூறுமாறு.

இப்படி ஆழ்வார் எம்பெருமானுடைய மத்ஸ்யம் கூர்மம் முதலிய தசாவதாரங்கள் போலத் தாமும் அப்பெருமானுடைய அவதாரவிசேஷமாயிருந்தும், அந்தரகசியம் அனைவர்க்கும் எளிதிற் புலனாகாதிருத்தற் பொருட்டு, அவர், தமக்கு மூலமான அப்பெருமானையே துதித்துக் கவிபாடி எம்பெருமானடியாரி லொருவர் போலவே தம்மைக்காட்டித் தமதுதிவ்வியப்பிரபந்த மூலமான உபதேசமுகத்தால் உலகத்தாரை உய்வித்தருளினர் என்பது, முதல்மூன்றடிகளின் தாற்பரியம். இவ்வகை இறைமைக்குணமுடைய ஆழ்வார்பக்கல் அன்புகொண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் அவர்க்குச்செய்யும் வந்தனை வழிபாடுகள் இம்மைமறுமைவீடுகளிற் பெறும் பேறுகளை விளைத்துப் பயன்படுமே யன்றி, இறைமைக் குணங்களிலரா யிருக்கையில் தம்மைத் தாமே இறைவ ரென்று சிலஇடங்களிற் சொல்லிக்கொள்கிற இதரதேவர்களை இறைவரென மாறுகக்கருதிப் புறச்சமயத்தார் அந்தத்தேவதாந்தரங்கட்கு ஆட்பட்டுச் செய்யுங் குற்றேவல்கள் யாதொருநற்பயனையும் விளைக்கமாட்டுவனஅல்ல என்பது, நான்காம்அடியின் கருத்து.

இனி, பாவகத்தால் - (தனது) தூய்மைசெய்யுந்திறத்தால் எனினுமாம். பூஅகத்தார் - பூமியிடத்தவர். தன்னையேதான் புகழ்ந்து கவிபாடுதல் உலகவியல் பன்றாதலாலும், ஆழ்வார் திருமாலை முன்னிலைப்படுத்தியும் படர்க்கையாக நிறுத்தியுந் துதித்துக் கவிபாடியுள்ளா ராதலாலும், அவ்வாழ்வாரை அத்திருமால்தானே யென்று உலகத்திற்பெரும்பாலார் எளிதில்அறிந்திடா

ரென்க. 'பூவகத்தார்' என்பது, ஸாமாந்யஜனங்களை. நடித்தல் - நிஜஸ்வரூபந்தோன்றாதபடி வேற்றுவேஷங்கொண்டு வெளிப்பட்டுத் தொழில்செய்தல். கோ அகம் - மேலான இடம்: எனவே, பரமபதமாயிற்று. இனி, கோபகம் என்ற வடமொழி தமிழில் 'கோவகம்' என்று விகாரப்படும்; ஆதலால், கோவகத்தான் என்பதற்கு - பாதுகாப்பவ ரென்றும், (நம்மை) மறைக்குந் தன்மையுடையவ ரென்றும் பொருள்கொள்ளலாம். 'கோவகத்தாற்குஅன்றி' என்றதனால், 'தேவதாந்தரங்களுக்கு' என்பது பெறப்பட்டது. இனி, 'புறத்தார்ச்செய்' என்று பாடமாயின், அயலார்க்குச் செய்கிற என நான்காம்வேற்றுமைத் தொகையாகப் பொருள்படும். "தேவும் எப்பொருளும் படைக்கப், பூவில் நான்முகனைப் படைத்த, தேவ னெம்பெருமானுக்கல்லாற், பூவும் பூசனையுந் தகுமே" என்று ஆழ்வார் எம்பெருமான்விஷயத்தில் அருளிச்செய்தாற்போல, அவ்வாழ்வார்விஷயத்திற் கம்பநாட்டாழ்வார் 'அளித்த கோவகத்தாற் கன்றி என் புறத்தார்செய் குற்றேவல்களே' என்றார். 'நடித்து' என்பதற்கு-"சிரீதரன்தொல்புகழ்பாடிக் கும்பிடு நட்டமிட்டாடி" என்றபடி பக்தி மிகுதியால் ஆனந்தக்கூத்தாடியென்றும் உரைப்பர். திருமாலுக்கு மற்றும் பற்பல அவதாரங்கள் நூல்களிற்கூறப்பட்டிருப்பினும், தசாவதாரம் பிரதானமாதலால், அவற்றோடு இதனையுங் கூட்டி 'தன்திருவவதாரம் பதினொன்று' எனப்பட்டது. (78)

79. குற்றேவலுஞ்செய்துமெய்கண்டுகைகொண்டுகும்பிட்டன்பு
பெற்றேனென்போலெவர்பேறுபெற்றார்பின்னையேபிறந்து
வெற்றேவலினின்றபொய்யன்பர்தாங்களுமெய்யுணர்ந்தா
ரெற்றேகுருகைப்பிரானெம்பிரான்றனியலிசைக்கே.

(இ - ள்.) குருகைப் பிரான் - திருக்குருகூரில் அவதரித்த உபகாரகரும், எம் பிரான்தன் - எமதுதலைவருமான நம்மாழ்வாருடைய, இயல் இசைக்கு - பண்ணமைதியோடுகூடிய இயற்றமிழ்ப் பாசுரங்களாகிய திவ்வியபிரபந்தங்களினால், (யான்), மெய் கண்டு - தத்துவார்த்தங்களை யுணர்ந்து, கைகொண்டு கும்பிட்டு - (அவ்வாழ்வாரை எனது) கைகளைக்கொண்டு தொழுது, குறு ஏவலும் செய்து - (அவர்க்குச்) சிறியஅடிமைத்தொழில்களையுஞ் செய்து, அன்பு பெற்றேன் - (அவருடைய) கருணையை அடைந்தேன்; என்போல் எவர் பேறு பெற்றார் - என்னைப்போல (வேறு) எவர் தாம் இவ்வகைநற்பயன் பெற்றனர்? (இதுவன்றி), பின்னையே பிறந்து - (ஆழ்வாரவதாரத்திற்குப்) பிற்காலத்திலே தோன்றி, வெறு ஏவலில் நின்ற-(தேவதாந்தரங்களுக்குச்செய்யும்) பயனற்ற பணிவிடைகளில் நிலைநின்ற, பொய் அன்பர் தாங்களும் - (உண்மையுணர்வில்லாமல்) திரிபுணர்வையேயுடைய தொண்டர்களும், மெய் உணர்ந்தார் - (ஆழ்வாருடைய பிரபந்தங்களினால்) தத்துவப் பொருளை அறிந்து கொண்டார்கள்; எற்றே - (இது) என்னவியப்புடையது! (எ - று.)

ஆழ்வாருடையபிரபந்தங்களினால், யான் பரமாத்மஸ்வரூபம் ஜீவாத்மஸ்வரூபம் முதலிய தத்துவார்த்தங்களை ஐயந்

திரிபற உண்மையாக உணர்ந்து, அவ்வாழ்வாரை ஆசிரிய ராகக்கொண்டு, கைகூப்பித்தொழுது, அவர்க்கு அடிமைத் தொழில்செய்து, அவரருளைப் பெற்றேன் என்பது, முதல் வாக்கியத்தின் பொருள். 'என்போல் எவர் பேறுபெற்றார்' என்றது - தம்மைப்போல வேறு எவரும் பாக்கியம் பெற்றிலரென்று, தமது பக்தியதிசயத்தையும் அதனு லாகிய பெரும்பயனையுங் குறித்துக் கொண்டாடிக் களித்துக் கூறிய வார்த்தை. ஆழ்வாரவதாரத்துக்குப் பிற்காலத்தார் பலரும் அவர்பிரபந்தங்களினாற் பிறப்புவீடுகளையும் அவற்றின் காரணங் களையும் விபரீத ஐயங்களால் அன்றி உண்மையால் உணரலாயினர் என்று, அத்திவ்வியப்பிரபந்தங்கள் தம்மைக்கற்பார்யாவர்க்குந் தத்துவஞானோதயத்துக்குக் காரணமாகுந் திறமுடைமையை எடுத்துக்காட்டியது, மூன்றாம்வாக்கியம். "மருளாய்ப்பரந்த மயக்கத்துயக்கற்றமாறனெங்கோ, னருளாற் சமயமெல்லாம் பரனுண்டென்றறிவுற்றதே" என்றார் முன்னும்; (49 - ஆஞ் செய்யுள்.) 'எற்றே' என்றது, இம்மகிமைகளைக்குறித்து வியந்து கூறியவாறு.

'குருகைப்பிரான் எம்பிரான் தன் இயலிசைக்கு' என்பதனை 'மெய்கண்டு' என்றதனோடும், 'மெய்யுணர்ந்தார்' என்றதனோடுங் கூட்டுக; கடைநிலைத்தீவகம். இயலிசை - "பண்ணார்பாடலின் கவிகள்," "குருகையர்கோன், யாழினிசை வேதத்தியல்" என்றபடி முதிர்ந்த குறிஞ்சி நட்டபாஷை இந்தளம் முதலான பண்ணிசையோடு இசைந்த பாடல். இயலிசை = இசையியல். இசைக்கு = இசையினால்; உருபுமயக்கம். கும்பிடுதல் - அஞ்சலி செய்தல். 'எவர்' என்ற வினாப்பெயர் - இங்கு, இன்மைகுறித்து நின்றது. வெற்றேவலினின்ற பொய்யன்பர் - பொய்யாகிய வழிகளிற் சென்று அன்புகொண்டு குற்றேவல் செய்பவர்: தத்துவ ஞானமின்றி விபரீதஞானமுடையராய் மதாந்தரங்களில் தெய்வ வழிபாடு செய்து நின்றவர். (79)

[தலைமகளைத் தலைமகன் கண்ணுற்று 'இஃது ஒரு வியப்பு என்?' என்றல்.]
பெற

80. இயலைத்தொடுத்தின்னிசையைப்புணர்த்தெம்மையிப்பிறவி
மயலைத் துடைத்தபிரான்குருகூர்மதியைக்கொணர்ந்து
முயலைத்துடைத்துத்தனுவைப்பதித்துமுத்தங்குயிற்றிக்
கயலைக்கிடத்திக்கொல்சாளரத்தூடுகதவிட்டதே.

(இ - ள்.) இன் இசையை புணர்த்து - இனிமையான பண்ணி சைகளை அமைத்து, இயலை தொடுத்து - இயற்றமிழ்ப் பாசுரங் களைப் பாடி, எம்மை இ பிறவி மயலை துடைத்த - எமது இந்தப் பிறப்புத்துன்பங்களைப் போக்கியருளிய, பிரான் - உபகாரகராகிய நம்மாழ்வாருடைய, குருகூர் - திருக்குருகூரிலே,—மதியை கொணர்ந்து - சந்திரமண்டலத்தைக் கொண்டுவந்து, முயலை துடைத்து - (அதன் நடுவிலுள்ள) முயலெனப்படுகிற களங்

கத்தைப்போக்கி, தனுவை பதித்து -(அதிலே இரண்டு) விற்களைப் பதியவைத்து, முத்தம் குயிற்றி - முத்துகளைப் பதித்து, கயலை கிடத்தி - (இரண்டு) கயல்மீன்களையும் வைத்து, சாளரத்து ஊடு-பலகணியினுள்ளே (அச்சந்திரமண்டலத்தை நிறுத்தி), கதவு இட்டதுகொல் - (புறத்தே) கதவு அமைக்கப்பட்டதோ! (எ - று.)—'இத்தோற்றம்' எனத் தோன்றாஎழுவாய் வருவித்து முடிக்க.

ஒருவருள்ளக்கருத்தை ஒருவரறியாத ஒருதலைக்காம மாகிய கைக்கிளைத்திணையின் முதலதான காட்சியென்னுந் துறை, இது. விசுவாமித்திரமுனிவர்பின்னே இலக்குமணனுடன் சென்ற இராமபிரான் மிதிலாபுரியின் வளங்களைக் கண்டுகொண்டே இராஜவீதிவழியாக அந்நகரினுட் புகும்போது கன்னிமாடத்தின் மேலிடத்து முன்புறத்தில் நின்ற ஜாநகியைக் கண்டு காதல் கொண்டதுபோலவும், இராசமாபுரத்து வீதிவழியே சென்ற சீவகன் அங்கு எழும்பிச்சென்று விழுந்த தன் பந்தை யெடுத்தற்கு வந்த விமலையைக் கண்டு வேட்கைகொண்டதுபோலவும் ஒரு தலைமகன் திருக்குருகூரின் வீதியிற் போம்போது "வாளரம் பொருதவேலு மன்மதன்சிலையும் வண்டின், கேளொடுகிடந்த நீலச்சுருளுஞ் செங்கிடையுங்கொண்டு, நீளிருங் களங்கநீக்கி நிரை மணிமாடநெற்றிச், சாளரந்தோறுந் தோன்றுஞ் சந்திரவுதயங் கண்டார்" என்றபடி அங்கு ஒரு மாளிகையின் சாளரத்திலே ஒரு தலைமகளது முகமண்டலத்தைக் கண்டு காதல்கூர்ந்து அதன் சிறப்பை வியந்து பாராட்டி இங்ஙனம் தன்னுட் கூறின னென்க. பொருளதிகாரத்திற் கூறப்பட்ட குணநலங்களிற் சிறந்த தலைமக னும் தலைமகளும் ஓருசோலையினிடத்து ஏகாந்தத்திலே தற்செய லாகச் சந்தித்து ஒருவரையொருவர் நோக்கியபொழுது ஒருவர்மே லொருவர் அன்புகொண்டு இயற்கைப்புணர்ச்சி பெறுமாறு போல, இதுவும் ஒருநிகழ்ச்சி. இச்செய்யுளின் மெய்ப்பாடு - உவகையைச் சார்ந்த மருட்கை; கண்ட பொருளால் நெஞ்சில் மயக்கந் தோன்றி ஒன்றை ஒன்றாகக்கூறுதலின். இங்ஙனஞ்சொன்னதனாற் பயன் - மகிழ்தல்; "சொல்லெதிர் பெறாஅன் சொல்லியின்புறுதல், புல்லித் தோன்றுங் கைக்கிளைக்குறிப்பே" என்றார் தொல்காப்பியனார்.

மதி-கலைநிறைந்த சந்திரன். இங்கு 'மதி' என்றது, அம்மாதின் முகமண்டலத்தை. கண்டவர்கண்களிக்கச்செய்யும் இயல்பினும், குளிர்ந்த இனிய ஒளியினும், முகத்துக்குச் சந்திரன் உவமை. அச்சந்திரனுக்காயின் முயலெனப்படுங் களங்கம் உண்டு. இம்முக சந்திரனுக்கோ அதுஇல்லை யென்னும் விசேடங் கூறுவான், 'மதியைக்கொணர்ந்து முயலைத்துடைத்து' என்றான்; கீழ் 74-ஆஞ் செய்யுளில் "வெண்மதிமேற், கள்ளம்பரந்தனவோ முயல் நீக்கி" என்றதும் காண்க. விற்போல வளைந்து ஆடவர்நெஞ்சுறுதியைப் போக்கும் ஆற்றலுடைய புருவங்களின் சிறப்பைப் பாராட்டி 'தனுவைப்பதித்து' என்றும், புன்முறுவல்செய்கையிற் சிறிது வெளித்தோன்றிய வெண்மையான பற்களின் அழகில் ஈடுபட்டு "முத்தங்குயிற்றி' என்றும், பிறழ்கிற கண்களின் நலத்தைக்

கொண்டாடி 'கயலைக் கிடத்தி' என்றுங் கூறினான். 'சாளரத்தூடு கதவிட்டதே' என்றது. பலகணியுங் கதவு முள்ள இடத்தே இவ்வகைமதியமொன்றுஉண்டோ எனவியந்தவாறு: இது, தற்குறிப்பேற்றவணியின்பாற்படும்; 'கொல்' என்ற இடைச்சொல் அவ்வணிக்கு உருபாய் நின்றது.

பிரான் குருகூர் - ஆழ்வார்திருவவதரித்த தலமான திருநகரி. பாமாலையென்ப வாதலால், 'இயலைத் தொடுத்து' எனப்பட்டது. பிறவித்துன்பங்களாலாகும் மயக்கத்தைத் தம்மைச்சார்ந்தவர் கட்குப் போக்கியருளுதலால் ஆழ்வார் 'எம்மை இப்பிறவிமயலைத் துடைத்த பிரான்' எனப்பட்டனர். ஆழ்வாரை அடுத்தார்க்கு அவரருளால் வினையனைத்துந் தீரவே, பிறவித் துயர்க்குவருந்துதல் இல்லையாம்.

ஆழ்வாரிடத்தில் அன்புகொண்ட பாகவதர் ஆழ்வாரை யுத்தேசித்துத் திருக்குருகூரைச்சார்ந்துள்ள கம்பநாடரது திருமுகமண்டலத்தின் விளக்கத்தைக் கண்டு அதனைக் கொண்டாடுதல், இதற்கு உள்ளுறைபொருள்: ஆழ்வார் பாட்டுடைத்தலைமகனென்றும், அவரிடத்து அன்புள்ள பாகவதர்கள் கிளவித்தலைமக்களென்றும் வேறுபாடு அறிக. கிளவித்தலைமகனும் பாட்டுடைத்தலைமகனுமாக இரண்டுதலைமகன் அமைதல், இறையனாரகப் பொருளுரையாலும் விளங்கும். ஆழ்வாரிடத்திற்போல அவரடியாரிடத்தும் "சடகோபனைச்சென்றிறைஞ்சுந், தலையாரெவ ரவரெம்மையாளுந் தபோதனரே," "மாறனென்றுற் பதுமக்கரங்கள், முடியெடுத்துக்கொண்ட வந்தணர் தாளென்முடி" என்று கம்பநாடர் மிக்கபக்திகொண்டு அவர்களையுந் தமக்குத் தலைவராகக் கொள்ளுதல், அவ்வடியார்களைக் கிளவித்தலைமகனைக்கொண்டதற்குக் காரணம். இங்ஙனம் தலைமகன் வார்த்தையாலே தமது வைபவத்தைப் பேசி மகிழ்கின்றனர் கம்பநாடரென்க. "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங், கடுத்தது காட்டும் முகம்" என்றபடி இவரது அகத்தி லுண்டான ஞானனந்தங்களால் முகம் மலர்ச்சியுற்றுக் களங்கமில்லாததொரு சந்திரன்போன்று விளங்குதலால், 'மதியைக்கொணர்ந்து முயலைத்துடைத்து' எனப்பட்டது. வில்என்பது - அம்பைச்செலுத்திக்குறியையெய்வதாகையாலே, இவரது ஸாதநபூர்த்தி முகக்குறிப்பிலே விளங்குதல் 'தனுவைப் பதித்து' எனப்பட்டது. இனிய திருமொழிகளை இவர் வாய் மலர்ந்து கூறும்போது சிறிதுவெளித்தெரிகிற தந்தபங்க்தியின் பொலிவை 'முத்தங் குயிற்றி' என்று பாராட்டியவாறு. ஆராய்ச்சியாற் பல விஷயங்களில் விரைந்துசெல்லவல்ல இவரது ஞானக் கண்ணின் அமைதியை 'கயலைக் கிடத்தி' என்று கொண்டாடினரென்க. அம்முகமண்டலத்தின் விகாசம் மேல்நோக்காகவன்றி ஊன்றி நோக்கினுல்மாத்திரமே நன்கு புலனுவ தென்பதனை 'சாளரத்தூடு கதவிட்டதே' என்றதனாற் பெறவைத்தபடியாம். பிறவும் விரிப்பிற் பெருகும்; உய்த்துஉணர்ந்துகொள்க.

கொல் என்ற இடைச்சொல், பிரித்துக்கூட்டப்பட்டது. 'எம்மை மயலைத் துடைத்த' என்பது இரண்டு செயப்படுபொருள்

வந்த வினை. 'எம்மை' என்பதை 'எமது' என உருபுமயக்கமாகக் கொள்ளுதலும் நேராம். (80)

81. இட்டத்திலுந்தந்தமுள்ளத்திலும்மெண்ணிலும்மிருப்பின்
கிட்டத்திலும்வலியாருமுருகுவர்கேணியிலும்
பட்டத்திலும்பைந்தடத்திலுமோடைப்பழனத்திலுங்
குட்டத்திலுங்கயல்பாய்குருகூரர்குணங்களுக்கே.

(இ - ள்.) கேணியிலும் - கிணறுகளிலும், பட்டத்திலும் - (பெருக்குக் காலத்தில் நீரேறிப்பாயும்) பட்டக்கால்களிலும், பைந் தடத்திலும் - பசுமையான தடாகங்களிலும், ஓடை பழனத்திலும் - நீரோடைசூழ்ந்த வயல்களிலும், குட்டத்திலும்-ஆழமான குட்டைகளிலும், கயல் பாய் - (நீர்வளத்தால்) கயல்மீன்கள் பாய்ந்துகுதிக்கப்பெற்ற, குருகூரர் - திருக்குருகூரில் அவதரித்தவரான நம்மாழ்வாருடைய, குணங்களுக்கு - நற்குணங்களைக் கண்டு அவற்றிற்காக,—இருப்பின் கிட்டத்திலும் வலியாரும் - இரும்புருக்கிய உருக்குக்கிட்டத்தைக்காட்டிலுங் கடினமானவர்களும், —தம் தம் இட்டத்திலும் உள்ளத்திலும் எண்ணிலும் உருகுவர் - தம்தம்முடைய மனம் புத்தி சித்தம் என்னும் அகக்கரணங்களிற் கரைவார்கள்; (எ - று.)

மனம் மொழி மெய் என்னுந் திரிகரணங்களின் புடைபெயர்ச்சியாகிய எண்ணம் சொற் செயல்களிலெல்லாம் இருப்புக்கிட்டத்தினுங் கடினமான இயல்புடையவர்களும், நம்மாழ்வாருடைய திருக்கல்யாண குணங்களை நோக்குமிடத்து, அவற்றின் சிறப்பினால், தம்கடுமையொழிந்து, அகக்கரணங்கள் நெகிழ்ந்து உருகி நீராய்க்கரைவர் என்று அத்திவ்வியகுணங்களின் மேன்மையை எடுத்துக்காட்டியவாறும்; எனவே, இளகுநெஞ்சுடையாருருகுவது சொல்லவேண்டாதாயிற்று. ஆகவே, அவை யாவரும் ஈடுபடும்படியுள்ளன வென்க. (திருமாலையில் "இரும்புப்போல் வலிய நெஞ்சம் இறை யிறை யுருகும் வண்ணம்" என்றஇடத்தில் 'இரும்பாகில் அக்நியாலே நிமிர்த்துக் கொள்ளலாம்; இது ஒருபடியாலும் திருத்தவொண்ணாதென்கை,' கடிநஸ்தலத்திலே வர்ஷித்தால் காடிந்யமடங்க நெகிழ்ச்சிக்கு உறுப்பாமாபோல, விஷயாந்தரத்தாலே மனஸ்அதிகடிநமானாலும் சிதிலமாம்படி வயிர வுருக்காயிறே பகவத்ப்ரபாவ மிருப்பது' என்ற பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானவாக்கியங்கள் நோக்கத்தக்கன.) மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்ற நான்கு அந்தக்கரணங்களுள், அகங்காரம் ஒழிந்த மூன்றும், முதலடியில் எடுத்துக்கூறப்பட்டன.

'கிட்டத்திலும்' என்ற இடத்து, இல் - ஐந்தனுருபு, எல்லைப் பொருளது; இது, உறழ்பொருவுஎனப்படும். உம்மை - இழிவு சிறப்பு; 'வலியாரும்' என்ற உம்மையும் அதுவே. 'இட்டத்திலும்' என்பது முதலியவற்றில், இல் - ஏழனுருபு; உம்மை - எண்ணுப் பொருளது. சிறுகுளத்தைக் கேணியென்பது அருவாநாட்டுச்

சொல்; அது, தமிழில் வந்துவழங்கியபோது, திசைச்சொல்லாம். 'ஓடைப்பழனத்திலும்' என்பதற்கு - நீரோடைகளிலும் வயல்களிலும் என்று உரைப்பினும் அமையும். பைந் தடம் - குளிர்ச்சியான தடாகம்; இங்குப் பசுமை, குளிர்ச்சியின்மேலது: குளிர்ந்த நீரை 'பச்சைஜலம்' என்றல், உலகவழக்கு. இனி, பைந் தடம் - (தாமரையிலைகளினாற்) பசுமையையுடைய தடாகம் என்றலுமாம். இருப்பின் = இரும்பின்: மென்றொடர், வன்றொடராயிற்று. ஆழ்வாரது திருவருட்பெருக்கினாலாகும் இடையறாதநீர்ப்பெருக்கால் மேடுபள்ளமென்னும் வாசியின்றி எங்கும் ஒப்பக் கயல்பாய்தல் போல, அவரது குணவிசேஷத்தால் வல்நெஞ்சரோடு மெல்நெஞ்சரோடு வாசியற அனைவரும் உருகுவர் என்பது, குருகூர்க்குக் கொடுத்த 'கேணியிலும் பட்டத்திலும் பைந்தடத்திலும் ஓடைப் பழனத்திலும் குட்டத்திலும் கயல்பாய்' என்ற விசேடணத்தாற் போதரும். (81)

82. குணம்வேண்டுமேநற்குலம்வேண்டுமேயக்குலத்தொழுக்காம்
பிணம்வேண்டுமேசெல்வப்பேய்வேண்டுமேபெருந்தண்வகுள
மணம்வேண்டுந்தண்டெரியற்பெருமான்செய்யுண்மாமணியின்
கணம்வேண்டுமென்றறிவாரைக்கண்டாற்சென்றுகைதொழுமே.

(இ - ள்.) பெருந் தண் வகுளம் மணம் வேண்டும் - பெரிய குளிர்ந்த மகிழமலர்களின் வாசனை (அனைவராலும்) விரும்பப்படுகிற, தண் தெரியல்-இனிமையான மாலையைத் தரித்த, பெருமான் - பெருமையையுடையவரான நம்மாழ்வார் அருளிச்செய்த, செய்யுள் - பாசுரங்களாகிய, மா மணியின் கணம் - சிறந்த இரத்தினங்களின் கூட்டத்தை, வேண்டும் என்று அறிவாரை - (தமக்கு) இன்றியமையாதனவென்று தெரிந்து ஓதியுணர்பவர்களை, கண்டால் - (நீங்கள் எங்குக்) கண்டாலும், சென்று கைதொழும் - (உடனே) அருகிற்சென்று கைகூப்பிவணங்குங்கள்; குணம் வேண்டுமே - நற்குணம் வேண்டுமோ? நல் குலம் வேண்டுமே - நல்லகுலத்திற் பிறத்தல் வேண்டுமோ? அக்குலத்து ஒழுக்கு ஆம் பிணம் வேண்டுமே - அந்த நற்குலத்துக்கு ஏற்ற ஆசாரமாகிய பிணம் வேண்டுமோ? செல்வம் பேய் வேண்டுமே - செல்வப் பொருளாகிய பேய் வேண்டுமோ? [ஒன்றும் வேண்டுவதில்லை யென்றபடி];

விலையுயர்ந்த இரத்தினங்கள்போல அனைவரும் நன்குமதிக்கத் தக்கனவான ஆழ்வார்பாசுரங்களின் மகிமையை யறிந்து அவற்றை அன்புடன் ஓதுபவரைக் கண்டால், அவர்களுடைய குணம் குலம் ஒழுக்கம் பொருள் எதனையும் பார்க்கவேண்டுவதில்லை: உடனே அவரருகிற்சென்று அவரை வணங்குங்கள்: நற்குணவமைதி, உயர்குடிப்பிறப்பு, அதற்குஏற்றஆசாரபூர்த்தி,செல்வப்பொருள் என்பவற்றில் எதுவும் இலராயினும் அவர்கள் நன்கு மதிக்கத்தக்கவர் என்றும்; ஆழ்வாரருளிச்செயல்களை யறிபவர்களை அடுத்துத் தொழுவதுமாத்திரமே நீங்கள் மிக்கமேன்மையடைதற்குப் போதும்: உங்கட்கு மேன்மைவிளைத்தற்காகக் குணம் முதலியன வேண்டுவதில்லை யென்றும் இருவகையாகக் கருத்து அமையும்.

"அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன, அவா விலந்தாதிகளா லிவையாயிரமும் முடிந்த, அவாவிலந்தாதியிப்பத் தறிந்தார்பிறந்தாருயர்ந்தே" என்று ஆழ்வார்தாமே அருளிச் செய்ததனால் அப்பாசுரங்களையறிவாரது மேன்மையும், "நல்லார் பலர்வாழ் குருகூர்ச் சடகோபன், சொல்லார் தமிழாயிரத்துள் ளிவைபத்தும், வல்லார் தொண்ட ராள்வது சூழ்பொன்விசும்பே" என்று ஆழ்வார்தாமே அருளிச்செய்ததனால் அப்பாசுரங்களை யோதுவார்க்கு ஆட்பட்டவர்கள் அடையும் பெரும்பயனும் விளங்குதல் காண்க.

குணம் - அன்பு, அருள், அடக்கம் முதலியன. ஒழுக்கு - வருணாச்சிரமதருமங்களில் வழுவாது ஒழுகுதல்; ஒழுகு என்ற முத னிலைதிரிந்த தொழிற்பெயர். பகவத் பாகவத பக்தியில்லாதாரது ஆசாரம் பயனற்றதும் அருவருக்கத்தக்கதுமா மென்பார், 'அக் குலத்து ஒழுக்காம்பிணம்' என்றார். பேய்தாக்கி வருத்துதல் போலச் செல்வம் தன்பக்கல் ஆசையையூட்டி வருத்துதலால், 'செல்வப்பேய்' எனப்பட்டது. தெரியல் என்ற பெயர்-விளங்கு வது என்று காரணப்பொருள்பெறும். 'பெருமான்செய்யுள்' என்ற விடத்துத் தொக்கு நின்ற ஆறும்வேற்றுமையுருபு - செய்யுள் கிழமைப் பொருளது. தொழும் - பன்மையேவல். (82)

83. *தொழும்பாக்கியவினைத்தொல்லைப்பிறவிச்சுழியிடைநின்*
றெழும்பாக்கியமுடைத்தாக்கவுந்தென்னியலோடிசைந்து
கெழும்பாக்கெழுமியகீர்த்தியைநாளுங்கிளத்தியென்னாத்
தழும்பாக்கவும்வல்லகோசடகோபன்றயாபரனே.

(இ - ள்.) தொழும்பு ஆக்கிய - (உயிரைத் தனக்கு) அடிமை யாகச்செய்த, வினை-கருமமாகிய, தொல்லை பிறவி சுழி-தொன்று தொட்டுவருகிற பிறப்புக்களாகிய கடலின் சுழியினது, இடை நின்று - நடுவிலிருந்து, எழும் பாக்கியம்உடைத்து ஆக்கவும்- (அவ் வுயிர் தப்பி) வெளியேறி உய்யும்படியான அத்ருஷ்டத்தை யுடையதாம்படி செய்யவும், தென் இயலோடு இசைந்து கெழும் - அழகிய இலக்கணங்களுடன் அமைந்து விளங்குகிற, பா - (தாம் பாடிய திருவாய்மொழி முதலிய திவ்வியப்பிரபந்தங்களின்) பாடல் களிலே, கெழுமிய - எங்கும்நிறைந்துள்ள, கீர்த்தியை - (எம்பெரு மானுடைய) புகழை, நாளும் கிளத்தி என் நா தழும்பு ஆக்கவும்- நாள்தோறுஞ் சொல்லிச்சொல்லி எனதுநாக்கில் தழும்பேறும்படி செய்யவும், வல்ல கோ - திறமமைந்த தலைவர், (யாவரெனில்,—) தயாபரன் சடகோபனே - (எல்லாவுயிர்கட்குங்) கருணை செய்தலி லேயே ஊன்றியவரான நம்மாழ்வாரே; (எ - று.)—ஈற்று ஏகாரம்- பிரிநிலை.

வினைச் சுழி யென இயையும்; வினையாகிய சுழி யென்க. கருமம் அநாதி யாதலின், அதன்தொடர்பாலாகும் பிறப்பும் உயிர் கட்கு அநாதியாய் வருதல்பற்றி, 'தொல்லைப் பிறவி' எனப்பட்

டது. "மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து" என்றபடி மாறிமாறி வருகின்றனவான பிறப்புக்கள், மாறிமாறி வரும் அலைகளையுடைய கடல் போலும். அப்பிறப்புக்களிலேயே உயிர்களைச் சுழலச்செய்வதான ஊழ்வினையானது அகப்பட்டபொருள்களைக் கடல்வெள்ளத்திலேயே உழலச்செய்வதான அதன்நீர்ச்சுழி போலுதலால், வினை 'பிறவிக்கடலின்சுழி' எனப்பட்டது; "சென்மம் தரங்கம் கருமம் சுழி" என்பர் பிள்ளைப்பெருமாளையங்காரும். 'வினைச் சுழி' என்பதற்கு ஏற்ப 'பிறவிக் கடல்' என்றது, ஏகதேசவுருவகம். ஒருதலைவனுக்கு அடிமைப்பட்டவர் அவனுக்கு அதீனராய்ச் சுவாதந்திரியமிலராதல்போல, உயிர்கள் கருமவசப்பட்டுத் தம்வசமிழத்தலால், வினைக்கு 'தொழும்பாக்கிய' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. ஜீவான்மாக்கள் கருமவசத்திலேயே கிடந்து பிறப்புத்துன்பங்கட்கு உள்ளாகி உழலாது மீண்டு வினைதொலைத்துப் பிறப்பற்றுப் பரமபதமடையும்படியான பாக்கியம்பெறுமாறு செய்ய வல்ல இறைவர் நம்மாழ்வார் என்பது, 'தொழும்பாக்கிய வினைத் தொலைப் பிறவிச்சுழியிடை நின்று எழும் பாக்கியமுடைத்தாக்கவும் வல்ல கோ சடகோபன்' என்பதன் கருத்து. இது, செயற்குஅரியனசெய்யவல்ல பெரியவர் ஆழ்வார்தாம் என்றவாறு. இங்ஙனங்கூறினது, உயிர்கள் எளிதில் முத்திபெறுமாறு பிரபத்தி மார்க்கத்தை ஆழ்வார் தமது திவ்வியப்பிரபந்த மூலமான உபதேசத்தால் நன்கு வெளியிட்டனராதலின்; "முத்திக்கு மூலம் ....குருகைப்பிரான் சொன்ன ஆயிரமே" என்றார் முன்னும்.

திருவாய்மொழிமுதலிய அருளிச்செயல்களை யான் நாள்தோறும் இடையறாது ஓதி அப்பாசுரங்களைக்கொண்டு ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்விய கீர்த்திகளைத் துதித்து நாக்குத்தழும்பேறும்படி அந்தமெய்ப்புகழ்களே எங்கும்நிறைந்த பாசுரங்களைப் பாடியருளியவர் ஆழ்வாரென்பார், 'தென்னியலோடிசைந்துகெழும்பாக் கெழுமிய கீர்த்தியை நாளுங்கிளத்தி என்நாத்தழும்பாக்கவும் வல்ல கோ சடகோபன்' என்றார். "கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லால் மற்றுங் கேட்பரோ," "இறைவன், பொருள்சேர் புகழ்" என்றபடி, கேட்கத்தக்கதும் பொருள்சேர்ந்ததுமான புகழ் ஸர்வேசுவரனது கீர்த்தியொன்றேயாதலால், 'கீர்த்தி' என்ற பொதுப்பெயர் சிறப்பாய்த் திருமாலின்புகழையே குறித்தது. ஆழ்வார் பாசுரங்கள் அக்கீர்த்தியே நிறைந்தனவாதலை, "செவிகளாலார நின்கீர்த்திக்கனியென்னுங் கவிகளே காலப்பண்தேனுறைப்பத் துற்று" என்ற திருவாய்மொழி கொண்டும் உணர்க. "அருள் கொண் டாயிரமின்தமிழ்பாடினான், அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே" என்றபடி, இங்ஙனம் ஆழ்வார் "ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் அவனுடைய பேரும் தார்களுமே பிதற்ற"ப்படி பண்ணியதற்குக் காரணம் அவர்க்கு இயல்பாக எல்லாவுயிர்களின் மேலும் எழுந்த கருணையேயாதலால், 'சடகோபன் தயாபரன்' என்றார்.

சடகோபன் என்ற திருநாமத்தின் காரணம்-மதாந்தரத்தவர்களாகிய சடரைக்கோபித்துத் தம்திருவாய்மொழிகொண்டு

வெல்பவர் என்றுங்கூறுவர்;* சடர் - மூர்க்கர், விடாப்பிடியுடையோர். தொல்லைப்பிறவி - பண்புத்தொகை. 'இடைநின்று' என்பதில், நின்று - ஐந்தாம்வேற்றுமைச்சொல்லுருபு, நீக்கப் பொருளது. கோ - உயர்திணைப்பெயர்; இது, 'சடகோபன்' என்ற பெயர்ப்பயனிலை கொண்டது. தயா பரன் - தயையினாற் சிறந்தவன்: பரமதயாளு எனினுமாம். (83)

[நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நிற்றல்.]

84. பரந்தலைக்கும்பொருநைக்குருகூரென்னிற்கண்பனிக்குங்
கரந்தலைக்கொள்ளுமுள்ளும்முருகுங்கவியாலுலகைப்
புரந்தலைக்கும்வினைதீர்த்தான்புனைமகிழ்பூவுமன்றி
மரந்தலைக்கொள்ளவும்போதுநங்காயுன்மகள்கருத்தே.

(இ - ள்.) நங்காய் - மகளிரிற்சிறந்தவளே! பரந்து அலைக்கும் பொருநை குருகூர் என்னில் - பரவி அலைவீசுகிற பொருநையாறென்னும் தாமிரபர்ணி நதிபாயப்பெற்ற திருக்குருகூர் என்று (யாரேனும் தலைவனது ஊர்ப்பெயர்) சொன்னமாத்திரத்தில், (நின்மகள்), கண் பனிக்கும் - கண்ணீர் பெருக்குகின்றாள்; கரம் தலை கொள்ளும் - கைகளைத் தலைமேற்கொண்டு கூப்பித் தொழுகின்றாள்; உள்ளும் உருகும் - (புறமாகிய உடல் உருகுதலேயன்றி) அகமாகிய மனமும் கரைந்து நீராகின்றாள்; கவியால் உலகை புரந்து - (தான் பாடிய) பாசுரங்களினால் உலகத்தைப் பாதுகாத்து, அலைக்கும் வினை தீர்த்தான் - (உயிர்களை) வருத்துகின்ற கருமத்தைப் போக்கியருளியவனான அத்தலைவன், புனை - அணிந்த, மகிழ் பூவும் அன்றி - (மாலையாகிய) மகிழமலர்களைத் தான் சூடிக்கொள்ள விரும்புவதும் அல்லாமல், மரம் தலைக்கொள்ளவும் போதும் - (அந்தமலர்களைப் பூக்கின்ற) மகிழமரத்தைச் சார்ந்து அதனைத் தலைமேற்கொள்ளுதற்குஞ் செல்கின்றாள்: உன் மகள் கருத்து - உனது பெண்ணின் மனநிலை, (இத்தன்மையதாம்); (எ - று.)—'இத்தன்மையதாம்' என வினை வருவித்து முடிக்க.

தலைவியைக் களவொழுக்கத்தாற் கூடிநின்ற தலைவன், பின்பு 'ஊரெங்கும் பழிபரவுதலாலும், இவ்வஞ்சனையொழுக்கத்தைத் தாய்மார் அறிதல்கூடுமாதலாலும், இனி இதனை விட்டு, வெளிப்படையாக இவளை நீ மணம்புரிந்து கொள்ளுதலே தகுதி' என்று தோழியால் வற்புறுத்தப்பட்டு, அத்தலைவிக்காகத் தாய்தந்தைய

---

* ஆசார்யஹ்ருதயத்தில் "சடரை யோட்டி" என்றதும், "சடகோபராகையாலே "வேதசாஸ்த்ராவிரோதிநா" என்கிற படியே ப்ரமாணாநுகூல தர்க்கங்களாலே மத்பஸ்தமாக அர்த்தத்தை ஸாதிக்கையன்றிக்கே ஸ்வபுத்திபாகல்பிதசுஷ்கதர்க்கங்களாலே ஸ்வஸ்வமதஸ்தாபநம்பண்ணும் பாஹ்யகுத்ருஷ்டிகளாகிற சடரை, ஶ்ருத்யந்ததாத்பர்யமான ஸ்வோக்திவிசேஷங்களாலே ஸ்வஸந்நிதாநத்தில் நில்லாதபடி துரத்தி" என்ற அதன் வியாக்கியானமுங் காண்க.

ரிடங்கொடுத்தற்குஉரிய அருங்கலம் முதலிய பொருளைத் தன் முயற்சியால் ஈட்டுதற்பொருட்டுப் பிரிந்துசெல்வன்; இப்பிரிவு, வரைபொருட்பிரி வென்றும், வரைவிடைவைத்துப் பொருள் வயிற் பிரிதலென்றுங் கூறப்படும். அங்ஙனம் அவன்பிரிந்துசெல்லவே, தலைவி அப்பிரிவுத்துயரை ஆற்றமாட்டாமலும் தந்தைதாய ரிடத்துத் தன்னைக்குறித்துப் பிறர் மணம் பேசுவதை யுணர்ந்தும் வருந்தி மெலிவடைய, அம்மெலிவுகண்ட செவிலித்தாய் இம்மெலிவு தெய்வாவேசத்தா லாகியதென்று மாறுக எண்ணி அதற்கு உரிய பரிகாரங்களைச் செய்யத்தொடங்க, அதுகுறித்து வருத்தம்மிக்க தலைவி தோழியைத் தூண்ட, அவள் செவிலிபக்கல் உண்மைக் காரணத்தை உரைக்க, அவள் அதனை நற்றாய்க்கு உரைத்தல், இச்செய்யுளிற் கூறிய விஷயம். (நற்றாய் - பெற்றதாய்.) இச்செய் யுளின் மெய்ப்பாடு - உவகை. இதன் பயன் தந்தைதமர்க்கும் அவள் சொல்லி வெளிப்படையாக இவளுக்கு அவனை மணம் புரி விக்கும்படி தூண்டுதல். இங்ஙனங் களவை வெளிப்படுத்துதலை 'அறத்தொடுநிற்றல்' என்பர்; மகளிர்க்குச் சிறந்ததருமமாகிய கற்பொடு இசைய நிற்பதனால், இவ்வாறு பெயராயிற்று: "தலைவி பாங்கிக்கு அறத்தொடுநிற்கும், பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும், செவிலி நற்றாய்க்கு அறத்தொடுநிற்கும், நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு நிற்கு மென்ப நெறியுணர்ந் தோரே" என்பதனால், களவை வெளிப்படுத்திநிற்கும் முறை மையை அறிக.

தலைவனதுபெயரைக் குறியாமல் அவனது ஊரின்பேரைக் கூறக்கேட்குமளவிலும் தலைவி ஆசைநோயால் அடையும் பலவகை நிலைவேறுபாடுகளும், ("தாராயினும் தழையாயினும் தண்கொம்பதாயினும் கீழ், வேராயினும் நின்ற மண்ணாயினும் கொண்டுவீசுமினே", "போரரிதாள்புனைதாரரிதாகில் தண்பூந் துளவின், தாரரிதாவுந்தழையரிதாகில் தழைதொடுத்த, நாரரி தாகிற் பிழைப்பரிதாம் எங்கள் நன்னுதற்கே," "கொழுந்தோ டிலையும் முகையுமெல்லாங் கொய்யுங் கொய்மகிழ்க்கீழ், விழுந் தோடுவதொர்சருகும்பெறுள்" என்றபடி) பிரிவாற்றாதநிலையில் தலைவி தலைவனது மாலையாயினுங் கிடைக்கப்பெறவேண்டு மென்று விரும்புவதேயன்றி அம்மாலைக்குஉரிய மலரின் சம்பந்த முள்ள பொருள் எது கிடைத்தாலும் போதுமென்று விரும்புவதும் இங்கு எடுத்துக்கூறப்பட்டன.

பனிக்கும், கொள்ளும், உருகும், போதும் என்ற செய்யுமென் முற்றுக்கள் - பெண்பாலுக்குவந்தன. இம்முற்றுக்கள், இங்கு நிகழ்காலங் காட்டின; "செய்யும் நிகழ்பு எதிர்வும்" என்றார் நன் னூலார். உள் - உள்ளம்: அந்தக்கரணமாகிய மனம். 'உள்ளும்' என்பதை 'உள்' என்ற வினைப்பகுதியடியாப் பிறந்த செய்யுமென் முற்றெனக் கொண்டு, அதற்கு - சிந்திக்கின்றாளென்று உரைத்த லும் ஒன்று; உள்ளுதல் - நினைத்தல். உன்மகள்கருத்துப் போதும் - நினதுமகளின்கருத்துச் செல்லும் என்றுங் கொள்ளலாம்.

கவியா லுலகைப் புரந்து—"கவியா லுலகை யுய்தலைச்செய்தது" என்றார் முன்னும், (38 - ஆஞ் செய்யுள்.) 'கவியால்' என்றதை 'வினை தீர்த்தான்' என்பதனோடுங் கூட்டுக. கவி - திருவாய்மொழி முதலியன. 'உலகு' என்பது - பலபொருளொருசொல்லாய், நிலத்தையும் உயிர்களையும் ஒழுக்கத்தையும் உயர்ந்தோரையும் உணர்த்திநிற்குமேனும், இங்கே 'புரந்து' என்றதனால், நிலவுலகத்தில்வாழுஞ் சீவான்மாக்களையுணர்த்திற்று; "உலக முவப்ப" என்றவிடத்து 'உலகம்' என்பது போல.

சிற்சிலசமயங்களிற் கம்பநாடரது ஞானக்கண்ணுக்குப் புலனான ஆழ்வார் அப்பொழுதே அவர்க்குச் சதாசாந்நித்யத்தைத் தந்தருளாமற் பரம்பொருளைநாடி மறைந்தவளவிலே, அப்பிரிவைப்பொறாது அவர் வருந்துகிற நிலையைப் பரிவுடையார் ஞானிகட்குக்கூறுதல், இதற்கு உள்ளுறைபொருள். இங்ஙனம் செவிலி பேச்சாலே தமதுநிலைமையை வெளியிடுகின்றனர் கம்பநாடரென்க. ஆழ்வாரவதரித்த திவ்யதேசத்தின் திருநாமத்தைக் கேட்டமாத்திரத்தில் இவர்க்குஉண்டாகும் பக்திகாரியமான மெய்ப்பாடுகளும், ஆழ்வாரது பிரசாதத்தைச் சிரமேற்கொள்வதில் இவர்க்குஉண்டான அதியாதரமும், இதில் நன்கு வெளியாகின்றன. 'வினைதீர்த்தான் புனைமகிழ்ப் பூவுமன்றி மரந்தலைக் கொள்ளும்' என்பதற்கு ஸ்வாபதேசம் - ஆழ்வாரது சம்பந்தத்தை நேரிலேனும் இடையிட்டேனும் உடைய அடியார்களைத் தலைமேற் கொள்ளச் செல்கின்றன ரிவ ரென்றும் உரைக்கலாம்; ஆழ்வாரது அன்பர்கள் எழுந்தருளியிருக்கிற இடமும் இவராற் சிரமேற் கொள்ளுமாறு விரும்பப்படுகிற தென்பதுந் தோன்றும். பிறவுங் கண்டுகொள்க. (84)

[தலைவனைநோக்கித் தோழி தலைவியை உடன்கொண்டுபோகச் சொல்லுதல்.]

85. கருத்திற்கருணைவைத்தேகுமிதுவுங்கலைமறையோர்
திருத்திற்றொருமணந்தீருந்தினமயனீரினிறை
முருத்திற்செருந்தயலேயிவளோடுமுயற்கரும்பின்
குருத்திற்பிரசம்வைக்குங்குருகூர்சென்றுகூடுமினே.

(இ - ள்.) கருத்தில் கருணை வைத்து - (நுமது) மனத்திற் பேரன்புகொண்டு, இவளோடு ஏகும் - இம்மங்கையுடனே (நீர்) செல்லக்கடவீர்; இதுவும் - இவ்வாறு நீர் இவளைக்கைப்பற்றுவதும், கலை மறையோர் திருத்திற்று ஒரு மணம் - சாஸ்திரம்வல்ல அந்தணர்கள் செவ்விதாக அமைத்த விவாகங்களுள் ஒன்றன்பாற்படும்; (அன்றியும்), தினம் மயல் தீரும் - நாள்தோறும் (உங்களிருவர்க்கும் இடையீடுகளினால் உண்டாகும்) மயக்கமும் (இவளை நீர் உடன்கொண்டுசென்றால்) நீங்கியிடும்; (ஆதலால்),—நீரில் நிறை - நீர்வளத்தால் நீரருகிலே முளைத்து நிறைந்துள்ள, முருத்தின் செருந்து - வெண்மையான அடிக்குருத்துக்களையுடைய செருந்தி

யென்னுங் கோரைகளின், அயலே - அருகிலே (யுள்ள), கரும்பின் - கரும்புகளின், குருத்தில் - குருத்துக்களிலே, முயல் - முயற்கூடெனப்படுகிற சந்திரமண்டலம்போல, பிரசம் வைக்கும் - தேன் கூடு கட்டப்பெற்ற, குருகூர் - (நமது) திருக்குருகூர்க்கு, சென்று கூடுமின் - (இவளை அழைத்துக்கொண்டு) போய்ச் சேர்வீராக;

அகப்பொருளிலக்கணநெறிகளுள் ஒன்றான 'உடன்போக்கின் இயல்பு' கீழ் 20,67 - ஆஞ் செய்யுள்களின் உரையிற் சிறிதுகூறப்பட்டது. இயற்கைப்புணர்ச்சி இடந்தலைப்பாடு பாங்கற்கூட்டம் பாங்கியிற்கூட்டம் என்பவற்றாற் களவுநெறியில் தலைமகளோடு கலந்த தலைமகனை நோக்கி, தோழி, 'இங்குப் பழிபரவுதலால், இனி இக்களவொழுக்கம் ஆகாது: மற்றும், இவளைப் பலர் மணம்பேசுகின்றாராதலின், இவட்குப் பரிசமாக இவளதுதந்தை தாயரிடங் கொடுக்கவேண்டிய அருங்கலம்முதலிய பொருள்களை நீ விரைவிற்கொடுத்து முற்பட்டு இவளை மணம்புரிந்துகொள்ளவேண்டும்; அதற்கு இப்பொழுது சௌகரியப்படாதாயின், இவளை உடன்கொண்டு உன்ஊர்க்குச்சென்று, இடையூறின்றி இவளோடு கூடி வாழ்வாய்' என்று சொல்லித் தலைவனை உடன்போக்குக்குஉடன்படுத்துதல், இச்செய்யுளிற்குறித்த துறைப்பொருள்; இது 'தளர்வறிந்துரைத்தல்' எனவும், 'பாங்கி தலைவற்கு உடன் போக்கு உணர்த்துதல்' எனவுங் கூறப்படும். இதன் மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - உடன்போக்குணர்த்தல்.

இந்தக் களவுப்போக்கு எட்டுவகைவிவாகங்களுட் காந்தர்வ விவாகத்துக்குஉரிய முறைமை யாதலின், இது தக்கதேயாமென்றும், இது தகாதோமென்று ஒன்றும் ஆலோசிக்க வேண்டுவதில்லை யென்றுங் கூறுவாள், 'இதுவும் கலைமறையோர்திருத்திற்று ஒருமணம்' என்றாள்.

(இவ்விவாகம், பின்பு தந்தைதாயர்முதலிய பெரியோர்களால் அங்கீகரிக்கப்படுமென்க; "காந்தர்வமென்னும் விவாகத்தாற் பல இராசவிருடிகன்னிகைகள் மணஞ்செய்யப்பட்டனராகவும், அவர்கள் தந்தைதாயரால் ஆமோதிக்கப்பட்டனராகவுங் கேள்விக்கு வருகிறார்கள்" என்ற வடமொழிச் சாகுந்தளநாடகமும், "காந்தர்ப்பமென்பதுண்டாற் காதலிற்கலந்தசிந்தை, மாந்தர்க்கும் மடந்தைமார்க்கும் மறைகளேவகுத்தகூட்டம், ஏந்தற் பொற்றோளிஞ யிஃதியைந்தபி னெனக்குமூத்த, வேந்தர்க்கும் விரும்பிற்றாகும்" என்ற கம்பராமாயணமுங் காண்க.) தந்தைதமர்களின் உடன்பாடு காந்தர்வவிவாகத்துக்கு வேண்டுவதில்லை யென்றும், காதலிருவர் கருத்து ஒருமித்துத் தம்மிற்சேர்தலே அதனிலக்கணமாதலால் அங்ஙனஞ் சேர்ந்தவிடத்துப் பெரியோர் சம்மதித்துக் கொண்டாடுவார்களென்றும் உணர்த்தியவாறு. சுபத்திரை விஷயமாகக் கண்ணன் அருச்சுனனை நோக்கி "அடிகள் திருவுளத்தெண்ணமெம்மனோர்களறியினிசையலர்பலரிங்கறிவுறுமற்,கடியயர்வுற்றும் பதிகொண் டடைக வென்றுங் காவலர்க்குக் கடனென்றுங் கசியக் கூறி" றற்போல, இப்பாங்கியும் தலைவனுக்குக் கூறின

ளென்க. கந்தர்வ வழக்க மெனப்படுகிற களவொழுக்கத்தின் பகுதிகளுள் உடன்போக்கும் ஒன்றுதலுணர்க. "கொடுப் போரின்றியுங் கரணமுண்டே, புணர்ந்துடன்போகிய காலை யான" என்பது தொல்காப்பியம். சாஸ்திரங்களிற் சொல்லப் பட்ட எட்டுவகைவிவாகங்களாவன -பிராம்மம், பிராஜாபத்தியம், ஆர்ஷம், தைவம், காந்தர்வம், ஆசுரம், ராக்ஷஸம், பைசாசம் என இவை. இவற்றுள், பிராம்மமாவது - ஒத்தகோத்திரத்தானும் உரியகால மளவும் பிரமசரியவிரதம் அநுட்டித்தவனை அழைத்து உபசரித்துக் கன்னிகையை அலங்கரித்து அவனுக்குத் தானமாகக் கொடுப்பது; இதற்கு 'அறநிலை' என்றும் பெயர். பிராஜாபத்திய மாவது-மகட்கோடற்குஉரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டி தம்மகட்குஈந்து அவளைக் கொடுப்பது; இதற்கு 'ஒப்பு' என்றும் பெயர். 'மைத்துனகோத்திரத்தான் மகள் வேண்டிச் சென்றால் மறுது மனமொத்துக் கொடுப்பது' என்றும், 'ஒப்பஇவர் களிருவரும் ப்ரஜோத்பாதநாதிரூபமான தர்மங்களை அநுஷ்டிக்கக் கடவர் என்று வாக்காலே அறுதியிட்டுச்சொல்லி அக்நிகார்யத்தை யும் தானே அநுஷ்டித்துக் கந்யகையை அலங்கரித்துக்கொடுத்தல்' என்றும் இதற்கு இலக்கணங் கூறுதலு முண்டு. ஆர்ஷமாவது - பொற்கோட்டுப்பொற்குளம்பினவாக அலங்கரிக்கப்பட்ட பசு எருதுகளினிடையே கன்னிகையை அலங்கரித்து நிறுத்தி 'நீரும் இவைபோற் பொலிவுற்று வாழ்வீர்' என்றுசொல்லி அவற் றுடன் கன்னிகையைத் தக்கஒருவனுக்குக் கொடுப்பது; இதற்கு 'பொருள்கோள்' என்றும் பெயர். தைவமாவது - யாகத்தில் ருத்விக்காயிருந்து அதனை நடத்திவைத்தவரில் ஒருவனுக்கு அந்த யாகாக்கினியின் முன்னிலையிலே கன்னிகையை அலங்கரித்துத் தக்ஷிணையாகக் கொடுத்தல்; இது, 'தெய்வம்' எனப்படும். காந்தர்வமாவது - கந்தர்வ குமாரரும் கன்னியரும் நல்வினைப் பயனால் தனியிடத்துச் சந்தித்து ஒருவரையொருவர் காதலித்துப் பிறர்கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி இயைதல்போல, உருவுந் திருவுங் குலனுங் குணனும் அன்பும் முதலியவற்றால் தம்முள்ஒப்பு மையுடையராய்த் தலைவனும் தலைமகளும் பிறர்கொடுப்பவும் அடுப் பவு மின்றித் தாமே நல்வினைவசத்தால் வேட்கைமிகுதியாற் கூடுகை; இதற்கு 'யாழோர்கூட்டம்' என்றும் பெயர். ஆசுர மாவது - வரன் தானே கன்னிகைக்கு ஆபரணம் பூட்டி இயைந் தவளவு தந்தைதன்னையர்க்கும் பொருள்கொடுத்து மணஞ் செய்து கொள்ளுதல்; இதற்கு 'அரும்பொருள்வினை' என்றும் பெயர். 'கொல்லேறுதழுவியவன் இவளைப்பெறுவன், வில்வளைத்து நாணே ற்றியவன் இவளைப்பெறுவன், இயந்திரப்பொறியிலக்கை யெய் தவன் இவளைப்பெறுவன், சுயம்வரத்தில் மாலை சூட்டப்பட்டவ இவளைப்பெறுவன்' என இவ்வாறு தந்தைதன்னையர் சொல்ல அங்ங னம் ஒருவன் செய்துநிறைவேற்றி மணம்புரிந்து கொள்ளுதலும் இதன் இலக்கணமாம். ராக்ஷஸமாவது - உறவினரை உபேக்ஷித்து தலைவியின் காதலையும் எதிர்பாராது அவளை வலிதிற் கைக்கொள் வது; இது, 'இராக்கதம்' எனப்படும். பைசாசமாவது - தன்னினும் மூத்தவளையாவது மதுபானத்தால் மயங்கியவளையாவது துயின்ற வளையாவது இரகசியத்திற்கூடுகையும், இழிந்தவளை மணஞ்செய்

தலும், ஆடைமாறுதலும் பிறவுமாம்: இதற்கு 'பேய்நிலை' என்றும் பெயர். மற்றும் இவ்விவாகங்களின் இலக்கணவிரிவை, ஸ்மிருதிக ளெனப்படுகிற வடமொழித் தர்மசாஸ்திரங்கள் முதலிய பரந்த நூல்களுட்கண்டுகொள்க. கலை மறையோர் - கலைஞானத்திற் கை தேர்ந்த அந்தணர். மறையோர் - வேதியர், வைதிகர். இந்த எண் வகை மணமும் வேதத்திற் கூறப்பட்டு வேதவிதிப்படி அநுஷ்டிக் கும் ஆன்றோரால் அங்கீகரிக்கப்பெற்றனவுமா மென்பாள், 'கலை மறையோர் திருத்திற்று' என்றாள். "அறநிலை ஒப்பே பொருள் கோள் தெய்வம், யாழோர்கூட்டம் அரும் பொருள்வினையே, இராக்கதம் பேய்நிலை யென்று கூறிய, மறையோர் மன்றலெட் டிவை அவற்றுள், துறையமைநல்யாழ்ப் புலமையோர்புணர்ப்புப், பொருண்மை யென்மனார் புலமையோரே," "அன்பினைந்திணைக் களவெனப்படுவது, அந்தணரருமறை மன்றலெட்டினுட்,கந்தருவ வழக்க மென்மனார் புலவர்," "மறையோர்தேஎத்து மன்றலெட் டனுள், துறையமைநல்யாழ்த் துணைமையோரியல்பே," "அதிர்ப் பில் பைம்பூணரும் ஆடவரும் தம்முள், எதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப—கதிர்ப்பொன்யாழ், முந்திருவர் கண்ட முனிவறு தண் காட்சிக், கந்திருவர் கொண்ட கலப்பு" என்றவை இங்கு அறியத் தக்கன.

இனி, 'இதுவும் கலைமறையோர்திருத்திற்றுஒருமணம்'-இது வோ இன்பக்கலைகளையுணர்ந்த அந்தணர்களாற் சிறப்பித்துக் கூறப்படுகிற ஒப்பற்ற மணம்என்றுங் கொள்ளலாம். அன்பு குணம் கல்வி உரு திரு முதலியவற்றிற் சிறந்ததலைவன்தலைவியர் அநுட்டிக்கும் இந்தமணம் இன்பச்சுவைமயமாய்க் கற்புக்கும் முத லாகையாற் சிறப்பதென்று பலர் கொண்டாடிப் பேசுதலால், இங்ஙனங் கூறப்பட்டதென்க. களவொழுக்கத்தில் நாள் தோறும்நேர்கிற பல இடையீடுகளும் அவற்றாலாகும் மதிமயக் கமும் இனி இல்லையாக இடையூறின்றிக்கூடிவாழலா மென்பாள், 'தீரும்துன்மயல்' என்றாள். மயல் - வியாமோகம். ஏகும், கூடுமின் - ஏவற்பன்மைகள்; தலைவனைத் தோழி உயர்த்திக் கூறுதலால் வந்தன. 'ஏகும்' என்பதைப் பெயரெச்சமாகக்கொண்டு 'இது' என்பதனோடு இயைத்தலும் ஒன்று. 'குருகூர்சென்று கூடுமின்' என்றது-நீவிரிருவரும்சௌக்கியமாகத் திருக்குருகூர்க்குப் போய்ச் சேர்ந்து கூடிவாழ்வீராக என்று தோழி தலைவியையும் உளப்படுத் தித் தலைவனைவாழ்த்தியதாகவும் பொருள்படும். கயல் நீரைப் பிரிந்து வாழாதவாறுபோல இவள் நின்னைப்பிரிந்துவாழா ளாத லால், நீ உடன்கொண்டு போகாயாகில் இறந்துபடுவள்: அங்ஙன மாகாதபடி இவள்பக்கல் அருள்வைத்து இவளை உடன்கொண்டு போதல்வேண்டும்' என்று இறந்துபாடு உரைத்து உடன்போக்கு வற்புறுத்துதல் தோன்ற 'கருத்திற் கருணைவைத்து ஏகும்' என் றும், 'இவளிடத்து என்றும் நின் அருள் திரியாமற் பாதுகாப்பாய்' என்று ஓம்படுத்து உரைத்தலும் 'நீவிர் திருவொடுசென்று நும்பதி யிடைச் சேர்வீராமின்' என்று வாழ்த்துக் கூறலும் தோன்ற 'சென்று கூடுமின்' என்றுங் கூறினளென்க.

முருந்து - வெண்மையான அடிக்குருத்து; "முருந்தே முதலிற் செறிவெண் குருத்தே" என்றார் திவாகரத்திலும், பிங்கலந்தையிலும். அது 'முருத்து' என மென்றொடர் வன்றொடராயிற்று; இன்-சாரியை. செருந்து எனினும், செருந்தி எனினும் ஒக்கும். மதுரைக் காஞ்சியில் "களிறுமாய் செருந்தியோடு கண்பமன்றார்தர" (172) என்றவிடத்து, நச்சினார்க்கினியர், 'செருந்தி' என்பதற்கு - 'வாட்கோரை' என்றும், 'நெட்டிக்கோரையுமாம்' என்றும் பொருளெழுதியிருக்கின்றனர். சந்திரனிடத்துள்ள களங்கத்தை முயலென்ப வாதலால், சந்திரன் 'முயற்கூடு' என்று ஒரு பெயர் பெறும்; முயலை அகத்துக்கொண்டதொரு கூடு போன்றதென்க: ("உடுவேந்தன் பிறை முயற்கூடு பசுங்கதிர், சந்திரன் திங்கள் சோமன் தன் பெயர்" என்ற பிங்கலந்தையையும். "சிதைவிலா முயலின்கூடு பசுங்கதிர்த்தேவென்றெல்லாம், புதியசந்திரன்" என்ற சூடாமணிநிகண்டையுங் காண்க.) தேனிறாலுக்குச் சந்திரன் வடிவில் உவமம்; "கொம்பினிறால் வாங்க நிமிர் குஞ்சரக்கை **அம்புலிமேல்**, வெம்பியெழுங் கோளரவாம் வேங்கடமே" என்றார் பிறரும். நுமதுஊரில் நீர்வளமுள்ள நிலத்திலே செழித்துவளர்கிற கோரையைச் சார்ந்து சிறக்கிற கரும்பின் குருத்தில் தேனடைவைப்பதுபோல நீவிர் உயர்ந்த இக்குடும்பத்திலே என்னினுஞ்சிறந்து விளங்குகிற தலைவிபக்கல் தலையளி செய்யக்கடவீர் என உள்ளுறையுவமங் காண்க. நீர்வளமுள்ள நிலத்தை உயர்ந்த குடும்பமாகவும், அதிற்செழித்து வளர்கிற செருந்தியை அக்குடும்பத்தைச் சார்ந்து சிறக்கிற தோழியாகவும், செருந்தியின் அயலிலே சிறந்துவிளங்குகிற கரும்பைத் தோழியிற்சிறந்த தலைவியாகவும், தலைவிபக்கல் தலைவன்வைக்குந் தலையளியைத் தேனீவைக்குந் தேனிறலாகவுங் கொள்க.

இனி, செருந்து - செருந்திமரம் என்றுவைத்து, அயல் ஏய் இவளோடு என்றுபிரித்து, நீர்வளத்தால் நிறைந்த முருந்துகளையுடைய செருந்திமரத்தின் அருகிலே பொருந்திய இவளுடனே யென்று பொருள்கொண்டு, 'முன்பு இரவுக்குறியில் வந்து இவளை எதிர்ப்பட்ட இடமாகிய செருந்திமரத்தின்கீழே வந்துநில்: இன்றைநள்ளிரவில் இவளை அங்குக்கொண்டு சேர்ப்பேன்; இனிது அழைத்துக்கொண்டு செல்லலாம்' என்று குறியிடங்கூறல் குறிப்பால் நிகழ இந்த அடைமொழியைத் தலைவிக்குக்கொடுத்தனளென்னலுமாம்;முருந்து-கொழுந்து, அல்லது அரும்பு: இலக்கணை.

திருத்திற்று-திருந்திற்று என்பதன் பிறவினை. இங்கே, முயல் முயற்கூட்டுக்கும், கோல்தேனையுணர்த்தும் 'பிரசம்' என்பது - தேன்கூட்டுக்கும் தானியாகுபெயர்.

கம்பநாடர்க்குத் தமது நிரந்தராநுபவத்தைத் தராமல் இடையிட்டுக் காட்சிதந்துநின்ற நம்மாழ்வாரை நோக்கி, கம்பநாடரது அன்பர்கள், 'இனிப்பிரிவுத்துயரில்லாது நிரந்தராநுபவங்கிடைக்குமாறு திருவுள்ளத்திற் பூரணகிருபைவைத்து இவரைத் தேவரீர் திருநாட்டுக்கு உடன்கொண்டு செல்வீராக' என்று வேண்டுதல், இதற்கு உள்ளுறைபொருள். ஜீவாத்மாவைப் பரமாத்மா தன்பக்

கல் சேர்த்துக்கொள்ளுதலை வேதசாஸ்திரங்களில் வல்ல வைதிகரான ஆன்றோர் ஒருவிவாகமென்பராதலால், 'இதுவும்'கலைமறையோர்திருத்திற்று ஒருமணம்' எனப்பட்டது; (இதன்விவரம், பிற்காலத்தில் வேதாந்தி நஞ்சீயர் தாம் பட்டர் நல்லருளால் அறிந்து அருளிச்செய்த 'ஆத்மவிவாஹம்' என்ற ரகசியக்கிரந்தத்திற் பரக்கக்காணலாம்). ''நானடிமைகொள்ள விடாய்நானுனேன் எம்பெருமான், தானடிமைகொள்ளவிடாய்தானுனன் - ஆனதற்பின், வெள்ளக்குளத்தே விடாய் இருவரும் தணிந்தோம், உள்ளக்குளத்தேனையொத்து''என்றபடி,பரமாத்மாவைச் சேர்தலில்ஆசையும் சேராததில் வருத்தமும் விவேகியான ஜீவனுக்கு உண்டாதல் போல, ஜீவாத்மா தன்பக்கல் வந்துசேராததில் வருத்தமும் அதனைச்சேர்த்துக்கொள்ளுதலில் ஆசையும் பரமகாருணிகனான பகவானுக்கும் உண்டாதலால், இருவர்க்குமாகப் பொதுப்பட 'தீரும் தினமயல்' எனப்பட்டது. நீர்மையால் நிறைந்த ஞானக்கொழுந்தையுடைய நித்தியமுக்தர்களினிடையே ஸர்வரஸனான எம்பெருமான் பூர்ணசந்திரன்போன்று இனிது வீற்றிருக்குந் தேசமென்பது, 'நீரில் நிறைமுருத்திற் செருந்தயலே முயற்கரும்பின் குருத்திற்பிரசம்வைக்குங் குருகூர்' என்பதன் உள்ளுறைபொருள். ஸர்வேசுவரனைத் திருமங்கையாழ்வார் ''கரும்பினிடைத்தேறல்'' என்றும், ''மாமதி'' என்றுங் கூறியது, இங்கு நோக்கத்தக்கது. பிறவுங் கண்டுகொள்க. (85)

86. **கூட்டங்கடோறுங்குருகைப்பிரான்குணங்கூறுமன்ப**
ரீட்டங்கடோறுமிருக்கப்பெற்றேமிருந்தெம்முடைய
நாட்டங்கடோறும்புனல்வந்துநாலப்பெற்றேமினிமேல்
வீட்டெங்கடோழர்க்கென்றேபெரும்போகம்விளைகின்றதே.

(இ - ள்.) கூட்டங்கள் தோறும் - தாம் கூடும்பொழுதெல்லாம், குருகைப்பிரான் குணம் கூறும் - திருக்குருகூரிலவதரித்த உபகாரகரான நம்மாழ்வாருடைய திவ்வியகுணங்களைச் சொல்லிப் புகழ்கிற, அன்பர் - அடியார்களுடைய, ஈட்டங்கள் தோறும் - கூட்டங்களிலெல்லாம், இருக்க பெற்றேம் - கூடியிருக்கப்பெற்றோம்; இருந்து-அங்ஙனங் கூடியிருந்து, எம்முடைய நாட்டங்கள் தோறும் புனல் வந்து நால பெற்றேம் - (அன்புமிகுதியால்) எங்கள் இரண்டு கண்களிலும் ஆனந்தக்கண்ணீர் பெருகிவழியப்பெற்றோம்; இனிமேல் - நாங்கள் இங்ஙனம் ஆனபின்பு,—வீடு - பரமபதத்தில், எங்கள்தோழர்க்கு என்றே பெரும் போகம் விளைகின்றது - எங்களைச் சார்ந்தவர்கட்காகவே பேரின்பநலம் நிகழாநின்றது; (எ - று.)

தாம் கூடுமிடத்தெல்லாம் நம்மாழ்வாருடைய ஶமம் தமம் முதலிய திருக்கல்யாணகுணங்களைக் கொண்டாடித் துதிக்கிற அடியார்களுடைய குழாங்களிலெல்லாங் கூடியிருக்கவும், அங்கு இருந்து பக்திமிகுதியா லனுபவிக்கும் ஆனந்தாதிசயத்தாற் கண்ணீர் பெருகவும் பெற்றோம்; ஆதலால், இனி எங்கட்கேயன்றி எங்களைச் சார்ந்தவர்க்கும் பரமபதத்திற் பேரின்பநலம் வாய்ப்பது திண்ணமென்பதாம். 'வீட்டெங்கள் தோழர்க்கென்றே பெரும்

போகம் விளைகின்றதே' என்பதை, "தமரங்களைவர்க்கு மெஞ்ஞான்று நரகில்லையே" என்றாற்போலக் கொள்க. (தந்திபாண்டனுக்காக அவனுக்குவேண்டிய இருபத்தெட்டுமனையிலுள்ளார்க்கும் அவனது தயிர்த்தாழிக்கும், கண்டாகர்ணனுக்காக அவன் தம்பியான தந்தகனுக்கும் பரமபதம் கிடைத்தமை காண்க.) "வாய்க்குங் குருகைத் திருவீதி யெச்சிலைவாரியுண்ட, நாய்க்கும் பரமபதமளித்தார்" ஆழ்வார் ஆதலால், அவர்திறத்தில் இங்ஙனஞ் சொல்லத் தகும். 'இவர்கள் தோழர்க்கென்றே வீட்டுலகத்திற் பெரும்போகம் விளைகின்றது' எனவே, இவர்கட்கு அங்குப் பெரும்போகம் விளைதல் சொல்லவேண்டாதாயிற்று. அருத்தாபத்தியாற் பெறப்படுதலின், இவர்கள் தாங்கள் "விண்ணுளாரிலுஞ் சீரியர்" என்பது தொனிக்கின்றதென்றுங் கொள்ளலாம். 'பெற்றேம்', 'எங்கள்' என்ற பன்மை, மற்றும் பல அடியார்களையும் உளப்படுத்தியது.

வீடு 'வீட்டு' என நெடிற்றொடர்க்குற்றுகரம் டகரஒற்று இரட்டிற்று. (86)

[பகற்குறியில் தலைமகனுடன் தலைமகளைக் கூட்டுவித்த தோழி, பின்பு தலைவன் சிறைப்புறமாக அவன் செவிப்படுமாறு தினையொடு வெறுத்து வரைவுகடாதல்.]

87. ***விளையாதொழியமருந்துமுண்டேயெம்வினைதினையின்***
கிளையாக்கிளரவிளைகின்றதாற்கிளையாம்பிறவித்
தளையாசழியத்தடுத்துத்தென்பாலைவழிதடுத்துக்
களையாசறத்தடுத்தாண்டான்குருகையிற்காப்புனமே.

(இ - ள்.) கிளை ஆம் - மேன்மேற்கிளைத்து வளருந்தன்மையதான, பிறவி - பிறப்புக்களினாலாகிற, தளை - பந்தத்தை, ஆசு அழிய - விரைவில் அழியும்படி, தடுத்து - போக்கி, தென் பாலை வழி தடுத்து-தென்திசையிலுள்ள பாலைநிலவழியையும் தவிர்த்து, களை - (வினைகளாகிய) களைகளை, ஆசு அற தடுத்து - முற்றும் அழியும்படி களைந்து, ஆண்டான் - (உயிர்களை) ஆட்கொண்டருளியவராகிய நம்மாழ்வாருடைய, குருகையின் - திருக்குருகூரைச் சார்ந்த, கா புனமே - (எம்மாற்) பாதுகாக்கப்படுதலையுடைய தினைக்கொல்லையே!—எம் வினை - எமது தீவினையே, தினையின் கிளையா - தினைப்பயிர்களாக முளைத்து வளர்ந்து, கிளர விளைகின்றது - நன்றாகக் கதிர்முற்றிப் போகின்றது; விளையாதொழிய - (இவ்வாறு) முற்றாமற் கதிர்பறிந்தபடியே யிருக்கும்படி செய்தற்கு, மருந்தும் உண்டே - (ஏதேனும்) மருந்தும் உளதோ? (சொல்வாயாக என்றபடி); (எ-று.)—ஆல் - ஈற்றசை; இரக்கமுமாம்.

இயற்கைப்புணர்ச்சியும் பாங்கற்கூட்டமும் பெற்றபின்பும் களவொழுக்கநெறியிலேயே நின்ற தலைவன் தலைவியின் காதற்பாங்கியை உணர்ந்து அவளை அனுசரித்துத் தன்குறைகூறி இரப்ப, அவன்கருத்துக்கு அரிதின் இசைந்த அப்பாங்கி, அத்தலைமகனுக்கு

ஒருகுறியிடங் கூறி, தாம் தினைப்புனங்காப்பதாகச் சொல்லி மனையிலுள்ளாரிடம் விடைபெற்று அந்த வியாஜத்தால் தலைமகளை அழைத்துவந்து குறியிடத்திற்கொண்டுசேர்த்து, அங்குத் தலைமகன் வந்து சந்தித்துத் தலைமகளுடன் சேருமாறு செய்விக்க, அத்தலைமகன் பின்னரும் அக்களவுநெறியையே வேண்டி நின்றானாக, அவனுக்கு அத்தோழி, 'இனி இவ்வாறு ஒழுகுவது தகுதியன்று' என்றும், 'விரைவில் இவளை வெளிப்படையாக மணஞ்செய்து கொள்ளுதலே தகுதி' என்றும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் எதிரில் நின்று பேசியும் முன்னிலைப் புறமொழியாகக்கூறியும் பலவாற்றான் உணர்த்துவள். இது, பாங்கியிற்கூட்டத்திலே பகற்குறியில் வரைவுகடாத லெனப் படும். (வரைவு வெளிப்படையாக மணஞ்செய்துகொள்ளுதல்: அதனை, கடாதல் - வற்புறுத்தி உணர்த்துதல்.)

கீழ்க்கூறியவாறு பகற்குறிவந்து ஒழுகுகின்ற தலைமகன் வழக்கப்படி ஒருநாள் சிறைப்புறமாக (சிறைப்புறம் - வேலிக்கு வெளி)க்குறியிடத்து வந்து நிற்க, தோழி, அவன் செவிப்படுமாறு, 'இத்தினைக்காவல் வியாஜமாக நாம் உன்னைச் சந்திக்கலா மென்று நினைந்து இதுவரையிலும் தினைகாத்துவந்தோம்: அத்தினை நன்றாகக் கதிர்முற்றிவிட்டதாதலால், எம்மவர் தினை கொய்து விடுவார்கள்: யாம் இன்று ஊர்க்குப் போய்விடுவோம்: இனி எமக் குத் தினைப்புனங்காவல் இல்லை யாதலால், நாம் இனி உன்னைச் சந்திக்க இயலாது' என்பது தோன்ற; தினைப்புனத்தைநோக்கி 'எம்மாற்பாதுகாக்கப்பட்டுவந்த புனமே! தலைவன்மேல்வைத்த விருப்பினால் தினைகாத்து மகிழ்ந்து நின்ற எங்கட்கு, அத்தினை எங்கள் தீவினையாய் வளர்ந்து விளைகின்றது; இதனை விளையாதபடி செய்ய வகையுண்டோ?' என்று தினையைவெறுத்துக்கூறுதல், இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட விஷயம். திருக்கோவையாரில் "பொருப்பன்விருப்பில், தினைவித்திக்காத்துச் சிறந்துநின்றே முக்குச்சென்று சென்று, வினைவித்திக் காத்து விளைவுண்டதாகி விளைந்ததுவே" என்றது, நோக்கத்தக்கது. இதன் மெய்ப்பாடு - அழுகை: பயன் - பகற்குறிவிலக்கல். தினைப்புனங்கூறியதனால், திணை குறிஞ்சியாயிற்று.

தினைவிதைத்தநாளில் இத்தினைக்காவல் வியாஜமாகத் தலைவனைச் சந்திக்கலாமென்று மகிழ்ந்து தினைக்காவற்கு உடன் பட்டன ராதலாலும், அத்தினை கதிர்முற்றிவிடவே கொய்து விடுவராதலின் இனிப் பாதுகாவலில்லையாகவே அவனைச்சந்திக்க இயலர் தாதலாலும், தினைவிளைந்ததைத் தங்கள் தீவினையே இங்ஙனம் விளைந்ததாக வெறுத்துக் கூறுவாள், 'எம்வினை தினை யின்கிளையாக்கிளர விளைகின்றது' என்றாள். பிரியச்செய்வதாகிய தீவினையே இங்ஙனம் தினைவடிவாய்வந்து விளைந்த தென்றா ளென்க. 'விளையாதொழிய மருந்தும் உண்டே' என்றது, இரக்கத் தாற் கூறிய வார்த்தை. கதிர்முற்றாதிருப்பின் இன்னமும் தாங்கள் அங்கே புனங்காத்திருக்கலா மென்பதுபற்றி, இங்ஙனங் கூறிய வாறு. 'எம்' என்ற பன்மை, தலைவியையும் உளப்படுத்தியது;

'என்' என்ற பாடத்துக்கு, தலைவியைத் தன்னில் அடக்கிக்கூறினளென்க. கா - காத்தல்; முதனிலைத் தொழிற்பெயர்; இங்கே செய்வினை செயப்பாட்டுவினைப் பொருளதாய், காக்கப்படுதலென்ற பொருளை யுணர்த்திற்று. காப் புனம் - காக்கப்படுதலையுடைய புனம் என இரண்டனுருபும் பயனுந்தொக்கதொகை. 'கார்ப் புனம்' என்ற பாடத்துக்கு - கரியபுனமென்க; (திருக்கோவையாரில் 'கார்ப்புனம்' என்றதற்கு - 'கரியபுனம்' என்றும், 'கார்காலத்துப்பொலியும் புனமெனினும் அமையும்' என்றும் உரையெழுதியிருக்கின்றனர் பேராசிரியர்.) ஏகாரம்மிக்கது, விளியுருபு.

தம்மைச் சார்ந்தவர்களை நரகவழிச் செல்லவேண்டாதபடி அவர்கள் கொடுவினைகளை முற்றத்தொலைத்து அவர்கட்கு இனிப் பிறப்புமில்லையாம்படி செய்தருள்கிற ஆழ்வார் என்பது, 'கிளையாம்பிறவித்தளையாசழியத்தடுத்துத் தென்பாலை வழிதடுத்துக்களையாசறத்தடுத்தாண்டான்' என்பதன் பொருள். "வினையின் வந்தது வினைக்குவிளைவாயது" என்றபடி பிறப்புக் காரணகாரியத் தொடர்ச்சியாய் மேன்மேல் வளர்ந்துவருதலால், 'கிளையாம் பிறவி' எனப்பட்டது. அது ஆன்மாவை வீடுபெறுதபடி பந்தப் படுத்துதலால், 'பிறவித் தளை' என்றார். ஆசு-விரைவு: வடசொல். விரைவில் அழிதலாவது - ஆழ்வாரைச் சரணமடைந்ததாகிய இப்பிறப்போடு முடிதல். தென்பாலைவழி - தென்திசையிலுள்ளதான நரகத்துக்குச் செல்லும் வழி. அக்கொடுவழியிலுள்ள அஸிபத்ரவனம்போன்ற வெப்புநிலம் 'பாலைவழி' எனப்பட்டது; பிறரும் "கோடில்தீக்கூற்றந், தொடுத்தாறு செல்லுஞ் சுரம்" என்றார். பாலை - நீரும்நிழலும் அற்ற கொடுஞ்சுரம். பயிர்செழித் தற்குத் தடையாய் அதனுடன்தோன்றிவளர்கிற புல் பூண்டு முதலிய களைபோல, உயிர் உயர்கதிபெறுதற்குத் தடையாய் அதனுடன் அநாதியாய் அமைந்து வளர்ந்துவருகின்ற கருமமென்பார், அதனை 'களை' என்றார்; உவமையாகுபெயர். ஆசறத் தடுத்தல்-வேரோடறும்படி களைந்தெடுத்து மீண்டும் உண்டாகாதபடிசெய்தல்; இங்கு, சஞ்சிதகருமமுழுட்படத் தொலைத்தல். ஆண்டான் - (எம்மை) ஆண்டவனெனினுமாம். களை ஆசு அற என்று பிரித்து, பேற்றுக்கு விரோதியான குற்றந் தீர என்று உரைப்பாருமுளர்.

ஆழ்வாரது காட்சிக்கு இடையூறுக இப்பிரபஞ்சத்திலே பலவாறு தீவினை விளைதலைக்குறித்து இரக்கங்கொண்ட கம்பநாடரது அன்பர்கள் அப்பிரபஞ்சத்தை முன்னிலைப்படுத்தி இரங்கிக்கூறுதல், இதற்கு உள்ளுறை பொருள். 'ஆழ்வாரது திருவவதாரஸ்தலமான திருக்குருகூரை அகத்துக் கொண்டதும் அவரதுபாதுகாவலுக்கு உட்பட்டதுமான உலகமே!' என்று இந்த லீலாவிபூதியை விளித்து, 'எமதுஊழ்வினை தினைப்பயிர்போலக் கிளைத்து நன்றாகப்புலிக்கத்தொடங்குகின்றது: இதனை ஒழித்தற்கு உபாயமும் உண்டோ?' என்று வினையை வெறுத்துக்கூறினரென்க. இவ்வார்த்தை செவியுறப்பெற்ற ஆழ்வார் கம்பநாடரை

இந்த லீலாவிபூதியினின்று திரிபாத்விபூதியாகிய பரமபதத்துக்குக் கொண்டுசென்று நிரந்தரானுபவந் தந்தருளவேண்டு மென்பது, இவர்களுத்தேசம்; பிறவுங் கண்டுகொள்க. (87)

[தலைவன் வறும்புனங்கண்டு வருந்தல்.]

88. புனம்பாழ்படுத்துப்புகழ்பாழ்படுத்ததல்லாற்புகுந்தென்
மனம்பாழ்படுத்தனைவாழ்தியன்றேவழுவாநரகத்
தினம்பாழ்படுத்தபிரான்சடகோனின்றுக்கலியின்
சினம்பாழ்படுத்தநின்றான்குன்றுசூழ்கின்றசெந்தினையே.

(இ - ள்.) வழுவா- (தீவினைசெய்தவர்கட்கு அவ்வினைப்பயனை அநுபவிக்கச்செய்தலில்) தவறாத, நரகத்து இனம் - நரகவகைகளை, பாழ்படுத்த - பாழாக்கிய [தமது அன்பர்கட்கு இல்லாதபடி செய்த], பிரான்-உபகாரகரும், இன்று கலியின் சினம் பாழ்படுத்த நின்றான் - துன்பஞ்செய்வதான கலியுகபுருஷனது கோபத்தையும் பாழாக்குமாறு நிலைகொண்டருளியவருமாகிய, சடகோபன் - நம்மாழ்வாருடைய, குன்று - (பொதிய) மலையை, சூழ்கின்ற - சார்ந்துவிளைந்த, செம் தினையே - சிவந்த தினையே!— (நீ), புனம் பாழ்படுத்து-(கதிர்கொய்துவிட்டதனாற்) கொல்லையைப் பாழாக்கி, புகழ் பாழ்படுத்தது அல்லால்- (நினது) கீர்த்தியையும் பாழாக்கியதல்லாமல், என் மனம் புகுந்து பாழ்படுத்தனை - என்மனத்தைச் சார்ந்து (அதனையும்) பாழாக்கினாய்; வாழ்தி அன்றே - (இவ்வளவு கொடுமைசெய்த நீ) வாழ்வாயன்றோ? (எ - று.)

கீழ்க்கூறியவாறு பகற்குறிக்கு உபயோகமாகத் தினைப்புனங் காத்து நின்ற தலைமகளும் தோழியும், அத்தினை கதிர்முற்றியிட்டதனாற் கொய்து விடப்பட்டமைபற்றிப் புனங்காவலின்றி அவ்விடத்தைவிட்டுத் தம்மனையிடஞ் சேர்ந்தனராக, வழக்கம்போல மறுநாள் தலைமகன் அக்குறியிடத்து வந்துநின்று தலைவியில்லாத தினைக்கொல்லையை நோக்கி வருந்தி அதன் பொலிவழிவுகூறுதல், இச்செய்யுளிற்குறிக்கப்பட்ட விஷயம். "மென்புனம் விடுத்து மெல்லியல்செல்ல, மின்பொலி வேலோன் மெலிவுற்றது" என இதன் இலக்கணங் காண்க. இத்துறையை 'வறும்புனம்நோக்கி மன்னவன் மறுகல்' என்றும், 'தலைவன் வறுங்களம்நாடி மறுகல்' என்றும் வழங்குதலுமுண்டு. இதன் மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றாமை நீங்குதல்.

(பகற்குறியிலே கீழ்ச்செய்யுள் - 'ஒருசார்பகற்குறி' யின் பாலும், இச்செய்யுள் - 'பகற்குறியிடையீட்' டின்பாலும் படும். 'ஒருசார்பகற்குறியாவது- ஒருகூற்றுப்பகற்குறி; அது யாதெனில், தலைவன் மற்றைநாள் தன்வேட்கை மிகுதியாற் பகற்குறியிடத்து வந்துநிற்க, தலைவியைப் பாங்கி குறியிடத்துச் செலுத்தாது மறுத்துக்கூற, தலைவன் வருந்திப்போதலாதலால், பகற்குறியாகாது ஒருசார்பகற்குறியாயிற்று' என்பர். 'இரங்கல் வன்புறை இற்செறிப்புணர்த்த லென்று, ஒருங்கு மூவகைத் தொருசார் பகற்குறி" என்று கூறப்பட்ட ஒருசார்பகற்குறியின்வகை

மூன்றனுள், கீழ்ச்செய்யுள் இற்செறிப்புணர்த்தற்கு உரியது. பகற்குறியிடையீடாவது-பகற்குறிக்கண்வந்த தலைமகன் அவளது சேர்க்கை பெறாது இடையீடுபட்டுப்போதல். "விலக்கல் சேறல் கலக்க மென்றாங்கு, இகப்பின்மூவகைத்தே பகற்குறியிடையீடு" எனப்பட்ட பகற்குறியிடையீட்டின்வகை மூன்றனுள் இச்செய்யுள் - கலக்கத்துக்கு உரியது என்று உணர்க.)

தினைக்கதிர் கொய்யப்பட்டு வெறுந்தட்டை மாத்திரமாய் நின்ற புனம் பொலிவிழத்தலாலும், அப்புனத்துக்கு அணியாக வழக்கமாய்அங்குநிற்குந்தன் உயிர்த்தலைவி இன்றுஅங்குஇல்லாமை பற்றி அப்புனம் பொலிவிழந்ததாக இவனுக்குத்தோன்றுதலாலும், 'புனம்பாழ்படுத்து' என்றான்; ("மதுவினிற் கைப்பு வைத்தாலொத்தவா மற்றிவ்வான்புனமே," "நறுங்களவன்ன குழல்நீங்க மங்கலநாணிழந்த, வறுங்களமென்ன விருந்ததந்தோ இம்மணியிதணே" என்றார் பிறரும்.) இப்படி புனம் இருவகையாலும் பொலிவிழந்ததற்குக் காரணம் தினையின்முதிர்வே யாதலால், புனம்பாழ்படுத்தற்குத் தினை கருத்தாவாக்கப்பட்டது. 'புகழ்பாழ்படுத்தது' என்றது - தன்னைத் தலைவி சந்தித்தற்கு ஒரு வியாஜமாக இருந்து உபகரித்ததனாற் பெற்ற புகழை இழந்து விட்டது என்றபடி. தினையுடன் காதலியையுங் காணலாமென்று மனத்துக் காதல்கொண்டு தான்வந்தவிடத்து, அத்தினை தானும் இன்றித் தலைவியையுங் கொண்டு சென்று தன்மனத்து ஆசையைப் பயன்பெறாது வீண்படச்செய்ததனால், 'புகுந்து என்மனம் பாழ் படுத்தனை' என்றான். புகுந்து - விளைந்தநீ இங்கு இராமல் மனையிடத்தே தலைவியுடன்சென்று புகுந்து எனினும் அமையும். 'வாழ்தியன்றே' என்றது, நினக்கு ஒருதீங்குஞ்செய்யாத எனக்கு இவ்வளவு பெருந்தீங்குசெய்த நீ இனிது வாழமாட்டாய் என்றவைதற்குறிப்பு.'அன்றே'என்பதை அசையென்றுகொண்டு,வாழ்தி - வாழ்வாய் என்று பொருள்கொண்டாலும், கருத்து இதுவே. இனி, நீ தலைவியுடன் மனையிலே இனிதுவாழ்வையன்றோ எனினுமாம்; தனக்கு நேர்ந்த தலைவியின் பிரிவு அதுக்கு இல்லையென்று அழுக்காறுதோன்றக்கூறியது.

"எறியுநீர்வெறிகொள்வேலை மாநிலத்துயிர்களெல்லாம், வெறிகொள் பூந்துளவமாலைவிண்ணவர்கோனையேத்த, அறிவிலா மனிசரெல்லாம் அரங்கமென்றழைப்பராகிற், பொறியில்வாழ் நரகமெல்லாம் புல்லெழுந்தொழியுமன்றே" என்றபடி எல்லாவுயிர்களும் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டு உயர்கதி சேர்தலேயன்றி நரகம்புகுதலில்லாதபடி ஆழ்வார் அனைவர்க்கும் நல்லுபதேசஞ் செய்தருளினராதலால், 'பாவிகட்குத்தவறாத நரகவர்க்கத்தைப் பாழாக்கிய தலைவர்' எனப்பட்டார். கலி - கலியுகபுருஷன்; சனியின் அம்சமானவன். இந்தயுகத்துக்கு அதிதேவதையான இவன் பிராணிகட்குப்பாபசிந்தையைவிளைத்து அவை அதுசெய்து துயருறும்படி பண்ணுபவனாதலால், 'இன்னாக்கலி' எனப்பட்டான். அவனதுசினமாவது - உயிர்களைத்தீவழிச்செலுத்திவருத்தும் முயற்சி. ("நலியும்நரகமும்நைந்த நமனுக்குஇங்குயாதொன்று

மில்லை,கலியும்கெடும் கண்டுகொண்மின்", "திரியுங்கலியுகம்நீங்கித் தேவர்கள் தாமும்புகுந்து,பெரியகிதயுகம்பற்றிப்பேரின்பவெள்ளம் பெருக", "ஒக்கத்தொழுகிற்றிராகிற்கலியுகமொன்றுமில்லையே", "கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கு அருள்செய்யும், மலியுஞ்சுடரொளி மூர்த்தி மாயப்பிரான்கண்ணன்" என்றபடி) பகவத்ருசிவிரோதியான கலியுகத்தன்மை போய்க் கிருதயுகத்தன்மையான வைஷ்ணவதர்மமே எங்கும் நடக்கும்படி ஆழ்வார் தமது உபதேசத்தால் உலகில் திருந்தாதார் தம்மையுந்திருத்தியருளினராதலால், 'கலியின்சினம்பாழ்படுத்தபிரான்' என்றார்; கலிகால தோஷத்தைப் போக்கிவிட்டவரென்றபடி. இப்படி ஆழ்வார் இவ்வுலகத்தில் தாம் மனிதவுடம்புடன் வாழ்ந்திருந்தபோது செய்ததே யல்லாமல், பிற்காலத்திலும் விக்கிரகரூபத்தில் அர்ச்சாவதாரமாக ஆவிர்ப்பவித்துத் தம்மைச் சார்ந்தவர்க்கு அருள்செய்து வருகிற இயல்பு தோன்ற, கலியின்சினம்பாழ்படுத்தி நின்றான் என்னாது 'கலியின்சினம் பாழ்படுத்தநின்றான்' என்றார். அவரது திருவவதாரம் முடிந்தாலும், அவரது உபதேசரூபமான திவ்வியப் பிரபந்தங்கள் இவ்வுலகில் நிலைநின்று பலரைக் கலிதோஷத்தினின்று மீட்டலும்,இங்ஙனங் கூறக்காரணமாம். ஆழ்வார் திருவவதரித்த திருநாடாகிய பாண்டியநாட்டில் தலைமைபெற்ற மலையாதலாலும், அவரது திருவவதாரஸ்தலமான திருக்குருகூரைச் சார்ந்து பெருகுகிற பொருநையாற்றுக்கு உற்பத்திஸ்தானமாதலாலும், 'சடகோபன்குன்று' என்றது, பொதியமலையெனக் கொள்ளப்பட்டது; முன் "பொதியந் தரு நதியங் குருகூரெந்தை" என்றதுங் காண்க. தினை - ஒருவகைத்தானியம். செந்தினை -செவ்விய தினையுமாம்.

கம்பநாடர் நம்மாழ்வாரிடத்திற்போலவே அவரடியாரான பாகவதர்கள் பக்கலிலும் ஆராதகாதல்கொண்டு அவர்களையும் தமக்குத்தலைவராகப் பாவித்து அடிமைபூண, அப்பாகவதர்களும் ஆழ்வார்போலவே கம்பநாடரிடத்து அன்புவைத்து அவருடன் கூடிக் குலாவிக்களித்துவருகிற காலத்திலே, த்ரிகுணாத்மகமான பிரபஞ்சமாதலால் தமோகுணம் அழிந்தபின்பும் தான் முற்றும் அழியாது சிறிது மிச்சப்பட்டு நின்ற ரஜோகுணகாரியமான ராகம் [அவா] தலையெடுத்துக் கம்பநாடரைத் தங்களோடு சேராதபடி சம்சார பாசபந்தத்துக்கு உள்ளாகித் தங்கள் சேர்க்கைக்கு இடையூறுசெய்ய, அந்தராகத்தைப் பாகவதர்கள் பழித்து உரைத்தல், இதற்கு உள்ளுறைபொருள். இங்ஙனம், தலைவன்பேச்சாலே தமதுநிலைமையை வெளியிடுகின்றனர் கம்பநாடரென்க. 'எனக்கு இதுவேண்டும்' என்று ஒருபொருளினிடத்து முதலில் உண்டாகும் அவாவாகிய அந்த ராகமானது, செந்நிறகுணமுடையதெனப் படுகிற ரஜோகுணத்தின் காரியமாய்த் தானும் செந்நிறமுடையதெனப்படுதலால், 'செந்தினை' எனப்பட்டது. தினை - மிக்க சிறுமைக்கு எடுத்துக்காட்டப்படுவதோர் அளவையாதலை, "தினைத்துணை நன்றி செயினும்," "தினையனைத்தே யாயினுஞ் செய்தநன்றுண்டால்" என்ற இடங்களிற் காண்க. ராகம் சூக்ஷ்மபதார்த்தமாதலாலும், இங்குச் சிறிதே சேடித்து நின்றதனாலும், தொடக்

கத்திற் சிறியதே யாதலாலும், அதனைத் திணையென்றல் சாலும். செம் திணையே-செந்நிறமான ராகமே! என்று விளி. அந்த ராகம், சுத்த ஸத்வமயராய் வைராக்கியம்மிக்க ஆழ்வாரது குணமென்னுங்குன்றின் அகத்துச் சாரமாட்டாது புறத்தேநிற்றல் தோன்ற, அதற்கு 'சடகோபன் குன்று சூழ்கின்ற' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. புனம் - போகஸ்தானம்; இங்கே, பாகவதர்கள் தாங்களும் கம்பநாடருமாக "தூராதமனக்காதல் தொண்டர் தங்கள்குழாங்குழுமித் திருப்புகழ்கள் பலவும்பாடி, ஆராத மனக்களிப்போடு" என்றபடி கூடிக்குலாவிக்களித்திருந்த இடம். 'அதனைப்பாழ்படுத்து' என்றது, அந்த ராகம் கம்பநாடரை அங்குச் சேரவொட்டாது இடையீடுபடுத்தலால். அந்த அவாவானது சுருங்கியிருந்த நிலையிலே பாகவத சகவாசத்துக்கு இடையூறுகாது முதிர்ந்து அகத்திற் சேர்ந்தவளவில் இடையூறுகின்றது பற்றி, 'புகழ்பாழ்படுத்தது' என்றனரென்க. மற்றவையும் இங்ஙனமே நுட்பமாக நோக்கிக்கொள்க. இப்பாசுரத்துக்கு ஸ்வாபதேசம் வேறுவகை கூறுவராயினும் பொருந்துமாற்றான் உய்த்துஉணர்ந்து கொள்க. (88)

[பிரிவாற்றாத தலைவி, அன்றிலின் குரல்கேட்டு அயர்தல்.]

89. *திணையொன்றியகுற்றமற்றுணர்ந்தோர்மகிழின்றிறத்தின்*
மனையொன்றியகொடியாடுயின்றுலுந்தன்வாயடங்கா
வினையொன்றியவன்றிலுக்கிடங்காட்டவிரிதலைய
பனையன்றியுமுளதோதமியேற்குப்பழம்பகையே.

(இ-ள்.) மனை ஒன்றிய கொடியாள் துயின்றுலும் - வீட்டின் அகத்தே பொருந்திய கொடியவளான தாய் (வாயடங்கித்) தூங்கினாலும், தன்வாய் அடங்கா - (தான் தூக்கமின்றித்) தன்வாய் திறந்து கத்துகிற, வினை ஒன்றிய அன்றிலுக்கு - கொடுமை பொருந்திய அன்றிற்பறவைக்கு, இடம் காட்ட - (தங்க) இடங் கொடுக்குமாறு, விரி தலைய - விரிந்த தலையையுடைய, பனை அன்றியும் - பனைமர மல்லாமலும்,—தமியேற்கு - (தலைவரைப் பிரிந்து) தனியளாயிருக்கிற எனக்கு,—திணை ஒன்றிய குற்றம் அற்று உணர்ந்தோர் மகிழின் திறத்தின் - திணையளவுகுற்றமுமில்லாமல் (மெய்ப்பொருளை) உணர்ந்தவரான தலைவரது மகிழமலர்மாலை விஷயமாகக்கொண்ட ஆசையினாலே, பழம் பகை உளதோ - பழமையானபகை (வேறொன்று) உளதோ? [இல்லையென்றபடி]! (எ - று.)

கீழ் "அன்றாதஅன்றிலையும் அன்றுவித்து" என்றபடி அன்றிற்பறவை இரவில் இணைபிரிந்துகத்துகிற குரல் காமோத்தீபகமாய்ப் பிரிந்தாரைவருத்து மாதலால், தலைவனைப்பிரிந்து வருந்துகிறநிலையில் அக்குரல்கேட்டு ஆற்றாதவளான தலைவி, அவ்வன்றில் தங்குதற்கு இடமாகத் தன்மனைவாயிற் புறத்தே வளர்ந்துள்ள பனைமரத்தைத் தனக்குப்பகையெனக்கொண்டு பழித்து உரைத்தல், இச்செய்யுளிற் கூறப்பட்ட விஷயம். பிரிவாற்

ருதத‌லைவியின் இரங்கல் வகைகளில் ஒன்று, இது. மெய்ப்பாடு - அழுகை. பயன் - அயர்வுயிர்த்தல்.

இப்படி இவள் வருந்துதற்குக் காரணம், தலைவனது சேர்க்கை கிடையாவிடினும் அவன்தோளில்தரித்த மாலையேனுங் கிடைக்க வேண்டுமென்று தான்கொண்ட மிக்ககாதலே யாதலால், 'தினை யொன்றிய குற்றமற்றுணர்ந்தோர் மகிழின்திறத்தின்' என்றாள்: (முன்னும் "குருகைப்பிரான் மகிழேயன்றி வேறில்லை" என்றாள்:) இதனை, 'பகைஉளதோ' என்பதனோடு கூட்டுக. "தினைத்துணை யாங் குற்றம்" என்றாற்போல, 'தினையொன்றியகுற்றம்' எனப் பட்டது; தினைபோன்ற குற்றம்: அதாவது - மிகச்சிறியகுற்றம் என்றபடி; ஒன்றிய - ஒத்தஎன உவமவாசகம்: "வேலொன்று கண்ணார்" என்றவிடத்துப்போல. இனி, தினையினளவு பொருந்திய குற்றமென்று பதப்பொருள் கூறினும் அமையும். உணர்வுக்குக் குற்றம் ஐயந்திரிபுகளாதலை "கற்ககசடற" என்றவிடத்துங் காண்க. சந்தேகவிபரீதங்கள் சிறிதுமின்றித் தத்துவங்களை உள்ளபடி அறிந்தவர் ஆழ்வார் என்பது, 'தினையொன்றிய குற்ற மற்றுணர்ந்தோர்' என்றதன் கருத்து.

'மனையொன்றியகொடியாள்' என்றது, செவிலித்தாயை. தனதுவேட்கைநோய்க்கு ஏற்ற பரிகாரஞ் செய்யாததுமன்றித் தன்னைக்குறித்து வெகுளிகொண்டு எதிரிலும் மறைவிலும் பலவாறு புன்சொற்கூறிப் பழிதூற்றி வருத்துதலுஞ் செய்கின்றன ளென்பதுபற்றி, செவிலியைத் தலைவி 'கொடியாள்' என்று குறித்தாள்; "சொல்லிற் கொடிய நம்மன்னையைப் போல்பவர் சூழ்ந்திருக்கும், இல்லிற் கொடியகொல்லோ செல்லுநாட் டவ் விருஞ்சுரமே" என்ற தஞ்சைவாணன் கோவையையுங் காண்க: இங்ஙனம் அவளை வெறுத்துரைக்க வேண்டியிருத்தல் தோன்றவே, முன்னம் "அன்னையுடன் பின்றாதவண்ணமெல்லாம் பின்றுவித்து" என்றதும்; "பூதனையாருயிர்கழித்தார்.........தூற்றும் அன்னை யை.........விடுத்தார் தோன்றிய மதியை என்சொல்வேனே...... ...பிறர்க்கு உபகாரமொன்றிலரே" என்று ஒருதலைவி இரங்குவ துங் காண்க. 'கொடியாள்' என்பது - கொடுமையென்னும் பண்பி னடியாப் பிறந்த பெண்பாற்பெயர். இச்சொல் கொடிபோன்றவ ளென்று பொருள்பட்டு மாதென்றமாத்திரமாயும் நிற்கும். தலை மகளது களவொழுக்கத்தை அவளது வடிவுவேறுபாட்டினாலும் ஊரார்பழிதூற்றுதலாலும் வேறுசிலகுறிப்புக்களாலும் உணர்ந்த செவிலி அக்களவொழுக்கத்தைக்குறித்துக் காய்ந்து மனம்மாறு பட்டு மற்றும் அதுநிகழாதபடி குறிக்கொண்டுகாப்பவளாய்த் தலைவியை மனையகத்தேசெறித்து நள்ளிரவிலுமுட்படத் துயிலாது விழித்திருத்தல், 'கொடியாள் துயின்றாலும்' என்ப தனாற் பெறப்பட்டது; சிறைக்காவல்களுள் தாய்துஞ்சாமை முதலதாதலுங் காண்க. இச்சிறைக்காவல் வரைதற்குமுன்பு இரவுக்குறியிடையீடாகவும் ஒருவழித்தணத்தலிலும் வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிவிலும் நிகழுமென்று உணர்க. கொடி யாட்குக் கொடுத்த 'மனையொன்றிய' என்ற அடைமொழியினால்,

அன்றில் மனைப்புறத்தே நிலைகொள்ளாதிருக்கிற தென்பது தோன்றும். 'தன்வாய் அடங்கா' என்று அன்றிற்குக்கொடுத்த விசேஷணம், அச்செவிலியும் வாயடங்காது இரைபவளென்பதைக் குறிப்பிக்கும்; ("ஓவலில் வாயன்னை ஞாளி இவ்வூர்கணுறங்கினும்," "துண்ணென் கடுங்குரல் வாயன்னை துஞ்சினும்," "வன்சொலன்னை துஞ்சாள்," "நின்றரற்றும், அன்னைக்கு மாரற்கு அயர்ந்தாள்" என்றார் பிறரும்.)

வினை - இங்கே, தீவினை; இனி, வாய்மூடாதுகத்துதலாகிய செயல் பொருந்திய என்று உரைப்பினுமாம்; (எனது) தீவினைப் பயனாய் அமைந்த அன்றிலென்றலுமாம். அன்றில் பனைமரத்தில் வாழ்வது இயல்பாதலால், 'அன்றிலுக்கு இடங்காட்ட விரிதலைய பனை' எனப்பட்டது; ("முன்றில் தனிநின்ற பெண்ணைமேற் கிடந்தீர்கின்ற, அன்றிலின் கூட்டைப் பிரிக்க கிற்பவரார் கொலோ" எனப் பெரியாரும் பணித்தார்: "தனியே பறவாய் தகவேதுமிலாய், பனைமேலுறைவாய் பழிபூணுதியோ" என்றார் இராமாயணத்திலும்.) என்னைக் குரலால்வருத்துகிற அன்றிற்கு இடங்கொடுத்தற்காகவே செழித்துவளர்ந்துள்ளது இப்பனையென்று நிந்தித்தவாறு. 'விரிதலையபனை' என்றதனால், காட்சிக்கு அலங்கோலமாகத் தலைவிரிகோலமாயுள்ளது இதுவென்று பழித்தலும் தோன்றும். தமியேன் - துணைவனைப்பிரிந்துள்ள யான் என்றபடி. இப்பனை இங்ஙனம் என் எதிரிக்கு இடங்கொடுத்து உதவி எனக்கு எதிர்செய்யுமாறு இம்மையில் இதற்குமெனக்கும் பகைமைக்காரணம் ஒன்றும் இல்லையாதலால், இது பூர்வஜன்மத்தில் ஏதேனும் நேர்ந்த விரோதத்தின் தொடர்பாதல்வேண்டுமென்பாள், 'பழம்பகை' என்றாள்.

கம்பநாடரது ஞானக்கண்ணுக்கு ஒரோசமயத்தில் இலக்கான நம்மாழ்வார் மறைந்தவளவிலே, அவரது நிரந்தரானுபவத்தை விரும்பிய கம்பநாடர், அப்பிரிவாற்றாமையாலும் தம்மைவருத்தக் கடவனவான லௌகிக பதார்த்தங்களைக் குறித்தும் அவற்றிற்கு ஆதாரமான இப்பிரபஞ்சத்தைக் குறித்தும் மிகவருந்தி வெறுத்துரைத்தல், இதற்கு உள்ளுறைபொருள். ('வாடை அன்றில் தென்றல் முதலான பாதகங்கள் [பாதகங்கள்] என்பது, ஸ்மாரகத்வேந அஸஹ்யங்களான லௌகிகபதார்த்தங்களை' என்பது, ஸ்வாபதேசவுரை.) தம்மைப்போலப் பிரிந்துவருந்துவாரது அரற்றொலியைக் கேட்குமிடத்து உய்யக்கடவரல்ல ரிவரென்பது; ஈற்றடியில் வெளியாம். பகவத் ஸ்வரூபரூபகுணவிபூதிகளை உள்ளபடியறிவாரில் தலைவரான ஆழ்வார் சூடிக்களைந்த மகிழமலர்மாலையை [அல்லது அவரது இனிமையை]ப் பெறுவதில் ஆதரத்தால் என்பது, முதலடியின் உட்கிடை. 'மனையிடத்துக்கொடியாள்' என்றது - தம்பக்கல் பரிவுடையரென்னும் ஞானிகளை. விரிதலைய பனை = பரந்த இடத்தையுடைய இப்பிரபஞ்சம். தன்னைச்சார்ந்த உயிர்கட்கெல்லாம் பொல்லாங்கையே மிகுதியாக விளைக்கின்ற இப்பிரபஞ்சம், தன்மேலேறுவார் கொடும்புண்படும்

படி மடற்கருக்குநிறைந்த பனைமரத்துக்கு உட்கிடையாகத் தகும். பிறவும், முன்கூறியவாற்றால் விளங்கும். (89)

90\. பகையாய்வருகின்றமூன்றையும்வேரினோடும்பறித்து
வகையாய்வருவனயாவையுமாற்றியிவ்வையமுய்யத்
தொகையாயிரங்கவிசொன்னோன்பெயர்சொல்லச்சூழ்பனியின்
புகையாமிருள்பின்னையெந்நாட்கழியப்புகுகின்றதே.

(இ - ள்.) பகை ஆய் வருகின்ற மூன்றையும் வேரினோடும் பறித்து - உட்பகையாய் வருகின்ற (காமம் வெகுளி மயக்கம் என்னும்) முக்குற்றங்களையும் அடியோடு ஒழித்து, வகை ஆய் வருவன யாவையும் மாற்றி - (அக்குற்றங்களின்) கூறுபாடாய் விளைவனவான கருமங்களெல்லாவற்றையும் போக்கி [தமக்கும் தமது அடியார்க்கும் இல்லையாக்கி], இ வையம் உய்ய தொகை ஆயிரம் கவி சொன்னோன் - இந்நிலவுலகத்தார் உய்வு பெறும்படி (நூறுபதிகமாகத்) தொகுக்கப்பெற்ற (திருவாய்மொழி) ஆயிரம் பாசுரங்களை அருளிச்செய்தவராகிய நம்மாழ்வாரது, பெயர் - திரு நாமங்களை, சொல்ல—, (அதனால்), சூழ் பனியின் புகை ஆம் இருள் கழிய புகுகின்றது - நெருங்கிச் சூழ்கிற பனியும் புகையும் போல்வதான அஜ்ஞானவிருள் நீங்கப்போகின்ற காலம், பின்னை எந்நாள் - இனி எப்பொழுது வாய்க்குமோ? (எ - று.)

"குரோர் நாம ஸதா ஜபேத் [=குருவின் பெயரை எப்பொழுதும் ஜபிக்கவேண்டும்]" என்றபடி, மகோபகாரகரான பரமாசாரியராகிய நம்மாழ்வாரது திருநாமங்களை யான் இடையறாது உச்சரித்து, அதனால் அஜ்ஞாநாந்தகாரம்நீங்கி ஞானானந்தச் சுடர்பெற்று உய்வது எந்நாளோ? என்பதாம். இதுவரை பழுதே கழிந்த பலபகலும்போலவன்றி இனியாயினும் நற்பயன் பெறுங் காலம் வாய்க்கவேண்டுமே யென்று ஆதரங்கொண்டு கழிவிரக்கத்தோடு கூறிய வார்த்தை, இது.

காமம் - இப்பிரபஞ்ச விஷயங்களில் ஆசை. வெகுளி-கோபம். மயக்கம் - விபரீதவுணர்வு. இம்மூன்றும், உயிரை உய்வுபெறவொட்டாது கெடுத்தலால், 'முப்பகை' எனப்படும். எல்லாவினைகளும், இவற்றின்காரியமே யாதலால், 'வகையாய்வருவன' எனப்பட்டன. இங்கு 'வகை' என்பதை, "சுவையொளியூறோசைநாற்றமென்றைந்தின், வகை" என்றவிடத்துப்போலக் கொள்க. சஞ்சிதம் பிராரப்தம் ஆகாமியம் என்ற கருமவர்க்கங்களெல்லாம், 'வகையாய் வருவனயாவையும்' என்றதில் அடங்கும். ஆழ்வார், தாம் முப்பகையும் வினைத்தொடர்பும் சிறிதும் உடையராகாததோடு, தம்மைச்சார்ந்தவர்கட்கும் முப்பகையையும் வினையனைத்தையும் போக்கியருள்பவ ராதலின், 'பகையாய் வருகின்ற மூன்றையும் வேரினோடும்பறித்து வகையாய் வருவனயாவையும் மாற்றி இவ்வையமுய்யத் தொகையாயிரங்கவி சொன்னோன்' எனப்பட்டனர். பொருள்களை உள்ளபடி உணரவொட்டாது

செய்தலால், அஜ்ஞானம், இருளெனப்படும். அஜ்ஞானவிருளைப் போக்குபவனென்ற பொருள்பற்றியே 'குரு' என்ற பெயர் நிகழ்தலால், அக்குருவின்பெயர் சொன்னவளவிலே பேதைமையிருள் கழியுமென்க. அக்குருவினது அருட்சுடரின் முன் இவ்விருள் எளிதில் நீங்குமென்பது தோன்ற, அதற்குப் பனியும் புகையும் உவமை கூறப்பட்டன.

ஆம் - உவமவுருபு; "வேதாவாம் வேங்கடம்" என்னுமிடத்துப் போல. மூன்று - எண்ணலளவையாகுபெயர். வையம் - இடவாகுபெயர்.

இச்செய்யுள், கம்பநாடர் தாமானதன்மையில் உரைத்தது; அன்றி, தலைவிநிலையை மேற்கொண்டு உரைத்ததென்றால், பிரிவாற்றாத நிலையில் இரவுநீட்டித்ததாகத்தோன்ற அவ்விருட்பொழுதின் நெடுமைக்குத் தலைவி இரங்கி இங்ஙனங்கூறியதாகத் துறைப்போக்கு அமைத்தல் சாலும். தலைவன் பெயரை என்செவிப்படுமாறு எவரேனுஞ் சொல்வராயின் அதுகேட்டுச் சிறிது ஆறுதலடைவேன்; அங்ஙனம் இவ்விருட்பொழுது இனிதுகழியப் பெறுவேனே என்பது தாற்பரியம். உதயகாலத்தில் அனைவரும் துயிலெழும்போது 'ஆழ்வார் திருவடிகளே சரணம்' என்று தொடங்கி அவர்திருநாமங்களை உச்சரித்தல் இயல்பாதலால் அங்ஙனம் தலைவன்பெயர் சொல்லுமாறு இவ்விருள்கழிவது எப்பொழுதோ என்று இரங்கிக்கூறியதாகவுங் கொள்ளலாம். பகலில் இந்திரியங்கள் பலவேறுவகைப்பட்ட பொருள்களை நாடுதல் கூடுமாதலால், ஒருவாறு பிரிவை ஆற்றிநிற்கலாம்; இரவில் அங்ஙனமன்றி எல்லாப்பொருளும் அடங்க இந்திரியங்களோடு மனம் பிரிந்த பொருளொன்றையே நாடுதலாலும், கல்விக்கு உரியகாலமாதலாலும், அதில் ஆற்றமாட்டாது வருந்தி இங்ஙனம் அவ்விருட்பொழுதின் கழிவை வேண்டுகின்றாளென்க. 'சூழ்பனியின் புகையாம் இருள்' என்பதற்கு - சூழ்ந்தபனியாகிய புகையையுடையதான இருள் என்று பதப்பொருள்கொண்டு, புகைபோலப் பனிபரந்துசூழப்பெற்ற இருள் என்று கருத்து உரைத்தலுமாம். ஆழ்வாரது நிரந்தராநுபவத்தைப் பெறாத நிலையிலே மோஹாந்தகாரம் தலையெடுத்துக் காலவிளம்பம் பொறுக்கமாட்டாமையாற் காலம் நீட்டித்ததாகத் தோன்ற அதனால்வருந்துகிற கம்பநாடர் 'ஆழ்வாரது திருநாமமந்திரோச்சாரணபலத்தால் மோகாந்தகாரம் தணிவது எப்பொழுதோ?' என்று இரங்கிக்கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருள். ('இருள் என்பது - அஜ்ஞாநத்தை, இரவு நெடுமையென்பது - விளம்பாக்ஷமத்வத்தை' என்பர் ஸ்வாபதேசம் வல்லார்.) ஆழ்வார் இவரது உட்பகைகளை யொழித்து இவரைத் தம்பக்கல் உடனேசேர்த்துக்கொள்ள வல்லராயிருக்க அதுசெய்யாது விளம்பித்தலால் இவர்க்கு இந்த இருள்தருமாஞாலத்திலிருப்பு நெடுகித்தோற்றுகையாலே ஆற்றாமைபிறந்து அதுவிஞ்சுதலால் இவர் அத்தன்மையை வாய்விட்டுக்கூறி அரற்றுகின்றனரென்க. (90)

[பிரிவாற்றாது வருந்துந் தலைவிநிலைகண்டு பாங்கி இரங்கல்.]

91. *புகுகின்றதுவிருள்போகின்றதுவண்ணம்பூவைகண்ணீ*
ருகுகின்றதென்றுயிரோய்கின்றதா லுலகேழுமுய்யத்
தொகுகின்றவாயிரஞ்சொன்னோன்குருகைச்சொல்லால்விளங்
தகுகின்றனரல்லர்மேன்மேலுங்காதறருமவரே. [கத்

(இ - ள்.) இருள் புகுகின்றது - இருட்டோ வந்து நிறைகின்றது; பூவை - கிளிபோன்றவளான இம்மங்கையினது, வண்ணம் - (உடம்பின்) நல்லநிறம், போகின்றது - நீங்குகின்றது; பூவை கண்ணீர் உகுகின்றது - (மற்றும்) இம்மங்கையின் கண்களிலிருந்து நீரும் பெருகுகின்றது, என்று - என்ற இக்காரணத்தால், உயிர் ஓய்கின்றது - (எனது) உயிர் சோர்வடைகின்றது; மேல்மேலும் காதல் தருமவர்-(இவளுக்கு இங்ஙனம்) ஆசைநோயை மேல்மேல் விளைப்பவரான, உலகு ஏழும் உய்ய தொகுகின்ற ஆயிரம் சொன்னோன்- ஏழுலகத்தாரும் உய்வுபெறும்படி (பதிகம் பதிகமாகச்) சேர்கின்ற (திருவாய்மொழி) ஆயிரம் பாசுரங்களை அருளிச்செய்தவராகிய தலைவர், குருகை சொல்லால் விளங்க தகுகின்றனர் அல்லர் - (தாம் பிறந்ததலமான) திருக்குருகூர்க்கு உரிய கீர்த்தியால் விளங்கத் தக்கவரல்லர்; (எ - று.)

'குருகைச்சொல்லால் விளங்கத்தகுகின்றனரல்லர்' என்றது- நல்லவரல்லர் என்றபடி. தாம்பிறந்த இடமான திருக்குருகூரென்னுந் திவ்வியதேசத்தில் வசிக்கின்ற பலவகைமனிதர்களும் நல்லவரென்பது விளங்க ஆழ்வார்தாமே "நல்லார் பலர்வாழ் குருகூர்ச் சடகோபன்" என்றும், "நல்லார்நவில் குருகூர்நகரான்" என்றுஞ் சொல்லியிருத்தலை மேற்கொண்டு, நல்லவரென்னும் பொருளில் 'குருகைச்சொல்லால் விளங்கத் தகுகின்றனர்' எனப்பட்டது;இது **பிறிதினவிற்சியணியின்** பாற்படும். 'குருகைச்சொல்லால்விளங்கத் தகுகின்றனர்' என்பதை, "வையம்பெறினும் பொய்யுரைக்கமாட்டார் தொண்டைநாட்டாரே", "வையைநாட்டுறைவோர், புதையார்தனம்" என்றாற்போலக் கொள்க. 'பிரியேன் பிரியினுந் தரியேன்' எனவும் 'நமதுஉடம்பு இரண்டுக்கும் உயிர்ஒன்றே' எனவும் 'நீ என் கண்மணியே' எனவும் 'ஒருபொழுதும் உன்னை மறவேன்' எனவும் 'இம்மைப்பிறப்பிற்பிரியலன்' எனவும் இவ்வாறு பல பசப்புவார்த்தைகளைத் தலைவிக்குக்கூறிப் பின்பு அவற்றில் ஒன்றன்படியேனும் நடவாதவரென்றும், தம்மையே நம்பியடைந்தவளும் வேறுகதியில்லாதவளுமான இம்மெல்லியலாளிடத்துச் சிறிதும் தாக்ஷிணியமின்றி இவளை விட்டுப் பிரிந்துசென்றவரென்றும், தமது அகத்தே மெய்யன்பு இன்றிப் புறத்தே பொய்யன்பு பாராட்டியவரென்றும், இவ்வாறு நினைப்பும் சொல்லும் செயலும் மாறுபடுதலால் திரிகரணசுத்தியில்லாதவரென்றும், இவளது ஆற்றாமைகருதாது பிரிந்ததுமன்றிக் குறித்தபருவத்தில் மீண்டுவாராது நீட்டித்துப் பொய்த்தவரென்றும், மற்றும் பலபடியாகவும் பழிப்பாள், அக்கருத்துக்களெல்லாம் தோன்றப்பொதுப்பட 'நல்லவரல்லர்' என்றாளென்க. **'மேன்மேலும் காதல்தருமவர்'**

என்றது - ஆசைகாட்டி மோசஞ்செய்தவரென்று பழித்தற் குறிப்பு. 'உலகேழுமுய்யத் தொகுகின்ற ஆயிரஞ்சொன்னோன்' என்றது -தாம் கூறிய சிலசொற்களின்படி நடந்து தமது அகத்து அடிமையை உய்வியாமல் உலகங்களையெல்லாம் உய்வித்தற்குப் பலதொடுத்துச்சொல்லத் தொடங்கினர்போலும் என்று பரிகசிக்கின்ற குறிப்பு; கீழ் 38 - ஆஞ்செய்யுளில் "கவியாலுலகை உய்தலைச்செய்ததும் பொய்யென்றுமோ" என்றதுங் காண்க. 'சொன்னோன் தருகின்றனரல்லர்...தருமவர்' என்றது, ஒருமைப்பன்மை மயக்கம்: பால்வழுவமைதி; [நன் - பொது 29.] இதனை, சீவகசிந்தாமணியில் "பெற்றவந்நிமித்தத்தாலும்" என்று தொடக்கத்துச் செய்யுளில் "கொண்டவர் முனிவரன்" என்றதுபோலக் கொள்க; 'ஒருமைசுட்டிய பெயர்நிலைக்கிளவி, பன்மைக்காகு மிடனுமாருண்டே" என்றார் தொல்காப்பியனாரும். இம்மயக்கம், இலக்கியங்களிற் சிறுவரவிற்று. 'சொன்னோன்' என்றது-இயற்கையொருமை; மற்றவை - உயர்வுப்பன்மை: ("எனைத்துணையராயினு மென்னாம் தினைத்துணையுந், தேரான்பிறனில்புகல்" என்ற திருக்குறளின் உரையிற் பரிமேலழகர் "என்னீரறியாதீர்போல விவைகூறல்நின்னீரவல்ல நெடுந்தகாய்" என்புழிப்போல உயர்த்தற்கண் பன்மையொருமைமயங்கிற்று' என்றதையும் உணர்க.) உலகேழும் உய்ய-ஏழுதீவுகளாகவுள்ள இந்நிலவுலகம் முழுவதிலு மிருக்கிறஜனங்களெல்லாரும் பிறவிப்பெருங்கடலினின்றுகரையேறி உஜ்ஜீவிக்க வேண்டியென்றபடி. 'ஆயிரம்' என்பது-எண்ணலளவையாகுபெயராய், அத்துணைச்செய்யுள்களை உணர்த்திற்று.

கலவிக்கு உரியகாலமாதலாற் பிரிவுத்துயரை மிகுவிப்பதான இராக்காலத்தின் வரவைக் குறித்து அஞ்சுவாள், 'புகுகின்றது இருள்' என்றாள். போகின்றது வண்ணம்—"போகின்றது மணிமாமை பிறங்கி யள்ளற்பயலை, யூர்கின்றது கங்கு லூழிகளே", "வண்ணம் பயலை, விரிகின்றது முழுமெய்யும் என்னுங்கொல் என் மெல்லியற்கே"என்றார் ஆழ்வாரும்;மகளிர்க்கு இளமைப்பருவத்திலுண்டாகிற ஒளிபெற்ற அழகியமாமையெனப்படும் நல்லநிறம் மாறி, பிரிவினாலுண்டாகும் பசப்புநிறம் பரவுகின்றதென்றபடி.

இங்ஙனம் தோழி தான் தலைவனைப்பழித்துக்கூறுதலைத் தலைவிகேட்பாளாயின், ஆற்றாமை சிறிதுதணிவள்; தலைவன்கேட்பானாயின், விரைவில்தலைவியை வெளிப்படையாக மணம்புரிந்து கொள்வன்; எவரும் கேளாராயின், தோழி தான் அயர்வுயிர்ப்பள் என இதன்பயன் காண்க. இதன் மெய்ப்பாடு - அழுகை.

புகுகின்றது விருள் -குற்றியலுகரம் உயிர்வரச் சிறுபான்மை கெடாதுபொதுவிதியால் வகரவுடம்படுமெய்பெற்றது. வண்ணம்-வர்ணம் என்றவடசொல்லின் விகாரம்; இதனைத் தனியே தமிழ்ச் சொல்லென்பாரு முளர். பூவை - கிளி, அல்லது நாகணவாய்ப் பறவை; அதுகொஞ்சுவதுபோல இனிமையாகப் பேசுகிற பெண்ணுக்கு இங்கு உவமையாகுபெயர். இதனை, மத்திமதீபமாக, முன்னின்ற 'வண்ணம்' என்றதனோடும், பின்நிற்கும் 'கண்ணீர்' என்பது

ஞேடுங் கூட்டுக, ஆல் - ஈற்றசை; அந்தோ என இரக்கமுமாம். மேன்மேல் - அடுக்குத்தொடர்.

ஆழ்வாரது பிரிவையாற்ருத கம்பநாடரது வருத்தத்தைக் கண்ட அவரது அன்பர்கள் இரங்கிக்கூறும் வார்த்தை,இதற்கு உள்ளுறைபொருள்.இப்படி, தோழிபேச்சால் தமது நிலையை வெளியிடுகின்றனர் கம்பநாடரென்க. 'புகுகின்றது இருள்' என்றது-உரிய காலம் நேர்ந்தவிடத்தும் பேறுவாய்க்காமையால் மோகாந்தகாரம் மேலிடுதலைக் குறித்து இரங்கியது. 'பூவை வண்ணம் போகின்றது' என்றது - இவர்க்கு இப்பிரிவினுலாகும் வைவர்ண்யத்தை [நிற வேறுபாட்டை]க் கூறியது. 'பூவைகண்ணீர்உகுகின்றது' என்றது -இப்பிரிவுத்துயரை ஆற்றமாட்டாமல் இவர் புலம்பிக் கண்ணீர் சொரிதலைக் காட்டும். 'என்று உயிர்ஓய்கின்றது' என்றது - இவர் படுகிற துன்பத்தைக்கண்டு இவரது அன்பர்கள் தாம் துன்புறுதலைக் கூறியது. இவர்க்கு இங்ஙனம் பரமபக்தி தலையெடுக்கும்படி மேன்மேற் காதலை விளைப்பவரும் இந்நிலவுலகத்தாரனைவரும் உஜ்ஜீவிக்கும்படி திவ்வியப்பிரபந்தம் திருவாய்மலர்ந்தருளியவருமான ஆழ்வார் இவர்பக்கல் இன்னமும் பூர்ணகடாக்ஷம் வைத்திலரே யென்று குறைகூறுவது,பிந்தியவாக்கியத்தின் உட்கிடை. "குருகூர் நகர் நம்பிக்கு ஆளுரியனய், அடியேன் பெற்ற நன்மையே," "திருக்குருகூர்நகர்நம்பி, என்றும் என்னை இகழ்விலன் காண்மினே" என்று களித்துக்கொண்டாடிப்பேசும்படி மதுரகவியாழ்வார்க்குப் பேரருள் செய்தாற்போல இக்கம்பநாட்டாழ்வார்க்கு நம்மாழ்வார், இன்னமும் பூர்ணகடாக்ஷஞ் செய்திலரே யென்று நம்மாழ்வார்மேற் குறைகூறுவார், 'குருகைச்சொல்லால் விளங்கத் தகுகின்றனரல்ல' ரென்ருரெனக் கொள்க. (91)

92\. தருமமுங்காமமுந்தாவிலரும்பொருளுந்தணவாக்
கருமமுமாகியகாரணங்கண்டவக்காரணத்திற்
பெருமையுமாயப்பிணக்குந்தவிர்ந்துறுபேதஞ்செய்யு
மிருமையுந்தீர்ந்தபிரான்சடகோபன்றனின்னருளே.

(இ - ள்.) தருமமும்—, காமமும் - இன்பமும், தா இல் அரும் பொருளும் - குற்றமற்ற அருமையான செல்வமும், தணவா கருமமும்-எம்பெருமானை விட்டுப்பிரியாது செய்யுங் கைங்கரியமும் [மோக்ஷமும் என்றபடி], (ஆக நான்கு புருஷார்த்தங்களும்), ஆகிய-உண்டாவதற்கு, காரணம்-ஏது, (எதுவென்ருல்),—கண்ட அ காரணத்தின் - (தம்மாலே) காணப்பட்ட ஆதிமூலப்பொருளாகிய அந்தப் பரப்ரஹ்மம்போலவே, பெருமையும் மாயப்பிணக்கும் தவிர்ந்து - அனைத்தினும் பெரியதாம் மகாமாயையெனப்படுகிற பிரகிருதியின் சம்பந்தமும் அந்தப்பிரகிருதியின் சலனத்தாலாகும் மாறுபாடுகளும் இல்லாமல், உறு பேதம் செய்யும் இருமையும் தீர்ந்த-மிக்க பலவேறுபாடுகளை யுண்டாக்குகிற (நல்வினை தீவினை யென்னும்) இருவகை வினைகளும் தொடரப்பெருத, பிரான்-தலைவராகிய, சடகோபன் தன் - நம்மாழ்வாருடைய, இன் அருளே - இனிமையான கருணையேயாம்; (எ - று.)

காரணம், சடகோபன்தன் இன்னருளே என முடிபு காண்க. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகை உறுதிப்பொருள் களும் ஆழ்வாரதுதிருவருளாலே அவரடியார்க்கெல்லாம் சித்திக்கு மென்பது, கருத்து.

பொருளும் இன்பமும் போலாது, அறம், இம்மை மறுமை வீடு என்னும் மூன்றிலும் நன்மைவிளைக்குஞ் சிறப்புடைமையால், முதலிற் கூறப்பட்டது; ("சிறப்புடைமரபிற் பொருளும் இன்ப மும், அறத்து வழிப்படூஉந்தோற்றம்போல" என்றார் பிறரும்.) இம்மையே பயப்பதாய இன்பத்தை அதனைச்சாரவைத்து, இவ்வி ரண்டும் பொருளாற் பெறப்படுதலின், அதனை இவற்றின் பின் வைத்தார். த்ரிவர்க்க மெனப்படுகிற இம்மூன்றன்பின் அபவர்க்க மெனப்படுகிற வீட்டை நிறுத்தியது, "பரனைநினைந்து இம்மூன் றும், விட்டதே பேரின்பவீடு" ஆதலின். நல்வழியால் ஈட்டப் பட்டதும் நற்பயன்களைத் தருவதுமாகிய பொருளென்பது பட, 'தாவி லரும்பொருள்' எனப்பட்டது. "குருகூர்ச்சடகோபன் குற்றேவல் செய்து, ஆய்ந்ததமிழ்மாலையாயிரத்துள்ளிவையுமோர் பத்தும்வல்லாருலகில், ஏந்துபெருஞ் செல்வத்தராய்த் திருமாலடி யார்களைப் பூசிக்கநோற்றார்களே," "குருகூர்ச்சடகோபன், குழலின்மலியச்சொன்ன வோராயிரத்துளிப்பத்தும்,மழலைதீரவல் லார் காமர்மானேய் நோக்கியர்க்கே", "குருகூர்ச் சடகோபன் சொன்ன, பண்கொளாயிரத்துள்ளிவைபத்தும் திருவண் வண்டூர்க்கு, இன்கொள்பாடல் வல்லார் மதனர்மின்னிடை யவர்க்கே," "குருகூர்ச்சடகோபன், சொல்லப்பட்ட வாயிரத்து இவையும்பத்தும் வல்லார்கள், நல்லபதத்தால் மனைவாழ்வர் கொண்டபெண்டிர்மக்களே" என்று ஆழ்வார்தாமே அருளிச் செய்தமை கொண்டு, இடையிரண்டு புருஷார்த்தங்களுக்கும் சடகோபனருள் காரணமாமெனப்பட்டது. மற்றையிரண்டுக்கும் அது காரணமாதல், வெளிப்படை. தா - உரிச்சொல். தர்மம், காமம், கர்மம், காரணம் - வடசொற்கள். ஆகிய - செய்திய வென்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்; அதன்முன்னும் வலி இயல்பே.

"காரணந்துத்யேய: [=காரணப்பொருள் தியானிக்கத் தக்கது]" என்ற மறைமொழியிலும், காரணமென்பது ஆதிமூலப் பரம்பொருளை யுணர்த்துதல் காண்க; கீழ் (47) "புரைதுடைத்துப் பெரும்பொய்யுந் துடைத்து" (49) "மருளாய்ப்பரந்த மயக்கத்துயக் கற்ற மாறன்" என்றாற்போல, 'பெருமையும் மாயப்பிணக்குந் தவிர்ந்து' என்றார்; பெருமை - மூலப்பிரகிருதி: மாயப்பிணக்கு - பிராகிருதவிஷயங்கள். ("தெரிமாண்தமிழ் மும்மைத்தென்னம் பொருப்பன்", "இருமைவகை தெரிந்தீண்டறம்பூண்டார்" என்ற இடங்களில் 'மும்மை', 'இருமை' என்றவைபோல) இங்கு 'இருமை' என்பது - இரண்டின் தன்மையென்னும் பொருளை யுணர்த்தாமல், இரண்டு என்னும் எண்ணையே உணர்த்திற்று. இது, இங்கு இருவகைவினைகட்கு எண்ணலளவையாகுபெயர். 'இருமையுந்தீர்ந்த' என்பதற்கு, இம்மை மறுமை யென்னும்

இரண்டையுந் தவிர்ந்து வீடுபெற்ற என்றும், அகங்கார மமகாரங்களாகிய இருவகையபிமானத்தையும் ஒழிந்த என்றும் பொருள்கொள்ளலுமாம். 'பெருமைதவிர்ந்து' என்றது, தமது பெருமிதத்தைப் பாராட்டாது அடியவர்க்கு எளியராய் நின்று என்றும் பொருள்படும். 'தவிர்த்து', 'தீர்த்த' என்ற பாடத்துக்கு - அடிமைப்பட்ட எனது பெருமையையும் மாயப்பிணக்கையும் போக்கி, இருமையையும் ஒழித்த தலைவனெனப் பொருள் காணலாம். பெருமையென்பது, பெரு மை என்று இரண்டு சொல்லாய்ப் பெருங்குற்றத்தை யுணர்த்தலுங் காண்க; இனி, பெருமையென்பதற்கு வித்தியாமதம் தனமதம் குலமதம் என மூவகையாற் பெருமிதம் பாராட்டுஞ் செருக்குக்களென்று உரைப்பாருமுளர். (92)

[இருளுக்கு ஆற்றாத தலைவியைக்குறித்துத் தோழி இரங்குதல்.]

93. ***அருளிற்சிலமகிழாயிழைக்கீவர்கொலந்திவந்த***
விருளிற்பிறிதுதுயருமுண்டோவியலோடிசையிற்
பொருளிற்சிறந்தவலங்காரவல்லியிற்போக்கிலுள்ளந்
தெருளிற்கரும்பொக்குமாயிரம்பாப்பண்டுசெய்தவரே.

(இ - ள்.) இயலோடு இசையின் பொருளில் சிறந்த - இயற்றமிழ்ப் பொருளமைதியிலும் இசைத்தமிழ்ப்பொருளமைதியிலும் சிறப்புற்ற, அலங்கார வல்லியின் - அலங்காரங்களமைந்ததொரு பூங்கொடி போலும்படி, போக்கு இல் உள்ளம் தெருளின் கரும்பு ஒக்கும் ஆயிரம் பா பண்டு செய்தவர் - குற்றமற்றவையும் மனத்தினால் ஆராயுமிடத்துக் கருப்பஞ்சாற்றை யொத்து இனியவையுமான திருவாய்மொழி ஆயிரம்பாசுரங்களை முன்பு செய்தருளினவராகிய நம்மாழ்வார், ஆய் இழைக்கு-தேர்ந்தெடுத்த ஆபரணங்களையுடையளான இத்தலைவிக்கு, அருளின் - கருணையினால், சில மகிழ் - (தாம்சாத்திய மாலையிலுள்ள) சில மகிழம்பூக்களை, ஈவர்கொல் - கொடுத்தருள்வரோ? அந்தி வந்த இருளின் - மாலைப்பொழுதில் வந்த இருள்போல, துயர் பிறிதும் உண்டோ - (இவட்குத்) துன்பந்தருவது வேறொன்றும் உளதோ? [இல்லை யென்றபடி];

கூடிப்பிரிந்த தலைவனது பிரிவை ஆற்றாது வருந்திய தலைவியின் நிலைமை கண்டு தோழி இங்ஙனம் இரங்கிக்கூறினளென்க. பிரிந்த நிலையிலே தலைவி தலைவன் தரித்த மலர்மாலை கிடைக்கப்பெற்றால் அதுகொண்டு ஒருவாறு மகிழ்ந்து ஆறியிருப்பள்; அம்மாலைமுழுவதும் கிடையாவிடின் அதிலுள்ள சிலமலர்களேனும் கிடைக்கப்பெற்றால் அவைகொண்டு சிறிதுதணிந்திருத்தல்கூடுமென்பதுபற்றி, 'அருளிற் சிலமகிழ் ஆயிழைக்கு ஈவர்கொல்' என்றாள். ஆழ்வார் வகுளாபரணரென்று ஒருதிருநாமம்பெறுமாறு மகிழமலர்மாலை தரிப்பவராதலால், மகிழ் கூறப்பட்டது. காதல்நோய் மற்றைப் பொழுதுகளிலும் உளதாயினும், "மாலையுழக்குந்துயர்", "மாலைதுனியரும்பித், துன்பம் வளரவரும்", "காதலரில்வழி மாலைகொலைக்களத், தேதிலர் போல வரும்" என்றபடி மாலைப்பொழுதில் வளர்ந்து மிகவருத்துதலால்,

அந்திவந்த இருளிற் பிரிதுதுயரு முண்டேர்' எனப்பட்டது. இச்செய்யுளின் முதலடியைக் கீழ் 46 - ஆஞ் செய்யுளின் முதலடியாகிய "அரிவனை பொன்மகி ழாயிழைக்கியுங்கொலந்திவந்து" என்றதனேடு ஒப்பிடுக. பிரிந்து வெளிச்சென்ற தலைவர் மீண்டு வருதற்கு உரிய காலம் மாலையாதலால், அப்பொழுது தலைவனுக்கு மகிழ்ச்சி விளைத்தற்பொருட்டுச் சிறந்த அணிகலங்களைத் தெரிந்தெடுத்து அணிந்து அவன்குறித்தகாலத்திலே மீண்டுவருவதை எதிர்நோக்கிநிற்கின்றன ளென்க. அங்ஙனம் வான்பார்க்கும் பைங்கூழ்போல வரவெதிர்பார்க்கின்ற சமயத்தில் அவன் தான்வர இயலாதாயின் இவட்குத் தாரகமாகத் தனதுமாலையின்மலர்களைக் கொடுத்தனுப்புதலாவது செய்வனே வென்பாள், 'அருளிற்சில மகிழீவர்கொல்' என்றுளென்க. 'ஈவர்கொல்' என்றவிஞ, கொடுத்தருள்வாராக என்று வேண்டுதற்பயத்தது. துயர்தருவதை 'துயர்' என்றது, உபசாரவழக்கு; காரணம் காரியமாக் கூறப்பட்டது.

பலவகைச் சொல்லணி பொருளணி குணவணி சுவையணிகள் அமைந்து சொற்றொடர்நிலையோடு பொருட்டொடர்நிலையு மாகி அவ்வலங்காரங்களாகிய மலர்கள்பூத்ததொரு கொடிபோலத் திருவாய்மொழி இருத்தலால், 'அலங்காரவல்லியின்' எனப்பட்டது. எம்பெருமானுடைய குணஞ்செயல்களை அழகாகத் தொடுத்துக்கூறிய தொடர்நிலை யென்க. உபநிஷத்துக்களை கடவல்லி, ப்ரஹ்மவல்லி, ப்ருகுவல்லி, ஆநந்தவல்லி என வழங்குதல்போல, அவ்வுபநிஷத்துக்களின் பொருளடங்கிய திருவாய்மொழியை 'அலங்காரவல்லி' என்றதாகக் கொள்ளலாம். 'இயலோடிசையின் பொருளிற்சிறந்த' என்பதற்கு - இலக்கணநடையாலும் இசைத்தமிழ்வகையாலும் மெய்ப்பொருளுணர்த்துந் திறத்தாலும் சிறந்த என்று உரைப்பினும் அமையும். 'போக்கு இல்', 'உள்ளந்தெருளிற் கரும்பொக்கும்' என்ற இரண்டும், ஆயிரம்பாவுக்கு அடைமொழி. தொல்காப்பியம் "போக்கறு பனுவல்" எனப்பட்டாற்போல, திருவாய்மொழி 'போக்கில் ஆயிரம்பா' எனப்பட்டது; போக்கு - சொற்பொருட்குற்றங்கள். போக்கற்பாலது போக்கு எனக் காரணக்குறி. கீழ் 63 - ஆங் கவியிற் கூறியபடி ஆழ்வாரருளிச்செயல்கள் ஆராயுந்தோறும் மேன்மேல் இனிமைசுரத்தலால், 'உள்ளந் தெருளிற் கரும்பொக்கும் ஆயிரம் பா' எனப்பட்டன. பண்டு - கலியுகத்தொடக்கத்தி லென்க.

அகக்கண்ணுக்கு இலக்காகி மறைந்த ஆழ்வாரது பிரிவை யாற்றுமல் மோகாந்தகாரத்தில் மிகவும்வருந்துகிற கம்பநாடரது துயரத்தை நோக்கிய அன்பர்கள், 'அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடியவராகிய ஆழ்வார் இவர்க்கு உரியசமயத்தில் தமது இனிமையைத் தந்து தலையளிசெய்யவேணும்' என்று ஆதரத்தோடு கூறிய வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருள். இங்ஙனம் தோழிவார்த்தையாலே தமது நிலைமையை வெளியிடுகின்றனர் கம்பநாட ரென்க. ஆயிழை - ஆழ்வார்திருவுள்ளத்தை மகிழ்விக்கும்படியான சற்குணபூர்த்தியையுடையவர்;

நல்லோர்க்கு நற்குணமே ஆபரணமாம். இயலோடு இசையின் பொருளிற் சிறந்த ஆயிரம்பா = "குருகையர்கோன், யாழினிசை வேதத்து இயல்". (93)

94. அவரேயயற்குமரற்குமல்லாவமரர்க்குமெல்லாம்
பவரேகையுற்றென்பணிகொள்ளுமோபடர்நீரினிட்ட
நவரேகையுட்கொள்ளச்செய்ததல்லானம்பிமாறனைப்போ
லெவரேதிருவாயிரமோக்கமாலையிசைத்தவரே.

(இ - ள்.) அயற்கும் - பிரமனுக்கும், அரற்கும் - சிவபிரானுக்கும், அல்லா அமரர்க்கும்-இவர்களல்லாத (இந்திரன் முதலிய) மற்றைத்தேவர்கட்கும், எல்லாம் - ஆகிய அவர்கட்கெல்லாம், பவ ரேகை உற்று என் - பிறப்புவகை நேர்ந்து என்னபயன்? (அவர்களுடையபிறப்பு), படர் நீரின் இட்ட நவரேகை உட்கொள்ள செய்தது அல்லால் - பரவுமியல்புள்ளநீரிலே யெழுதிய புதிய எழுத்துப்போலச்சிறிதும் நிலையில்லாதனவான இப்பிரபஞ்ச விஷயங்களை (அவர்கள் தாமும் பிறரும்) மனங்கொள்ளும்படி செய்ததல்லாமல், பணி கொள்ளுமோ - (எம்பெருமானுக்கு நிரந்தர) கைங்கரியஞ்செய்தலைப் பெறுமோ? (அன்றியும்), அவர் எவரே - அவர்களில் எவர்தாம், நம்பி மாறனை போல் திரு ஆயிரம் மோக்கமாலை இசைத்தவர் - திருக்குருகூர்நம்பியாகிய நம்மாழ்வாரைப்போல(த் தாமும் உய்ந்து பிறரும் உய்யுமாறு) சிறந்த ஆயிரம்பாசுரங்களாகிய மோக்ஷமாலையைப் பாடியவர்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

'ஆழ்வார், ஜீவாத்மாவாகிய பக்தரே யன்றிப் பரமாத்மாவாகிய பகவானல்லர்; நித்யர் முக்தர் பத்தர் என்ற மூவகையாத்மாக்களுள் முதல்தரமான நித்யரு மல்லர்; இரண்டாந்தரமான முத்தரு மல்லர்: கடைசித்தரமான பத்தாத்மாக்களில் ஒருவராய்ப் பகவானது லீலாவிபூதிக்கு உட்பட்டுப் பிறந்தவரே' என்பாரது கொள்கையை ஏற்றுக்கொண்டு, அங்ஙனம் பத்தாத்மாக்களாய்த் தலைமையும் புகழும்பெற்ற பிரமருத்திரேந்திராதி தேவர்களுடைய பிறப்புக்கும் சாதாரண சம்சாரிகளி லொருவராய்த் தோன்றிய ஆழ்வாருடைய திருவவதாரத்துக்கும் உள்ள தாரதம்மியத்தை எடுத்துக்காட்டி, அவ்வுயிர்களனைத்தினும் ஆழ்வார் மேம்பாடுடையவ ரென்று நிலைநிறுத்துகிறார். அவர்கள் தாங்கள் எம்பெருமானுக்கு நிரந்தரகைங்கரியஞ் செய்து முத்திபெறாததாலும், அவர்களுடைய போதனைகளும் முத்திக்கு நேரே காரணமாகாமையாலும், அவர்களுடைய பிறப்பு, தாமும் பிறரும் நிலையற்ற பிரபஞ்ச வாழ்க்கைக்கு உட்பட்டு உழலுதற்கே காரணமாகிறது; அங்ஙனமன்றி, நம் ஆழ்வாரோ எம்பெருமானுக்கு நிரந்தர கைங்கரியஞ் செய்து தாம் வீடுபெற்று உய்ந்ததுமன்றி, தமது உபதேசத்தால் பிறரும் வீடுபெற்று உய்யுமாறு மோக்ஷமாலையென்று ஒருபெயர் பெறத்தக்க திருவாய்மொழியை அருளிச்செய்தன ராதலால், இவர் அவர்களினும் மிகமேம்பட்டவ ரென்பதாம். 'அராஜகமான தேசத்திலே பட்டத்துக்கு உரிய யானையைக் கண்ணைக் கட்டிவிட்டால்

அது எடுத்துத் தன்கழுத்திலே வைத்துக்கொள்ளப் பெற்றவன் அரசனாய் விடுமாறுபோல, இவ்வுலகத்தில் வைதிகமரியாதை யழிந்துபோன சமயத்திலே அதனை நிலைநிறுத்துதற்பொருட்டு எம்பெருமான் தனது நிரங்குசஸ்வாதந்திரியத்தால் பக்தாத் மாக்களி லொருவர்பக்கல் விசேஷகடாக்ஷஞ்செய்ய அதனால் இவர் மற்றையோரையும் சீர்திருத்தும்படி சிறப்புற்றனர்' என்பர் ஆன்றோர்.

ரேகையென்பது - இரண்டாமடியில் வரிசையென்ற பொருளிலும், மூன்றாமடியில் வரிவடிவெழுத்தென்ற பொருளிலும் வந்தது. நீரிலெழுதும் வரிவடிவு சிறிதுபொழுதேனும் நில்லாமல் உடனே கலந்து வருதலால், அது, சிறிதும் நிலைநில்லாமைக்கு உவமைகூறப்படும்; "நீர்மேலெழுத்துக்கு நேர்", "நீரிலெழுத் தாகும் யாக்கை" என்பன காண்க. இங்கு படர்நீரினிட்ட நவரேகை' என்பது - உவமையாகுபெயராய், நிலையற்ற பிரபஞ்ச விஷயங்களை உணர்த்திற்று. நம்பி - ஆடவரிற் சிறந்தவன்; ஆண்பாற் சிறப்புப்பெயர்: நமது தலைவ னென்றும், நம்பிச்சரண மடையத்தக்கவ னென்றும் இதற்குக் காரணப்பொருள் கூறப்படும்; இப்பெயர்ப்பொருளை 'பூர்ணன்' என்ற வடசொற் கொண்டு வழங்குவர். 'முகுந்தமாலை' என்றாற்போல, 'மோக்ஷ மாலை' எனப்பட்டது; முத்திநிலையையும் அதுபெறும் உபாயத்தையும் கூறும் பாடல்களின் வரிசையா லமைந்த சொன்மாலை யென்க. ஏ - அசை. (94)

95. தவஞ்செய்வதுந்தழல்வேள்விமுடிப்பதுந்தம்மையொறுத்
தெவன்செய்யுமெய்யன்குருகைப்பிரானெம்மையின்னமொரு
பவஞ்செய்கைமாற்றியபண்டிதன்வண்டமிழ்ப்பாவுமுண்டே
யவஞ்செய்கைமாற்றச்செவியுண்டுநாவுண்டறிவுமுண்டே.

(இ - ள்.) தம்மை ஒறுத்து - தங்களை வருத்தி, தவம் செய்வதும் - தவத்தைச் செய்வதும், தழல் வேள்வி முடிப்பதும்-அக்கினி முகமாக யாகத்தைச் செய்துமுடிப்பதும், எவன் செய்யும் - யாது நற்பயனைத் தரமாட்டும்?—அவம் செய்கை மாற்ற - கொடிய கருமங்களை யொழித்தற்கு,—மெய்யன் - உண்மைப்பொருளை உணர்ந்து உரைப்பவரும், குருகைப்பிரான் - திருக்குருகூரில் அவதரித்த உபகாரகரும், எம்மை இன்னம் ஒரு பவம் செய்கை மாற்றிய பண்டிதன் - (அடிமைபூண்ட) எங்களை இனிமேல் ஒரு பிறவிபிறத்தலைப்போக்கியருளிய புலவருமான நம்மாழ்வாருடைய, வள் தமிழ் பாவும் - (சொற்பொருட்கருத்துக்களின்) வளமுடைய தமிழ்ப்பாசுரங்களும், உண்டு - இருக்கின்றன; செவி உண்டு - (அவற்றை அனைவரும் உபதேசமுகமாகக் கேட்பதற்கு அவரவர்க்குக்) காதுகளும் இருக்கின்றன; நா உண்டு - (ஓதிப் பாராயணஞ்செய்தற்கு) நாக்கும் இருக்கின்றது; அறிவும் உண்டு - (அதிலுள்ள அர்த்தபஞ்சகங்களை அறிதற்கு) அறிவும் இருக்கின்றது; (எ - று.)—ஏகாரம் இரண்டும் - தேற்றம்.

வேதத்தின் முற்பகுதியாகிய கர்மகாண்டத்தை முக்கியமாகக் கொண்டு அதன்படி தவமும் வேள்வியும் செய்பவர்களை நோக்கி, 'அவை, அழியுமியல்பினவான சுவர்க்கம் முதலிய காமியபலன் களைத் தருவனவாய் முத்திக்கு நேரேகாரணமாகாமையாலும், சிரமசாத்தியமாயிருத்தலாலும், சிறந்தமார்க்கமாகா; திருக்குருகூரில் அவதரித்து லோகோபகாரமாய்த் தத்துவார்த்தங்களை வெளியிட்டுத் தமது அடியார்கள் இனியொருபிறப்பின்றி முத்தியைப் பெறுமாறு அருள்செய்த பொய்யில்புலவராகிய நம்மாழ்வாருடைய அருளிச்செயல்களைக் கேட்டும் ஓதியும் உணர்ந்து அந்தமிலின்பத்து அழிவில்வீட்டை எளிதிற்பெறலாமே யென்று உணர்த்தியவாரும். "காயோடு நீடுகனியுண்டு வீச கடுங்கால் நுகர்ந்து நெடுங்கால மைந்து', தீயோடுநின்று தவஞ்செய்ய வேண்டா திருமார்பனைச் சிந்தையுள்வைத்து மென்பீர்" என்று திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளியதுங் காண்க. இங்ஙனம் தவத்தைத் தாழ்த்திப் பிரபந்தத்தலைவனதுசம்பந்தத்தை உயர்த்தியுரைப்பது, கலம்பக வுறுப்புப் பதினெட்டனுள் **தவம்** எனப்படும். 'பரமபதஞ் சேர்தற்குஎளிதான நல்வழி இருக்க, கடுநெறியைக் கைப்பற்றுவானேன்?' என்றார். தம்மையொறுத்து எவன்செய்யும் என்று எடுத்து, தம்உயிரை வருத்துவதேயன்றி மற்று என்ன நன்மை செய்யவல்லன! எனினுமாம். "நா வாயிலுண்டே நமோ நாரணவென்று, ஓவாதுரைக்குமுரை யுண்டே - மூவாத, மாக்கதிக் கட்செல்லும் வகையுண்டே யென்னொருவன், தீக்கதிக்கட் செல்லுந்திறம்" என்ற பொய்கையாழ்வாரருளிச்செயலைஒருசார் அடியொற்றியது இச்செய்யு ளென்னலாம்.

'எம்மை' என்ற பன்மை - மற்றையடியார்களை உளப்படுத்தியது. இன்னம் ஒருபவம்செய்கை மாற்றுதல் - மீண்டுபிறத்தலில்லாதபடி முத்திபெறுவித்தல். ஆழ்வாரருளால் தாம் அடைந்த பயனை உலகத்துக்கு எடுத்துக்காட்டுவார், 'எம்மையின்னமொரு பவஞ் செய்கைமாற்றிய பண்டிதன்' என்றார். நான்காமடியில், 'செய்கை' என்றது, கர்மம் என்ற வடசொற்பொருளையுணர்த்தியது. 'அவஞ்செய்கை மாற்ற' என்பதற்கு - காலத்தை வீணுக்கு தலை யொழிக்க [ஸத்காலக்ஷேபஞ்செய்ய] என்று பொருள் கொண்டு, அதனை, 'செவியுண்டு நாவுண்டு அறிவுமுண்டே' என்பதனோடு கூட்டவுந் தகும். எவன்-வினாவடியாய்ப்பிறந்த அஃறிணைப் பொதுக்குறிப்பு வினையாலணையும் பெயர். 'வேள்வி முடிப்பது' என்றது, அதனைப் பிழைபாடின்றி முடித்தலின் அருமைதோன்ற நின்றது. (95)

[தலைவன், தலைவியின்நோக்கினலாய வருத்தங் கூறுதல்.]

96. **உண்டாட்டியலுந்திருமாலுருவையுயர்த்துலகைத்**
தொண்டாட்டியவந்துதோன்றியதோன்றறுறைக்குருகூர்
நண்டாட்டியநங்கைநாட்டங்களாலிந்தநாட்டையெல்லாந்
திண்டாட்டியகண்கள்போற்செய்யுமோகயநீங்குகளே.

(இ - ள்.) உண்டாட்டு இயலும் - (பலவகைத்) திருவிளையாடல்கள் பொருந்திய, திருமால்-ஸ்ரீமந்நாராயணனுடைய, உருவை-திருவுருவங்களை, உயர்த்து-சிறந்தமோக்ஷசாதநமெனக் கூறி வெளியிட்டு, உலகை தொண்டுஆட்டிய - உலகத்தவர்களை அப்பெருமானடியவர்களாகச் செய்தற்பொருட்டு, வந்து தோன்றிய -வந்துதிருவவதரித்த, தோன்றல்-பெருமையிற் சிறந்தவரான நம்மாழ்வாருடைய, துறை குருகூர்-(தாமிரபர்ணிநதியின் சங்கணி துறையென்னும்) திருமுகத்துறையையுடைய திருக்குருகூரிலே, நண்டுஆட்டிய நங்கை - கைவளைகளை அசைத்துக்கொண்டு நடந்து வருகிற சிறந்த பெண்ணினது, நாட்டங்களால் இந்த நாட்டை எல்லாம் திண்டாட்டிய கண்கள் போல் -தம் பார்வைகளால் இவ்வுலகத்தவரையெல்லாம் வருத்துகின்றகண்கள்போல, கயல் தீங்குகள் செய்யுமோ - கயல்மீன்கள் வருத்தஞ்செய்யவல்லனவோ? [அல்ல என்றபடி]; (எ - று.)

இச்செய்யுட்குக் கைகோள் - களவு. கிளவி - இயற்கைப் புணர்ச்சி. திணை-குறிஞ்சி; புணர்ச்சியும், புணர்தல்நிமித்தமும் குறிஞ்சிக்குஉரிப்பொருளாதலுணர்க: (நெய்தலென்றல், இரங்குதற்பயத்தது.) துறை - தகையணங்குறுத்தல்; அஃதாவது - ஒரு பூஞ்சோலையினிடத்து ஏகாந்தத்திலே தலைவியைச் சந்தித்த தலைவன் அவளழகு தன்னைவருத்தமுறுவித்ததனைச் சொல்லுதல். திருக்குறளிற் காமத்துப்பாலிற் களவியலிலே 'தகையணங்குறுத்தல்' என்ற முதலதிகாரத்தில் "கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப், பேதைக் கமர்த்தன கண்" என்றதுபோல, தலைமகன் தலைமகளது காதற்குறிப்புநோக்கினால் தனக்குஉண்டான வருத்தத்தைக்கூறியது இது.கயல்கள் பிறழ்ச்சிபற்றிக்கண்களுக்கு உவமைகூறப்படுமேனும், இவைபோல அவை வருத்தஞ்செய்யமாட்டா என்றான். இங்கு உபமானத்திலும் உபமேயத்துக்குச் சிறப்புத் தோன்றுதலால், **வேற்றுமையலங்காரம்**; ஆதலால், இக்கண்கட்குக் கயலுவமை பொருந்தாது, இவை கயலினுஞ் சிறப்புடையன என்ற தாற்பரியம் அமையும். மெய்ப்பாடு-உவகையைச் சார்ந்த மருட்கை. பயன் - மகிழ்தல். கூற்று - தலைமகன்கூற்று. கேட்பது - நெஞ்சு; இங்ஙனம் நெஞ்சொடுகூறினனென்க.

உண்டாட்டெனினும், விளையாட்டெனினும் ஒக்கும். "உண்டாட்டுக்கிரீடை யுப்புக்கேளி, வண்டல் தொடலை மகளிர்விளையாட்டு" என்ற திவாகரத்தால், உண்டாட்டு என்பது மகளிர்விளையாட்டென்று தெரியவரினும், அது, பொதுப்பட விளையாட்டுக்கு வழங்கும்; சிறப்புப்பெயர், பொதுப்பொருளின்மேலது. படைத்தல் காத்தல் அழித்தல் முதலிய தொழில்களையெல்லாம் எம்பெருமான் சிறிதும்சிரமமின்றி மிகஎளிதில்விளையாட்டுப்போல நடத்துதலால்,'உண்டாட்டியலுந்திருமால்'என்றார்.இக்கம்பர்தாமே இராமாயணத்தொடக்கத்தில் "உலகம்யாவையுந் தாமுளவாக்கலும், நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா, அலகிலாவிளையாட்டுடையா ரவர், தலைவரன்னவர்க்கே சரண்நாங்களே" என்றதுங் காண்க;

(ஸ்ரீபாஷ்யகாரரும், தமது பாஷ்யத்தின் தொடக்கத்தில்"அகிலபுவந ஜந்மஸ்தேமபங்காதிலீலே" என்பர்.) இங்கு 'உண்டாட்டு' என்றதில், பகவானது அற்புதத்திருவிளையாடல்களனைத்தும் அடங்கும். உண்டாட்டு - உண்டாடு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். திருமால் = ஸ்ரீமகாவிஷ்ணு. 'திருமாலுரு' என்றது - பரத்வம், வியூகம், மத்ஸ்ய கூர்மாதி விபவாவதாரம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என்ற ஐவகைவடிவையும் உணர்த்தும். எம்பெருமானது பலவகை மகிமைகளையும் எடுத்துக் காட்டி உலகத்தவர்களை வைஷ்ணவர்களாக்கிச் சீர்திருத்துதற் பொருட்டுத் திருவவதரித்தவ ராதலால், ஆழ்வார், 'திருமாலுரு வையுயர்த்து உலகைத் தொண்டாட்டிய வந்து தோன்றிய தோன்றல்' எனப்பட்டனர். தொண்டாட்டுதல்-ஆட்படுத்துதல். இங்கு 'ஆட்டிய' என்றது செய்யிய, என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்; செய் என்றபொருளை யுணர்த்துகிற 'ஆடு' என்ற வினைப்பகுதியின் பிறவினையான ஆட்டு - பகுதி. தோன்றல் - (அனைவரினுஞ்) சிறந்து தோன்றுபவர்; ஆண்பாற்சிறப்புப் பெயர்: இதில், அல் - கருத்தாப்பொருள் விகுதி யென்னலாம். ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாராயணனது அம்சமும், அவன் திருமார்பிலணிந்துள்ள திவ்வியரத்தினமாகிய ஸ்ரீகௌஸ்துபத்தினது அம்சமும், அவனது அடியார்களின் குழாத்துக்குத் தலைவராகிய விஷ்வக்ஸேந ரென்னும் சேனைமுதலியாரது அம்சமுமாக வந்து திருவவதரித்தவர் ஆழ்வா ரென்பது தோன்ற, 'வந்துதோன்றிய' என்றதென்னலாம்.

இம்மங்கை நடக்கிறபோதும் பூக்கொய்தல்முதலாகப் பொழில்விளையாடுகிறபோதும் அவளதுகைவளைகள் அசைதல் பற்றி, 'நண்டாட்டியநங்கை' என்றான். 'நண்டு' என்றது - தனது பரியாயநாமமாகிய கடகமென்ற சொல்லைக் குறிப்பிட, அது - தன் பொருள்களில் ஒன்றான கைவளையை யுணர்த்திற்று; இது, லக்ஷித லக்ஷணை: (கம்பராமாயணத்தில் கேகயராஜவம்சத்தை "மயின் முறைக்குலம்" [மயில் = கேகயம். கேகயம் = கேகயநாடு] என்றதும், திருச்சந்தவிருத்தத்தில் பக்தியை "எட்டிரண்டுமிரண்டு" [எட்டிரண்டுமிரண்டு = பத்து; பத்து = பத்தி, பக்தி] என்றதும், சீவகசிந்தாமணியில் புத்திசேனனை "திங்கள்விரவியபெயரினான்" [திங்கள் = மதி. மதி = புத்தி] என்றதும் இத்தன்மையனவே.) உலகு, நாடு என்றவை - உலகத்தவர்மேலும், நாட்டார் மேலும் நின்றன. நங்கை கண்கள் என இயையும்.

நம்மாழ்வாரது திருக்குருகூரைச் சார்ந்த கம்பநாடரது ஞான வகைகள் தங்களையும் உலகத்தாரையும் பிறிதொன்றிற் செல்ல வொட்டாதபடி வசப்படுத்துந் திறத்தை, அவ்வாழ்வாரிடத்தில் அன்புகொண்ட பாகவதர் பாராட்டிக்கூறுதல், இதற்கு உள்ளுறை பொருள். இங்கு ஸ்வாபதேசத்தில், தலைவி - கம்பநாடர். தலைவன் - நம்மாழ்வாரடியார்களான பாகவதர். கண்கள் - ஞானவகைகள்; ஆராய்ச்சியாற் பலவிஷயங்களில் விரைந்துசெல்லவல்ல இவரது ஞானக்கண்ணின் அமைதிக்குக் கயல் ஒப்புமையாகத்தக்கதேனும்,

அதற்கு, இங்ஙனம் அனைவரையும் சிந்தைமற்றேன் றின்திறத்ததா காதபடி தன்பக்கல் அகப்படுத்துந்தன்மை இல்லையாதலால், 'நங்கை நாட்டங்களா லிந்தநாட்டையெல்லாந் திண்டாட்டிய கண்கள்போற் செய்யுமோகயல் தீங்குகள்' என்றனர். 'நண்டாட்டிய நங்கை' என்றதன் உட்கிடை - ஸ்ரீவைஷ்ணவர்கட்குத் தாம் அடிமைசெய்தற்கென்று கங்கணங்கட்டியுள்ள கம்பநாடரென்க. இங்ஙனம் தலைமகன் வார்த்தையாலே, தமது நிலைமையை வெளியிட்டனர் கம்பநாடர். (96)

[பிரிவாற்றாது வருந்துந்தலைவி இரங்கல்.]

97. தீயைக்கிழித்தொருதிங்கட்கொழுந்தெனச்செய்ததல்லாற்
பேயைக்கிழித்தெனவன்றிற்பனைபிளவாருளவா
நோயைக்கிழிக்கும்வகுளநல்காரிந்தநுண்பிறவி
மாயைக்கிழியைக்கிழித்தெம்மைவாங்கிடவல்லவரே.

(இ - ள்.) இந்த—, நுண் பிறவி - எளிய பிறப்பாகிய, மாயை கிழியை - மாயாரூபமான ஆடை எமது உயிரைப் போர்த்துள்ளதை, கிழித்து—, எம்மை—, வாங்கிட வல்லவர் - எடுத்துத் தமது திருவடிகளிற் சேர்த்துக்கொள்ள வல்லவராகிய எமது தலைவர்,—தீயை கிழித்து-நெருப்பைத் துண்டாகப் பிளந்தெடுத்து (அப்பிளவை), ஒரு திங்கள் கொழுந்து என செய்தது அல்லால் - ஒருபிறைச்சந்திரனைச் செய்ததே யல்லாமல்,—அன்றில் பனை - அன்றிற்பறவைகட்கு இருப்பிடமான பனைமரத்தை, பேயை கிழித்து என பிளவார் - பேயை இரண்டாகக் கிழித்தாற்போலப் பிளந்திட்டாரு மில்லை; உள ஆம் நோயை கிழிக்கும் வகுளம் நல்கார் - (அவர்விஷயமாக எமக்கு) உண்டாகிய காதல்நோயை நீக்கும்படியான மகிழம்பூமாலையைக் கொடுத்தலுஞ்செய்யார்;

தலைவனைப் பிரிந்து தவிக்கிற நிலையிலே பிறைக்கும் அன்றிற்கும் ஆற்றாத தலைவி தாரும்பெறாது வருந்தி இரங்கி இங்ஙனங் கூறின ளென்க. இதன் மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீங்குதல்.

கூடினார்க்குக் குளிர்ச்சியைச்செய்து மகிழ்ச்சியை விளைப்பதாய் மாலைப்பொழுதிலே விளங்குகிற பிறைச்சந்திரன், பிரிந்தார்க்குத் தாபத்தைச்செய்து வருத்தந்தருதலால், நெருப்புத்துண்டாகக் குறிக்கப்பட்டது: இது, சந்திரோபாலம்பநம் [சந்திரனைவெறுத்தல்.] திங்கட்கொழுந்து - இளஞ்சந்திரன். "ஓங்காநின்ற விருளாய்வந் துலகைவிழுங்கி மேன்மேலும், வீங்காநின்ற கருநெருப்பி னிடையே யெழுந்த வெண்ணெருப்பே" என்று (கம்பராமாயணத்திற்) பிராட்டி சந்திரனை நெருப்பென்றமை காண்க. இங்கு 'திங்கட் கொழுந்து' என்றமையின், 'தீயைக்கிழித்து' என வேண்டிற்று; தனக்குப் பிறை இங்ஙனமாதற்குக் காரணம் தலைவர்செய்த பிரிவேயாதலால், 'தீயைக்கிழித்து ஒருதிங்கட் கொழுந்தெனச் செய்தது' என அவரைக் கருத்தாவாக்கிக் கூறினள்.

("விளரிக்குரலன்றில் மென்பெடைமேகின்ற முன்றிற் பெண்ணை, முளரிக்குரம்பை", "முன்றிற்பெண்ணைமேல் முளரிக் கூட்டகத்து, அன்றிலின் குரலடருமென்னையே", "பெண்ணைமேற், பின்னுமவ்வன்றிற் பேடைவாய்ச் சிறுகுரல்" என்று பெரியாரும் பணிக்கும்படி,) பனைமரம் அன்றிற்பறவைகள் கூடுகட்டி வாழு மிடமாம். காமோத்தீபகமான குரல்கொண்டு வருந்துகிற அப்பற வைகள் தங்குமிடமாகிய பனைமரத்தைப் பிளந்தெறிந்துவிட் டால், அப்பறவைகள் இங்கு நிலைபெறாது அப்பாற்சென்றுவிடு மாதலால், தனக்கு அவற்றாலாகுந் துயர மின்று மென்பதுபற்றி, அதனை வேண்டுகின்றவளும், அது செய்யாமையைக்குறித்துத் தலைவன்மேற் குறைகூறுபவளு மாயினள். (முன்றில் தனிநின்ற பெண்ணைமேற் கிடந்தீர்கின்ற, அன்றிலின்கூட்டைப் பிரிக்க கிற்பவ ரார்கொலோ" என்று ஒருதலைவி கூறியதுங் காண்க.) 'கருநெடும்பனங்காடு முழுமையுங் காலுங்கையுமுடையது போல்வன" என்னும்படி பனைமரமும் பேயும் வடிவில் ஒத்தலால், 'பேயைக்கிழித்தென அன்றிற் பனைபிளவார்' எனப்பட்டது.

பிரிந்தநிலையிலே தலைவனதுமாலை கிடைக்கப்பெற்றால் அது கொண்டேனும் ஆறியிருக்குங் கருத்தின ளாதலின், அதனைக் கொடுத்தனுப்பாமையைப்பற்றியும் குறைகூறினள். உள-பலவின் பாற் குறிப்புவினையாலணையும்பெயர். துய்ப்பனதெவிட்டல், துயில்கொள்ளாமை, மொழிபலபிதற்றல். வெய்துயிர்ப்பு, நிறம் மாறுதல், உடல்மெலிதல், கண்ணீர்சோர்தல், அரற்றுதல், அழுங்கல், அயர்ச்சி, மயக்கம் முதலாக விரகவேதனை பலவகைப் படுதலால், 'உளவாம்நோய்' எனப் பன்மையாற்கூறப்பட்டது. "தெய்வந்தொழாஅள்கொழுநற் றொழுதெழுவாள்" என்றபடி குலமகட்குத்தெய்வம் கொழுநனேயாதலால், தனதுதலைவனை 'இந்தநுண்பிறவிமாயைக்கிழியைக் கிழித்து எம்மை வாங்கிட வல்லவர்' என்றாள். பிரிவாற்றாமையும் பிறவித்துயரங்களுள் ஒன்றேயாதலால், அதனைப்போக்கி எம்மைத் தம்மொடுசேர்துத்க் கொள்ள வல்லராயிருந்தும் அதுசெய்திலரென்று பழித்தவாறு மாம். நுண்மை - இங்கு, எளிமையின்மேலது. பிறப்பு மாயா காரியமாதலால், அதனை மாயைக்கிழியாக உருவகப்படுத்துதல் ஏற்கும்.

தமதுஞானக்கண்ணுக்கு ஒரோசமயத்தில் இலக்கான நம்மாழ் வார் மறைந்தவளவிலே, அவரது நிரந்தராநுபவத்தைப் பெறும் விருப்பினாற் பிரிவாற்றாதுவருந்துகிற கம்பநாடர், மற்றும்தம்மை வருத்துவனவான விவேக விளக்கத்தையும், லௌகிகபதார்த்தங் களையும் குறித்தும், தமக்கு ஆழ்வார் அருள்செய்யாமையைக் குறித்தும் இரங்கிக்கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறைபொருள். உளவாம்நோயைக்கிழிக்கும் வகுளம் நல்கார் - எமக்குஉள்ளன வான துன்பங்களைப் போக்கவல்ல தமதுஇனிமையை அருளா ரென்றபடி. ஆழ்வார்சூடிக்களைந்த மகிழமாலையைப் பெறுவதில் ஆதரத்தால் இங்ஙனங்கூறியதுமாம்; புகவத் பாகவதர்களுடைய பிரஸாதமாகக் கிடைப்பது எதுவும் அடியார்கட்கு உள்ள

நோயைத் தீர்க்குந்தரத்த தாதலால், 'உளவாம் நோயைக் கிழிக்கும் வகுளம்' என்றது ஏற்கும். அந்யாபதேசத்தில் சந்திரனென்றது, ஸ்வாபதேசத்தில் விவேகமாம்; பேறுகிடையாத நிலையில் விவேகமும் வருத்தத்துக்கே காரண மாதலால், அதுவும் வெறுப்புக்கு இடமாம். 'அன்றிற்பனைபிளவார்' என்றது, தம்மைவருத்தக்கடவனவான லௌகிகபதார்த்தங்கட்கு ஆதாரமான இப்பிரபஞ்சத்தினிடத்து வெறுப்பினாற் கூறியது; கீழ் 89 - ஆஞ் செய்யுளில் "தன்வாயடங்கா, வினையொன்றியவன்றி லுக்கிடங்காட்டவிரி தலைய, பனையன்றியுமுளதோ தமியேற்குப்பழம்பகையே" என்றதன் உள்ளுறையும் காணத்தக்கது. பிரகிருதிசம்பந்தத்தாலாகிய எமதுபிறப்புத்துன்பங்களைப்போக்கி எம்மைத் தம்பக்கல் சேர்த்துக்கொள்ள வல்லராயிருந்தும் அதுசெய்தருளினரில்லையென்று குறைகூறுவார், 'நுண் பிறவிமாயைக்கிழியைக்கிழித்து எம்மைவாங்கிடவல்லவர்' என்றார். (97

[இதுவும் அது.]

98. வல்லம்புலிமுகவாயிற்கரும்பின்மறுபிறப்பைக்
கொல்லம்புலியொர்வகுளங்கொடார்கொடுங்கோகுகட்டிச்
சல்லம்புலியிட்டெதிரிடப்பாய்வதுதாயென்றிங்கோ
ரில்லம்புலியுமுண்டம்புலிமீளவெழுகின்றதே.

(இ - ள்.) அம்-நீரிற்பொருந்திய, புலி-தாமரைமலர்போன்ற, முகம் - திருமுகமண்டலத்திலேயுள்ள, வாயில் - திருவாய்மலரினின்று வெளியான, கரும்பின் - கருப்பஞ்சாறுபோ லினிய திருவாய்மொழிமுதலிய திவ்வியப் பிரபந்தங்களைக்கொண்டு, வல் - விரைவிலே, மறு பிறப்பை கொல் - (கருமவசத்தால் மனிதர்கட்கு உண்டாகும்) மறுபிறப்பை யொழித்திட்ட, அம் புலி-அழகிய சிங்கம்போன்றவராகிய எம்துதலைவர் [நம்ஆழ்வார்], ஓர் வகுளம் கொடார் - ஒப்பற்ற (தமது) மகிழமலர்மாலையை (எனக்கு)த் தந்தருளுகின்றாரில்லை; கொடுங் கோகு உகட்டி - கொடுமையான முறைகேடு தலைக்கேறி [அக்கிரமம்விஞ்சி], சல்லம் பு(ல்)லியிட்டு எதிரிட பாய்வது - முள்ளம்பன்றியைப்போன்று எதிர்த்துப்பாய்வதாகிய, தாய் என்ற ஓர் இல்லம் புலியும் - தாயென்கிற ஒரு வீட்டுப்புலியும், இங்கு உண்டு - இவ்விடத்திலே (என்னை இடைவிடாது வருத்திக்கொண்டு) உள்ளது;(இவ்வளவோடு நிற்காமல்), அம் புலி மீள எழுகின்றது - (வானத்திலும்) ஓர் அம்புலி [சந்திரன்] (என்னை வருத்துமாறு) மீளவும் தோன்றுகின்றது; (எ-று.) —ஈற்றுஏகாரம் - இரக்கம்.

தலைவனைப்பிரிந்து அப்பிரிவைப்பொறாது வருந்தும்நிலையிலே தாரும்பெறாது துயருறுகிற தலைவி, தாயின்கொடுமைக்கும் சந்திரோதயத்துக்கும் ஆற்றாது இங்ஙனம் இரங்கிக்கூறினளென்க. மெய்ப்பாடும், பயனும் - கீழ்ச் செய்யுட்குக் கூறியவையே.

வல் - விரைவுகுறிக்கும் இடைச்சொல்; இது, 'கொல்' என்பதனோடு இயையும். 'அம்' என்ற சொல்-முதலடியிலே நீரையும், இரண்டாமடியிலே அழகையும் உணர்த்திற்று; நான்காமடியிற்

சாரியையாய் நின்றது. முதலடியில் 'புலி' என்ற சொல் - தன் பரியாயநாமமான புண்டரீக மென்பதையுணர்த்தி, அதன் ஒருபொருளாகிய தாமரையைக் குறித்தது; லக்ஷிதலக்ஷணை. ("புலியைக்கொடுத்துப் பசுவாங்கியோர் புலிப்பூங்குழலாள், புலியைப் பசுதின்னவிட்டுப் புலியைத்திணுதகற்றிப், புலியயரைத்துப் பலகாரஞ் செய்து பொருந்து முகப், புலியைக் களிப்புடன் சாறுவைத்தாள் தன் புருடனுக்கே" என்ற பிற்காலத்துச் செய்யுளிலே, முகத்தாமரையென்ற பொருளில் 'முகப்புலி' என்றதுங் காண்க. [அச்செய்யுளில், முறையே, புலி = வேங்கை = பொன். புலி - மயிர்ச்சாந்து. புலி-புல். புலி - ஓர் மிருகம். புலி = வரி = நெல். புலி = புண்டரீகம் = தாமரை. சாறு - திருவிழா.] வேங்கையென்ற பொருளில் "தீத்தீண்டுகையார்" என்றலும் [தீத்தீண்டுகை = வேம்கை = வேங்கை] அவலக்ஷணமென்ற பொருளில் "எட்டேகால் லக்ஷணம்" என்றலும் [எட்டேகால் = அவ = அவ] போல்வனவும் இவ்வகையிலக்கணையே.) நீரினின்று பறிக்கப்பட்டுச் சிறிதுவாடிய தாமரையன்றி நீர்நிலையிலேயே செழித்துப் பொலிவுமாறாது நிற்குந் தாமரைமலர் போன்ற முகமென்பாள், 'அம் புலி முகம்' என்றாள்; இது, ஆழ்வாரது திருமுகத்தினழகிற் கொண்ட ஈடுபாட்டினாற் கூறியது. இது, வாய்க்கு அடைமொழியாய் நின்றது. முகவாயின் - முகத்தினிடத்திலிருந்து எழுந்த எனினுமாம்.

கருர்ப்பு - அதுபோல் இன்சுவைத்தானபாசுரத்துக்கு உவமையாகுபெயர்; இன் - ஐந்தனுருபு, ஏது. தமதுபாசுரங்களிற் கூறிய உபதேசத்தால் மனிதர்கள் இனிப்பிறத்தலில்லாது முத்திபெறுமாறு செய்தருளியவ ரென்பது, 'வாயிற்கரும்பின் மறுபிறப்பைக் கொல் அம்புலி' என்றதன் கருத்து. மறுபிறப்பு - புநர்ஜந்மம். "சரண மாகுந் தனதாளடைந்தார்க்கெல்லாம், மரணமானால் வைகுந்தங்கொடுக்கும் பிரான்" என்றபடி இப்பிறப்பின் முடிவிலேயே முத்தியருள்கின்ற அருமையைக் குறித்தற்கு, 'மறுபிறப்பை விரைவிற்கொல்லுகிற' எனப்பட்டது. "சிங்கவிராசியும் நால்வகைச்சாந்தத்து ஒன்றும் வியாக்கிரமு மரைப்பர் புலியே".என்றபடி புலியென்றசொல் சிங்கவிராசியையுணர்த்தலால், அது இங்குச் சிங்கமென்றமாத்திரமாய் நின்றதென்க. பலவகைப்பிராணிகளை விரைவிற்கொல்லவல்ல சிங்கம் போல, மறுபிறப்பை விரைவிற் கொல்லுஞ் சிங்கம் ஆழ்வா ரென்க. பரசமயங்களாகிய யானைகளை அழிக்குந் திறம்பற்றியும், அவரைச் சிங்கமெனத் தகும்; பரசமய கோளரி யென்பர். அன்றியும், கம்பீரமான தோற்றத்திலும் நடையிலும் உத்தமபுருஷனுக்குச் சிங்கம் உவமைகூறப்படும். சிங்கம் போன்றவரைச் சிங்கமென்றது, உபசார வழக்கு.

'கோகுகட்டு' என்ற சொல்தொடர் - "பைதலைக்கோகு கட்டிட்டேட்டி லேற்றியபண்பனையே" எனக் கீழ் 38 - ஆஞ் செய்யுளிலும் வந்துள்ளது. திருவாய்மொழியில் "கும்பிடுநட்டமிட்டாடிக்கோகுகட்டுண்டுழலாதார்" என்றதுங் காண்க. கோகு - அடைவுகேடு, உகட்டுதல் - தலைமண்டையிடுதல், மேலிடுதல். முள்ளம்பன்றியைக் குறிக்கிற ஶல்ய மென்ற வடசொல், சல்ல

மென விகாரப்பட்டது; புல்லியிட்டு என்பது, புலியிட்டு எனத் தொகுத்தல்விகாரமடைந்தது; புல்லுதல்-சார்தல், தழுவுதல்:இது இங்கு உவமவாசகமாய் நின்றது; ("புத்தேளுலகிற் பொன்மரம் புல்ல" என்றவிடத்துப்போல: "எள்ளவிழையப் புல்லப் பொருவக், கள்ள மதிப்ப வெல்ல வீழ, என்ருங் கெட்டே பயனிலையுவமம்" என்ருர் ஆசிரியர் தொல்காப்பியனாரும்). இனி, சல்லம் புல்லியிட்டு - முள்ளம்பன்றியின் தன்மையைக்கொண்டு எனினுமாம். என்றிங்கு - தொகுத்தல். தாயைப் புலியென்றதற்கு ஏற்ப, 'பாய்வது' என்றஅடைமொழி கொடுக்கப்பட்டது. பாய்வது - ஒன்றன்பால் வினையாலணையும் பெயர்; தொழிற்பெயராகக்கொண்டு, புலி பாய்வதும்உண்டு என மொழிமாற்றியுரைத்தலும் ஒன்று. காட்டுப் புலியினும் வேறுபாடுதோன்ற, 'இல்லம்புலி' எனப்பட்டது. இங்ஙனம் தாயைவெறுத்துரைத்தற்குக் காரணம், கீழ் (53) "அன்னையுடன், பின்ருதவண்ணமெல்லாம் பின்றுவித்து", (85) "மனையொன்றிய கொடியாள்" என்ற இடங்களிற் கூறிப்போந்தாம். தாயினது மிக்ககொடுமை விளங்க, அவட்கு, முள்ளம்பன்றியும் புலியும் உவமைகூறப்பட்டன. அவள்சொல்லுங் கொடுஞ்சொற்கள் முட்போலத் தன்நெஞ்சில் தைத்தல்பற்றி அவளை முள்ளம்பன்றியென்றும், அவளது சீற்றம் தனக்கு மிக்க அச்சத்தைத் தருதல்பற்றி அவளைப் புலியென்றும் ஒப்புமையாற் குறித்தாள்.

ஒரு கொல்லம்புலியோ எனக்கு வகுளமாலை கொடுக்கின்றதில்லை; அதுபற்றி யான் வருந்துஞ்சமயத்திலே இம்மண்ணுலகத்து இல்லம்புலியொன்று எதிரிடப்பாய்கின்றது; அதனோடு, வானத்திலும் ஓர் அம்புலி எழுந்து பாயவருகின்றதே! இனி இங்ஙனம் பலபுலிகளால் ஒறுக்கப்படுகிற ஒரு நான் பிழைப்பது எவ்வாறு? என்று இரங்கினளென்க. இது, சந்திரோபாலம்பனம். 'அம்புலி' என்பது ஒரு சொல்லாய்ச் சந்திரனையுணர்த்தும். நிலாத்தோற்றத்தால் முந்தினநாளிரவிலாகிய துயரத்தை ஞாபகத்திற் கொண்டு, 'மீளவெழுகின்றதே' என்ருள். மீள - நேற்றுவந்து போனதேயன்றி இன்றைக்கும் என்றபடி. எழுதல் - உதித்து வருதல்.

இச்செய்யுளில் 'புலி' என்ற சொல் வெவ்வேறுபொருளில் அடுத்து வந்தது, **சொற்பின்வருநிலையணி**. அதனோடு **திரிபு** என்ற சொல்லணியுங் காண்க. நான்காமடியில், 'இல்லம்புலியுமுண்டு அம்புலி மீள எழுகின்றது' என்ற சொல்நயமும் கருதத்தக்கது. 'சல்லம்புலியிட்டு எதிரிடப்பாய்வது' என்றது, **உவமையணி**. 'தாயென்றிங் கோரில்லம்புலியு முண்டு' என்றது, **உருவகவணி**. இங்ஙனம் பல அணிகள் சேர்ந்துவந்தது, **சேர்வையணியாம்**.

அகக்கண்ணுக்குப் புலனாகி மறைந்த நம்மாழ்வாரது பிரிவையாற்ருது வருந்துகிற கம்பநாடர் இரங்கிக்கூறும் வார்த்தை, இதற்கு உள்ளுறை பொருள். 'அவ்வாழ்வார் தாமாகவந்து அருள் செய்யுமளவும் ஆறியிராது பேற்றுக்கு விரைந்துதுடித்தல் தகுதியன்று' என்பது முதலாக உறுத்திகூறுகிற பரிவுடைய ஞானிகள், 'கொடுங்கோகுகட்டிச் சல்லம் புலியிட்டெதிரிடப்பாய்வது

தாயென் றிங்கோரில்லம்புலியு முண்டு' என்று வெறுக்கப்பட்டன ரென்க. 'அம்புலி மீளவெழுகின்றது' என்றது, பிரிவாற்ருத போது ஞானேதயமும் வருத்துவதாதல்பற்றி; ('சந்த்ரோதயமென்பது, அலாபதசையில் விவேகமும் பாதகமானபடியை' என்றனர் ஆன்ருேர்.) பிறவும், முன்கூறியவாற்ருல் விளங்கும். (98)

99. எழுதியநாளும்வினையுந்தொகுத்தெம்மையிப்பிறவிப்
புழுதியினுற்றிட்டுவைப்பரிதாற்புகழ்மெய்ப்புலவோர்
தொழுதியனுயகனேதுங்கனற்றுறைநீர்ப்பொருநை
வழுதிநன்னுடன்றிருவாய்மொழியெம்மனத்தனவே.

(இ-ள்.) புகழ்-கீர்த்தியையுடைய, மெய் புலவோர்-உண்மைப் புலவர்கள் [தத்துவஞானிகள்], தொழுது இயல் - வணங்கி அடியார்களாகி ஒழுகப்பெற்ற, நாயகன் - தலைவரும், ஓதும் கனல் துறை நீர் பொருநை வழுதி நல் நாடன் - (வேதங்களாற்) சொல்லப்படுகிற அக்கினிகாரியமாகிய யாகவகைகள் நடக்கப் பெற்றதும் நீரரு்த தாமிரபர்ணிநதி பாயப்பெற்றதுமாகிய சிறந்த பாண்டியநாட்டிலே திருவவதரித்தவருமான நம்மாழ்வார் அருளிச்செய்த, திருவாய்மொழி - திருவாய்மொழியென்ற பிரபந்தத்தின் பாசுரங்கள், எம் மனத்தன - எமதுமனத்திலே நிலை கொண்டிருக்கின்றன; (ஆதலால்),—எழுதிய நாளும் வினையும் தொகுத்து -(இவ்வளவென்று பிரமன் எமக்கு) எழுதிவைத்துள்ள ஆயுளையும் பழவினைத்தொடர்பையும் (எம்மோடு) இயைபுபடுத்தி, எம்மை—, இ பிறவி புழுதியில் நாற்று இட்டு வைப்பு - இவ்வாறு பிறத்தலாகிய புழுதிக்காலில் நாற்ருகநட்டு விளையும்படிவைத்தல், அரிது - முடியாததாம்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

கீர்த்திபெற்ற மதுரகவிகள் முதலிய உண்மைப்புலவர்கள் வணங்கி வழிபடப்பெற்ற பரமாசாரியரும், வேதவிதிமுறை தவருது நிகழும் வேள்விகளும் அவற்றின் பயனுகும் பருவமழைப் பெருக்கும் அருத பாண்டிவளநாட்டில் திருவவதரித்தவரு மாகிய நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழிப்பாசுரங்களை யான் இடையருது சிந்தித்துவருகின்றே னுதலால், இனி என்னைப் பிரமன் வினைவசமாக ஆயுளைக்கற்பித்து இவ்வுலகத்திலே பலவகைப் பிறப்புக்களில் இட்டுவைக்க முடியா தென்பதாம். "மாதவன்பாற் சடகோபன், தீதவமின்றியுரைத்த, ஏதமிலாயிரத் திப்பத்து, ஓதவல்லார் பிறவாரே," "குருகூர்ச்சடகோபன், நேர்ந்தவோராயிரத்திப்பத்து அருவினைநீறு செய்யுமே" என்று ஆழ்வார்தாமே திருவாய்மொழியிற் பயன் அருளிச்செய்தபடி, அதனை அநுசந்தாநஞ் செய்வார் வினையனைத்துந் தொலைந்து பிறப்பற்று வீடுபெறுதல் நிச்சயமாதலால், இங்ஙனம் கூறினுர்.

எம்மை, எம் என்றவை - தனித்தன்மைப்பன்மை; தம்மைச் சேர்ந்தவர்களையுங் கூட்டிய உளப்பாட்டுத்தன்மைப்பன்மை யெனினுமாம். நாள்-உடம்போடு கூடிவாழும் நாள். வினை-சஞ்சித கருமம். 'எம்மை' என்றது, தமது உயிரை. நாறுவது நாற்று எனக் காரணக்குறி; நாறுதல் - முளைத்தல். 'எம்மை இப்பிறவிப்

புழுதியில் நாற்றிட்டுவைப்பு' என்றது, உருவகவிசேடம். புலவர் - புலவோர் எனச் சிறுபான்மை ரகரவீற்று அயல் அகரம் ஓகாரமாயிற்று. நாயகன் - பிரபந்நஜநகூடஸ்தர். (99)

100. மனையும்பெருஞ்செல்வமுமக்களுமற்றைவாழ்வுந்தன்னை
நினையும்பதமெனநின்றபிரான்குருகூர்நிமலன்
புனையுந்தமிழ்க்கவியாலிருணீங்கிப்பொருள்விளங்கி
வினையுந்திரிவுற்றனகுற்றநீங்கினவேதங்களே.

(இ - ள்.) 'மனையும் - மனைவியும், பெருஞ்செல்வமும்—, மக்களும் - பிள்ளைகளும், மற்றை வாழ்வும் - மற்றுமுள்ள வாழ்வுகளும், (ஆகிய இவையெல்லாம்), தன்னை நினையும் பதம்-(ஆழ்வாராகிய) தம்மைத் தியானிக்கின்ற நிலைமைதான்,' என - என்று (ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும்) கொள்ளும்படி, நின்ற பிரான் - (அத்தொண்டக்குலத்துக்குத்) தலைவராய் நின்றவராகிய, குருகூர் நிமலன் - திருக்குருகூரில் அவதரித்த குற்றமற்ற நம்மாழ்வார், புனையும் - பாடிய, தமிழ் கவியால் - தமிழ்ப்பாசுரங்களால், இருள் நீங்கி - அஜ்ஞாநாந்தகாரம் ஒழிந்து, பொருள் விளங்கி - தத்துவார்த்தம் விளங்க, வினையும் திரிவுஉற்றன - (உயிர்களின்) கருமசமூகங்களும் அழிவடைந்தன; வேதங்கள் குற்றம் நீங்கின - வேதங்களும் (எளிதில் மெய்ப்பொருள் விளங்காதிருந்த) குற்றம் நீங்கப்பெற்றன; (எ - று.)

ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் நம்மாழ்வாரையே தமது பலவகை ஐசுவரியங்களாகக்கருதுகின்றனரென்பது, முதலிரண்டடியில்விளக்கப்பட்டது. நம்மாழ்வார் விஷயமாக ஆளவந்தார் அருளிச்செய்த "மாதா பிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ் ஸர்வம் யதேவநியமேநமதந்வயாநாம் - ஆத்யஸ்யந8 குலபதேர்வகுளாபிராமம் ஸ்ரீமத்ததங்க்ரியுகளம்ப்ரணமாமி மூர்த்நா" என்ற தனியன் 'எமது வம்சத்தார்க்கு எந்நாளும் தாயும் தந்தையும் மனைவியரும் மக்களும் செல்வமும் எல்லாம் ஆவது எதுவேயோ, அந்த, எமதுகுல முதல் தலைவரான நம்மாழ்வாருடைய மகிழமலர் மாலை யணிந்து விளங்குந் திருவடியிணையை, தலையால் வணங்குவேன்' என்னும் பொருளதாதலுங் காண்க. "உறுபெருஞ் செல்வமுந் தந்தையுந் தாயு முயர்குருவும், வெறிதருபூமகள் நாதனு மாறன்விளங்கியசீர், நெறிதருஞ் செந்தமிழாரணமே யென்றிந் நீணிலத்தோ, ரறிதர நின்ற விராமாநுசன்" என இராமாநுசநூற்றந்தாதியில்வருவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. 'தன்னை நினையும் பதம்' என்பதற்கு-தமது திருவடிகளைத் தியானித்தலென்று அரிதிற் பொருள்கொள்ளவும் அமையும். இங்குக்கூறப்படாத இம்மைப்பயன்களனைத்தும் மோக்ஷோபாயமும் 'மற்றை வாழ்வு' என்றதில் அடங்கும். மனைவிபோல மனத்துக்கு மிக இனிய பொருளும், இளமையில் தமக்கு இன்பந்தந்து பின்பு தம்மைப்பாதுகாப்பவராய் மறுமையில் நரக நிவிருத்திக்குங் காரணமாகிற மக்கள்போலப் பலவாற்றால் உதவுபவரும், சகல போகங்களுக்கும் இன்றியமையாததாகிற செல்வம் போல மிக விரும்பப்படும் பொருளும், மற்றுமெல்லாம் தமக்கு நம்மாழ்வாரென்றே கருதுகின்றனர் அடியார்க ளென்க. அவ்விஷயங்களின்

அநுபவத்தால் அடையும் ஆனந்தமெல்லாம் ஆழ்வாரைத்தியானித்தலாற் பெறலாகுமென்பது கருத்து.

இனி, இதற்கு 'மனைவியும் பெருஞ்செல்வமும் மக்களும் மற்றை வாழ்வும் எல்லாமாவது, தமது ஆதிஸ்வரூபமான ஸ்ரீமந் நாராயணனை இப்பொழுது அடியவராகிய தாம் மனத்திற் கொண்டு தியானித்தலே' என்று சொல்லி நின்ற உபகாரகரென்று பொருள்கொள்ளவும் இடமுண்டு; "மேலாத்தேவர்களும் நிலத்தேவரும் மேவித்தொழும், மாலார் வந்தினநா ளடியேன் மனத்தே மன்னினார், சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும், மேலாத் தாய்தந்தையும் அவரே யினியாவாரே" என்ற திருவாய் மொழிப்பாசுரங் காண்க. மிக்க விருப்பத்துக்கு இடமாதல்பற்றி மனைவியை முதலிற் கூறி, "இல்லாளை யில்லாளும் வேண்டாள்" என்றபடி அவளது காதற்கும் "பொருளிலார்க்கு இவ்வுலகமில்", "பொருளுடையான்கண்ணதே போகம்" என்றபடி அவளோடு கூடியனுபவிக்கும் இன்பங்கட்கும் இன்றியமையாமைபற்றி அவளையடுத்துப் பெருஞ்செல்வத்தையும், அச்செல்வத்தைப் பிற்காலத்திற் பெற்றுக்கொள்ளுதற்கு உரியராய் வேண்டப்படுதலும் "மக்கட்பேற்றிற்பெறும்பேறில்லை" என்றபடி எல்லா ஐசுவரியங்களினும் புத்திரபாக்கியம் சிறந்ததாதலும் "தம்பொருளென்ப தம்மக்கள் அவர் பொருள், தந்தம்வினையான் வரும்" என்பதும் பற்றி அச்செல்வத்தையடுத்து மக்களையும் நிறுத்தி, பிறவற்றை 'மற்றைவாழ்வு' எனக்கடைசியில்வைத்தார்.

'புனையுந் தமிழ்க்கவி' என்ற சொற்போக்கினால், தொடுத்துச் சாத்திய தமிழ்ப்பாமாலையென்னலாம். ஆழ்வாருடைய திவ்வியப் பிரபந்தங்களினால் ஐயந்திரிபற உண்மைப்பொருள்விளங்கவே, வேதத்திற்கு 'மயங்கவைத்தல்' என்னுங் குற்றம் இல்லையாயிற் றென்க.

விளங்கி = விளங்க: எச்சத்திரிபு. மனை - மனைவி: இடவாகு பெயர். நிமலன் - வடசொல். (100)

மன்றேபுகழுந்திருவழுந்தூர்வள்ளன்மாறனைமுன்
சென்றேமதுரகவிப்பெருமாடென்றமிழ்த்தொடையி
லொன்றேபதிகமுரைத்தவன்பொன்னடியுற்றுநின்று
னென்றேபதிகம்பதிகமதாகவிசைத்தனனே.

(இ - ள்.) மன்றே புகழும்-எச்சபையாராலும் புகழப்படுகிற, திருஅழுந்தூர் வள்ளல்-திருவழுந்தூரில் அவதரித்த உதாரியாகிய கம்பநாட்டாழ்வார்,—'முன் - முற்காலத்தில், மதுரகவி பெருமாள் - மதுரகவியாழ்வார், மாறனை - நம்மாழ்வாரை, சென்று - போய் அடைந்து, தென் தமிழ் தொடையில் - அழகிய தமிழ்ப்பாமாலை கொண்டு, ஒன்றே பதிகம் உரைத்து - ('கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்னும்) ஒருபதிகத்தையே பாடி, அவன் பொன் அடி உற்று நின்றான்-அவ்வாழ்வாருடைய திருவடிகளைச் சேர்ந்து வாழ்ந்தனர்,' என்றே - என்று உட்கொண்டு, பதிகம் பதிகம் அது ஆக இசைத்தனன் - அப்பதிகம் பத்துள்ளதாக [நூறுபாடல்களாக] (இவ்வந்தாதியை அந்த நம்மாழ்வார்விஷயமாகப்) பாடினர்; (எ - று.)

வள்ளல். இசைத்தனன் என இயையும். முற்காலத்திலே மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரைச்சரணமடைந்து 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் ஒரு பதிற்றந்தாதியைப் பாடிப் பரமபத மடைந்தன ரென்பதைக் கருதி, பிற்காலத்திலே கம்பநாட்டாழ் வார் தாமும் அங்ஙனமே பேறுபெறுமாறு அதற்குப் பத்து மடங்காக இந்த ஆழ்வார்நூற்றந்தாதியைப் பாடினர் என்பதாம். கம்பர் தாம் ஆழ்வார் விஷயமாகப் பிரபந்தம்பாடுதற்கு மதுரகவி யாழ்வாரை "மார்க்கதர்ஸீ மஹர்ஷி:" என்றபடி வழிகாட்டி யாகக் கொண்டன ரென்க. மதுரகவியாழ்வாரோடு கம்பநாட் டாழ்வார்க்கு ஒருபுடையொப்புமை இங்குத் தோன்றும். இவ்விரு வரும் ஆழ்வாரெனப்படுதற்குக் காரணம், நம்மாழ்வார்விஷய மாகப் பிரபந்தம்பாடிய சிறப்பன்றோ? அந்த மதுரகவி ஒரு பதிகம்பாடினர்; அதற்குஈடாக இவர் பத்துமடங்கு பாடிய தனுல், விஸ்தாரகவியாவர். அவர் வடதிசையினின்று ஆழ்வார் திருநகரிக்குச்சென்று தசகம்பாடினர்; இவர் திருவரங்கத்தி லிருந்தே சதகம் பாடினர்.

மன்று - பலர்கூடும் இடம். சிலரேனும் பலரேனும் கூடும் இடங்களிலெல்லாம் அவர்களனைவராலும் பாராட்டிப் பேசப்படு கின்றது கல்வியிற் பெரிய கம்பரது கீர்த்தி யென்பது, 'மன்றே புகழுந் திருவழுந்தூர்வள்ளல்' என்றதனுற் போதரும். முன்பு ஐம்புலன்வழிச் சென்றிருந்தமை தவிர்ந்து பின்பு எம்பெருமானைச் சரணமடைந்து ஆழ்வாரருளைப் பெற்றதனு லாகிய தமதுபுகழை இங்ஙனம் பாராட்டிக்கூறுகின்றனராதலால், இது தற்புகழ்ச்சிக் குற்றத்தின்பாற்படாது. "மன்றின்மலிபுகழ் மங்கைமன் கலி கன்றி" என்று, திருமங்கையாழ்வார் தாம்பாடிய பெரியதிருமொழி யின் ஈற்றில் தம்பெருமையைத் தாமே வெளியிட்டதுங் காண்க. கம்பர் பிறந்த இடம் திருவழுந்தூராதலை, "சீரணிசோழநாட்டுத் திருவழுந்தூருள் வாழ்வோன், காரணக்கொடையான் கம்பன் தமிழினுற் கவிசெய்தானே" என்ற கம்பராமாயணத்தனியன் கொண்டும் உணர்க. வடமொழியில்வழங்கிய ஸ்ரீராமசரித்திரத் தைத் தமிழ்நாட்டவர்யாவரும் எளிதில் ஓதியுணர்ந்துஉய்யும்படி சிறந்த பெருங்காப்பியமாகப் பாடியுதவிய பெருவண்மையுடைமை பற்றி, 'வள்ளல்' என்ருர்; "கம்பநாடுடையவள்ளல் கவிச்சக்கர வர்த்தி பார்மேல், நம்புபாமாலையாலே நரருக்கின்றமுதமீந்தான்" என்ற கம்பராமாயணத் தனியனையுங் காண்க: "கவிநல்கு கொடைக்காரணன்" என இந்நூற்சிறப்புப்பாயிரத்திற் கூறியதும் இதுபற்றியே.

குலசேகராழ்வாரை 'குலசேகரப்பெருமாள்' என்ருற்போல, மதுரகவியாழ்வாரை 'மதுரகவிப்பெருமாள்' என்ருர்; இராமாநுச நூற்றந்தாதியில், திருப்பாணாழ்வாரை "பாண்பெருமாள்" என் பதுங் காண்க. பெருமாள்பக்கல் கொண்ட பக்திமிகுதியா லாகிய ஈடுபாட்டினுல் அப்பெருமாள்மயமாகுதலால், ஆழ்வார்கள் 'பெருமாள்' எனப்படுவர். மதுரகவியாழ்வார் - பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவர்; "தேவு மற்றறியேன் குருகூர்நம்பி, பாவி னின்னிசை பாடித்திரிவனே" என்று நம்மாழ்வார்க்கே தொண்டு

பூண்டொழுகியவர். முன் - கலியுகத்தொடக்கத்தில், பாண்டிய நாட்டில் திருக்குருகூர்க்கு அருகிலுள்ள திருக்கோளூரிலே நம்மாழ்வார்க்குமுன்னமே உதித்துச் செவிக்கினியசெஞ்சொற் கவிகளைப் பாடவல்லரானதனால் மதுரகவியென்று திருநாமம் பெற்ற மெய்யடியவர், திவ்வியதேசயாத்திரையாய் உத்தரதேசஞ் சென்று திருவயோத்தியி லிருந்தபோது தென்திசையில் திவ்விய மானதொரு பேரொளிப்பிழம்பைக் கண்ணுற்று வியந்து அதனை இன்னதென்று அறியுமாறு குறிக்கொண்டு மீண்டு ஆழ்வார்திரு நகரியையடைந்து அப்பெருஞ்சோதி அங்கு அவதரித்துள்ள நம்மாழ்வாரது திருமேனிவிளக்கமேயென்று அறிந்து அவர்க்கு ஆட்பட்டு, 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்ற திவ்வியப்பிரபந்தம் பாடின ரென்பது தோன்ற, 'சென்று' எனப்பட்டது. இங்ஙனம் அவர் நம்மாழ்வார்க்குத்திருவடித்தொண்டராய் ஒழுகி அவரது சீர்பாதத்திற் சேர்ந்தன ராதலால், அந்நம்மாழ்வாரது திருவடிநிலை 'மதுரகவிகள்' என இவர்திருநாமத்தையிட்டு வழங்கப்பெறும். பத்துச்செய்யுள் கொண்டது, பதிக மெனப்படும். திருநாமப்பாட்டு நீங்கலாகக் கண்ணிநுண்சிறுத்தாம்பு பத்துச் செய்யுளுடையது.

வள்ளல் - வண்மையையுடையவன். மாறனை உரைத்துளன இயையும். மதுரகவியாகியபெருமாள்என இருபெயரொட்டு. தென் தமிழ் - தென்திசையில் வழங்குதலால் தென்மொழியெனப் படுகிற தமி ழெனினுமாம். ஒன்றே, ஏ - சிறப்பு. பொன் அடி - அழகிய பாதம்; அரிய திருவடி. நின்றூன் - அழியாப்பேற்றில் நிலைநின் றனர். என்றே, ஏ - தேற்றம்.

இச்செய்யுள், நூலாசிரியர் தாமே தம்மைப் பிறன்போலும் பாயிரங் கூறியது. இது, திருநாமப்பாட்டு எனப்படும். பதிகம் பாயிரம் என்ற சொற்களால் இதனைவழங்குதலும் உண்டு. (பிரயோகவிவேகநூலார் 'இது, தன்னைப்பிறன்போலும்நாந்தி கூறுகின்றது,' 'வடநூலார் தாமே பதிகமும் உரையுஞ் செய்வார்', 'இனிச் சம்பந்தர் சடகோபர் முதலாயினோரும், திவாகரரும் பதி னெண்கீழ்க்கணக்குச்செய்தாரும் முன்னாகப் பின்னாகப் பதிகங் கூறுவதுங் காண்க' என்றவை கருதத்தக்கன.) இதனைத் தற் சிறப்புப்பாயிர மென்பர். இது, ஒருவகைக்கவிசமய மாதலால், தற்புகழ்ச்சியாகாது.

இவ்வந்தாதியைப் பாடியவரும் ஓதினவர்களும் நம்மாழ்வாரது பொன்னடியையடைவ ரென்ற நூற்பயன் இச்செய்யுளில் தொனித்தலால், இது, பலஸ்ருதி கூறியவாறுமாம்.

சடகோபரந்தாதி முற்றிற்று.

அநுபந்தம்.

இந்நூலின் 12, 20, 21, 43 - இச்செய்யுள்களுக்கு—கம்ப நாடர் தலைமகளாகவும், பாகவதர் அல்லது நம்மாழ்வார் தலைமக னாகவுங் கொண்டு உள்ளுறைபொருளுரைத்தலே சிறக்கும்.

சடகோபரந்தாதிச்

செய்யுண்முதற்குறிப்பகராதி.

பிழைத்திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	9	யடியார்ளெ	யடியார்களெ
37	27	அந்நதமான	அநந்தமான
56	43	யமைப்ப்பா	யமைப்பா
85	18	குருகைபிரான	குருகைப்பிரான
94	39	படுமினே	பாடுமினே
126	3	ஓடை	ஓடை
131	20	மகிழ்ப்பூ	மகிழ்பூ
133	40	பட்டவ	பட்டவன்
140	8	சடகோனின்	சடகோபனின்

மற்றும் பிழைகள் காணப்படினும் திருத்திக் கொள்ளவும்.



ஏ ரெ ழு ப து

மூலமும் உரையும்

ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரும்

அவர் மாணுக்கர்

வித்வான். C. ஜெகந்நாதாசார்யரும்

M. A. (Hist), M. A. (Tamil), L. T., P. O. L ; Dipl. Geog.

(தமிழ்ப்பேராசிரியர், விவேகாநந்தர் கல்லூரி, மயிலை)

இயற்றிய பதவுரை விசேடவுரையுடன் கூடியது.

அரவிந்தா பிரிண்டர்ஸில் பதிப்பிக்கப்பட்டது.

ஏ ரெ ழு ப து

மு க வு ரை.

மகாகவியாகிய கம்பர் வேளாளர்மேற் பாடிய ஏரெழுபது என்னும் நூலை உரையுடன் வெளிக்கொணரும் பணியை அடியேனிடம் ஒப்படைத்தனர் திருவாளர். V. M. **நரசிம்மன்** (பொறியியல் வல்லுநர்) அவர்கள். இவரது தந்தையாரும் அடியேனது ஞானாசிரியருமாகிய **ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் ஸ்வாமிகள்** இந்நூலுக்குப் பாயிரத்துள் முதல் ஆறுசெய்யுட்கள் நீங்கலாகவும், நூலகத்து ஆறுசெய்யுட்கள் நீங்கலாகவும் (செய்யுள் எண்: 22, 24, 41, 51, 67, 69) விழுமிய உரை கண்டிருந்தமை பிரசித்தம். அக்குறைபாட்டினை நிறைசெய்ய விடுபட்ட அச்செய்யுட்களுக்கும் அடியேன் பதவுரை விசேடவுரைகள் எழுதி, முன்னரிட்ட உரைகளையும் செவ்வன் பார்வையிட்டுச் செப்பஞ்செய்து, ஒருவிரிவுரை நூலாக இவ் ஏரெழுபது இஞ்ஞான்று வெளியிடப்படுகிறது. இவ்வுரையாக்கத்தில் குணங்கள் காணப்படின் அவை என் ஆசிரியப்பெருந்தகையின் ஆசியினாலேற்பட்டவையெனவும், குற்றங்கள் காணப்படின் அவை என் மந்தபுத்தியாலேற்பட்டவை யெனவும் கொண்டமையுமாறு வேண்டுகின்றேன்.

எனது காலத்தையெல்லாம் வீணாக்காமல் தமிழ்த்துறையிற் செலுத்தி எனக்குத் தோன்றாத்துணையாய்நின்று திருவருள்புரியும் அருட்பெருங்கடலை அநவரதமும் எண்ணியெண்ணி வாழ்த்துகின்றேன்.

பிலவங்க ஹு
புரட்டாசி மீ
1967
திருவல்லிக்கேணி,

ஸி. ஜெகந்நாதாசார்யர்.

இரண்டாம் பதிப்பு—1967.

அரவிந்தா பிரிண்டர்ஸ், 19, கிருஷ்ணப்பமேஸ்திரி தெரு, சென்னை-3

ஏ ரெ ழு ப து

செய்யுண் முதற்குறிப்பகராதி

ஏரெழுபதின் பிழைத்திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
17	19	இன	என
47	23	தெங்குபோன்னி	தேங்கு பொன்னி
56	28	நளை	களை
69	22	பசியைய்	பசியைப்

மற்றும் பிழைகள் காணப்படின் திருத்திக்கொள்ளவும்.

ஏ ரெ ழு ப து

ஏரைப்பற்றிக் கூறுகின்ற எழுபது செய்யுள்களினு லாகிய தொரு நூலென விரியும்; இரண்டாம்வேற்றுமையுருபும்பயனு முடன்றொக்க தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. உழவு அல்லது அத்தொழிலுக்கு இன்றியமையாத கருவியாகிய கலப்பையைக் குறிக்கின்ற 'ஏர்' என்ற சொல் - இங்கு, ஆகு பெயராய், அதனையுடைய வேளாளரைக் குறிக்கும்; "சுழன்று மேர்ப்பின்ன துலகம்" என்றவிடத்து 'ஏர்' என்பதுபோல; எனவே, வேளாளரதுசிறப்பைக் கூறும் எழுபதுசெய்யுள்களினு லாகிய நூலென்பது, திரண்டபொருளாம். அன்றி, 'ஏர்' என்ற சிறப்புப்பெயர் - இங்கு, பொதுப்பொருளின் மேலதாய், வேளா ளர்க்கு இன்றியமையாத கருவிகளையுணர்த்து மெனக் கொண்டு, கலப்பைமுதலிய உழவுகருவிகளைக் குறித்துக் கூறும் எழுபது செய்யுள்களையுடைய தொரு நூலெனப் பொருள்கொள்வாரு முளர்: (கருவிகள் தவிரப் பயிர்விளைதல் முதலியனவும் இதில் கூறப்படுகின்றன). ஆகவே, "முதனூல் கருத்தன் **அளவு** மிகுதி, **பொருள்** செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும், இடுகுறியா னும் நூற்கு எய்தும் பெயரே" என்று கூறப்பட்ட நூற் பெயர்வகைகளுள் அளவாலும், நுதலியபொருளாலும் பெயர் பெற்றது இதுவென்று அறிக. (நுதலியபொருள் - கூறப் பட்ட விஷயம்.) இத்தொடர்க்கு வெவ்வேறுவகையாக இன்னும் நலிந்துபொருள்கொள்வதெல்லாம் நூலாசிரியர்கருத்தோடு மாறு படுமாதலால், கொள்ளத்தக்கனவல்ல.

செந்தமிழ்ப் பரமாசாரியராகிய அகத்தியமகாமுனிவரது மாணாக்கர்களான தொல்காப்பியர்முதலிய பன்னிருவராலும் இயற்றப்பட்ட பன்னிரு படலமென்னும் புறப்பொருளிலக்கண நூலின் வழிநூலாக ஐயனரிதனர் செய்த புறப்பொருள் வெண்பாமாலையிற் காணப்படுகிற புறப்பொருள்திணை பன்னி ரண்டனுள் எட்டாவதாகிய வாகைத்திணையுள் முப்பத்தோராவது துறையாகிய **கிணைநிலை**யின்பாற் படும் இவ்வேரெழுபது, என்பர்; அத்துறையின் இலக்கணம்: "தண்பணைவயலுழவனைத், தெண் கிணைவன் றிருந்துபுகழ் கிளந்தன்று." (இதன்பொருள்: மருத நிலத்தில் கழனியிடத்து வேளாளனைத் தெளிந்தகிணைகொட்டு மவன் நல்லகீர்த்தியைச் சொல்லியது என்றவாறு.) வரலாறு:— "பகடுவாழ்கென்று பனிவயலு ளாமை, யகடுபோலங்கட்டடாரித்- துகடுடைத்துக், குன்றுபோற் போர்விற் குரிசில் வளம் பாட, வின்றுபோ மெங்கட் கிடர்." (இதன்பொருள்: ஏர்வாழ்க வென்றுசொல்லிக் குளிர்ந்தகழனியுள் ஆமையினதுவயிறுபோன்ற அழகியகண்ணினையுடைய கிணையை மாசைத் துடைத்து மலையை யொக்கும் நெற்போர் விளக்கத்தையுடைய உபகாரிதன் செல்

ஏர்—1

வத்தை வாழ்த்த இன்றுநீங்கும் எங்கட்கு மிடி என்றவாறு.) எனக் காண்க. இந்நூலில் கிணைகொட்டுமவன் புகழ்வதாக வெளிப் படையாகக் கூறுவிடினும், வேளாளரைப்புகழ்தல் வெளிப் படையாயிருத்தல் காண்க.

ஆசிரியர் தொல்காப்பியனுர் வலியும் வருத்தமு மின்றி இயல் பாகிய ஒழுக்கத்தானே நான்குவருணத்தோரும் அறிவரும் தாபதர் முதலியோரும் தம்முடைய கூறுபாடுகளைத் தாமேமிகுதிப்படுத் தலும் பிறர்மீக்கூறுபடுத்தலும் **வாகைத்திணை** யென்றும், இவ் வாகைத்திணை புணர்ச்சியின்நீங்கி இல்லறம் நிகழ்த்திப் புகழெய்து தற்குப்பிரியும் பாலைத்திணைக்குப் புறனென்றுங் கூறி, அதன்வகை களை விரித்தோதுவர். ("வாகைதானே பாலையது புறனே." "தாவில்கொள்கைத் தத்தங்கூற்றைப், பாகுபட மிகுதிப்படுத்த லென்ப," "அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும், ஐவகைமர பினரசர்பக்கமும், இருமூன்றுமரபி னேனோர்பக்கமும்" என்றவை முதலாகக் காண்க.) "இருமூன்றுமரபி னேனோர்பக்கமும்" என்ற விடத்து, உரைகாரர் 'வேதமொழிந்தனவோதலும் ஈதலும் **உழவும்** நிரையோம்பலும் வாணிகமும் வழிபாடும் ஆகிய அறு வகையிலக்கணத்தையுடைய வேளாளர்பக்கமும்' என்று உரை கூறியிருத்தலால், இந்நூல் அங்ஙனமுள்ள வேளாளரது உழவு தொழிலைக் கூறுதல்பற்றி, வாகைத்திணையுள் ஏனோர்பக்கத்திற் சேர்ந்த தென்க. வேளாளர்க்கு அறுவகைத்தொழிலு முரியன வேனும், "வேளாண் மாந்தர்க்கு உழுதுஊண் அல்லது, இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" என்னுந் தொல்காப்பியத்துமரபியற் சூத்திரத்தாலும், 'வேளாண்மாந்தர் பலவகைப்பட்ட தொழிலின ரேனும் உழுதொழிலே பெரும்பான்மைத்தாகலான் அதனையே சிறப்பித்துச்சொல்லுதல், மரபு' என்ற அதன் உரையாலும் வேளாளர்க்கு உழவுதொழிலே சிறந்ததாகக் கூறுதல் மரபென உணர்க.

இந்நூல், முதலிற் பாயிரச்செய்யுள்களையும், இடையில் 'உழவுநாட் கோடல்' முதல் 'மெய்ப்பேறு' வரையி லுள்ள அறு பத்தெட்டு விஷயங்களைத் தெரிவிக்கின்ற செய்யுள்களையும், இறு தியில் வாழ்த்துச்செய்யுளையும் பெற்றுள்ளது.

இந்நூல், இன்னநூலின்வழியே தோன்றியதென்றுகொள்ள இடமில்லாமையால், முதனூல் வழிநூல் சார்புநூல் என்ற நூல் வகைமூன்றில் **முதனூலின்**பாற் படும். இந்நூல் ஒருவிஷயத்தைக் குறித்து எழுபது செய்யுள் கூறுவதனுல், **வித்தாரகவி**யாகும்.

நூலாசிரியர்.

இந்நூலை இயற்றியவர் கம்பரென்பர். இந்நூல் ஏரைப் பற்றிய எழுபது செய்யுட்களையுடையதாயினும், கம்பராமாயணத் திற் போலச் சொல்வளம் பொருள்வளமின்றி விசித்திரப்பட்ட

வருணனைகளை யுடையதுமாகாமல் பெரும்பாலும் 'அலப்படையின்றி உலகநில்லாது, உழவினால்தான் உலகத்தில் திரு நிற்கும்: யாவரும் வேளாளரால்தான் பிழைக்கின்றனர்' என்று இவ்வாறான கருத்துப்படத் திருப்பித் திருப்பிக் கூறுதலாலும், சைவப்பற்றுடைமை தோன்றக் கூறுவதாலும் கம்பர் செய்ததல்ல என்று ஒரு சாரார் கூறுகின்றனர்: மற்றொரு சாரார் கம்பரென்பவர் முதலிற் சைவராயிருந்த நிலையில் இந்நூலைப் பாடினரென்றும், பெரும் புலவராகிக் கம்பராமாயணம் பாடத்தொடங்கிய பின்னர் வைணவப்பற்றுடையராயினரென்றுங் கூறுகின்றனர்.

கம்பர் ஏரெழுபதுபாடியதைப்பற்றிச் சிலர் வழங்குவதொரு வரலாறு வருமாறு:—கம்பர் தமதுமகனை அம்பிகாபதிக்கு விவாகம் நடத்தியபோது சகலமகாஜனங்களும் வந்துநிறைந்திருக்கும் மணப்பந்தலில் சடையப்பவள்ளல் சிறிது காலந்தாழ்த்து வந்ததனால் இருக்க இடம்பெறாது ஜலதாரையோரத்தில் ஒதுங்கி நிற்க, அதுகண்டு வருந்திய தம்மனைவியை நோக்கி 'இவரை நாம் வைக்கவேண்டியவிடத்தில் மேலாக வைப்போம்; அதனைக் குறித்துச் சிந்தனைகொள்ளவேண்டா' எனக் கூறியிருந்தபடி தமது நன்றிமறவாக்குணத்தால் இராமாயணத்திற் பத்துஇடங்களில் அவரைப் பாராட்டிக்கூறியதன்றி, அச்சடையப்பப் பிரபுவின் குலப் பெருமையை வெளிப்படுத்துபவராய் இந்நூலைச் செய்து முடித்தனர். பிறகு, இதனை அரங்கேற்றுகையில், முதலியார் இடையிலே வெளியிற் சென்றிருந்தபோது விடநாகமொன்று அவரைத் தீண்ட, அவர் நூலரங்கேறுதல் தடைப்படாதிருக்கும் பொருட்டு அதனை ஒருவர்க்குந் தெரியப்படுத்தாது மறைத்துச் சபையில் வந்திருந்து விஷவேகத்தால் மூர்ச்சையடைந்தனராக, சரசுவதிகடாட்சம்பெற்ற கம்பரும் அதனையறிந்து "ஆழியான் பள்ளியணையே யவன் கடைந்த, வாழிவரையின் மணித்தாம்பே - யூழியான், பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற, நாணே யகல நட," "மங்கையொருபாகன் மணிமார்பிலாரமே, பொங்குகடல்கடைந்த பொற்கயிறே - திங்களையும், சீறியதன் மேலூருந் தெய்வத் திருநாணே, ஏறிய பாம்பே யிறங்கு," "பாரைச்சுமந்த படவரவே பங்கயக்கண், வீரன் கிடந்துறங்கு மெல்லணையே-ஈரமதிச், செஞ்சடையான்பூணுந் திருவாபரணமே, நஞ்சுடையாய் தூர நட" என்று மூன்று வெண்பாக்களைப் பாடி, அஷ்டமகாநாகம் முதலான சகலசர்ப்பங்கட்கும் அதிபதியாகிய ஆதிசேஷனைப் பிரார்த்தித்தவுடனே, அங்கு ஒருபுற்றிலிருந்து ஒருசர்ப்பம் வெளிப்பட்டுவந்து யாவரும் அதிசயிக்கும்படி முதலியாரைக்கிட்டி முன்புகடித்தவாயிலே மறுபடிகடித்துத் தலைக்கேறின விஷத்தை மீட்டுக்கொண்டு செல்ல, சடையப்பமுதலியாரும் மூர்ச்சைதெளிந்து அறிவுபெற்றெழுந்தனராக, கம்பர் இந்நூலையரங்கேற்றி, பின்பு, உடனே இயற்றிய திருக்கைவழக்கமென்ற நூலில் "பாவலர்தாம், ஏரெழுபதோதி யரங்கேற்றுங் களரியிலே, காரிவிடநாகங் கடிக்குங்கை" என்று இவ்விஷயத்தைப் பாராட்டிக் கூறினரென்பதாம்.

ஏரெழுபது அரங்கேறிய சபையைக்குறித்து,

**"குணங்கொள்சடையன் புதுச்சேரிக்கொடையான் சேதிராயன்முதல்
கணங்கொள்பெரியோர்பலர்கூடிக் கம்பநாடன்களிகூர
இணங்கும்பரிசிலீந்துபுவியேழும் புகழேரெழுபதுடன்
மணங்கொள்திருக்கைவழக்கநூல்வைத்தார் சோழமண்டலமே."**

என்று ஒருபாடல் வழங்குகின்றது.

பாயிரம்.

பாயிரம் பதிகம் நூன்முகம் முகவுரை புறவுரைமுதலியன - பரியாயச் சொற்கள். "தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளு, மெய்தவுரைப்பது தற்சிறப்பாகும்," "ஆக்கியோன் பெயரே வழியேயெல்லை, நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே, கேட்போர் பயனோடாயெண்பொருளும், வாய்ப்பக்காட்டல் பாயிரத்தியல்பே" "காலங்களனே காரணமென்றிம், மூவகையேற்றி மொழிநருமுளரே" என்பவற்றாற் பாயிரத்திற் கூறப்பட வேண்டியபொருள் இன்னதென வுணர்க.

1.—கணபதி துதி.

**கங்கைபெறுங் காராளர் கருவியெழு பதுமுரைக்க
அங்கைபெறும் வளைத்தழும்பு முலைத்தழும்பு மணியமலை
மங்கைபெறுந் திருவுருவாய் வந்துறைந்தார் தமைவலஞ்செய்
கங்கைபெறுந் தடவிகடக் களிற்றினைக் கழல்பணிவாம்.**

(இதன் பொருள்) கங்கை பெறும் - கங்கையாற் பெறப்பட்ட [கங்கைமரபிற்றோன்றிய], கார் ஆளர் - மேகத்தின் தன்மையை (த் தம்மிடத்துக்) கொண்டவரான வேளாளர் (தம்முடைய), கருவி எழுபது உம் - (இன்றியமையாத உழவுத்தொழிலுக்கு உறுப்பான) சாதனங்கள் எழுபதனையும், உரைக்க - (முட்டுப்பாடின்றி வரையறுத்துச்) சொல்ல,—அம் கை பெறும் வளைத்தழும்புஉம் முலைத்தழும்புஉம் அணி - அழகிய கையிலே தரித்த வளைகளின் சுவடும் முலையினது சுவடும் அணிவிக்குமாறு, அ மலை மங்கை பெறும் திரு உருவாய் - அந்த மலையரசன் மகள் பார்வதி (கணவனைப்) பெறுதற்கேற்ற மங்கல உருவமாய், வந்து உறைந்தார் தமை - (ஒற்றைமாமரத்தின்கீழ்க் கருணைப் பெருக்கோடு) வந்து தங்கினவராய ஏகாமிரநாதரை, வலம் செய் - பிரதட்சிணம் செய்து வணங்குகின்ற, கங்கை பெறும் விகட தடம் களிற்றினை - கங்கையைத் தலையிலே தாங்கப்பெற்ற விசாலமான (கவுள்) தலத்தையுடைய யானையாம் விநாயகனை, கழல் பணிவாம் - திருவடி வணங்குவோம்; (எ - று.)

விசேடவுரை:—பார்வதி பரமேசுவரரை வலஞ் செய்த விநாயகனைக் கழல் பணிவோம் என்று கணபதி துதி தொடக்கத்துக் கூறியவாறு. மலைமங்கை தழுவக் குழைந்தது காஞ்சியிலாதலின், ஏகாமிரநாதரை வலஞ்செய்யும் விகடசக்கர விநாயகனைக் குறித்தபடி. விகடசக்கர விநாயகர் காஞ்சியிலெழுந்தருளியிருப்பதைக் கந்தபுராணத்து "விகடசக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்" என்பதனாலும் தெளியலாம். விகடக்களிற்றூன் என்றதால், இவ்விநாயகரைக் குறிப்பிற்றெரித்தபடி. இவ்விநாயகர் ஏகாமிரநாதர் கோயிலிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் எழுந்தருளியுள்ளார். தடவிகட - விகட தட என மாறுக. மங்கை பெறுந் திருவுருவாய்-மணவாளக் கோலத்துடன் என்றபடி. சிவபெருமானுக்குப் பார்வதியின் உடற்பரிசத்தோடு வளைத்தழும்பும் முலைச்சுவடும் உண்டாக, சிவபெருமான் மணவாளக்கோலத்துடன் பிரதியட்சமானார் என்பது பிரசித்தம். "வாய்வதிற் றந்தையும் தாயும் தொழுதெழுக" என்பதற்கேற்ப, 'வலஞ்செய்' என்றார். விநாயகரும் தமது தந்தையாகிய பரமசிவனைப்போல் தலையில் கங்கையையக் கொண்டுள்ளார் என்பதைக் "கங்கைபெற்றோன்" என்று அவரைச் சூடாமணி நிகண்டு சுட்டுதலாலும் அறிக. எனவே, "கங்கை பெறுங்காராளர் கருவியெழுபதும் உரைக்கக் கங்கைபெறுந் தடவிகடக் களிற்றூனைக்கழல்பணிவாம்" என்றதால், ஏற்புடைக்கடவுள் வணக்கம் கூறியதாயிற்று.

கங்கைபெறும் காராளர் - கங்கை மரபினராய வேளாளர். வேளாண்குலம் கங்கை மரபு எனப்படுதலை "பொருந்துமாயிர முகக் **கங்கைமரபிற்**...றோன்றி" என்ற சேக்கிழார்பிள்ளைத் தமிழ்த் தொடராலும் அறிக. கங்கை பாயும் பிரதேசத்தினின்று வந்தவர் என்று சொல்லிக் கொள்வதால் வேளாளர் குலம் கங்கைக்குலம் எனப்பட்டது என்பாருமுளர். காராளர் - வேளாளர்; கைம்மாறு கருதாக் கொடையுடைமை, ஓரறிவுயிரையும் ஓம்பும் ஆற்றலுடைமை, கடவுளாணை வழிநிற்றலுடைமை முதலிய மேகத்தின் தன்மையை யுடைமையால், வேளாளர் 'காராளர்' எனப்பட்டார். இனி, சிறையிட்ட மேகத்தைப் பாண்டியனிடத்தில் தாம் தேவேந்திரனுக்குப் பிணைநின்று விடுவித்தமை பற்றி, இவரைக் காராளரென்றது என்றலும் உண்டு; இவர் கார் காத்த வேளாளரெனப்படுதல் காண்க. கருவி - ஈண்டு, சாதனம்: 'அறிவற்றங் காக்குங் கருவி' என்றவிடத்துப்போல. இதுமுதல் மூன்று கவிகள் - பெரும்பாலும் காய்ச்சீர் நான்கு கொண்ட **கலிவிருத்தங்கள்.** *(1)*

2.—திரிமூர்த்திகள் வணக்கம்.

நிறைக்குரிய வந்தணர்கள் நெறிபரவ மனுவிளங்கத்
தறைக்குரிய காராளர் தமதுவரம் பினிதோங்க
மறைக்குரிய பூமனையும் வண்டுளபத் தாமனையும்
பிறைக்குரிய நெடுஞ்சடிலப் பெம்மானை யும்பணிவாம்.

(இ - ள்.) நிறைக்கு உரிய - சால்புடைமைக்கு (இயல்பாக) உரியராய, அந்தணர்கள் - பிராமணர்களின், நெறி பரவ - ஒழுக்க முறை பரவவும், மனு விளங்க - நீதிகள் தவறாது நடக்கவும், தறைக்கு உரிய காராளர் தமது - பூமி செழித்தற்குரிய வேளாளர்களின், வரம்பு இனிது ஓங்க - ஒழுக்கவரம்பு நன்கு உயரவும்,—மறைக்கு உரிய பூ மன் ஐ உம் - வேதத்திற்குரிமை பூண்டவராய்த் தாமரைப் பூவில் நிலைபெறத் தங்கியுள்ள பிரமதேவனையும், வள் துளபம் தாமன் ஐ உம் - வளப்பம் பொருந்திய திருத்துழாய் மாலையையுடையவராகிய திருமாலையும், பிறைக்கு உரிய நெடு சடிலம் பெம்மான் ஐ உம் - பிறைச்சந்திரனையணிதற்குரிய நீண்ட சடைமுடியையுடைய தலைவராகிய சிவபெருமானையும், பணிவாம்-வணங்குவோம்;—(எ - று.)

இச்செய்யுள் மும்மூர்த்திகள் வணக்கம் குறித்தது. பரவ, விளங்க, ஓங்க, பணிவாம் என இயையும். பூ மன் - மலரவன், பிரமன். திருமாலினது நாபியிற்பூத்த தாமரைமலரை இருப்பிடமாகக் கொண்டவன். மெய்கலந்த நால்வேத விரிஞ்சனாதலின் 'மறைக்குரிய' என்றார். தாமம் - மாலை. சிவபிரான் சடிலம் கபர்த்தம் எனப்படும்.

நிறையாவது - சால்பு; எல்லா நற்குணங்களும் குறைவுபடாமல் நிறைந்திருத்தல்; குணபூர்த்தி. இது - முதனிலைத் தொழிற்பெயர். இனி, நிறை - உறுதிப்பாடு என்றும் பொருள் கொள்ளலாம்; அது, காப்பன காத்துக் கடிவன கடியுந் திண்மை. அந்தணர் நெறிபரவல் - வேதநெறி தழைத்தோங்குதல். மனு விளங்குதல் - அரசநீதி செங்கோல் வழிப்படரல். மேழித்தேவராதலின், தறைக்குரியராயினர். வரம்பு - ஒழுக்க வரம்பு. அதாவது "மூவரு நெஞ்சமர முற்றி யவரவர், ஏவ லெதிர்கொண்டு மீண்டுரையான்—ஏவல், வழுவான் வழிநின்று வண்டார் வயலுள், உழுவா னுலகுக்குயிர்" என்றது. (2)

3.—நாமகள் துதி.

திங்களின்மும் மாரிபெயச் செகத்திலுயிர் செழித்தோங்கக்
கங்கைகுலா திபர்வயலிற் கருவீறத் தொழுகுலத்தோர்
துங்கமக மனுநீதி துலங்கிடவை யம்படைத்த
பங்கயன்ற னாவிலுறை பாமடந்தை பதந்தொழுவாம்.

(இ - ள்.) திங்களின் மும் மாரி பெய - மாதம் மூன்று மழை பொழியவும், (அதனால்), செகத்தில் உயிர் செழித்து ஓங்க - உலகத்தில் ஜீவராசிகள் செழிப்புற்று வளரவும், கங்கை குல அதிபர் வயலில் - வேளாளர்களின் வயல்களில், கரு வீற - நெற்பயிரின் கருவானது சிறப்புறவும், தொழு குலத்தோர் துங்கம் மகம் [துலங்கிட] - (மற்றை மூன்று குலத்தவராலுந்) தொழப்படுங் குலமாகிய அந்தணர்குலத்தோரது பரிசுத்தமான யாகங்கள் விளங்கவும், மனு நீதி துலங்கிட - அரசநீதிகள் விளங்கவும்,—வையம் படைத்த பங்கயன் தன் - உலகத்தைப் படைத்த பதுமத்தோனாகிய பிரமனின்,

நாவில் உறை பா மடந்தை - நாக்கினில் [எஞ்ஞான்றும்] தங்கி வசிக்கின்ற சரசுவதீ தேவியின், பதம் தொழுவாம் - பாதங்களை வணங்குவோம்; (எ - று.)

இச்செய்யுள் நாமகள் துதியாகும். பெய, ஓங்க, வீற, துலங்கிட...மடந்தைபதம் தொழுவோம் என இயையும். துலங்கிட ஈரிடத்தும் கூட்டப்பட்டது. மும்மாரி—"முடிபுனைந்தசீர் மன்னவர் நெறியினுன் முன்னவர் தவத்தாற்பைந், தொடி மடந்தையர் கற்பினுன் மதிதொறுஞ்சொரிதரும் மும்மாரி" என்றதும் நோக்குக. ஒன்பது நாள் வெயிலும் ஒருநாள் மழையுமாய் என்றபடி. நாமகள் பிரமனின் நாவிலுறைபவள் என்பதை" அந்தணன் நாவில் வைத்தான்" என்றதனுலும் அறிக. (3)

வேறு.

4.—சோழமண்டலச் சிறப்பு.

ஈழ மண்டல முதலென வுலகத்
தெண்ணு மண்டலத் தெறிபடை வேந்தர்
தாழு மண்டலஞ் செம்பியன் மரபினோர்
தாமெ லாம்பிறந் தினியபல் வளத்தின்
வாழு மண்டலங் கனகமு மணிகளும்
வரம்பில் காவிரி குரம்பினிற் கொழிக்குஞ்
சோழ மண்டல மிதற்கிணை யாமெனச்
சொல்லு மண்டலஞ் சொல்வதற் கில்லையே.

(இ - ள்.) ஈழமண்டலம் முதல்என - ஈழமண்டல முதலாக வைத்து, உலகத்து எண்ணு மண்டலத்து - இப்பூமியிடத்து[ச் சிறப்பித்து] எண்ணப்படுகின்ற மண்டலங்களிலுள்ள, எறி படை வேந்தர் - (பகைவர்மேல்) எறிகின்ற ஆயுதங்களாற் சிறந்த அரசர்கள் [பலரும்], தாழும் மண்டலம் - பணிந்து வணங்கும் மண்டலமாவது யாதெனில்,—செம்பியன் மரபினோர் தாம் எலாம் பிறந்து-சிபிசக்கரவர்த்தியின் மரபினராகிய சோழமன்னர்கள் எல்லாரும் பிறந்து, இனிய பல் வளத்தின் வாழும் மண்டலம்-இனிமை தருகிற பலவகை வளங்களோடு வாழ்கின்ற மண்டலமாகும்; (இதன் பெயர் யாதெனில்), காவிரி - காவிரிநதியானது, வரம்பு இல் கனகம்உம் மணிகள்உம் - அளவற்ற பொன்னையும் மணிகளையும், குரம்பினில் - செய்கரைகளில், கொழிக்கும் - ஒதுக்கும், சோழமண்டலம் - சோழமண்டலமாகும்; இதற்கு இணையாம் என சொல்லும் மண்டலம் - இதற்கு நிகராகுமெனச் சொல்லத்தக்க [மேன்மையையுடைய] பூமியிடம், சொல்வதற்கு - நினைத்தற்கும், இல்லை—; (எ - று.)

இது, சோழமண்டலத்தின் தனிச்சிறப்புக் குறித்தது. ஈழமண்டலம் - இலங்கை; தற்போது சிலோன் எனப்படுவது. ஒரு நாட்டினைப் பெரும்பகுதிகளாகப்பிரிக்க, அப்பெரும்பகுதி மண்டலம் எனப்படும். வேந்தர்தாழும் மண்டலம், மரபினோர்வாழும்

மண்டலம் சோழமண்டலம் என இயையும், 'செம்பியன் - சிபியின் வழிவந்தவன்; சோழன். கரிகாற்சோழனை 'செருமிகு சினவேற் செம்பியன்' (சிலப்: மங்கல. வரி. 67) என்றும், கிள்ளிவளவனை 'செம்பியர் மருகன்' என்றும், (புறம்: 228) கூறியிருத்தல் நினைக. "மாநீர்க்குரம்பெலாஞ் செம்பொன்" என்றார் இராமாயணத்தும். ஈற்றில் வந்துள்ள மண்டலம் என்பது மண் தலம் எனப்பிரித்துப் பொருள் கொள்ளப்பட்டது; இனி, மண்டலம் என்றே கொள்ளினுமாம். சொல்லுதலென்றது - நினைத்தலென்ற பொருளில் வந்தது; பண்பு புலன் மாறிவந்த உபசார வழக்கு; "பொருளுறு பண்பு புலனிவைமாறியுஞ் சேர்ந்திடுமே" என்பது பிரயோக விவேகம். மூன்றாமடியில் **பிராசம்** காண்க.

இச்செய்யுள் - மாச்சீரும் விளச்சீரும் விரவிவந்த **எண்சீராசிரியவிருத்தம்.** (4)

வேறு.

5.—சோழராசன் சிறப்பு.

முடியுடைய மன்னவரின் மூவுலகும் படைத்துடைய
கொடியுடைய மன்னவரிற் குலவுமுதற் பெயருடையான்
இடியுடைய வொலிகெழுநீ ரெழுபத்தொன் பதுநாட்டுக்
குடியுடையான் சென்னிபிற ரென்னுடையார் கூறீரே.

(இ - ள்.) மூ உலகும் படைத்து உடைய - மூன்று நிலப் பகுதிகளையும் தமக்குரித்தாகக் கொண்டுள்ள, முடியுடைய மன்னவரின் கொடியுடைய மன்னவரின் - முடியுடைவேந்தரும் (அடையாளக்) கொடியுடைவேந்தரும் ஆகிய சோழ சேர பாண்டிய மன்னவருள், குலவு முதல் பெயர் உடையான் - [மேம்பாட்டினால்] விளங்குகின்ற தனிச்சிறப்பு உடையவன் [யாவனெனில்], இடி உடைய ஒலி கெழு நீர் - இடியும் கீழ்ப்பட்டுப்போம்படி ஒலி மிகுந்த நீரையுடைய கடலினாற் சூழப்பட்ட, எழுபத்தொன்பது நாட்டுக்குடி உடையான் - எழுபத்தொன்பது நாட்டு மக்களையும் (கோனோக்கி வாழும்) தன் குடிகளாக உரிமை கொண்டுள்ளவனாகிய, சென்னி - சோழனாவன்; பிறர் - ஏனைய சேரபாண்டியரிருவரும், என் உடையார் - என்ன சிறப்பினையுடையவர், கூறீர் - [நீங்களே] சொல்லுங்கள்; (எ - று.)

இதனால், சேரபாண்டியர் இருவரினும் சோழன் தனிச்சிறப்புப் பெறவைத்தபடி. எழுபத்தொன்பது நாட்டுக் குடியுடையான் சென்னி என்றது - அக்காலத்தைய சோழப் பேரரசு எழுபத்தொன்பது சிறுபகுதிகளைக் கொண்டது என்னலாம்; மேல் வாழ்த்துச்செய்யுளிலும் 'ஏர்வாழி இசைவாழி எழுபத்தொன்பது நாடே" என முடித்தலும் காண்க. 'நாடு' என்றசொல் சிறுபகுதிகளைக் காட்டுவதை 'ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரை நாடு' என்ற தொடர்களாலும், 'குறும்பொறை நன்னாடு கோடியர்க்கீந்த...ஓரி' என்றவிடத்தானும் உணரலாம். மூவுலகு என்றவிடத்து, உலகு என்னுஞ்சொல், உலகின் ஏகதேசத்தைக் குறித்தது;

" உலகென்னுஞ்சொல், மண்ணுலக முழுதுமேயன்றித் தன் கட் கூறுபட்ட நிலங்களையுமுணர்த்து மென்பது, 'மாயோன் மேய காடுறையுலகமும்' என்னுஞ் சூத்திரத்தானுணர்க" என்ற நச்சினார்க்கினியர் கூற்று (சிந்தா: முத்தி: 8 - உரை) நினைக்கத்தக்கது. பரிபாடலிற் பரிமேலழகரும் 'இவ்வுலகி னுட் பாகுபாடுகளையும் உலகென்றார்' என்றார். (பரி: 3 - உரை). கொடி - அடையாளக் கொடி: சோழருக்குப் புலியும், சேரருக்கு வில்லும், பாண்டியர்க்கு மீனும் அடையாளங்கள். முதற்பெய ருடையான் - முதலிற் பெயரிட்டுச் சொல்லத்தக்கவன்; தனிச் சிறப்புடையான் என்றபடி. பெயர் - பெருமை; புகழ். உடைதல் - கீழ்ப்பட்டுப் போதல். ஒலிகெழுநீர் எனவே கடலாயிற்று: ஆர்கலி என்ற பெயருண்மையும் காண்க. சென்னி-சோழன்;'சென்னி செங் கோலது வோச்சி' என்றது சிலப்பதிகாரமும்.

இச்செய்யுள் - காய்ச்சீர் நான்குகொண்ட **கலிவிருத்தம்.** (5)

வேறு.

6.—சோழனது மகாநாட்டுச் சிறப்பு.

மந்தர மனைய திண்டோள் மணிமுடி வளவன் சேரன்
சுந்தர பாண்டி யன்றஞ் சுடர்மணி மகுடஞ் சூட
அந்தணர் குலமு மெல்லா வறங்களும் விளங்க வந்த
இந்திர னோலக் கம்போ லிருந்தது பெரிய நாடே.

(இ - ள்.) மந்தரம் அனைய திண் தோள் மணி முடி வளவன் - மந்தரமலையையொத்த திண்ணிய தோள்களையும் மணிகள்பதித்த முடியையுமுடைய சோழமன்னன், சேரன் சுந்தரபாண்டியன் தம் சுடர் மணி மகுடம் சூட - சேரனுடையதும் சுந்தரபாண்டிய னுடையதும் ஆன விளங்குகின்ற மணிகள்பதித்த மகுடங்களைச் சூட்டிக்கொள்ள,(அதனால்),அந்தணர் குலமும் எல்லா அறங்களும் விளங்க - பிராமணர் குலங்களும் எல்லாநீதிகளும் பொலிவுபெற, அந்த பெரிய நாடு - (அப்போதுகூடிய) அந்த மகாநாடானது, இந்திரன் ஓலக்கம்போல் இருந்தது - தேவேந்திரனது அத்தாணிக் காட்சிபோலச் சிறந்திருந்தது; (எ - று.).

இது, மகாநாட்டில் சோழவரசன் ஓலக்கச்சிறப்புக்குறித்தது. மகாநாடு - மகாசனங்களின் கூட்டம். வளவன் சேரபாண்டியர் களது சுடர்மணிமகுடங்களைச்சூடியது, அவர்களை அடிப்படுத்தி யமை நோக்கி. இது, 'மந்தரமனையதிண்தோள்' என்ற அடையை வளவனுக்கு இட்டதால் தெளியலாம். 'சுந்தரபாண்டியன்' என்றது, பெயருமாகலாம். சூட - செயவெனெச்சம் காரணப் பொருளது. 'அந்தணர்குலமும்'என்று, சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின்,இஃது ஏனைய வருணங்கட்கும் கொள்ளப்படும். ஓலக்கம் - அத்தாணிக்காட்சி, சபாமண்டபம். இந்திரனது ஓலக்க மண்டபம், சுதர்மையென்று பெயர் பெறும்.

இச்செய்யுள் - முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும் ஏனையவை மாச்சீர்களுமாகி வந்த **அறுசீராசிரியவிருத்தம்.** (6)

வேறு.

7.—வேளாண்குடிச் சிறப்பு.

ஆழித்தேவர் கடலானுர் அல்லாத்தேவர் அம்பலத்தார்
ஊழித்தேவர் தாங்கூடி உலகங்காக்க வல்லாரோ
வாழித்தேவர் திருமக்கள் வையம்புரக்கும் பெருக்காளர்
மேழித்தேவர் பெருமைக்கு வேறேதேவர் கூறேனே.

(இ - ள்.) ஆழி தேவர் - சக்கராயுதத்தைக் கொண்ட கடவுளாகிய திருமாலானவர், கடல் ஆனுர் - திருப்பாற்கடலிலே கண் வளர்பவராயினுர்; அல்லா தேவர்-(காத்தற்ருெழிலையுடைய) அக்கடவுளல்லாத [சங்காரமூர்த்தியாகிய] சிவபெருமானுர், அம்பலத்தார்-திருச்சிற்றம்பலத்திற் கூத்தாடுபவரானுர்; ஊழி தேவர் தாம் - ஊழிக்காலம் வாழுந் தேவராகிய பிரமனுர், கூடி - மனம் பொருந்தி, உலகம் காக்க வல்லாரோ-இவ்வுலகத்தைக் காத்தற்கு வல்லமை யுடையவரோ? [வல்லமையுடையவரல்லரென்றபடி]; வாழி தேவர் - வாழ்ச்சியால் விளங்குபவரும், திரு மக்கள் - செல்வத்தைப்பெற்றுள்ள மக்களும், வையம் புரக்கும் பெருக்காளர் - உலகத்தைக்காப்பாற்றுதற்குஉரிய (செல்வம் அறிவு அருள் முதலியவற்றின்) பெருக்கத்தைக் கொண்டவருமான, மேழி தேவர் - மேழியைப் பிடித்து உழுதற்ருெழிலைச்செய்யுந் தேவராகிய வேளாளரின், பெருமைக்கு - சிறப்புக்குஎதிராக, வேறே தேவர் - வேறேயொரு தேவரின் பெருமையை, கூறேன்-சொல்ல மாட்டேன்; (எ - று,)

மும்மூர்த்திகளுமே உலகத்தைக்காத்தற்ருெழிலைச் செய்ய மாட்டாதவராகிவிட வேளாண்மக்களே இவ்வுலகத்தைக் காக்குந்தொழிலை மேற்கொண்டிருத்தலால், அந்தத்திரிமூர்த்திகளும் இவ்வேளாளமாந்தர்க்கு நிகராகார்: அங்ஙனமாக, மற்றைத் தேவரை இவ்வேளாளர்க்கு உவமை கூறுவேனே? கூறேனென்பதாம்.

கடலிற்படுத்து உறங்குதலும் அம்பலத்திற் கூத்தாடிக் கொண்டிருத்தலும் காத்தற்ருெழிலைமேற்கொண்டார்க்கு அழகு அல்ல என்பார் 'ஆழித்தேவர் கடலானுர் அல்லாத்தேவரம்பலத்தார்' என்ருர். காத்தற்ருெழிற்கு உரிய கடவுளென்று பேர் வைத்துக்கொண்டிருப்பதுபற்றி,ஆழித்தேவரை முதலிற் கூறினுர். காத்தற்ருெழிற்கு எதிரான அழித்தற்ருெழிலைக்கைக்கொண்டிருப்பவராதலால் சிவபெருமானுரை 'அல்லாத்தேவர்' என்ருர். ஊழி-கற்பகாலம்: பலசதுர்யுகங்களைக் கொண்டதான(பிரமதேவனது) ஆயுட்காலம். ஊழித்தேவர் எனவே, பிரமனைக்காட்டிற்று.

தேவர் என்றசொல் - அறிவு மகிழ்ச்சி ஒளி முதலியவற்றை யுடையவரென்று காரணப்பொருள்படு மாதலால், வேளாண்

மாந்தரை 'வாழித்தேவர் மேழித்தேவர்' என்றார். வாழி - இகர விற்றுத் தொழிற்பெயர். ஊழித்தேவர் - ஊழிக்காலம்வரையி லிருக்குந் தேவ ரென ஏழாம் வேற்றுமையுருபும்பயனும் உடன் றொக்கதொகை. இனி, இத்தொடர்க்கு - காக்கும்முறைமையை யுடையதேவர் எனக் கூறுவாரு முளர். வல்லாரோ, ஓகாரம் - எதிர்மறை. தேவர் கூறேன் - இரண்டாம்வேற்றுமைத்தொகை யிலும், இயல்பாகவேண்டிய இடத்து பொதுவிதிப்படி இயல்பே யாயிற்று; 'தேவர்க்கூறேனே' என இருப்பின் நலம்.

இச்செய்யுளை வேளாளர்சிறப்பு என்றும் பின்வருஞ்செய் யுட்களை வேளாண்குடிச்சிறப்பு என்றும் கூறின், ஏற்குமெனத் தோன்றுகின்றது; மேல் வரும்பாட்டில் 'உழுங்குலத்திற் பிறந் தாரே' என்றும், பத்தாம் பாடலில் 'காராளர், கோதில் **குலந் தனக்கு'** என்றும் குலத்தையெடுத்துக் கூறியிருத்தல், காண்க. குலம் குடி என்பன - பரியாயச்சொற்களாயும்நிற்கும். ஒருகால் இச்செய்யுள் சொருகுகவியாயிருப்பினும் இருக்கலாம்.

இச்செய்யுள் - முதற்சீரும் மூன்றாஞ்சீரும் நேரிறுதியான நாலசைச் சீராகவும், இரண்டும்நான்கும் காய்ச்சீருமாகிவந்த **கலிவிருத்தமாகப்** பிரிக்கப்பட்டுள்ளது; இதனை, மூன்றாஞ்சீரும் ஆறாஞ்சீரும் காய்ச்சீரும், மற்றை நான்கும் மாச்சீருமாகிவந்த **அறுசீராசிரிய விருத்தமாகப் பிரிக்கலாம்.** (7)

வேறு.

8.—இதுமுதல் மூன்றுகவிகள்-வேளாளர்சிறப்பு.

தொழுங்குலத்திற் பிறந்தாலென் சுடர்முடிமன் னவராகி
எழுங்குலத்திற் பிறந்தாலென் இவர்க்குப்பின் வணிகரெனுஞ்
செழுங்குலத்திற் பிறந்தாலென் சிறப்புடைய ரானாலென்
உழுங்குலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே.

(இ - ள்.) தொழும் குலத்தில் - (மற்றைமூன்று குலத்தவ ராலும்) தொழப்படுங் குலமாகிய அந்தணர்குலத்திலே, பிறந்தால் என் - பிறந்தால்தான் யாதுபயன்? சுடர் முடி மன்னவர் ஆகி - ஒளியையுடைய கிரீடந்தரித்த அரசராகி, எழும் - விளக்கத்தைப் பெறுகின்ற, குலத்தில் - க்ஷத்திரியகுலத்திலே, பிறந்தால் என்—? இவர்க்கு பின் - இவ்விரு குலத்தவர்க்கும் பின்னே (அடுத்துள்ள), வணிகர் எனும் செழு குலத்தில் - வணிகரென்று சொல்லப்படுகிற செல்வச்செழிப்பையுடைய வைசியகுலத்திலே, பிறந்தால் என்—? [இப்பிறப்புக்களால் உலகுக்கு நேரே நன்மைசெய்யமுடியாதாகை யாற் பயனில்லை யென்றபடி]; சிறப்பு உடையர் ஆனால் என் - செல்வவான்களாக இருந்தால்தான் என்ன? உழும் குலத்தில் பிறந்தாரே - உழுதற்றொழிலைச் செய்யுங் குலமாகிய வேளாண் குலத்திற் பிறந்தவரே, உலகு உய்ய பிறந்தார் - (உலகத்தார் பசிநோயால் இறந்துபடாது) உய்வு பெறுமாறு பிறந்த வராவர்; (எ - று.

அந்தணர் முதலியோர் வெவ்வேறுவகைப்பட்ட சிறப்புடையவரெனத் தம்மை மதித்தாலும், அவ்வப்பிறவிகள் உலகத்தோரின்பசியை யொழிப்பதற்கு நேரே கருவியாகா வாதலாற் பயனில்லை; வேளாளர்பிறவியே பயிர்விளைத்து உலகத்தோர் பசியை யொழித்தற்கு நேரே காரணமா யிருத்தலால், அதுவே உயர்ந்த குலமா மென்றவாறு: பிறர்க்கு உதவாத பூமிக்குப் பாரமாக இருக்குங் குலங்களினும், பிறர்க்கு உதவிபுரியுங் குலமே சிறந்த தென்க. இதனால், நாற்குலங்களுள் இறுதிக்குலமாகிய வேளாண் குலத்திற்கு உள்ள சிறப்புக் கூறப்பட்டவாறு காண்க. வணிக் என்ற வடசொல் 'அர்' என்னும் பலர்பால் விகுதிபெற்று. 'வணிகர்' என ஆயிற்று. குலத்திற்பிறந்தாரே, ஏகாரம் - பிரிநிலை. இறுதி யேகாரம் - அசைநிலை.

இதுமுதல் இந்நூலின் ஈற்றயல்பாடல் (செய்யுள்: 68) நீங்கலாக எல்லாச்செய்யுள்களும்-பெரும்பாலும் காய்ச்சீர் நான்கு கொண்ட **கலிவிருத்தங்கள்.** (8)

9. ***அழுங்குழவிக் கன்புடைய தாயேபோ லனைத்துயிர்க்கும்***
எழுங்கருணைப் பெருக்காளர் எளியரோ யாம்புகழ
உழுங்கொழுவிற் கருவீறி யுலகமுதற் கருவாகச்
செழுங்கமலத் தயனிவரைச் செய்துலகஞ் செய்வானேல்.

9.—(இ - ள்.) உழும் - உழுதற்கு உதவுகின்ற, கொழுவில் - கொழுவினால், கரு - நெற்பயிரின் கருவானது, வீறி - சிறப்புறுதலால், உலகமுதல் - உலகத்தினிடத்தே, கரு - பிராணிவர்க்கமாகிய கருக்கள், ஆக - உண்டாகுமாறு, செழு கமலத்து அயன் - செழிப்புள்ள (திருமாலின்) நாபித்தாமரையில்தோன்றிய பிரமதேவன், இவரை - இவ்வேளாளரை, செய்து - படைத்து, உலகம்- உலகத்து உயிர்களை, செய்வான் ஏல் - படைப்பானென்றால்,— அழும் குழவிக்கு - (பசியினால்) அழுகின்ற குழந்தைக்கு, அன்பு உடைய - அன்பு (கொண்டு அந்தக் குழந்தையின் பசி தணியுமாறு பாலூட்டுதலைக்) கொண்ட, தாயே போல் - தாயைப்போல, அனைத்து உயிர்க்கும் எழும் கருணை பெருக்கு ஆளர் - எல்லாப் பிராணிகளிடத்திலும் எழுகின்ற கருணையையுடையவரான வேளாளர்,[குழவியின் பசியைத் தன் கருணையால் தணிக்குந் தாய் போலத் தாம்விளைக்கும் நெல்மூலமாக எறும்புமுதல் பிரமனீறாக வுள்ள எல்லாவுயிர்கட்கும் தமது கருணையாற் பசியைப் போக்குகின்றவரான வேளாளர்], யாம் - நாம், புகழ - புகழ்ந்து கூறுமாறு, எளியரோ - எளிமைப் பட்டவரோ? (எ - று.)

படைப்புத்தொழிற் கடவுளான பிரமதேவனே இவ்வேளாளரைப் படைத்து அதன்பின்னரே அன்னமயமான புருஷனைப் படைத்தானென்றால், இவ்வேளாளர் அளவிட முடியாதபடி மிக்க பெருங் கீர்த்தியை யுடையவராவ ராதலால், இவ்வேளாளரின்பெருமை எம்மாற் புகழ்ந்து கூற முடியாது என்றவாறு.

"ஆகாஸாத் வாயு:" என்று தொடங்கி, அந்நாத்புருஷ: [அன்னத்தினின்று புருஷனைப் படைத்தான்]" என்று கூறுவத ஞல், புருஷனுக்கு அன்னம் இன்றியமையாதது என்பது பெறப் படும்: அன்னத்தையுண்டாக்குபவரோ வேளாளர்: ஆகவே, அன் னத்தைப்படைத்து புருஷனைப்படைத்தா னென்று கூறும் வேத த்திலிருந்தே அன்னத்தை யுண்டாக்குபவராதல்பற்றி இவ்வேளா ளரைப் படைத்தே மற்றைப்புருஷரை யுண்டாக்கிஞ னென்று தொனிக்கு மென்ற கருத்துத்தோன்ற, "உழுங்கொழுவிற்கரு வீறி யுலகமுதற்கருவாகச் செழுங்கமலத்தயனிவரைச்செய் துலகஞ்செய்வான்' என்ருர்; 'அனைத்துயிர்' எனப் பொதுப்படக் கூறியதஞல், எறும்பு முதல் பிரமனீருகவுள்ள எல்லாப்பிராணி களுங் கொள்ளப்பட்டன: இவ்வேளாளர் விளைக்கின்ற நெல் ஹவிசுஆகி, ஓமங்களிலுதவப்பெற்றுப் பிரமஞதிதேவர்க்கும் உணவாமாறு அறிக. இவ்வாறு பெருமைபெற்றிருத்தலாலேயே 'எளியரோ' என்றது; ஓகாரம் - எதிர்மறை. (9)

10. **வேதியர்தம் உயர்குலமும் விறல்வேந்தர் பெருங்குலமும்**
நீதிவளம் படைத்துடைய நிதிவணிகர் தங்குலமுஞ்
சாதிவளம் படைத்துடைய தாயனைய காராளர்
கோதில்குலந் தனக்குநிக ருண்டாகிற் கூறீரே.

10.—(இ - ள்.) வேதியர்தம் - அந்தணர்களுடைய, உயர் குலம் உம் - சிறந்தகுடியும், விறல் வேந்தர் பெருங் குலம்உம் - வெற்றிபொருந்திய அரசரின் பெருமைபெற்ற குலமும், நீதி வளம் படைத்து உடைய நிதி - நியாய முறைமையின் சிறப்பைப்பெற்ற செல்வத்தைப் படைத்துள்ள, வணிகர்தம் குலம்உம் - வணிக குலமும், (ஆகிய இக்குலங்கள்),—சாதி வளம் படைத்து உடைய- சாதிக்குள் வளப்பம் மிக இருக்கப்பெற்ற, தாய் அனைய - எவ் வுயிர்க்குந் தாய்போன்று பசிப்பிணியைப் போக்குகின்ற, காராளர் - வேளாளரின், கோது இல் குலம் தனக்கு - குற்றமற்ற குலத் திற்கு, நிகர் - ஒப்பாக, உண்டு ஆகில் - இருக்குமாஞல், கூறீர் - சொல்லுங்கள்; (எ - று.)

தாயைப்போல் மற்றைக் குலத்தவரை யளிக்கும் பெருங் கருணையைப் படைத்திருத்தலால், இவ்வேளாளர்குலம் மற்றை யோர்குலத்திலும் மேன்மைப்படும். இதற்கு நிகராக ஒருகுலமும் இல்லையென்றவாறு. செல்வம் படைத்திருப்பதே மேன்மைக்குக் காரணமாகாது: நீதிமுறைதவருமலீட்டப்பட்ட பொருளே சிறப் புக்குக் காரணமென்பார் 'நீதிவளம் படைத்துடைய நிதிவணிகர்' என்ருர்.

குலம், நீதி, நிதி, வணிக், ஜாதி என்னும் வடசொற்கள் திரிந்துவந்தன. வேதியர் - வேதம் என்ற வடமொழியினடியாப் பிறந்தபெயர். (10)

பாயிரம் முற்றிற்று.

———

நூல்.

1.—உழவுநாட்கோடற்சிறப்பு.

இத்தொடர் உழவுத்தொழிலைத் தொடங்குதற்கு நல்ல நாளைப் பார்த்தலின் சிறப்பென்று பொருள்படும்.

சீர்மங்க லம்பொழியுந் தெண்டிரை நீர்க் கடல்புடைசூழ்
பார்மங்க லம்பொழியும் பல்லுயிருஞ் செழித்தோங்கும்
கார்மங்க லம்பொழியும் பருவத்தே காராளர்
ஏர்மங்க லம்பொழிய வினிதுழநாட் கொண்டிடினே.

(இ - ள்.) கார் - மேகமானது, மங்கலம் பொழியும் - (உலகிற்கு) நன்மையுண்டாகும்படி பொழிகின்ற, பருவத்து ஏ - காலத்திலே,—கார் ஆளர் - வேளாளர், (தம்முடைய), ஏர் மங்கலம் பொழிய - ஏர்கொண்டுசெய்யும் உழவுத்தொழில் நன்குபலிக்குமாறு, இனிது உழ நாள் கொண்டிடின் - இனிதாகிய உழவுக்குரிய நல்ல நாளைப்பார்த்து மேற்கொண்டாராயின்,—சீர் மங்கலம் பொழியும் தெள் திரை நீர் கடல் - சிறந்த (சங்குமுதலிய) மங்கலப் பொருளை மிகுதியாகத்தருகின்ற தெளிவாகிய அலைநீரைக் கொண்ட கடல், புடைசூழ் - நாற்புறமுஞ் சூழப்பெற்ற, பார் - இந்தப் பூமியானது, மங்கலம் - நல்லவளப்பமுள்ள விளைச்சலை, பொழியும் - மிகுதியாகத் தரும்; (அங்ஙனம் பூமி மிக்கபலனை விளைத்தலால்), பல் உயிர் உம் - (உலகத்திலுள்ள) பலவகைப் பட்ட ஜீவபிராணிகளும், செழித்து ஓங்கும் - செழிப்பாக வளர்ச்சியடையும்; (எ - று.)

மழைபெய்யும் பருவத்தைச் சோதிடத்தாலுணர்ந்து நல்ல நாள் பார்த்து உரியமுறைப்படி வேளாளர் பொன்னேர் பூட்டின், அவர் நல்ல நாளில் உழவுதொடங்கியதன் பயனாகப் பூமி மிக்க விளைச்சலைத் தர அதனால் உலகத்துயிர்கள் நன்குஉண்டு செழித்து நிற்குமென்பதாம். மங்கலம் என்ற ஓரே சொல் பல பொருளில் பலமுறை வந்தது - **சொற்பின்வருநிலையணி.** தெண் திரை-பண்புத்தொகை. திரைநீர்-வேற்றுமைத் தொகை. உழவு என்ற சொல் - உழ எனவிகாரப்பட்டுவந்தது. இனி, உழ என்பதைச் செயவெனெச்சமாகக்கொண்டு உழ - உழுமாறு, இனிது நாள் - இனிதான நாளை, கொண்டிடின் எனினுமாம். மங்கலம் - வடசொல். (1)

2.—உழவுச்சிறப்பு.

கீழ் உழவுநாட்சிறப்புக் கூறிய கவி, இதனால் அங்ஙனம் நன்னாட் கொண்டு செய்யப்படும் உழவுத்தொழிலின் சிறப்பைக் கூறுகின்றாரென்க: இத்தொடர் - உழவினுடைய சிறப்பு என விரியும்.

நீர்விழாக் கொளவளர்ந்த நிலமெல்லாந் தம்முடைய
சீர்விழாக் கொளவிளக்குந் திருவிழாப் பெருக்காளர்
ஏர்விழாக் கொளினன்றி யெறுழ்க்கரிதேர் மாப்படையாற்
போர்விழாக் கொளமாட்டார் போர்வேந்த ராஞேரே.

(இ - ள்.) *நீர் விழா கொள வளர்ந்த நிலம் எல்லாம்* - நீர்ப் பெருக்கைக் கொள்வதனுல் (வளப்பத்தோடு சிறக்கின்ற பயிர்) விளைகின்ற நிலம்முழுவதிலும், *தம்முடைய சீர் விழா கொள* - தம்முடைய புகழ்ச் சிறப்பு எங்கும் பரவும்படி, *விளக்கும்* - விளங்கச்செய்கின்ற, *திரு விழா பெருக்கு ஆளர்*-செல்வச்சிறப்புப் பெருகுதலைக்கொண்டவரான வேளாளர், *ஏர் விழா கொளின் அன்றி* - ஏர்கொண்டு உழுதலாகிய விழாவை மேற்கொண்டா லல்லாமல்,—*போர் வேந்தர் ஆனோர்* - போர்செய்யுந்தொழிற்கு உரியவரான அரசர்கள், *எறுழ் கரி தேர் மா படையால்* - வலிய யானை தேர் குதிரை காலாட்படை என்ற இவற்ருல், *போர் விழா* - போர்புரிதலாகிய திருவிழாவை, *கொள மாட்டார்* - மேற்கொள்ளமாட்டார்; (எ - று.)

அரசர் தாம் நால்வகைப்படையும் மிக்குள்ளாராயினும், உலகத்தில் வேளாளர் ஏர் விழாக்கொள்ளாவிடின் உண்ணுதற்கு உணவு விளையாமையால் பசி மிகு மாதலின், தம்முடைய வீரங் குன்றப் போர்த்தொழிலிற் செல்லமாட்டாரென்பதாம். அரசரைக் கூறியதன் உபலட்சணத்தால் அந்தணர்முதலியோரும் தத்தம் தொழிலாகிய வேதமோதுதல் முதலிய தொழில்களைப் புரியாரென்பதும் பெறப்படும். விழா-காண்போர்க்கு விழைவை [விருப்பத்தை] யுண்டாக்குவது என்று காரணப்பொருள்படும், ஆகவே, அச்சொல்-நான்கடியிலும், ஏற்றவாறு பெருக்கு சிறப்பு மகிழ்ச்சியோடுசெய்யுந்தொழில் எனக் கருத்துக்கொள்ளக் கிடந்தது.

நிலம் - நிற்பதுபோலத்தோன்றுவது எனக் காரணப்பொருள் படும். சீர் - சீர்மையென்ற பண்பினடி. ஏர் - ஏராற்செய்யும் உழவுக்கு ஆகுபெயர். அன்றி - அன்மையென்னும் பண்பினடியாகப் பிறந்த எதிர்மறைக்குறிப்பு வினையெச்சம். "எறுழ் வலியாகும்" என்பது, தொல்காப்பியத்து உரியியற் சூத்திரம். கரி-கரீ: கரத்தையுடைய விலங்கு: கரம் - கை; இங்கே, துதிக்கை. எனவே, யானையாயிற்று. பெருக்கு - பெருகு என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர். கரி தேர் மா என்பனவற்ருல், கஜ ரத துரகங்கள் கூறப்பட்டதனுல், படை - காலாட்படையாயிற்று. (2)

3.—அலப்படைச்சிறப்பு.

அலம்+படை=அலப்படை: அலமாகிய படையென விரியும்: இருபெயரொட்டுப்பண்புத்தொகை. அலம் - ஹலமென்ற வடசொல்லின் திரிபு: கலப்பையென்பது, பொருள். படுக்கவைத்துத் தொழில்செய்தற்கு உரிய கருவியாயிருத்தலால், இது, இப்பெயர் பெற்றதுபோலும். அலப்படைச்சிறப்பு - அலப்படையினுடைய பெருமை.

குடையாளு முடிவேந்தர் கொலையானை தேர்புரவி
படையாளு மிவைநான்கும் படைத்துடைய ராளுலென்
மடைவாளை வரும்பொன்னி வளநாடர் தங்கள்அலப்
படைவாளைக் கொண்டன்றிப் பகையறுக்க மாட்டாரே.

(இ - ள்.) குடை ஆளும் முடி வேந்தர் - (தமது) வெண் கொற்றக்குடை நிழல்செய்யும்படி (உலகத்தை) அரசு ஆள்கின்ற கிரீடத்தையணிந்த அரசர்கள்,—கொலை - கொல்லுதல்தொழிலை யுடைய, யானை - யானைகளும், தேர் - தேர்களும், புரவி - குதிரை களும், படை ஆளும் - ஆயுதங்களையுடைய காலாட்களும், இவை நான்கும்-ஆகிய இந்தச்சதுரங்கசேனைகளையும், படைத்து உடையர் ஆனால் - நிறையப் பெற்றுள்ளாராயினும்,—என் - (அவ்வரசர் கட்கு அச்சதுரங்கசேனைகளால்) என்ன பிரயோசனம்? மடை வாளை வரும் பொன்னி வளம் நாடர் தங்கள் -நீர்மடைகளிலே வாளை மீன்கள் பாய்ந்து செல்லப்பெற்ற காவேரியினாற் செழிப்படைந்த நாட்டையுடைய வேளாளரது, அலம் படைவாளை கொண்டு அன்றி - கலப்பையினுடைய வாட்கட்டையை உதவியாகக்கொண் டல்லாமல், பகை அறுக்க மாட்டார் - தங்களது பகைவர்களை அறுத்தொழித்து வெற்றிபெறமாட்டார்கள்; (எ - று.)

அரசரது போர்வாளுக்கு வேளாளரது அலப்படைவாளே கூர்மையையும் வலிமையையும் தருமென்பது, கருத்து. எல்லா வுயிர்க்கும் உடம்பை நிலைபெறச்செய்யும் உணவைத் தருதற்கு இன்றியமையாத விளையுளைத்தருகிற அருந்தொழிலாகிய உழவுத் தொழிலுக்குக் கருவியாயிருக்கின்ற வேளாளரது அலப்படை இல்லாவிடின் உணவின்றிச் சதுரங்கசேனைகளும் மிகவருந்துமாத லின், அப்போது, அவற்றையுடைய அரசர்கட்குப் பகையறுக்கும் வலிமையும் குன்றும்; அதனால், பகையறுக்குந்தொழிலும் அரசர் கட்கு நடவாதென்க. இங்கு, அரசர்கட்குச் சதுரங்க சேனைகளிருந் தும் வேளாளரது அலப்படைவாளின்துணை இல்லாவிடின் பகை யறுக்கமாட்டாமையாகிய குறைவு உண்டாகு மெனக் கூறியிருத் தலால், **இன்மைநவிற்சியணி;** இது, வடமொழியில் விநோக்தி யெனப்படும். "பலகுடைநீழலுந் தங்குடைக்கீழ்க்காண்ப, ரலகுடை நீழலவர்" என்ற திருக்குறளையும், 'தம்மரசனுக்குக் கொற்றம்பெருக்கி மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பர்' என்று பரிமேலழகர்கூறிய விசேடவுரையையும் காண்க; "இரப் போர் சுற்றமும் புரப்போர்கொற்றமும், உழவிடைவிளைப்போர்" என்ற சிலப்பதிகாரமும் "பொருபடைதருஉங் கொற்றமு முழுபடை, யூன்றுசான்மருங்கினீன்றதன் பயனே" என்ற புற நானூறும் இங்குக் காணத்தக்கன.

சோழநாட்டிலுள்ள திருவெண்ணெய்நல்லூரில் வாழ்ந்த வேளாளராகிய சடையப்பமுதலியார் தம்மையாதரித்ததுபற்றி அவரைப் புகழவேண்டுமென்ற கருத்தோடு கம்பர் இந்நூலைச்செய் தன ராதலால், அவரைக்குறிக்குமாறு 'பொன்னிவளநாடர்' எனக் கூறின ரென்பர்; இனி, "சோழவளநாடு சோறுடைத்து" என்ற படி சோழநாடானது தமிழ்நாட்டினுள் நீர்வளம்பெற்றுப் பயிர்

விளையுளுக்குச் சிறந்துநிற்றலால், அங்குவாழும் வேளாளரை 'பொன்னிவளநாடர்' எனக் கூறினு ரெனினுமாம். பொன்னிவள நாடு - சோழநாடு; காவேரி பாயப்பெற்ற வளப்பமுள்ள நாடென்க. வேந்தர் பகையறுக்கமாட்டாரென இயையும். அலப் படைவாளென்றது - வடிவு மாத்திரத்தாலன்றி, நிலத்தையறுத் தல் தொழில்தன்மையாலும், விளையுளை யுண்டாக்கி அதன் மூல மாகப் பகைவரது செருக்கை யறுத்தொழித்தலாலு மென்க; **உருவகம்:** ("செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு, மெஃக தனிற்கூரியதில்," "செய்கபொருள் யாருஞ் செறுவாரைச் செறு கிற்கு, மெஃகு பிறிதில்லை" என்பன இங்கு நோக்கத்தக்கன.) தமது குடிகளுக்கு ஒருவகைத்தாபமும் வரவொட்டாது நீதிதவறாத அரசரது ஆளுகையைக் குடையென்றல், மரபு.

'கொலை' என்றது - யானை தேர் புரவி ஆள் என்ற நான்கிற் கும் அடைமொழி. படை - பகைவரைப்படுத்தற்குக் கருவியானது; காரணப்பெயர்: (படுத்தல் - அழித்தல்.) படை - வில் வாள் வேல் முதலியன. யானை தேர் புரவி என்ற அஃறிணைப்பெயர் மூன்றும், 'ஆள்' என்ற உயர்திணைப்பெயர் ஒன்றும் விரவி, மிகுதியினால் 'இவை நான்கும்' இன அஃறிணைமுடிபைப் பெற்றன; திணைவழு வமைதி. [நன் - பொது - 27.) யானை தேர் புரவி படையாளும் - பெயர்ச்செவ்வெண்: ஈற்றில் எச்சவும்மைபெற்றுநின்றது; [நன் - இடை - 8.] நான்கும், உம் - இனைத்தென்றறிபொருளில்வந்த முற்றும்மை. என் - அஃறிணையிருபாற்குமுரிய எவனென்னும் வினாவினைக்குறிப்புமுற்றின் இடைக்குறை. மடை - நீர்பாயும் வழி. வாளை - மீனின்சாதிபேதம்; ஆழமான நீர்நிலையிற் பயில்வது. பொன்னைக்கொழித்துக்கொண்டு வருதலால், காவிரிநதிக்குப் பொன்னியென்று ஒருபெயர். வாளைக்கொண்டன்றிப் பகையறுக்க மாட்டார் - இரண்டு எதிர்மறைகள், ஒருடன்பாட்டுப்பொருளை வற்புறுத்தின. அன்றி - எதிர்மறைக்குறிப்புவினையெச்சம்; றி - விகுதி. பகை - பகைவர்க்கு, பண்பாகுபெயர். ஏ - ஈற்றசை. (3)

4.—மேழிச்சிறப்பு.

மேழி - கலப்பைமுனை நிலத்திலூன்றுமாறு அழுத்துதற்குக் கைப்பிடி யுள்ள ஒருறுப்பு.

வாழிநான் மறையோர்கள் வளர்க்கின்ற வேள்விகளும்
ஆழியால் உலகளிக்கும் அடல்வேந்தர் பெருந்திருவும்
ஊழிபே ரினும்பெயரா உரையுடைய பெருக்காளர்
மேழியால் விளைவதல்லால் வேறொன்றால் விளையாவே.

(இ - ள்.) நால் மறையோர்கள் - நான்குவேதங்களையுடைய அந்தணர்கள், வளர்க்கின்ற - மிகுதியாகச்செய்கின்ற, வேள்வி களும் - யாகங்களும், ஆழியால் உலகு அளிக்கும் - (ஆஜ்ஞை யாகிய) சக்கரத்தால் உலகத்தைப் பாதுகாக்கின்ற, அடல் வேந் தர் - வலிமைபொருந்திய அரசர்களது, பெரு திருவும் - பெருஞ் செல்வமும்,—ஊழி பேரினும் பெயரா உரை உடைய - உலகம்

அழிந்தாலும் மாறுபடாத சொற்களையுடைய, பெருக்கு ஆளர் - செல்வப்பெருக்கையுடைய வேளாளரது, மேழியால்—, விளைவது அலால் - உண்டாகுமேயல்லாமல், வேறு ஒன்றால் விளையா - வேறொருவழியால் உண்டாகமாட்டா; (எ - று.)

அந்தணரதுவேள்வியும் அரசரதுபெருஞ்செல்வமும் உண்டாவதற்கு, வேளாளரதுமேழியே காரண மென்றவாறு. "உழவினார் கைம்மடங்கினில்லை விழைவதூஉம், விட்டேமென்பார்க்கு நிலை" என்ற திருக்குறளையும், 'அவர் [உழுவோர்] உறுப்புமாத்திரமாய கை வாளாவிருப்பின் உலகத்து இம்மை மறுமை வீடென்னும் பயன்கள் நிகழா' என்ற பரிமேலழகருரையையுங் காண்க. வேளாளர் விளைவிக்கின்ற நெல் அந்தணர்செய்கின்ற யாகத்திற்குப் பலவகையாக உதவுதலாலும், அரசர்க்குப் பெரும்பொருள் அவ்வேளாளர் நிலத்தைவிளைவித்தற்காக இறுக்கும் அரசிறையால் உண்டாதலாலும், 'வேள்விகளும் பெருந்திருவும் பெருக்காளர் மேழியால் விளையும்' எனக் கூறினார். ஊழிபேரினும்பெயரா உரையுடைய பெருக்காளர் - வாய்மைதவறாதவ ரென்றபடி. இதனை, "மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகனுயிரிழப்பத் தாங்கள், கூறியசொற் **பிழையாது** துணிந்து செந்தீக் குழியிலெழு பதுபேரு முழுகிக் கங்கை, யாறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்ப னண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ் மெய்ப், பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற் பிரித்தளவிட் டிவளவெனப் பேச லாமோ" என்று உமாபதி சிவாசாரியரது சேக்கிழார் புராணத்தால் அறிக. ஈற்றடி - **முற்றுமோனை;** (அதாவது - ஓரடியின் எல்லாச்சீர்களிலும் மோனை வருவது.)

வாழி - அசை: வாழ்தலையுடைய எனினுமாம். வேள்வி, வேள் - பகுதி, வி - விகுதி: அது - இங்கு, யாகத்தைக்குறித்தது. ஆழி - ஆஜ்ஞாசக்கரம். அடல் - அடுதல்தொழில்; அடுதல் - கொல்லுதல். ஊழி - உலகமழியுங் கற்பாந்த காலம். பேரின் - பெயரின் என்பதன் மரூஉ. பெயரா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். உரை - பலராலும் உரைக்கப்படுவது எனப் புகழ்க்குக் காரணக்குறி; செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட்டபெயர். பெருக்கு - அருட்பெருக்குமாம். விளைவது - தொழிற்பெயர். அலால் = அல்லால்: எதிர்மறைக் குறிப்புவினையெச்சம். (4)

5.—ஊற்றாணிச்சிறப்பு.

ஊற்றாணி - கலப்பையில் ஏர்க்காலைச் சேர்க்குமிடத்தில் அது உறுதியாயிருக்குமாறு ஊன்றுதலையுடைய மரத்தாலியன்ற ஆணி.

நீற்றோனும் மலரோனும் நெடியோனும் என்கின்ற
தோற்றாள ரிவராலே தொல்லுலகம் நிலைபெறுமோ
மாற்றாத காவேரி வளநாடர் உழுங்கலப்பை
ஊற்றாணி யுளதாயின் உலகுநிலை குலையாதே.

(இ - ள்.) நீற்ருேனும் - (உடம்பெங்கும்) விபூதியைத்தரித்த சிவபெருமானும், மலரோனும் - (திருமாலின்) நாபிகமலத்திலே தோன்றிய பிரமதேவனும், நெடியோனும் - (மாவலியை வலியடக்கத் திரிவிக்கிரமனுய்) நீண்டவனுன திருமாலும், என்கின்ற- என்றுசொல்லப்படுகின்ற, தோற்ருளர் - (உலகத்திலே முதற் கடவுளரென்று சொல்லப்படுமாறு) மிக்குத் தோன்றுதலையுடையரான, இவரா‌லே-இக்கடவுளரால், தொல் உலகம் - பழமையான இந்தவுலகம், நிலை பெறுமோ - நிலைபெற்றதாகுமோ? [ஆகாது]; (பின்னை எதனுல் நிலைபெற்றதாகுமெனின்),—மாற்ருத - தவருது பெருகுகின்ற, காவேரி - காவிரிநதிபாயப்பெற்ற, வளம் நாடர் - வளப்பமுள்ள சோழநாட்டிலுள்ளவரான வேளாளர், உழும் - உழுகின்ற, கலப்பை - கலப்பையிலுள்ள, ஊற்ருணி - ஊற்ருணியானது, உளது ஆயின் - கழன்று விழாது நிலைநிற்குமாயின், (அப்போது), உலகு - இவ்வுலகம், நிலைகுலையாது - தனது நிலையினின்று அழிந்திடாது; (எ - று.)

சிவன் திருமால் பிரமன் என்னும் மும்மூர்த்திகள் உலகத்தில் மேம்பட்டுத்தோன்றினுலும், இவ்வுலகம் அத்தேவர்களால் நிலைபெறுவதின்று; காவிரிநாட்டில்வாழும் வேளாளரின் கலப்பையூற்ருணியானது தொழில் புரியும் அந்தக்கலப்பையினின்று கழலாது நிற்குமாயின், அதனுல், உணவிற்குஆன நெற்பயிர் விளைந்து உண்ணுதற்குக் குறைவின்றி யிருக்கு மாதலால் வருத்தமின்றி உலகம் நிலைபெற்று நிற்கு மென்க. "புயன்மாறி வான்பொய்ப் பினும்.........தான் பொய்யா, மலைத்தலைய கடற்காவிரி" என்ப வாதலால், மாற்ருத காவேரி என்றது. காவேரி - கவேரமலையினின்று பெருகுவதென்றும், கவேரனதுமகளாகத் தோன்றியவளென்றும் பொருள்படும்.

நீற்ருேன் - விபூதியையணிந்துள்ளவன்: சிவன். தோற்ருளர்- தோற்றுதலை [விளங்குதலை] யாள்பவர். மாற்ருத=மாருத: குறித்தகாலத்துத் தவருமற்பெருகுகின்ற என்றவாறு. மாற்ருத என்பதை வளநாடரோடு இயைத்து - இரப்போர்க்கு இல்லையென்றுசொல்லாத [ஈகைக் குணத்தையுடைய] வேளாளர் எனினுமாம். ஆயின் குலையா தென்க. (5)

6.—நுகத்தடிச்சிறப்பு.

நுகம்+தடி=நுகத்தடி: இருபெயரொட்டு. நுகம் - கலப்பையை யிழுத்துச்செல்லும் உழவுமாட்டின் கழுத்தின்மேல் வைக்கும் மரம்.

உரையேற்ற செங்கதிரோன் ஒளிநெடுந்தேர் பூண்டநுகம்
திரையேற்ற கடலுலகிற் செறியிருளை மாற்றுவது
விரையேற்ற விருநிலத்தோர் வெறுமையொடு வீழாமே
கரையேற்றும் நுகமன்ருே காராளர் உழுநுகமே.

(இ - ள்.) உரை ஏற்ற - மந்திரமொழியாகிய வேதத்திற் சிறப்பித்துக் கூறப்படுகின்ற, செங்கதிரோன் - செந்நிறமான

கிரணங்களையுடைய சூரியனது, ஒளி நெடு தேர் - ஒளியினையுடைய நீண்ட தேரிலே, பூண்ட - பூட்டப்பட்டுள்ள, நுகம் - நுகத்தடியானது,—திரை ஏற்ற - அலைகளைப்பெற்றுள்ள, கடல் - சமுத்திரத்தினாற்சூழப்பட்ட, உலகில் - இந்நிலவுலகத்தில், செறி - நெருங்கிய, இருளை - இருட்டை, மாற்றுவது - போக்குதற்குக் காரணமாயிருக்கின்றது; கார் ஆளர் - மேகத்தின் தன்மையையுடைய வேளாளரது, உழும் நுகம் - நிலத்தையுழுதற்குக் கருவியான (கலப்பையின்) நுகத்தடியோ,—விரை ஏற்ற - புகழ்மணந் தங்கிய, இரு நிலத்தோர் - பெருமைபொருந்திய நிலவுலகத்திலுள்ளவர், வெறுமையொடு வீழாமே - தரித்திரத்தினால் அழியாதபடி, கரை ஏற்றும் - (அவரைக்) கரையேற்றுகின்ற, நுகம் அன்றோ - நுகத்தடியாகுமல்லவோ? (எ - று.)

உலகத்திலுள்ள புறவிருளைமாத்திரம் நீக்குகின்ற சூரியனது தேரின் நுகத்தைக் காட்டிலும் உலகிலுள்ளாரது பசிப்பிணியை நீக்கி அன்னவரின் மனத்துயரமாகிய அகவிருளை நீக்குகின்ற வேளாளரது ஏர்நுகமே சிறந்ததென்க; இதில், உபமானமாகிய செங்கதிரோனது தேர்நுகத்தினும் வேளாளரது ஏர்நுகத்திற்குச் சிறப்புத்தோன்றுவது, **வேற்றுமையணி**யாகும். அந்தணர்செய்யும் சூரியநமஸ்காரம் முதலியவற்றை ஏற்றுக்கொள்பவனாதலால், சூரியனை 'உரையேற்ற செங்கதிரோன்' என்றுருமாம்: உரையேற்ற - புகழைப்பெற்றுள்ள எனினுமாம். சூரியனுடைய ஒளியைத் தேரின்மேலேற்றி 'ஒளிநெடுந்தேர்' என்றார். 'விரையேற்ற இருநிலத்தோர்' என்பதற்கு - (பயன் துய்ப்பதில்) விரைவையுடைய பெரியநிலவுலகத்தோர் என்பாருமுளர். இருநிலத்தோர் - மண்ணுலகம் விண்ணுலகம் ஆகிய இரண்டு நிலத்திலுள்ளவரெனினுமாம்; மண்ணுலகத்தார்க்கு உணவுவேண்டுமாறுபோலவே, விண்ணுலகத்தார்க்கும் வேள்விகளிற் கொடுக்கப்படும் அன்னரூபமாகிய அவியுணவு வேண்டுமாதலால், 'இருநிலத்திலுள்ளவரும் வெறுமையொடுவீழாமே கரையேற்றும்நுகம்' என்றாரென்க. ஏர்நுகத்தடிக்கு இருளையொழிக்கின்ற சூரியனது தேர்நுகத்தடியை உவமையாகக்கூறியிருத்தலால், இந்நுகத்தடியால் நீக்கப்படும் வெறுமையை இருளாகக்கொள்க: **ஏகதேசவுருவகத்தின்** பாற்படும். வெறுமையை இருளாகக்கொள்வதற்குக் காரணம் - இம்மைமறுமைவீட்டிற்குமுயலும் அறிவை மயக்கித் தடைசெய்தலினாலாகும்;"வறியார் இருமையறியார்" என்றது காண்க. வெறுமையெனினும், வறுமையெனினும் ஒக்கும்; வறுமையாவது-நுகரப்படும்பொருள் யாவுமில்லாமை. வெறுமையொடுவீழாமே கரையேற்றல் - தரித்திரத்திலகப்பட்டு அழியாதபடி ஈடேறச் செய்தல்.

ஏற்ற, ஏல் - பகுதி. செறியிருள் - வினைத்தொகை. வீழாமே - எதிர்மறைத்தெரிநிலைவினையெச்சம்; மே-வினையெச்சவிகுதி. (6)

7.—நுகத்தொளைச்சிறப்பு.

வளைத்ததிரைக் கடல்சூழ்ந்த வையகத்தோ ரெல்லார்க்குந்
துளைத்ததுளை பசும்பொன்னின் அணிகிடக்குந் துளைத்தல்லால்

திளைத்துவருஞ் செழும்பொன்னித் திருநாடர் உழுநுகத்தில்
துளைத்ததுளை போலுதவுந் துணையுளதோ சொல்லீரே.

(இ - ள்.) வளைத்த - சுருட்டிவருகின்ற, திரை - அலைகளை யுடைய, கடல் - சமுத்திரத்தினால், சூழ்ந்த - சூழப்பெற்றுள்ள, வையகத்தோர் எல்லார்க்கும்-உலகத்தவரெல்லார்க்கும், துளைத்த- (உறுப்பாகியசெவியிலே) தொளைக்கப்பெற்றுள்ள, துளை-தொளை யானது, பசும் பொன்னின் அணி கிடக்கும் துளைத்து அல்லால் - பசும்பொன்னினாலியன்ற அணிகலன் தங்கியிருக்கப்பெற்ற துளை யாகவுள்ளதேயல்லாமல், திளைத்து - (இருகரையிலுள்ளாரும்) நுகருமாறு, வரும் - பெருகிவருகின்ற, செழும் பொன்னி திரு நாடர் - வளப்பமுள்ள காவேரியென்னும் நதி பாயப்பெற்ற சிறந்த சோழ நாட்டிலேயுள்ள வேளாளர், உழும் - உழுதற்கு உதவுகின்ற, நுகத்தில் - நுகத்தடியில், துளைத்த-தொளைத்துள்ள, துளை போல் - துளையைப்போல், உதவும் - (உலகிற்கெல்லாம்) உதவுகின்ற, துணை - தன்மையை, உளதோ - கொண்டுள்ளதோ? சொல்லீர் - சொல்லுங்கள்; (எ - று.)

மனிதருறுப்பிலும் தொளையிட்டாலும் அத்தொளை குழை தோடு குண்டலம் கடுக்கன் முதலியனவாக வழங்கும் அணிகலங் கள் பூட்டுவதற்குமாத்திரம் பயன்படும். அத்தொளையால் மனிதர் கையிலிருக்கும் செல்வத்தையும் செலவழிக்கநேரிடுகின்றது: ஆகை யால், அத்தொளையால் நஷ்டமேதவிர இலாபமென்ப தில்லை; அங்ஙனமன்றி ஏர்மாட்டின் கழுத்திற் பூட்டும் நுகத்தடியிலுள்ள தொளையானது நுகத்தாணிபூட்டுதற்குஇடனாகி அதனால் ஏர்மாடுகள் உழுவதற்கு வழியுண்டாகி அவ்வழியால் நல்லவிளைச் சலைத் தந்து உலகோர்க்கெல்லாம் உதவுகின்றது: ஆகவே, இத் தொளைபோற்பயனுள்ள தொளையுள்ளதோ? நீங்களே ஆராய்ந்து சொல்லுங்கள் என உலகத்தோரை நோக்கிக் கூறுவதாகச் செய்யப்பட்டுள்ளது, இச்செய்யுள். செவித்தொளையினும் நுகத் தொளைக்கு வேறுபாடு கூறியிருப்பதால், **வேற்றுமையணி.**

தொளை - தொளைக்கப்பட்டிருத்தலால்வந்த செயப்படு பொருள் விகுதி புணர்ந்துகெட்டது. தொளை - சாதியொருமை. இதுவே, துளையெனவும் வழங்கும்: காரணப்பெயர். உளதோ என்ற ஓகாரம் - எதிர்மறையைக் காட்டும். துளைத்து - ஒன்றன்பாற் குறிப்புமுற்று: துணைத்து என்ற பாடம் சிறக்கும். வளைத்த - வளைந்துள்ள எனக்கூறி, கடலுக்கு அடையாக்கினு மாம். அல்லால் - எதிர்மறை வினையெச்சம். திளைத்து = திளைக்க: எச்சத்திரிபு: இனி, இடையறுமலெனினுமாம். (7)

8.—நுகத்தாணிச் சிறப்பு.

ஓராணித் தேரினுக்கும் உலகங்களனைத்தினுக்கும்
பேராணிப் பெருக்காளர் பெருமைக்கு நிகருண்டோ
காராணிக் காவேரி வளநாடர் உழுநுகத்தின்
சீராணிக் கொப்பதொரு சிறந்தாணி செப்பீரே.

(இ - ள்.) ஓர் ஆணி தேரினுக்கும் - ஒரே அச்சாணியைக் கொண்ட சூரியனுடைய தேருக்கும், உலகங்கள் அனைத்தினுக்கும்- எல்லாவுலகங்கட்கும், பேர் ஆணி - பெருத்த தேராணிபோன்று தாங்கவல்லவரான, பெருக்கு ஆளர் - செல்வப்பெருக்கையுடைய வரான வேளாளரின், பெருமைக்கு—, நிகர் - ஒப்பு, உண்டோ—? [இல்லை]; (அவ்வாறே), கார் ஆணி - மேகத்தை ஆதாரமாகக் கொண்ட, காவேரி - காவிரி பாயப்பெற்ற, வளநாடர் - வளப்ப முள்ள சோழநாட்டவரான வேளாளர், உழும் - உழுவதற்குக் காரணமான, நுகத்தின் - நுகத்தடியிலுள்ள, சீர் ஆணிக்கு - சீர்மை பொருந்திய ஆணிக்கு, ஒப்பது - ஒப்பதாகிய, ஒரு சிறந்த ஆணி - ஒரு சிறந்த ஆணியை, செப்பீர் - சொல்லுங்கள்; (எ-று.)

வேளாளர்பெருமைக்கு ஒப்பான பெருமையுடையார் இல்லா மலிருப்பதுபோலவே, நுகத்தாணிக்கு ஒப்பான ஆணியும் வேறு இல்லை யென்றவாறு: **எடுத்துக்காட்டுவமையணி.** சூரியனுடைய தேர் ஒற்றைத்தனியாழியையுடையதாகையால்,அதற்கு அச்சாணி யும் ஒன்றேயா மென்பது குறித்து, 'ஓராணித்தேர்' என்றார். ஆணிஎன்றசொல் - இலக்கணையால், வெவ்வேறு பொருளை உணர்த்திற்று. உண்டோ, ஓகாரம் - எதிர்மறை. நிகர் - இடைச் சொல். சிறந்தாணி - பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல். (8)

9.—பூட்டாங்கயிற்றுச்சிறப்பு.

நுகத்தடியை உழவுஎருத்துகளின் கழுத்தில்வைத்துப் பூட்டு கின்ற கயிறு பூட்டாங்கயிறு எனப்படும்.


நாட்டுகின்ற சோதிடத்தில் நாண்பொருத்தம் நாட்பொருத்தங்
காட்டுகின்ற கயிறிரண்டுங் கயிறல்ல கடற்புவியில்
தீட்டுபுகழ்ப் பெருக்காளர் செழுநுகத்தோ டுழும்பகடு
பூட்டுகின்ற கயிறிரண்டும் புவிமகண்மங் கலக்கயிறே.

(இ - ள்.) கடல் புவியில் - கடலாற் சூழப்பட்ட இந்தப் பூமியிலே, நாட்டுகின்ற - (நன்மை தீமைகளை) நிலையிட்டுக் காட்டு கின்ற, சோதிடத்தில்-சோதிடநூலினாலாராய்ந்துணரப்படுகின்ற, நாண் பொருத்தம் நாள்பொருத்தம் காட்டுகின்ற - இரச்சுப் பொருத்தத்தையும் வேதைப்பொருத்தத்தையும் உணர்வதற்குக் கருவியாயுள்ள, கயிறு இரண்டும் - கயிறுகளிரண்டும், கயிறு அல்ல - (யாவர்க்கும் பயன்விளைக்குங்) கயிறென்னப்படா; (பின்னை எது பயன்விளைக்குங் கயிறு என்றால்),—தீட்டு புகழ் - (மக்க ளுடையநாவிலே) எழுதப்பெற்றுள்ள புகழைக்கொண்ட, பெருக் காளர் - வேளாளர், செழுநுகத்தோடு - வளப்பமுள்ள நுகத் தடியை (த் தம்பிட்ரியிலே) கொண்டு, உழும் - உழுதொழில் செய்கின்ற, பகடு - எருதுகளை அல்லது எருமைக்கடாக்களை, பூட்டுகின்ற - ஏரிற்பிணிக்கின்ற, கயிறு இரண்டும் - இரண்டு


கயிறுகளே, புவி மகள் மங்கலம் கயிறே - பூமிதேவியின் மங்கல நாண்போலும்; (எ - று.)

நாண்பொருத்தம் நாட்பொருத்தம் இவற்றைக்காட்டுகின்ற கயிறிரண்டும் சோதிடமுணர்ந்தோரான்மாத்திரம் எண்ணப்படுதலாலும், விவாகத்திலன்றி மற்றைத்தொழில்களில் உதவுவன அல்லவாதலாலும், தாம் நேரே பயனை விளைப்பனவல்லவாதலாலும் அவற்றைக் கயிறல்லவென விலக்கி, நேரேபயனை விளைப்பனவாகிய பூட்டாங்கயிற்றைப் பூமிதேவியின் மங்கலநாணாக உருவகஞ்செய்தார். பூமிதேவியாகிய பெண் வாழ்ச்சியையுடையவளெனத்தெரிவிப்பது உழுதொழிலாகையால் அவ்வுழுதொழிலுக்கு இன்றியமையாத பூட்டாங்கயிறுகள் அந்தப் பூமிதேவியின் மங்கல நாணெனப்பட்டது. ஓர் ஏருக்கு இரண்டு பகடுஉள்ளனவாதலால், கயிறுகள் இரண்டாயின. ஒருபெண்ணை ஒருபுருஷனுக்கு விவாகஞ் செய்யவேண்டுமென்றால் பார்த்தற்குஉரிய பொருத்தங்கள் பத்து என்று சோதிடர் கூறுகின்றனர்: அவை—(1) தினப்பொருத்தம், (2) கணப்பொருத்தம், (3) மாஹேந்திரப்பொருத்தம், (4) ஸ்த்ரீதீர்க்கப்பொருத்தம், (5) யோனிப்பொருத்தம், (6) ராசிப்பொருத்தம், (7) ராசியதிபதிப்பொருத்தம், (8) வசியப்பொருத்தம், (9) இரச்சுப்பொருத்தம், (10) வேதைப்பொருத்தம் என்பன. நாண் இரச்சு என்பன பரியாயமாதலால், நாண்பொருத்தம் என்பதற்கு அந்தப்பத்துவகைப் பொருத்தத்தினுள் ஒன்றாகிய இரச்சுப் பொருத்தம் என்று கொள்ளப்பட்டது. நாட்பொருத்தங்காட்டுகின்ற **கயிறு** என வருதலாலும், **இரச்சுக்**கயிறு வேதைக்கயிறு என்ற இவ்விரண்டே கயிறுஎன வழங்கப்படுவதாலும், நாண் பொருத்தமென்பதனால் இரச்சுக்கயிறு கூறப்பட்டதாலும், மற்றொன்றாகிய நாள் பொருத்தமென்பது தினப்பொருத்த மென்று பொருள்படுமாயினும் அங்ஙனம் பொருள்கொள்ளாமல் அசுவினி முதலிய நட்சத்திரங்களைக்கொண்டு பார்க்கும் பொருத்தமாகிய வேதைப்பொருத்தமென்று பொருள் உரைக்கப்பட்டது.

இவற்றுள் நாண்பொருத்தமாவது நேரே மூன்றுமுக்கோணம் கீறி, குறுக்காக நான்குகீற்றுக்கீறினால் இருபத்தேழு பொருத்தாம்: குறுக்காகக் கீறிய அடிவரைக்குக்காலென்றும், அதன்மேல்வரைக்குத் தொடையென்றும், அதன்மேல்வரைக்குவயிறென்றும், அதன்மேல்வரைக்குக் கழுத்தென்றும், முக்கோணத்துச்சி மூன்றுக்கும் தலையென்றும் பெயராம்: இதில் ஏற்படும் இருபத்தேழு பொருத்தில் அடிப்பொருத்தில் அசுவினியை வைத்து மேல்கீழாக முறையே இருபத்தேழுநட்சத்திரங்களையும் எழுதவும். புருஷனுடைய நட்சத்திரமும் பெண்ணினுடைய நட்சத்திரமும் ஒரே கீற்றில் இருக்கலாகாது. அங்ஙனம் நிற்பின், கால்வரையிலிருந்தால் பொருளழிவென்றும், தொடைவரையில்வந்தால் மலடியென்றும், வயிற்றுவரையில்வந்தால் புத்திரஹானியென்றும், கழுத்துவரையில்வந்தால் புருஷனிறப்பு என்றும் சிரசுவரையில்வந்தால் பெண்ணிறப்பு என்றும் பலன்காண்க. இதுவே இரச்சுப் பொருத்தமாம். இரச்சுக்கயிறுவரையுமாறு:—



இனிவேதைப்பொருத்தமாவது - ஒருமுக்கோணங்கீறி, தலைப் பக்கத்தையடுத்தாற்போல் இருபக்கத்திலும் நன்னான்குவரைகீறிக் குறுக்காகவும் நான்குவரைகீறினால் இருபத்தேழுமுனையாதாம். முக்கோணத்தின் அடிப்பக்கத்திலிருந்து அசுவினிமுதலிய இருபத்தேழுநட்சத்திரங்களையும் எழுதவும். ஆண் நட்சத்திரமும் பெண் நட்சத்திரமும் ஒரேவரையில் வரலாகாது. இதுவே வேதைப் பொருத்தமாம். வேதைக்கயிறுவரையுமாறு:—



(9)

10.—தொடைச்சிறப்பு.

தொடை - மேழிக்கும் ஏர்க்காலுக்கும் தொடர்புண்டாம்படி தொடுக்கப்படும் உழவுக்கயிறு; தொடை-தொடுத்தல்; தொழிலாகு பெயராய்த் தொடுக்கப்படுங் கயிற்றை யுணர்த்திற்று.

தடுத்தநெடு வரையாலும் தடவரைக ளெட்டாலும்
உடுத்ததிரைக் கடலாலும் உலகினிலை வலியாமோ
எடுத்தபுகழ்ப் பெருக்காளர் எழுநுகத்தோ டிணைப்பகடு
தொடுத்ததொடை நெகிழாதேல் உலகுதொடை நெகிழாதே.

(இ - ள்.) தடுத்த நெடு வரையாலும் - (சூரியன் முதலிய கிரகங்களது கதியைத்) தடுக்குந் தன்மையுடைய பெரியமகாமேரு

மலையாலும், தடவரைகள் எட்டாலும் - பெரிய எட்டுக்குல பர்வதங்களாலும், உடுத்த திரை கடலாலும்-பூமியைச்சூழ்ந்துள்ள அலைகளையுடைய கடலினாலும், உலகின் நிலை - நிலவுலகத்தின் நிலைமை, வலி ஆமோ - வலிமையுடையதாகுமோ? [ஆகாதென்ற படி];(மற்று உலகின் நிலைமை எதனால் வலியுடையதாகுமென்றால்), புகழ் எடுத்த பெருக்கு ஆளர் - கீர்த்திபெற்ற வேளாளரது, இணை பகடு எழும் நுகத்தோடு - இரட்டையாகிய உழவுமாடு களின் கழுத்திற்பொருந்திய நுகத்தடியுடன், தொடுத்த-(கலப்பை யிற்) சேர்த்துக்கட்டப்பட்டுள்ள, தொடை - உழவுக்கயிற்றின் கட்டானது, நெகிழாது ஏல் - தளராதிருக்குமானால்,—உலகு தொடை - இவ்வுலகத்தின் இடையறாது நடந்துவருந் தன்மையா னது, நெகிழாது - தளராது; (எ - று.)

மேருபர்வதமும் அஷ்டகுலாசலங்களும் பூமியில் மேலே தோன்றுமளவு கீழே ஆழ்ந்து வேரூன்றிப் பூமியைஅசைய வொட்டாமற்செய்துநின்றுதாங்குதலால் 'பூதரங்கள் [பூமியைத் தாங்குவன]' எனப் பெயர்பெற்று மழைக்குக் காரணமாயும் நிற்கின்றன; கடலும் உலகத்தைச்சூழ்ந்துகொண்டு பூமியின்கண் உண்டாகும் வெப்பத்தைத் தணித்து மழைக்குங் காரண மாய் நிற்கின்றது: ஆதலால், மலைகளும் கடலும் உலகு நிலை நிற்றற்குக் காரணமாகுமென்பர்; இவ்விரண்டு மிருந்தாலும், வேளாளரது உழவுத்தொழில் இடையறாது நடந்துவரும்போது மாத்திரமே உலகத்து உயிர்கள் வாழுமாதலால், அதற்கு இன்றி யமையாத உழவுக்கயிறுநெகிழாதிருத்தலே உலகம் இடையறாது நடத்தற்குக் காரணமாமென்க. உழவுக்கயிறு நெகிழுமாயின், உணவின்றி இவ்வுலகத்து உயிர்கள் அழிந்தொழியுமென்பது கருத்து. உழவுக்கயிறு நெகிழ்தலாவது - ஏர்கட்டப்படாமையாற் பயிர்த்தொழிலுக்கு இடமில்லாதிருத்தல். இங்கு, மலைகளினிடத் தும் கடலினிடத்துமுள்ள உலகத்தைத்தாங்குந்தன்மையை மறுத்து, உழவுக்கயிற்றின்மேல் ஏற்றிக்கூறியது, **ஒழிப்பணி**யென் னும் **அபநுதியணி**யின்பாற்படும்.

'நுகத்தோடு இணைப்பகடுதொடுத்ததொடை' என்பதற்கு - யாற்றுநீர்ப் பொருள்கோளாக, நுகத்தடியோடு இரண்டுமாடு களைச் சேர்த்துக்கட்டிய பூட்டாங்கயிறு எனப் பொருள்கூறலா காது; அதனைப்பற்றி, "நாட்டுகின்ற சோதிடத்தினுண்பொருத்த நாட்பொருத்தங், காட்டுகின்றகயிறிரண்டுங்கயிறல்ல கடற்புவி யிற், றீட்டுபுகழ்ப்பெருக்காளர் **செழுநுகத்தோடுழும்பகடு, பூட்டு கின்ற கயிறிரண்டும்**புவிமகண் மங்கலக்கயிறே" என்று முன் செய் யுள் இருத்தலையும், உழவுக்கயிற்றிற்குத் தனியே செய்யுள் இல்லாதிருத்தலையுங்காண்க.

மகாமேருகிரியானது, சூரியன்முதலியகிரகங்கள் தன்னைச் சுற்றிவந்து உதயாஸ்தமனம்பெறுமாறு பூமியின்நடுவிலே ஓங்கி நிற்றலால், '**தடுத்தநெடுவரை**' எனப்பட்டது. அஷ்டகுலாசலங் கள் - கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், கந்தமாதநம், நீலகிரிஎன்பன: வேறுவகையாகவுங்கூறப்படும்.

பூமியாகியபெண்ணுக்குக்கடலானது ஆடைபோலச்சூழ்ந்துநிற்றலால், 'உடுத்த திரைக்கடல்' எனப்பட்டது; பூமிக்குஉள்ள 'அப்திமேகலா' என்ற வடமொழிப்பெயரையுங் காண்க. பகடு - பசு எருமை இவற்றின் ஆண். வலியாமோ, ஓகாரம் - எதிர்மறை. (10)

11.—கொழுச்சிறப்பு.

கொழு - கலப்பையின் காறு.

வேதநூல் முதலாகி விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவா ரெல்லாரும் உழுவார்தந் தலைக்கடைக்கே
கோதைவேல் மன்னவர்தங் குடைவளமுங் கொழுவளமே
ஆதலால் இவர்பெருமை யாருரைக்க வல்லாரே.

(இ - ள்.) வேதம் நூல் முதல் ஆகி-வேதசாஸ்திரம் முதலாகி, விளங்குகின்ற கலை அனைத்தும் - பிரசித்தமான சாஸ்திரங்களையெல்லாம், ஓதுவார் எல்லாரும் - படிப்பவர்களெல்லாம், உழுவார் தம் தலைக்கடைக்கே - உழவு தொழிலையுடைய வேளாளரது (வீட்டின்) தலைவாசலிலேயே (உள்ளவராவர்); கோதை வேல் மன்னவர் தம்-வெற்றிமாலையணிந்த வேலாயுதத்தையுடைய அரசர்களது,குடை வளமும்-வெண்கொற்றக்குடையின் [அரசாட்சியின்] சிறப்பும், கொழு வளமே - (அவ்வேளாளரது) கலப்பைக்காறின் செழிப்பினாலேயே (உண்டாவது); ஆதலால்—, இவர் பெருமை - இவ்வேளாளரது பெருமையை, யார் உரைக்க வல்லார் - எவர் எடுத்துச்சொல்லவல்லவர்? [எவராலும் ஆகாது என்றபடி];

நான்குசாதியாருள் அந்தணர்கள் கல்வியினாலும் ஒழுக்கத்தினாலும் யாவரினுஞ் சிறந்தவராகத்தோன்றுகின்றனர்; க்ஷத்ரியர்கள் செல்வவலிமைகளினால் மிக்குத் தோன்றுகின்றனர்; என்றாலும், இவ்விருதிறத்தாரது சிறப்புக்கும் வேளாளரது உழவுத்தொழிலே காரணமாதலால், இவ்வேளாளர் யாவரினும் சிறந்தவராவ ரென்பதாம். "சுழன்று மேர்ப்பின்ன துலகம தனா, லுழந்து முழவே தலை" என்ற திருக்குறளும், 'பிறதொழில்களாற் பொருளெய்தியவழியும் உணவின்பொருட்டு உழுவார்கட் செல்லவேண்டுதலின் 'சுழன்று மேர்ப்பின்னது உலகம்' என்றும், வருத்தமிலவேனும் பிறதொழில்கள் கடையென்பது போதர 'உழந்துமுழவேதலை' என்றுங் கூறினார்' என்ற அதன்பரிமேலழகருரையும் காணத்தக்கன.

வேதம் - (நன்மைதீமைகளை) அறிவிப்பதென, வடமொழிக் காரணக் குறி. நூல்-உவமவாகுபெயர். பஞ்சுகொண்டு இழைத்து நூற்கப்படும் நூல்போலச் சொற்கொண்டு அமைக்கப்படுவது, நூலாம்; "இனி, 'நூல்' என்றசொற்குப் பொருள் யாதோ வெனின்,— நூல்போறலின் நூலென்ப; பாவைபோல்வாளைப் பாவையென்றது போல; என்னை? நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளாற் கைவல்மகடூஉத் தனதுசெயற்கைநலந் தோன்ற ஓரிழைப்படுத்தலாம், உலகத்து நூல்நூற்றலென்பது: அவ்வாறே சுகிர்ந்து பரந்துகிடந்த சொற்பரவைகளாற் பெரும்புலவன் தனது

உணர்வுமாட்சியின் பிண்டம் படலம் ஒத்துச் சூத்திரமென்னும் யாப்புநடைபடக்கோத்து நூற்கப்படலினென்பது. இனி, ஒரு சாரார் நூல்போலச்செப்பஞ்செய்தலின், நூலென்ப. இனி, தந்திர மென்னும் வடமொழிப்பொருளை நூலென வழங்குதல், தமிழ் வழக்கெனக் கொள்க. இது, நூலென்றசொற்குப்பொருள்" என்ற இறையனாரகப்பொருளுரை அறியத்தக்கது. இனி, நூலென்ற பெயரை, 'ஸூத்ரம்' என்ற வடமொழியின் பொருளமைந்த தென் பாரு முளர். கலை - 'கலா' என்ற வடமொழி ஈறுதிரிந்துவந்தது. அனைத்தும், எல்லாரும்—உம்மை - எஞ்சாமைப்பொருளது. இரண்டாமடியிலும், மூன்றுமடியிலும் ஏற்றவினைச்சொற்கள் வருவித்துமுடிக்கப்பட்டன. தலைக்கடை - பண்புத்தொகை; தலை வாசல்: இனி, தலைக்கடை = கடைத்தலை: இலக்கணப்போலியென் பாருமுளர். குடைவளரும் கொழுவளமே - காரணத்தைக் காரிய மாகக்கூறிய உபசாரவழக்கெனினுமாம். 'கோதை' என்பது, வேலுக்கேனும் மன்னவர்க்கேனும் அடைமொழி யாகத் தக்கது. வெல்வது - வேல்: காரணக்குறி. இது, மற்றையாயுதங்கட்கும் உபலட்சணம். குடைவளரும், உம்மை - முன்னிரண்டடியை நோக்குதலால், இறந்தது தழுவிய எச்சப்பொருளது. யார் - யாவ ரென்பதன் மரூஉ. (11)

12.—கொழுவாணிச் சிறப்பு.

கொழுவாணி - கலப்பைமுனையில் கொழுவை வைத்துத் தைத்திருக்கும் ஆணி.

செழுவான மழைவாரி திங்கடொறும் பொழிந்தாலும்
கெழுவார நிலமடந்தை கீழ்நீர்கொண் டெழுந்தாலும்
வழுவாத காவேரி வளநாடர் உழுகலப்பைக்
கொழுவாணி கொண்டன்றிக் குவலயஞ்சீர் நிரம்பாதே.

(இ - ள்.) செழு வானம் - செழிப்புள்ள வானமானது, மழை வாரி - மழை நீரை, திங்கள்தொறும் - மாதந்தோறும், பொழிந் தாலும் - பொழிந்து வந்தாலும், கெழு ஆர - செழிப்புப்பொருந்த, நிலமடந்தை - நிலமகள், கீழ் நீர்கொண்டு எழுந்தாலும் - கீழ்நீர்ப் பாங்குகொண்டு சிறந்திருந்தாலும், வழுவாத - தவறுமல் பெருக் கெடுத்துவருகின்ற, காவேரி வளம்நாடர் - சோழநாட்டாளரான வேளாளர், உழு - உழுவதற்குக்கருவியாகும், கலப்பை - கலப்பை யின், கொழு - கொழுவின், ஆணிகொண்டு அன்றி - ஆணியினு லல்லாமல், குவலயம் - இந்தப்பூமி, சீர் நிரம்பாது - சிறப்பு நிரம் பப்பெருது; (எ - று.)

மழை சரியானபடி பொழிந்துவந்தாலும், கீழ்நீர்ப்பாங்கான பூமியிலிருந்து வேண்டும் ஊற்றுநீர் கிடைப்பதாயிருந்தாலும், உழவர் கொழுவாணி யிராவிட்டால் கலப்பைகொண்டு பூமியை யுழமுடியாதாதலால், பூமியில் தானியம் மிகுதியாகக்கிடைக்காது; அதனால், இப்பூமி உழப்பட்டுச் சீர்ப்படுதற்குக் கொழுவாணி அவசியம் வேண்டியதாகு மென்க. கெழு வாரம் எனப்பிரித்து -

(உயிர்களிடத்து) விளங்குகின்ற அன்பைக் கொண்ட எனினுமாம். குவலயம் - தற்சம வடசொல். (12)

13.—தாற்றுக்கோற் சிறப்பு.

தாற்றுக்கோல் - உழவுமாடுகளைக் குத்தி நடத்துகின்ற முள்ளைமுனையிலுடைய கோல். தாறு+கோல்=தாற்றுக்கோல்; வேற்றுமையில் நெடிற்றொடர்க்குற்றியலுகர றகரவொற்று இரட்டிவந்தது. தாறு- இரும்புமுள்.

வெங்கோபக் கலிகடந்த வேளாளர் விளைவயலுள்
பைங்கோல முடிதிருந்தப் பார்வேந்தர் முடிதிருந்தும்
பொங்கோதைக் கடற்றானைப் போர்வேந்தர் நடத்துபெருஞ்
செங்கோலை நடத்துங்கோல் ஏரடிக்குஞ் சிறுகோலே.

(இ - ள்.) வெங் கோபம் கலி கடந்த-கொடிய கோபத்திற்குக் காரணமான வறுமையைச் சயித்த [பெருஞ்செல்வர்களான], வேளாளர் - வேளாளரது, விளைவயலுள் - (தானியம்) விளைகின்ற கழனிகளிலே, பைங்கோலம் முடிதிருந்த - பசுமையாகிய அழகுடைய பயிர்களின் நாற்றுமுடி செழித்திருக்குமாயின், பார் வேந்தர் முடி திருந்தும் - பூமியையாள்கின்ற அரசர்களது கிரீடம் செவ்வைபெறும்; பொங்கு ஓதை கடல் தானை - பொங்குந்தன்மையுள்ள பேரொலியைக்கொண்ட கடல்போன்ற சேனைகளையுடைய, போர் வேந்தர் - போர்வீரத்தையுடைய அரசர்கள், நடத்து - நடத்துகிற, பெருஞ் செங்கோலை - பெரியதாகிய செங்கோலை, நடத்தும் - (ஒருபாற்கோணுமல்) நடத்தவல்ல, கோல் - கோலாவது,—ஏர் அடிக்கும் சிறு கோலே - (வேளாளர்) உழவுமாட்டையடித்து ஓட்டுகின்ற சிறிய தாற்றுக்கோலேயாம்; (எ - று.)

பார்வேந்தர் முடிதிருந்துதல் - அரசர் செல்வப்பெருக்கினால் மிக்க பெருமையுடன் வாழ்தல். அரசர் பெருமையுடன்வாழ்தற்குக் காரணம், வேளாளரது பயிர்த்தொழில்; அப்பயிர்த்தொழில் இனிதுநடத்தற்குத் தாற்றுக்கோல் துணையாயிருந்து அரசரது செங்கோலைக் கோணுது நடத்துமென்க: இங்கு, முன்னிரண்டடியிற்கூறிய விஷயத்தைப் பின்னிரண்டடி சாதித்துநிற்பது - **தொடர்நிலைச்செய்யுட்குறியணி**யின்பாற்படும். ஈற்றடியில் 'கோல்' என்ற சொல் ஒரேபொருளில் மும்முறைவந்தது - **சொற்பொருட்பின்வருநிலையணி.** செங்கோலாவது - அரசனுற் செய்யப்படும் முறையினது தன்மை. அம்முறையானது ஒருபாற்கோணுது செவ்வியகோல் போலுதலால், செங்கோலெனப்படும்; (வடநூலாரும் 'தண்டம்' என்பர்.) அச்செங்கோல்கோடுவது, ஆசைமுதலிய காரணம்பற்றி; செல்வவளம் நிறைந்தபோது, அரசர்க்கு ஆசைமுதலிய தீக்குணங்களுண்டாகமாட்டா வென்க. செல்வவளத்திற்குப் பிரதானகாரணமாகிய பயிர் விளைதற்குக் கருவியாயிருந்தலால், ஏரடிக்குஞ்சிறுகோலை வேந்தரின் பெருஞ்செங்கோலை நடத்துங் கோலாகும் என்றூர். 'பெருஞ்செங்கோலை நடத்துங்கோல் ஏரடிக்குஞ் சிறுகோல்' என்ற விடத்துச் சொல்நயம் பாராட்டத்தக்கது.

கலி-வறுமை. வறுமைக்காலத்தில் எவர்க்கும் கோபம்மிகுதல், இயல்பு. கலி-கலிபுருஷனென்பாரு முளர். வேளாண்மை - பயிர்த்தொழில், உபகாரம்: இவற்றையுடையவர் - வேளாளர். விளைவயல் - வினைத்தொகை. பசுமை + கோலம் = பைங்கோலம்: பசுமையென்ற பண்புப்பெயரின் மைவிகுதிபோய், நடுநின்ற உயிர்மெய்யுங்கெட்டு, முதலிலிருந்த அகரம் ஐகாரமாகி, வருமெழுத்திற்கு இனவெழுத்து மிக்கது; [நன் - பத - 9.] திருந்த - காரணப்பொருட்செயவெனெச்சம். தானைக்குக் கடலுவமை-பரப்பிலும், அணியணியாக வருதலிலும், பேரொலிசெய்தலிலும். கடற்றானை - உவமைத்தொகை.

"காராள ரணிவயலி லுழுது தங்கள் கையாரநட்டமுடி திருந்த விந்தப், பாராளுந்திறலரசர்கவித்தவெற்றிப் பசும்பொன் மணிமுடிதிருந்துங் கலப்பைபூண்ட, வேரா லெண்டிசைவளர்க்கும் புகழ்வேளாள ரேரடிக்குஞ் சிறுகோலாற் றரணியாளச், சீராருமுடியரச ரிருந்துசெங்கோல் செலுத்துவர் வேளாளர் புகழ் செப்பலாமோ" என்று உமாபதிசிவாசாரியர் இச்செய்யுளை அடியொற்றிக் கூறியிருத்தல் காண்க, (13)

14.—உழவெருதின்சிறப்பு.

வானமழை பொழிந்தாலும் வளம்படுவ தெவராலே
ஞானமறை யவர்வேள்வி நலம்பெறுவ தெவராலே
சேனைகொடு பொருமன்னர் செருக்களத்திற் செருக்குமத
யானைவலி யெவராலே இவரெருத்தின் வலியாலே.

(இ - ள்.) வானம் - மேகமானது, மழை பொழிந்தாலும் - (பெய்வதற்கு உரிய காலத்துத் தவறாமல்) மழையைப் பெய்தாலும், வளம் படுவது - (இவ்வுலகத்து உயிர்கட்குவேண்டும்) வளப்பமுண்டாவது, எவராலே—? ஞானம் மறையவர் வேள்வி - நல்லறிவையுடைய அந்தணர்களது யாகங்கள், நலம் பெறுவது - நன்மையையடைவது, எவராலே—? சேனை கொடு பொரும் - (தமது) சேனைகளைக்கொண்டு போர் செய்கின்ற, மன்னர் - அரசர்களது, செரு களத்தில் - போர்க்களத்திலே, செருக்கும் - (பகையை) அழிக்குந்தன்மையுள்ள, மதம் யானை - மதங்கொண்ட யானைகளினது, வலி - வலிமை, எவராலே—? இவர் - இவ்வேளாளரது, எருத்தின் - உழவெருதுகளினுடைய, வலியாலே - வலிமையினால்தான், (உண்டாகின்றன); (எ - று.)

வினைச்சொல் வருவித்துமுடிக்கப்பட்டது. இவர்எருத்தால் என்னுமல் 'இவரெருத்தின்வலியால்' என்றது - உடையார்தன்மையை உடைமையின் மேலேற்றிக் கூறிய உபசாரவழக்கின்பாற்படும். வானம்மழைபொழிந்தாலும் வேளாளர் எருதுகளைக் கொண்டு உழுது பயிரிட்டாலன்றி, உலகத்துயிர்கட்கு வேண்டிய உணவு அகப்படாமை வெளிப்படை. மிகப்பெரிய யானைகள் கவளம் முதலியனபெற்று உண்ணுதலும் வேளாளர் உழவுத்தொழிலினு லென்பதும் தெற்றென விளங்கும்.

வானம் - இடவாகுபெயர். பொழிந்தாலும், உம்மை - உயர்வு சிறப்பு: எருதின்வலிமை இல்லாவிடின் பொழிந்தும்பயனில்லை யென்பது குறித்து நின்றது. ஞானம் - ஜ்ஞாநம்: வடசொல். கொடு = கொண்டு: தொகுத்தல். 'செகுக்கும்' என்ற பெயரெச்சத்தில், செகு - பகுதி. எருத்தின் - எருதின் என்பதன் விரித்தல். ()

15.—உழவெருதின் சுவற்கறைச் சிறப்பு.

உழவெருத்தின் சுவற்கறை - உழவெருதினுடைய பிடரியில் நுகத்தடி யழுந்துவதனா லான தழும்பு.

கண்ணுதலோன் தனதுதிருக் கண்டத்திற் படிந்தகறை
விண்ணவரை யமுதூட்டி விளங்குகின்ற கறையென்பார்
மண்ணவரை யமுதூட்டி வானுலகங் காப்பதுவும்
எண்ணருஞ்சீர்ப் பெருக்காளர் எருதுசுவ லிடுகறையே.

(இ - ள்.) கண் நுதலோன் தனது - (நெருப்புக்) கண்ணை நெற்றியிலுடைய சிவபெருமானது, திரு கண்டத்தில் - திருக்கழுத்திலே, படிந்த - பொருந்திய, கறை - கறுப்புநிறத்தை,—'விண்ணவரை அமுது ஊட்டி - தேவர்களை அமிருதமுண்ணச்செய்து, விளங்குகின்ற - பிரகாசிக்கின்ற, கறை - கறையாகும்,' என்பார்-என்று (பெரியோர்) சொல்வார்கள்; எண் அரு சீர் பெருக்கு ஆளர் - அளவில்லாத சிறப்புக்களையுடைய வேளாளரது, எருது-உழவெருதுகளின், சுவல் - பிடரிலே, இடு - உண்டாயிருக்கின்ற, கறை - தழும்போ,—மண்ணவரை அமுது ஊட்டி - நிலவுலகத்திலுள்ளாரை உணவு உண்ணச்செய்து, வான் உலகம்உம் காப்பது-மேலுலகத்திலுள்ளாரையும் (உண்ணச்செய்து) பாதுகாப்பதாகும்; (எ - று.)

சிவபெருமானது கண்டத்தின் கறையானது ஒருகாலத்தில் தேவர்களைமாத்திரம் அமுதூட்டிப் பாதுகாத்தது; வேளாளரது உழவெருதுகளின் கண்டத்திலுள்ள கறையோ எப்போதும் மண்ணுலகத்தாரையும் விண்ணுலகத்தாரையும் அமுதூட்டிப் பாதுகாக்கின்றதென்பதாம்; இங்கு, உபமானமாகிய சிவபெருமானது கண்டத்தின் கறையைக் காட்டிலும் உபமேயமாகிய உழவெருதுகளின் கண்டத்திலுள்ள கறைக்கு மேன்மைதோன்றக் கூறியது, **வேற்றுமையணி;** இவ்வணிக்கு 'கறை', 'அமுதூட்டி' என்பவற்றின் சிலேடைப்பொருள் அங்கமாகிநின்றது. கறை - கறுப்புநிறமும், தழும்பும். விண்ணவரை அமுதூட்டுதல் - தேவர்களைச் சாவாமருந்தாகிய அமிருதத்தை உண்ணச் செய்தல். மண்ணவரை அமுதூட்டுதல் - நிலவுலகத்தவரை உணவையுண்ணச்செய்தல். எருதின்சுவற்கறை மண்ணவரையமுதூட்டி வானுலகமும் காப்பதாவது - உழவெருதுகள் தமதுகழுத்தில் தழும்புண்டாகுமாறு நுகத்தடியைப்பூண்டு உழுதலாலுண்டாக்கிய விளையுள் மூலமாக நிலவுலகத்தாரை உணவுண்ணச்செய்து, நிலவுலகத்தார் செய்யும் யாகங்களிற்கொடுக்கப்படும் அவிர்ப்பாகமூலமாகத் தேவர்களையும் திருப்திசெய்து பாதுகாத்தல்.

கண்ணுதலோன்தனது திருக்கண்டத்திற் கறைபடிந்த வரலாறு:—பாற்கடல்கடைகையில் அதனினின்று எழுந்த அதிபயங்கரமான ஆலாகலமென்ற பெருவிஷத்தைக் கண்டவளவிலே அதன்கொடுமையைப் பொறுக்கமாட்டாமல் அஞ்சியோடிச்சரணமடைந்த தேவர்களின் வேண்டுகோளால் அவ்விஷத்தைச் சிவபிரான் தனதுதிவ்வியசக்தியினுல் அமுதுசெய்து கண்டத்தில் நிறுத்தி எல்லாரையும் பாதுகாத்தருளின னென்பதாம். இவ்வாறு சிவபெருமான் செய்தது தேவர்கள் ஒருவகைஇடையூறுமின்றி அப்பாற்கடலினின்று தோன்றிய சாவாமருந்தாகிய அமிருதத்தை இனிது உண்ணக்காரணமாகி நின்றதனுல் 'விண்ணவரையமுதூட்டி' என்றும், தேவர்கள் அமிருதத்தை யுண்பதற்காகவே தான் விஷத்தை யுண்டதனுல், 'அமுதூட்டி **விளங்குகின்ற'** என்றும்கூறினுர்.

திருக்கண்டம் - ஸ்ரீகண்டம். அமுது - அம்ருத மென்ற வடசொல்லின் சிதைவு; (தன்னையுண்டார்க்கு) மரணத்தைத் தவிர்ப்பது என்று பொருள். ஊட்டி - 'உண்' என்பதன் பிறவினையான ஊட்டு - பகுதி. 'மண்ணவரை' என்று உயர்திணையாற் கூறினுராயினும், உபலட்சணத்தால் அஃறிணையுயிர்களையுங் கொள்க. வானுலகம் - அங்குஉள்ளார்க்கு இடவாகுபெயர். உம்மை - இறந்தது தழுவியது. (15)

16.—பகடுபூட்டற் சிறப்பு.

பகடு என்ற விலங்கின் ஆண்மைப்பெயர் - உழவுதொழிற்குரிய எருது எருமைக்கடா என்ற பொருளைக் காட்டும். பகட்டை ஏரிலே பூட்டுதலின் மேன்மையைக் கூறுவது இச்செய்யு ளென்க.

ஊட்டுவார் பிறருளரோ வுலகுதனில் உழுபகடு
பூட்டுவார் புகழன்றிப் பிறர்புகழும் புகழாமோ
நாட்டுவார் சயத்துவசம் நயப்பாரை இவர்க்குநிகர்
காட்டுவார் யார்கொலிந்தக் கடல்சூழ்ந்த வையகத்தே.

(இ - ள்.) உலகுதனில் - இவ்வுலகில், ஊட்டுவார் பிறர் உளரோ - (உணவுப்பொருளையுண்டாக்கி) உண்ணுமாறு செய்விப்பவர் (வேளாளரையன்றி) வேறேயொருவரும் இருக்கின்றனரோ? (இங்ஙனம் உலகுக்கெல்லாம் உணவை யுண்டாக்குகின்ற), உழுபகடு - உழவுதொழில்செய்யும் பகட்டை, பூட்டுவார் - (ஏரிற்) பூட்டுகின்ற வேளாளருடைய, புகழ் அன்றி - புகழேயல்லாமல், (உலகுதனில்) - இவ்வுலகில், பிறர் புகழும் - மற்றையோரின் புகழும், புகழ் ஆமோ - புகழாகக்கருதப்படுமோ? இந்த கடல் சூழ்ந்த வையகத்தே - கடலாற் சூழப்பட்ட இந்நிலவுலகத்தில், சயத்துவசம் நாட்டுவார் நயப்பாரை - தமது வெற்றிக்கொடியை நிலைநாட்டுபவராகி விருப்பங்கொள்பவரை [சயத்துவசம் நாட்ட விரும்புகின்ற அரசரை யென்றபடி], இவர்க்கு - இந்தவேளாளர்க்கு, நிகர் - ஒப்பாக, காட்டுவார் - எடுத்துக்காட்டுதற்கு உரியவர், யார்கொல் - எவர்தாம்? (எ - று.)

அரசர் வெற்றிகொள்வது வேளாளரின் உழவுநடந்து பயிர் விளைந்து உணவு நிரம்ப இருந்தால்தான் கைகூடு மாகையால், மிகவும் மேம்பட்டு நிற்கிற அவ்வேளாளர்க்கு நிகராக வேந்தரை யும் எடுத்துக்காட்டுதற்கு அறிவுடையோர் துணியார்: உலகில் மிக்குத்தோன்றுகின்ற அரசரே ஒப்பாகாதபோது மற்றையோர் அவ்வேளாளர்க்கு நிகராகாரென்பதுதானே விளங்கும்: ஆதலால் இவ்வேளாளரின் புகழ்க்குமுன்னே மற்றைச்சாதியோருடைய புகழ் புகழென்று கருதப்படமாட்டா என்கிறார். 'உலகுதனில்' என்பது - இடைநிலைத்தீவகமாய் 'ஊட்டுவார் பிறருளரோ' என்ற தனோடும், பின்னின்ற 'உழுபகடு பூட்டுவார் புகழன்றிப் பிறர் புகழும் புகழாமோ' என்பதனோடும் இயையும். ஊட்டுவார் பிறர் உளரோ என்பதற்கு - (தாயை யன்றி மக்கட்கு) உணவையூட்டு வார் பிறருளரோ என்றுகூறி, அந்த வாக்கியத்திற்கு உலகை யூட்டுவார் வேளாளரையன்றிப் பிறரில்லையென்று உவமேயத்தை யும் வருவித்துக் கூறுவாருமுளர்: அவ்வுரை சிறவாது. நாட்டு வார் சயத்துவசம் நயப்பாரை எனப்பிரித்து - (படையெடுத்துச் சென்று) வென்ற நாட்டிலே நீண்ட சயத்துவசத்தை ஸ்தாபிக்க விரும்புந்தன்மையுள்ள அரசரை எனினுமாம்.

பகடுபூட்டுதற்சிறப்பை யுணர்த்தவந்த ஆசிரியர் வேளாளரின் புகழை இந்தச்செய்யுளிற் பாராட்டிக்கூறியது **மற்றொன்றுவிரித்த** லென்னுங் குற்றமாகாதோ எனின்?—பகடுபூட்டாதபோது அவ் வேளாளர்க்குச் சிறப்பில்லை யாதலால் பகடுபூட்டுதலைச் செய் பவரது புகழைக் கூறிய முகத்தால் இஃது செயப்படுபொருளாகிய பகடுபூட்டலின்சிறப்பையே யுணர்த்தியதா மென்று சமாதானங் காண்க. (16)

17.—ஏர்பூட்டற் சிறப்பு,

ஏரைக்கட்டுதலின் மேன்மையைக் கூறுவது, இது. கீழ் 'பகடு பூட்டற்சிறப்பு' என்று கூறியது - அலப்படையைச் சார்ந்த நுகத்தை ஏர்மாட்டின் கழுத்திற் பூட்டுதலின் சிறப்பேயாதலால், பகடுபூட்டற்சிறப்புக் கூறியபின், ஏர்பூட்டற்சிறப்புத் தனியே கூறவேண்டுமோ? எனின்,—பகட்டின் தொழில் வயலிலே நடந்து செல்வதும், ஏரின்தொழில் நிலத்தைப் பண்படுத்தலும் ஆகிய தொழில்வேறுபாடு இருத்தலால் அவை விளங்கும் பொருட்டு பகட்டைப் பூட்டுதல் ஏரைப்பூட்டுதல் எனத் தனித் தனியே பிரித்துக்கூறினா ரென்க: இனி, பகடு பூட்டலென்பது - எருதை நுகத்தடியிற் பூட்டுதலென்றும், ஏர்பூட்டல் என்பது - எருதுபூண்ட நுகத்தடியை ஏருடன்பிணைத்தல் என்றும் சொல்லவு மாம்.

பார்பூட்டுந் திசையனைத்தும் பகடுகளும் பரம்பூணு
போர்பூட்டுங் காமனுந்தன் பொருசிலைமேற் சரம்பூட்டான்
கார்பூட்டுங் கொடைத்தடக்கைக் காவேரி வளநாடர்
ஏர்பூட்டி னல்லதுமற் றிரவியுந்தேர் பூட்டானே.

(இ - ள்.) கார் பூட்டும் கொடை தட கை - மேகத்தையொத்த [தாரதமியம் பாராது எங்கும் பொழிகின்ற] கொடுக்குந்தொழிலை மேற்கொண்ட பெரிய கைகளைக்கொண்ட, காவேரி வளம் நாடர்-காவிரியாறு பாயப்பெற்ற வளப்பமுள்ள சோழநாட்டிலே வாழ்பவரான வேளாளர்கள், ஏர் - (தமது) ஏரை, பூட்டின் அல்லது - பூட்டினாலல்லாமல்,— பார் திசை அனைத்தும் பூட்டும் பகடுகளும்-பூமியின் எட்டுத்திக்குக்களிலும் (பாரத்தைச் சுமக்குமாறு கடவுளாற்) பூட்டப்பட்டுள்ள திசையானைகளும், பரம்பூணு - பாரத்தைச் சுமக்கமாட்டாவாம்; போர் பூட்டும் காமனும் - (தேவர் முதலிய யாவரையும் தன்வசப்படுத்துமாறு) போரைத் தொடங்குகின்ற மன்மதனும், தன் பொரு சிலைமேல் - தனது பொருகின்ற வில்லில், சரம்பூட்டான் - அம்பைத் தொடுக்கமாட்டான்; இரவியும் - (நாடோறும் இவ்வுலகைச்சுற்றி வருகின்ற) சூரியனும், தேர் பூட்டான் - (தன்) தேரைப்பூட்டி உதிக்கமாட்டான்; (எ - று.) — மற்று - அசை: வினைமாற்றெனக் கூறுவாருமுளர்.

காவிரிவளநாடர் ஏர் பூட்டாவிடின் உணவு இல்லாமையால் உலகம் ஒருசேர அழியும்; உலகம் ஒருங்கே அழிவதனால் சுமக்கப்படவேண்டிய பொருள் இல்லாமைபற்றித் திசைப்பகடுகள் பரம் பூணாவாகு மென்க. உலகோரின் பொருட்டே நாளைச் செய்ய வேண்டியிருத்தலால் உலகோரில்லாவிடின் தன்னுதயத்தாற் பயனில்லையென்று அச்சூரியனும் உதியாதொழிவனென்றும், "தேனின்கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பசிவந்திடப் பறந்துபோம்" என்றவாறு உலகிற் பசி மிகும்போது சிற்றின்பத்திலே மனஞ்செல்லாதாதலால் 'காமன் பொருசிலைமேற் சரம் பூட்டான்' என்றும் கூறினார். 'காமன் பொருசிலைமேற் சரம்பூட்டான்' என மூன்றாவது புருஷார்த்தம் இவ்வுலகில் நில்லாதென்று கூறியதன்உபலட்சணத்தால்,மற்றைப்புருஷார்த்தங்களும் உலகில் நில்லா வென்பதும், கைமுதிகநியாயத்தால் இம்மைப் புருஷார்த்தங்களே இல்லாதபோது மறுமைப்புருஷார்த்தமாகிய வீட்டுலகு பெறுதலில்லையாமென்பதும் பெறப்படுமென அறிக. ஆகவே, நால்வகைப் புருஷார்த்தமும் வேளாளரின் ஏர் பூட்டுதலினாலேயே நடைபெறு மென்றவாறாயிற்று.

கார்பூட்டு மென்பதில், பூட்டும் - உவமவாசகம். திசைப்பகடுகள் - ஐராவதம் புண்டரீகம் வாமனம் குமுதம் அஞ்சனம் புட்பதந்தம் சார்வபௌமம் சுப்பிரதீபம் என்பன: இவை முறையே கிழக்கு முதலிய எண்திக்கிலிருந்து பூமியைத்தாங்குமென்பது, நூற்கொள்கை: காமன் - விருப்பத்தையுண்டாக்குங் கடவுள். பொருசிலை - வினைத்தொகை: மேல்-ஏழனுருபு. இரவி-ரவி என்ற சொல் இகரத்தை முன்னே பெற்றுவந்தது. பூட்டு என்பது - பூண் என்ற தன்வினைச் சொல்லின் பிறவினை. (17)

18.—ஏர்நடத்தற் சிறப்பு.

ஏர்நடத்தல் - (வேளாளர்) ஏரைக்கொண்டு உழவுத்தொழிலைச்செய்தல்.

கார்நடக்கும் படிநடக்குங் காராளர் தம்முடைய
ஏர்நடக்கு மெனிற்புகழ்சால் இயலிசைநா டகம்நடக்கும்
சீர்நடக்குந் திறநடக்குந் திருவறத்தின் செயனடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே.

(இ - ள்.) கார் நடக்கும்படி நடக்கும்-மழை தவறுமற்பெய்யும் படி (நல்லொழுக்கத்தோடு) நடக்கின்ற, காராளர்தம்முடைய - வேளாளருடைய, ஏர்-ஏரானது, நடக்கும் எனின்-நடக்குமானால், —(இவ்வுலகத்திலே),—புகழ் சால் இயல்இசை நாடகம் நடக்கும்-கீர்த்திநிரம்பிய இயற்றமிழும் இசைத்தமிழும் நாடகத்தமிழுமாகிய முத்தமிழும் சோர்வுறாது வழங்கும்; சீர் நடக்கும் - சிறப்புக்கள் நடைபெறும்; திறம் நடக்கும் - (பகைவரையடக்கும்) வலிமையும் குறைவுறாது மேன்மேல்நிகழும்; திரு அறத்தின் செயல் நடக்கும் - (யாவராலும்) விரும்பப்படுந் தருமத்தின்தொழிலும் குறைவடையாமல் வளரும்; பார் நடக்கும் - இவ்வுலகத்திலுள்ள ஜீவபிராணிகளும் விருத்தியாகும்: படை நடக்கும் - (அரசர்களது) சேனையும் ஊக்கங்கெடாதுநிற்கும்; (இங்ஙனம் இவையாவும்நடக்க), பசி நடக்கமாட்டாது - பசிமாத்திரம் உண்டாகாது; (எ - று.)

ஏர்த்தொழில் இடையறாது நடத்தலினால் உலகத்திற் பல நன்மைகளும் உண்டாக, தீயதாகிய பசியொன்றும் இல்லையாகு மென்பதாம். தங்களது உழவுத்தொழிலினால் மழைக்குக்காரணமான வேள்விக்கு உரிய பொருளை உண்டாக்கி உபகரிப்பதனால், வேளாளர் 'கார்நடக்கும்படி நடக்குங் காராளர்' எனப்பட்டனர்: இனி,'நல்லார்பொருட்டுமழைபெய்யும்' என்பது நூற்கொள்கையாதலால், யாவர்க்கும் உதவுகின்ற நன்மையை வேளாளர் புரிபவரென்பதுபற்றி 'கார் நடக்கும்படி நடக்குங் காராளர்' என்றாரெனினுமாம். இயலிசை நாடகம் நடக்கும் - உழவுதொழிலானது ஞானத்திற்குக்காரணமாய் நிற்கு மென்றபடி. முத்தமிழைக்கூறினது - மற்றைப்பாஷைகட்கும் உபலக்ஷணம். சீர்-உலகத்துச்சிறப்புக்கள்: அவையாவன - தேவர்கட்குச்செய்யும் நித்தியநைமித்திக உத்ஸவங்களும், மனிதர்கட்கு நடக்கும் விவாகம் முதலியனவும். சீர் - செல்வமுமாம். திறம் - தேகபலம் மனோபலம் முதலியன. அறம்-மநு முதலிய நூல்களில் விதித்தனசெய்தலும், விலக்கியன ஒழிதலும்: அறம் - செய்யத்தக்கதுஇன்னதெனநூல்களால்வரையறுக்கப்பட்டதெனக் காரணப்பெயர். இங்கு, பசியினிடத்து நடக்குந் தொழிலை ஒழித்து,இயல் இசை நாடகம் முதலியவற்றிற் காட்டியது - **ஒழித்துக்காட்டணி**யின்பாற்படும். 'நடக்கும்' என்ற சொல் பலமுறை ஒரேபொருளில் வந்தது - **சொற்பொருட்பின்வருநிலை.** ஈற்றடியில் **தொடைமுரண்** காண்க. காராளர் தம்முடைய, தம் - சாரியை. பார் - உயிர்கட்கு இடவாகுபெயர். (18)

19.—உழுநர் சிறப்பு.

உழவுத்தொழில்செய்வாருடைய மேன்மை யென்று இத்தொடர்க்குப் பொருள்: வேளாளரின்சிறப்பு பாயிரத்தில்தானே

கூறப்பட்டதால், இங்கு உழுநர் என்றது வேளாளரின்கீழே தொழில்புரியும் பண்ணையாட்களை யென்னலா மென்பர்: ஏரெழுபதென்ற இந்நூல் வேளாளரின்பெருமையைக் கூறவந்த நூல் என்பதைத் தெரிவித்தற்கு அங்கு வேளாளரின்சிறப்புக் கூறப்பட்டதாக, இதில் உழவுத்தொழிலுக்கு உறுப்பான எல்லாப் பொருள்களையுங் கூறவேண்டுமாதலால் அம்முறையில் இங்கு உழுநர்சிறப்புக் கூறப்பட்டதென்று கொள்ளுதல் ஏற்கும்; ஏரைச்சேர்ந்த அலப்படை முதலியஉறுப்புக்களை முன்னர்க்கூறி, பின்னர் உறுப்பியாகிய வேளாளரைக் கூறினரென்க. இனி வேளாளர் உழுநரும் உழுவித்துண்போரும் என இருவகைப்படுவ ராதலால், பாயிரத்தில் பொதுவாகக்கூறிய கவி இங்குச் சிறப்பாக உழுநரின்சிறப்பைக் கூறுகின்றாரென்றலும் ஒன்று.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாருந்
தொழுதுண்டு பின்செல்வா ரென்றேயித் தொல்லுலகில்
எழுதுண்ட மறையன்றே இவருடனே இயலுமிது
பழுதுண்டோ கடல்சூழ்ந்த பாரிடத்திற் பிறந்தோர்க்கே.

(இ - ள்.) 'உழுது - உழவுதொழிலைச்செய்து, (அதனாற் பெறப்படுந்தானியத்தை), உண்டு - புசித்து, வாழ்வாரே - வாழ்பவரே, வாழ்வார் - உண்மையான வாழ்ச்சியையுடையவர்: மற்று எல்லாரும் - அவ்வுழுநரினும் வேறுபட்ட யாவரும், தொழுது - (உணவை விளைப்பவரைத்) தொழுது, (அவர் விளைவிக்கின்ற உணவைப்பெற்று), உண்டு—, பின்செல்வார் - (அவருடைய) பின்னே செல்பவராவர்,' என்றே அன்றே - என்றல்லவோ, இ தொல் உலகில் - பழமையான இவ்வுலகத்தில், எழுதுண்ட மறை- எழுதப்பட்ட வேதமாகிய திருக்குறள், (உள்ளது); (இ) கடல் சூழ்ந்த பாரிடத்தில் பிறந்தோர்க்கு - கடலாற்சூழப்பட்ட இப்பூவுலகத்திற் பிறந்தவர்க்கு, இவருடனே - (திருக்குறள் நூலாசிரியரானவள்ளுவரும் இங்ஙனம் புகழ்ந்து கூறும் மேன்மை பெற்ற) இவ்வேளாளருடனே, இயலும் - பொருந்திவாழ்கின்ற, இது - இச்செயலால், பழுது உண்டோ - குறைவுஉண்டாகுமோ? [உண்டாகா தென்றபடி]; (எ - று.)

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந், தொழுதுண்டு பின்செல் பவர்" என்று தமிழ்வேதமாகிய திருக்குறளே வேளாளர், பெருமையைச் சிறப்பித்துச்சொல்லுமாயின், அவருடன் நண்புகொண்டு வாழ்வதே யாவர்க்கும் நன்மையைத் தருமென்றபடி. இனி, வேளாளரிடத்து ஏவல்புரியும் உழுநர்மீதுகூறக் கூடிய குறை யொன்றுமில்லை யெனக் கருத்துக்காண்பாருமுளர்: வேளாளரின்பெருமை சிறப்புப்பாயிரத்திற் கூறியிருத்தலால், இங்கு உழுநரென்றது பண்ணையாட்களைக்குறிக்குமென்னும் அவர் "ஏருமிரண்டுளதாயில்லருகேவித்துளதாய், நீரருகே சேர்ந்தநிலமுளதாய் - ஊருக்குச், சென்றுவரவெளிதாய்ச் **செய்யாளுஞ்** [செய்யாள் = பண்ணையாள்.] சொற்கேட்கி, லென்று முழவேயினிது" எனச்சொன்னசொல்கேட்கும்பண்ணையாள்உழவிற்கு இன்றியமையாமையை ஔவையார்கூறியிருத்தலை இங்கு எடுத்துக்காட்டுவர்.

வடமொழியிலுள்ள வேதம் குருசிஷ்யக்ரமமாய் ஓதப்பட்டு எழுதாக்கிளவி யென்று பேர்பெறுதலால், அதனினும் வேறுபாடு விளங்க, தமிழ்மறையாகிய திருக்குறள் 'எழுதுண்ட மறை' எனப்பட்டது: இது, தமிழிலக்கணத்திற் பிறகுறிப்பின்பாற்படும். (19)

20. —உழவின்சிறப்பு.

அலகிலா மறைவிளங்கும் அந்தணரா குதிவிளங்கும்
பலகலையாந் தொகைவிளங்கும் பாவலர்தம் பாவிளங்கும்
மலர்குலாந் திருவிளங்கும் மழைவிளங்கும் மனுவிளங்கும்
உலகெலாம் ஒளிவிளங்கும் உழவருழும் உழவாலே.

(இ - ள்.) உழவர் உழும் உழவால் - உழுநராகிய வேளாளர் செய்கின்ற உழவுத்தொழிலினால்,—(உலகத்தில்), அலகு இலா மறை விளங்கும் - அளவில்லாத வேதங்கள் (பொருளுணரும்படி) விளக்கமடையும்; அந்தணர் ஆகுதி விளங்கும் - பிராமணராற் செய்யப்படும் ஆகுதிகளையுடைய யாகங்களும் மேன்மையாக நடக்கும்; பல ஆம் கலை தொகை விளங்கும் - பலவாகிய கலைஞானங்களின் தொகுதிகளும் விளக்கமுறும்; பாவலர் தம் பா விளங்கும் - புலவர்களது செய்யுள்களும் சிறப்படையும்; மலர் குலாம் திரு விளங்கும் - செந்தாமரைமலரில் வாழ்கின்ற இலக்குமியும் விளக்கமடைவாள்; மழை விளங்கும் - மழையும் காலந்தவறாமற் பொழியும்; மனு விளங்கும் - நீதிகளும் தவறாதுநடக்கும்; உலகு எலாம் ஒளி விளங்கும் - உலகம் முழுவதும் ஒளிபெற்று விளங்கும்; (எ - று.)

"மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை, தானந் தவமுயர்ச்சி தாளாண்மை - தேனின், கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பசி வந்திடப் பறந்துபோம்" என்றபடி பசியுண்டாகுமாயின் பலவும் அழியும்; வேளாளர்கள் உழவுத்தொழிலைச்செய்து தானியங்களை விளைத்தலால், உணவு யாவர்க்குங் கிடைக்கப் பசியென்பதே இல்லாமற் போய்விடுகின்றது; போகவே, எல்லாம் விளங்கு மென்க. உழவுத்தொழிலினாற் செல்வம் வளர்தலால் 'மலர்குலாந்திரு விளங்கும்' எனவும், உழவுத்தொழில் மழைக்குக்காரணமான வேள்விக்குக் காரணமாயிருத்தலால் 'மழைவிளங்கும்' எனவும், நீதிநடப்பது பசியில்லாத பொழுதே யாதலால் 'மனுவிளங்கும்' எனவும், எல்லாவுயிரும் உணவிற்குக் குறைவின்றியிருப்பின் மகிழ்ந்திருக்கு மாதலால் 'உலகெலாமொளிவிளங்கும்' எனவும் கூறினார். ஈற்றடி - **முற்று மோனை.** 'உழவ ருழு முழவாலே' என்ற ஈற்றிலுள்ள தொடர் - முற்றுக்கள்தோறும் சென்று இயைதலால், **கடைநிலைத்தீவகம்.**

வேதத்திலேயே "அநந்தா வை வேதா: [வேதங்கள் எல்லையற்றன]" எனக் கூறியிருத்தலால், 'அலகிலாமறை' எனப்பட்டது. ஆகுதி = ஆஹுதி: அந்தணர்அக்கினியிற்சொரியும் அவிசு; இங்கு, ஆகுபெயரால், வேள்வியையுணர்த்திற்று. பல கலைத்தொகை - அக்கரவிலக்கணம், லிகிதம், கணிதம், புராணம், வியாகரணம், நீதிசாஸ்திரம், சோதிடம், யோகம், மந்திரம், சிற்

பம், சகுனம், வைத்தியம் முதலாகவுள்ள அறுபத்துநான்கு கலைகள். பாவலர் - செய்யுள்செய்யவல்லவர். அடைமொழியின்றி வாளா கூறியதனால், 'மலர்' என்பது - "பூவிற்குத் தாமரையே" என்றபடி மலர்களுட்சிறந்த தாமரையைக் குறித்துநிற்கும். குலாம்=குலாவும்: செய்யுமெனெச்சத்தின் ஈற்றுஉயிர்மெய் கெட்டுநின்றது; [நன் - வினை-22.] திரு-செல்வமகள்: இலக்குமி. மநு - மனுவென்பவராற் கூறப்பட்ட நீதி; கர்த்தாவாகு பெயர். (20)

21.—படைச்சாலின்சிறப்பு.

கலப்பைகொண்டு உழுத சுவட்டைக்கொண்ட இடமென்பது படைச்சாலென்பதன் பொருள்.

பழுதுசால் வகையறியாப் பழமறையோர் பெருவேள்விக்
குழுதுசால் வதுகலப்பை யுயர்வான தென்றக்கால்
எழுதுசால் பெருங்கீர்த்தி யேராளும் பெருக்காளர்
உழுதசால் வழியன்றி யுலகுவழி யறியாதே.

(இ - ள்.) 'பழுது சால் வகை அறியா - குற்றம்பொருந்திய தன்மையென்பதை யறியாத,பழ மறையோர் - பழமையான வேதம் வல்ல அந்தணர், பெரு வேள்விக்கு - பெருமைபெற்ற யாகத்தைச் செய்வதற்கு, உழுது சால்வது - (தான்) உழுதுஅமைவதாகிய, கலப்பை - கலப்பையானது, உயர்வு ஆனது - உயர்வுபொருந்திய தாகும்,' என்றக்கால் - என்று (நூல்கள்) கூறுமானால், எழுது - (நூல்களாக) எழுதப்படுகின்ற, சால் பெரு கீர்த்தி - மிக்க பெருமைபெற்ற புகழையுடைய, ஏர் ஆளும் பெருக்காளர்-(உயர்வு பெற்ற) அக்கலப்பையைக் கொண்டுள்ள வளம்பெற்ற வேளாளர், உழுத - உழுவதனாலேற்பட்ட, சால் வழி அன்றி - படைச்சாலின் வழியால் இல்லாமல், உலகு - இவ்வுலகத்தவர், வழி - உய்யும் வழியை, அறியாது - அறியமாட்டார்கள்; (எ - று.)

மழைபெய்கை முதலிய உலகின் நன்மைக்குக் காரணமான வேள்விக்கும் கலப்பை இன்றியமையாததாதலின், வேளாளரின் அந்தக் கலப்பையினுழுபடைச்சாலே உலகுய்வதற்குக் காரண மென்றவாறு. கலப்பைகொண்டு உழுத இடத்திலேயே யாகசாலை யமைக்கவேண்டுமென்று கற்பநூல்கள் கூறுவதனால், கலப்பை யாகத்திற்கு இன்றியமையாத தாகும். இவ்வண்ணம் யாகத்திற்கு உதவுவதனால், கலப்பை மேன்மைபெறுமென்க. மறையோர் என்று பொதுப்படக் கூறியதனால், வேதமோதுதற்கு உரிய பிராமண க்ஷத்திரிய வைசியரென்ற மூன்று வருணத்தாரையும் இச்சொல் குறிக்குமென்னலாம். க்ஷத்திரியனான ஜநகராஜன் யாக சாலை யமைக்கக் கலப்பைகொண்டு உழுதா னென்பதை "இரும்பனைய கருநெடுங் கோட்டிணையேற்றின் பணையேற்ற, பெரும்பிய லிற் பளிக்குநுகம் பிணைத்ததனோ டணைத்தீர்க்கும், வரம்பின் மணிப்பொற் கலப்பை வயிரத்தின்கொழு மடுத்திட், டுரம் பொரு வினிலம் வேள்விக்குலகில் பலசாலுழுதேம்" என்பதனாலும் அறியலாம், சால்வது - படைச்சாலையுண்டாக்குவ தென்றலு மொன்று.

'பழுதுசால் வகையறியா' என்றதொடர், மறையோர்க்கு விசேடணமாம்: மறைக்குவிசேடணமாகக் கொள்ளின், ஒருத்த ராற் செய்யப்பட்டன வாகாமல் நித்தியமாயிருத்தலால் திரிபு பொருள் விபரீதப்பொருள் என்னும் பழுதுகள் பொருந்தாத வேத மென்க. கலப்பைக்கு உயர்வு, உழுது சால்வதாலாகும். வேளாளரது மிக்க பெருங் கீர்த்தியை, நாவலர், கீர்த்திமாலையாக எழுதுவ ரென்க. சால் பெரு - ஒருபொருட்பன்மொழி. இங்கு ஏர் - கலப்பை: கலப்பை பூட்டப்பட்ட பகடுமாம். (21)

22.—மண்வெட்டிச்சிறப்பு.

மட்டிருக்குந் திருமாது மகிழ்ந்திருக்கும் பூமாது
முட்டிருக்குஞ் செயமாது முன்னிருப்பார் முதுநிலத்து
விட்டிருக்குங் கலிதொலைத்து வேளாளர் தடக்கையினிற்
கொட்டிருக்க வொருநாளுங் குறையிருக்க மாட்டாதே.

(இ - ள்.) முது நிலத்து - பழைய நிலவுலகத்து, வேளாளர் தட கையினில் - வேளாளர்களின் பெரிய கையினிடத்ததாகிய, கொட்டு - மண்வெட்டிக்கருவி, விட்டிருக்கும் - தங்கியிருக்கும், கலி தொலைத்து - தரித்திரத்தை அறப் போக்கி, இருக்க - (அவர் கள் கைகளைவிட்டு நீங்காவாய்) இருக்க, (அதனால்) ஒரு நாள்உம் குறை இருக்க மாட்டாது - ஒருபோதும் 'வறுமை யென்பது இருக்கமுடியாது; [அதற்கு மாறாக] மட்டு இருக்கும் திருமாது - தேன்பொருந்திய செந்தாமரைமலரில் எழுந்தருளியிருக்கும் இலக் குமிதேவியும், பூ மகிழ்ந்திருக்கும் மாது - வெண்டாமரைப்பூவில் மகிழ்ச்சியுடன் எழுந்தருளியிருக்கும் சரசுவதி தேவியும், முட்டு இருக்கும் செயமாது - ஆயுதம் ஏந்தியிருக்கும் விசயவிலக்குமி தேவியும், முன் இருப்பார் - முன்வந்து நிற்பார்கள்; (எ - று.)

கொட்டுக்கொண்டு நிலத்தைத்திருத்தவே, முதுநிலத்து இறைகொண்ட மூதேவி தொலைய, திருமகள், கலைமகள், செய மகள் மூவரும் முன்நிற்பர் என்பதாம்: இதனால், செல்வம் பெருக, கலைகள்வளர, கொற்றம் உழவிடை விளைதல் பெற வைக்கப் பட்டது. மட்டு - தேன். அதனைக் கொண்ட பூவிற்கு ஆகுபெயர். முட்டு - கருவி, ஆயுதம். "கொற்றரு மிருப்பு முட்டு" என்றது திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், 45: 8. கலி - மிடி, தரித்திரம்: 'கலிகையா னீக்கல் கடன்' என்றது புறப் பொருள்வெண்பாமாலை. (22)

23.—வரம்பு கோலுதற்சிறப்பு.

கழனிக்கு நாற்புறமும் வரப்புஓரத்தை வெட்டித் திருத்தமுற அமைக்குஞ் சிறப்பு என்க. வரம்புகோலுதல், அண்டைவெட்டுத லென இக்காலத்து வழங்குகின்றதென்பர்.

மெய்வரம்பா நிற்கின்ற வேதநூல் நெறிவரம்பாம்
இவ்வரம்பும் அவ்வரம்பும் இப்புவிக்கு வரம்பாமோ
பொய்வரம்பு தவிர்த்தருளும் புவிமடந்தை திருமைந்தர்
செய்வரம்பு திருத்தாரேல் திசைவரம்பு திருந்தாதே.

(இ - ள்.) இ புவிக்கு - இந்நிலவுலகிலுள்ள உயிர்கட்கு,— மெய் வரம்பு ஆ நிற்கின்ற இ வரம்பும் - உடம்பை எல்லையாகக் கொண்ட இவ்வுலகிய லொழுக்கவரம்பும், வேதம் நூல் நெறி வரம்பு ஆம் அ வரம்பும்-வேதநூலிற் கூறியுள்ள நன்னெறியாகிய (மறுமைக்குஉரிய) வைதிக வொழுக்கமென்னும் அந்த வரம்பும், வரம்பு ஆமோ - (நல்வாழ்வு பெறுதற்குஏற்ற) வரம்பு ஆகுமோ? [ஆகா என்றபடி]; (பின்னை எது நல்வரம்பாகுமெனின்), பொய் வரம்பு தவிர்த்தருளும் - பொய்யிருக்குமெல்லையையு மணுகாது நீக்கி வாழ்கின்ற, புவி மடந்தை திரு மைந்தர்-பூமியில்தோன்றிய செல்வக் குமாரராகிய உழவர், செய் வரம்பு திருத்தார் ஏல்-கழனி யின் வரம்பைச் செம்மையுறச் செய்யாராயின், திசை வரம்பு - எட்டுத்திசையினிடத்திலுள்ள உயிர்களும், திருந்தாது - செம்மை யுற்றிராது; (எ - று.)

செய்வரம்பு திருத்தமுற அமைந்தால், உரியகாலத்துப் பாய்ச் சப்படும் நீர் தங்கிப் பயிரைச் செவ்வனே விளைக்குமாதலாலும், அங்ஙனம் திருந்தச் செய்யாவிடின், விளைவு குன்று மாதலாலும், திசைவரம்பு திருந்துவதற்கு உலகியல்வழக்கு வேதவியல்வழக்குக் களைவிட, வயல்வரம்பு திருந்துதல் இன்றியமையாத தென்ற வாறு. உலகியல்வழக்கும் வேதநெறிவழக்கும் உணவிருந்தால் மாத்திரம் முறைப்படி நடக்கு மாதலால், இவ்வாறு கூறப்பட்ட தென்க. உடம்புள்ளவரையும் உலகவழக்கு மேற்கொண்டு ஒழுகு தற்கு உரிய தாதலால், 'மெய்வரம்பா நிற்கின்ற விவ்வரம்பும்' என்றார். 'மெய்வரம்பாநிற்கின்ற' 'வேதநூல் நெறிவரம்பாம்' என்பன-முறையே, 'இவ்வரம்பும்' 'அவ்வரம்பும்' என்பவற்றோடு சென்று இயைவது-**முறைநிரனிறைப்பொருள்கோளாம்**. வேளாளர் பொய்பேசாதவரென்பது, 'பொய்வரம்புதவிர்த்தருளும் புவி மடந்தை திருமைந்தர்' என்பதன் கருத்து. இனி, மெய்வரம்பாநிற் கின்ற வேதநூல் நெறி என எடுத்து - உடம்புள்ளவரையும் மேற் கொண்டு நடக்கவேண்டிய வேதநூலின் நெறியால், வரம்பு ஆம்-வரையறுக்கப்பட்டுள்ளனவான, இவ்வரம்பும் அவ்வரம்பும்- இவ்வாறுநடக்கவேணும் அவ்வாறு நடக்கவேணுமென்கிற வரம் புகளும் என உரைத்தலும் ஒன்று. வேதநூல் நெறிவரம்பாம் இவ்வரம்பும் - வேதத்தின் வழிப்பட்ட அகச்சமய மார்க்கமும், அவ்வரம்பும்-புறச்சமய மார்க்கமும் என்று உரைப்பாரும் உண்டு. பொய்வரம்பு தவிர்த்தருளும் - பொய்யைத் தாம் இருக்கும் எல்லை யினின்று நீக்கிய எனினுமாம். திசைவரம்பு - ஆகுபெயரால் உயிர் களை யுணர்த்திற்று. (23)

24.—எருக்கூடைச் சிறப்பு.

அடுத்திறக்கிப் பெருங்கூடை யளவுபட வேயெருவை
எடுத்திறக்கித் தலைமேலே கொண்டவர்தா மிடையிடையே
கொடுத்திறக்கி நிலமகளைக் கும்பிட்டு வணங்காரேற்
படுத்திறக்கித் திரிவார்தம் பழிமறுக்க மாட்டாரே.

(இ - ள்.) எருவை - உரத்தை, அடுத்து - நெருங்கி, இறக்கி - (கூடையைத்) தாழ்த்தி, பெருங்கூடை அளவு பட ஏ - பெரிய கூடையினளவு உண்டாகும்படி நிறைய, இறக்கி - சரியத்தள்ளி, எடுத்து - தூக்கி, தலைமேலே கொண்டவர் தாம் - தலையின்மேலே வைத்துக்கொண்டவராகிய வேளாளர்கள், இடை இடையே - (தாங்கள் செல்லும் வழியில்) ஆங்காங்கே (நிலத்தில் வீற்றுவீற்றாகக் கொட்ட), இறக்கி கொடுத்து - (தமது தலையினின்று கூடையைக்கீழே) இறக்கிவைத்து, நிலமகளை கும்பிட்டு வணங்காரேல் - பூமிதேவியைக் கும்பிட்டு வணங்காமலிருப்பாராஞல்,—படுத்து - [மண்வெட்டி கலப்பை இவைகொண்டு] துன்பப்படுத்தி, இறக்கி- (அவற்றை) ஆழ இறக்கி, திரிவார் - மேல்மண் கீழ்மண்ணாகு மாறு திரிய [மயங்க] வைத்த இவ்வேளாளர், தம் பழி - (அங்ஙன் செய்தலால் நிலமகளுக்கு நேரவைத்த) தம் பாவச்செயலை, மறுக்க மாட்டார் - நீக்கமுடியாதவராவர்; (எ - று.)

இதனல், நிலமகளைக் கும்பிட்டு வணங்கினுல்தான் தமக்கு நேர்பட்ட பழியை மறுக்கமுடியும் என்றபடி. மறுத்தல் - நீக்குதலாதலை "கொல்லான் புலாலைமறுத்தானை" என்றவிடத்துங் காண்க. பழியாவது - நிலத்தை அகழ்தலாலும் ஆழ உழுதலாலும் ஏற்பட்டது. எருக்கூடையைத் தூக்கிவந்து இடையிடையே நிலத்திலிடும்போது தலைதாழ்த்தி இறக்க வேண்டியிருத்தலின், நிலமகளைக் கும்பிட்டு வணங்குதல்போல் உளதெனத் தற்குறிப்பேற்றம்படக்கூறினர். பெருங்கூடையில் எருவிட்டுத் தூக்கிச் செல்வோர் இடைவழியே இறக்கி வைப்பதும் இயற்கை. இச் செய்யுளினல், எருக்கூடைக்குச் சிறப்பு என்னென்னில், நிலமகளைத் தாழக் கும்பிட்டு வணங்குதற்கு ஏதுவாதல். (24)

25.—சேறுசெய்தற்சிறப்பு.

பயிர் செய்வதற்குஉரிய குப்பையெரு நிறைந்த செய்யில் நீரைப்பாய்ச்சி, தழை முதலியவற்றை அதிலிட்டு எருவாகுமாறு அழுகவைத்து அந்நிலத்தைச் சேருகுமாறுசெய்தல் சேறுசெய்தலெனப்படுமென்பர்: இது, சேடைவைத்தலெனவும் வழங்கப்படும்.

வெறுப்பதெல்லாம் பொய்யினையே வேளாளர் மெய்யாக
ஒறுப்பதெல்லாங் கலியினையே யுள்ளத்தால் வெள்ளத்தாற்
செறுப்பதெல்லாம் புல்லினையே செய்யின்வளம் அறிந்தறிந்து
மறிப்பதெல்லாஞ் சேற்றினையே வளம்படுதற் பொருட்டாயே.

(இ - ள்.) வேளாளர்—, மெய் ஆக-உண்மையே பரவுமாறு, வெறுப்பது எல்லாம்—, பொய்யினையே - பொய்யையேயாகும்; உள்ளத்தால்-(தம்) மனத்தால், ஒறுப்பது எல்லாம் - தண்டிப்பதெல்லாம், கலியினையே - வறுமையையேயாகும்; வெள்ளத்தால் - நீர்ப்பெருக்கால், செறுப்பது எல்லாம்-அழிக்கப் பார்ப்பதெல்லாம், புல்லினையே-புல்லையேயாகும்; செய்யின் வளம் - கழனியின் வளப்பத்தை, அறிந்து அறிந்து - நன்ருகவுணர்ந்து, மறிப்பது எல்லாம்- தடுத்து வைப்பதெல்லாம், சேற்றினையே - சேற்றையேயாகும்;

(இங்ஙனம் இவர் செய்வது), வளம் படுதல் பொருட்டு ஆய் - (உலகம்) செழிப்பாக இருத்தல் வேண்டியேயாம்; (எ - று.)

வேளாளரின் சேறு செய்தற் சிறப்பைக் கூறுவார், அவர்களின் பொய் சொல்லாமை பிறர்வறுமையைப்போக்குதல் களை பறித்தல் என்ற தன்மையையும் உடன் கூறினர்: ஆகவே, முதல் மூன்றடியிற் கூறியபொருள் ஈற்றடியிற் கூறியதற்கு உவமையாமென்க; **எடுத்துக்காட்டுவமையணி.** ஏகாரங்கள் - பிரிநிலை. இச் செய்யுளில், வேளாளர் வேறு சிலரைப்போலக் காமவெகுளி மயக்கமென்னும் முக்குற்றங்களினாற் பிறர்க்குவருத்த முண்டாகப் பொய்பேசுதல் முதலியன இலராவ ரென **ஒழித்துக்காட்டணி** தோன்றும்: இதனை "வெஞ்சிலையே கோடுவன..." என்றாற்போலக் காண்க. சேற்றைச்செறியவைத்தலால், கழனிநிலம் பண்பட்டு நல்லவளனைத் தருமென்பார் 'வளம்படுத்தற் பொருட்டாயே மறிப்பதெல்லாஞ் சேற்றினையே' என்றார். புல் என்பதற்குத் தழை யென்று கொண்டு, செறுப்பது புல்லினை யென்பது - அழுக வைப்பது தழையையெனக் கூறுவது முண்டு. வெறுப்பதெல்லாம் முதலியன - ஒருமைப்பன்மைமயக்கம். (25)

26.—பரம்படித்தற்சிறப்பு.

சேடைவைத்த செய்யில் நிலம் சமனாகுதற் பொருட்டுப் பரம்புப்பலகையை யிழுத்தலின் சிறப்பைக் கூறுவது.

வரம்படிக்க மலர்பரப்பி வயலடிக்க வரம்புதொறுங்
குரம்படிக்க மணிகொழிக்குங் குலப்பொன்னித் திருநாடர்
பரம்படிக்க வுடைந்தளைந்த பழனச்சேற் றுரமன்றி
உரம்படிப்பப் பிறிதுண்டோ வுண்டாயி னுரையீரே.

(இ - ள்.) வரம்பு அடிக்க-செய்வரம்பில் மோதுமாறு, மலர் பரப்பி - மலரைப் பரவச்செய்து, வயல் அடிக்க - (நீர் வெள்ளம்) வயலில் மோதிக்கொண்டிருக்க, வரம்பு தொறும்-(அந்தச்செய்யின்) வரம்புகள்தோறும், குரம்பு அடிக்க - மற்றொருவரம்பு தோன்றுமாறு, மணி கொழிக்கும் - முத்துக்களைக் கொழிக்குந் தன்மையையுடைய, குலம் பொன்னி - சிறந்த காவிரிநதிபாயப்பெற்ற, திரு நாடர் - அழகிய சோணாட்டையுடையரான வேளாளர், பரம்பு அடிக்க - பரம்புப் பலகையைச் செலுத்துவதனால், **உடைந்து** - (மண் கட்டிகள்) விண்டு, அளைந்த - குழம்பிய, பழனம் சேறு - கழனிகளில் தோன்றிய சேறாகிய, **உரம்** அன்றி - (நிலவுரமே யாவர்க்கும்) **உரமாவதன்றி, உரம் படிப்ப - உரமென்று சொல்வதற்கு,** பிறிது - **வேறொன்று, உண்டோ - உள்ளதோ? உண்டு ஆயின் - இருக்குமாயின், உரையீர்-(நீங்கள்) சொல்லுங்கள்;**

கழனியிற் பரம்படித்ததனாற் குழம்பிய சேற்றுரம் உலகோரெல்லாம் பசியாம லுண்ணுமாறு நிலத்திடும் பயிர் நன்கு விளைதற்குக் காரணமாகி, யாவர்க்கும் உரத்தை விளைக்கும்: ஆகையால், பரம்படித்த சேற்றுரம் உரமேயன்றி உரமாக

வேறொன்றும் சொல்லப்படா வென்றவாறு. 'சேற்றுர மன்றி வேற்றுரம் வேண்டா' என்ற பழமொழி இங்குக் கருதத்தக்கது. முன்னிரண்டடி - சோணுட்டு வேளாளரைக் குறித்தது. 'வரம்படிக்க......கொழிக்கும்' என்ற தொடர், பொன்னிக்கு விசேடணம். சோழநாட்டில் கழனிவரம்பே தனக்கு வரம்பாகக் காவேரி தன்னிடம் மலர்களைக்கொண்டு பாய் கையில், இருகரையிலும் கொழிக்கப்பட்ட முத்துக்கள் செய்வரம் புக்கு அடுத்தாற்போற் குவிந்து மற்றொரு வரம்புபோல் தோன்று மென்பது, முன்னிரண்டடிகளிற் கூறிய விஷயம். பொன்னிக்கு மலர்கள் தான் வரும் வழியிடையே தன்னிருகரைகளிலுமுள்ள மலர்ச்சோலையினின்று சிந்தியவை. வரம்படிக்க மலர் பரப்பி வயலடிக்க வரம்பு தொறும் குரம்படிக்க என்பதற்கு - மலரைப் பரப்பி (த் தத்தமக்கு ஏற்பட்ட) வரம்புவரையிலும் செய்களை யுழுவதனால் வரம்புதோறும் சேற்றாலியன்ற சிறு கரையை (உழு வர்) அமைக்க என்று உரைத்தலுமாம்: இப்பொருளில், முதலில் உழுகையில் நிலமகளை வழிபடுவதை 'மலர்பரப்பி' என்றதனால் விளக்கினரென்க. இனி, முதலிரண்டடிகட்கு-(தன்னிரு) கரை களும் கரைந்திடும்படி நீரைப்பரப்பிக்கொண்டு வயல்களில்(தான்) பாய்கையில் கரைக்கப்பட்ட வரம்புகளிலிருந்த இடத்தில் செய் கரை தோன்றுமாறு மணியைக்கொழித்துக்கொண்டு காவிரி பாயப் பெற்ற சோணுட்டு வேளாள ரெனப் பொருள் கூறுவாருமுளர். இப்பொருளில், மலரென்பது-கமலமென்ற சொல்லைப்போல நீரை யுணர்த்திற் றென்க. (26)

27.—வித்துவிளைத்தற் சிறப்பு.

வித்தை முளைக்கும்படி நிலத்திலிடுஞ் சிறப்பைக் கூறுவது.

பத்திவிளைத் திடுந்தெய்வம் பணிவார்க்குந் தற்பரமா
முத்திவிளைத் திடுஞான முதல்வருக்கு மின்னமுதம்
வைத்துவிளைத் திடுவார்க்கும் வல்லவர்க்கும் பெருக்காளர்
வித்துவிளைத் திடிலன்றி வேண்டுவன விளையாவே.

(இ - ள்.) பெருக்கு ஆளர்-(பொருளைப்) பெருக்க வல்லவரா கிய வேளாளர், வித்து விளைத்து இடில் அன்றி-விதையை முளைக்கு மாறு நிலத்திலிட்டாலல்லாமல்,—பத்தி விளைத்திடும்-பக்தியை (த் தமக்கு) உண்டாக்குகின்ற, தெய்வம் - கடவுளை, பணிவார்க்கும் - வணங்குமவர்க்கும் [பக்தியோக நிஷ்டர்க்கும்], தற்பரம் ஆம் முத்தி விளைத்திடும் - அந்தக்கடவுளின் (சாயுச்சியத்தை) அடைவ தற்கு உரிய முத்தியைத் தரக்கூடிய, ஞானம் - ஞானயோகத்தைக் கைக்கொண்டுள்ள, முதல்வருக்கும் - சிறந்த ஞானியர்க்கும், இன் அமுதம் வைத்து விளைத்திடுவார்க்கும் - இனிய அமுதத்தை யுண் டாக்கி அதனையேமேன்மேற்பெருகச்செய்திருக்கும் யோகியர்க் கும், வல்லவர்க்கும்-(பலவகைக்கருமங்களையும்) செய்யவல்ல கரும யோக நிஷ்டர்க்கும், வேண்டுவன-இன்றியமையாது வேண்டுவன வாகிய அருள் கொடை முதலியன, விளையா - தோன்றுவாம்;

(எ - று.)—'பத்திவிளைத்திடுந் தெய்வம்' என்ற பாடம், இனிது பொருள்பட்டுச் சிறக்கும்.

கடவுளை யடையவேணுமென்று கருதி முயல்கின்ற எவ்வகைப் பட்டவர்க்கும் உணவு இன்றியமையாத தாதலால், 'வித்து விளைத் திடிலன்றி வேண்டுவன விளையா' என்றார். முதலடியிற் கூறப் பட்டவர் - பக்தியினாற் கடவுளைப் பெற விரும்புபவர்: பிரபத்தி யென்னும் உபாயமும் இதில் அடங்கும். இரண்டாமடியிற் கூறப் பட்டவர் - ஞானயோகத்தினாற் கடவுளைப் பெற விரும்புபவர். இன்னமுதம் வைத்து விளைத்திடுவார் எனப்பட்டவர் - யோகியர். வல்லவர் என்றது - கருமயோகத்தைச் செய்யவல்ல திடம்பூண்ட வர். யோகியரென்பார் - சமாதியிலிருந்து இதயபுண்டரீகத்தைத் திரும்பச்செய்து அங்கிருந்து மேன்முகமாக எழுகிற சோதியினாற் பிரமகபாலத்தினின்று பெருகுகிற அமுதத்தையே உணவாகக் கொள்பவ ராதலின், அன்னார்க்கும் விளையுளாலாகும் உணவைக் குறித்து ஆகவேண்டியதில்லையேயெனின்?— அன்னார் வேறு உணவை வேண்டாவிடினும் உலகத்திற் பசிமிகின் ஆங்குள்ள பிராணிகளைநோக்கி எழுந்த கருணையினால் அவ்வுயிர்களின் பசி யைப் போக்க வழிதேடவேண்டிவரு மாதலின், அவ்யோகியரின் யோகமும் இனிது நடவாததாகுமென்க. "ஞாநாந்மோக்ஷ:" என்று நூல்கள் கூறுவதனால், 'முத்தி விளைத்திடு ஞானம்' என்றார். விளைத்து = விளைக்க: எச்சத்திரிபு. இனி, இச்செய்யுட்கு - பத்தி விளைத்திடுந் தெய்வம்பணிவார்க்கும்-சரியாபாதநிஷ்டர்க்கும், தற் பரமா...ஞானமுதல்வர்க்கும் - ஞானபாதநிஷ்டர்க்கும், இன்அமு தம் வைத்து விளைத்திடுவார்க்கும் - இனியஉணவை (அடியவர்க்கு) இட்டு நன்மைசெய்யும் க்ரியாபாதநிஷ்டர்க்கும், வல்லவர்க்கும் - யோகபாத நிஷ்டர்க்கும், வேளாளர் விளைத்திடினன்றி வேண்டு வன விளையாளனக் கூறலும்பொருந்தும். இப்பொருளில், செய்யு ளாதலின் ஞானக்கிரியைகள் மாற்றிக்கூறப்பட்டன வென்க. வித்துவிளைத்திடினல்லால்-விதையானது விளைவையுண்டாக்கா விட்டால் என்று பொருள்கூறுவாரும், விளைந்த நெல்லிற் சிறு பகுதியை வித்தாகச் செய்துகொள்ளாவிட்டால் எனக்கூறுவாரும் உளர். இச்செய்யுளுக்கு வேறுவகையாகப் பொருள்கூறுவது சிறக்குமாயிற் காண்க. (27)

28.—முளையின் சிறப்பு.

விதைத்தபின் விதைத்த அவ்வித்தினின்று எழும் முளையின் சிறப்பைக் கூறுவது.

திறைமயங்கா தருள்விளங்குஞ் செயன்மயங்காத் திறல்வேந்தர்
நிறைமயங்கா வணிகேசர் நிலைமயங்கா அந்தணர்கள்
மறைமயங்கா தொருநாளும் மனுமயங்கா துலகத்தின்
முறைமயங்கா தவர்வயலின் முளைமயங்காத் திறத்தாலே.

(இ - ள்.) உலகத்தின்-இவ்வுலகத்திலே, முறை மயங்காதவர்- (தம்முடைய) குலவொழுக்கத்தினின்றுமாறுபடாத வேளாளர் வித்திய, வயலின் - வயலிலே, முளை - விதையின்முளை, மயங்கா -

மழுங்குதலையடையாது நன்குதோன்றிய, திறத்தாலே - தன்மையாலே,—அருள் விளங்கும் செயல் மயங்கா - தயையோடுதோன்றுகின்ற செயலை (உலகோர்க்குத்) தவறாதுசெய்கிற, திறல் வேந்தர்-வெற்றியினையுடைய அரசர்களின், திறை-திறைப்பொருள், மயங்காது-தவறாது கிடைக்கும்; வணிகேசர்-சிறந்த வைசியரின், நிறை-துலாக்கோலின் நிறையும், மயங்கா-மாறுபடாது நடக்கும்; அந்தணர்கள் நிலை-பிராமணர்க்கு உரியஒழுக்கமும், மயங்கா - மழுக்கமடையா; மறை மயங்காது - ; [வேதம் எங்கும் ஓதப்படும் என்றபடி]; ஒருநாளும் மனு மயங்காது - வேதமந்திரமும் தவறாது எப்போதும் பலிக்கும்; (எ - று.)

முனை தவறாது பலிக்குமாறு தோன்றுமாயின், எல்லாவருணத்தவரும் தத்தமக்குஉரிய குலவொழுக்கத்தை மேற்கொண்டுநிகழ்த்துவரென்க. மனுமயங்காது என்பதற்கு - (உலகில்) மநுநெறி தவறாமல் எங்குந் தழைத்தோங்கு மெனினுமாம். திறையை உலகத்தோரிடம் மன்னவர்வாங்குவது தாம் இன்பம் நுகரவேணுமென்ற கருத்தினாலல்லாமல் உலகோர்க்குப் பொதுவாகவுள்ள பல நன்மைகளைச் செய்யும் பொருட்டேயாமென்பார் 'திறைமயங்காதருள் விளங்குஞ் செயன்மயங்காத் திறல்வேந்தர்' என்றார். 'வணிகேசர்' என்பது குணசந்திபெற்றுவந்தது. மயங்கா என்ற சொற்களுள், முதலதும் ஈற்றதும்-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்; மற்றவை-முற்று. மயங்காதவர் - வினையாலணையும் பெயர். (28)

29.—நாற்றங்காற் சிறப்பு.

நாற்றங்கால் - நாற்று விடப்பட்டிருக்கும் இடம்.

ஏறுவளர்த் திடுமுகிலும் இசைவளர்க்கு மெனவுரைப்பின்
ஆறுவளர்த் திடுவதுசென் றலைகடலைத் தானன்றோ
வேறுவளர்ப் பனகிடப்ப வேளாளர் விளைவயலின்
நாறுவளர்த் திடிலன்றி ஞாலமுயிர் வளராதே.

(இ - ள்.) 'ஏறு வளர்த்திடு முகில்உம் - (தன்னிடத்து) இடியை மிகுதியாகவுண்டாக்குகின்ற (நீர்கொண்ட) காளமேகமும், இசை வளர்க்கும் -(கைம்மாறுவேண்டாமல் மழைபெய்து உலகத்துயிர்களைப் பாதுகாத்துக்) கீர்த்தியை மிகுதியாகக்கொள்ளும்,' என உரைப்பின்-என்றுகூறினால், (அம்மழைநீராற் பெருகுகின்ற), ஆறு-நதி, சென்றுவளர்த்திடுவது—, அலைகடலை தான் அன்றோ - (நீர்) அலையுந்தன்மையைக்கொண்ட கடலையேயல்லவோ? (ஆகையால்), வளர்ப்பனவேறுகிடப்ப - (உலகத்துயிர்களை) வளர்ப்பவையென்று சொல்லப்படுகின்றவேறுபொருள்கள் கிடக்கட்டும்: வேளாளர் - வேளாளர்கள், விளை வயலின் - விளைகின்ற வயலிலே, நாறு வளர்த்திடில் அன்றி - நாற்றை நன்கு வளர்த்தாலல்லாமல், ஞாலம்-இவ்வுலகத்தில்,உயிர்-பிராணிகள், வளராது-வளரமாட்டா; (எ - று.)

மழைநீர்பெய்தாலும் வேளாளர் நன்குவிளையுமாறு நாற்று விடாவிட்டால், உலகத்துயிர்கட்கு உணவுப்பொருள்கிடைக்கா தாதலால், மழை முதலியன உலகத்துயிர்கள் வளர்தற்கு நேரே காரணமாகா வென்க. மழைபெய்து ஆற்றிலே வெள்ளம்வருதலே உலகத்துயிர்வாழ்தற்குக் காரணமென்பாரை நோக்கி, அவ்யாற்று நீர் கடல்வளர்வதற்குக் காரணமாவதன்றி, உலகத்துயிர்கள் வாழ்வதற்கு நேரே காரணமன் றென்று மறுத்தவாறு. ஒன்றை வளர்ப்பவ ரென்று சொல்லப்படுவார் தாம் உடனிருந்து பாதுகாக்கப்படும்பொருட்கு யாதோரிடையூறும்வராது காத்தலே முறைமையாதலின், அங்ஙனம் உடனில்லாது மழையாற்பெருகும் யாற்றின்நீர் கடலிற்சென்று விழுந்திடுதலால், 'ஆறுசென்று வளர்த்திடுவது அலைகடலைத் தானன்றோ' என்றது. கிடப்ப-அகர வீற்றுவியங்கோள்: 'கிடக்க' என்ற பாடம், நன்கு பொருந்தும். இனி, கிடப்ப என்பதைச் செயவெனெச்சமாக்கொண்டு உரைத்த லும் ஒன்று. உயிர்-சாதியொருமை: ஆதலால், ஒருமை முற்றைக் கொண்டது. (29)

30.—நாறுபறித்தற் சிறப்பு.

நாற்றை நடுமாறு பிடுங்குதல், நாறுபறித்தலெனப்படும்.

வெறுத்துமீன் சனிபுகிலென் வெள்ளிதெற்கே யாயிடிலென்
குறித்தநாள் வரம்பழியாக் குலப்பொன்னித் திருநாடர்
மறித்துநாட் டிடநின்ற வளவயலி னிடைநாற்றைப்
பறித்துநாட் கொண்டதற்பின் பார்பசிக்க மாட்டாதே.

(இ - ள்.) வெறுத்து - சினங்கொண்டு, மீன் - மீனராசிக் கண்ணே, சனி-சனியென்னுங் கோள், புகில் என்-பிரவேசித்தால் தான் என்ன? வெள்ளி-சுக்கிரன், தெற்கே-தென்திசைக்கண்ணே, ஆயிடில் என் - வந்திருந்தால்தானென்ன? குறித்த நாள் வரம்பு அழியா-குறித்தநாளின் எல்லை தவறாது பெருக்கெடுத்து வருகிற, குலம் பொன்னி-சிறந்தகாவிரிநதி பாயப்பெற்ற, திருநாடர்-சிறந்த சோழநாட்டையுடையவரான வேளாளர்,—நின்ற வளம் வயலி னிடை-நிலைபெற்ற வளப்பத்தையுடைய வயலிலுள்ள,நாற்றை—, பறித்து மறித்து நாட்டிட-பிடுங்கி மீண்டும்நடுமாறு,நாள் கொண் டதன்பின்-நாளைக் குறித்துக்கொண்ட பிறகு, பார் - இவ்வுலகத் துயிர், பசிக்கமாட்டாது-பசித்திராது; (எ-று.)-இரண்டாமடியில் 'குறித்தநாள் வரத்தொழியா' என்று பாடமிருப்பின் நலம்.

மீனத்திற் சனிபுகுதலும், வெள்ளி தெற்கேஆதலும் பஞ்சம் வருவதைத் தெரிவிக்குமென்க. அங்ஙனம் பஞ்சம் நேர்ந்தாலும், தவறாது நீரைப்பெருக்குகின்ற காவிரி பாயும் சோணாட்டு வேளா ளர், விளைவை யுண்டாக்க முயன்றால் உலகம் பசியாதென்றவாறு.

மீன்-பன்னிரண்டாம் ராசியாகிய மீனம்: அந்த ராசியிற் சனி பகவான் பிரவேசிப்பானாயின் தீமை விளையுமென்பது, சோதிட நூல்களிற் பிரசித்தம். இனி, மீன் - இடபம் சிங்கம் மீனம் என்

னும் கோள்கட்கு உரிய நட்சத்திரங்களைக் குறிக்குமெனினுமாம்: "கரியவன்புகையினும் புகைக்கொடிதோன்றினும்;.........பெயல் வளஞ்சுரப்பக்......காவிரிப்புதுநீர்க்கடுவரல்" என்ற சிலப்பதிகாரமும், "கோள்களிற் சனிக்கோள் இடபம் சிங்கம் மீனமென்னும் இவற்றினோடுமாறுபடினும்" என்று அங்கு அடியார்க்குநல்லாருரைத்திருப்பதும் காண்க: இனி, வெறுத்து மீன் சனிபுகிலெனென்பதற்கு - சனிக்கோள் மாறுபாடுகொண்டு காணுக்கோள்களுள் ஒன்றாகிய தூமகேதுவைச் சேர்ந்தாலென்? என்று பொருள் கொள்ளலுமொன்று: "கரியவன் புகையினும்" என்று தொடங்குஞ் சிலப்பதிகார அடிகட்கு அரும்பதவுரையாசிரியர் 'சனி தூமனோடு கூடினும்' என்று உரைத்திருத்தல் இதற்கு மேற்கோளாகத் தக்கது. "வறிதுவடக்கிறைஞ்சிய சீர்சால்வெள்ளி" என்றவாறு சிறிதுவடக்குப்புறஞ் சாய்ந்தாற்போல இருத்தல் மழைக்கோளாகிய வெள்ளிக்கு இயல்பாதலால் அது அங்ஙிலைமாறித் தென்புறத்திலிருந்தாலும் என்பது 'வெள்ளி தெற்கேயாயிடில்' என்பதன் பொருள். "மைம்மீன் புகையினுந் தூமந்தோன்றினும், தென்றிசைமருங்கின் வெள்ளியோடினும்;......பெயல்பிழைப்பறியா", "அலங்குகதிர்க்கனலி நால்வயிற்றோன்றினும், இலங்குகதிர் வெள்ளி தென்புலம்படரினும், அந்தண்காவிரி வந்துகவர்பூட்ட" என்ற புறநானூறும், "வசையில்புகழ்வயங்குவெண்மீன், திசை திரிந்துதெற்கேகினும்,......புயன்மாறி, வான்பொய்ப்பினுந் தான் பொய்யா,...காவிரி" என்ற பட்டினப்பாலையும் இங்குக் காணத் தக்கன. இக்காலத்தும் காவிரியில் பதினெட்டாம் பெருக்கு என்று வழங்கப்பட்டு ஆடியின் பதினெட்டாந்தெய்தியிற் காவிரிப் பெருக்குத் தவறாது வருதல் காண்க. மறித்து - தண்ணீரைக்கட்டி என்றும், தெற்கு - கன்னிராசியென்றும் பொருள்கூறினரு முளர்: பொருந்துமேற் கொள்க. 'கன்னிச்செவ்வாய் கடலும் வற்றும்' என்ற பழமொழியே சோழநாட்டில் வழக்கிலுள்ளது. (30)

31.—நாற்றுமுடிசுமத்தற் சிறப்பு.

பறித்த நாற்றை நடுதற்காக எடுத்துச்செல்லுதல், நாற்றுமுடி சுமந்து செல்லுத லெனப்படும்.

மாணிக்க முதலாய மணியழுத்தித் தொழில்சமைத்த
ஆணிப்பொன் முடிவேந்தர் அணிமுடியு முடியாமோ
பேணிப்பைங் கோலமுடி பெருக்காளர் சுமவாரேல்
சேணுக்குந் திசைப்புறத்துஞ் செங்கோன்மை செல்லாதே.

(இ - ள்.) பை கோலம் முடி - பசிய அழகினையுடைய நாற்றுமுடியை, (நடுமாறுஎடுத்து), பெருக்காளர் - வேளாளர், பேணி - விரும்பி, சுமவார் ஏல் - சுமந்துசெல்லாவிட்டால், சேணுக்கும் திசைப்புறத்தும்-வெகுதூரம்வரையிலுமுள்ள திசைகளினெல்லை முழுதும், செங்கோன்மை செல்லாது - (அரசருடைய) செவ்விய அரசாட்சி நடவாது; (ஆதலால்),—மாணிக்கம் முதல் ஆய மணி

அழுத்தி தொழில் சமைத்த ஆணி பொன் முடி வேந்தர் அணி - மாணிக்கம்முதலிய மணிகளையழுத்தித் தொழில்சமைத்த சிறந்த பொன்னினாற்செய்த கிரீடத்தையணிந்த அரசரணிகின்ற, முடியும்—, முடி ஆமோ - (நாற்று முடிக்குமுன்னே சிறப்பித்துச் சொல்லக்கூடிய) முடியாகுமோ? (எ - று.)

அரசர் செங்கோல் எங்கும் இனிது செல்லுதற்கு நாற்று முடியே பரம்பரைக் காரணமா மாதலால், அரசர்முடியும் நாற்று முடிபோலச் சிறப்பித்துக் கூறப்படமாட்டாதென்றபடி. அரசர் முடியிடத்து முடித்தன்மையை மறுத்து, நாற்றுமுடியில் அதனை ஏற்றிக்கூறியது - **ஒழிப்பணியின்**பாற் படும். வேந்தன் என்பதை இரட்டுறமொழிதலாகக்கொண்டு,தேவேந்திரனுடையசெங்கோல், சேணுக்கு-வானிலே, செல்லாது; இப்பூவுலகத்து வேந்தன்கோல் திசைப்புறத்துச் செல்லாது எனக் கூறுவாருமுளர். பேணி என்ப தன்பின் 'இருக்கும்' என ஒருசொல் வருவித்து, பெருக்காளரோடு இயைத்து, அரச ரென்பார் பகையரசரையும் குற்றஞ்செய்தாரையும் ஒறுத்தலும் மற்றையோரைப் பேணுதலு முடையர்: இந்த வேளாளரோ யாவரையும் ஒருநிகராகப் பேணுதலையுடையவ ரென்று கருத்துக்காண்பாரு முளர். ஆணிப்பொன் - மாற்றறிதற்குக்கொள்ளும் உயர்தரப்பொன்: இதற்குமேல் மாற்றில்லை யென்னும்படி மாற்றுயர்ந்த பொன். முடியும், உம்மை-உயர்வுசிறப்பு.()

32.—வயலில் முடிசேர்த்தற் சிறப்பு.

தென்னன்முடி சேரன்முடி தெங்குபொன்னி நாடன்முடி
கன்னன்முடி கடல்சூழ்ந்த காசினியோர் தங்கண்முடி
இன்னமுடி யன்றியுமற் றெடுத்துரைத்த முடிகளெல்லாம்
மன்னுமுடி வேளாளர் வயலின்முடி கொண்டன்றே.

(இ - ள்.) முடி வேளாளர்-முதன்மையையுடைய வேளாளரின், வயலின்-வயலிலேநடுமாறு சேர்க்கிற, முடி -நாற்றுமுடியை, கொண்டு அன்றே-ஆதாரமாகக்கொண்டு அல்லவா,—தென்னன் முடி-பாண்டியவரசனதுமுடியும், சேரன் முடி-சேரவரசனதுமுடியும், தேங்கு பொன்னி நாடன் முடி - வளம்மிக்க காவேரி பாயப்பெற்ற சோழநாட்டரசனதுமுடியும், கன்னன் முடி - (கொடையினால்மேம்பட்ட)கர்ணனது முடியும், கடல் சூழ்ந்த காசினியோர் தங்கள் முடி - கடலினாற் சூழப்பட்ட இப்பூமியை யாள்கின்ற மற்றையரசர்களின்முடியும், இன்ன முடி அன்றியும் - இங்குக்கூறிய இம்முடிகளே யல்லாமல், மற்று - மற்றும், எடுத்து உரைத்த முடிகள்எல்லாம் - (அறிவுடையோர்) புகழ்ந்துகூறிய முடிகளெல்லாம், மன்னும் - நிலைபெறும்; (எ - று.)

வேளாளர் விளைவையுண்டாக்குமாறு நாற்றுமுடியைச் சேர்த்தலே, தென்னன்முடி முதலியன நிலைபெறுதற்குக் காரணமா மென்றவாறு. "காராள ரணிவயலி லுழுது தங்கள் கையார நட்ட முடி திருந்த விந்தப், பார்ராளுந் திறலரசர் கவித்த வெற்றிப் பசும்பொன்மணி முடிதிருந்தும்" என்று உமாபதி சிவாசாரியர் இச்

செய்யுளின் கருத்தைத் தழுவிக் கூறியிருத்தல் காண்க. தென்னன் முடிமுதலியன, வேளாளரின் வயலின் முடிகொண்டன்றோ, மன்னும்-நிலைபெற்ற, முடி-முடியாகுமென, முடியென்பதைப் பயனிலையாக்கி உரைப்பினுமாம். இனி, மன்னும் முடி வேளாளர் என்று எடுத்து-பொருந்திய தலைமையையுடைய வேளாளரெனப் பொருள் கூறி, வினைமுற்றுவருவித்து உரைப்பாருமுளர். தமிழ்நாட்டு மூவேந்தரை முன்னர்க்கூறி, சூரியனுக்குக் குந்திதேவியினிடம் பிறந்தபுதல்வனை கன்னன் கொடைத்தொழிலாற் பிரசித்தி பெற்றவனுதலால், அவனைக்கூறி, மற்றும் முன்னும் பின்னுமுள்ள அரசர்களைத் தழுவ '**காசினி**யோர்' என்முர். பரசுராமன் இவ்வுலகத்தைவென்று காசியபமுனிவனுக்குத் தானஞ்செய்ததுபற்றிப் பூமிக்கு 'காஸ்யபீ' என்று ஒருபெயர்: அச்சொல் 'காசினி' எனத் திரிந்து வந்ததென்பர். (32)

33.—முடிவிளம்புதற் சிறப்பு.

முடி விளம்புதலாவது - நாற்றுமுடியை நடும்போது 'பயிர் வாழ்க' என்றுகூறுத லென்பர்: இனி, சுமந்துசென்ற நாற்று முடியை ஒன்று இரண்டு என எண்ணுதலென்று உரைத்தாருமுளர்: நடுவோரின்கைக்கு எட்டுமாறு நாற்றுமுடிகளை ஆங்காங்கு எறிதலென்று உரைத்தலு முண்டு; முடிவிளம்புதலென்பது நாற்றுமுடியை நடுதற்காக வீசியெறிதலென்ற இப்பொருளில் இக்காலத்து வழங்குகின்றதென்பர்.

வெய்யகலி வலிதொலைக்கும் வேளாளர் விளைவயலிற்
செய்யின்முடி விளம்பாரேல் விளம்புவன சிலவுளவோ
மையறுமந் தணர்விளம்பார் மறைமனுமன் னவர்விளம்பார்
ஐயமறு புலவோரும் அருந்தமிழ்நூல் விளம்பாரே.

(இ-ள்.) வெய்ய-கொடிய, **கலி**-வறுமையின், **வலி**-வலிமையை, தொலைக்கும் - ஒழிக்கவல்ல, வேளாளர்—, **விளை** - விளைக்கின்ற, வயலில்-வயலிலே, செய்யின் முடி-நாற்றங்காலினின்று பறித்துக் கொண்டுவந்த நாற்றுமுடியை, **விளம்பார் ஏல்** - விளம்பாரேயாஞல்,—மை அறும் அந்தணர் - குற்றமற்ற பிராமணர்கள், மறை விளம்பார் - வேதாத்தியயனஞ் செய்யமாட்டார்கள்; மன்னவர் - அரசர்கள், மனு - தருமசாஸ்திரங்களை, **விளம்பார்** - ஓதமாட்டார்கள்; ஐயம் அறு புலவோரும்-சந்தேகமற நூற்பொருளையுணர்ந்த தமிழ் வித்துவான்களும், அரு தமிழ் நூல் - அரிய தமிழ் நூலை, **விளம்பார்**-சொல்லமாட்டார்கள்; (ஆகவே), **விளம்புவன** - கற்கப் படுபவை, **சிலஉளவோ**-சிலஉண்டோ? (எ - று.)

முடிவிளம்பி வேளாளர் பயிர்செய்யாவிட்டால், உலகத்தோர்க்கு உண்ண உணவின்றிப்போகப் பசியுடற்று மாதலாலும், "மானங்குலங் **கல்வி**...பத்தும், பசிவந்திடப்பறந்துபோம்" என்றவாறு பசியுடற்றின் கல்வி முதலியன போய்விடு மாதலாலும், அந்தணர்முதலியோர் மறைமுதலியன விளம்பாரென்க. மனு-இங்கு, மனுஸ்மிருதி முதலியநூல்கள். ஐயமென்பது, திரிபுக்கும்

உபலட்சணம்: ஆகவே, ஐயமறுபுலவரென்றது - ஐயந்திரிபற வுணர்ந்தபுலவரென்றவாறு. செய்-இங்கு, நாற்றங்கால். (33)

34.—கைப்பாங்கின் சிறப்பு.

இந்தொடர்-நாற்றுநடுவதிற் கைப்பழக்கத்தாலான சிறப்பு எனப்பொருள்படும். கைப்பாங்குஎன்பதற்கு - கையிலெடுத்துக் கொண்ட பங்கு என்பாருமுளர்.

மெய்ப்பாங்கு படக்கிடந்த வேதநூல் கற்றாலென்
பொய்ப்பாங்கு படப்பிறரைப் புகழுநூல் கற்றாலென்
செய்ப்பாங்கு படக்கிடந்த செழுஞ்சாலி நன்னாற்றைக்
கைப்பாங்கு பகுந்துநடக் கற்றாரே கற்றாரே.

(இ - ள்.) மெய் - உண்மைப்பொருளாகிய கடவுள், பாங்கு பட - நன்றாக உணரப்படுமாறு, கிடந்த - (அக்கடவுளின் தன்மையைச் செவ்வனே) கூறுகின்ற, வேதம் நூல் - வேதநூலை, கற்றால் என் - படித்தலினால் (பிறருக்கு) யாதுபயன்? பொய் பாங்கு பட - பொய்த்தன்மை கெட [மெய்யாக], பிறரை - அயலாரை, புகழும் - புகழ்கின்ற, நூல்-நூலை, கற்றால் என்-கற்பதனால்தான்(பிறர்க்கு) யாதுபயன்? செய் பாங்கு பட கிடந்த - வயலிலே இட்ட உரத்தினாலே நன்றாக முளைத்தெழுந்த, செழு-வளப்பமுள்ள, சாலி - செந்நெல்லின், நல் நாற்றை-சிறந்த நாற்றை, கைப்பாங்கு-கைத்திறமையினாலே, பகுந்து நட-பிரித்து நடுதற்கு, கற்றாரே-கற்றவர்களே, கற்றார்-(உலகோர் பயன்பெறும் வழியைக்) கற்றவராவர்;(எ-று.)

கற்றதற்குப்பயன் பிறர்க்கு உதவிசெய்வதே யாதலால், கைப்பாங்குபெற நாற்றைநடுமாறு கற்றோர்போல உலகோர்க்கெல்லாம் பயன்விளையக் கற்றவர் பிறரில்லை யாகலால், 'கைப்பாங்குபகுந்து நடக்கற்றாரே கற்றார்' என்றார்: இதனால், வேளாளரின் கல்வி போல் மற்றையோர்கல்வி பயன் விளைக்காது என்றவாறு. இவ்வண்ணம் மற்றையோரின் கல்வியையிழித்து வேளாளரின் கல்வியைச் சிறப்பித்துக் கூறியது, அவ்வேளாளரின் தொழிலை மேன்மைப்படுத்தவேணுமென்னுங் கருத்தினாலாகும்: மற்றையோரின் கல்வியை இழித்துரைக்கவேணு மென்னுங் கருத்தின லன்றென்க. இச்செய்யுளிற்கூறியது-முக்குழிப்பாய்ச்சிநடவு பத்திநடவு கலக்க நடவு நெருக்க நடவு முதலியவாக நடப்படும் கைப்பாங்கினை யாகும். (34)

35.—நடவுமுனைச் சிறப்பு.

நடவுமுனையாவது - ஒருபக்கம்உழ ஒருபக்கம் நட இவ்வாறு இரண்டும் சேர்ந்துநிகழும் இடம்.

உலகத்திற் பகடுழக்கும் ஓங்குமுடித் திறல்வேந்தர்
அலறத்தின் பகடுழக்கும் அதுவுமொரு முனையாமோ
உலகத்திற் பகடுழக்கும் உயர்முடிகொள் வேளாளர்
சிலவருழச் சிலவர்நடும் அவையன்றோ திருமுனையே.

(இ - ள்.) உலகத்தில் - இவ்வுலகத்திலே, பகடு உழக்கும் - யானைமீதேறிச் செலுத்துகின்ற, ஓங்கு முடி திறல் வேந்தர் - சிறந்த கிரீடத்தையணிந்த வலிமையையுடைய அரசர், அலற - (தமது) பகைவர் கதறும்படி, திண் பகடு உழக்கும் - வலியயானைகளைச் செலுத்தவல்ல, அமரும்-அந்தப்போர்முனையும், ஒரு முனை ஆமோ - முனையென்று சொல்லுதற்கு உரியதாகுமோ? உலகத்தில்—, பகடு-கடாக்களை, உழக்கும் - (வயலிலே) செலுத்துகின்ற, உயர் முடி கொள்-(நடுமாறு) சிறந்த நாற்றுமுடிகளைக் கொண்ட, வேளாளர்-வேளாளரில், சிலவர்-சிலர், உழ-உழுதுகொண்டிருக்க, சிலவர்—, நடும் - (நாற்றுமுடிகளை) நடுகின்ற, அவை அன்றே - அவையல்லவா, திருமுனை - சிறந்த முனையென்று சொல்லுதற்குத் தக்கது? (எ - று.)

உலகத்து உயிர்களெல்லாம் வாழ்வுபெறுமாறு வேளாளர் புரியும் நடவுமுனையே முனையென்று சொல்லத்தகுமே யன்றி, உயிர்கள் நாசமடைவதற்குக் காரணமான போர்முனையை முனையென்று பாராட்டிச் சொல்லுதலேற்குமோ? ஏலாதென்றவாறு. திருமுனையென்று சொல்லத்தகாதென்றகருத்தை 'அலறத்திண் பகடுழக்கும்'என்ற விசேஷணம்தெரிவித்தலால்,**கருத்துடையடைமொழியணியாம்**. முதலடியில் பகடுழக்கும் என்ற தொடர்க்கு - காளைபோல் திரிகின்ற என்று பொருள் கொள்ளினுமாம்; உழக்கும், உழக்கு-பகுதி. (35)

36.—பயிர்விளைத்தற் சிறப்பு.

பயிரை நன்கு விளையுமாறு செய்யுந் தொழிலின் சிறப்பைக் கூறுவது.

ஏராலே சேருக்கி யெருவாலே கருவாக்கி
நீராலே பைங்கூழை நிலைப்பிப்பார் தமையன்றிக்
காராலே காவேரி நதியாலே காசினியில்
ஆராலே பசிதீர்வார் அகலிடத்திற் பிறந்தோரே.

(இ - ள்.) ஏராலே சேறு ஆக்கி-ஏரைக்கொண்டு உழுவதால் சேறு செய்து, எருவாலே கரு ஆக்கி - எருவிடுதலாலே கருவேறச் செய்து, நீராலே - நீரை உரிய காலங்களிற் பாய்ச்சுதலால், பைங்கூழை நிலைப்பிப்பார் தமை-பசுமையான பயிரை நிலைக்க [நன்கு விளையுமாறு] செய்விப்பவர்களாகிய வேளாளரை, அன்றி - அல்லாமல்,—அகல் இடத்தில் பிறந்தோர்-பரந்த இந்தப்பூவுலகத்திலே தோன்றிய மானுடர், காசினியில்-இந்தப்பூமியில், ஆராலே-யாவரால், பசி தீர்வார் - பசிநீங்கப்பெறுவர்? காராலே - மேகத்தினாலே, (பசிதீர்வாரா?), காவேரிநதியாலே-காவிரியாற்றினாற் (பசிதீர்வாரா)? (எ - று.)

மழைபெய்யினும் காவேரிபெருகிவரினும் வேளாளர் பயிர் விளைக்காவிட்டால் உண்ண உணவின்றி உலகத்தவர் பசித்திருக்க வேண்டிவருமாதலின், உலகத்திற்பிறந்தோர் பசிதீர்வது, வேளாளர் பயிரைவிளைத்தலினாலேயேயா மென்றார். எருஇடாவிட்டால்

கரு வீறுபெற்றுத்தோன்று வாதலால், 'ஏருவாலே கருவாக்கி' என்றது: "ஏரினுநன்றாலெருவிடுதல்" என்றார், திருவள்ளுவரும். கரு-பயிரின்கதிரினுட்பிடிக்கும் மணி. (36)

37.—பயிர்முதற் சிறப்பு.

பயிரின் முதன்மையைச் சிறப்பித்துக் கூறுவது.

அந்தணர்க்கு வேதமுதல் அரசருக்கு வெற்றிமுதல்
முந்தியசீர் வணிகருக்கு முதலாய முதலுலகில்
வந்தவுயிர் தமக்கெல்லா மருந்தாக வைத்தமுதல்
செந்தமிழ்க்கு முதலாய திருவாளர் செய்முதலே.

(இ - ள்.) அந்தணர்க்கு-பிராமணர்க்கு, முதல் - முதன்மையாகச் சிறந்திருப்பது, வேதம் - வேதமேயாகும்; அரசருக்கு—, முதல்—, வெற்றி - (பகைவரை) வெல்லுதலேயாம்; முந்திய சீர் வணிகருக்கு-முற்பட்ட புகழையுடைய வணிகர்கட்கு, முதல்—, ஆயம் முதல்-ஆதாயத்திற்குக் காரணமான மூலதனமாம்; உலகில் வந்த - இவ்வுலகத்திற் பிறந்த, உயிர்தமக்கு எல்லாம் - உயிர்கட்கெல்லாம், மருந்து ஆக வைத்த - மருந்தாகவைத்துள்ள, முதல் - முதலாவதோ, செந்தமிழ்க்கு முதல் ஆய - செந்தமிழைப் பயில்வதிலே தலைமைபெற்ற, திருவாளர்-சீமான்களாகி உழவுத்தொழிலைப் புரிபவரான வேளாளரின், செய்முதல்-விளைவயலின்கணுள்ள பயிர்முதலேயாம்; (எ - று.)

அந்தணர்க்கு வேதமும், அரசர்க்குவெற்றியும், வணிகர்க்கு மூலதனமும் முதலாகும்; இங்ஙனம் ஒவ்வொருசாதியார்க்கு முதலாகும் வேதம் முதலியனபோல் வல்லாமல், திருவாளர் செய்முதல், உலகிலுயிர்க்கெல்லாம் மருந்தாகின்ற முதலாகுமென்க. செய்முதலை மருந்து என்றது-பசிநோய் உடலை வருத்தாது காத்தல் பற்றியாகும். திருவுக்கு உழவே காரணமா மாதலால், அத்தொழிலைப்புரியும் வேளாளரை 'திருவாளர்' என்றது. இங்கு அந்தணர் முதலிய ஒவ்வொருசாதியார்க்கே முதலாகும் வேதம் முதலியவற்றைவிட, வேளாளர் செய்முதல் உலகத்துயிர்க்கெல்லாம் முதலாகும் என அதற்கு மேன்மைதோன்றக்கூறியது - **வேற்றுமையணி**யின்பாற்படும். ஆயம் - வடசொல்; ஆதாயம், இலாபமென்பது, பொருள். "முதலிலார்க்கூதிய மில்" என்பது, இங்குக் காணத்தக்கது. (37)

38.—பயிர்வளர்தற் சிறப்பு.

சீர்வளரும் மறைவளரும் திறல்வேந்தர் முடிவளரும்
பேர்வளரும் வணிகருக்குப் பெருநிதிய மிகவளரும்
ஏர்வளரும் திருவளரும் இசைவளரும் கடல்சூழ்ந்த
பார்வளரும் காராளர் பயிர்வளருந் திறத்தாலே.

(இ - ள்.) கடல் சூழ்ந்த - கடலினாற்சூழப்பட்ட, பார்-பூமியிலே, வளரும் - தோன்றியுள்ள, இசை வளரும் - பெரும்புகழ்

படைத்த, காராளர்-வேளாளரின், பயிர்—, வளரும்-வளர்கின்ற, திறத்தாலே-தன்மையாலே,—சீர் வளரும் மறை-சிறப்புப்பொருந்திய வேதம், வளரும்-வளர்ச்சிபெறும்; திறல்வேந்தர் முடி-வெற்றி வேந்தரின் கிரீடம், வளரும்-செழித்துத்தோன்றும்; பேர் வளரும் வணிகர்க்கு - பெருமைமிக்க வணிகசாதியார்க்கு, பெரு நிதியம் - பெருஞ்செல்வம், மிக வளரும் - மிகுதியாகவுண்டாகும்; ஏர் வளரும் திரு வளரும்-அழகுமிக்க (கல்விகேள்வி முதலிய) செல்வமும் செழித்துத் தோன்றும்; (எ - று.)

பயிர் வளர்ந்துவிளைதலே, உலகத்தில் வேதமோதுதல் முதலியன நிகழ்தற்கு ஏதுவா மென்றவாறு. மறைக்குச்சிறப்பு - மனிதரால் செய்யப்படாமை, நன்றுட்கூறியபொருள் பொய்படாமை, ஐயந்திரிபுகளைக் கொண்டு கூறுமை முதலியன. 'இசைவளரும், கடல் சூழ்ந்தபார் வளரும்' என்ற இரண்டு தொடரையும் வினைமுற்ருகக்கொண்டு, காராளர் பயிர் வளருந்திறத்தாலே மறைவளரும்;......திருவளரும்; இசைவளரும்; பாரும் வளரும் என முடிப்பினும் அமையும். வளருமென்றசொல் ஒரே பொருளில் பலமுறை வந்தது-சொற்பொருட்பின்வருநிலையணி யாம். (38)

39.—ஏற்றத்தின் சிறப்பு.

காற்றுமேல் வருகின்ற கார்விடினுங் கடல்சுவறி
யாற்றுநீ ரறவெள்ளி யரசனுந்தெற் காயிடினும்
ஏற்றமே கொடுநாளும் இறைத்துலகம் விளைவித்துக்
காத்துமே யுயிர்வளர்த்தல் காராளர் தங்கடனே.

(இ - ள்.) காற்று - காற்றினுடைய உதவியினுல், மேல் - வானத்தின்மீது, வருகின்ற - சஞ்சரிக்கின்ற, கார் - வானமானது, விடினும் - (மழைபெய்யாது) விட்டாலும், கடல் சுவறி - கடல் நீரும் வற்றி, யாற்று நீர் அற - நதியின் நீரும் வற்றிவிடுமாறு, வெள்ளியரசனும்-சுக்கிரபகவானும், தெற்கு ஆயிடினும்-தெற்கேயிருந்தாலும், நாளும்-ஒவ்வொருதினமும், ஏற்றமேகொடு-ஏற்றத்தினையே கருவியாகக்கொண்டு, இறைத்துஉம் - (நீரை) இறைத்தேனும், உலகம் விளைவித்து-உலகத்திலே (பயிரை) விளையச்செய்து, காத்து - பாதுகாத்து, உயிர் வளர்த்தல் - உலகத்துயிரை வளரச் செய்தல், காராளர்தம் கடனே-வேளாளரின்கடமையான ஒழுக்கமாம்; (எ - று.)

இதனுல், மழைபெய்யாத காலத்தும், வேளாளர் நீர்ப்பாங்குள்ள கிணறு முதலியவற்றில் ஏற்றத்தைக்கொண்டு இறைத்துப் பயிரையுண்டாக்கி உலகத்தாரை ஓம்புமாறு கூறப்பட்டது. வானத்திலே கார் சஞ்சரிப்பது காற்றின் பிரேரணையினுலேயே யாதலால் 'காற்றுமேல் வருகின்ற கார்' என்ருர். சுவறி=சுவற என்ற எச்சத்தின் திரிபாகக் கொள்ளினுமாம். அரசன்-தலைமைப் பொருளுணர்த்திற்று. வெள்ளி தெற்கேயாயிடின் பஞ்சமுண்டாமென்பது கீழ் 30-ஆஞ்செய்யுளிலும் வந்துள்ளது. காத்துமே, உம்மை பிரித்துக்கூட்டப்பட்டது; ஏ - இசைநிறை. (39)

40.—துலைநீரின் சிறப்பு.

ஏற்றத்தாற் பாயும் நீரின்சிறப்பு.

கலையிட்ட மறைவேந்தர் கனல்வேள்வி வளர்ப்பதுவும்
மலையிட்ட புயத்தரசர் மணிமகுடஞ் சூட்டுவதும்
தலையிட்ட வணிகருயத் தனமீட்டப் படுவதுவும்
நிலையிட்ட வேளாளர் துலையிட்ட நீராலே.

(இ - ள்.) கலை இட்ட மறை வேந்தர்-அறுபத்துநான்கு கலைகளையும் தன்னுட்கொண்டுள்ள வேதத்தில் வல்ல தலைவராகிய பிராமணர், கனல் வேள்வி வளர்ப்பதுவும்-அக்கினியைக்கொண்டு யாகஞ்செய்வதும்,-மலைஇட்டபுயத்து-மலையையொத்ததோள்களையுடைய, அரசர்—, மணி மகுடம் சூட்டுவதும்-இரத்தினமிழைத்த கிரீடத்தைப் புனைவதும், தலையிட்ட வணிகர் - மேன்மைபெற்ற வைசியர், உய - (தாம்) உய்யும்படி, தனம் ஈட்டப்படுவதுவும் - செல்வத்தைச் சம்பாதித்தலும், நிலை இட்ட - நிலைமைபெற்ற [சொன்னசொல் மாறுத], வேளாளர்—, துலை இட்ட-ஏற்றத்தாற் பாய்ச்சிய, நீராலே-நீரினாலேயேயாகும்; (எ - று.)

பயிர்த்தொழிலைச் செய்யும் வேளாளர், அந்தணர்முதலிய மூன்று வருணத்தார்க்கும் உதவுமாறு மழைபெய்யாக் காலங்களிலும் துலைநீரைக்கொண்டு பயிர் விளைப்பரென்றவாறு.மலையிட்ட, இட்ட-உவமவுருபு. கலையிட்ட-பிரமாணநூலென்று (ஆஸ்திகரால்) அங்கீகரிக்கப்பட்ட, மறை எனினுமாம். (40)

41.—கரம்புதிருத்தற் சிறப்பு.

கரம்பு - சாகுபடி செய்யாத நிலம்; இது அனாதிக்கரம்பு, செய்காற் கரம்புஎன இருவகைப்படும்.

மேடுவெட்டி வளப்படுத்தி மிகவரம்பு நிலைநிறுத்திக்
காடுவெட்டி யுலகநெறிக் காராளர் காத்திலரேல்
மேடுவெட்டிக் குறும்பறுக்கும் வேல்வேந்த ரெற்றாலும்
காடுவெட்டி யுழுதுவருங் கலிகளைய மாட்டாரே.

(இ - ள்.) மேடு வெட்டி - சிறுதிடர்களை அழித்து, காடு வெட்டி-காடுகளை அழித்து, வரம்பு நிலைநிறுத்தி - வரப்பு ஓரத்தை நிலையாக [த்திருத்தமுற] அமைத்து, மிக வளப்படுத்தி - மிகவும் வளமுறச்செய்து, உலக நெறி - உலகியலொழுக்க முறைமையை, காராளர் - வேளாளர், காத்திலர் ஏல் - காவாமலிருந்தால்,— குறும்பு அறுக்கும் வேல் வேந்தர் - பகைவர்களை அழிக்கும் வேலையேந்திய மன்னர்கள், எற்றாலும்-எவ்வகையினும், மேடு வெட்டி காடு வெட்டி - சிறு திடர்களையழித்தும் காடுகளை யழித்தும், உழுது - (கரம்புதிருத்தி) உழுது பயிர்செய்து, அரு கலி களைய மாட்டார் - தாங்கற்கரிய வறுமையை யொழிக்க மாட்டாதவரேயாவர்; (எ - று.)

குறும்பறுக்கும் வேந்தராயினும் கரம்பு திருத்திக் கலி களையமாட்டாரே எனக் கூறி, அவரினும் காராளர் சிறப்புத் தெரிவித்தபடி: குறும்பு - சிற்றரண்; குறுநிலமன்னர் எனவுமாம். வேல்வேந்தர் என்றது இகழ்ச்சி: அவரதுவேல் உழுதற்குப் பய னின்மையாகலின். எனவே, உலகநெறிகாப்பார் வேளாளரே யன்றி வேந்தரல்லர் என அறிவுறுத்தியவாறு. (41)

42.—புழுதிச்சிறப்பு.

உழுகின்ற செய்யிற் சேடைவைத்து உழுது வித்தி விளைத்த லும், நீர்பாய்ச்சாத செய்யை யுழுது அப்புழுதிநிலத்தில்தானே வித்திவிளைத்தலும் எனப் பயிர்விளைக்கும் வகை இருவகைப்படும். புழுதியில் வித்துப் பயிர்செய்வதைப் புழுதிக்காற்பயி ரென்பர். அப்புழுதிக்காலைப்பற்றிக் கூறுவது, இச்செய்யுள்.

எழுதொணு மறைவிளங்கும் இயலிசைநா டகம்விளங்கும்
பழுதிலா அறம்விளங்கும் பார்வேந்தர் முடிவிளங்கும்
உழுதுசால் பலபோக்கி உழவருழக் கியவெங்காற்
புழுதியால் விளையாத பொருளுளவோ புகலீரே.

(இ - ள்.) (நெல் விளையுமாறு வித்தப்படுகின்ற புழுதிக்காலி னால்), எழுத ஒணு மறை விளங்கும் - எழுதாக்கிளவியான வட மொழிவேதம் விளக்கத்தையடையும்; இயல் இசை நாடகம் விளங் கும்-இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் எனப்படுகின்ற முத்தமிழும் விளக்கத்தையடையும்; பழுது இலா அறம் விளங் கும்-குற்றமற்ற நீதிநூல்களும் விளக்கத்தையடையும்; பார் வேந் தர் முடி விளங்கும் - பூமியையாளும் மன்னவருடைய கிரீடமும் விளக்கமடையும்; பல சால் உழுது போக்கி-பலசால்கள் கலப்பை கொண்டு உழுதலைச்செய்து ஈரமில்லாமற்செய்து, உழவர்—, உழக் கிய-மடித்து மடித்து உழுத, வெம் புழுதி காலால்-விரும்பத்தக்க புழுதிக்காலில், விளையாத பொருள்—, உளவோ - உள்ளனவோ? (உள்ளதாயின்), புகலீர்-(நீங்களே) சொல்லுங்கள்; (எ - று.)

பயிர் செவ்வனே விளையாவிடின் அந்தணர் முதலியோர்க்கு உணவுப்பொருளின்மைபற்றிப் பசிமிகு மாதலால், அவ்வந்தண ரின் மறைப்பொருள் முதலியன அப்போது நடைபெருவாகும்; புழுதியிலிடப்படும் அந்தப்பயிர் விளையுமாயிலோ மறைப்பொருளை யாய்தல்முதலியன நடைபெறும்: ஆதலால், புழுதியால் மறை முதலியன விளங்குமென்ருர். பார்வேந்தர் முடிவிளங்கும்-முடி சூடி அரசர் பூமியையாட்சிபுரிவது விளக்கமுற்றுத்தோன்று மென்றபடி. புழுதிப்பயிர் விளைச்சல், கல்வி முதலியவற்றிற்குப் பரம்பரைக் காரணமாமென்றவாறு. வெம்புழுதி - காய்ந்த புழுதி யெனினும், பலசால் போக்கியுழுது-பலசாலடித்து உழுது எனினு மாம். சால்-நிலத்தை ஒருமுறையுழுகை. எவ்வளவுக்கு எவ்வளவு ஈரம் வற்றக் காய்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நிலம் பெரும் பயனை விளைக்கு மென்று கருத்துப்பட "தொடிப்புழுதிகஃசா வுணக்கின் பிடித்தெருவும்,வேண்டாது சாலப்படும்" என்று திருவள்

ளுவர் கூறியதற்கு ஏற்ப, நிலம் உழப்பெற்று நீர்வற்றக் காய்வ தனை இச்செய்யு ளுணர்த்து மெனக் கொள்வாரு முளர்.

இலா - ஈறுகெட்டஎதிர்மறைப் பெயரெச்சம். ஒணு = ஒன்று த: மரூஉவும் விகாரமும் பெற்று வந்தது. உளவோ, ஓகா ரம் - வினு. புகலீரே, ஏகாரம் - ஈற்றசை. (42)

43.—பைங்கூழ்ச்சிறப்பு.

கெட்டாரைத் தாங்குதலாற் கேடுபடாத் தொழிற்குலத்தோர்
ஒட்டாரென் றொருவரையும் வரையாத வுயர்நலத்தோர்
பட்டாங்கு பகர்ந்தோர்க்கும் பசியகலப் பைங்கூழை
நட்டாரே வையமெல்லாம் நலந்திகழ நட்டாரே.

(இ - ள்.) கெட்டாரை - (தரித்திரத்தினல் நுகரும் பொரு ளின்றி) அழிபவரை, தாங்குதலால்—, கேடு படா - அழிவுபடாத, தொழில் - உழவுத் தொழிலைக்கொண்ட, குலத்தோர் - குலத்திற் பிறந்தவரும், ஒட்டார் என்று - பகைவரென்று, ஒருவரையும் - எவரையும், வரையாத - நீக்காத, உயர் நலத்தோர் - சிறந்த குணத்தையுடையவருமான வேளாளர்,—பட்டாங்கு பகர்ந்தோர்க் கும் - உண்மையான நூல்களையே பயிலும் ஞானிகட்கும், பசி அகல - பசி நீங்கும்படி, பைங்கூழை நட்டாரே - பசுமையான பயிரை நட்டவரும், வையம் எல்லாம் நலம் திகழ நட்டாரே - பூமியிலுள்ளார் யாவர்க்கும் நன்மையை விளங்கும்படி நிலைநிறுத் தியவருமாவர்; (எ - று.)

வேளாளர் நடுதற்றொழில்செய்வது, உண்மை நூலை யோதும் பெரியோர்க்கும் மற்றுமுள்ள உலகத்தவர்க்கும் பசி தணியக் காரணமா மென்றவாறு. முன்னிரண்டடிகள் வேளாளர்க்குஉள்ள மேன்மையைத் தெரிவிக்கும். நட்டாரென்ற சொல் இரண்டனுள், முதலது 'நடு' என்ற பகுதியினடியாகப் பிறந்த இறந்தகாலவினை யாலணையும்பெய ரென்றும், இரண்டாவது - 'நள்' என்ற பகுதியி னடியாப்பிறந்த அவ்வகையானவினையாலணையும்பெய ரென்றுங் கொண்டு உரைத்தலு மொன்று. கெட்டாரைத் தாங்குவதுபற்றிப் பயிர்த்தொழிற்கு 'கேடுபடாத்தொழில்' என ஒருபெயர் கொடுத் தார்: "பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்றதும் நோக்குக. 'ஒருவகையும்' என்றும் பாடமுண்டு. (43)

44.—பயிர்க்குத் தண்ணீர் பாய்த்துதற்சிறப்பு.

கார்தாங்குங் காவேரி நதிதாங்குங் காராளர்
ஏர்தாங்கு வாரன்றி யாவரே தாங்கவல்லார்
பார்தாங்கு மன்னுயிரின் பசிதாங்கும் பைங்கூழின்
நீர்தாங்கு வாரலரோ நிலந்தாங்கு கின்றாரே.

(இ - ள்.) கார் தாங்கும் - வானினல் தாங்கப்பெற்ற [வானம் மழை பொழிவதால் விடாது பெருகிவருகின்ற], காவேரிநதி -

காவேரிநதியை, தாங்கும் - பயனுள்ளதாகச் செய்யவல்ல, ஏர் தாங்குவார்-உழவுத்தொழிலை மேற்கொண்டவரான, காராளர் - வேளாளர், பார் தாங்கும் மன் உயிரின்-உலகினால் தாங்கப்பெற்ற நிலைபெற்ற பிராணிகளின், பசி - பசியை, தாங்கும்-போக்கிப் பாது காக்க வல்ல, பைங் கூழின்-பசுமையான பயிருக்கு வேண்டிய, நீர்- நீரை, தாங்குவார் - (உரியபடி) பாய்ச்சுபவராய், நிலம் தாங்கு கின்றார் அலரோ - இந்நிலவுலகத்தையே தாங்குகின்றவர்களல் லரோ? அன்றி - அவரையல்லாமல், தாங்கவல்லார் யாவரே - (இந் நிலவுலகத்தவரைத்) தாங்கவல்லவர் யாவர்? (எ - று.)

நீர் தாங்குதல் - நீரைக்கட்டிவைத்துச் செய்க்குவேண்டிய போது பாயச்செய்தல். கார்தாங்கும் காவேரி என்பதற்கு-(மழை வறந்து போனாலும்) அம் மழைபோல நீரையுதவித் தாங்குகின்ற காவிரி என்று உரைப்பதும் உண்டு. தாங்குதலென்ற சொல் ஒரே பொருளில் பன்முறை வந்தது - **சொற்பொருட்பின்வருநிலையணி** யாம். (44)

45.—களைகளைதற்சிறப்பு.

வளைகளையும் மணிகளையும் மலர்களையும் வரும்பலவின்
சுளைகளையுங் கொடுகரைக்கே சொரிபொன்னித் திருநாடர்
விளைகளையுண் செஞ்சாலி வேரூன்றிக் கோடுகொள்ளக்
களைகளையா விடில்வேந்தர் கலிகளைய மாட்டாரே.

(இ - ள்.) வளைகளையும் - சங்குகளையும், மணிகளையும் - இரத் தினங்களையும், மலர்களையும்—, வரும் பலவின் சுளைகளையும் - தோன்றுகின்ற பலாப்பழத்தின்சுளைகளையும், கொடு - அடித்துக் கொண்டுவந்து, கரைக்கே சொரி - கரையிலே ஒதுக்குகின்ற, பொன்னி - காவேரிநதி பாயப்பெற்ற, திருநாடர் - அழகிய சோழ நாட்டை வாழிடமாகக்கொண்ட வேளாளர், விளை-தழைக்கின்ற, நளை-அழகை, உண் - (தன்னகத்தே) கொண்ட, செஞ்சாலி - செந் நெற்பயிர், வேர் ஊன்றி—, கோடு கொள்ள - கிளைபிரிந்து வள ரும்படி, களை களையாவிடில் - களை பிடுங்கி யெறியாவிட்டால், வேந்தர் - அரசர், கலி - (உலகத்துத்தோன்றும்) வறுமையை, களையமாட்டார் - போக்கும் வல்லமையுடையவராக மாட்டார்;

உழுதல் எருப்பெய்தல் களைகட்டல் நீர்கால்யாத்தல் காத்தல் என்று பயிரிடுதற்றொழிலில் ஐவகையுண்டு: இவ்வண்ணம் பயிர் செய்வதில் ஐவகைத் தொழிலுளதென்பது "ஏரினு நன்றாலெரு விடுதல் கட்டபின், நீரினு நன்றதன் காப்பு" என்ற திருக்குறளா லும், அதன் உரையாலும் நன்கு விளங்கும். (அவற்றுள் உழுத லென்பது 20-ஆவது செய்யுளாற் கூறப்பட்டது; எருப்பெய்தலைத் தெரிவிக்கும் பாடல் 24 - ஆகும். நீர்கால் யாத்தல் கீழ்ச்செய்யு ளாற் கூறப்பட்டது; களைகட்டல் இச்செய்யுளாற் கூறப்படு கின்றது; காத்தல் 50 - ஆவது செய்யுளாற் கூறப்படுமென்று அறிக). விளை களை யுண் செஞ்சாலி என்பதற்கு - விளைவை யுடைத்தாய்க் களைக்கொண்டெழுந்த செஞ்சாலி என்று உரைத் தாருமுளர். கலி - துன்பமுமாம். (45)

46.—கருப்பிடித்தற் சிறப்பு.

பயிர்க்கதிரில் பால்பிடித்தல் கருப்பிடித்தலெனப்படும்.

திருவடையும் திறலடையும் சீரடையும் செறிவடையும்
உருவடையும் உயர்வடையும் உலகெலா முயர்ந்தோங்கும்
தருஅடையும் கொடையாளர் தண்வயலிற் செஞ்சாலி
கருவடையிற் பூதலத்திற் கலியடைய மாட்டாதே.

(இ - ள்.) தரு அடையும் - கற்பகமரத்தை யொத்த, கொடை - கொடைத்தொழிலை, ஆளர் - மேற்கொண்ட வேளாளர், தண் வயலில் - குளிர்ந்த வயலிலே, செஞ்சாலி - செந்நெற்பயிர், கரு அடையின் - கருவைக் கொள்ளுமாயின்,—(யாவர்க்கும்), திரு - செல்வங்கள், அடையும் - தோன்றும், திறல் - வெற்றி, அடையும்—; சீர் அடையும் - புகழும் உண்டாம்; செறிவு அடையும் - தேகவலிமையும் உண்டாம்; உரு அடையும்-வடிவழகு உண்டாம்; உயர்வு அடையும் - மேன்மையுண்டாம்; உலகு எலாம்-உலகத் துயிர்களெல்லாம், உயர்ந்து ஓங்கும் - மேன்மைபெற்று நிற்கும்; பூதலத்தில் - இப்பூமியில், கலி - தரித்திரமென்பது, அடையமாட் டாது; (எ - று.)

பயிர் கருவையடைந்து தானியம் விளைந்தால் யாவரும் பசியாமலுண்ணலாமாகலான், அப்போது திருமுதலியன அடையுமென்றவாறு. இச்செய்யுள் ஒழித்துக்காட்டணியின்பாற் படும். பசியினால் வாடும்போது உருவமும் பொலிவழியுமாதலால், பசியின்றி வயிருரப்புசிக்கும் பருவத்து 'உருவடையும்' என்றாரென்க. தரு - தற்சமவடசொல்; மரப்பொதுப்பெயராகிய இது, சிறப்பாய்த் தேவதருவெனப்படுங் கற்பகதருவை யுணர்த்திற்று. (46)

47.—ஈற்றேறுஞ் சிறப்பு.

பயிர்க்கதிரிற் பிடித்த கரு பாலானநிலைமாறி அரிசிவடிவத்தையடையுமாறு முதிர்ந்துவருதல், ஈற்றேறுதலெனப்படும். ஈற்று - ஈன் என்ற பகுதியினடியாப் பிறந்த தொழிற்பெயர்.

ஏற்றேறு மரன்சிறப்புக் கெழிலேறு மகத்தழல்கள்
மாற்றேறு மரசர்முடி வளர்ந்தேறும் வளமைமிகும்
ஊற்றேறுங் குலப்பொன்னி யுறைநாட ரிடுஞ்சாலி
ஈற்றேறும் போதுகலி யீடேற மாட்டாதே.

(இ - ள்.) ஊற்று ஏறும் - ஊற்றுத் தோன்றப்பெற்ற, குலம் - சிறந்த, பொன்னி - காவேரிநதி, உறை - (பாய்ந்து) தங்கப் பெற்ற, நாடர் - சோணாட்டு வேளாளர், இடும் - பயிரிட்ட, சாலி - செந்நெல், ஈற்று ஏறும்போது - ஈற்றேறுகையில்,—ஏறு ஏறும் அரன்-இடபத்தை வாகனமாகக்கொண்டு ஏறிநடத்துகின்ற சிவபெருமானுடைய, சிறப்புக்கு - திருவிழாவுக்கு, எழில் - அழகானது, ஏறும்—; [சிவபெருமானது உத்ஸவங்கள் சீராக நடைபெறு

மென்றபடி]; மகத்து அழல்கள் - (அந்தணர்கள்செய்யும்) வேள்வித் தீக்கள், மாற்று ஏறும் - மேன்மைபெற்று நிற்கும்: அரசர் முடி - அரசர்களின் அரசாட்சி, வளர்ந்து ஏறும் - சிறப்புற்று நடைபெறும்; வளமை மிகும் - (இவ்வுலகத்தில்) செழிப்பு மிகும்; கலி - வறுமையோ, ஈடு ஏறமாட்டாது - நிலைபெற்றிராது [தொலைந்துவிடும்]; (எ - று.)

தேவர் மானுடர் என்ற யாவரும் மேன்மைபெற்று விளங்குவது, பயிர் ஈற்றேறினல்தான் என்பது கருத்து. மகம் - யாகம்; வடசொல்.மகம் தழல்கள் என்றும் பிரிக்கலாம். காருகபத்தியம் ஆகவநீயம் தட்சிணாக்கினிஎன வைதிகாக்கினி மூவகைப் படுதலால், 'அழல்கள்' என்றது. ஈற்றேறும்போது அரன் சிறப்புக்காக [விசேஷ உத்ஸவத்திற்காக] வளர்க்கப்படுகின்ற எழிலேறுகின்ற மகத்தழல்கள் மாற்றேறும்; அரசர் முடியானது வளர்ந்தேறும் எனக் கூறினுமாம். 'வளமைமிகும்' என்ற தொடரை ஊற்றுக்கு விசேஷணமாக்கியுரைக்கவுமாம். அரன் = ஹரன்: அழித்தற் கடவுள். (47)

48.—பசுங்கதிர்ச் சிறப்பு.

முதிராத பருவத்தும் முற்றியநற் பருவத்தும்
கதிராகி யுயிர்வளர்ப்ப திவர்வளர்க்குங் கதிரன்றே
எதிராக வருகின்ற எரிகதிருங் குளிர்கதிரும்
கதிராகி உயிர்வளர்ப்ப துண்டாயிற் காட்டீரே.

(இ - ள்.) முதிராத பருவத்தும் - வயசுமுற்றாத காலத்திலும் [இளமைப்பருவத்திலும்], முற்றிய நல் பருவத்தும் - வயசு முதிர்ந்த முதுமைப்பருவத்தும், உயிர் - பிராணிகளை, கதிர் ஆகி வளர்ப்பது - கதிரென்று சொல்லப்படுவதாகி வளரச்செய்வது, இவர் - இவ்வேளாளர், வளர்க்கும் - வளரச்செய்கின்ற, கதிர் அன்றே -கதிரல்லவா? எதிர் ஆக - (கண்ணுக்குத்தோன்றுமாறு) பிரதியட்சமாக, வருகின்ற - (ஆகாயத்திலே) சஞ்சரிக்கின்ற, எரிகதிரும்-எரிக்குந்தன்மையுள்ள சூரியனும், குளிர் கதிரும்-குளிர்ந்த கிரணங்களைக்கொண்ட சந்திரனும், கதிர் ஆகி - கதிரென்றுசொல்லப்பட்டு, உயிர் - பிராணிகளை, வளர்ப்பது—, உண்டாயின்—, காட்டீர் - (உலகத்தவரே! நீங்களே) காட்டுங்கள்; (எ - று.)

தன்னுடைய உதயாஸ்தமனங்களாற் பகலிரவையுண்டாக்கி வெம்மையும் குளிர்ச்சியும் தந்து உலகத்தைச் சூரியசந்திரர் காக்கின்றன ரென்று சிலர் கூறுகின்றனரே; அத்தேவர்களின் கதிர்கள் சாலிக்கதிர்போல உலகத்துயிர்களைத் தாமே நேரே பாதுகாக்கின்றனவா? நீங்களே நிரூபித்துக் காட்டுங்களென்று வினவுகின்றன ரென்க. இதனாற் சூரியசந்திரர்களின் கதிர்களினும் நேரே உலகத்துயிர்களைத் தாங்குந் தன்மையுள்ளதெனச் சாலிக்கதிரின் மேன்மையைக் கூறினர். பிராணிகளை எந்நிலையிலுங் காப்பது சாலிக்கதிரென்பது, முன்னிரண்டடிகளிற் கூறிய பொருள். எரிகதிர், குளிர்கதிர் - பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைகளாகிச் சூரிய சந்திரரைக் காட்டின. (48)

49.—நெற்குலை வளைதற்சிறப்பு.

அலைவளையும் புவிவேந்தர் அங்கையிற்றங் கியவீரச்
சிலைவளையு மதன்கருப்புச் சிலைவளையுங் கொடுங்கலியின்
தலைவளையுங் காராளர் தண்வயலிற் செஞ்சாலிக்
குலைவளையும் பொழுதினிற்செங் கோல்வளைய மாட்டாதே.

(இ - ள்.) காராளர் - வேளாளர் பயிர்செய்த, தண் வயலில்-குளிர்ந்த வயலிலே, செஞ்சாலி - செந்நெற்பயிரின், குலை - கதிர்க் குலையானது, (நன்குமுதிர்ந்து), வளையும் பொழுதினில்-தலைமடங்கி விழும்பொழுது,—அலை வளையும் புவி வேந்தர் - கடலாற் சூழப் பட்ட பூமிக்குத் தலைவரான அரசர்களுடைய, அம் கையில் - அழகிய கையிலே, தங்கிய - தங்கியுள்ள, வீரம் சிலை - வீரத்தைக் காட்டக்கூடிய வில்லானது, வளையும்-(மாற்றாரோடு பொருமாறு) வளைந்து நிற்கும்; மதன் - மன்மதனுடைய, கரும்பு சிலை - கரும்பு வில்லும், வளையும்—; கொடு கலியின் - கொடுமையான தரித்திரத் தின், தலை - தலைமை, வளையும் - குலையும்; (ஆனால்), செங்கோல் - (அரசருடைய) செங்கோல்மாத்திரம், வளையமாட்டாது - வளைந் திராமல் நிமிர்ந்து நிற்கும்; (எ - று.)

நெற்பயிர் விளைந்து கதிர்க்குலை தலைசாய்ந்து அறுப்புக்கு ஏற்றதாகி விடுமானால், அப்போது செங்கோல் நன்கு நிலைபெறும்; அரசர் தம்மாற்றாரோடு பொருமாறு வில்லை வளைத்துச்செல்லுவர்: மன்மதன் ஆண் பெண்கட்கு இச்சைபிறக்கும்படி தன் வில்லிற் புஷ்பபாணங்களைத் தொடுத்து எய்வனென்றவாறு. வளைதற் றொழிலைச் செங்கோலில் மறுத்து வீரச்சிலை முதலியவற்றில் ஏற்றிக்கூறியது, **ஒழித்துக்காட்டணி**யின்பாற்படும். பயிர் விளையா விடின் **உணவின்றி**வருந்தும் மன்னவர்க்குப் போர்செய்யும் வல்லமையின்றா மாகையாலும், பசியால் வாடும்பொழுது இன் பத்தை யனுபவிக்கவேணுமென்ற கருத்தே ஆண்பெண்கட்குப் பிறவா தாதலாலும், உலகத்துயிர்கள் உணவுப்பொருளின்றிப் பசிக்கொடுமையால் வருந்துமாதலாலும், செங்கோல்வளைய, வீரச் சிலையும் மதனன் கருப்புச்சிலையும் கொடுங்கலியின் தலையும் வளையா வென்க.

உருவிலியான மன்மதன் தன்னுடைய கரும்புவில்லில் தாமரை அசோகு முதலிய மலர்களை அம்புகளாகக்கொண்டு தொடுத்து ஆண் பெண்களில் ஒருவர்மீது ஒருவர்க்குக் காதல் தோன்றுமாறு செய்வ னென்பது நூற்கொள்கை. மதன் - மதநன் என்ற வட சொல்லின் விகாரம்; இனி மதமென்ற வடமொழியினடியாகப் பிறந்த தமிழ்மொழி யெனக்கொண்டு, மதத்தையுண்டாக்குபவன் என்று காரணப்பொருளுரைத்தலும் ஒன்று. அலை-கடலுக்கு இலக்கணை. கரும்பு+சிலை=கருப்புச்சிலை; "மென்றொடர்மொழி யுட் சிலவேற்றுமையில், தம்மினவன்றொடர்" என்பது விதி. (49)

50.—சேவல்காத்தற் சிறப்பு.

விளைந்தபயிர்க்குக் கள்வர் விலங்கு புள் முதலியவற்றால் அழிவு நேராமற் பாதுகாத்தல், சேவல்காத்த லெனப்படும்.

அறங்காணும் புகழ்காணும் அருமறையின் ஆகமத்தின்
திறங்காணும் செயங்காணும் திருவளர்க்கு நிதிகாணும்
மறங்காணுங் கருங்கலியின் வலிதொலைத்த காராளர்
புறங்காணுஞ் சோறிட்டுப் புறங்காணப் புகுந்திடினே.

(இ - ள்.) மறம் காணும் கரு கலியின் வலி தொலைத்த - தீவினையை வளர்க்கின்ற மிக்க வறுமையின் வலியை யொடுக்கிய [வறுமையைப்போக்கின], காரரளர் - வேளாளர், புறம் காணும் சோறு இட்டு - உடலை வளர்க்கின்ற சோற்றினை(த் தம் ஏவலாளர்க்கு)ப்பரிமாறி, புறங்காண - (விளைவைக்கவர வரும் கள்வர் விலங்கு புள் முதலியவைகளை) ஓட்டும்படி (சேவல்காக்க), புகுந்திடின் - தொடங்கினாரானால்,—(அப்போது), அறம் காணும் - தருமமும் விளக்கமடையும்; புகழ் காணும் - புகழும் விளங்கும்; அரு மறையின் ஆகமத்தின் திறம் - உணர்தற்கரியவேதம் ஆகமம் என்ற இவற்றின் பொருட் கூறுபாடும்,காணும்—; செயம் காணும் - வெற்றியு முண்டாம்; திரு வளர்க்கும் நிதி காணும் - அழகை வளர்க்கின்ற செல்வமும் உண்டாகும்; (எ - று.)

பயிரைச் சேவல்காத்தலால், அறம் முதலியன தோன்றுமென்க. மறையாகமத்தின் திறமாவன-ஜீவ பரமாத்துமாக்களின் தன்மை முதலியன. திரு - பலவகையான செல்வம் என்று கூறுவாருமுளர். கருங்கலி-அறிவை யிழக்கச்செய்யும் வறுமை யெனினுமாம். மறம் - அறத்திற்கு மறுதலையானது. புரமென்ற வடசொல், புறமெனத் திரிந்து வந்தது. புறங்காணுதல் - தமது காவல்வன்மையால் முதுகுகாட்டி யோடச்செய்தல். "ஏரினு நன்றாலெருவிடுதல்கட்டபின், நீரினும்நன்றதன் காப்பு" என்றார், திருவள்ளுவ நாயனாரும். காராளர்க்கு ஏவலாளர் உண்டென்பதைக் கீழ் 59 - ஆஞ் செய்யுளினா லுணரலாம். (50)

51.—அரிகதிர்வழங்குஞ் சிறப்பு.

அரிகதிர் - நெற்கதிர்; கைப்பிடிக்கதிர். இதனை வறியவர்க்கு வழங்குஞ் சிறப்புக் கூறுவது, இது.

அரிவுண்ட பொற்கதிரை நெற்கதிர்நே ராதுலர்க்குப்
பரிவுண்ட பெருவார்த்தை புதிதன்று பழைமைத்தே
விரிவுண்ட கடற்படியு மேகங்கண் மறுத்தாலுந்
திரிவுண்டோ காராளர் செயலினுக்குச் செப்பீரே.

(இ - ள்.) 'ஆதுலர்க்கு-வறியவர்க்கு, (கொடுத்த) நெற்கதிர் - அரிந்த நெல்லின் கதிர், அரிவு உண்ட பொன் கதிரை நேர்-அறுத்துச்செய்யப்பட்ட தங்கக் கதிருக்குச் சமானம்', [என்ற] பரிவு உண்ட பெரு வார்த்தை - அன்புகனிந்த பெருமைமொழி, புதிது அன்று - புதிதாக வழங்கப்பட்டதொன்றன்று; பழைமைத்தே -

பழமொழியானதே; [இங்ஙனிருப்பதால்], விரிவு உண்ட கடல் படியும் மேகங்கள் மறுத்தாலும் - விரிந்த கடலிற் படிந்து [நீர் முகந்து மேலெழும்] மேகங்கள் மழையைப்பொழிய [ஒருகால்] மறுத்தாலும், காராளர் செயலின்கண் திரிவு உண்டோ-வேளாளர்களின் உபகாரச்செயலினுக்கு மாறுபாடும் உண்டோ; செப்பீரே - (நீங்களே) சொல்லுங்கள்; (எ - று.)

'நெல்லுக்குப் பொன் [நேர்]' என்பது தொன்றுதொட்டுவந்ததோர் மொழியாகும் என்றபடி. மேகம் கண் மறுத்தாலும் எனப் பிரிப்பினுமாம். கண் மறுத்தல் - நிலைகெடுதல். கைம்மாறு கருதாது மழைபொழியும் மேகம் மறுத்தாலும் காராளர் செயலில் திரியமாட்டார் என அவர் சிறப்புக் கிளந்தபடி. மறுத்தாலும் என்றவிடத்து, உம்மை - எதிர்மறை. வறியார்க்கொன்றீவதே ஈகையாதலின், பொற்கதிர்க்கொப்பான நெற்கதிரை ஆதுலர்க்கு ஈவதில் அன்னார் திரிவுபடார் எனப் பொருத்தம் காண்க. அரிவு - அரிதல்; தொழிற்பெயர். அரிவுண்ட பொற்கதிர் - தங்க ரேக்கு போன்றது. (51)

52.—அரிசூட்டின் சிறப்பு.

அறுப்பறுத்த நெல்லரிக்கட்டு அரிசூடு எனப்படும். அரிசூடு - வினைத்தொகை. அரிசூடு = அரிக்கட்டு.

> **கோடுவரம் பிடையுலவுங் குலப்பொன்னித் திருநாடர்**
> **நீடுபெரும் புகழ்வளரு நிலமடந்தை திருமக்கள்**
> **பீடுவரம் பிடைவயலிற் பிறைவாளிற் றடிகின்ற**
> **சூடுவரம் பேருதேற் சுருதிவரம் பேருதே.**

(இ - ள்.) கோடு-சங்குகள், வரம்பிடை-கரையோரங்களிலே, உலவும் - உலாவுகின்ற, குலம் பொன்னி - சிறந்த காவேரிநதி பாயப்பெற்ற, திரு நாடர்-அழகியசோணாட்டில் வாழுமவர்களாய், நீடு பெரும் புகழ் வளரும் - (தமது நற்குணச்சிறப்பால்) மிக்க பெரும்புகழ் (நாடோறும்) ஓங்கப்பெற்ற, நில மடந்தை திரு மக்கள் - பூமிதேவியாரின் சிறந்த மக்களான வேளாளர், பீடு வரம்பு இடை வயலில்-பெருமைபெற்ற வரப்பை இடையிடையே கொண்ட கழனிகளில், பிறை வாளில் தடிகின்ற - பிறை வடிவாயுள்ள வாளினு லறுத்துச் சேர்க்கப்பட்ட, சூடு - அரிச்சூடானது, வரம்பு ஏருது ஏல் - வரம்பினின்று (களத்திற்குப்) போய்ச்சேராதாயின், சுருதி வரம்பு - வேதம் விதிக்கின்ற ஒழுக்கத்தின் எல்லையும், ஏருது - இவ்வுலகத்திற் செல்லாது; (எ - று.)

அரிசூடு வரம்பினின்று ஏருவிடின் உண்ணவுணவின்மையால் மானுடர் வேதவிதிக்குக் கட்டுப்பட்டு நடவாமல் தீயவழியினும் உணவைத் தேடமுயல்வ ரென்றவாறு. வரம்பேருதேல் என்பதற்கு-நெற்களத்தெல்லையிற் செல்லாதாயின் எனினுமாம். நீடு பெரும் - ஒருபொருட்பன்மொழி: மீமிசைச்சொல் எனப்படும். திருநாடராகிய திருமக்க ளென்க. சூடு என்பது - அறுத்த நெற்கதிரின்கற்றை: சூடப்படுவதுபற்றி, இதற்கு இப்பெயர் வந்தது:

செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட்ட பெயர்: சூடுதல் - மிகச்சிறந்ததாகக் கொள்ளப்படுதல். பிறைவாள் - உவமைத் தொகை. தடிகின்ற - தடியப்படுகின்ற: செயப்பாட்டுவினைப் பொருளில்வந்த செய்வினை. (52)

53.—களஞ்செய்தற் சிறப்பு.

அரிந்த நெல்லரிக்கட்டுக்களை யிடுதல் முதலியன செய்யுங் களமாக நிலப்பகுதியைச் செப்பனிடுதல், களஞ்செய்த லெனப் படும்.

சீரான விறல்வேந்தர் செருவிளைத்துச் செல்லுவதும்
பேரான மனுநீதி பிறழாது விளங்குவதும்
நீராலே செஞ்சாலி விளைவித்து நெறிநடத்துங்
காராளர் விளைவயலிற் களம்பண்ணும் பொருட்டாலே.

(இ - ள்.) சீர் ஆன - சிறப்புப் பொருந்திய, விறல் வேந்தர்- வெற்றி பெற்ற அரசர், செரு விளைத்து செல்லுவதும் - போரினை யுண்டாக்கி(ப் பகைவர்மீது படையெடுத்து)ச் செல்லுவதும், பேர் ஆன மனு நீதி பிறழாது விளங்குவதும் - பெருமை பொருந்திய மநுதருமசாஸ்திரத்திற் கூறிய ஒழுக்கம் (தவறாமல் செங்கோலைச் செலுத்திக்கொண்டு) விளங்குவதும், (எதனாலென்றால்),—செஞ் சாலி - செவ்விய செந்நெற்பயிரை, நீராலே விளைவித்து - நீரைப் பாய்ச்சி விளையச்செய்து, நெறி நடத்தும் - (தமது) குலவொழுக் கத்தைத் தவறாது நடத்துகின்ற, காராளர் - வேளாளர், விளை - விளையச்செய்கின்ற, வயலில் - வயலினிடத்து, களம் பண்ணும் பொருட்டாலே - களத்தை யமைக்குந் தன்மையினாலேயே யாகும்; (எ - று.)

மனு - கர்த்தாவாகுபெயராய், மனுவினாற் செய்யப்பட்ட நீதி நூலினை யுணர்த்தும். விளைவயல் - வினைத்தொகை. நீதி - தற்சம வடசொல். களம் - வடசொற்சிதைவு. (53)

54.—படுசூட்டின் சிறப்பு.

சூட்டை ஒன்றன்மேலொன்றாகப் படுப்பது படுசூடு எனப் படும்: படுத்தல் - அடுக்குதல்.

கடிசூட்டு மலர்வாளிக் காமனடல் சூடுவதும்
கொடிசூட்டு மணிமாடக் கோபுரம்பொன் சூடுவதும்
முடிசூட்டி வயவேந்தர் மூவுலகும் இறைஞ்சுபுகழ்
படிசூட்டி யிருப்பதெல்லாம் படுசூட்டின் வலியாலே.

(இ - ள்.) கடி சூட்டும் மலர் வாளி - நறுமணம் பொருந்திய (தாமரைமுதலிய) ஐந்து மலர்களை(த் தனது) பாணமாகக்கொண்ட, காமன் - மன்மதன், அடல் சூடுவதும் - (தான்) வலிமைகொண்டு விளங்குவதும், கொடி சூட்டும் மணி மாடம் கோபுரம் - துவசங் கட்டி யலங்கரிக்கப்படுகின்ற அழகிய மாடங்களும் கோபுரங் களும், பொன் சூடுவதும் - பொன்னை யணிவதும், வய வேந்தர் -

வெற்றிபெற்ற அரசர், படி - இவ்வுலகில், முடி சூட்டி - கிரீடமணிந்து, மூ உலகும் இறைஞ்சு - மூவுலகத்தாரும் வணங்குதலினாலான, புகழ் - புகழை, சூட்டி இருப்பது (உம்)-தாங்கியிருப்பதும், எல்லாம் - (ஆகிய)யாவும், படு சூட்டின் - அடுக்கிய நெல்லரிக் கட்டினால் தோன்றிய, வலியாலே - வலிமையினாலேயே யாகும்;

அடல் என்பதை ஆகுபெயராக்கி, வெற்றிமாலை யென்பாருமுளர். பொன்சூடுதல் = பொன்னாலாகிய சிகரகலசங்களைப் பெற்றிருத்தல்: அலங்காரமுறுத்தலுமாம். சூட்டியிருப்பது = சூடியிருப்பது; தன்வினைப்பொருளில் வந்த பிறவினை; இனி, அரசர்க்கு முடியைச்சூடுதல் பிறர்செய லாதலால் பிறவினை கூறியதெனினுமமையும். மூவுலகு மிறைஞ்சுபுகழ் என்பதை படி என்பதற்கு அடைமொழியாக்கி, மூவுலகத்தாரும் வணங்குகின்ற புகழைப் பொருந்திய இப்பூமியை, சூட்டியிருப்பதும்-தமக்கு உரிமையாக்கிக் கொண்டு ஆள்வதும் என்று உரைத்தாருமுளர்: அங்ஙனம் பொருள்கூறின், 'புகழ்' என்பது, இரண்டாம் வேற்றுமையுருபும் பயனு முடன்றொக்கதொகையாதலால் புகழ்ப்படி என்று இரட்டித்து வரவேண்டு மென்க. இப்பொருளில், மூவுலகும் இறைஞ்சு புகழ் என்று படிக்கு அடைமொழிகொடுத்தது, இம்மை மறுமை வீடு என்பவற்றைப் பெறுதற்கு இந்நிலனே இடமாமாதல்பற்றி, மூவுலகத்தவரும் இப்பூமியைப் புகழ்வ ரென்பதனால். (54)

55.—அரிமிதிகோலின் சிறப்பு.

களத்திற்சேர்த்த நெல்லரிக்கட்டை அவிழ்த்துக் கைகொண்ட அளவாகஎடுத்து ஈரடியடித்துப்போட்டுப் பின்னும் அதில் ஒட்டியிருக்கும்நெல் வெளிப்படும்படி தடியா லடிப்பதுண்டு: அங்ஙனம் அடிக்குங்கோல் அரிமிதிகோ லெனப்படு மென்பர்.

முருட்டின்மிகு வெம்பகைவர் முரண்கெடுத்திவ் வுலகமெல்லாம்
தெருட்டிநெறி செல்கின்ற செங்கோன்மை செலுத்துங்கோல்
வெருட்டிமிகுங் கருங்கலியை வேரோடும் அகற்றுங்கோல்
சுருட்டிமிகத் தடிந்துசெந்நெற் சூடுமிதித் திடுங்கோலே.

(இ - ள்.) முருட்டின் மிகு - மூர்க்கத்தனத்தால் மிக்குள்ள, வெம் பகைவர்-கொடிய பகைவர்களின், முரண் - மாறுபாட்டை, கெடுத்து-போக்கி,—இ உலகம் எல்லாம் தெருட்டி-(யாதோரிடையூறும் தோன்றாதவாறு) இவ்வுலகத்தாரை(ப் பாதுகாத்தலாற்) சமாதானமுண்டாகச் செய்து, நெறி செல்கின்ற - தருமவழியே நடக்கின்ற, செங்கோன்மை-செங்கோலை, செலுத்தும்-நடத்துவிக்கின்ற, கோல்-கோலாவதும்,—மிகும்-(துன்பந்தருதலால்) மிக்குத் தோன்றுகின்ற, கருங் கலியை-கொடியதரித்திரத்தை, வெருட்டி - அச்சமுறுத்தி, வேரோடும் அகற்றும்-வேரோடும் போக்குகின்ற, கோல்-கோலாவதும்,-(யாதெனின்),-செந்நெல் சூடு-செந்நெல்லின் சூட்டினை, சுருட்டி - புரட்டி, மிக தடிந்து - மிகவும் அடித்து, மிதித்திடும் - (செந்நெல்லும் வைக்கோலும்பிரியத்) துகைக்கின்ற, கோலே - கோலேயாகும்: (எ - று.

நெல்லரியைப் புரட்டி அடித்துத் துகைக்குமாறு உதவுகின்ற தடிக்கோல், அரசரைச் செங்கோலைச் செலுத்துமாறுசெய்து, உலகோரின் வறுமையைப் போக்கக் கருவியாயுள்ள தென்பதாம். அகற்றும், சுருட்டி - அகலும், சுருண்டு என்பவற்றின் பிற வினைகள். (55)

56.—போர்செய்நற் சிறப்பு.

நெல்லுடன்கூடிய வைக்கோலைப் போராக்குவதின் சிறப்பைக் கூறுவது.

காராளுங் கரியினமும் பரியினமுங் கைவகுத்துப்
போராளு முடிவேந்தர் போர்க்கோல மெந்நாளுஞ்
சீராளுஞ் செழும்பொன்னித் திருநாடர் புகழ்விளக்கும்
ஏராளுங் காராளர் இவர்செய்யும் போராலே.

(இ - ள்.) செழு பொன்னி திருநாடர்-வளப்பமுள்ள காவிரி நதி பாயப்பெற்ற அழகிய சோணாட்டினரான, புகழ் விளக்கும் ஏர் ஆளும் காராளர் இவர் - புகழைத் தோன்றச்செய்கின்ற ஏரைக்கையாள்கின்றவேளாளரென்ற இவர், செய்யும்-செய்கின்ற, போராலே - நெற்போரினால்,—கார் ஆளும் கரி இனம் உம் - மேகத்தையொத்த யானைகளின் கூட்டத்தையும், பரி இனம் உம்- குதிரைகளின் கூட்டத்தையும், கைவகுத்து-அணிவகுத்து, போர் ஆளும்-போரைச் செய்கின்ற, முடி வேந்தர் - கிரீடாதிபதிகளான அரசர் (கொள்கின்ற), போர்க்கோலம் - போர்க்கோலமானது, எந்நாளும் - எப்போதும், சீர் ஆளும் - மேன்மைபெறும்; (எ-று.)

ஏருக்கு விளங்கும் புகழாவது - பொய்யாத செல்வத்தை விளைத்தலாலாகிய புகழென்க: இத்தொடரைக் காராளர்க்கு அடைமொழியாக்கினுமாம். சீராளும் என்பதைப் பொன்னிக்கு அடைமொழியாக்கொண்டு, போர்க்கோலம் புகழ்விளக்கும் என்று முற்றுக்கொண்டுரைப்பினுமாம். கார் ஆளும், ஆளும் - உவம வுருபு. (56)

57.—போர்க்களம் பாடுதற் சிறப்பு.

வளம்பாடுங் குடைமன்னர் மதயானை படப்பொருத
களம்பாடும் பெருஞ்செல்வங் காசினியிற் சிறந்தன்று
தளம்பாடுந் தாரகலத் தாடாளர் தம்முடைய
களம்பாடும் பெருஞ்செல்வங் காசினியிற் சிறந்ததே.

(இ - ள்.) வளம் பாடும் குடை மன்னர் - வள்ளற்றன்மையைக் குறித்து (ப் புலவர்களாற்) பாடப்பெற்ற நல்லரசாட்சியைப் பூண்ட அரசர்கள், மதம் யானை பட பொருத- மதயானை இறந்து விழும்படி போர்புரிந்த, களம்-போர்க்களத்தை, பாடும் - பாடுவதனாற்பெறுகின்ற, பெருஞ் செல்வம் - மிக்க செல்வமானது, காசினியில்-இவ்வுலகிலே, சிறந்தன்று - சிறந்ததாகாது; (பின்னை எது சிறந்த செல்வ மாகுமெனின்?—), தளம் - இதழ்களிலே, பாடும் - (வண்டுகள்) ஒலிக்கப்பெற்ற, தார் - (குவளை) மலர்

மாலையையணிந்த, அகலம்-மார்பையுடைய, தாடாளர் தம்முடைய-முயற்சியையெப்போதுங் கைக்கொண்டிருப்பவரான வேளாளர்களுடைய, களம் - நெற்போர்க்களத்தை, பாடும் - பாடுவதனாற் பெறுகின்ற, பெருஞ் செல்வம் - மிக்க செல்வமானது, காசினியில்-இந்நிலவுலகத்தில், சிறந்தது - சிறந்ததாகும்; (எ - று.)

யுத்தகளத்தைக் குறித்துப் பாடும் பாடல் அமங்கலத்தைக் குறிப்பதாதலாலும் அதனாற் பெறும் பொருட்செல்வம் நேரே உணவிற்கு உதவாமையாலும், அச்செல்வம், மங்கலங்குறித்துப் பாடுவதும் நேரே உணவிற்கு உதவுவதுமாகிய ஏர்க்களம் பாடிப் பெறுகின்ற பெருஞ்செல்வம் போலாது என்றார்: ஏர்க்களம் பாடிப் பெறுஞ்செல்வம் - விளைந்த நெல்லின் வடிவமான செல்வம். சிறந்தன்று - சிறந்ததன்று என்பதன் விகாரம். பாடப்படுகின்ற போர்க்களச்சிறப்பையும் ஏர்க்களச்சிறப்பையுமே பாடும் பெருஞ்செல்வமென்னு ரென்றலும் ஒன்று. தாளாளர் என்ற சொல்லில், ளகரத்துக்கு டகரம் போலியாகி, 'தாடாளர்' என வந்தது. (57)

58.—போர்க்களச் சிறப்பு.

நெல்லுடன்கூடிய வைக்கோலைப் போராகப்போட்டிருக்குங் களத்தின்சிறப்பு இதனாற் கூறப்படுகின்றது.

பார்வேந்தர் பெருஞ்செல்வம் பழுதுபடா தொருநாளும்
ஏர்வேந்தர் பெருஞ்செல்வம் அழிவுபடா திருத்தலினால்
தேர்வேந்தர் போர்க்களத்துச் சிலர்வெல்வர் சிலர்தோற்பர்
ஏர்வேந்தர் போர்க்களத்துள் இரப்பவருந் தோலாரே.

(இ - ள்.) ஏர் வேந்தர் பெருஞ் செல்வம் - ஏரைக்கொண்டு தொழில் புரியுந்தலைவராகிய வேளாளரின் பெருஞ்செல்வமாகிய நெல், அழிவுபடாது இருத்தலினால்-கேடடையாமல் மிகுதியாகத் தோன்றியிருப்பதனால்தான், - பார் வேந்தர் பெருஞ் செல்வம் - பூமியைக்காக்கும் மன்னவரின் மிக்க செல்வமானது, ஒருநாளும் - எப்போதும், பழுதுபடாது - தாழ்வுறாமலுள்ளது; (அன்றியும்), தேர் வேந்தர் போர்க்களத்து - இரதாதிபதிகளான மன்னவரின் போர்க்களத்திலே (செல்பவர்களில்), சிலர் வெல்வர் சிலர் தோற்பர் - சிலர்வெல்லச் சிலர்தோற்பர்: ஏர் வேந்தர் போர்க்களத்துள் - வேளாளரின் போர்க்களத்திலோ; இரப்பவரும் - பிச்சையெடுப்பவரும், தோலார் - தோல்வியை யடையமாட்டார்;

போர்க்களம் - பொருதல்தொழில்செய்யும் ரணகளம் நெற்போர்க்களம் என்ற இரண்டுபொருளை யுடையது. இச்செய்யுளின், பின்னிரண்டடிகள் - தேர்வேந்தர் போர்க்களத்திலும் ஏர்வேந்தர் போர்க்களத்துக்குள்ள சிறப்பைத் தெரிவிக்கும். தேர் வேந்தரின் போர்க்களத்திற்செல்வார்க்கோ வெற்றிதோல்விகள் ஒருதலையல்ல; ஏர் வேந்தரின் போர்க்களத்தில் இரப்போர் சென்றாலும் தோல்வியுறாரென, ஏர்வேந்தரின் போர்க்களத்துக்குச் சிறப்புக் கூறினார்; வேற்றுமையணி. இரப்பவர் தாம் வேண்டும் தானியப் பொருளை வேளாளரிடத்தினின்றும் பெறுவ ரென்பது, 'ஏர்வேந்தர்போர்க்களத்துள் இரப்பவருந் தோலார்' என்றதன் கருத்து. 0

59.—போர்செய்வோர் நெல்லரிவாரை விளித்தற் சிறப்பு.

நாவலோ நாவலென நாடறிய முறையிட்ட
ஏவலோர் போர்க்களத்தில் எதிர்நிற்பர் முத்தமிழ்தேர்
பாவலோ ரிசைவல்லோர் பற்றுடைய பதினெண்மர்
காவலோ ரெல்லாருங் கையேற்கும் பொருட்டாலே.

(இ - ள்.) நாவலோ நாவல் என - நாவலோ நாவலெனச் சொல்லி, நாடு அறிய - நாட்டிலுள்ளார் (யாவரும்) உணரும்படி, முறையிட்ட - உரத்துக்கூப்பிட்ட, ஏவலோர் - பணியாளரோடு கூடிய, போர்க்களத்தில் - நெற்போர்க்களத்திலே,—முத்தமிழ் தேர் பாவலோர்-(இயல் இசை நாடகம் என்னும்) மூன்று தமிழையும் உணர்ந்த கவிவாணரும், இசை வல்லோர் - சங்கீதம் வல்லவர்களும், பற்று உடைய - அன்பைக்கொண்டுள்ள, பதினெண்மர் - பதினெண்குடிமக்களும், காவலோர் - அரசர்களும், எல்லாரும் - ஆகிய யாவரும், கையேற்கும் பொருட்டால் - (அவ்வேளாளர் தருவதைத் தாம்) பெறும்பொருட்டு, எதிர் - (அவ்வேளாளரின்) முன்னே, நிற்பர் - வந்து நிற்பார்கள்; (எ - று.)

நாவலோ நாவலென்பது - தமதுபயிர் விளைந்து முற்றவும் நெற்போரிடும்படியாயிற்றென்ற மகிழ்ச்சிக்குறிதோன்றப் பணியாளர் கூலிகொள்வோரை விளிக்குங் குறிப்பு. உழுநர் இங்ஙனங் கூவுவ ரென்பதை, "காவலுழவர் களத்தகத்துப்போரேறி, நாவலோஓ வென்றழைக்கும் நாளோதை - காவலன்றன், கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே, நல்யானைகோக் கிள்ளிநாடு" என்ற விடத்துங் காண்க. பணியாளர் போரிட்ட பின்பு, கூலிக்காரரை விளிக்க, தமிழுணர்ந்தோர் முதலியோர் பரிசு இறை என்பனவற்றைக் கையேற்றுப்பெறுமாறு அவ் வேளாளரின் எதிரேவந்து நிற்ப ரென்றவாறு. பதினெண் குடிமக்களாவார் - நாவிதன், குயவன், வண்ணான், ஓச்சன், ஐவகைக் கம்மாளா, மூவகை வாணியர், மாலைகாரர், பாணன், பள்ளி, வலையன், ஊரானைமேய்க்கும் இடையன், கட்டியங்காரன் என்னும் இவர் என்பர். காவலோர் பெறுவது வரியேயாயினும் அவ்விறையைப் பெறும்போது கையேற்க வேண்டியிருத்தலால், அவரையும் கவிவாணர் முதலானாரோடு சேர்த்துக் கூறினார். இசைவல்லோர் என்பதற்கு - இசையை [புகழை]ப் பாடுபவரான வந்தியர் மாகதர் எனக் கொள்வாரு முளர். பற்றுடைய பதினெண்மர் என்றது - இப்பதினெண் குடிமக்களும் உழவுத்தொழிலைச்செய்கின்ற வேளாளரைக் கிட்டிக் களப்பலியேற்று உண்ணுதலையே முக்கியமாகக் கொண்டவ ராதலின், அன்னார் இந்தவேளாளரிடத்து அன்புடையராயிருப்ப ரென்பது கருதியாம். (59)

60.—போர்ப்படுத்தற் சிறப்பு.

நெல்லரியைக் கைகொண்ட அளவாக எடுத்து ஈரடியடித்துப் போட்டுப் பின் தடியாலும் அடித்துப் போராகக்குவித்த நெல் லோடுகூடிய வைக்கோற்போரை வாங்கிவிட்டுப் பகடுகொண்டு மிதிப்பிக்குங் காலே முதிர்ந்த நெல்லைப் பிரித்தெடுத்துப் பிறகு

போடும் வைக்கோற்போரின் சிறப்பு இதனாற் கூறப்படுகின்றது. பகடுகொண்டுமிதிப்பித்தல் பிணையடித்த லெனப்படும். போர்ப் படுத்த லென்பதற்கு - பகடுகொண்டு மிதிப்பித்தற்காக நெல் லுடன்கூடிய வைக்கோற்போரை வாங்கிவிடுத லெனப் பொருளுரைத்தலுமுண்டு.

எடுத்தபோர்க் களத்தரசர் இணைப்பகடு சிலநடத்திப்
படுத்தபோர் பயந்ததனாற் பார்தாங்கி வாழ்வதெல்லாம்
எடுத்தபோ ருழவருழு மிணைப்பகடு சிலநடத்திப்
படுத்தபோர் வையகத்தில் விளங்குகின்ற பயனாலே.

(இ-ள்.) அரசர்—,—எடுத்த-படையெடுத்த, போர் களத்து- போர்க்களத்திலே, இணை - தம்மைத்தாமேயொத்த, சில பகடு - சிலகளிற்றுயானைகளை, நடத்தி - செலுத்தி, படுத்த - (பகைவரைக் கொன்று) வீழ்த்திய, போர்-போரானது, பயந்ததனால்-(தமக்குப்) பயனை யளித்ததனால், பார் தாங்கி-இந்நிலவுலகத்தைப் பாதுகாத்து, வாழ்வது எல்லாம்—, எடுத்த - நெற்சூட்டினாலெடுக்கப்பட்ட, போர் - நெற்போரையுடைய, உழவர் - உழவர்கள், உழும் - உழுதற்கு உதவுகின்ற, இணை பகடு சில - இரட்டை யிரட்டையான கடாக்கள் சிலவற்றை, நடத்தி - (மிதிக்குமாறு நெற்சூட்டிலே) செலுத்தி, படுத்த - பின்அடுக்கியிட்ட, போர் - வைக்கோற்போரானது, வையகத்தில் - இப்பூமியில், விளங்குகின்ற—, பயனால் - தன்மையாலேயாகும்; (எ - று.)

போர்செய்வார்க்கு உணவு இன்றியமையாததாதலின் இவ்வாறு கூறியது. வினைமுற்று வருவிக்க. பிணையவிட்டுத் துவைப்பித்தலால் 'போருழவர்' என்றார். இதனால், பயிரிடுவோரின் தொழிலருமை விளங்கும். இணைப்பகடு - தம்மைத் தாமேயொத்த பகடுமாம். அரசரைப்போல வேளாளரும், சிறப்புற்றவராவரென்பார் அன்னாரை வேந்தரைக்காட்டவல்ல தொடர்மொழியாகிய 'போருழவர்' என்றதனாற் குறித்தார். 'உழவளரு' என்றும் பாடம். (60)

61.—நெற்பொலிச் சிறப்பு.

விற்பொலியும் பெருங்கீர்த்தி வேளாளர் விளைவயலில்
நெற்பொலியுண் டாமாகில் நிலமகளும் பொலிவுண்டாம்
பொற்பொலிவுண் டாமுலகம் புகப்பொலிவுண் டாம்புலவோர்
சொற்பொலிவுண் டாங்கலியின் துயர்பொலிய மாட்டாதே.

(இ - ள்.) வில் பொலியும்-ஒளியோடு விளங்குகின்ற, பெருங்கீர்த்தி - மிக்கசீர்த்தியையுடைய, வேளாளர்-வேளாளரின், விளை வயலில்-(நெற்பயிர்) விளைகின்ற வயலிலே, நெல் பொலி-நெல்லின் குப்பை, உண்டாம் ஆகில் - உளதாகுமானால், நிலமகளும் - பூமி தேவிக்கும், பொலிவு - விளக்கமானது, உண்டாம்—; பொன் பொலிவு - பொன்னின்விளக்கமும், உண்டாம்—; உலகம் - உலகத்தில், புக - உணவின், பொலிவு—, உண்டாம்—; புலவோர்-வித்துவான்களின், சொல்-சொல்லுக்கும் [கவிக்கும்], பொலிவு—, உண்டாம்—; கலியின் - வறுமையின், துயர் - தொந்தரவு, பொலிய மாட்டாது - தோன்றாது; (எ - று.)

வயலில் பொலிநெல் உண்டாமாயின், நிலமகட்பொலிவு முதலிய பொலிவுண்டாக, வறுமைக்குமாத்திரம் பொலிவு உண்டாகா தென்க: பொலி நெல் உண்டாகக் கலிதொலையு மென்ற வாறு. பொலி - தூற்றுத நெற்றிரள். உணவுஎன்னும் பொருளுள்ள புகா என்னுஞ்சொல் குறியதன்கீழ் ஆக்குறுகி, 'புக' என வந்ததென்க. புக என்பதற்கு - எங்கும் எனினுமாம். 'புகழ்ப் பொலிவு' எனவும் பாடம். (61)

62.—நெற்குவித்தற் சிறப்பு.

தன்னிகரொன் றொவ்வாத தலம்வளர்க்கும் பெருக்காளர்
மன்னுபெருங் களத்தினிடை மாருதத்திற் றூற்றியிடுஞ்
செந்நெல்லைப் பொலிவாலே செம்பொன்மலை யெனக்குவித்தே
அந்நெல்லின் பொலியாலே அவனியுயிர் வளர்ப்பாரே.

(இ - ள்.) தன் நிகர் - (தனக்கு) உவமையாக, ஒன்று - ஒரு பொருளும், ஒவ்வாத - இராத, தலம் - இந்நிலவுலகத்தை, வளர்க்கும்-(தம்முயற்சியால்) செழிப்போடு வளரச்செய்கின்ற, பெருக்கு ஆளர் - செல்வப்பெருக்கினையுடைய வேளாளர், மன்னு - பொருந்திய, பெருங் களத்தினிடை-பெரிய நெற்களத்திலே, மாருதத்தில் - காற்றின் உதவியினால், தூற்றியிடும்—, செந்நெல்லை—, பொலிவால் - (தனது இனிய) தோற்றத்தினால், செம் பொன் மலை என - (இது) செம்பொன்னினாலியன்ற மேருமலையென்று (கண்டோர்) சொல்லும்படி, குவித்து—, அ நெல்லின் பொலியாலே-அந்தநெற் குவியலால், அவனி - பூமியிலுள்ள பிராணிகளை, உயிர் வளர்ப்பார்-உயிர் வளரச்செய்வார்; (எ - று.)

'தன்னிகரொன்றொவ்வாத' என்பது - தலத்துக்கு அடைமொழி: பெருக்காளர் எனப் பன்மை வருதலால், அச்சொல்லுக்குக் கூட்டலாகாது; நெல்லைக்குவிப்பது உலகத்துயிர்களை வளர்ப்பதற்காகவே என வேளாளரின் தன்மையைக் கூறியவாறு. (62)

63.—கூடைச் சிறப்பு.

ஆடையா பரணங்கள் அணிந்துமுடி சுமந்திடலும்
ஓடையா னையினெருத்தத் துயர்ந்துலகந் தாங்குதலும்
பேடையோ டனநீங்காப் பெருங்கழனிப் பெருக்காளர்
கூடையா னதுகையிற் கொண்டுகளம் புகுந்திடினே.

(இ - ள்.) (அரசர்கள்), ஆடை ஆபரணங்கள் அணிந்து - பட்டாடைகளையும் (பொன்னினாலும் இரத்தினங்களினாலும் அமைந்த) அணிகலங்களையும் தரித்து, முடி சுமந்திடலும் - கிரீடத்தை (ச் சிரமீது) கவித்துக்கொண்டிருத்தலும், ஓடை யானையின்-நெற்றிப்பட்டத்தினையுடைய யானையின், எருத்தத்து - பிடரியிலே, உயர்ந்து - மேலேறியிருந்து, உலகம் தாங்குதலும் -உலகத்தைப் பாதுகாப்பதும், (ஆகிய இவை),—பேடையோடு-பெண்ணன்னப்பறவையோடு, அனம் - ஆணன்னம், நீங்கா - விட்டுநீங்காது தங்கப்பெற்ற, பெருங் கழனி - பெருமைபெற்ற கழனியையுடைய,

பெருக்காளர்-செல்வப்பெருக்கைக்கொண்ட வேளாளரின், கூடையானது—, கையில் கொண்டு - கையிலேகொள்ளப்பெற்று, களம் புகுந்திடினே - களத்திற்புகுந்தால்தான், (உண்டாகும்); (எ - று.)

வினைமுற்று வருவித்துமுடிக்க. நெல் இல்லாவிடின் அரசரின் ஆட்சியும் இனிது நடவாதென்க. நெல்லை யெடுத்துச்செல்லுமாறு கொண்டுபோகுங் கூடை, இங்குக் கூறப்பட்டது. அனம் = அன்னம்: தொகுத்தல். கூடையானது என்பதில், ஆனது-பகுதிப் பொருள் விகுதி: முதல்வேற்றுமைச் சொல்லுருபு எனினுமாம். 'எருத்த முயார்ந்துலகம்' என்றும் பாடம்: அதுகொளின், அத்துச் சாரியை கெட்டதென்க. (63)

64.—பொலிதூற்றுங் கூடைச்சிறப்பு.

வலியாற்று மன்னவர்க்குந் தேவருக்கும் மறையவர்க்கும்
ஒலியாற்றும் பேருலகில் உய்யவமு திடுங்கூடை
கலிமாற்றி நயந்தபுகழ்க் காராளர் தம்முடைய
பொலிதூற்றுங் கூடைக்குப் போதுவதோ புகலீரே.

(இ - ள்.) ஒலி ஆற்றும் பேர் உலகில் - கடலொலி தங்கிய இந்தப்பெரிய வுலகத்தில், உய்ய - (தாம்) நல்வாழ்வுபெற, வலி - (பகைவரையடக்கும்) வல்லமையை, ஆற்றும்-காட்டவல்ல, மன்னவர்க்கும் - அரசர்க்கும், மறையவர்க்கும் - அந்தணர்கட்கும், தேவருக்கும் - கடவுளர்க்கும், அமுது இடும் - சோற்றை யுதவுகின்ற, கூடை - கூடையானது,—கலி மாற்றி (உலகத்தாரது) பசியைப் போக்கி, நயந்த - (யாவரும்) விரும்பிக்கூறுகின்ற, புகழ் - கீர்த்தியைப்பெற்ற, காராளர்தம்முடைய-வேளாளரின், பொலி தூற்றும் கூடைக்கு - நெற்பொலியை (ப் பதர் பிரியும்படி) தூற்றுகின்ற பொலி கூடைக்கு, போதுவதோ - ஒப்பாகுவதோ? புகலீர்-(உலகத்தவரே! நீங்கள்) கூறுங்கள்; (எ - று.)

மன்னவர், அந்தணர், கடவுளர் முதலியோர்க்கு உணவிடும் இல்லறத்தாரது கூடை, வேளாளரின் பொலிதூற்றுங் கூடையை யெதிர்பார்த்திருக்கவேண்டுதலால், இல்லறத்தாரின் அமுது கூடையினும் பொலிதூற்றுங் கூடையே மேம்பட்ட தென்பது, அறிவுடையோர் யாவர்க்குந் தெற்றென விளங்கு மென்க. அரசர்க்கும் சமயம்நேரும்பொழுது இல்லறத்தார் உணவிட வேண்டு மென்பதுபற்றி, 'மன்னவர்க்கும் அமுதிடும்' என்றார். ஒலியாற்றும் - புகழொலி தங்கிய எனினுமாம். (64)

65.—பொலிகோலின் சிறப்பு.

சீற்றங்கொள் கருங்கலியைச் செறுக்குங்கோல் செகதலத்துக்
கூற்றங்கொள் மனுநெறியை யுண்டாக்கி வளர்க்குங்கோல்
ஏற்றங்கொள் வயவேந்தர்க் கெப்பொருளுங் கொடுத்துலகம்
போற்றுஞ்சொற் பெருக்காளர் பூங்கையினிற் பொலிகோலே.

(இ - ள்.) ஏற்றம் கொள்-பெருமை கொண்ட, வய-வெற்றி பொருந்திய, வேந்தர்க்கு - அரசர்க்கும், எ பொருள் உம் - (அவர்

வேண்டுகின்ற) எல்லாப்பொருளையும், கொடுத்து—, உலகம் போற்றும்-உலகத்தாரைப்பாதுகாக்கின்ற, சொல் பெருக்காளர் - புகழ்ச்சொல்லுடனே செல்வப்பெருக்கையுமுடையரான வேளாள ரின், பூ கையினில் - அழகிய கையிலேயுள்ள, பொலி கோல் - நெற்பொலிக்கு முத்திரையிடுங்கோலானது,—சீற்றம் கொள்-சீறி வருந்தன்மையைக்கொண்ட, கருங் கலியை - கொடிய வறுமையை, செறுக்கும் - அழிக்கின்ற, கோல்-கோலாகும்; (அன்றியும்), செக தலத்துக்கு ஊற்றம் கொள்-உலகத்தார்க்கு(உதவியாய்நின்று) உறுதிப்பாட்டை யுண்டாக்குகின்ற, மனு நெறியை - மனுதரும சாஸ்திரத்தின் முறைமையை, உண்டாக்கி - (அழியாமல்) உண்டா கச்செய்து, வளர்க்கும் - தழைத்தோங்கச் செய்கின்ற, கோல் - கோலுமாகும்; (எ - று.)

உணவு இல்லாவிடின் எவருக்குந் தீச்செயலைச் செய்யுமாறு நேருமென்னுங் கருத்தை விளக்க, பொலிகோலை 'மனுநெறியை யுண்டாக்கி வளர்க்குங் கோல்' என்றார். வறுமையின் கொடு மையை விவரிக்கவேண்டி, அதற்கு 'சீற்றங்கொள், கரு' என்ற அடைமொழிகள் கொடுக்கப்பட்டன. மனுநெறி இம்மை மறுமை களில் மானிடர்க்கு நன்மை விளைத்தலால், 'செகதலத்துக்கு ஊற்றங்கொள் மனுநெறி' என்றது. (65)

66.—விரைக்கோட்டைச் சிறப்பு.

விரைக்கோட்டை - நெல்விதையைவைத்து அவற்றைப் பொதிந்து கட்டுவது.

திருத்தோட்டுப் பிரமாவாற் செனிக்கின்ற வுயிர்களுக்கும்
உருத்தோட்டும் புகழுக்கும் உரிமைமுறை வளர்க்கின்ற
வரைக்கோட்டுத் திணிபுயத்து வளர்பொன்னித் திருநாடர்
விரைக்கோட்டை கொண்டன்றோ வேந்தரிடுங் கோட்டைகளே

(இ-ள்.) திரு தோடு-அழகிய இதழ்களைக்கொண்ட தாமரை மலரில் வீற்றிருக்கின்ற, பிரமாவால் - பிரமதேவனால், செனிக் கின்ற - பிறக்கின்ற, உயிர்களுக்கும்-பிராணிகட்கும், உருத்து - கோபித்து, ஓட்டும்-(வறுமையைப்) போக்குவதனாலுண்டாகின்ற, புகழுக்கும்-கீர்த்திக்கும், உரிமை முறை-உரிமையாகிய முறையை, வளர்க்கின்ற—, வரை கோடு திணி புயத்து வளர் பொன்னி திரு நாடர் - மலைச்சிகரம்போலச் செறிந்த தோளுடனே வளர்ந்துள்ள சோணாட்டு வேளாளரின், விரை கோட்டை கொண்டு அன்றோ - விதைக்கோட்டையைக் கொண்டல்லவோ, வேந்தர் இடும் கோட் டைகள் - அரசர் கட்டியுள்ள கோட்டைகள், (நிலைத்துள்ளன);

நெற்கோட்டை நிறைய இல்லாவிடின், வேந்தர் கோட்டை நில்லாவாகையால், விரைக்கோட்டைகொண்டே வேந்தர் கோட்டை நிலைக்குமென்றார். விரை=விதை. 'உயிர்களுக்கும்' 'புகழுக்கும்'—உம்மைகள் முற்றுப்பொருளன; ஆகவே, வேளாளர் பிரமதேவனாற்படைக்கப்பட்ட எல்லாவுயிர்கட்கும் பசிவருத்தம் சேராதபடி அவ்வருத்தத்தைக்கடிந்து எவ்வளவு புகழைப்பெற

லர்மோ அத்துணைப் புகழையும்உரிமைமுறையாற் பெற்றிருக்கின்றன ரென்பது முதல்மூன்றடிகளாற் பெறப்படும். தோடு - மலரின் இதழ்: இச்சொல் - மலருக்கு ஆகிவந்தது; சினையாகு பெயர். செனிக்கின்ற - வடமொழித்தாதுவினடியாகப்பிறந்த பெயரெச்சம். (66)

67.—கல்லறைச் சிறப்பு.

கல்லறை - கடாவிட்டுக் கல்லி அறைபடுதலால் பெற்ற நென்மணிகளைக் காட்டுவது.

தளர்ந்தவுயி ரித்தனைக்குந் தாளாள ரெண்டிசையும்
வளர்ந்தபுகழ்ப் பெருக்காளர் வளமையா ருரைப்பாரே
அளந்துலக மனைத்தாளும் அரசர்வே தியர்புலவர்
களந்துவைக்க வையுகுத்த கல்லறைக ளுண்பாரேல்.

(இ - ள்.) தாளாளர் - முயற்சியை யெப்போதுங் கைக்கொண்டிருப்பவராய், எண் திசையும் வளர்ந்த புகழ் பெருக்காளர் - எட்டுத்திக்குக்களிலும் பரவிய புகழொடு செல்வப்பெருக்கினையுமுடையராய வேளாளர், உலகம் அனைத்து ஆளும் அரசர் வேதியர் புலவர் தளர்ந்த உயிர் இத்தனைக்கும் - உலகமுழுவதையும் ஆளுகின்ற அரசர்கள் பிராமணர்கள் புலவர்கள் தளர்ச்சியடைந்த பிராணிகள் இவ்வளவுபேர்க்கும், அளந்து - நெல்லை அளந்து கொடுத்து, [பின்பு], களம் துவைக்க வை உகுத்த கல்லறைகள் உண்பாரேல் - நெற்போர்க்களத்தில் கடாவிட்டுப் பிணையடித்து உழக்கித் துகைத்தலால் வைக்கோலிலிருந்து சிந்திய கல்போன்ற நெல்மணிகளைச் [சமைத்து] உண்பார்களானால், வளமை - அவர்களுடைய உபகாரத்தன்மையை, உரைப்பார் யார் ஏ-வரையறுத்துச் சொல்லக்கூடியவர் யாவரே? (ஒருவருமிலர்); (எ - று.)

எல்லோர்க்கும் அளந்துகொடுத்தபின் கடாவிட்டு எஞ்சிய கல்லறை நென்மணிகளைக்கொண்டு வேளாளர் உண்பர் என்றதால் அவர்கள் உபகாரத்தன்மைக்கு வரையறையில்லை என்றபடி. "தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே,வேளாண்மை யென்னுஞ் செருக்கு" என்ற குறளின் கருத்து ஈண்டு நினைக்கத் தக்கது. (67)

வேறு.

68.—மெய்ப்பேறு.

உண்மையான பாக்கிய மென்பது, இத்தொடரின் பொருள்.

அரியா தனத்தின் மேலிருந்தே யம்பொற் குடைக்கீ ழரசியற்றும்
பெரியார் பக்கல் பெறும்பேறும் பேறே யல்ல பெருக்காளர்
சொரியா நிற்பச் சிலர்முகந்து தூற்றா நிற்பச் சிலரளந்து
புரியா நிற்பப் பெறும்பேறுக் கதுநே ரொக்கப் போதாதே.

(இ - ள்.) அரி ஆதனத்தின்மேல் - சிங்காசனத்தின்மேலே, இருந்தே - இருந்தபடியே, அம் பொன் குடைக்கீழ் - அழகிய பொற்குடை நிழல்செய்ய அதன்கீழிருந்து, அரசு இயற்றும்-அரசு

புரிகின்ற, பெரியார்பக்கல்-பெருமைபெற்ற அரசரிடத்து, பெறும்- உள்ள, பெறும் - செல்வப்பேறும், பேறே அல்ல - பேருகமாட்டாது; (ஏனெனில்), சிலர் சொரியாநிற்ப - (நெல்லைக் கொணர்ந்து) சிலர் கொட்டவும், சிலர் முகந்துதூற்றுநிற்ப - சிலர் வாரியெடுத்துத்தூற்றவும், (சிலர்), அளந்துபுரியாநிற்ப - சிலர் மொண்டளந்து குவிக்கவும், பெறும் - பெறுகின்ற, பெருக்காளர் பேறுக்கு-வேளாளரின்பேற்றுக்கு, அது-அவ்வரசரின்பேறு, நேர் ஒக்கபோதாது-ஒப்பாதற்குப் போதிய பெருமை யுள்ளதாகாது;

ஏரெழுபது என்ற இந்நூல் வேளாளரின் பெருமையைத் தெரிவிப்பதற்காகவே வந்ததனால், உலகத்தார் சிறந்ததென்று கருதக்கூடிய அரசர்பேற்றினும் வேளாளரின்பேறே மிகச்சிறந்தது; அவ்வரசப்பேறு இவ்வேளாளரின் பேற்றை நேரொவ்வாதென வேளாளரின் சிறப்பைக் கூறிமுடித்தாரென்க. இவ்வாறு கூறியதற்குக் காரணம் - அரசரின் செல்வமும் வேளாளரின் விளைவையே நோக்கியிருக்குமென்று கீழ்ப்பல பாடல்களிலும் நிரூபித்துக் காட்டியுள்ளமையே. அரசரிடத்துப் பிறர் அடையக் கூடிய பாக்கியத்தைவிட, வேளாளரிடத்துப் பிறர் அடையக் கூடிய பாக்கியம் மிக்கது என்று இப்பாடலுக்குக் கருத்துக் காண்பாருமுளர்.

இச்செய்யுள் - மூன்றுஞ்சீரும் ஆறுஞ்சீரும் காய்ச்சீர்களும் மற்றைநான்கும் மாச்சீர்களுமாய் நின்ற **அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.** (68)

வேறு.

69.—வாழ்த்து.

பார்வாழி நான்மறைநூற் பருணிதரா குதிவாழி
கார்வாழி வளவர்பிரான் காவேரி நதிவாழி
பேர்வாழி பெருக்காளர் பெருஞ்செல்வக் கிளைவாழி
ஏர்வாழி யிசைவாழி யெழுபத்தோன் பதுநாடே.

(இ - ள்.) பார் வாழி - உலகம் வாழ்வதாகுக; நால் மறை நூல் பருணிதர் ஆகுதி வாழி - நான்குவேதங்களிலும்வல்ல ஞான பரிபாகமுடைய அந்தணர்களின் வேள்வியாகுதிகள் வாழ்வதாகுக; கார் வாழி-மேகம் [மழைபொழிந்து]வாழ்வதாகுக; வளவர் பிரான் காவேரி நதி வாழி - சோழவரசனது [நாட்டிற் பாயும்] காவேரிநதி வாழ்வதாகுக; பெருக்காளர் பேர் வாழி - வேளாளர்களின் புகழ் வாழ்வதாகுக; பெரும் செல்வக் கிளை வாழி - (அவ்வேளாளரது) பெருத்த செல்வத்தையுடைய சுற்றத்தவர் வாழ்வதாகுக; ஏர் வாழி - (அவர்களது) ஏர் வாழ்வதாகுக; எழுபத்தொன்பது நாடு இசை வாழி - (சோழப் பேரரசுக்குட்பட்ட) எழுபத்தொன்பது நாடுகளின் புகழ் வாழ்வதாகுக; (எ - று.)

கிளை - சுற்றத்தார்க்கு ஆகுபெயர். இசைவாழி யென்றது, 'இசையாற் றிசைபோயதாதலின்'. இவ் வாழ்த்து இந்நூற்கு மங்கல முடிபாயிற்று. (69)

ஏரெழுபது முற்றிற்று.

சிலையெழுபது.

மூலமும் குறிப்புரையும்

வித்வான். C. ஜெகந்நாதாசார்யர்

M. A. (Hist), M. A. (Tamil). L. T., P. O. L., Dipl. Geog.

(தமிழ்த்துறைத்தலைவர், விவேகானந்தர் கல்லூரி, மயிலை)

எழுதிய குறிப்புரையுடன்

அரவிந்தா பிரிண்டர்ஸில் பதிப்பிக்கப்பட்டது.

சிலையெழுபது.

சிலையைப்பற்றிக் கூறுகின்ற எழுபது செய்யுள்களினுலாகிய தொரு நூலெனவிரியும்; இரண்டாம்வேற்றுமையுருபும் பயனுமுடன்தொக்கதொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. போர்த்தொழிலுக்கு இன்றியமையாத கருவியாகிய வில்லைக் குறிக்கின்ற 'சிலை' என்ற சொல் - இங்கு, ஆகுபெயராய், அதனையுடைய வன்னியரைக் குறிக்கும். எனவே, வன்னியரது சிறப்பைக் கூறும் எழுபதுசெய்யுட்களினுலாகிய நூலென்பது, திரண்ட பொருளாம். இனி, இந்நூலின் தொடக்கத்து முதலிருபத்திரண்டு செய்யுட்களால் சிலையின் பெருமையைப் பரக்கக்கூறிப் பின் நூலின் இறுதியிலும் "வீரபண்ணுடார் வில்லைத், தேவரே கூறல் வேண்டும் திசைமுகனுதியாய, மூவருங் கூறல்வேண்டும் முனியகத்தியனனந்தன், வாய்வளங் கூறல் வேண்டு மற்றெவர் கூறுவாரே" (செய்யுள்: 67) எனச் சொல்லி, "தனுமறை யெனுமிது வளர்க்கவே (69), "தனிநெடுஞ் சிலையினை வாழ்த்தினமே" (70) என வாழ்த்துக் கூறிமுடித்தலின் சிலையெழுபது எனப் பெயரிடப்பட்டது எனவுங் கொள்ளலாம். ஆகவே, "முதனூல் கருத்தன் அளவு மிகுதி பொருள் செய்வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும், இடுகுறியானும் நூற்கு எய்தும் பெயரே" என்று கூறப்பட்ட நூற் பெயர்வகைகளுள் அளவாலும் நுதலியபொருளாலும் பெயர் பெற்றது இதுவென்று அறிக.

இந்நூல், முதலிற் பாயிரச்செய்யுள்களையும், இடையில் 'விசயதசமிநாட்கோடற்சிறப்பு' முதல் 'வில்லின்புகழ் கூறுதற் சிறப்பு' வரையிலுள்ள அறுபத்தேழு விஷயங்களைத் தெரிவிக்கின்ற செய்யுள்களையும், இறுதியில் பாரிசுதரற்சிறப்புச் செய்யுள், வாழ்த்துச்செய்யுள்களையும் பெற்றுள்ளது.

இந்நூல் இன்னநூலின்வழியே தோன்றியதென்றுகொள்ள இடமில்லாமையால், முதனூலின்பாற்படும். இந்நூல், ஒருவிஷயத்தைக் குறித்து [வன்னியரைக் குறித்து] எழுபது செய்யுள் கூறுவதனுல் வித்தாரகவியாகும்.

இந்நூலைக் காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட பல்லவமரபினனுகிய சிற்றரசன் கருணாகரத்தொண்டைமானின் வேண்டுகோளின்படி கம்பர் அவன் அவையில் முதியோர் கேட்பப் பாட, அத்தொண்டைமானுகிய வன்னியகுலவேந்தன் கம்பருக்குப் பொற்றண்டிகை, ஆபரணங்கள் முதலியன கொடுத்ததோடு; கவிக்கு ஆயிரம்பொன் பரிசளித்தான் என்றும் தெரியவருகிறது. கருணாகரன் முதற்குலோத்துங்கசோழனின் தலைமைச்சேனாதி

யென்பது கலிங்கத்துப்பரணியால் தேற்றமாதலின், இவன் காலம் அச்சோழன் ஆட்சிபுரிந்தகாலமாகும் என்பது விளங்கும். (கி. பி. 1070 - 1118.) அச்சோழனின் 45 - ஆம் ஆண்டிற் பொறிக்கப் பட்ட ஆலங்குடிச் சாசனமொன்றில் கலிங்கப்போரின் விவரம் காணப்படுதலின் இப்போர் அச்சோழனது ஆட்சிமுடிவுக்குச் சில வருடங்களுக்குமுன் கருணாகரன் நடத்தியதாகுமென்பது பெறப் படும். இதற்குப்பின், கச்சியைத்தலைநகராக்கொண்டு கருணாகரன் சோழப்பேரரசின் சிற்றரசாய் ஆண்டிருக்குங் காலத்துக் கம்பர் இச்சிலையெழுபதை அவனவைக்களத்துப் பாடினராதல்வேண்டும். மூவருலா பாடிய கூத்தரிற் கம்பர் இளையவர் என்பது நிச்சயமாத லின், கம்பர் சிறுவயதினராயிருந்தபோது இந்நூலைப்பாடியிருத்தல் வேண்டுமென்பதும் தெளிவு. இந்நூல் சிலையைப்பற்றியும், வாள் வேல் யானை குதிரை தேர் அரண் அரசு போன்ற பிறவற்றைப் பற்றியும் கூறும் எழுபது செய்யுட்களையுடையதாயினும், கம்ப ராமாயணம்போலச் சொல்வளம் பொருள்வளமின்றி விசித்திரப் பட்ட வருணனைகளையுடையதுமாகாமல் பெரும்பாலும் 'வன்னி இறைக்குலத்துதித்தவரால்தான் உலகமே நடைபெறுகின்றது' என்பதுபோன்ற கருத்துப்பட வன்னியமன்னரின் புகழைத் திருப் பித் திருப்பிக் கூறுதலாலும், 'இந்தணி சடிலத் தெம்மான் இணைக் கழல் பராஅ யிசைத்தான் செந்தமிழ்க்கம்பன்'' என்று சைவப் பற்றுடைமை தோன்றக் கூறுவதாலும் ஒருசாரார் இந்நூல் கம்பர் செய்ததாகுமோ என ஐயுறுகின்றனர்; மற்றொரு சாரார் தமது இளமைப்பருவத்துக் கம்பர் முதலிற் சைவராயிருந்த நிலை யில் இந்நூலைப் பாடினரென்றும், பெரும்புலவராகி இராமாயணம் பாடத் தொடங்கியபின்னர் வைணவப்பற்றுடையராயின ரென் றுங் கூறுகின்றனர்.

வன்னியரைக்குறித்து இச்சிலையெழுபதும் வேளாளரைக் குறித்து ஏரெழுபதும் கம்பர் பாடியுள்ளமைகண்டு, செங்குந்தர் கள் தங்கள் மரபிற் பெரும்புலவராயிருந்த ஒட்டக்கூத்தரிடத்தில் விண்ணப்பஞ்செய்து தங்கள் மரபின் சிறப்பைக்குறித்து விளங் கச்செய்ய ஈட்டியெழுபது பாடவைத்தனர் என்ற வரலாறும் உண்டு. இதனை நோக்க, * 'ஈட்டிக்குப் போட்டி'யாயிருந்தது சிலை என்னத்தட்டில்லை. இந்நூற்செய்யுட்கள் அறுசீர் எழுசீர் எண்சீர் ஆசிரியவிருத்தங்கள், கொச்சகம், கலிவிருத்தம் இவைகளா லானவை.

---

* இதுவே, பிற்காலத்து 'எட்டிக்குப் போட்டி' என்றுயிற்றே னைாலினைக்கவேண்டியிருக்கிறது.

பாயிரம்.

பாயிரம் பதிகம் நூன்முகம் முகவுரை புறவுரை முதலியன பரியாயச் சொற்கள். "தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளு மெய்தவுரைப்பது தற்சிறப்பாகும்", "ஆக்கியோன் பெயரே வழியேயெல்லை, நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே, கேட்போர் பயனோடாயெண்பொருளும், வாய்ப்பக் காட்டல் பாயிரத்தியல்பே" "காலங்களனே காரணமென்றிம், மூவகை யேற்றி மொழிநருமுளரே" என்பவற்றாற் பாயிரத்திற் கூறப்பட வேண்டிய பொருள் இன்னதென வுணர்க.

1.—கணபதி துதி.

திருவளரும் வன்னியர்செஞ் சிலையெழுப தினைவிளம்ப
மருவளர்பைங் கடுக்கையும்வெண் மதியுமிலந் தோன்வாமத்
துருவளரும் வரைமடந்தை யுவந்தளிப்பத் தோன்றிவரந்
தருவளஞ்செய் விகடசக்ரத் தந்திமுகன் றாடொழுவாம்.

(குறிப்புரை.) எந்த நூற்கும் மங்கலமொழி முதலில் வகுத்துக் கூறவேண்டுமென்பது இலக்கணமாதலின், 'திரு' என்று தொடங்கினார். திரு - ஐசுவரியம்: அட்ட ஐசுவரியங்களையும் குறிக்கும். "வன்யர்...வாகன மக்கள் சுற்றம் அடிமை பொன் மணி நெல் ஏகம், ஆகரசாட்சியோடெட் டயிச்சுவ ரியம்பெற்றாரே" என்றார் மேலும் (செ: 64). வன்னியர்-அக்கினி குலத்தவர்; வன்னி - நெருப்பு: அக்னி. இவர் அக்குலத்தவராதலை "அக்கினிகுலத் தரசர்" (செ: 12), "தழலிடைவந்தவதரித்தோர்" (செ: 41), தழலிற் சகலகலையுடனுதித்த மன்னர்" (செ: 57), தழலவ தரித்த றன்னால் மலைமகடன் மைந்தரென வரமளிக்கப்பெறும் வனியர் " (செய்: 63), என மேல்வருந் தொடர்களாலும் தெளியலாம். சேரவேந்தரை இக்குலத்தவரென்னும் வழக்குண்டென் பதை "இவன் செந்தழலோன் மரபாகியேழுலகும் புகழ்சேரன்" என்ற வில்லிபாரதத்தாலும் அறியலாம். (திரௌபதிமாலையிட்ட சருக்கம். செ:45) வன்னியர் என்ற இச்சொல் க்ஷத்திரிய மன்னர்கள் அனைவர்க்கும் உரித்தாகிச் சோழ பாண்டிய பல்லவரோடு குறுநில மன்னர்களையும் குறிப்பதாயிற்று: இதனை "மலையமன்னர் குன்றவர் பல்லவர் மும்முப் படையுடையார் வனியர்" என்ற பாயிரச்செய்யுளால் (8) உய்த்துணரலாம். எனவே, வன்னிகுல க்ஷத்திரியர் என்ற தொடர் அரசரனைவரையும் உளப்படுத்திற்று. இக்கருத்து, "மறைக்குலத்தி லுதித்தாலென்.....வன்னி இறைக் குலத்தில் உதித்தவரே யிகபரனென் றியம்புவரே" என்ற பாயிரச் செய்யுளால் (7) வலியுறுத்தப்பட்டது. சிலையெழுபது - நூலின் பெயர்: வன்னியர்செஞ்சிலையெழுபது என்றது. அவர் குலத்தினைச்

சிறப்பிக்கும் நூலாதலின்: என்னை சிறப்பித்தவாறு எனில் மேல் காணுதும். விளம்புதல்-சொல்லுதல். மரு-வாசனை. பைங்கடுக்கை - பசிய கொன்றைப்பூமாலை; பண்புத்தொகை. கடுக்கை - கொன்றை: கொன்றைப்பூமாலை சிவபிரானுக்குரியதென்பது பிரசித்தம்: "கண்ணிகார்நறுங்கொன்றைகாமர், வண்ணமார்பிற்றாருங் கொன்றை" (புறம்:1), "தேன்வழங்கு கடுக்கையார்"(மதுரைக்கலம்பகம்: 99) முதலியன காண்க. மதி-சுண்டு, பிறைச்சந்திரன். மிலைந்தோன்-சூடினோன். தக்ஷமுனிவனது சாபத்தாற் சந்திரன் பதினைந்துகலைகளுங்குறைந்து மற்றைக்கலை யொன்றையும் இழப்பதற்குமுன்னம் சிவபிரானைச் சரணமடைய, அப்பெருமான் அருள் புரிந்து அவ்வொற்றைக்கலையைத் தன்தலையிலணிந்து மீண்டுங் கலைகள் வளர்ந்து வரும்படி அநுக்கிரகித்தனனென்பது வரலாறு. திருப்பாற்கடல் கடைகையில் அதனினின்று தோன்றிய பிறைச் சந்திரனைச் சிவபெருமான் சிரமேற்கொண்டனனென்றும் வரலாறு கூறப்படும். வாமம்-இடப்பாகம்: வரைமடந்தை-மலைமகள். வரை-இமவான்: பர்வதராசன். வாமத்துஉருவளரும் வரைமடந்தை என்றது:—பிருங்கி யென்னும் முனிவர் பரமசிவனைமாத்திரம் பிரதக்ஷிணஞ்செய்யக் கண்ட பார்வதிதேவி தன்பதியை நோக்கி 'முனிவர் என்னைப் பிரதக்ஷிணஞ்செய்யாமைக்கு ஏது என்ன?' என்று வினவ, உருத்திரமூர்த்தி 'இஷ்டசித்தி பெறவிரும்புபவர் உன்னையும், மோக்ஷம் பெற விரும்புபவர் என்னையும் வழிபடுவர்' என்ன, அதுகேட்ட தேவி பெருமானோடு பிரியாதிருக்குமாறு தவம்புரிந்து வாமபாகம் பெற்றாரென்பது கதை. தோன்றி - அவதரித்து. தரு - தருதலால்: தந்து. தந்திமுகன்-யானைமுகத்தோன்; விநாயகன். விகடசக்ரவிநாயகர் காஞ்சியில் எழுந்தருளி யிருப்பதைக் கந்தபுராணத்து "விகடசக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்" என்பதனாலறியலாம். இவ்விநாயகர் ஏகாமிரநாதர் கோயிலிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் எழுந்தருளியுள்ளார். சிலையெழுபது என்னும் இந்நூல் அரங்கேறிய தலம் காஞ்சியாதலின்: ஆங்குள்ள விநாயகர் வணக்கம் கூறினாரென்க. இனி, ஏரெழுபதிலும் கம்பர் "விகடக்களிற்றானைக் கழல்பணிவாம்" என்றது நினைக. தாள் - திருவடிகள். (1)

2.—நூற்பெயரும் நூல்செய்தார் பெயரும் நுவலல்.

முந்துநாள் வீர சம்பு முனிசெய்மா மகத்திற் போந்த
சந்ததி யார்சீ ரோது கெனத்தகு முதியோர் கேட்ப
இந்தணி சடிலத் தெம்மா னிணைக்கழல் பராஅ யிசைத்தான்
செந்தமிழ்க் கம்பன் செம்பொற் சிலையெழு பதுவா மிந்நூல்.

(கு - ரை.) முந்துநாள்-முற்காலத்தில், ஆதிகாலத்தில். சம்பு என்ற முனிவர் செய்த பெரிய யாகத்தினின்று அவதரித்த சந்ததியார்கள் வன்னிய அரசர்கள். இதனை "வீரசம்பு முனிவேள்வி விளங்கவரு முடிவேந்தர்" (செ: 39), "சாகரத் துலகி னிட்டைச் சம்புமா முனியி யற்றும் யாகவுற் பவராம் வன்யர்" (செ: 64) என மேல்வருந் தொடர்களாலும் உணரலாம். இதனால், வன்னியர் சம்புகோத்திரத்தவரெனப்படுதலைப் பாயிரம் நாலாஞ்

செய்யுளால் அறிக. ஓதுக எனச் சொன்னவன் வன்னியகுலத்தோ ருகிய கருணாகரத்தொண்டைமான் என்பதை மேல் 68-ஆம் செய் யுளில் வந்துள்ள "கவிக்காயிரம் பொன்பரிசளித்தான் கருணாகரத் தொண்டை வன்னியனே" என்றதால் அறியலாம். இவன் காஞ்சி யிலிருந்து ஆண்டானென்பது மேற்கவியால் விளங்கும். முதியோர் - தக்க பெரியோர்கள். கேட்ப - தன் முன்னிலையில் அவைக் களத்துக் கேட்கும்படி. கேட்ப இசைத்தான் என முடியும். இந்து - சந்திரன். சடிலம்-சடை: சிவபிரான் சடை கபர்த்தம் எனப்படும். இணைக்கழல்-உபயபாதம். கழல்-தானியாகுபெயர். பராஅய்-பரவி: சொல்லிசையளபெடை. செம்பொன்-செவ்விய அழகிய என்றபடி; சிறப்புக்குறிப்பது. இச்செய்யுளில் நூற்பெயர் சிலையெழுபது என் பதும், நூல்செய்தார் கம்பர் என்பதும், அரங்கேறியகளம் கருணா கரத்தொண்டைமானின் அவை என்பதும், கேட்டோர் தகுமுதி யோர் என்பதும் முதலியன கூறப்பட்டன. (2)

3.—நூலரங்கேறிய கச்சித்தலச் சிறப்பு.

மெச்சுந் தரங்கக் கடலுலகின் மிளிருந் தலங்கண் மிகவெனினும்
இச்சித் தவர்தங் குறைறவெயின்முன் னிமம்போற் கடிதற் கியலாவே
பச்சை வண்ணத் திருமாலும் பவள வண்ணச் சோதியும் வாழ்
கச்சித் தலத்தைப் புரையுமெனக் கழறத் தலங்கள் காணேமால்.

(கு - ரை.) தரங்கம் - அலை. உலகு என்றது பாரதத்தை. மிளிர்தல் - விளங்குதல். மெச்சுந் தலங்கள் என இயையும்: இவை, அயோத்யா மதுரா மாயா காசி அவந்தி துவாரகை என் பன போல்பவை. இவையும் கச்சித்தலத்திற்கு ஒப்பாகும் எனக் கூறுதல் இயலாது என்பது ஈற்றடியில் பெறவைக்கப் பட்டது. "முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சி", "காசிமுதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனியருளாளர் கச்சிக்கு ஒவ்வா" முதலியன நோக்குக. "நகரேஷு காஞ்சி" என்றார் காளிதாசரும். இங்ஙனம் வீறுற்ற சிறப்புக்குக்காரணம் இரண்டாமடி கூறுவது. சூரியன்முன் பனி அகலுவதுபோல இத் தலத்தை இச்சித்தவர் குறைகள் தீருகின்றன என்பது: ஏனைய தலங்கள் குறைகளைக் கடிதற் கியலா என்றார். என்னை இயலா மைக்கு ஏது என்பார்க்கு, இருமூர்த்திகளும் ஒருசேர வாழும் கச்சிபோல் அவையிலவே என்கிறார். மிக - பல. இச்சித்தவர்- விரும்புபவர். "நன்றும் உள்ளத்து நண்ணினர் வேட்கைகள், ஒன்றும் அங்கொழியாவகையுய்ப்பது" என்றார் சேக்கிழாரும். இமம்-பனி.கடிதல்-போக்குதல், நீக்குதல். உவமை, இருந்தவிடம் தெரியாமல் போதற்கு. இயலா - தலங்களால் இயலா என்றபடி. இயலா-முடியா. கச்சியில் பச்சைவண்ணர் சந்நிதியும் ஏகாம்பரநாதர் சந்நிதியும் அருகாமையிலிருப்பனவாதலின் அவை யிரண்டும் குறித்தார். பச்சைவண்ணத்திருமால் சந்நிதி திருப்பவளவண்ணத் திருமால் சந்நிதிக்கு எதிர்ாக்க் காலாண்டார்தெரு மேலண்டை கோடியிலுள்ளது. இங்கே பவள வண்ணச்சோதி என்றது - சிவபிரானைக்காட்டிற்று. திருமாலும் என உம்மைகொடுத்துப்

பிரித்ததனுலும், 'சோதி' என வழங்கினதாலும் என்க. சிவபிரான் நிறம் பவளவண்ணமென்பதை 'தீவண்ணன்' என்பதாலும் அறியலாம். கச்சியில் பதினெட்டு விஷ்ணுத்தலங்களும் நூற்றெட்டுச் சிவத்தலங்களும் இருப்பதாகக் கூறுதல் மரபு; எனவே, "கச்சித் தலத்தைப் புரையும் எனக் கழறத் தலங்கள் காணேமால்" என்ருர். இக்காலத்தும் விஷ்ணுகாஞ்சி, சிவகாஞ்சி என்ற வழக்குண்மை உண்டு. (3)

4.—சம்புகோத்திரச் சிறப்பு.

சாத்திர மறைகள் சொற்ற தனிநிய மம்வ ழாதோர்
சூத்திரந் தவறில் வன்னி தோன்றுமெய்ப் புகழ்காப் பாளர்
மாத்திரை யளவு ஞான மறைப்பின்மா தவங்கூர் சம்பு
கோத்திர வரசர்க் கொப்புக் கூறுவ தெவரை மாதோ.

(கு - ரை.) வன்னிய க்ஷத்திரியர்கள் சம்புகோத்திரத்தவராவர். கோத்திரம்- வமிசம். சாத்திரமறைகள்-வேதசாத்திரங்கள்: சுருதிகள். சொற்ற-(தமக்கு உரித்தாகச்)சொன்ன. தனி-ஒப்பற்ற. நியமம் - செய்கடன்; "நித்தலும் நியமஞ்செய்து" என்றது தேவாரம். வழாதோர் - தவருதவர்கள். நிச்சலும் செய்கடன் நேர்வர் என்றபடி. சூத்திரம் - தரும நூல்கள்: ஸ்மிருதிகள் குறித்தபடி. சுருதி ஸ்மிருதி இதிகாசபுராணங்களாற் கொண்டாடப்படுபவன் அக்கியாதலின் வன்னிக்குத் 'தவறில்' என அடைகொடுத்தார். தோன்றுதல்-அவதரித்தல். மெய்ப்புகழாவது - மறந்தும் பொய்பேசாமை; இனி, இரப்பார்க்கொன்றீவார்மேல் நிற்கும்புகழ் என்றபடி. ஓழுகிக் காப்பவர். மாத்திரையளவும் - இமைப்பொழுதளவாயினும். "கண்ணிமைப்பொழுதும் கைந்நொடிப்பொழுதும் மாத்திரைக்களவாம்". 'அளவு' என்பதன்பின் உம்மை தொக்கது. மறைப்புஇல் சம்பு, மாதவங்கூர் சம்பு எனத் தனித்தனி இயைந்து சம்புமுனிவரின் பிரசித்திகாட்டும். ஒப்பு - சமம், நிகர். ஒப்பில்லையெனவே மிக்காருமில்லையென்பது பெற்ரும். மாதோ - ஈற்றசை. (4)

5.—குலோற்பவச் சிறப்பு.

திங்கண்மும் மழைபிலிற்றச் செழித்துயிர்க ணனிமல்க
அங்கமோ ராறுமறை யந்தணரா குதியோங்கத்
துங்கமனு நெறிதழைப்பத் துகளறுவன் னியினின்றும்
பங்கயனு முதலிவரைப் படைத்துலகு படைத்தானல்.

(கு - ரை.) திங்கள் மும்மழை பிலிற்றல் - மாதம் மும்மாரி பொழிதல்: "முடிபுனைந்தசீர் மன்னவர் நெறியினுன் முன்னவர் தவத்தாற்பைந், தொடி மடந்தையர் கற்பினுன் மதிதொறுஞ் சொரிதரும் மும்மாரி" என்பதீ மரபு. மும்மாரி - ஒன்பதுநாள் வெயிலும் ஒருநாள் மழையுமாய் என்றபடி. பிலிற்றல்-தூவுதல். நனிசெழித்து மல்க என மாறுக. நனி-உரிச்சொல். மல்க - பெருக. அங்கம் ஓர்ஆறு - ஆறு வேதாங்கங்கள்: அவையாவன;—கற்பம்,

சந்தசு, சோதிடம், நிருத்தம், சிக்ஷை, வியாகரணம் என்பன: இவை முறையே வேதத்திற்குக் கை கால் கண் காது மூக்கு முகம் என்னும் உறுப்புக்களாக வுள்ளன; இவை வேதப்பொருளையுணர் தற்குரிய கருவிகளாம். மறை - நான்கு வேதங்கள்: இருக்கு, யஜுஸ், சாமம், அதர்வணம் என்பன. அந்தணர் ஆகுதி - பிராமணர்களின் ஓமங்கள்: ஆகுதி - அக்கினியில் மந்திரபூர்வமாகச் செய்யும் ஓமம். ஆறும் மறையும் ஆகுதியும் ஓங்க என உம்மை பெய்து கொள்க. துங்கம் - பெருமை, பரிசுத்தம். மனுநெறியாவது - ஒருதுறைப்புனல் சினப்புலியு மானு முடனே உண்ணவும், பைங்கிளியும் ஆடற்பருந்தும் ஒருகூட்டில் வாழவும் உலகுபுரத் தலாகிய நெறி. துகள் - குற்றம். வன்னி - அக்கினி. இவரை என்றது வன்னிய குலக்ஷத்திரியர்களை. பங்கயன்-பிரமன்: படைத் தற்கடவுள். 'உலகு' என்றது ஏனைய குலமக்களையுமுளப்படுத்திய படைப்புக்களை. ஈற்றடியால், முதன்முதல் தோன்றிய ஆதிவமிசம் வன்னியரே என அவர் உற்பவச் சிறப்புக்கிளந்தபடி. (5)

6.—இரண்டு கவிகள் - குலச் சிறப்பு.

விதிகுலத்தோர் சிறப்புறச்செய் வேள்விக்குச் சிறந்தவன்னி
உதிகுலத்தோ ராதலினு லுயர்குலத்தோ ராமிவர்க்கத்
துதிகுலத்தோ ரொவ்வாரேற் சொலும்வணிக குலத்தோரும்
நதிகுலத்தோர் களுமெங்ஙன் நாட்டினிலொப் பாவாரே.

(கு - ரை.) விதி - பிரமன்; எல்லோர்க்கும் விதித்தலைச் செய்பவன் எனக் காரணப்பெயர். அவன் குலத்தோர்-பிராமணர். பிராமணரைப் பிரம குலத்தவரெனல் மரபு. வேள்வியில் அவிர்ப் பாகம் கொடுப்பதற்கு அக்கினி இன்றியமையாததாகலின், 'வேள் விக்குச் சிறந்த வன்னி' என்றது. அத்தகைய வன்னியில் உதி குலத்தோர் ஆதலினுல் வன்னியர் பிராமணரினும் உயர்குலத்தோ ராவர் என ஏது காட்டி நிறுவியபடி. துதிகுலத்தோர்-பிராமணர்; அகரம் பிரசித்தி காட்டுவது. துதிகுலத்தோரே ஒவ்வாதபோது வணிகரும் வேளாளரும் ஒப்பாகாமை சொல்லாமலே பெறப்படும். வணிககுலத்தோர் - மூன்ரும் வருணத்தாராகிய வைசியர். நதிகுலத்தோர்-நான்காம் வருணத்தாராகிய வேளாளர்; இவரைக் "கங்கை குலத்தோர்" எனல் மரபு. வேளாண்குலம் கங்கை மரபு எனப்படுதலை "பொருந்துமாயிரமுகக் கங்கைமரபிற்...... ரோன்றி" என்ற சேக்கிழார்பிள்ளைத்தமிழ்த்தொடராலும் அறிக. சொலும் - நீங்களே சொல்லுங்கள். (6)

7\. **மறைக்குலத்தி னுதித்தாலென் மறையுணர்ந்தா லென்வணிகர்**
நிறைக்குலத்தி னுதித்தாலென் நிதிபடைத்தா லென்னுன்காம்
முறைக்குலத்தி னுதித்தாலென் முயற்சிசெய்தா லென்வன்னி
இறைக்குலத்தி னுதித்தவரே இகபரனென் றியம்புவரே.

(கு - ரை.) மறைக்குலத்தினுதித்தவர் மறையுணர்தலும், வணிகர் குலத்தினுதித்தவர் நிதிபடைத்தலும், வேளாண்குலத்தி

லுதித்தவர் முயற்சிசெய்தலும் இன்றியமையாது அவர் செய்ய வேண்டிய குலத்தொழில்களாம்: இக்குலத்தொழில்களை அவ்வக் குலத்தவர் தவறாது செய்தால் தான் என்ன? அவர்களை இகத்திலே பரன் என்று கூறுவாரில்லை. ஆனால், வன்னியகுல க்ஷத்திரியர் களையே அறிந்தோர் இகபரன் என்று கூறுவர் என்றபடி. இகம் - இவ்வுலகம்: இம்மை. பரன் - மேலானவன்: கடவுள். அரசர்களை [க்ஷத்திரியர்களை]க் கடவுளுக்கு ஒப்பாகக்கூறுதலை "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்" என்ற திருவாய்மொழியாலும், "அரிமாசுமந்த அமளிமேலானைத், திருமாவளவன் எனத் தேறேன்—திருமார்பின், மானமால் என்றே தொழுதேன்" என்ற பொருநராற்றுப்படை ஈற்று வெண் பாவாலும் தெளியலாம். "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட், கிறையென்று வைக்கப்படும்" என்றார் வள்ளுவனாரும். மறைக்குலம் - பிராமண குலம். நிறை - தராசு. நிறைக்குலம் - தராசு ஏந்தும் குலம்: வைசிய குலம்: தராசு கொண்டு அளவை யிட்டு நிறுக்கும் குலமாதலின், 'நிறைக்குலம்' என்றபடி: 'நிறை' என்றது ஏனைய அளவைகளுக்கும் உபலட்சணம்: "ஒருமொழி யொழிந்ததன் னினங்கொளற்குரித்தே". உழுதொழிலுக்கு மிக்க முயற்சி வேண்டியிருத்தலின், அம்முயற்சி சிறப்பாகக் குறிக்கப்பட்டது: "உழுந்தும் உழவே தலை" என்றார் நாயனாரும். இறைக்குலம் - அரசகுலம்: க்ஷத்திரியகுலம்; "உலகபாலருருவாய் நின்று உலகங் காத்தலின் 'இறை' என்றார்" என்றார் பரிமேலழ கரும். "அனைவோர்க்குந் தெய்வம், இலைமுகப் பைம்பூ ணிறை" என்றார் குமரகுருபரரும். (7)

8.—குலத்தலைவர் படைச் சிறப்பு.

விடையுடையார் வரமுடையார் வேந்தர்கோ வெனலுடையார்
நடையுடையார் மிடியுடைய நாவலர்மாட் டருள்கொடையார்
குடையுடையார் மலையமன்னர் குன்றவர்பல் லவர்மும்முப்
படையுடையார் வனியர்பிற ரென்னுடையார் பகரீரே.

(கு - ரை.) விடையுடையார் - பரமசிவனார். விடை - ரிஷபம்; எருது. அதை ஊர்தியாகவுடையவர் சிவபிரான். அவரிடம் வரம் பெற்றவர் வன்னியர் என்றபடி. வன்னியகுலத்தினில்வந்து திரு வண்ணாமலையில் ஆண்ட வல்லாளபூபனுக்குச் சிவபிரான் வர மளித்ததை அருணாசலபுராணம்கூறும். இனி, விடையுடையார் - நடுநிலைதவறாது பதிலளிப்பவர் என்பாருமுளர். வேந்தர்கோ - மன்னர்மன்னன், ராஜாதிராஜன். நடை-ஒழுக்கம். மிடி-வறுமை. நாவலர் - புலவர். கொடை - வள்ளற்றன்மை. குடை - மண் முழுதும் தண்ணளிசெய்யும் வெண்கொற்றக்குடை. மும்முப் படை - ஆறுபடை: மூன்றும்மூன்றும்ஆகியபடை. படை - மூலப் படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப் படை, பகைப்படை என அறுவகைப்படும். மூலப்படை - தொன்றுதொட்டுப் பரம்பரையாகவருகின்ற சேனை; கூலிப் படை - வேண்டியபொழுது கூலிகொடுத்துச் சேர்க்கும்

சேனை. நாட்டுப்படை - நாட்டிலுள்ள வீரர்களைப் போரின் பொருட்டுத் தொகுப்பது. காட்டுப்படை - காட்டிலுள்ள வேடர் முதலிய போர்வல்லாரைத் துணையாகச் சேர்ப்பது. துணைப்படை - தமக்கு நண்பரான அரசரால் உதவியாக அனுப்பப்பட்ட சேனை. பகைப்படை - பகைவர்களை வென்று அவர்களிடத்தினின்று திறையாகக் கொணர்ந்த சேனை. "உறவின்மிக்கவர் பகையினெய்த்தவருதவுமப்படை குடை நிழற், செறிதலத்தினில் வளர்நகர்ப் படை திரள்வனப்படை பொருள்விளைத், தறுகண்மெய்ப்படையுறுதியிற்பொரு தமதகப்படை யெனவிராய், அறுவகைப்படைகளும் வகுத்தன அணிகள்" என்றது வில்லிபாரதம். "சுத்தமூலம் கான் கூலி துணை பகை நாட்டொடாறே" என்றது சூடாமணி நிகண்டு. மலையம் என்பது பொதிகைமலை: அஃது பாண்டியநாட்டிலுள்ளதாகலின், மலையமன்னர் என்றது - பாண்டியர். குன்றவர்- மலைநாட்டுச் சேரமன்னர். பல்லவர் - கச்சிப்பதியிலாண்ட தொண்டைநாட்டுப் பல்லவ மன்னர். பல்லவரைக் கூறவே, சோழரும் பெற்றாம். என்னை? இக்காலத்துப் பல்லவர் சோழப் பேரரசின்கீழ் ஆட்சிபுரிந்தனர் என்பது கருணாகரத்தொண்டைமான் வரலாற்றால் தேற்றம். ஈற்றிரண்டடிகளால் முடியுடை வேந்தர் மூவரும், பல்லவரும் அக்கினி குலத்தலைவராய்ப் படை வென்றிச் சிறப்புடையராய் நிகரின்றித் திகழ்ந்தனர் என்பது கூறப்பட்டது. இதற்குப் படைத்துணைத்தலைவர் குலச்சிறப்பு என்ற தலைப்பும் உண்டு. (8)

பாயிரம் முற்றிற்று.

நூல்.

1.—விசயதசமி நாட்கோடற் சிறப்பு.

இத்தொடர், வில்மங்கலங்கொள்ளுந் தொழிலைத் தொடங்குதற்கு நல்ல நாள் விசயதசமிநாளென அதன் சிறப்புக் கூறும்.

சொன்மங்கலம் பொருந்துந் தொல்லுலகிற் பல்லுயிரும்
நன்மங்கலம் பொருந்து நான்மறையு நனிவிளங்கும்
வன்மங்கலம் பொருந்தி வளர்வனிய குலவரசர்
வின்மங்கலம் பொருந்தும் விறற்றசமி நாட்கொளினே.

(கு - ரை.) வன்மம் - வலிமை: "வயிரமார்பின் உருமொத்த கரஞ்சென்றுற்றவன்மத்தைக்கண்டும்" (கம்பரா: அதிகாயன்: 228) கலம்-அணி, ஆபரணம்: வன்மங் கலம்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. பொருந்துதல் - தரித்தல். வனிய - வன்னிய என்பதன் தொகுத்தல். வில் மங்கலம் - வில்லுக்கு மங்கலம்: நான்கனுருபு தொக்கது. மங்கலம் - சுபம். விறல் தசமி நாள் - விசயதசமி நாள்: ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் மகாளய அமாவாசைக்குப் பின்னர் வரும் சுக்கிலபக்ஷ தசமிதிதி விசயதசமியாகும்: அந்நாள் கொள்ளுதலாவது - வில் தொட்டுப் பயிற்சி தொடங்கல்: தநுர்வித்யாரம்பஞ் செய்தல். முதலிரண்டடிகள், விசயதசமிநாட்கொள்ளுதலால் விளையும் நற்பயன்கள் கூறும். சொல் மங்கலம் பொருந்துதலாவது - பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என வாக்கின்கண் நிகழும் பாவம் உளவாகாமை. சொல்விற்றோன்றும் தீவினை பொய் முதலாக நான்குவகைப்படுமென்பதை, "பொய்யே குறளை கடுஞ்சொற் பயனில், சொல்லெனச் சொல்விற் றோன்றுவ நான்கும்" என்னும் மணிமேகலையிலுங் காணலாம். தொல் உலகு - பழைய உலகம். உயிர் - ஜீவராசிகள். அவை நன்மங்கலம் பொருந்துதலாவது-துன்பமின்றிச் செழித்து இன்புற்றிருத்தல். மறைநனி விளங்குதலாவது- வேதம் யாண்டும் ஓதப்பட்டு ஒளியடைதல். நனி - உரிச்சொல். (1)

2.—இதுமுதல் நான்குகவிகள் - விற்சிறப்பு.

கலையாய் வன்னி குலோத்துங்கர் கரத்திற் கவின்கொண் டமைந்தவென்றிச், சிலையா லன்றோ வேழ்புயலுஞ் சேணிற் பொலியுந் திவாகரனும், அலையார் கடலுங் கடையனலு மடன்மாருதமு மடங்கியொரு, நிலையாய் நின்ற மனுநீதி நெறியு நின்ற தறியீரோ.

(கு-ரை.) உத்துங்கம் - உயர்ச்சி. "உத்துங்க மிக்க வொருதன் தவிசேறி" என்றது கந்தபுராணம். உயர்ச்சியையுடையவர் உத்

துங்கர். எனவே, வன்னிகுலோத்துங்கர்-வன்னியகுலத்தில் உயர்ந்தோர். கலை - குலவிச்சை. கரம் - கை. கவின் - அழகு. வென்றிச் சிலை - வெற்றியைத்தரும் வில். ஏழ்புயல் - சத்த மேகங்கள்: அவையாவன - சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவர்ணம் என்பன. சேண் - ஆகாயம். திவாகரன் - சூரியன். கடை - யுகக்கடை: யுகாந்தம். கடை அனல் - ஊழித்தீ. அடல் மாருதம்-பெருங்காற்று: சண்ட மாருதம் என்பர். அடங்குதல் - வரம்பு இறவாது ஒடுங்கி இருத்தல். ஒருநிலையாய் நிற்றல் - ஒரு நெறியில் நிலைபெறல்: நிலை - நெறி: (Prescribed path): "நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்" என்றவிடத்துங் காண்க. நின்ற-பலவின்பால் முற்று. 'மனுநீதி' இப்படித்தென முன்னரே குறிக்கப்பட்டது. அன்றோ-தேற்றம் குறிப்பது. வன்னியர்கைச் சிலையால் உலகநியதி நடைபெறல் கூறப்பட்டது. (2)

3. மலையினிற் பொலங்கொண் மேரு மலையன்றி மலைமற் றுண்டோ, கலையினி லுரைப்ப வெண்ணெண் கலையன்றிக் கலைமற் றுண்டோ, அலையினி லுகாந்த நீத்தத் தலையன்றி யலைமற் றுண்டோ, சிலையினிற் றிறங்கூர் வனியர் சிலையன்றிச் சிலைமற் றுண்டோ.

(கு - ரை.) பொலம் - பொன்: மேருமலையைப் பொன்மலை என்பது வழக்கு. உரைப்ப - சொல்லுதற்கு. எண்ணெண்கலை - அறுபத்துநான்குகலைகள். "ஆயகலைகள் அறுபத்துநான்கினையும்" என்றார் சரசுவதியந்தாதியிலும். யுகாந்தம்-யுகமுடிவு: உகக்கடை. நீத்தம் - வெள்ளம்: deluge. திறம் - திறமை. கூர் - மிகுதி குறிக்கும் உரிச்சொல். 'வனியர்சிலை' அக்னியிற்றோன்றிய தென்பதை "வன்னி தோன்றுபொற் சிலையொன்றம்மா" என மேல் ஐந்தாஞ்செய்யுளிற் கூறுதலா லுணர்க. இஃது ஏதுவின் முடித்தல். (3)

4. அமரரொரு புறமரிய முனிவரொரு புறம்விசயை யரிவையொரு புறமடலுறுஞ், சமனுமொரு புறம்விரவு கழுகுமொரு புறநெடிய தருமமொரு புறமுடைகொள்வாய், ஞமலியொருபுற மெரிகணலகையொரு புறமிடர்செய் நரிகளொரு புறமகிழவெஞ், சமர்செய்திடு மணிமவுலி யணிவனிய குலவரசர் தமதுகர மருவுசிலையே:

(கு - ரை.) வன்னியவரசர் கையிடத்து வில் அமரர், முனிவர், விசயமகளாகிய துர்க்கை, யமன், கழுகு, தருமம், செந்நாய், பேய், நரி இவை மகிழச் சமர்செய்திடும் என்பது கருத்து. ஒருபுறம் என்பது ஒன்பது முறையடுக்கிவந்து 'மகிழ' என்ற வினையெச்சத்தோடு இயையும். சிலை சமர்செய்திடும் என முடிக்க. மணிமவுலி - இரத்தின கிரீடம். மருவு - பொருந்திய. அமரர் - மரணமில்லாதவர் எனக் காரணப்பொருள்பட்டுத் தேவர்களைக் காட்டும். ஒருபுறம் - ஒருபக்கம் (மகிழ). அரிய முனிவர் - செய்தற்கரிய தவத்தை மேற்கொண்ட முனிவர்கள்: 'உற்றநோய் நோன்றல்', 'துன்பஞ் சுடச்சுட நோற்கிற்பவர்க்கு' முதலான தொடர்களால்

தவஞ்செய்தற்கருமை அறியலாம். விசைய அரிவை - வெற்றி மகள்: கொற்றவை: துர்க்கை. அடல் - அடுதல்: கொல்லுதல். சமன் - யமன்: எல்லாரிடத்தும் ஒப்பநடப்பவன் என்ற காரணம் பற்றி யமனுக்கு 'சமன்' என்று பெயர். விரவுதல் - நெருங்குதல், சூழ்தல்: இனி, கலத்தல் எனக்கொண்டு பருந்து காகம் முதலிய வற்றோடு விரவிய கழுகு எனலுமாம். நெடிய தருமம் என்ற விடத்து 'நெடுமை' அழிவின்மை குறித்தது. முடை - புலால்நாற்றம். ஞமலி - செந்நாய். எரி கண் - நெருப்புப்போன்ற கண்கள். அலகை - பேய். இடர் - துன்பம். பிணங்களைத் தின்ன இவைகள் சூழலும் என்பதை "காடுமேடுஞ் செறிந்த செந்நாய் முன்னே கவ்வி யிழுத்திடப் பறந்துகழுகுபோதப், போடுபோடெனப் பலப்பேய் தொடரக்கொண்டு போகேல் நீயெனக் கொடியபூதஞ்சூழ, மாடு தோறும் பறிக்க நரிகள் தாவ" என்ற அரிச்சந்திரபுராணத்தாலும் அறியலாம். எனவே, இவை சமரில் உணவுகிடைத்தமைக்கு மகிழ்கின்றன. அமரர் முனிவர் மகிழ்வது - அரக்கர் பகைநீங்கப் பயமொழிந்தமைபற்றி. துர்க்கைமகிழ்வது - பலிகிடைத்தலால். யமன் மகிழ்வது - பூபாரம் தீர்த்தலால். தருமம் மகிழ்வது - தான் நிலைபேறு அடைதலால். முதல்மூன்றடிகளில் உயர்திணைப்பெயர்களும் அஃறிணைப்பெயர்களும் விரவிவந்தமையால், சகல ஜீவராசிகளும் மகிழச் சமர்செய்திடும்சிலை எனச் சிலையின்சிறப்புக்கிளந்தவாறு. இது கருவிளங்காய்ச்சீர்கள் பயின்றுவந்த அறுசீர்ச் சந்த விருத்தம். (4)

5. முட்டரை யறிஞ ராக்கும் முனிவரைத் தவஞ்சீர்ப் பிக்கும்
சிட்டருக் கரசு நல்கும் சேர்ந்தவர்க் குரம்பா லிக்கும்
மட்டறு தெவ்வர் தம்மை வலிதப வச்சு றுத்தும் [றம்மா.
துட்டரைத் தொலைப்ப வன்னி தோன்றுபொற் சிலையொன்

(கு - ரை) தொலைப்ப - ஒழிக்கும்பொருட்டு. 'துட்டரைத் தொலைப்ப' எனவே, சிட்ட பரிபாலனம் தானே பெறப்படும், களை கட்டப் பயிர்செழிப்பதுபோலே. முட்டர் - மூடர். சீர்ப்பித்தல் - சிறக்கச்செய்தல். தவம் என்றதன்பின் மூன்றனுருபுவிரிக்க. சிட்டர் -சிரேட்டர்: இங்கு அரசுரிமைக்குச் சிறந்தோரைக்காட்டும். சேர்ந்தவர் - தம்மை அண்டினவர். உரம் பாலிக்கும் - (அவர் துன்பந் துடைத்தலால்) வலிமை கொடுக்கும். பாலித்தல் - கொடுத்தல் என்ற பொருளதாதலை "சிற்றம்பலம் ......இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே" என்ற தேவாரத்தாலும் அறிக. மட்டு அறு - அளவில்லாத. தெவ்வர் - பகைவர். தப - கெட. தபுதல் - கெடுதல், ஒழிதல். அச்சுறுத்தும் - பயமூட்டும். பொற்சிலை - அழகியவில். அம்மா - வியப்பிடைச்சொல். வில்லின் செயல்கள் வியந்தவாறு.()

6.—இரண்டு கவிகள் - விற்பிடிச் சிறப்பு.

மிடிகரக்கப் புலவருக்கு மிகுபொருளீந் திடுவார்தம்
அடியிரக்கத் தொடுபணிவார்க் கரசுதருங் கொடையாளர்
படியுரக்க வவதரித்த பண்ணுடர் கரத்தமைவிற்
பிடியுரத்தி னலன்றே பெருஞால மூரமுறலே.

(கு-ரை.) விற்பிடி-வில்லை உறுதியாக உரத்தொடு பிடித்தல். உரம் - வலிமை. வில்லைப்பிடிக்கும் வலிமையினால்தான் உலகம் வலிமை பெறுகின்றது என்றது ஈற்றடி. பெருஞாலம் - பரந்த உலகம். உறல்- உறுதல், பொருந்துதல். மிடி-தரித்திரம், வறுமை. கரக்க-ஒளிக்க, ஒழிய. ஈந்திடுவாரும் கொடையாளரும் ஆகிய பண்ணாடர் என இயையும். தம்அடி பணிவார்க்கு இரக்கத்தொடு அரசு தரும் என இயைத்துப்பொருள் கொள்க. இனி, இரக்கத்தொடு பணிவார்க்கு - மனவருத்தத்தோடு பணிபவர்க்கு எனலுமாம்: இரக்கம்' - மனவருத்தம் (Regret): 'உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்'' (தொல்: பொரு: 226). ஈண்டு, "மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி, ஈயென விரக்குவ ராயிற் சீருடை, முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்" என்ற புறம் நினைக. படி - பூமி. "படிபுரக்க அவதரித்த பண்ணாடர்" என்ற தொடரால், உலகைக் காப்பதற்கெனவே அக்கினியிலிருந்து சிருட்டிக்கப்பட்டவர் என்பது பெறவைக்கப்பட்டது. பண்ணாடு - தமிழ் நாடு: பண் - இசை: இசைபயிலும் நாடாதலின், தமிழ் நாடு பண்ணாடாயிற்று. இதனை 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானச்சம்பந்தன்'' "ஓதும் குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல் "இசை, கூட்டி வண்சடகோபன் சொல்லமை, பாட்டோராயிரம்'', "பண்டலையிற் சொன்ன தமிழாயிரம்'' செயிரில் சொல்லிசை மாலையாயிரம்'' "பண்கொளாயிரம்'' முதலியன கொண்டு தெளிக. எனவே, பண்ணாடர் - தமிழ்நாட்டு வேந்தர்: இவர் முன்னரே பாயிரத்து எட்டாஞ்செய்யுளுரையிற் கூறப்பட்டனர். பெருஞாலத்துப் பண்ணாடு ஏகதேசமாயிருப்ப, "பண்ணாடர்கரத்தமை விற்பிடியுரத்தினாலன்றோ பெருஞால முரமுறலே" என்றது என்னையெனில், "உறங்குமாயினுமன்னவன் றன்னொளி கறங்குதெண்டிரை வையகங் காக்குமால்" என்ற உண்மைபற்றி என்க. (6)

7. **மைப்படியு முடலவுணர் வருக்கமாய் வுற்றதுவும்**
இப்படியோ டனைத்துலகு மிணையினலம் பெற்றதுவும்
நெய்ப்படியுஞ் சுசியுதித்தோர் நீள்பகழி தொடுசிலையின்
கைப்பிடியாண் மையினல்லாற் கடைப்பிடியே இயம்பீரே.

(கு-ரை) மை- கருமைநிறம். படியும் - பொருந்திய.அவுணர்- அசுரர், இராக்கதர். வருக்கம் - வமிசம்: கூட்டம். "அரக்கர் தம் வருக்கம்'' என்றார் இராமாயணத்து உருக்காட்டுபடலத்தும் (செ:20.) மாய்வுற்றதுவும் - குற்றியலுகரம் கெடாது வகரவுடம்படுமெய் பெற்றுவந்தது. மேல், ''பெற்றதுவும்' என்பதற்கும் இங்ஙனமே கொள்க, மாய்வுறல்-நாசமடைதல், இ+படி = இப்படி. படி - பூமி. அனைத்து உலகு - ஏனைய மேலேழு கீழேழுலகங்கள். அவை நலம் பெற்றமை - அவுணர் வருக்கம் நசித்ததால் என்க. இணையில் நலம்-ஒப்பற்ற நன்மை: மிக்கநன்மை என்றபடி. நெய் - ஆகுதிநெய். ஓமத்தீயில் மந்திரபூர்வமாக நெய் சொரிதல் இயல்பு. சுசி - அக்கினி. "சுடர்ச் சுசியன்ன துயோன்" என்றது

சேதுபுராணம். உதித்தோர் - வன்னியர். பகழி-அம்பு. தொடுத்தல் - வைத்து விடுதல். தொடுசிலே - வினைத்தொகை. ஆண்மை-ஆளுந் தன்மை. கடைப்பிடி - உறுதி. ஏது - வேறு எது. இயம்பீர் - இயம்புவீர் என்பதன் சிதைவு. (7)

8.—வின்மணிச் சிறப்பு.

பணியிறைக்கங் கணனடியைப் பழிச்சுநர்வா தாபிமுடி
துணியிறைவர் பண்ணுடர் சோதிமணி முடிவனியர்
அணியிறையேந் தியவயிர மாஞ்சிலேயி லடருநவ
மணியிரையக் களகளென வயிறிரையு மாற்றலர்க்கே.

(கு - ரை.) வின்மணி-வில்லிற் கட்டியிருக்கிற மணி. பழிச்சுநர், இறைவர், பண்ணுடர் என்பன மூன்றும் வனியர் என்ற ஒரு பொருளின்மேல்வந்த பெயர்கள். பணியிறைக்கங்கணன் - சிவபிரான்: பாம்புகட்குத் தலைவனை ஆதிசேடனைக் கங்கணமாக் கொண்டவன். பணி-பாம்பு: பணத்தை [படத்தை] யுடையது எனக் காரணப்பொருள்படும். இறை - தலைவன். ஆதிசேடன் பாம்புகட்கு இறை எனப்படுவன். கங்கணம்-கைவளை. நாகாபரணனுதலின் பணியிறைக் கங்கணன் என்றது. அடி - உபயபாதங்கள். பழிச்சுநர் - பரவுவோர்: துதிப்போர். வன்னியர் சிவபக்தர்கள் என்பது பெறப்பட்டது. வாதாபி முடி துணியிறைவர் - பல்லவர். வாதாபி மன்னரின் கிரீடத்தைச் சிதைத்த அரசர் பல்லவர்கள். பல்லவமன்னர்களுக்கும் வாதாபி மேலேச்சளுக்கியமன்னர்களுக்கும் இடையே போர்கள் நிகழ்ந்தமை வரலாற்றில் பிரசித்தம். "மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித், தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப், பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும் இன்னன எண்ணில கவர்ந்தே இகலரசன்முன் கொணர்ந்தார்" என்ற சிறுத்தொண்ட நாயனர் புராணத்தால் இது தெளியலாம். பண்ணுடர்-இங்கு சேர சோழ பாண்டியர் மூவரையும் குறிக்கும். சோதி-பிரகாசம். மணிமுடி - இரத்தின மயமானகிரீடம். அணி-அழகுபொருந்திய,இறை-மணிக்கட்டு: இங்கு, கைக்கு ஆகுபெயர். வயிரம்-உறுதி. அடரும்-செறியக்கட்டிய. நவம் - புதுமை. இரைய - ஒலிக்க. களகளென - இரட்டைக்கிளவி. மாற்றலர்க்கு- பகைவர்க்கு. வயிறு இரையும் - வயிறு குழம்பும்: பகைவர் அஞ்சுவர் என்றபடி: பிறிதினவிற்சி .()

9.—நாணியின் சிறப்பு.

கன்னுணும் புயமுடையார் கடனுறு மருளுடையார்
மன்னுண்மைப் பொலிவுடையார் மணிமுடிவன் னியர்தாங்கும்
வின்னுணின் வலியாலே வியனிலம்வாழ் வதுமடையார்
தந்நாண மிழந்துவலி தாழ்ந்துகரங் குவிப்பதுமே.

(கு - ரை.) நாணி - வில்நாண்: வில்லில் தொடுக்கும் கயிறு. கல் - மலைக்கு இலக்கணை. கல் நாணும் புயம் - மலையையும் (தன் திண்மையால்) கீழ்ப்படச்செய்யும் தோள். அருள்-கிருபை; கருணை.

மன் - நிலைபெற்ற. பொலிவு - தேசு. மணிமுடி-இரத்தினகிரீடம். நிலம் வாழ்வதும் கரங்குவிப்பதும் வில்நாணின் வலியாலே என்க. வியன் - பரந்த,விசாலமான: உரிச்சொல். நிலம் வாழ்வது - பூமியி லுள்ளார் நல்வாழ்ச்சியடைதல். அடையார் - பகைவர். நாணம் - மானம். தாழ்தல் - குன்றுதல், கெடுதல். கரங்குவிப்பது - கீழ்ப் படிதல் குறிப்பினது. (9)

10:—இதுமுதல் நான்குகவிகள் - வில்லேந்துதற் சிறப்பு.

உலகறிமும் முரசொலிப்ப வுலைவில்கலி வெருண்டொளிப்ப
நிலவெனவெண் குடைகவிப்ப நிகழ்பவம்பின் புறந்தவிப்ப
இலகுபுலிக் கொடிதழைப்ப விருங்குடிகள் விருந்தழைப்ப
அலகிலவா வியற்றும்வன்ய ரணிசிலையேந் துவதம்மா.

(கு - ரை) வன்யர் - வன்னியர்: இடைக்குறை. அணிசிலை - வினைத்தொகை. ஏந்துவது - தொழிற்பெயர்: இஃது இயற்றும் என்ற வினைமுற்றுக்கு எழுவாயாகும். மும்முரசு-கொடைமுரசு, மணமுரசு, வீரமுரசு என்பன:இதனை "வம்மினெனப் புலவோரை யழைத்திடும் வண்கொடைமுரசமென" என்றுதொடங்கும் முத்துக் குமாரசுவாமிபிள்ளைத்தமிழ்ச்செய்யுளால் உணரலாம். இதனையே கொடைமுரசு,மங்கலமுரசு, வெற்றிமுரசு எனவும் வழங்குப. உலைவு-தோல்வி: "தெவ்வருலைவிடத்தார்த்து" (பெரும்பாண்:419) இதுவரையில் தோல்வியில்லாத கலி வன்னியர் சிலையேந்துவது கண்டு வெருண்டொளித்தது என்க. கலி-தரித்திரம்,வறுமை.வெரு ளுதல் - அஞ்சுதல், பயமடைதல். ஒளிதல் - மறைதல். நிலவு - சந்திரன். பவம் - பாவம்; "பவமல்லா லாய தரும மறியார்" என்றதுகந்தபுராணம். 'புறந்தந்து தவிப்ப'என்பது 'புறந்தவிப்ப' என மருவியது. புறந்தருதல் - முதுகுகாட்டியோடல். 'புறம்' என்பதே போதுமாயிருப்ப, மேலும் 'பின்' என்றது, பாவம் அற ஒழிந்தமை காட்டும். இலகுதல் - இலங்குதல், விளங்குதல். புலிக் கொடி - சோழர்க்குரியது. இங்கு 'புலிக்கொடி தழைப்ப' என்றது வீரம் எங்கும் செறிய என்றபொருளது. இருங்குடிகள் - பெரிய குடிமக்கள். விருந்தழைத்தல் - அதிதிபூசை செய்தற்கு. எனவே 'இல்லறம் செம்மைப்பட' என்றது பெற்றும். விருந்தோம்பலின் சிறப்பைத் திருக்குறள் கூறுவது ஈண்டு நினைக. அலகிலவா - எண்ணற்றனவாக; ஆ - ஆக என்பதன் விகாரம். அம்மா - வியப் பிடைச்சொல்; சிலையேந்துவது செய் தொழில்கள்கண்டு வியந்த வாறு. ஒலிப்ப - ஒளிப்ப, கவிப்ப - தவிப்ப, தழைப்ப - அழைப்ப என நயம்படவந்த வினையெச்சங்கள் அடுக்கி 'இயற்றும்' என்ற வினையொடு முடியும். (10)

11. அலையை யெடுக்கா விடிற்பரவைக் காற்ற லேதவ் வரவரசன்
தலையை யெடுக்கா விடிற்பொலிவு தரணிக் கேது விதுவளரும்
கலையை யெடுக்கா விடிற்காட்சி கங்குற் கேது வன்னியர்செஞ்
சிலையை யெடுக்கா விடியுயிர்க்குச் செழிப்பங் கேது செப்பிடினே.

(கு - ரை.) செப்பிடின் - சொல்லப்புகுந்தால். எடுக்காவிடில்- தோற்றுவிக்காமலிருந்தால். பரவை-சமுத்திரம். சமுத்திரத்திற்கு ஆற்றல் (வலிமை) அலைகளையெழுப்புதலே. அரவு அரசன்-பாம்புகட்கு அதிபனுகிய ஆதிசேடன். அகரம் பிரசித்திகாட்டுவது. எடுத்தல்-தூக்குதல். ஆதிசேடன் பூமியைத் தலையாலே தூக்கித் தாங்குவன் என்பது மரபு. தரணி-பூமி: எல்லாப்பொருள்களையும் தரிப்பது எனக் காரணக்குறி. பொலிவு-விளக்கம். விது-சந்திரன். கலை-சந்திரனின் ஒளிப்பங்கு: பதினாறு அமிசத்து ஒன்று. வளருங் கலையையெடுத்தல்-சுக்லபட்சத்தில். கங்குல்-இரவு. காட்சி-அழகு: "அணங்கு மெய்ந்நின்ற வமைவரு காட்சி" (பொருந:20). செழிப்பு - வளம்: நிறைவு. 'கங்குற்கேது' என்றதன்பின் 'அவை போல' என்ற உவமவுருபு தொக்கதாக் கொண்டால் இப்பாடல் எடுத்துக் காட்டுவமை. (11)

***12.* வட்டவுல கிற்கொடிய நெட்டவுண ரைச்சமரின் மட்டறவி டித்தெ திரெயிற், கிட்டவறு பட்டதலை நட்டுவிழ மொட்டையுடல் கெட்டுருட ரக்கு ருதிநீர், கொட்டநுரை கட்டிடமி கச்சுழிசு ழித்தலைகொ ழித்துநதி யிற்பு கவழி, விட்டுறுமி நெட்டையிடு மக்கினி குலத்தரச விக்ரமரெ டுத்த சிலையே.**

(கு-ரை.) வட்டவுலகம்-மண்டலாகாரமான பூமி. தெண்கடல் வளாகமாதலின் வட்டவுலகம் என்றது. இவ்வுலகில் விக்ரமர் எடுத்த சிலையின் தொழில்கள் கூறப்படுகின்றது. விக்ரமர்-பராக்கிரமமுடையவர்: மிகுபலமுடையவர்: வீரர். சிலை உறுமி நெட்டையிடும் என வினைமுடிபு காண்க. நெடுமை-அளவின்மை: "நெடுங் கடலுந் தன்னீர்மைகுன்றும்" என்றவிடத்துப்போல. இனி நெடுமை - கொடுமை எனக்கொண்டு, ஒருபொருட்பன்மொழிக் கொடுமை மிகுதி குறிப்பதெனினுமாம்; "மருந்தரு நெடுங்கடு வுண்டு மாய்துமோ" (கம்ப. கிட்கிந்: சம்பாதி: 5). நெடுமை-உயரம் எனினுமமையும். அவுணர் - அரக்கர்; அசுரர். சமர்-அமர்; போர். மட்டு அற - அளவில்லாதபடி: மட்டு-அளவு. இடித்து-கொன்று. அளவில்லாத அவுணராதலின் அளவில்லாதபடி இடித்து என்றது. (பின்னர்) எதிர் எயில் கிட்ட - மேலும் எதிர்த்து நிற்கும் (பகைவர்களின்) மதில்களைநெருங்க. நெருங்கியவுடனே சிலை நிகழ்த்துஞ்செயல்களைக்கூறுவது மேல்வரும்தொடர்கள். தலை விழ, உடல் உருள்தர, குருதிநீர்கொட்ட, நதியிற்புகவழிவிட்டு உறுமி நெட்டையிடும்...சிலை என முடிபு. தலைநட்டுவிழல் - தலை கீழேயூன்றி விழுகை: மண்முகங்குத்திவீழல். மொட்டையுடல் - தலைபோன வுடல்; கவந்தம், முண்டம். கெட்டு - சிதைந்து. உருள் தர - உருள: தா - துணைவினை. குருதி நீர் கொட்ட - [அறுபட்ட இடங்களிலிருந்து] இரத்தம் பெருக, குருதிநீர் - இருபெயரொட்டுப்பண்புத்தொகை. [அங்ஙன் பெருகியோடுதலால்], நுரைகட்டிடும்படி மிகச்சுழிசுழித்துஎன்க. நீர்ச்சுழிகளில் நுரைதோன்றுதல் இயல்பு. அலைகொழித்தல் - அலைகளைத் தோற்றுவித்தல். உருண்ட மொட்டையுடல் நதியிற்புக வழிவிட்டு எனக் கூட்டிப் பொருள் காண்க. நதி-குருதிநதி. சிலை உறுமுதல் - நாணொலியப்

பேரொலி செய்தல். நெட்டையிடும் - வளைவுநீங்கி நீண்டு நிற்கும்: எடுப்பதற்கு முன்னின்ற நிலைமையைப்பெறும் என்றபடி: பழையநிலையையடையும் என்றவாறு. இப்பாடல், முதலைந்துங் கூவிளங்காய்ச்சீர்களும், ஆறுவது தேமாச்சீரும் ஏழாவது புளிமாச்சீருமாகிய எழுசீராசிரிய விருத்தம். (12)

13. **குடைகொண் டெழுந்தான் மாயனெடுங் குன்றந் தனை யான் குலங்களிக்கப், புடைகொண் டெழுந்து பொழிந்தபெரும் புயல்க ளிரிந்த வன்னியர்விற், படைகொண் டெழுந்தார் புவிசெழிக் கப் பதறி யவுணர் தென்பதிக்கே, விடைகொண் டெழுந்தே யொரு நாளு மீளா வகைசென் றடைந்தனரே.**

(கு - ரை.) ஆன்குலங்களிக்க மாயன் நெடுங்குன்றந்தனைக் குடைகொண்டெழுந்தான் என அந்வயம். மாயன் - ஆச்சரியமான வன்: கண்ணபிரான். நெடுங்குன்றம் - கோவர்த்தன மலை. ஆன் குலம் - பசுக்கூட்டங்கள். இந்திரன் பொழிந்த மழையினின்றும் ஆநிரைகளைக்காக்கக் கண்ணன் கோவர்த்தனகிரியைத் தூக்கிக் குடையாகப்பிடித்தமை பிரசித்தம். புயல்கள் - மேகங்கள்: புஷ்கலாவர்த்தம் முதலியவை. புடை கொண்டெழுதல் - (நீர்கொண்டு) பக்கந்திரண்டெழுதல். இரிந்த - கெட்டோடின. மாயன் எழுந்தான் புயல்கள் இரிந்த: அதுபோல, வன்னியர் எழுந்தார் அவுணர் மீளாவகைசென்றடைந்தனர். எடுத்துக்காட்டுவமை. புவிசெழிக்க எழுந்தார் என மாறுக. அவுணர் - அரக்கர்: தென்பதி - யமபுரம்: யமன் தெற்குத்திக்குப்பாலகன். மீளா வகை - திரும்பிவராதபடி. Cp. "from whose bourn no traveller returns" (Shakes: Hamlet). (13)

14.—வில்வளைத்தற்சிறப்பு.

தனுவணங்கொண் டுலகளிப்பத் தார்வேந்த ரெனவுதித்தோர்
தனுவணங்க னும்வெள்கித் தாள்வணங்கு மெழின்மிக்கோர்
தனுவணங்க கலவெவர்க்குந் தாய்போனன் றுற்றும்வன்யர்
தனுவணங்கத் தரியலர்கள் தஞ்சமென வணங்காரோ.

(கு - ரை.) உதித்தோர், மிக்கோர் என்பன வன்யர்க்காகும். தார் - மாலை: அடையாளமாலை யெனினுமாம். வேந்தரென உதித்தோர் - க்ஷத்திரியர்கள் என்னும்படி தோன்றினோர். உலகு அளித்தற்குத் தனுவணங்கொண்டனர் என்க. தனு - சரீரம்: இங்கு மானிட சரீரம். வணம் - வண்ணம் என்பதன் இடைக்குறை. உலகு அளித்தலாவது - துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்தல். அதற்காக வன்னியர் க்ஷத்திரியரென்னும்படி மானுடசரீரம் தாங்கினர் என்பது கருத்து. தன் உவண் அங்கசனும் எனப் பதம் பிரிக்க. உவண் - உகரச்சுட்டினடியாப்பிறந்த இடப்பெயர். தன் உவண்-தன்னிடத்து. இது, தனுவண் எனத் தொகுத்தல் பெற்று வந்தது. அங்கசன் - மன்மதன். உம்மை - உயர்வுசிறப்பு. வெள்குதல் - நாணுதல். தாள்வணங்குதல் தோற்றோர்செயலாதலறிக. மன்மதனும் அடிவணங்கும் பேரழகுமிக்கவர் வன்யர் என்றபடி. தனு அணங்கு - சிறிதளவேனும் நோய் வருத்தாதபடி, அகல -

நீங்குமாறு, நன்றுஆற்றும் என இயைக்க. தனு - சிறுமைக்கு எடுத்துக்காட்டிய ஓர் அளவு. அணங்கு - நோய். 'தாய்போல்' என்றது, சிறு பிரஜைக்கு நோய்வாராதபடி தடுக்கத் தான் மருந்துண்பளாதலின். நன்று - நன்மையான செயல்கள் என்றபொருளைத்தந்ததனால் பண்படியாப்பிறந்த குறிப்புவினையாலணையும் பெயர்: பண்பாகுபெயரெனவுமாம். ஆற்றுதல் - செய்தல். தனு - தனுசு: வில். வணங்குதல் - வளைதல். தரியலர் - பகைவர். தஞ்சம்- அடைக்கலப்பொருளாவோம். என - என்று வாய்வெருவி. வணங்குதல்-அடிபணிதல். ஈற்றடியில் 'வணங்குதல்' என்ற சொல் இருவேறுபொருளில் வந்தது, சொற்பின்வருநிலையணி. (14)

15.—நாணேற்றுதற் சிறப்பு.

ஓங்குபுகழ் வன்னிமன்ன ரொன்னலார்த மைப்புறங்கண் டுலகங் காக்கத், தாங்குவரி சிலைவணக்கிச் சரோருகக்கை யாற்றீண்டித் தனிநாண் பூட்டப், பாங்குறுமூ வுலகினரும் பைங்கழைத்தோண் மடநல்லார் பசும்பொன் வண்ணப், பூங்கமுகின் மங்கலநாண் பூட்டுதல்போன் மெய்ப்புளகம் போர்ப்பர் மன்னோ.

(கு - ரை.) நாண் - வில்லிற்பூட்டும்கயிறு. ஒன்னலார் - பகைவர். ஒன்னுதல் - பொருந்துதல்: மனம்பொருந்தாதவர் என்றபடி. புறங்காணல் - முதுகுகாட்டியோடச்செய்தல். வரி - கட்டு. வரிசிலை - கட்டமைந்தவில். 'வரிச்சிலை' என்ற பாடமும் உண்டு. வணக்கி - வளைத்து. சரோருகம் - தாமரை மலர். ஸரோருஹம் என்பது - குளத்தில் முளைப்பதென்று (ஸரஸ் - நீர்நிலை) காரணப் பொருள்படும்: இது காரணவிடுகுறி. சரோருகக்கை - உவமைத் தொகை. தீண்டுதல் - பற்றுதல், பிடித்தல். தனி - ஒப்பற்ற. நாணுக்குத் தனித்தன்மையாவது - மூவுலகினரையும் மகிழ்வித்தல். பாங்கு - இடம்: "பட்டிமண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்" (மணி: 1, 61). பைங்கழை - பசியமூங்கில்: பசுமை, ஈண்டு இளமையின்மேலது. மடவார் தோளுக்கு இளைய மூங்கிலை உவமித்தலை 'அமையார்தோள்' என்ற வள்ளுவர் வாக்காலும் 'வேயுறு தோளி' என்ற சம்பந்தர் வாக்காலும் தெளியலாம். மகளிர் தோளுக்கு இளமூங்கில், திரண்டு உருண்டுநீண்ட வடிவிலும் செப்பிலும் உவமையாம். மட நல்லார் என்றது, மடமை அவர்க்குப் பெண்ணியல்பாதல் பற்றி. "அச்சமும் நாணும் மடனு முந்துறுதல், நிச்சமும் பெண்பாற்குரியவென்ப" என்றது தொல்காப்பியம். மடன்-மடமை, பேதைமை: "உடனுடு மகளிர்க்கோர் பேதைமையுமுதவி" என்றூர் குமரகுருபரரும். நல்லார் என்றது ஈண்டு கன்னிப்பெண்களை. வண்ணம் - நிறம். கமுகு - கழுத்துக்கு உவமையாகுபெயர். பெண்களின் கழுத்துக்குக் கமுகை உவமித்தலை "மங்கைதன் கழுத்தை நோக்கி வளரிளங் கமுகும் நினைதியாயின்" என்ற கிட்கிந்தா காண்டச் செய்யுளாலும் அறியலாம். 'நத்துடனே பூகம் வரிக்கழுத்து' என்றது, இரத்தினச்சுருக்கம். கமுகு - பாக்குமரம்: இது, கழுத்துக்குத் திரட்சியிலும் வழுவழுப்பிலும் உவமை. மங்கலநாண்-மாங்கல்யசூத்

திரம்; தாலிக்கயிறு. மெய்ப்புளகம் போர்த்தல்-உடம்பில் மயிர்க் கூச்செறிதல்: இது, மகிழ்ச்சிக்குறி. மன், ஓ - அசை. இனி, 'மன்னே' என்ற பாடத்துக்கு, மன் போர்ப்பர் என இயைத்துப் பொருள்காண்க: மன் - மிகுதிப்பொருளில் வந்த இடைச்சொல். (15)

16.—குணத்தொனிச் சிறப்பு.

நெடியதிரை யெழுகடலி னொலியுமழை முகிலொலியு நிகழும்
யுக முடிவின் முடுகும், ஒடிவில்பெரு வளியொலியு முருமொலியு
மிணையிலென வுரகர்விழி பிதிர வெருவிக், கொடியதிது கொடியதென
விபுதர்நிலை கெடவவுணர் குடர்குலைய வடர்தி சையுடன், படியதிர
வனியர்சிலை தழுவுகுண வொலியினிலை பகர்வதெவ னரித ரிதரோ.

(கு - ரை.) குணம் - வில்லின்நாண்: (Bow - string) வடசொல்: தொனி - டங்காரத்தொனி: வில்நாண் தெரித்தலாலெழும் ஓசை (Twang of a bow-string) 'தன்சிலை......குணத்தினிசை காட்டினன்' என்றது கந்தபுராணமும். நெடிய திரை-பேரலைகள். எழுகடல் - ஏழுகடல்கள். இனி, திரையெழுகின்ற கடல் எனினுமாம். ஒலி - ஓசை, முழக்கம். முகிலொலி-மேக கர்ச்சனை. மேல் உருமொலியென வருதலின், இது மேகத்தின் குமுறலொலி என்க. நிகழும் யுக முடிவு-கலியுகாந்தம். முடுகும்-விசையொடு வீசும். ஒடிவுஇல் - குறைதலில்லாத; ஒடுங்குதலில்லாத. வளி - காற்று. பெருவளி - பிரசண்டமாருதம். யுகமுடிவில் பெருங்காற்றுப் பேரொலியொடு விசையுடன்வீசி உலகையழிக்குமென்பது துணிபு. உரும் - இடி. இணையிலென வெருவி-ஒப்பில்லைஎனப் பயந்து. உரகர்-நாகசாதியார்: கீழுலகத்தவர். விழிபிதிரல், அச்சச்செயல். விபுதர்-தேவர்கள்: 'இவர் மேலுலகத்தவர். நிலைகெடல்-தத்தமக்குரிய நிலைமைகுலைதல். 'இது கொடியதுகொடியது' என்றது தேவர் கூற்று. அடுக்கு - கொடுமை மிகுதிதெரிப்பது. அவுணர் - அரக்கர்: வி[illegible]தர்களுக்குப் பகைவராகிய இவர்களையும் உடன்கூறியது, நட்பு பகையென்ற வாசியின்றி அனைவரும் நடுங்கினர் என்றபடி. குடர்-குடல்: ஈற்றுப்போலி. அடர்திசை - [எட்டாக] நெருங்கிய திக்குக்கள். படி-பூமி. அட்டதிசையுடன் பூமியும் அதிரஎன்றபடி. சிலை தழுவு-சிலையில்பொருந்திய. இனி, வனியர்தழுவுசிலை குணவொலியின்நிலை என மாறிப் பொருள் கொள்ளினுமாம். எவன்-வினைப்பொருளைத்தருங்குறிப்புவினைமுற்று. அரிதுஅரிது-அடுக்கு, கூறுதலின் அருமை மிகுதிதெரிப்பது. அரோ - ஈற்றசை. இது, முதலைந்தும் கருவிளங்காய்ச்சீர்களும், ஆறும் ஏழும் மாச்சீர்களுமாகிய எழுசீராசிரியச்சந்தவிருத்தம். (16)

17.—அம்பருத்தூணிச் சிறப்பு.

உம்பர்யா மென்றிறுமாந் துறைவதுண்டவ் வமரர்யாங்
கம்பரா மென்றேத்தக் கவியரசாய் வாழ்வதுமுண்
டிம்பரா ருஞ்சொல்வன் யரேலாருக் கிடரிழைக்கும்
அம்பருத் தூணியுண்டே லாவியங்கத் தெவர்க்குமுண்டே.

(கு - ரை.) அம்பறுத்தூணி - அம்புநீங்காத கூடு: அம்புப் புட்டில்: (quiver). இம்பர் - இவ்வுலகம். ஆரும் - யாரும். சொல் - சிறப்பித்துச் சொல்லுகின்ற. ஏலார் - பொருந்ாதவர்: பகைவர். ஏலாருக்கு இடரிழைக்கும் எனவே, நொதுமல் நண்பு இவர்கள் திறத்து நன்மைசெய்யும் என்பது பெற்றும். உடையவன் செயல் உடைமையின் மேலேற்றிக் கூறப்பட்டது. ஆவி அங்கத்து எவர்க்கும் உண்டு என்றது - எல்லாரும் அச்சமின்றி உயிர்வாழ்வர் என்றபடி. அதனுல், அமரர் 'உம்பர் யாம்' என்று இறுமாந்து உறைவதுண்டு; யாம் 'கம்பர் ஆம்' என்றுஏத்த வாழ்வதுண்டு என்றுர். அமரர் - மரணமில்லாதவர் என்று காரணப்பொருள்பட்டுந் தேவர்களுக்காகும். உம்பர் - மேலிடத்தவர், மேலானவர். இறுமாந்து - செருக்கி, அகங்கரித்து. யாம்-கவிக்குரிய தனித்தன்மைப்பன்மை. 'கம்பர் ஆம்' என்றுஏத்த - 'இவர் கம்ப நாடர் ஆவர்' என்று மக்கள் போற்றுமாறு. 'கவியரசு' என்றதால் நாட்டுரிமை குறிப்பித்தபடி. "கம்பர்து கல்வியும் காட்சியுமே காசினிமுற்றும் மேம்படுத்துப் புகழ்ந்து பாராட்டு தலைச் சோழன் தெரிந்து அவரைத் தன்பால் அழைப்பித்து......அரசர்க்கொத்த வரிசை பலவளித்துக் கவிச்சக்கரவர்த்தியெனப்பட்டந் தந்து, அவ்வரிசைக்கும் பெயர்க்கும் தக நாடொன்று நல்கி, தான் நல்கிய அந்நாட்டிற்கும் கம்பனுடு எனப் பெயர் வழங்குவித்து, இவரைப் பெரிதும் உயர்த்திஞன்" என்ற செந்தமிழ்ப் பத்திரிகைக் குறிப்பு ஈண்டு நினைக்கத்தக்கது. மற்றும் "கம்பன் போனவழி கண்டு கழித்தது" என்ற பெருவழக்கும் அவர் கவியரசாய் வாழ்ந்தமைக்குச் சான்றுகும். *(17)*

18.—பிரமாத்திரச் சிறப்பு.

வரமிகுவன் னியர்வணங்கா முடியரசர் வண்மைதனை வரைய வேண்டிற், சிரமகுட மன்னவராய்ப் பற்பலதே யங்களினுந் திகழ் வோர் தம்முள், விரவலரைப் பொன்னிலத்து மித்திரரை யிந்நிலத் தும் வீறி வாழ்வான், பிரமசிரத் தானிறுவும் பெற்றிமைகண் டாய்ந் தேவர்தாம் பேசற் பாற்றே.

(கு - ரை.) பிரமாத்திரம் - பிரமனது அஸ்திரம்: இதனை, "விரிஞ்சன் மாறிலாப் பெரும்படைக்கலம்" என்றும், "தேவியாவையுமுலகமுந் திருத்திய தெய்வக், கோவினுன்முகன் படைக்கலம்" என்றும் கம்பரே சுந்தர காண்டத்தில் பாராட்டியுள்ளார். பற்பல தேயங்களினும் சிரமகுடமன்னவராய்த் திகழ்வோர்தம்முள் வணங்காமுடியரசராகிய வரமிகு வன்னியரின் வண்மைதனை எல்லைக்குட்படுத்திப் பேச வேண்டின், ஆய்ந்து எவர்தாம் பேசற்பாற்று என்பது கொண்டுகூட்டு முடிவு. வண்மை எவராலும் பேசலாகாமைக்கு ஏது பின்னிரண்டடிகளிற் கூறப்பட்டுள்ளது. தேயம் - தேசம்: நாடு. சிரமகுட மன்னவர் - கிரீடந்தரித்த அரசர்கள்; மகுடாதிபதிகள்; முடியுடைமன்னர். வன்னியர் வணங்காமுடியரசராதற்குக்காரணம் வரமிகுத்தவராதலின். வரம் மேன்மையுமாம். வண்மைதனை - கொடையின் பெருமையை-

வரைதல் - ஈண்டு எல்லைப்படுத்திப் பேசுதல் என்ற பொருளது, மேல் 'எவர்தாம்பேசற்பாற்றே' என வருதல் நோக்கி. விரவலர் -பகைவர். பொன்னிலம் - தேவலோகம். மித்திரர் - நண்பர். வீறி வாழ்வான் நிறுவும் பெற்றிமை என இயையும்: வீறி - தனிச் சிறப்புடன், வாழ்வான் - வாழும் பொருட்டு, நிறுவும்-நிலைபெறச் செய்கின்ற, பெற்றிமை - தன்மை. கண்டு - என்பதன்பின் உம்மை தொக்கது எனலாம். நிறுவுதற்குக்கருவி பிரமசிரமாகும். பிரமசிரம் -பிரமாஸ்திரம் என்பதன் சிதைவு. வன்னியர்விடும் பிரமாஸ்திரம் பகைவரைத் தேவருலகத்தும் நண்பரை இப்பூவுலகத்தும் வீறி வாழ நிறுவுந்தன்மையது என அவ்வத்திரத்தின் சிறப்புக் கிளந்தவாறு. விரவலரைக் கொன்றொழிப்பர் என்றபொருளை 'பொன்னிலத்து வீறிவாழ்வான் நிறுவுவர்' என வேறு வாய்பாட்டினாற் கூறியது, **பிறிதின்நவிற்சியணி.** (18)

19.—நாராயணாத்திரச் சிறப்பு.

காரியலுங் கரதலவன் னியவீர ரடுசமரிற் கனன்றே யுய்க்கும்
பேரியனா ராயணாத் திரத்தி னுக்கிந் திராதிபிர மாதி யோரும்
நேரியல வுட்குவரே லியாவரெதிர் வாழ்த்தியதை நின்று தாழ்வோர்
பாரியர்மங் கலநாண்பன் னாளுநிலை பெறவரம்பா லிக்கு மம்மா.

(கு - ரை.) நாராயணாத்திரம் - திருமாலை அதிதேவதையாக வுடைய அம்பு. கார் - மேகம். இயலும் - உவமவாசகம். கரதலம் - இருபெயரொட்டு. கரம் - கை. கைம்மாறு கருதாது பரோபகாரத் திற்காகவே நல்லநீரைச் சுமந்துகொண்டு உடம்பு வருந்தச் சென்று ஆங்காங்குப் பெய்து எல்லாவுயிர்களையும் பாதுகாத்தல் மேகத்தினியல்பு. அதுபோல, இவ்வுலகத்தில் அனைவரையும் உய்வித்தற்பொருட்டு மெய்வருத்தம் பாராமல் எங்குந்திரிந்து நல்லொழுக்கங்காட்டிக் கைம்மாறு கருதாது உதவும் இயல்பினர் வன்னியர் என்பது தேர்ந்த பொருள். அடுசமர் - வினைத்தொகை. அடுதல் - கொல்லுதல். சமர் - அமர், போர். கனன்று-கோபித்து. உய்க்கும் - செலுத்தும், பிரயோகிக்கும். பேர் இயல் - பெரிய தன்மை: தனிச்சிறப்பு. அதன் பேரியலை "மாற்றரிய மறையொடு நாராயணன்றன் வாளி தொடுத்தலு மந்தவாளியூழிக், காற்றெரியொடெழுந்ததெனக் கார்கோண் மொண்டு காரேழுமதிர்ந்ததெனக் கனன்று பொங்கி......யெய்தியபோது", "பாருருவித் திசையுருவி யண்டகூடம் பாதலத்தி னுடனுருவிப் பரந்து சீறி, யோரொருவ ருடலின்மிசை மயிர்க்காறோறு மோரொரு வெங்கனையாய் வந்துற்றகாலை" என்ற வில்லிபுத்தூரார் வாக்காலறிக. (துரோணபருவம்: 15 - ஆம் போர்ச்: 37-38). மற்றும் அந்த அஸ்திரத்திற்குச் சிறப்பு-படையெடாதவர்மேற்புக்குத் தொழில் செய்யாமை. இந்திராதி = இந்திரராதி: பிரமாதி = பிரமனாதி: "சில விகாரமாமுயர்திணை." நேர் இயல - நேராகநிற்க; எதிரே வர. உட்குதல் - அஞ்சுதல். வச்சிரப்படையானும் சொற்படை யானுமே நேர்வர உட்குவரேல் யாவர் எதிர்வருவர் என்றுகூறிப்

பின், நிராயுதராய் நின்று வணங்கி வாழ்த்துபவர்மேல் அந்த நாராயணுத்திரம் ஊறு செய்யாது என்பதை 'யாவரெதிர்வாழ்த்தி யதை நின்று தாழ்வோர் [அவர்] பாரியர்மங்கலநாண் பன்னுளும் நிலைபெற வரம்பாலிக்கும்' என்பதனுல் தொனிக்க வைத்தார். நிராயுதர்மேற் செல்லாதென்பதை "வெங்கணையாய் வந்துற்ற காலை, நேரொருவர் மலையாமற்றருமன் சேனை நிருபரெலாநிராயுத ராய் நிற்றல்கண்டு...வாளி பொருபடை கொண்மாருதி மேற் போனதாலோ", [கண்ணபிரான் வீமனது] "கையில் வில்லும் வாளியும் வாகனமுமுடன் மாற்றுவித்தான்...நாரணன்சாயக மிகவும் நாணிற்றன்றே" (துரோண: 15-ஆம் போர்ச்: செ: 38,41) என்றவற்ருலுமுணர்க. தாழ்வோர்-வினையாலணையும் பெயர்: அதன்பின் 'அவர்'என்று எஞ்சிய சொல் வருவிக்கப்பட்டது: இது, சொல்லெச்சம். பாரியர்-மனைவியர்: வடசொல். பாலித்தல்-கொடுத் தல். ஈற்றடியில் பிறிதினவிற்சியணி காண்க. பன்னுளும் வாழ்ச்சி பெறுவர் என்றபடி. அம்மா - வியப்பிடைச்சொல். *(19)*

20.—பாசுபதாத்திரச் சிறப்பு.

உருத்திரவின் வயங்குதிங்க ளுதயனெதி ரொளிர்தருங்கொல்
உருத்திரளும் வயிரவரை யுறழ்தோளார் வன்னிமன்னர்
உருத்திரத மிவர்ந்திகலோ ரூரஞ்சாய்ப்பத் தொடுக்குமழல்
உருத்திரவன் படைக்குமற்ற வும்பர்படை யொப்பாமோ.

(கு - ரை.) பாசுபதாத்திரம் - பசுபதியை [சிவபெருமானை]த் தேவதையாகக் கொண்ட அம்பு. பாசுபதன் - சிவபெருமான். உருத்து - உருவங்கொண்டு: எனவே, பூர்ணசந்திரன் என்றபடி. வயங்குதல் - நிலாப்பொழிந்து விளங்குதல். திங்கள் - சந்திரன். உதயன் - சூரியன். ஒளிர்தரும், தா - துணைவினை: கொல் - அசை. உரு திரளும் தோளார், வயிரவரை உறழ் தோளார் எனத் தனித்தனியியைத்துப் பொருண்முடிபு கொள்க. உரு திரளும் தோளார் [திரளும் உரு தோளார்] - திரண்ட வடிவினையுடைய தோள்களையுடையவர். வயிரம் வரை - வயிரமலை. வயிரம் வலிமைக்கும் உறுதிக்கும் எடுத்துக்காட்டு. உறழ் - உவமவுருபு. உருத்து - கோபித்து. இரதம்-தேர். இவர்தல்-ஏறுதல். இகலோர் - பகைவர். உரஞ்சாய்ப்ப - வலிமை குன்ற; உரம் - வலிமை. இனி, உரம் - மார்பு: உடலுக்கு ஆகுபெய ரெனினுமாம். அஞ் ஞான்று, உரம் சாய்ப்ப - உடல் தரையில்வீழ. தொடுக்கும் - வில்லில் தொடுத்து விடும். அழல் - நெருப்பைக்கக்குகின்ற. உருத்திரன் + வன்படை = உருத்திரவன்படை: 'சிலவிகாரமா முயர்திணை' என்ற விதிபற்றி வந்தது. வன் உருத்திரபடை என மாறினுமாம். "ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்" என்றபடி உருத்திரன் என ஆயிற்று. உம்பர் - தேவர். மற்ற உம்பர்படை யென்றதால் - ஆக்கினேயாஸ்திரம், வருணுஸ்திரம், வாயவியாஸ் திரம் போல்வன கொள்க. ஈற்ரேகாரம் - எதிர்மறை. *(20)*

21.—அபிமந்திரித்தற் சிறப்பு.

அக்கரமொன் றக்கரமூன் றக்கரமைந் தக்கரமெட் டாதி யாய
எக்கடவுண் மந்திரமு மெண்ணிலுருச் செபித்துநினை வெய்தி னோரும்
மிக்கதிது வெனவியப்ப விறல்வன்ய குலவரசர் விடுங்கோல் சென்று
தக்கவபி மந்திரமாட் சியினமர்வென் றிறைவனிடஞ் சார்த லாலே.

(கு - ரை.) அபிமந்திரித்தல் - மந்திரத்தால் ஸம்ஸ்காரம் [சுத்திக்கிரியை] உண்டாக்குதல். இது, அம்புகளைப் பிரயோகிக்கும்போது செய்வர். விறல்வன்ய குலவரசர் விடுங்கோல் சென்று ......இறைவனிடஞ் சார்தலாலே......நினைவெய்தினோரும்...வியப்பர் என முடிபு. விறல் - வெற்றி, வலிமை. கோல்- அம்பு. தக்க - அந்தந்த அத்திரத்துக்குரிய அதிஷ்டான தேவதைக்குச் சார்ந்த. அபி - சிறந்த: வடமொழியுபசர்க்கவகை. மாட்சியின், இன் - ஐந்தனுருபு ஏதுப்பொருளது. மாட்சி - பெருமை. இறைவன் - பிரயோகித்தவன். மந்திரபலத்தின் மாட்சியினால் திரும்பவும் பிரயோகித்தவனிடம்வந்து சேர்தலை "ஐயன் வெங்விடாத கொற்றத் தாவம்வந் தடைந்த தன்றே" (கிட்கிந்: வாலிவதைப்: செய்; 153), "பாற்கடலிற்றாய்நீராடி......கார்க்குன்றமனையான்றன் கடுங்கணைப்புட்டிலினடுவட் கரந்ததம்மா" (யுத்த: இராவணன் வதைப்: செ:199) என்று கம்பர் இராமன்திறத்து வைத்துக் கூறியிருத்தலாலுணர்க. அக்கரம் - அக்ஷரம். அக்கரம் ஒன்றினைய மந்திரம் - ஏகாட்சரி: அதாவது, ஓரெழுத்தாலாகிய மந்திரம்: 'ஓம்' என்ற பிரணவம்: "ஓ மித்யேகாக்ஷரம்" என்றது சுருதி. ஸம்ஹிதாகாரத்தாலே [சேர்ந்திருக்கும் நிலையிலுள்ள ரூபம்] ஏகாக்ஷரமாய், ஏகபதமாய், ஏகார்த்தப்ரகாசகமாயிறே இருப்பது" என்ற திருமந்த்ரார்த்தம் அநுசந்திக்கவும். அக்கரம் மூன்றினைய மந்திரம் - அக்ஷரத்ரயத்தினாகிய பிரணவம். என்னை? மேல் "ஓ மித்யேகாக்ஷரம்" என்று சுருதி சொன்னதற்கு மாறாக, மூன்று அக்ஷரங்களாலானது 'ஓம்' என்றது பொருந்துமாறு எங்ஙனென்னில், "இது, 'அ' என்றும் 'உ' என்றும் 'ம' என்றும் மூன்று திருவக்ஷரம்". 'அஸம்ஹிதாகாரத்தாலே [பிரிந்திருக்கும் நிலையிலுள்ள ரூபம்] மூன்று அக்ஷரமாய், மூன்றுபதமாய், மூன்றர்த்தப்ரகாசகமாய் இருப்பது'. இதன் அர்த்த விசேடங்களைத் திருமந்த்ரார்த்தத்தில் கண்டுகொள்வது. அக்கரம் ஐந்தினைய மந்திரம்-பஞ்சாட்சரம்: இது, 'நமசிவாய' என்பது; சிவபிரானை அதிதெய்வமாகக்கொண்டது. இதன் பெருமையை நமச்சிவாயத் திருப்பதிகம்கொண்டு உணர்க. அக்கரம் எட்டினைய மந்திரம் - அஷ்டாக்ஷரம்: ஓம் நமோ நாராயணாய: இது விஷ்ணு மந்திரம். இதனும் பொருளினை விரிப்பிற்பெருகும்: வல்லார்வாய்க் கேட்டுணர்க. ஆதியாய என்றதால் - ஷடாக்ஷரி, துவாதசாக்ஷரி, காயத்திரி போன்றவை. எண்ணில் - கணக்கற்ற. உரு - பலமுறை செய்யும் அநுசந்தானம். செபித்தல் - மந்திரோச்சாரணஞ் செய்தல். நினைவு - தியானநிலை: 'மனநிலை திரியாமற் குறித்த பொருளொடுகொளுத்தல் நினைவே' என்றது தொல்காப்பியஉரை. (தொல்; பொரு; 75, நச்சி; உரை). மிக்கது-கருதிய பலனளிப்பதில்

விஞ்சியது. வியப்ப, ப - விகுதி பெற்ற பலர்பாற் படர்க்கை வினைமுற்று: வியப்பர் என்று பொருள். (நன்: வினையியல்: சூ.8).()

22.—நாணிறங்குதற் சிறப்பு.

பூதலத்தோர்க் கிடரியற்று மரக்கருடல் பிளந்துவெற்றிப் புனைந்த வோலை, மீதலத்தோர்க் குணரவிடுத் தவர்பயந்தீர்த் தரக்கியர்கள் வெரீஇத்தோ டோய்ந்த, காதலருக் கழுதரற்றிக் கழுத்திலகு மங்கலநாண் கழித்த தற்பின், தாதலர்தா ரணிவனியர் தனிச்சிலை நாண் களித்திறங்கித் தயங்கு மாதோ.

(கு - ரை.) நாண் இறங்குதல் - பூட்டிய நாண்கயிற்றை இழியச்செய்தல். வெற்றிப்புனைந்த ஓலை - சயவோலை. மீதலத்தோர் - தேவலோகத்தவர்; இவர் அரக்கர்க்குப் பகைவரென்பது பிரசித்தம். வெரீஇ - வெருவி, பயந்து. தேவர் பயந்தீர, அரக்கியர் பயமடைய என்றபடி. தோள் தோய்ந்த காதலர் - தம்மைப் புணர்ந்த கணவராகிய அரக்கர். அரற்றுதல் - சோகத்தால் கதறுதல். இலகு - விளங்குகின்ற. மங்கலநாண் - தாலிக்கயிறு. கழித்தல்-நீக்குதல். கணவனையிழந்த கைம்மைப் பெண்டிர் மங்கல நாண் நீக்குதல் மரபு. தாது - தேன்: "தாதுசேர் கழுநீர்" (சிலப்: 13, 119). அலர்-மலர். தார்-மார்பிலணியும் மாலை. "காமர்வண்ண மார்பில் தாரும் கொன்றை" என்றது புறம். தனி - ஒப்பற்ற. சிலைநாண் - வில்லின்நாண்கயிறு. களித்தல் - தான்பெற்ற பெரு வெற்றி குறித்து. தயங்கும் - பொலிவுபெறும். கழித்ததற்பின் களித்திறங்கும் என்றது சொன்னயம். மாது, ஓ - ஈற்றசை.

இதுவரை, சிலையின் சிறப்புக் கூறப்பட்டது. (22)

வாள்.

23.—வீரவாட் சிறப்பு.

விண்ணவர்க்கு விருந்தினராய் மேவியர மாதரின்பம்
மண்ணின்மரு வலர்மருவ வாழ்விக்கும் பண்ணுடர்
திண்ணமுறு வன்னிமன்னர் திருக்கரத்தி லேந்தியமர்
நண்ணும்வய வாண்மகிமை நாமெங்ங னவில்வதுவே.

(கு - ரை.) மண்ணின் மருவலர் விண்ணவர்க்கு விருந்தினராய் மேவி, அரமாதர் இன்பம் மருவவாழ்விக்கும் பண்ணுடராகிய வன்னி மன்னர்......வாண்மகிமை எங்ஙன் நவில்வதுவே என்பது அந்வயம். பகைவர்களைக்கொல்வர் பண்ணுடர் என்ற பொருளை 'மருவலர்......இன்பம்மருவ வாழ்விக்கும் பண்ணுடர்' என வேறு வாய்பாட்டினாற் கூறியது, பிறிதின்நவிற்சியணி. வீரமாகப்போரிட்டு இறந்தோர் வீரசுவர்க்கமடைந்து தேவர்களால்

உபசரிக்கப்பட்டுத் தேவமாதரைமருவுவர் என்பது மரபு. அரமாதர் -அமரமாதர்: தேவமகளிர். பண்ணுடர் - தமிழ்நாட்டு வன்னிய வரசர்கள். திண்ணம்-திண்மை, வலிமை. அமர்நண்ணுதல்- போர் செய்தல். வயவாள் - உரிச்சொற்றொடர்: "வயவலியாகும்". நவில் வதுவே - குற்றியலுகரம் கெடாமல் வகரவுடம்படுமெய் பெற்று வந்தது. (23)

24.—வேலேந்திய காலாட்படைச் சிறப்பு.

செய்யகத்து வளநாடு தேர்புலவர்க் கினிதளிப்பார்
மெய்யகத்து வன்னியர்செவ் வேள்பலவா முருக்கொளல்போல்
கையகத்து வேலேந்து காலாளின் படையினன்றி
வையகத்து மருவுகலி மற்றொன்று லகலாவே.

(கு - ரை.) வன்னியர் புலவர்க்கு வளநாடு இனிதளிப்பார்: அஃது எங்ஙனே அவர்களால்மட்டும் கூடும்என்னில், அவர்களின் வேலேந்து காலாட்படையினன்றி கலி மற்றொன்றுலகலாதே என ஏது காட்டிச் சமர்த்தித்தபடி. எனக் கருத்துக்காண்க. மெய் அகத்து வன்னியர் - உண்மையை உள்ளத்துக்கொண்ட வன்னிய மன்னர். செய் அகத்து வளநாடு - கழனிகளை யுள்ளிடத்துக் கொண்ட வளப்பமுள்ள நாடுகள். கழனியை 'செய்' என்பது - பன்றிநாட்டார் வழங்குந் திசைச்சொல்; செய் - கழனியாதலை 'நன்செய்', 'புன்செய்' என்ற விடங்களிலும் காண்க. தேர்புலவர் - வினைத்தொகை. வறுமையால் தம்மை நாடிவரும் புலவர். இனிது- மனமுவந்து. கையகத்து வேலேந்தும் காலாள் ஒவ்வொருவரும் செவ்வேள்போலிருப்பர் என்பது கருத்து. செவ்வேள் - முருகன், குமரன். மன்மதன் கருவேள் ஆதலின், செவ்வேள் குமரனுக் காயிற்று: மற்றும் வேலேந்துபவனாதலின், அவனை விதந்து எடுத்துக்காட்டியபடி. அழகு, வீரம், வேலேந்துதல் இவைகளில் காலாட்படையினர் செவ்வேளுக்கு ஒப்பு. கையகத்து, அகம் - ஏழனுருபு. படையின் - இன், ஐந்தனுருபு ஏதுப்பொருளது. வையகம்- பொருள்களை வைக்கும் இடம் எனப் பூமிக்குக் காரணக் குறி. கலி - வறுமை, தரித்திரம். கலிஒன்றால் அகலா - என்றது ஒருமையிற் பன்மைமயக்கம். (24)

25.—யானைப்படைச் சிறப்பு.

ஓரானை முகத்தானை யுலகத்தோர் முன்னிறுத்திப்
பேரான கருமமெலாம் பிறழாது முற்றுகிற்பார்
காரான வுடலவுணர் கலங்குறமுன் னிறுத்திவன்யர்
போரானைப் படையானே போர்வயங்கோ டலினன்றே.

(கு - ரை.) தாம் தொடங்குகிற காரியங்களெல்லாம் இடையூறின்றிச் செவ்வன் நிறைவேறுதற்கு உலகத்தோர் ஆனைமுகக் கடவுளை [விநாயகனை] முன்னிட்டு வணங்குதற்குக் காரணம்

கற்பித்துக் கூறியபடி: ஏதுத்தற்குறிப்பேற்றவணி. பின்னிரண்டடிகளில் ஏதுக் காட்டியபடி. காரான- மேகத்தையொத்த: ஆன-உவமவுருபு. 'முன்னிறுத்தி' என்பதற்குச் செயப்படுபொருள் போரானைப்படை. 'படைதனக்கு யானை வனப்பாகும்' என்றபடி அப்படையை முன்நிறுத்திப் போர்புரிவர் வன்னியர். வயம் - வெற்றி, ஜயம். கோடலின் அன்றே - கொள்ளுதலால் அல்லவா. கோடல், கொள்-பகுதி, தல் - விகுதி. ஓர்-ஒப்பற்ற. ஆனைமுகத்தான்-விநாயகர்; கணபதி. இவர் சகல விக்நங்களேயும் [இடையூறுகளேயும்] போக்குபவராதலின், விக்நேசுவரர் எனவும் படுவர். இதனை "நம்மேல், இடையூறு நீங்குவதுமெல்லாம் - புடையூறும், சேனைமுகத் தாளிரியச் சிறுமதத் தூறுமுகத், தானைமுகத் தானை நினைத் தால்" என்ற புறப்பொருள்வெண்பாமாலைக் காப்புச் செய்யுளாலும் தெளிக. பேரான கருமம் - பெரிய [செயற்கரிய] காரியங்கள். முற்றுதல் - கடைபோகச்செய்தல். முற்றுகிற்பார் - கில், ஆற்றலுணர்த்தும் இடைநிலை. அந்த ஆற்றல் விநாயகனை முன்னிறுத்துதலால் கைவந்தபடி. வன்யர் **முன்னிறுத்திப்** போர் வயங்கோடலின், உலகத்தோர் **முன்னிறுத்தி** முற்றுகிற்பார் என்று நயம். உலகத்தோர் என்றது ஈண்டு வன்னியரொழிந்தோரை யென்க. (25)

26.—குதிரைப்படைச் சிறப்பு.

பூவேறி நான்முகனும் புள்ளேறித் திருமாலும்
சேவேறிக் கண்ணுதலுஞ் செய்வதென்னே தீஞ்சுவைகொள்
பாவேறிப் புகழ்பெற்றுப் பாராளும் வனியர்தழல்
மாவேறிப் பகைவென்று மாநிலங்காத் தருள்வாரே.

(கு - ரை.) நான்முகன் பூ ஏறியும், திருமால் புள்ளேறியும், கண்ணுதல் சேவேறியும் என உம்மை மாறுக: பின்னர், 'மாவேறி' என வருதற்கேற்ப இங்ஙன் கொளல்நேர். இனி, 'ஏறி' என்பதையே இகரவீற்று ஆண்பெயராகக்கொண்டு 'ஏறுபவன்' எனப் பொருள்காணல் சிறப்புடைத்தன்று. நான்முகன்-பிரமன். அவன் தாமரைப்பூவில் எழுந்தருளியிருப்பவனுதலின், 'பூவேறி' என்றது. திருமால் - விஷ்ணு. புள்-கருடன். கண்ணுதல் - நெற்றியிற் கண்ணையுடையவன்: சிவன்: இது அன்மொழித்தொகை. சே - எருது, இடபம். சிவபிரானுக்கு ரிஷபம் வாகனம் என்பது பிரசித்தம். மும்மூர்த்திகளும் தத்தம் வாகனங்களில் ஏறிச் செய்யுங் காரியந்தான் என்ன? ஒன்றும் பிரயோஜனமில்லை என்றபடி. பூ, புள், சே இவை போர்த்தொழிற்கு ஆகா ஊர்திகள் என்று சூசிப்பித்தபடி. இனி, மாவேறி உலகங்காத்தருள்பவர் வன்னியரே என, மூவரினும் அவர்சிறப்புக் கிளந்தபடி. மா- குதிரை: தழல்மா - அக்கினியாகிய குதிரை: அக்கினிபோன்று உக்கிரங்கொண்ட குதிரை என இரட்டுறப் பொருள்படும். வன்னியர் அக்கினி குலத்தவராதலின் இருவகைப் பொருளும் ஏற்கும். புலவர்பாடும் புகழுடையோர் வன்னியர் என்பதைத் "தீஞ்சுவைகொள்

பாவேறிப் புகழ்பெற்று" என்ற தொடராற் குறித்தார். பா - பாட்டு. தீஞ்சுவை - சொற்சுவை, பொருட்சுவை. 'அருள்வாரேல்' என்று பாடமிருப்பினும் சிறக்கும். (26)

27.—இரண்டுகவிகள் - தேர்ப்படைச் சிறப்பு.

பார்விழாப் பெறக்காக்கும் பண்ணுடர் பதமலரில்
போர்விழாப் புரிவேந்தர் பொன்னவிர்மா முடிவணக்கி
யார்விழா திருப்பார்க ளமரர்மலர் மழைசொரியத்
தேர்விழா வுறவுகைக்கிற் றிருவிழாத் தினமென்றே.

(கு - ரை.) பண்ணுடர் விழாவுறத் தேர் உகைக்கின்(அப்போது) அமரர்மலர்மழைசொரிதலால்திருவிழாத் தினமென்றே (கொண்டு) பதமலரில் வேந்தரில் முடிவணக்கி விழாதிருப்பார்கள் யார் என்பது அன்வயம். பார் விழாப்பெற - பூமி மங்கலம் பொலியும்படி. பண்ணுடர் - வன்னியமன்னர்கள். விழா உற - கொண்டாட்டமாக. தேர் உகைக்கின் - தேரைச் செலுத்துவார்களாயின்,(அப்போது) அமரர்-தேவர்கள், மலர்மழை-புஷ்பவர்ஷம், சொரிய - சொரிதலால், திருவிழா தினம் என்றே-[கடவுளரின்] உற்சவநாள் எனக்கொண்டே. போர் விழா புரி வேந்தர்-போரினை விரும்புகின்ற மன்னர்கள். புரிதல் - விரும்புதல். போர்விழா - இருபெயரொட்டு: போரினை விழாவாகக்கொண்டது மன்னரின் வீரமும் உற்சாகமும் தெரிக்க. இங்கே போர்விழா என்றது மன்னர்க்கு இயற்கையடை. அவிர்தல்-விளங்குதல். முடிவணக்கி-தலைதாழ்த்தி. பதமலரில் - அடித்தாமரைகளில், தாமரைமலர் போன்ற திருவடிகளில். விழாதிருப்பார்கள் யார் - தண்டனிடாதவர்கள்யாவர்: ஒருவருமிலர் என்றபடி. கொண்டாட்டமாகத் தேரிற் போகும்போதே முடிவணக்கி அடிவீழ்வார்களாயின், தேர்ப்படையொடு போர்க்கு வந்தால் பகைவேந்தர் வணங்குதல் சொல்லவேண்டாதாயிற்று என அவர் தேர்ப்படைச்சிறப்புக் கிளந்தபடி. (27)

28. **செங்கதிரோ னோராழித் தேரேறித் திகழ்வதுவும்**
அங்கசன்மா ருதத்தேரூர்ந் தடலாண்மை செலுத்துவதும்
துங்கமனு நெறிபிழையாத் துகளறுவன் னியவீரர்
அங்கிரத மிவர்திறத்துக் கணுவளவு மிணையாமோ.

(கு-ரை.) தேரேறித் திகழ்வதுவும் தேரூர்ந்து செலுத்துவதும் அங்கிரதம் இவர்தல் திறத்துக்கு இணையாமோ என்றுமுடிபு. இவர் - இவர்தல்: முதனிலைத்தொழிற்பெயர். செங்கதிரோன் - சூரியன்: செம்மை - இயற்கையடைமொழி. ஓராழி - ஒற்றைச்சக்கரம். சூரியனது தேர் ஸம்வத்ஸரரூபமான ஒற்றைச் சக்கரத்தையுடையதென்று புராணம் கூறும். ஆழி - வட்டவடிவுடையது என்று காரணப்பொருள்பட்டுத் தேருருளையைக் காட்டிற்று. திகழ்வதுவும் - குற்றியலுகரம் உயிர்வரச் சிறுபான்மை கெடாது பொதுவிதியால் வகரவுடம்படுமெய் பெற்றது. அங்கசன் - மன்மதன். மாருதம் - காற்று: இங்கு, தென்றலைக்

காட்டிற்று. தென்றல் - தெற்கிலிருந்து வருவது. இது, மன்மதனுக்குத் தேராதலை "வடக்கோடு தேருடையான்" என்ற சிவப்பிரகாசர் வாக்கினாலும் அறியலாம். அடல் ஆண்மை செலுத்துவதாவது - மகளிர்மேலன்றியும் ஆடவர்மேலும் மலர்க்கணையெய்து காமநோய் விளைத்தல். துங்கம் - பரிசுத்தம். மனுநெறிக்குப் பரிசுத்தமாவது - அறவழிப்படுதல். மனுநெறி - அரசநீதி. அது பிழையாமையாவது-அரசநீதி செங்கோல் வழிப்படரல். பிழையா-ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்: 'வீரர்' என்பதனோடு இயையும். துகள் - குற்றம்: வீரர்க்குக் குற்றமாவது-முதுகுகாட்டுதல், விழித்தகண் வேல்கொண்டெறிய அழித்திமைத்தல் போல்வன. அங்கி ரதம் - அக்கினியாகிய இரதம். அக்கினிகுலத்தவராதலின், இவர் இவர்கின்ற தேரும் அக்கினியாயிற்று. திறம் - சாமர்த்தியம்: அதாவது, அக்கினிதேவன் ஈந்த இரதத்தைச் செலுத்தினான் அருச்சுனன்; அவனையும் விஞ்சி அக்கினியையே இரதமாகச் செலுத்தும் இவர் சாமர்த்தியம் என்றபடி. அணு - மிக்க சிறுமைக்கெடுத்துக் காட்டுவதோர் அளவை. (28)

29.—அகழியின் சிறப்பு.

பேராழிச் செலுத்திவயம் பெறவணியர்க் கிடமாகிக்
கூராழிப் பரனகரைக் குறைசொல்கம்பை நகருடுத்திட்
டோராழித் தேரிருபா லொதுங்கவய ரெயிற்புடைசூழ்
சீராழி யாமகழின் சிறப்பெவரே யுரைப்பவரே.

(கு - ரை.) அரண் - கோட்டை. இச்சொல் - ஶரணமென்னும் வடசொல்லின் விகாரம்; காப்பதென்று பொருள். "மணிநீரு மண்ணு மலையு மணிநிழல், காடு முடைய தரண்" என்ற குறளும், "நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என இயற்கையுஞ் செயற்கையுமாய இந்நான்கரணுஞ் சூழப்படுவது அரண் என்பதாம்" என்ற பரிமேலழகருரையும் நினைக. இச்செய்யுள் நீரரணாகிய அகழியின் சிறப்புக் குறிப்பது. கம்பைநகருடுத்திட்டு, வனியர்க்கிடமாகி, எயிற்புடைசூழ் அகழின்சிறப்பு எவரேயுரைப்பவர் என முடிபு காண்க. கூர் ஆழி பரன் - கூரிய (சுதர்சநமென்னுஞ்) சக்கராயுதத்தை (வலக்கையில்) ஏந்திய மேலோன்: விஷ்ணு. ஆழி - சக்கராயுதத்தைக் குறிக்கும்போது பகைவரை அழிப்பது ஆழி என்று காரணப்பொருள் காண்க: கருத்தாப் பொருள்விகுதி புணர்ந்து கெட்டுப்பகுதிமுதல்நீண்ட பெயர். பரன் - கடவுள். பரன்நகர் - ஸ்ரீவைகுண்டம்: இதற்கு, ஞானசக்தியாதிகளில் தடையில்லாத எம்பெருமானது தானமென்று பொருள் கூறுவர் ஆன்றோர். அத்தகைய ஸ்ரீவைகுண்டத்தையும் குறை சொல்லும் கம்பைநகர் என்றதால் கச்சிப்பதியின் சிறப்பைப் பெறவைத்தார். கம்பைநகர்-கச்சிப்பதி: காஞ்சிபுரம்: கம்பையாறு பாயப்பெற்ற ஏகம்பத்தையுடைய நகராதலின் அந்நகரை உடுத்திட்டது அகழி: உடுத்திட்டு-தான் ஆடையாகச் சூழ்ந்து. மேலும், வனியர்க்கு வயம்பெற இடமாயது அவ்வகழி. பேர்

ஆழி செலுத்தி - பெருமைபொருந்திய ஆஜ்ஞாசக்கரத்தைச் செலுத்தி. வயம்-வெற்றி. வயம்பெற ஆழிசெலுத்தி என் மாறுக. இடம் - வலிமை. யார்க்கும் படிவருங் காப்பினதாக லின், அகழி வலிமையாயிற்று. தேர்-சூரியனுடையது. இருபால் ஒதுங்குதல் - உத்தராயண, தட்சிணாயண கதிநோக்கி. அயர் - செலுத்துகின்ற. சூரியன் தேர் இருபாலும் ஒதுங்குமாறு செலுத்துகின்றது எயில் என்க. எயில் - மதில். அயர்தல்- செலுத்துதல் என்ற பொருளதாதலை, "திண்டேர் அயர்மதி" என்ற கலித்தொகையிலுங் காண்க (கலித்: 30,19). அந்த எயிலைப் புடைசூழ்ந்தது அகழி என்க. அகழ்-அகழி: சீராழியாம் அகழ் - சிறப்புப்பொருந்திய சமுத்திரம் போன்றது அகழி. ஆழி - சமுத் திரம். கடலைக்குறிக்கும்போது ஆழ்ந்துள்ளது ஆழி என்று கார ணப்பொருள்: இ - கருத்தாப்பொருள்விகுதி. எவரே, ஏகாரம் - எதிர்மறை. ஈற்றேகாரம் அசை. (29)

30.—அரண்சிறப்பு.

சரண்புகுந்தீ சனைச்சான்றோர் தம்முயிரைக் காப்பரெனும்
வரம்புளதங் கதுவியப்பின் மருவியதோர் வழக்கன்றால்
முரண்புகுதோட் செருநர்வரின் மூதுலகோர் வன்னியர்தம்
அரண்புகுந்து தம்முயிர்காத் தமர்ந்திருப்ப ராதலினே.

(கு-ரை.) உலகோர் அரண்புகுந்து உயிர்காத்து அமர்ந்திருப் பராதலின், ஈசனைச் சரண்புகுந்து உயிரைக்காப்பரென்னும் வரம்பு, வியப்பின் மருவியதோர் வழக்காகும்என்றது பிண்டப் பொருள். மூதுலகோர் - தொன்மைத்தாய் வரும் உலகத்தவர்: முதுமை - பழமை. முரண் - வலிமை. புகு- பொருந்திய. செருநர்- பகைவர்: ந் - பெயரிடைநிலை. அமர்ந்திருப்பரென்றதால் அச்ச மின்மை பெற்றும். சான்றோர் - பல நற்குணங்களும் நிறைந்த பெரியோர்: மார்க்கண்டேயன் போன்றோர். சரண்புகுதல் - திரு வடியைத் தஞ்சமெனப்பற்றுதல். வரம்பு - வழி: ஒழுங்கு. அங்கு - அசை. அது வியப்பின் மருவியதோர் வழக்கு என்றது - அது அதிசயமாகும் என்றபடி. "மாயமோ மருட்கைத்தே" என்றது போல் இது மருட்கையின் பாற்படும். அன்று - அசை: 'அன்று' என்பது அசைச்சொல்லாதலை "சேவடிசேர்துமன்றே" (சீவக. செ:1) என்றவிடத்து நச்சினார்க்கினியர் உரைகொண்டறிக. ஆல் - ஈற்றசை. (30)

31.—கொடிச்சிறப்பு.

சுடர்க்கொடியும் வனக்கொடியுந் துகளில்வெற்றிப் புலிக்கொடி
அடற்புலிமூன் றினுந்தாமே யரசியற்றும் படிதாவக் [யும்
கடற்புவியி னிரந்தரமுங் கருணைபுரி தாயேபோல்
இடர்ப்பகையி லாதுவன்யு ரெவ்வுயிரும் வளர்ப்பாரே.

(கு-ரை.) கொடி-அரசுக்குரிய சின்னம். புவி மேல்கீழ்நடுஎன மூன்ருதலின் கொடியும் மூன்று கூறப்பட்டது. சுடர்க்கொடி - அக்கினிக்கொடி; சூரியன், சந்திரன், அக்கினி மூன்றும் முச்சுடர் எனப்படுதலின், இங்கு அக்கினிகுலத்தவர்க்கேற்பச் சுடர்க்கொடி - என்றது அக்கினிக்காயிற்று. இக்கொடி மேலுலகத்து அரசியற்றும்படி தாவிற்று. வனக்கொடி - நீர்க்கொடி. வனம் - நீர்: "வன மொண்டிடுமோதையின்" என்ருர் கம்பரும் (கம்பரா. நகர்நீங்கு,85) இக்கொடி கீழுலகத்து அரசியற்றும்படி தாவிற்று. பூமியின் கீழோடும்நீர்க்குப் பாதாளகங்கை என்ற பெயருண்மையின் நீர்க் கொடி அங்கே தாவிற்று என்றபடி கொள்க. துகள் - குற்றம். புலிக்கொடி நடுவாகிய இந்நிலவுலகத்து அரசியற்றும்படி தாவிற்று. புலிக்கொடி சோழர்க்குரியது என்பது வெளிப்படை: அவர்களும் வன்னிய குலத்தவராதல் முன்னரே கூறப்பட்டது. அடல்-வலிமை. தாவ - தாவியிருப்ப. கடல்புவி என்றது இந்நில வுலகத்தை. நிரந்தரமும் வளர்ப்பாரே என முடிக்க. இடர்ப்பகை- துன்பமாகியபகை: அது இலாது எனவே, துன்பந் துடைத்து என்றபடி. 'தாயையனையகருணையான்' என்று சுந்தரகாண்டத்தும் கம்பர் கருணைக்குத் தாயை எடுத்துக்காட்டினுர். 'சுடர்க்கொடியை' என்றும் பாடம். (31)

32.—அரசாட்சிமண்டபச் சிறப்பு.

அண்டர்மலர் மழைசொரிய வந்தணர்பல் லாண்டிசைப்பத்
தண்டனிட்டுப் பொருந்தலருஞ் சயங்கூற வன்னிமன்னர்
கொண்டபசும் பொன்வேய்ந்து குலவுபல மணிகுயிற்றும்
மண்டபத்தில் வீற்றிருக்கை மண்டபம்பெற் றிடுபேறே.

(கு - ரை) மண்டபம் - கொலுவீற்றிருக்கும் மண்டபம்: அத் தாணிமண்டபம். அண்டர் - தேவர்கள். அந்தணர் - அம் தண் அர்: அழகிய தண்மையை [அருளை] யுடையோர்; அல்லது அந்த அணர்; அந்தத்தை அணவுவோர்; வேதாந்தத்தையே பொரு ளென்று மேற்கொண்டு பார்ப்பார்; இது, பிராமணர்க்குக் காரண விடுகுறிப்பெயர். பல்லாண்டு - வாழ்த்து: ஆசிகள். 'அடுப்பது அந்தணர் பல்நகர் ஆசியே' என்ருர் குமரகுருபரரும். பொருந்த லர்-பகைவர். தண்டனிடல்-மார்புநிலத்துற விழுந்து வணங்கு தல்; கீழ்ப்படிதற்குறிப்பினது. சயங்கூறல் - "சயசய" என்று வெற்றிகுறித்த வாழ்த்துமொழிகூறல்: 'ஜயவிஜயீபவ' என்ப தும் அது: ["May Victory attend thee"] கொண்ட - திறையாகக் கொண்ட. பொன்வேய்ந்து - மூன்றனுருபுதொக்கது. வேய்ந்து - மூடி. குலவு-ஒளிவிளங்குகின்ற. பலமணி - நவரத்தினங்கள். வீற் றிருக்கை - பிறரொருவர்க்கில்லாத தனிச்சிறப்போடிருத்தல். அம்மண்டபம் பெற்றபாக்கியமாகும் என்றது "புனைமணிமண்ட பம்பொலிய எய்தினுன்" (கம்பரா: பால: கையடைப்: செ: 1 என்றது போலக்கொள்க. இனி, "மண்டலம்பெற்றிடுபேறே") எனப் பாடமிருப்பினுஞ் சிறக்கும். (32)

33.—சிங்காதனத்திருத்தற் சிறப்பு.

தங்காத னன்பனிறை யென்ன மாதர்
சந்ததமுந் தொழுதெழுவார் சலியா தாகம்
தங்காத னனையநட்பிற் சிறந்தே யாவுந்
தகுபுலியு மோர்துறையிற் றண்ணீர் மாந்தும்
சிங்காத னம்பசும்பொன் மணிதூ சாதி
தெளிவுறுவே தியர்க்குதவும் வன்னி மன்னர்
சிங்காத னத்தின்மிசை யமர்ந்து நாளுந்
திகழரசு செயுங்கருணைச் செயலா லன்றோ.

(கு - ரை.) சிங்காதனம் = சிங்காசனம்; சிங்கந் தாங்குவது போல் அமைக்கப்பெற்ற தவிசு. இருத்தல்-எழுந்தருளியிருத்தல். அவ் விருப்பின் சிறப்புக் கூறுவது இச்செய்யுள்; மூன்றாமடியில் சிங்காது அனம் எனப்பிரிக்க. சிங்காது-குன்றாது, சளைக்காதபடி. அனம் - அன்னம் என்பதன் இடைக்குறை: அன்னம்-சோறு. இது பிறஉணவுப்பொருள்களுக்கும் உபலட்சணம். தூசு-ஆடை. ஆதி - முதலவாய: 'ஆதி' என்றதால், கோதானம் பூதானம் போன்றவற்றையுங் கொள்க. தெளிவுறு வேதியர் - பிறவித் தூராறுமாறு நினைக்கும் அந்தணர். செயலாலன்றோ மாதர் தொழுதெழுவார்; ஆவும் புலியும் ஓர்துறையில் தண்ணீர் மாந்தும் என முடியும். தம் காதன் அன்பன் இறை என்ன - தம் காதலுக்குரிய கணவனைத் தெய்வம் என்று, மாதர் - கற்புடை மகளிர், சந்ததமும் - எப்பொழுதும் (இடைவிடாமல்), தொழு தெழுவார் - தொழாநின்று துயிலெழுவார் என்றபடி. காதன் அன்பன் - கணவன். காதல் என்பது காதன் எனச் சிறுபான்மை லகரத்துக்கு னகரம் போலியாகவந்தது எனக் கொள்க. இனி, காந்தன் என்பது காதன் என இடைக்குறைந்துநின்றது என்றாரு முளர். இறை - தெய்வம். "தொழாநின்று" என்பது "தொழுது" எனத் திரிந்துநின்றது என்ற பரிமேலழகர் உரை ஈண்டைக்கும் பொருந்துவது. தொழாநின்று - தொழுதுகொண்டு. தொழுது கொண்டே எழுவார் என்றது என்னையெனில், துயிலெழுங் காலத்தல்லது முன்உணர்வு இன்மையான் உணர்வு உறுங்காலத்து மறவாது நினைவார் ஆகலின். துயில்வதற்கு முன் கணவனைத் தொழுமுணர்வே யிருத்தலால், கற்புடையார்க்குத் துயிலொழிய உணர்வுண்டாங்காலத்தும் அந்தத் தொழுமுணர்வேயுடனுண் டாகுமென்பர். ஆகம் சலியாது தங்கு ஆதன் அனைய நட்பு - உடம்பு சோர்வுறாதபடி தங்குகின்ற உயிர் போன்ற நட்பு. ஆகம்-உடம்பு, ஆதன்-ஆத்மா: உயிர். அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பைச் சேதனமாய் அருவாய் நித்தமாய உயிர் தாங்குதல்போல, சாதுவாய்க் கருணையுளதாய் உலகுபுரக்கும் பசுவைக் கொடியதாய்ப் பகையுளதாய் உலகழிக்கும் புலி தாங்கு கின்றது என்று உவமையை விரித்துக்கொள்க. ஆ - பசு. மாந்துதல்-குடித்தல். இரண்டும் ஒருதுறையில் தண்ணீர் மாந்தும் என்றது - பெரியவை சிறியவற்றை நலியாதபடி என்றவாறும்.

வன்னியர் அரசாண்ட காலத்தில் எங்குஞ் சத்துவகுணம் தலையெடுத்து நின்றதனால் விவேகமில்லாத மிருகங்கள் முதலிய பிராணிகளுக்குக்கூட ஒன்றன்மேலொன்றுக்கு அன்பும் அருளும் உண்டாயினவேயன்றி, ரஜோகுண தமோகுண காரியங்களாகிய கொலை பகை அச்சம் முதலியன நிகழவில்லையென்க. இதனால் வன்னியமன்னரின் அரசாட்சி நீதிமுறைமை விளங்கும். "அருந் திறலரசர் முறைசெயினல்லது, பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது" என்ற கருத்து முதலடியிற் காணவேண்டுவது.

34.—இரண்டுகவிகள்: முடிதரித்தற் சிறப்பு.

தன்முடிமேற் புவிதாங்குந் தனியரவிற் றுயில்வோற்கும்
சொன்முடிவாம் பரமனுக்குந் தோன்றுமிளைப் பொழித்திடுவார்
பொன்முடிசென் னியிற்றுங்கிப் புகழ்வனிய வரசரொன்னூர்
முன்முடியக் குடிதழைய மூதுலகம் புரத்தலினே.

(கு-ரை.) புகழ் வனிய அரசர் பொன்முடி சென்னியிற்றுங்கி, ஒன்னார் முன் முடியவும் குடிதழையவும் மூதுலகம் புரத்தலின், துயில்வோற்கும் பரமனுக்கும் இளைப்பு ஒழித்திடுவார் எனக் கூட்டி வினைமுடிவு செய்க. பொன்முடி-பொற்கிரீடம். சென்னி - தலை. ஒன்னார் = ஒன்றார்: பகைவர். முன்-தம் முன்னே. முடிய - அழியவும். (அதனால்) குடி-குடிமக்கள், தழைய - வளம்பெறவும். களைபறியப் பயிர் செழித்தல்போல் பகைமுடியக் குடிதழைத்தது என்க. முதுமை+உலகம்=மூதுலகம். "ஈறுபோதல்" என்பது விதி. (நன்: பத: சூ.9.) அரவு-பாம்பு: ஆதிசேடன்: இவனைத் **தனி** யரவு என்றது புவிதாங்குஞ் சிறப்பினனாதலின். **தனி** - ஒப்பற்ற. துயில்வோன் - திருமால் (காத்தற்கடவுள்). சொல் முடிவு ஆம் பரமன் - பரமசிவன் (அழித்தற்கடவுள்). சொல் முடிவு - மறை முடிவு:வேதாந்தம். வேதங்களாலே பிரதிபாதிக்கப்பட்ட கடவுள் என்பது கருத்து. இளைப்பு-களைப்பு. காத்தற்றொழிலாலும் அழித்தற்றொழிலாலும் முறையே இருவர்க்கும் ஏற்பட்ட களைப்பு. அதனை வனியவரசர்' ஒழித்திடுவார் என்றது - பகை முடியவைத்தலாலும் குடி தழையவைத்தலாலும் அவ் விருவர் தொழிலையும் தாம்மேற்கொண்டமையால் என்க. ஒன்னார் முன் முடியப் பரமனுக்கும்,குடி தழையத் துயில்வோற்கும் தோன்றும் இளைப்பு ஒழித்திடுவார் என்று எதிர்நிரல்நிறையாகச் சென் றியைதலால், இது, எதிர்நிரல்நிறையணி. (34)

35. தேவர்முடி திங்கண்முடி சேணுரு மிரவிமுடி
மூவர்முடி முனிவர்முடி மும்மையுல கினில்வாழ்வோர்
யாவர்முடி யும்விளங்கு மென்றுமொரு முடிவில்லாக்
கோவிறைவன் னியர்முடிமேற் குலவுமுடி விளங்கலினே.

(கு - ரை.) என்றும் ஒரு முடிவு இல்லா வன்னியர் முடிமேல் முடிவிளங்கலின், தேவர்முடி......யாவர்முடியும் விளங்கும் என வினைமுடிபு. என்றும் - எக்காலத்தும். முடிவு - அழிவு.

கோ இறை - இராசாதிராசர். முடிமேல் - தலையின்மேல். குலவு முடி-தங்கும் கிரீடம். குலவுதல் - தங்குதல்: "பாற்கடலிற் குலவு கின்றதோர் பொருளெலாம்" (கந்தபு: குமார: 4). முடிவில்லா என்பதை'குலவுமுடி'என்பதனோடு இயைப்பின்நன்கு பொருந்தும், தொன்றுதொட்டுப் பாரம்பரியமாய் வரும் முடியாதலின். தேவர் முடி - தேவர்களின் சிரசு. அங்ஙனமே மேல்வருவனவற்றிற்கும் பொருள் கொள்க. சேண் - தூரம். இரவி - சூரியன். மூவர் - பிரமவிட்டுணுருத்திரர்: தொகைக்குறிப்பு. முனிவர் - இருடிகள். மும்மையுலகு - (மேல் கீழ் நடு என்ற) மூன்றுலகு: மும்மை என்பது-இங்கே எண்ணின்தன்மையென்றபொருளைக் குறியாமல் எண்ணின்மேல் நின்றது; 'இருமை வகை' என்பவற்றிற்போல. யாவர்முடியும், உம்மை - முற்றும்மை. வன்னியர் முடிமேல் முடி விளங்கலின் தேவர்முதலிய யாவர் முடியும் விளங்கும்என்றது - "வித்தக னொருவன் சென்னி மிலைச்சியதெனினும் மேன்மை, ஓத்தமூ வுலகத் தோர்க்கு முவகையி னுறுதியுன்னில், தத்தமுச் சியின்மேல் வைத்த தொத்ததத் தாம மௌலி" (கம்பராமாயண: யுத்த: திருவடிசூட்டு: 40) என்றது போலக் கொள்க. (35)

36.—புயகேயூர கிரீடச் சிறப்பு.

இயனடு நீண் டிருபுடைதாழ்ந் திடவமைத்த வணைமூன்றின்
அயன்முதன்மூ வருந்தொழின்மூன் றுங்கியற்ற வமர்ந்ததுபோல்
வயமுறுவன் னியவரசர் வடவரைபோல் வீறியதிண்
புயமுடியு மணிமுடியும் பொருந்தியது புதுமைத்தே.

(கு - ரை.) இரு புடை தாழ்ந்திட - இரண்டு பக்கங்களிலும் தாழவும், இயல் நடு நீண்டு - பொருந்திய நடுப்பாகம் உயரவும், அமைத்த-அமைக்கப்பட்ட, அணை மூன்றில் - ஆசனம் மூன்றிலே, அயன் முதல் மூவர்உம் - பிரமன் முதலாய திரிமூர்த்திகளும், தொழில் மூன்று - தத்தமக்குரிய முத்தொழில்களையும், ஆங்கு - அவ்வாசனங்களிலிருந்து, இயற்ற - செய்ய, அமர்ந்ததுபோல் - (அவற்றின்மேல்) பொருந்தியிருந்ததுபோல...... புயமுடியும் மணிமுடியும் பொருந்தியது என இயைக்க. புயமுடி - கேயூரங்கள்: தோள்வளைகள். மணிமுடி - இரத்தினகிரீடம். இரு புயமுடியும் அயன் சிவனை ஒத்திருப்ப, மணிமுடி திருமாலையொத்திருந்தது என்றார். அயன் படைத்தலைச் செய்வதுபோல் ஒருபுயமுடி அத் தொழிலையும், சிவன் அழித்தலைச் செய்வதுபோல் மற்றொரு புயமுடி அத்தொழிலையும் செய்ய, திருமால் காத்தலைச் செய்வது போல் இருபுயங்களுக்கும் நடுவே உயர்ந்துள்ள சிரசின்முடி அத்தொழிலைச்செய்கின்றது என்று வன்னியவரசரின் அங்க வணிச்சிறப்புக் கூறுமுகத்தான் அவர் ஆக்கல் அளித்தல் அழித்தல் என்ற முத்தொழிலுஞ்செய்யும் ஆற்றலுடையார் என்பது குறிப்பிற்றெரித்தபடி. இங்ஙனம் அணிச்சிறப்புப் பொருந்தியிருத்தல் வியப்பாதலின் "புதுமைத்தே" என்றார். வட வரை - வடக்கிலுள்ள மேரு மலை: இது திண்புயத்துக்கு ஒப்பு.

வீறிய - தனிச்சிறப்புற்ற: இதனை 'மணி முடிக்கும்' கூட்டுக. இச் செய்யுளில் வந்துள்ள இரு உவமைகளும் வெவ்வேறிடத்துப் பொருந்துதலின், அடுக்கியலுவமை என்ற குற்றத்தின்பாற் படாது. (36)

37.—குடைச் சிறப்பு.

படையுடைய படிவேந்தர் பணிந்திடுவோர் மனுநீதி
நடைவருணச் சிரமநெறி நழுவாது காத்தெவர்க்கும்
விடையவன்ற னருள்பெற்ற வீரவன்னி மன்னர்கொற்றக்
குடைநிழலைத் தந்துகலிக் கோடைதணித் திடுவாரே.

(கு - ரை.) படி - பூமி. பணிந்திடுவோர்-வணங்கும் தாளினை யுடையோர். மனுநீதிநடை - மனுதருமசாஸ்திர ஒழுக்கம். நடை - ஒழுக்கம்: "நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" (புறநா:312). வருணச்சிரமநெறி - வர்ணச்ரமதருமம்: அதாவது, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைசாதிக்கும், பிரம சரியம் கிரஹஸ்தம் வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்ற நால்வகை நிலைக்கும் உரிய ஒழுக்கம். நழுவாது காத்து - குடிமக்கள் விலகாத படி புரந்து. எவர்க்கும் நிழலைத்தந்து...தணித்திடுவார் என முடியும். விடையவன் - சிவபிரான். விடை - இடபம், எருது. கொற்றக்குடை - அரசாங்கக்குடை, சந்திரவட்டக்குடை. கலிக்கோடை - வறுமையின் கடுமை. கோடை - வெம்மை: இங்கே கடுமை காட்டுவது. 'நடைவருணச் சிரதருமம்' என்றும் பாடமுண்டுபோலும்: அப்பாடத்துக்கு ஆச்சிரமதருமம் என்பது, ஆச்சிரதருமம் எனக் குறைந்துவந்தது என்னவேண்டும். (37)

38.—செங்கோற் சிறப்பு.

வெங்கோப மதம்பொழியும் விண்ணவர்கோ னும்பனிகர் வேழ மூண்டோ, பைங்கோலஞ் சேர்கனகப் பஞ்சதரு வனையபா தபமற் றுண்டோ, இங்கோத வான்சுரபிக் கிணையுண்டோ வன்னிமன்ன ரேனுமேன் மக்கள், செங்கோலுக் கெதிராங்கோல் செகதலத்தி லொன்றுண்டோ செப்பு வீரே.

(கு - ரை.) இங்குஓத - இந்நிலவுலகத்தில் சொல்ல: இத் தொடரை "நிகர்வேழம்" "அனையபாதபம்" "வான்சுரபிக்கிணை" என்பவற்றிற்குப் பின்னர்க் கூட்டிப் பொருள்கொள்க: எனவே இதனை இடைநிலைத்தீவகம் எனலாம். அவற்றிற்கெல்லாம் இப் பூவுலகத்து நிகர் ஓத இல்லாமைபோல வன்னிமன்னர் செங்கோ லுக்கும் நிகர் ஓத இப்பூவுலகத்து இல்லை என்றபடி: 'செகதலத்தி லொன்றுண்டோ' என்றதால் தேவருலகத்து நிகராகுங்கோல் இருக்கலாம் என்பது பெறவைக்கப்பட்டது. என்னை? விண்ணுல கத்தைச்சார்ந்த வேழம் பாதபம் சுரபி இவற்றிற்கு இணை இவ் வுலகத்திலில்லை யென்றமையால் ஒருகால் தேவருலகத்திலிருக்க லாம் என்பது பெறப்படுதலின். மற்றும் "மேன்மக்கள்" என்று வன்னிமன்னர்க்குக் கொடுத்த கருத்துடையடையும் இதற்கு அரண்செய்யும், மக்கட்கு மேற்பட்டவர் தேவராதலின்.

வெங்கோப மதம்பொழியும் என்றஅடை உம்பலோடு இயைவது. 'நிழலொடு மறலும் யானை' என்றபடி கதத்திற் சிறந்தது என்க. மதம் - மதஜலம்: கன்னமதம் கபோலமதம் கோசமதம் என்பன. விண்ணவர்கோன் - தேவேந்திரன். உம்பல் - யானை: ஐராவதம். பைங்கோலம் சேர் கனகம் - பசியநிறங்கொண்ட பொன்: கிளிச்சிறை. இந்த நிறத்தைக்கொண்டது தேவருலகத்துப் பஞ்சதரு. பஞ்சதரு-அரிசந்தனம், மந்தாரம், கற்பகம், சந்தானம், பாரிசாதம் என்ற ஐந்து தெய்வமரங்கள். பாதபம்-தாளால் நீரை யுண்பது: மரம். வான் சுரபி-வானுலகத்துப்பசு: காமதேனு. இணை - ஒப்பு. எதிர் - ஒப்பு - செப்புதல் - சொல்லுதல். (38)

39.—செங்கோல்வண்மைச் சிறப்பு.

வீரசம்பு முனிவேள்வி விளங்கவரு முடிவேந்தர்
சீர்மருவு கரத்தேந்து செங்கோலின் றிறத்தானே
நேரறுதீக் கடைகோலு நிறைகோலு நீடுலகில்
ஏரடரு முழுகோலு மிடரின்றி யிருப்பதுவே.

(கு - ரை.) வண்மைச் சிறப்பு - வளத்தின் பெருமை. சம்பு முனிவர்யாகத்தீயில் தோன்றியவர் வன்னியமன்னர் என்பது முன்னரே கூறப்பட்டது. கரத்துக்குச் சீர்மையாவது-உலகுபுரக்கப் படையேந்திக் கொடைபூணல். திறம் - நேர்மை: "திறத்துழி யன்றி வஞ்சித்தெய்துதல்" (கம்பரா: மாரீச: 206). நேர்அறு - ஒப்பற்ற, தீக்கடைகோல்-அரணிக்கட்டை: இதனைக்கடைந்து அந்தணர் முத்தீயோம்ப நெருப்புண்டாக்குவர். இந்நற்கருமத்துக்குப் பயன்படுதலின் 'நேரறு'' என்றார். நிறைகோல்-தராசு: பண்டங்களை நிறுத்தற்குரியகோல்: இது வைசியர்க்குரியது.. ஏர் அடர்தல் - ஏரைச் செலுத்துதல். அடர்தல் - தட்டியுருவாக்குதல்: செவ்வன் நடத்துதல் என்றபடி. உழுகோல் - உழவுக்குரிய தாற்றுக்கோல்: இது, வேளாளர்க்குரியது. எனவே, வன்னிய க்ஷத்திரியரின் செங்கோல் நேர்மையால் ஏனைய மூவருணத்தவரும் இடரின்றியிருப்பரென அவர் கோலின் சிறப்புக் கிளந்தபடி. இருப்பதுவே-குற்றியலுகரம் உயிர்வரச் சிறுபான்மை கெடாது பொது விதியால் வகரவுடம்படுமெய் பெற்றது. 'சீர்மருவுங்கரத்தேந்து' என்றும் பாடம். (39)

40.—செங்கோல்நடத்தற் சிறப்பு.

சீராரும் வன்னிமன்னர் செங்கோன்மை செலுத்துதலால்
சோராது சுரர்க்கும்பூ சுரர்க்குமிகு சிறப்புண்டாம்
நீராரும் புவியின்மநு நெறிதவரு தென்பதன்றி
ஆராலும் பழுதுரைக்க லாமோசொல் வல்லீரே.

(கு - ரை.) வல்லீரே - கட்டிச் சொல்லுதலில் வல்லவர்களே! என விளித்து, சொல் - நீங்களே சொல்லுங்கள் என்றபடி. சோராது மிகுசிறப்பு உண்டாம் எனக்கூட்டுக. சுரர் - தேவர்: பூசுரர் - பூதேவர்: நிலத்தேவர்: பிராமணர். நீர் - கடலுக்கு

இலக்கணை. மநுநெறி - அரசதருமம். ஆர் - யார் என்பதன் மரூஉ. பழுது - குற்றம். ஆமோ - ஓகாரம், எதிர்மறை. (40)

41.—அறநெறியின் சிறப்பு.

**தாரேந்து புயவேந்தர் தமுளிடைவந் தவதரித்தோர் தனுவான் மிக்க
சீரேந்து மறத்தினெறி திறம்பாது நிற்கின்ற செயலா லன்றோ
காரேந்திச் சொரிமழையுங் கலைமறையும் வாணிபமு மடவார் கற்பும்
ஏரேந்து மவர்வாழ்வு மிடரின்றி நிற்பதன்றி யென்கொண் டம்மா.**

(கு - ரை.) தார் - அரசுக்குரிய அடையாளமாலை. "படையுங் கொடியும்...... தாரும் ......செங்கோலரசர்க்குரிய" என்றது மரபியற் சூத்திரம். அறத்தின்நெறி தனுவால் நிற்கின்றது: அங்ஙன் நிற்கின்ற செயலால் மழை முதலியன இடரின்றி நிற்கின்றன என்க. தனு - சிலை, வில். கார்-கருநிறம்: மழை-மேகம்: காளமேகம் என்றபடி. கலைமறை - அந்தணர்க்குரியது. வாணிபம் - வைசியர்க்குரியது. ஏர் ஏந்துமவர் வாழ்வு-வேளாளர்க்குரியது. என் கொண்டு - வேறெதனைக்கொண்டு [நிற்பது]. அம்மா - அசை. ஈண்டு, "கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும், கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும், மாரிவறங் கூரின் மன்னுயிரில்லை", "மாதவர் நோன்பும் மடவார் கற்பும், காவலன் காவ லின்றெனின் இன்றால்" என்ற மணிமேகலையடிகள் ஒருசார் நினைக்கத்தக்கன. 'அறத்தினெறிச்சிறப்பு' என்று தலைப்பு காண்கிறது ஏட்டில். (41)

42.—ஆக்கினைச்சக்கரச் சிறப்பு.

**ஊழிக் கிறைதண் கடல்வீழ்ந்தான் உம்பர்க் கிறையந் தரமானுன்
கோழிக் கிறைதன் ருதைவரை குறுகி ஞனெஞ் சறநாணி [தும்
மேழிக் கிறைமூ விரண்டிஒன்று மேவப் பெறுவன் னியர்செனுத்
ஆழிக் கிறைநா டொறுமாறு தகிலமுழுதுங் காத்தல் கண்டே.**

(கு - ரை.) மேழி - கலப்பை: இங்கு அதனைக்கொண்டு உழும் தொழிலுக்கு ஆகிவந்தது: கருவியாகுபெயர். இறை - வரி. மூவிரண்டின்ஒன்று - ஆறிலொருபங்கு: (⅙). மேவப் பெறு - விரும்பிப் பெறுகின்ற. "நம்பும் மேவும் நசையாகும்மே". "அரசனுக்கு இறைப்பொருள் ஆறில் ஒன்றாயிற்று" என்ற பரிமேலழகருரை நினைக. ஆழிக்கு - ஆஜ்ஞாசக்கரத்துக்கு. ஆழிக்கு நாணி என இயையும். அந்த ஆழி நாள்தோறும் இறை மாறாது அகிலம் முழுதும் காத்தல் கண்டு நெஞ்சு அற நாணினர் திருமால், இந்திரன் குமரன் முதலாய மூவரும் என்பது பாடற்கருத்து. இறைமாறாது - சிறிதும் மாறுபடாமல். அகிலம் - உலகம். நெஞ்சு அற நாணுதல்-மனமழிய வெட்கப்படுதல். ஊழிக்கு இறை-யுகாந்தத்துக்குத் தலைவன் எனத்திருமாலைக் காட்டிற்று, "ஊழிமுதல்வன்"என்றான் ஆண்டாளும். திருமால் பாற்கடலிற் பள்ளிகொண்டிருத்தலைக் குறிப்பாற் காட்டியது, 'தண்கடல் வீழ்ந்தான்" என்ற தொடர்.

அஃதேபோல் இந்திரன் தேவலோகத்துள்ளான் என்றதை "உம்பர்க்கிறை அந்தரமானுன்" என்றதனுல் குறித்தார்; குமரக்கடவுள் கயிலாயத்துள்ளான் என்றதை 'கோழிக்கிறை தன்தாதை வரை குறுகினுன்' என்பதனுற் குறித்தார். காத்தற்றொழிலை மேற்கொண்ட மூவரும் நாணத்தினுல் உயிர்நீத்தனர் என்றதோர் அமங்கலப்பொருளும் தோற்றக் "கடல் வீழ்ந்தான், அந்தரமானுன், கயிலாயங்குறுகினுன்" என்ருர். உம்பர் - தேவர். அந்தரம்-ஆகாசம். கோழிக்கு இறை - கோழிக்கொடியையுடைய குமரன். தாதைவரை - சிவபிரானது கயிலாயமலே. இச்செய்யுட்கு நூற்குற்றங் கூறுகின்ற பத்துவகைக் குற்றத்தே "தன்னு னொருபொருள் கருதிக் கூறல்" என்னுங் குற்றத்தை யேறிட்டுச் சொல்லப்புகுவார்க்கு, சான்ருேர் செய்யுட்கு இக்குற்றமுண்டாயினும் கொள்ளக்கூடாதெனை மறுக்க என்ற நச்சினுர்க்கினியருரை ஈண்டும் போற்றத்தக்கது என்க. (42)

43.—தொழில்நெறிபிறழாமைச்சிறப்பு.

கற்பத் தொழியா மறைபயிலுங் கவின்மே வியவந் தணர்தொழிலும், சிற்பத் தொழில்வை சியர்தொழிலுந் தினமு முயர்முக் குலத்தோரைப், பொற்பத் தொழுஞ்சூத் திரர்தொழிலும் புகலைத் தொழிலு முறை பிறழ்ந்தே, அற்பத் தொழிலா காதரசாள் வதுபண்ணுட்டார் தந்தொழிலே.

(கு - ரை.) கற்பம் - பிரமனுக்கு விதிக்கப்பட்ட வாளுள்; நானூற்றுமுப்பத்திரண்டுகோடி வருடங்கொண்ட பிரமனது ஒருநாள் கற்பம் எனப்படும். இச் சொல்லின்பின் உம்மை தொக்கது. கவின் - அழகு; மறைபயிலும் கவின் - உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், பிரசயம் என்ற நான்குவகைப்பட்ட வேதஸ்வரங்களும் தோன்ற ஓதும் அழகு. அந்தணர் தொழில் - ஓதல், ஓதுவித்தல். எனவே 'பயிலும்' என்றதில் பயிற்றுவித்தலும் அடங்கும். "பிராமணனுக்குப் பித்துப் பிடித்தாலும் வேதம் சொல்லுமாபோலே" என்ற வழக்கு நினைக. சிற்பத்தொழில் என்பதைச் 'சூத்திரர் தொழில்' என்பதன்பின் வைத்துப் பொருள் கொள்ளுதல் நேர். வைசியர் தொழில் - வாணிகம். உயர் முக்குலத்தோர் - தன்னினும் உயர்ந்த அந்தணர் அரசர் வணிகர் என்ற மூன்று வருணத்தவர். பொற்ப-அழகுபெற: தம்நிலைக்குச் சேர என்றபடி. சூத்திரர்-வேளாளர்: நான்காம் வருணத்தவர். அவர்தொழில்-உழுதுபயிரிடல். ஈண்டு "மேன்மூவரு மனம் புகல, வாய்மையான் வழியொழுகின்று" என்ற வேளாண்வாகைத்துறைக் கொளுவும், "மூவரு நெஞ்சமர முற்றி யவரவர், ஏவு லெதிர் கொண்டு மீண்டுரையான்-ஏவல், வழுவான் வழிநின்று வண்டார் வயலுள்,உழுவா னுலகுக்குயிர் என்ற அத்துறையின் வெண்பாவும் நோக்குக. சிற்பத் தொழில் - architecture, sculpture and other allied branches of art. புகல் - சொல்லப்படுகின்ற; விரும்பப் படுகின்ற எனினுமாம். முறைபிறழ்தலாவது - அவரவர்க்குரிய நிலையினில்லாது தடுமாறுதல்: அதாவது, அந்தணர் உழுதலும்

வேளாளர் வேதமோதுதலும் போல்வது. ஆகாது - ஆகாத வாறு, வினையெச்சம். பண்ணுடையார் - தமிழ்நாட்டு வன்னிய வேந்தர். (43)

44.—முத்திரைமோதிரச் சிறப்பு.

எத்திசைமன் னவரரணு முத்திரிக்கு மீதன்றிப்
பத்திமையி லார்க்கந்தப் பரனுலகு முத்திரிக்கும்
சத்தியம்பொய் யாதுவைகிச் சகம்புரக்கும் வன்னியர்கைம்
முத்திரையா ழிக்குநிகர் மூதக்கீர் மொழியிரே.

(கு-ரை.) மூ தக்கீர் - பெரிதும் தகுதியுடையவர்களே! பெருந் தகையோரே! என விளி. முத்திரை ஆழி - முத்திரை மோதிரம், இலாஞ்சனை மோதிரம்; seal-ring, signet-ring. முத்திரிக்கும்-முத் திரையிடும். அரணை முத்திரித்திடுதலாவது-தம்மதாக்கிக்கொள்ளு தற்குஅடையாளமாகத் தமது இலாஞ்சனையைப் பொறித்தல். ஈது அன்றி - இதுவேயல்லாமல், மேலும் என்றபடி, பத்திமை-தெய்வ பக்தியுடைமை. பரன் உலகு - பரமபதம்; சுவர்க்கம். முத்திரிக்கும்-(இலாஞ்சனையிட்டு) அடைத்துவிடும் என்றபடி. பக்தியில்லாத வர் சுவர்க்கம் புகமுடியாதபடி அதன்கதவினை யடைக்கும் என்ற கருத்தது. சுவர்க்கத்திற்குக் கதவுண்டு என்பது போலக்கூறுதல் கவி மரபு. 'அறம் செய்தால் சுவர்க்கம் புகுந்தான்', 'துறக்கம் திறப்பதோர் தாள்' முதலியன காண்க. விவிலியநூலும் "Gates of Heaven" என்றது. வைகுதல் - தங்குதல்; நிலைநிற்றல். சகம் - பூவுலகம். நிகர் - ஒப்பு. (44)

45.—துட்டநிக்கிரகச் சிறப்பு.

தீட்டார் தமையுஞ் சிவநிந்தை செய்வோ ரையுஞ்செங் கோன் முறையேர், பூட்டார் தமையும் பொய்யரையும் போர்வெங் களத்துப் போந்துபுறங், காட்டார் தமையுங் கள்வரையுங் கலிதீர்ந் திடக்காட் டியவறத்தை, நாட்டார் தமையு நானிலத்தி னுட்டார் நவில்பண் ணுட்டாரே.

(கு-ரை.) துட்டநிக்கிரகம்-தீயோரையழிக்கை. பண்ணுட்டா ராகிய வன்னிய மன்னர், தீட்டார் [ஒழுக்கமற்றவர்], சிவநிந்தை செய்வோர், ஏர்பூட்டாதவர், பொய்யர், பகைவர், கள்வர், ஈயாத புல்லர் என்ற இத்தீயோர்களை இந்நிலவுலகத்தில் தங்க வைக்க மாட்டார்கள் என்று அவர் தீமைதெறற் சிறப்புக் கிளந்தபடி. தீட்டுதல் - துலக்குதல்; தீட்டார் - துலக்கிலாதார்; நல்லொழுக்க மில்லாதவர். முறை - முறைப்படி. முதுகுகாட்டி யோடுவோர் மேல் அம்பெய்யாராதலின் "புறங்காட்டார்தமையும்" என்றது. புறங்காட்டுதல் - முதுகுகாட்டியோடல். கலி-தரித்திரம்; வறுமை. அது தீர்ந்திடக்காட்டிய அறம் = ஈகை. நவில் - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற. ஈற்றடியில் வந்துள்ள 'நாட்டார்' என்ற சொல் மூன்றனுள், முதலது - வினையாலணையும்பெயர்; இரண் டாவது - பலர்பால் வினைமுற்று; மூன்றாவது-இடத்தினடியாகப்

பிறந்த பெயர். இது ஒருவகைச்சொல்லழகு. எழுவகைத்தீயோரைக் கூறியது ஏனையோர்க்கும் உபலட்சணமாக்கொள்க. என்னை? "ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே". (45)

46.—வாயில்மேவுதற் சிறப்பு.

கடிந்தாரைக் களைவனியர் காப்பாளர் சமர்க்களத்தில்
மடிந்தாலுஞ் சுவர்க்கமுண்டாம் வாயில்காத் தவரடியில்
படிந்தாலு மரசுண்டாம் பகர்வதெவன் பாரிடத்தில்
விடிந்தால்வேந் தன்வாயின் மேவாதார் யாருளரே.

(கு - ரை.) வன்னியரோடு போரிட்டுச் சமர்க்களத்தில் மடிந்தாலும் வீரசுவர்க்கமுண்டு; வாயில்காத்து அவரடியிற் படிந்தாலும் அரசுஉண்டு. இவற்றில் பின்னதே நலமுடைத்தென்று கொண்டு அனைவரும் அவர்தம் வாயில்மேவுதற்சிறப்புக் கிளந்தபடி. வனியர் கடிந்தாரைக் களைந்து அதனால் காப்பாளராகிறார்கள் என்ற பாவந் தோன்ற வைத்தபடி. கடிந்தார்-துட்டர். சுவர்க்கம்-வீரசுவர்க்கம்: இறந்த வீரரடையும் சுவர்க்கபதவி. பகர்வது எவன்-(யான்) சொல்லவேண்டுவது என்ன விருக்கிறது? என்றதால், பின்னதே தக்கது என்றுகொண்டு, அனைவரும் வாயின் மேவுகின்றனர் என்றபடி. ஈற்றேகாரம் எதிர்மறை. இரண்டு எதிர்மறை ஒருடன்பாட்டை வற்புறுத்துமாகலின் 'அனைவரும் மேவுவர்' என்று பெறவைத்தார். 'விடிந்தால்' என்ற சொல்லாற்றலால், சூரியோதயத்தை எதிர்பார்த்திருப்பர் எனக்குறித்தபடி. எவன் - வினாவினைக்குறிப்புமுற்று. 'வாயில் காத்தற்சிறப்பு' என்று தலைப்பு காண்கிறது ஏட்டில். (46)

47.—தொழுதல் முதலிய சிறப்பு.

அணங்காற் றருவில் லேந்திமுறை யரசாள் வன்னிச் சயதரரை
வணங்கார் யார்கை கூப்பார்யார் வாரி சூழும் வையமிசை
இணங்கார் யார்நின் றேத்தார்யா ரேவற் பணிசெய் யார்யார்நன்
மணஞ்சார் முற்றங் காத்திருந்து வாழ்நாண் மகிழார் யார்யாரே.

(கு - ரை.) இச்செய்யுளின் பொருள் வெளிப்படை. அணங்கு ஆற்று அரு வில் - வருத்தத்தைச் செய்கின்ற [தாங்குதற்கு] அரிய வில். அணங்கு - அச்சமுமாம். சயதரர் - வெற்றியைத் தரிப்போர்: வீரர் என்றபடி. வணங்குதல் - அடிபணிதல். கைகூப்புதல்-கும்பிடுதல்: வாரி-நீர்: கடலுக்கு இலக்கணை. இணங்குதல்-நட்புக்கொள்ளுதல். ஏத்துதல்-துதித்தல். ஏவற்பணி-குற்றேவல். மணம்-வாசனை; மதிப்பு எனினுமாம்; "பணமுள்ளவனுக்கே மணமுண்டு" என்ற வழக்கு நோக்குக. வாழ்நாள் மகிழ்தலாவது - தத்தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுதல். (47)

48.—செல்வாக்கின் சிறப்பு.

பாவசையு நாவலர்பால் பத்திமிக வைத்துதவும்
பூவசையு மணிமார்பர் புகழினுக்கோர் நிகரின்றால்
மாவசையாப் பெருஞ்செல்வர் மாதிரங்காக் கும்வனியர்
நாவசைய நிரந்தரமும் நாடசையா திருந்திடுமோ.

(கு - ரை.) பா அசைத்தல் - பாட்டுக்களைச் சொல்லுதல். 'சேட னுயிர நாவி னுலு மசைக்கினும்' என்றது குற்றாலத்தல புராணமும். பத்தி - அன்பு. பூ - மாலைக்கு ஆகுபெயர். அசைதல்-கிடத்தல்: 'குறங்கின் மிசை யசைஇய தொருகை'(திருமுருகு:109). மா - இலக்குமி: செல்வத்துக்குரிய மகள். அசையா - விட்டு நீங்காத. அசைதல் - விட்டுப்போதல். மாதிரம் - திக்கு. நா அசைதல் - நாக்கு ஆடுதல்: சொல்லாணையிடுதல். நாடு அசைதல் - நாடு இயங்குதல்: 'அவனன்றியோரணுவும் அசையாது' என்ற விடத்தும் இப்பொருளில் வருதல் காண்க. நாவசைய நாடசையு மாதலின், புகழினுக்கோர் நிகரின்றால் என்றார். ஆல் - அசை. நாவசைய நாடசையும் என்பது உலகவழக்கு. அசைதல் என்ற ஒரே சொல் வெவ்வேறு பொருளில் பலமுறை வந்தது, சொற்பொருட்பின்வருநிலையணி. 'வைத்ததுவும்' என்ற பாடம் சிறவாது. (48)

49.—இரண்டுகவிகள் - புகழ்ச்சிறப்பு.

ஆந்துணையாம் வன்னியர்போ லார்துணைப்பட் டாதரிப்பார்
போந்தரிகள் வணங்குமிவர் புகழ்சிறிதோ யாம்புகழ்தற்
கேந்துகர மிரண்டினும்பொன் னிலக்கமறச் சொரியினுமிவ்
வேந்தர்புகழ்க் கிணைநாவால் வேறுபுகழ் கூறேமால்.

(கு - ரை.) ஆம் துணை - ஆகுந் துணை; தக்க துணை. அரிகள்-பகைவர்கள். போந்து - அவர்முற்றத்துத் தாமே சென்று. இலக்கம் அற - கணக்கில்லாதபடி. சொரிதல்-மழைபோலப் பொழிதல். வேறு - வேறொருத்தர். (49)

50. வளமருவு மங்கையர்கோன் சொலத்தகுபல் லவராயன் மரபிற் றோன்றிக், களமருவு கறையுடைய கண்ணுதல்கச் சியின் வாழே கம்ப ரேசற், குளமருவு மன்பினரா யொளிர்மகுட மணிப் பொற்றே ருதவி மேனுள், தளமருவு தாமரைபோன் முகவனியர் படைத்தபுகழ் சாற்றற் பாற்றே.

(கு - ரை.) மங்கையர் கோன் - மங்கைநாட்டார்க்குத் தலைவன்; திருமங்கையாழ்வார். சோழமண்டலத்துத் திருவாலி திருநகரிப்பகுதி மங்கைநாடு எனப்படும். வளம் மருவு - சொல் வளம் பொருந்திய. இது - 'கோன்' என்பதனோடு இயையும். ஆழ்வார்க்கு

'நாலுகவிப்பெருமாள்' என்ற பெயருண்மையும் நினைக. சொலத் தகு பல்லவராயன்-(ஆழ்வாரால்) பாடும்படியான தகுதியையுடைய பல்லவராஜன்: இவன் நந்திவர்மன் பல்லவமல்லன் எனப்படு பவன். இவனைப்பற்றித் திருமங்கையாழ்வார் திருப்பரமேச்சுர விண்ணகரப்பதிகத்திலும் திருநந்திபுரவிண்ணகரப்பதிகத்திலும் பின்வருமாறு பாராட்டியுள்ளார்: "பல்லவன் வில்லவனென்று உலகில் பலராய்ப் பலவேந்தர் வணங்குகழல் பல்லவன்", "தேர் மன்னு தென்னவனை முனையில்செருவில்திறல்வாட்டிய திண்சிலை யோன்", "நிரந்தவர் மண்ணையில் புண்ணுகர்வேல் நெடுவாயி லுகச் செருவில்முனநாள் பரந்தவன்", "வெண்குடைநீழல்செங் கோல்நடப்ப விடைவெல்கொடிவேற்படைமுன்உயர்த்த, பண் புடைப் பல்லவர்கோன்", "உலகுடைமன்னவன் தென்னவனைக் கன்னிமாமதிள்சூழ்கருவூர்வெருவ, பலபடைசாயவென்றான்", "விடைத்திறல்வில்லவன்நென்மெலியில் வெருவச்செருவேல்வலங் கைப்பிடித்தபடைத்திறல்பல்லவர்கோன்", "கறையுடைவாள்மற மன்னர்கெடக் கடல்போல்முழங்கும்குரல்கடுவாய், பறையுடைப் பல்லவர்கோன்", "நந்திபணிசெய்தநகர்நந்திபுரவிண்ணகரம் நண் ணுமனமே" என்று. இங்ஙனம்"புலவர்பாடும்புகழுடையோர் விசும் பின் வலவனேவா வானவூர்தி யெய்துபவென்ப தஞ்செய்வினை முடித்து" ஆதலின், "மரபிற்றோன்றி" என அப்பல்லவமரபின் சிறப்புக் கிளந்தபடி. 'வன்னிய குலத்தவர் பல்லவமன்னர்' என் பது முன்னரும் கூறப்பட்டது. களம் - கண்டம், கழுத்து. கறை- விஷக்கறை: ஆலாலமுண்டதாலாயது. கண்நுதல் - நெற்றியிற் கண். கச்சி - காஞ்சீ என்ற வடசொல்லின் சிதைவு. ஏகம்பரேசர்- ஏகாம்ரநாதஸ்வாமி. காஞ்சீபுரத்தில் வேதவடிவமான ஒருமாமரத் தின்கீழ்ச் சிவபிரான் சிவலிங்கவடிவமாய் எழுந்தருளியிருக்கின் றனனென்பர். ஒளிர்மகுடம் - இரத்தினகிரீடம். மணிப் பொன் தேர் - மணிகள் பதித்த பொன்னிழைத்த தேர். வன்னியகுலவேந் தர் ஏகாம்ரநாதர்க்குக் கிரீடம் தேர் இவற்றை யளித்ததை "சம்பு குலத் தொருவன் சாற்றுகைக்கா மென்றளித்த-செம்பொன் மணி மகுடஞ் சேர்வித்து" என்றும், "வடித்த சுடர்வேற்சம்பன் வாழ் மல்லிநாதன்-கொடுத்த திருத்தேர்மேற்கொண்டு" என்றும் இரட் டையரின் ஏகாம்ரநாதருலா கூறுவது கொண்டும் அறிக. தளம் - இதழ். (50)

51.—மாசு அகற்றற் சிறப்பு.

மின்னு மிரவி தனிற்றோன்றும் வேந்தர் குலத்தில் வருமாசும்
மன்னு மதியந் தனிற்றோன்று மன்னர் குலத்தில் வருமாசும் [றும்
துன்னுந் திரைத்தண் கடலுலகிற் றொலைக்குந் தூய்தாங் கனற்றோன்
பன்னு புகழ்கொ ளரசர்களே பார்க்கின் மாசு தீர்ந்தாரே.

(கு - ரை.) சூரியகுலமன்னர்க்கும் சந்திரகுலமன்னர்க்கும் மாசுஉண்டு; ஆனால் அக்கினிகுலமன்னர்க்கோ எவ்விதமாசும் இல்லை. புடமிட்ட பொன்னைச் சுத்திசெய்து தூயதாக்குதல்போல அக்னி, தன்னுள் தோன்றிய வன்னிமன்னரைத் தூயதாக்கியது என்பார் "தூய்தாங்கனல்" என்றார். சூரியகுலமன்னர்க்கு மனை

வியைவிற்றல், மனைவியைவெஞ்சிறைப்புகவிடுதல் முதலாயகுற்ற முண்டு: சந்திரகுலமன்னர்க்கு, மனைவியைக்கலைபாதியோடு வனத்திலே அழவிடுதல், மனைவியைத்துகிலுரியவிட்டுவிழித்தல் முதலாய குற்றமுண்டு. அக்கினிகுலத்தவர்க்கோ மனைவியைப்பறி கொடுத்தல் முதலாய குற்றமொன்றேனும் இல்லை என அவர் குலத்தூய்மை கிளந்தபடி. இரவி - சூரியன். மதியம் - சந்திரன். துன்னுதல் - நெருங்குதல். திரை - அலை. தொலைக்கும் - நீக்கு கின்ற: தன்னிடத்து வாராமல் காக்கின்ற என்றபடி. பன்னுதல் - சிறப்பித்துச் சொல்லப்படுதல். பார்த்தல் - ஆராய்தல். (51)

52.—இரண்டுகவிகள்—பெருந்தன்மைச் சிறப்பு.

கலையான் மிக்கோ ருலகளிக்குங் கருத்தான் மிக்கோர் கனகமணி, மலையான் மிக்கோர் நிலவுகுடை வளத்தான் மிக்கோ ருடைமாறு, நிலையான் மிக்கோர் இனிதோங்கு நெறியான் மிக்கோ ரிகல்வெல் லுஞ், சிலையான் மிக்கோர் வன்னிமன்னர்க் கெவர்தான் மிக்கோர் தெளிதரினே.

(கு - ரை.) தெளிதரின் - ஆராயுங்கால்: தா - துணைவினை. இச்செய்யுளிற் கூறிய எழுவகையினும் மிக்கோர் வன்னிமன்னர் ஆதலின் அவர்க்கு எவர்தான்மிக்கோர் எனப் பொருள்முடிபு காண்க. கலைஞானம், கருத்தொடு உலகுபுரத்தல், பொன்மணிக் குவியல், அரசாட்சி வளம், செல்வம் அழியாமை, அறநெறி, வில் வீரம் இவற்றில் சிறந்தோர் வன்னிமன்னர் என்பது கருத்து. கலை - கல்வி. கனகம் - பொன். மணி - நவமணி. கனகமணி-உம் மைத்தொகை. குடை - அரசாட்சி: "குடையுங்கோலும் பிழைத்த வோ" (சிலப்: 27,77) உடை - செல்வம்: மாறுதல் - இல்லையாதல்; மாறு - உளதாதல். இனிதோங்குநெறி - அறநெறி. இகல் - பகை. இகல் வெல்லும் சிலை - உடையவன் தொழில் உடைமையின் மேலேற்றப்பட்டது. (52)

53. ஆக்கமுன் னிடினுய ரறத்தை யாக்குவர்
போக்கமுன் னிடிற்பொருந் தாரைப் போக்குவர்
காக்கமுன் னிடிற்கட னிலத்தைக் காப்பர்நல்
லூக்கமுன் னிடுகுணத் தோர்பண் ணுடரே.

(கு - ரை.) பண்ணுடர் - வன்னிமன்னர். ஊக்கமாவது - மனம் மெலிதலின்றி வினைசெய்தற்கட் கிளர்ச்சியுடைத்தாதல். [அவ்வூக்கம்] முன்னிடுதல் - முந்துதல்: "மடிதற்றுத்தான் முந்துறும்" என்றவிடத்துப்போல. நல்லூக்கம் முன்னிடு குணத்தோராதலின் பண்ணுடர் ஆக்குவர், போக்குவர், காப்பர் எனக்காரண காரியம்கூறியபடி. ஆக்க முன்னிடின்-ஆக்கவேண்டு மென்று கருதினால். முன்னுதல் - கருதுதல். ஆக்க - உயர்த்த. ஆக்குதல் - உயர்த்தல் என்ற பொருளில் வருதலை "ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்" (264) என்ற குறளிடத்துங் காண்க. போக்க - ஒழிக்க. பொருந்தார் - பகைவர். (53)

54.—இதயவண்மைச் சிறப்பு.

**சமய வளமுஞ் சிவனுமைமால் தலத்தின் வளமுங் குலவளமும்
அமையு நிலத்தின் வளமுமுழ வாளர் வளநல் லறவளமுந்
தமையொப் பிலர்கற் புறுவளமுஞ் சகல வளமுந் தமிழ்வேந்தர்
இமையப் பொருப்பர் பண்ணுடை ரிதய வளத்தின் றிறத்தானே.**

(கு - ரை.) தமிழ்வேந்தர் இமயப்பொருப்பர் பண்ணுடர்-ஒரு பொருளின்மேல்வந்த பலபெயர்கள். இமயத்தின்மேல் புலி, கயல், வில் பொறித்தனராதலின், தமிழ்வேந்தர் 'இமயப்பொருப்பர்' எனப்பட்டார்: சகலவளமும் இதயவளத்தின் திறத்தானே **உளவாம்** எனஎஞ்சியசொல் வருவிக்க. இங்ஙன் வருவிப்பது சொல்லெச்சம். சமயம் - அறுவகைச்சமயங்கள்: அவை வைஷ்ணவம், சைவம், சாக்தம், சௌரம், காணபதம், கௌமாரம் என்னும் ஆறு வைதிக மதங்கள். சிவன் உமைமால்தலம்-காஞ்சீ. இது ஏகாம்பரேசுவரரும் காமாட்சியம்மையும், அத்திகிரிஅருளாளரும் எழுந்தருளியிருக்குந் தலமாகும். "குலங்களாயவீரிரண்டில்," "குலந்தாங்கு சாதிகள் நாலிலும்" என்றபடி, அந்தணர் அரசர் வணிகர் வேளாளர்குலங்கள். அமையும் - பொருந்திய. உழவாளர் வளம் என்றதன்பின் எண்ணும்மை கூட்டிக்கொள்க. ஒப்பிலர்-மகளிர். 'ஒப்பவரில்லா மாதர்கள்' என்றார் மங்கைமன்னனும். கற்பாவது - கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்று எனவும் அவனை இன்னவாறு வழிபடுக எனவும் இருமுதுகுரவர் [பெற்றோர்] கற்பித்தலானும், அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் கடவுளர் இவர்களிடத்து ஒழுகும் ஒழுக்கத்தைத் தலைமகன் கற்பித்தலானும், வேதத்தினும் சடங்கினும் விதித்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக்கொண்டு துறவறத்துச் செல்லுந்துணையும் இல்லறம் நிகழ்த்துதலானும், கொண்ட தலைவனை இன்னவாறு பாதுகாப்பாயெனவும் அவற்கு நீ இன்னவாறு குற்றேவல்செய்தொழுகு எனவும் அங்கியங் கடவுள் சான்றாக மந்திரவகையாற் கற்பிக்கப்படுதலானும் **கற்பு** எனப்படுவதாயிற்றென்பர். தமிழ்வேந்தர் என்றமையால் சேரசோழபாண்டியரையேயன்றி "வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ்கூறுநல்லுலகத்து"ப்பட்டப்பெயர்பூண்ட வன்னியகுலத்தவர் பலரையும்கொண்டு கூறினுருமுளர். (54)

55.—இராஜசமுகச் சிறப்பு.

**வானோர் வியக்குஞ் சமுகமுது மறையோர் வாழ்த்துஞ் சமுகமலர்த்
தேனார் திருக்குஞ் சமுகமன்னர் திறைக ளளக்கும் சமுகம்விழி
மானார் நடிக்குஞ் சமுகமதி வல்லோர் துதிக்குஞ் சமுகமொன்னார்
ஆனு திறைஞ்சுஞ் சமுகம்வன்னி யரசர் சமுக மதுதானே.**

(கு-ரை.) எழுவகையின சமுகமும் ஒருங்கே கூடியது வன்னியரசர் சமுகம் என்றபடி. வானோர்வியத்தல் நம்அரசனுக்கும் இவ்வளவு சிறப்பு இல்லையே யென்பது பற்றி. வாழ்த்துதல்-ஆசீர்வதித்தல். மலர்த்தேன் - உவமையாகுபெயராய்ச் செந்தாமரையில் தங்கியிருக்கும் இலக்குமிக்கு வந்தது. பிறசமுகமனைத்தும் உயர்

திணையாக் கூறப்பட்டிருப்பவே, மலர்த்தேன் என்பதற்கும் உயர் திணையாப் பொருள்கொள்ளலே நேர். எனினும், செல்வம் நிறைந் திருக்குஞ்சமுகம் என்ற கருத்தது. திறைகள் - கப்பங்கள். விழி மாஞர் - மான்விழியார் என மாறி நடனப் பெண்களைக் குறிக் கும். மதிவல்லோர் - அறிஞர். ஒன்ஞர் = ஒன்ருர், பகைவர். ஆறுது - நீங்காது, இடைவிடாது. இறைஞ்சுதல்-வணங்குதல். ஆறுது வணங்குதல் - உயிர்பெற்று வாழ்தற்காக. வன்னியரசர் சமுகம், அறம் பொருளின்பம் ஆகிய மூன்று புருஷார்த்தங்களையும் பெற்று இலங்குவது என்பது பாவம். (55)

56.—பதியிருத்தற் சிறப்பு.

பண்ணுடர் தமதுபெரும் பதியிருப்ப தாலிமையோர்க்
கெண்ணூர்ந்த சிறப்பிருக்கும் இம்பர்மனு முறையிருக்கும்
கண்ணுமுத் தமிழிருக்குங் கற்ருேர்க்குப் புகழிருக்கும்
விண்ணூர்ந்த மழையிருக்கு மிடியிருக்க மாட்டாதே.

(கு - ரை.) பெரும்பதி - தலைநகரம்: Capital. பகையின்மை யால் பதியிருத்தல் கூறப்பட்டது. எண்ஆர்ந்த - எண்நிறைந்த: பரிபூரணமான. இம்பர்-இவ்வுலகத்து. மனுமுறை- நல்லரசுநெறி. முத்தமிழ் - இயல் இசை நாடகம். கண் ஆ - கண்போலப்பாராட் டப்பட்டு. ஆர்ந்த - பரவிய. மழை - மேகம். மிடி - தரித் திரம். 'மாட்டாவே' என்ற பாடம் சிறவாது. ஏரெழுபதிலும் "கலியடையமாட்டாதே" (46) "கலியீடேற மாட்டாதே" (47) "கலியின் துயர்பொலிய மாட்டாதே"(61) என்ற பாடமே காண்க.

57.—மன்னர்சூழ்தற் சிறப்பு.

பொன்னனையு மரதனம்போற் புகழணையும் பெருநிதிபோன்
மன்னனையு நெடும்படைபோன் மலரணையு மளியினம்போற்
றன்னிகரா ரெனத்தழலிற் சகலகலை யுடனுதித்த
மன்னரையே மன்னரெலா மதித்தணைந்து வாழ்வாரே.

(கு - ரை.) அணைதல் - சேர்ந்திருத்தல். அரதனம் - இரத் தினம். மன் - அரசன். அளியினம் - வண்டுக்கூட்டம். ஆர் - யார் என்பதன் மரூஉ. மன்னர் எலாம் - பிற குல மன்னரெல்லாம்: சூரியசந்திர குலத்தவரைக்காட்டும். இனி, வன்னியவரசர்கள் தமக்குள்ளாகவே ஒருவரையொருவர் மதித்தணைந்து வாழ்வார் கள் என்ருருமுளர். முதலிரண்டடிகளில் உவமையணி. (57)

58.—மொழிதவருமைச் சிறப்பு.

விண்ணொளிர்வெங் கதிரொளியும் விதுவொளியும் விளக்கொளியுந்
தண்ணொளிகான் மணியொளியுந் தகைசான்ற வொளியாமோ
கண்ணொளியா யுறைவனியர் காத்தருள்பொய் யாவொளியே
மண்ணொளியா வொளியெனமா மறையொளியா வழுத்தலினே.

(கு-ரை.) வழுத்தலின் தகைசான்ற ஒளியாமோ என முடியும். **கண்ணுக்குள் ஒளி விளக்கந் தந்துறைவதுபோலக் காசினிக்குள்**

வனியர் புகழ்விளக்கந் தந்துறைவரென்பது "கண்ணொளியாயுறைவனியர்" என்றதால் பெறவைத்தார். காத்தருள் - பழுதுபடாது காக்கின்ற. அருள் - துணைவினை. பொய்யா ஒளியே-(மனத்து இருள் கடியும்) பொய்யாமையாகிய ஒளியே. 'பொய்யாத ஒளி' என்பது குறைந்து நின்றது: பொய்கூறாமையாகிய ஒளி என்றவாறு. அதாவது, வாய்மை, சத்தியம். மண்-பூவுலகத்தில், ஒளியா - (என்றும்) மறையாத, ஒளி - விளக்கு. மா மறை - திருக்குறள். இது தமிழ் மறை, பொதுமறை, உத்தரவேதம் எனப்படுதல் காண்க. "ஒளியா வழுத்தலின்" எனமேல் வருதல்நோக்கி, மாமறை யென்பது திருக்குறளுக்காயிற்று; (வடமொழிவேதம் மறைபொருளைக்கொண்டதால் மறை எனப்படுவது உணர்க). இத்தமிழ்மறைக்கு 'மா' என்ற அடைகொடுத்ததும் நோக்குக. என்னை? வடமொழி வேதம் போலன்றி எல்லாச்சாதியார்க்கும் எல்லாச்சமயத்தார்க்கும் பொதுவான வேதமாதலின். ஒளியா-ஒளிக்காது, மறைக்காது; வெளிப்படையாக என்றபடி. ஈறுகெட்டவினையெச்சம். வழுத்துதல் - கொண்டாடுதல். வழுத்தியதெங்ஙனென்னில் "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப், பொய்யா விளக்கே விளக்கு" என்றதால். வெங்கதிர்-சூரியன். விது-சந்திரன். விளக்கு-தீபம்(Lamp). கால்-கக்குகின்ற. மணி-மாணிக்கம், இரத்தினம். தகைசான்ற-பெருமை நிறைந்த. கதிரொளி இரவிலில்லை, விதுவொளி பகலிலில்லை, விளக்கொளி காற்றிலில்லை, மணியொளி நாளில் மங்கும் ஆதலின் இவையிற்றைத் "தகைசான்றவொளியாமோ" என்றார். இச்செய்யுளிற் சொல்லழகு காண்க. (58)

59.—சாந்தம் முதலியபண்புகளாற் சிறப்பு.

சாந்தமிரட் சகத்தாலுந் தகைபெறுவை பவத்தாலும்
ஆர்ந்தபுய பலத்தாலும் அழகமைந்த திறத்தாலும்
ஏந்துபுக ழரன்மாலிந் திரன்குகன்வே ளெனவன்னி
வேந்துசிறந் திருப்பதையிம் மேதினியே விளம்பிடுமால்.

(கு - ரை.) சாந்தகுணத்தாலும், இரட்சகத்தாலும், வைபவத்தாலும், புயபலத்தாலும், அழகாலும் முறையே சிவபிரான் திருமால், இந்திரன், முருகக்கடவுள், மன்மதன் இவர்களை வன்னி வேந்தர் ஒப்பச் சிறந்திருப்பர் என்பது கருத்து. முறைநிரனிறையணி. சாந்தம் - அமைதி. சங்காரக்கடவுட்குச் சாந்தம் கூறியது அவரது தட்சிணாமூர்த்திபோன்ற நிலைகளில் என்க. "சாந்தந் தருபவர் வெங்கைபுரேசர்" என்றார் சிவப்பிரகாசரும். (திருவெங்கைக் கோவை: 329): "புராரியும் புகழ்தற்கொத்த சாந்தனால்" என்று கம்பர் கூறியதும் ஒருபுடை நோக்குக. (பால: திருவவ: 33). இரட்சகம் - காத்தல். திருமால் காத்தற்கடவுளென்பது பிரசித்தம். தகை-அழகு. வைபவம்-மகிமை. வைபவத்துக்கு இந்திரனைக் கூறுதலை இவ்வாசிரியர் இயற்றிய இராமாயணத்துப் பாலகாண்டத்துக் கையடைப்படலத்து முதலிரண்டுசெய்யுட்களிலும் காண்க. ஆர்ந்த-நிறைந்த. திறம்-வகை. அரன்-சிவன். குகன் - முருகன்: "ஆருயிர்க் குகைதொறும் வதிதலாற் குகனென்று" என்றது தணி

கைப்புராணம். (நாட்டுப்: 33). குகன் எனமுன்னர் வந்தமையால் வேள் என்பது மன்மதனுக்காயிற்று. அரன்மாலிந்திரன்குகன்வேள் -உம்மைத்தொகை. வேந்து-பொருளால் உயர்திணையாயினும் சொல்லால் அஃறிணையாதலால், 'சிறந்திருப்பது' என்னும் அஃறிணை முற்றுக்கொண்டது; "குடிமை யாண்மை யிளமை மூப்பே...... உயர்திணை மருங்கி னிலையின வாயினும், அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்" என்ற தொல்காப்பியச்சூத்திரத்தினுரையில், "அன்னபிறவும்" என்றதனால், "வேந்து வேள் குரிசில் அமைச்சு புரோசு என்னுந் தொடக்கத்தனவுங் கொள்க' என்றதுங் காண்க. மேதினி - (திருமாலாற் கொல்லப்பட்ட மதுகைடபரென்னும் அரசர்களது) உடற்கொழுப்பினால் நனைந்தமைபற்றி, பூமிக்கு இப்பெயர்; மேதஸ் - நிணம். (59)

60.—கொடைவளத்தின் சிறப்பு.

வையந் தழைப்ப மறைதழைப்ப மறையோர் புரியு மகந் தழைப்பச், செய்யு முனிவர் தவந்தழைப்பச் செங்கோ றழைப்பச் சீர்தழைப்பப், பெய்யு முகில்போற் றுங்கவன்யர் கைம்மா றுகவா மற்பெறுவோர், கையுந் தழைப்ப மெய்தழைப்பக் கனகம் பொழி வார் காணீரே.

(கு - ரை.) துங்கவன்யர் கைம்மாறு உகவாமல் பெய்யும் முகில்போல் பெறுவோர் கையும்மெய்யும் தழைப்பவும், (அதன் மூலம்) வையம் முதலியன தழைப்பவும் கனகம் பொழிவார் என்பது கருத்து. கனகம் பொழிதலால் பெறுவோர் தழைக்கவே, அவர் அருளிக்கூறும் மொழியின் பயனால் வையம்முதலியன தழைப்பன எனப் பொருட்பொருத்தங்கொள்க. மூன்றாமடியில் "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு" என்ற குறட்கருத்து நினைக. கையும் மெய்யிலோர் உறுப்பன்றே, வேறுகூறியதென்னென்னில், 'ஏற்றகை மாற்றாமை......யீவதாம் ஆண்கடன்" என வலியுறுத்தற்கு என்க. பொழிதல் - சொரிதல். "காவலன் கன்னன் கையும் பொழிந்தது கனக மாரி" என்றார் வில்லிபுத்தூரரும். (பதினேழாம்போர்ச். செ. 33). மகம் - யாகம். 'முனிவர்செய்யும் தவம் தழைப்ப' என மாற்றிப் பொருள்கொள்க. இனி, 'செய்ய முனிவர்' என்று பாடமாயின், செய்ய - செப்பமான என்க; "செய்ய சிந்தைப்பேரருளாளர்" (கம்பரா: விபீடண: 128). சீர் - புகழ். காணீரே - முன்னிலையசைச்சொல். (60)

61.—வள்ளல்தன்மைச் சிறப்பு.

புள்ளிபல வாயினும்புன் பூசைபுலி யாகாவே
வெள்ளிபல வாயினும்வான் வெண்மதியோன் றாகாவே
துள்ளல்பல வாயினுமோர் தூய்கருட னாகாவே
வள்ளல்பல ராயினுநல் வன்னியர்க்கொப் பாகாரே.

(கு - ரை.) புள்ளிகளையுடைய பூனைகள்பலவாயினும் ஒரு புலியாகாது; பலநட்சத்திரங்கள் கூடினாலும் ஒரு சந்திரனாகாது;

ஈக்கள் பல கூடினாலும் ஒரு கருடனாகாது; அதுபோல, வள்ளல்கள் பலர் கூடினாலும் ஒரு வன்னியமன்னர்க்கு ஒப்பாகார் என்றபடி. எடுத்துக்காட்டுவமையணி. "வெள்ளிபல, துள்ளல்பல, வள்ளல் பலர்" என்பதற்கேற்ப "பூசைபல" என மாற்றிப் பொருள் கொள்ளப்பட்டது. 'புள்ளி பூசை பலவாயினும்' என்க. புள்ளியை யுடைய பூசை - இல்பொருள். பலவாயினும் - பலவாகக்கூடினும் என்றபடி. புன்மை - அற்பத்தன்மை. வெள்ளி - நட்சத்திரம். வான் - ஆகாயம், பெருமை. துள்ளல் - கொசுகு: ஈயெனினுமாம். "ஈயாடுவதோ கருடற்கெதிரே" என்பது வழக்கு. (61)

62.—அடுத்தவர்க்குத் தாழ்வின்றெனல் சிறப்பு.

மேருவினைச் சார்ந்தவரை மிடியணுகு மோதேவ
தாருவினைச் சார்ந்தவரைத் தழற்பசிவந் தணுகிடுமோ
நேருரைசெ யாவன்னிய நிருபர்நெடுங் கழலிணையைச்
சாருமவர் தமையிறையுந் தாழ்வென்ப தணுகுறுமோ.

(கு - ரை.) மேரு - பொன்மலை என்பர். மிடி - தரித்திரம். அணுகுமோ, ஓகாரம் - எதிர்மறை. தேவதாரு - தெய்வ விருட்சமாகிய கற்பகம். தழல் பசி - அக்னிபோல் வாட்டும் பசி. நேர் உரை செயா - ஒப்புச் சொல்லமாட்டாத: இது நிருபர்க்குமாகும், கழலிணைக்குமாகும். கழலிணை - இரண்டுபாதங்கள். கழல் - அடிக்குத் தானியாகுபெயர். இறையும் - சிறிதும், கொஞ்சமேனும். தாழ்வு-துன்பம். "என் தாழ்வுகெடத் தேற்றாய்" (திருவிளை: பழியஞ்சிய 32). இச்செய்யுளிலும் எடுத்துக்காட்டுவமையணி. (62)

63.—உமைமுதலியோரின் அருள்பெற்றோரெனற் சிறப்பு.

கலைமகடன் மைந்தரெனக் கலைஞானம் பெறுகையினால் கடல் சூழ் பூமித், தலைமகடன் மைந்தரெனச் சகமுழுது மரசாளுந் தன்மை யானீ, டலைமகடன் மைந்தரென வாக்கத்தாற் றழலிலவ தரித்த றன்னால், மலைமகடன் மைந்தரென வரமளிக்கப் பெறும்வனியர் மகிமை யென்னே.

(கு - ரை.) கலைஞானம் பெறுகையினால் சரசுவதிதேவியின் மைந்தரெனவும், சகமுழுதும் அரசாளுந் தன்மையினால் பூமிதேவியின் மைந்தரெனவும், நீடு ஆக்கத்தால் இலக்குமிதேவியின் மைந்தரெனவும், அக்னியிற்றோன்றியதனால் பார்வதிதேவியின் மைந்தரெனவும் அனுக்கிரகிக்கப் பெறும் வன்னியமன்னர்களின் மகிமை சொல்லுந்தரமன்று என்பது கருத்து. தலைமகள் - சிறந்த மகள். சகம் - உலகம். நீடு ஆக்கத்தால் எனக்கூட்டுக. நீடு ஆக்கம் - நிலைத்த செல்வம். நீடுதல் - நிலைத்திருக்கை: "நெடுஞ் செல்வம் நீடின்றி யாங்கே கெடும்" என்றகுறளினும் (566) காண்க. அலைமகள்-பாற்கடலிற் றோன்றியமையால் இலக்குமிக்கு வந்தபெயர். மலைமகள்- பர்வதராசன் குமாரியாதலின் பார்வதிக்கு வந்தது. பார்வதியின் மைந்தனை கந்தனை அக்கினிகுமாரன் என்று வழங்குதலைநோக்கி, அக்கினியிற்றோன்றிய வன்னியரையும்

அவள் மைந்தரெனக் கூறியதாக்கொள்க. வரம் - அனுக்கிரகம், ஆசீர்வாதம். என்னே - வியப்பு. (63)

64.—அஷ்ட ஐசுவரியச் சிறப்பு.

சாகரத் துலகி னிட்டைச் சம்புமா முனியி யற்றும்
யாகவுற் பவராம் வன்ய ரியாவையும் புரக்கு மாறு
வாகன மக்கள் சுற்ற மடிமைபொன் மணிநெல் லேகம்
ஆகர சாட்சி யோடெட் டயிச்சுவ ரியம்பெற் றுரே.

(கு - ரை.) அஷ்டஐசுவரியம் - எட்டு சம்பத்துகள். சம்பத்து- செல்வம். அவை பின்னிரண்டடிகளால் தெளியலாம். சாகரம் - சமுத்திரம். சகரபுத்திரர்கள் தோண்டின பள்ளமே பின்பு கங்கை முதலிய நீர்களால் நிறைந்து கடலாயிற்றென்ப. நிட்டை-நிஷ்டை: விரதாநுஷ்டானம். உற்பவர் - தோன்றியவர். உற்பவம்- பிறப்பு. வன்னியர் அட்ட ஐசுவரியம் பெற்றது யாவையும் புரத்தற்காக. புரத்தல் - நலிவின்றிப் பாதுகாத்தல். வாகனம் - யானை, குதிரை முதலியன. மக்கள் - புதல்வர், புதல்வியர். அடிமை - குற்றேவல் புரிவோர். ஏகம் ஆகு அரசாட்சி எனப்பிரிந்து, தனியரசாட்சி யென்று பொருள்படும்: தனியரசாட்சி - ஏகாதிபத்தியம். எட்டொடுறமெட்டாகும் இச்செய்யுளில் எட்டைசுவரியத்தைப் பற்றிப் பாடியிருத்தல் கூர்ந்து நோக்கிப் பாராட்டத்தக்கது. (64)

65.—தசாங்கச் சிறப்பு.

வளங்குலவு பண்ணுடு மதக்களிருண் புலித்துவசம்
விளங்குமக மேருமனே வேகரத மும்முரசு
களங்கறுகங் காநதிவெங் கனற்பரிவா டாமாலை
துளங்கலிற்பொற் சிலைபெற்ருேர் துதிபெற்ற வன்னியரே.

(கு - ரை.) தசாங்கம் - பத்து அரசியலுறுப்புக்கள்: இவை பலவகையாகக் கூறப்படுதலைத் திருவாசகம், திவாகரம், வெண்பாப் பாட்டியல், சூடாமணிநிகண்டு முதலியவற்றிற்காணலாம். இங்குக் கூறப்பட்ட பத்துஅங்கங்கள்:— நாடு, யானை, கொடி, மலை, தேர், முரசு, ஆறு, குதிரை, தார், படை என்பன. [கவனிப்பு. ஊர் கூறுராயினுர் முன்னரே குறித்திருத்தலின் (செய்யுள்: 50, 54) என்க.] நாடு-பண்ணுடு= தமிழ்நாடு.ஊர்தி-பட்டத்துயானை.கொடி - ஆண்புலிக்கொடி: மலை - மகாமேரு. தேர் - மனுேவேகம். முரசு - மும்முரசு: (முன்னரே விவரிக்கப்பட்டுள்ளது. செ: 10 - உரைகாண்க.) ஆறு - கங்கை. களங்கு - பாவங்கள். அறு - நீக்கு கின்ற, கங்காநதி. கங்கை தன்னில் மூழ்கினுர்க்குச் சகல பாவங் களையும் போக்குமென்பதை "நன்னீர் ஆடுவார் பாவமைந்தும் நீங்கிமேலமரராவார்"என்று இவ்வாசிரியரே தமது இராமாயணத் தில் குறித்துள்ளார்: (யுத்த: விபீடணனடைக்கலப்: 153).மற்றும் "கன்னி நீக்கருங் கங்கையுங் கைதொழாப், பன்னி நீக்கரும் பாதகம் பாருளோர், என்னி னீக்குவர்" என்றதும் நோக்குக. (அயோத்யா:

கங்கைப்படலம்: 17). குதிரை - அக்கினி: அக்கினி பரிக்கத் தோன்றியவராதலின் அவ்வக்கினியே பரியாயிற்று. தார் - வாடா மாலை: வாடாதமாலையெனவே பொன்னரிமாலை யாயிற்று. "தோளிற் றேன்றும் பொன்னரி மாலை நீல வரையின்வீ ழருவி பொற்ப" (கம்பரர்:மாயாசனக:5) பொன்னரிமாலை - பூமாலையைப் போலப் பொன்னாற்செய்த ஆபரண விசேடமென்பர். படை - சிலை: வில். துளங்கல் இல் - சலனமற்ற; நிலைகலங்குதலில்லாத, தளர்தலில்லாத. இச் சிலையின்பெருமையை இந்நூலின் தொடக்கத்துக் கூறியுள்ள இருபத்திரண்டுசெய்யுட்களாலும், இந் நூலுக்கிட்டபெயராலும் அறியலாம். துதி - தோத்திரம். (65)

66.—அரசின் சிறப்பு.

நாடுபல வினுக்கரசு பண்ணுடு நகர்க்கரசு நலஞ்சேர் கச்சி
நீடுவரை களுக்கரசு மாமேரு நதிக்கரசு நிறைநீர்க் கங்கை
பீடுபெறு சிலைக்கரசவ் வுருத்திரன்வெஞ் சிலையகிலம் பெரிது காக்கச்
சூடுமணி முடியரசுக் கரசுவன்னி யரசன்றிச் சொலவே றுண்டோ.

(கு - ரை.) அரசு - தலைமையானது. நாடுகளுக்கு அரசு - பண்ணுடு; நகர்களுக்கரசு - கச்சி; மலைகளுக்கரசு-மேரு; நதிகளுக்கரசு -கங்கை; சிலைகளுக்கரசு - சிவதனுசு. அதுபோல, முடியரசுகளுக்கு அரசு - வன்னியரின்அரசு எனப் பொருட்பொருத்தங் காண்க. கச்சி - காஞ்சி. "நகரேஷு காஞ்சி" "கச்சிமா நகரோர் தட்டுங் கடவுள ருலகோர் தட்டும், வைச்சுமுன் னயனுர் தூக்க மற்றது மீது செல்ல, நிச்சய முறுகித் தாழ்ந்து நிலமிசை வீழுமிவ் வூரை, இச்சகத் தூர்களோடு மெண்ணுதன் மடமைப் பாற்றே" என்றது காஞ்சிப்புராணம். பீடு-பெருமை. உருத்திரன் சிலை-சிவனது வில்: பிநாகம் எனப்படுவது. அகரம், பிரசித்தி காட்டுவது. அகிலம் - உலகம். மணிமுடி - கிரீடம்: இதனைச்சூடுதல் உலகு காப்பதற்குச் சின்னம். வன்னி - இங்கே, சாதிப்பெயராய்நின்றது, 'வேந்தவாம் பண்புடைமை" என்றவிடத்துப்போல. (66)

67.—வில்லின்புகழ்கூறுதற் சிறப்பு.

மேவரு மேரு வொத்த வீரபண் ணுடர் வில்லைத்
தேவரே கூறல் வேண்டுந் திசைமுக ஞதி யாய
மூவருங் கூறல் வேண்டு முனியகத் தியன னந்தன்
வாய்வளங் கூறல் வேண்டு மற்றெவர் கூறு வாரே.

(கு - ரை) நூலுக்கிட்ட பெயர்க்கேற்ப ஈற்றிலும் சிலையின் சிறப்புக் கூறுவதாக அமைந்துள்ளது இச்செய்யுள். மேருவொத்த வில்லென இயையும். மேவு அரு - அடைதற்கு அருமையான. வில் - வில்லின்சிறப்புக்கு ஆகுபெயர். தேவரே, ஏகாரம் - தேற்றம். திசைமுகன் - பிரமன். மூவர் - திருமூர்த்திகள்: தொகைக்குறிப்பு. முனியகத்தியன் - இருபெயரொட்டுப்பண்புத் தொகை: ஈண்டு, பொதுப்பெயர் முன்னும் சிறப்புப்பெயர்

பின்னும் நின்றது. தமிழெனும் அளப்பருஞ் சலதி தந்தவனாதலின், அகத்தியனை யெடுத்தது. அனந்தன் - பிரளயகாலத்தும் அழிவில்லாமல் என்றும் ஒரு தன்மையாக நித்தியனாயிருப்பவன் என்பது பற்றி ஆதிசேடனைக்காட்டும். இவனை ஆயிரம் நாப்படைத்தவன் என்பர். வளங்கூறல் - மூன்றனுருபுதொக்கது. வேண்டும் - ஒரு வகை வியங்கோள். 'மற்று எவர் கூறுவாரே' என்றமையால் கம்பர் தம்மாலும் கூற இயலாமையைக் காட்டிப் பணிவு தோற்ற நூலைத் தலைக்கட்டுகிறார். (67)

68.—பரிசுதரற்சிறப்பு.

அவிக்கா தரங்கூர் புனிதர்மகிழ்ந் தருள்வன் னியரை யாம் புகழச்,செவிக்கா ரமுத மெனக் கேட்டுச் சிந்தை யுவந்து சீர்தூக்கிப், புவிக்கா யிரம்பொ னிறைநீக்கிப் பொற்றண் டிகைபூ டணத்தோடு, கவிக்கா யிரம்பொன் பரிசளித்தான் கருணா கரத்தொண்டை வன்னியனே.

(கு - ரை.) அவி - தீயிற்பெய்யும் நெய் பொரி சமித்து முதலியன. இது - ஹவிஸ் என்ற வடசொல்லின் திரிபு. ஆதரம் - அன்பு, ஆசை. புனிதர் - பரிசுத்தர்: தேவர். "அவியுணவின் ஆன்றோர்" என்றார் நாயனாரும். வன்னிமன்னர் செய்த வேள்விகட்கு மகிழ்ந்து வரமருளினர் தேவர்கள் என்ற கருத்தது. யாம் - கவிக்குரிய தனித்தன்மைப்பன்மை. சீர்தூக்கல் - ஆராய்தல்: ஈண்டு பாடலின் சிறப்பை ஆராய்தல். புவி - தாம் அநுபவித்து வந்த நிலம், துடவை முதலியன. "மாயோன் மேயகாடுறையுலகம்" என்றவிடத்துப்போல, இங்கு "புவி" என்றது உலகத்தின் ஏகதேசத்தைக்காட்டிற்று. இறை - [வருடந்தோறும் செலுத்தும்] வரி. தண்டிகை - பல்லக்கு. பூடணம் - ஆபரணம். கவிக்கு - நான்கனுருபு பொருட்டுப்பொருளது. தொண்டை வன்னியன்-தொண்டைமண்டலத்தையாளும் வன்னியகுல வரசன். கருணாகரனுக்குத் தொண்டைமான் என்ற சிறப்புப் பெயருண்டு: அது அவன் தொண்டைநாடாண்ட பல்லவமரபினனாதலால் வழங்கியதென்பது அறியத்தக்கது. கருணாகரன் பல்லவவமிசத்தவனென்பது சயங்கொண்டார் வாக்கால் தெளிவு. தொண்டைமண்டலசதக நூலாசிரியராகிய படிக்காசுப்புலவர் அவனைத் தொண்டைநாட்டினனாகவே பாடுகின்றார்: "தொண்டைநன் னாடு புரக்கின்ற கோனந்தித் தோன்றலெங்கள், வண்டையர்கோனங் கருணா கரன்றொண்டை மண்டலமே" (செ: 92). கி. பி. 1115க்குச் சேர்ந்த ஆலங்குடிச்சாசனமொன்றில் கலிங்கப்போரின் விவரம் காணப்படுதலால், கருணாகரனது கலிங்கப்படையெடுப்பு அந்த வருஷத்துக்குமுன்பு நடந்திருக்கவேண்டுமென்பது பெறப்படுகின்றது. ஆகவே, அவ்வெற்றிக்குப்பின் கச்சியைத்தலமாக்கொண்டு இக்கருணாகரத்தொண்டைமான் சிற்றரசோச்சும்போது, கம்பர் அவன் அவைக்களத்துச் சிலையெழுபது பாடி, இறைநீக்கம் தண்டிகை பூஷணம் கவிக்காயிரம்பொன் முதலியன பெற்றார்

என விவரம் காண்க.* 'ஆயிரம்பொன் இறைநீக்கி' என்றமையால் கம்பர் சிலையெழுபது பாடுமுன்பே பெருநிலச்சுவான்தாராய் இருந்திருத்தல்வேண்டும். 'கம்பநாடுடைய வள்ளல்' என்றது தனியனும். கம்பர் தண்டிகையேறிச் சென்றதை "கம்பன் போன வழி கண்டு கழித்தது இவ்வளவு" என்ற பழைய வழக்கினாலும் அறியலாம். இனி, "கருணை கரவன னியன்காணே" என்று காணும் பாடம் ஓசைக்குச் சிறக்கும். (68)

69.—இதுமுதல்மூன்றுகவிகள் - வாழ்த்துச்சிறப்பு.

தனுமறை யெனுமிது வளர்கவே தரணியி லறநனி விளைகவே
மனுநெறி வகையுயிர் பெறுகவே மணிமுத லியவள நிறைகவே
கனமுறை மையின்மழை பொழிகவே களையற வுயர்பயிர் தழைகவே
இனமொடு சுரபிகள் பெருகவே யிணையறு புலிவிரு துயர்கவே.

(கு-ரை.) 'தனுமறையெனும் இது' என்றது சிலையெழுபது என்னும் இந்நூலை. சிலையேயன்றிப் பல இதர விஷயங்களைக் கொண்டிருந்தாலும் இந்நூல்தொடக்கத்திலும் இறுதியிலும் சிலையின் சிறப்பையே கூறியிருத்தலின், சிலையெழுபது என்னும் இப்பெயர்பெற்றது. சிலை-தனுவாதலின், 'தனுமறை' என்று இதற்கு ஒருபெயர் அளித்தார். தனுமறை - தனுர்வேதம். வளர்க - (எங்கும்) தங்குக. வளர்தல்-தங்குதல்: 'திருவளர்தாமரை' என்றது திருக்கோவையார் (செ: 1). தம் நூலைத் தாமே புகழலாமோ வென்னில், இது, ஒருவகைக் கவிசமயமாதலால், தற்புகழ்ச்சியாகாது. தரணி-பூமி. நனி-மிகுதியுணர்த்தும் உரிச்சொல். மனுநெறிவகை உயிர் பெறுக-உயிர்கள் நல்லரசாட்சி பெறட்டும் என்ற படி. 'பெருகவே' என்றும் பாடங் காண்கிறது. கனம் - மேகம். முறைமை-மாதம் மும்முறை. களை - பயிர்க்குத்தடையாகிற புல்பூண்டுகள். இனம்-கூட்டம். சுரபி-பசு. "வள்ளல் பெரும் பசுக்கள் நீங்காத செல்வம் நிறைந்து" என்றாள் ஆண்டாளும். இணை-ஒப்பு. புலிவிருது-புலிக்கொடி: வன்னியசோழர்க்குரியது. வளர்க, விளைக, பெறுக, நிறைக, பொழிக, தழைக, பெருக, உயர்க-இவை வியங்கோள் வினைமுற்றுக்கள். ஏ-அசை. (69)

70. **அவிசொரி வேள்வியைப் பாடினமே யயோநிசம் பவர்தமை வாழ்த்தினமே, அவனிக் கிறைவரைப் பாடினமே யறமெண்ணான்குற வாழ்த்தினமே, தவளக் கவிகையைப் பாடினமே தழல்வெம் புரவியை வாழ்த்தினமே, தவமிகு வனியரைப் பாடினமே தனி நெடுஞ் சிலையினை வாழ்த்தினமே.**

(கு - ரை.) அவி - முன்னரே (செய்யுள் 68) கூறப்பட்டது. அயோநி சம்பவர் - [ஒருபெண்ணின்] கருப்பப்பையில் தோன்றாதவர். சம்பவம் - பிறப்பு. அக்கினியிற் றோன்றியவராதலின் வன்னியமன்னர் இங்ஙனம் சிறப்பிக்கப்பட்டார். அவனி - பூமி. எண்ணான்கு அறம் - முப்பத்திரண்டு தருமங்கள். உற - பொருந்

* இதனால், கம்பர்காலம் கி. பி. 12 - ஆம் நூற்றாண்டென்பதும், 9 - ஆம் நூற்றாண்டு அன்று என்பதும் தெளியலாம்.

தும்படி. முப்பத்திரண்டு தருமங்களை, "வண்ணான் புன்றுவிதன் காதோலை சோலை மடந்தடம்வெண், சுண்ணம் பறவைப்பிணஞ் சுடற் றாரியஞ் சோறளித்தல், கண்ணடி யாவிற்குரிஞ்சுகல் வாயுறை கண்மருந்து, தண்ணீர்ப்பந்தல் தலைக்கெண்ணெய் பெண் போகந்தரலையமே"; "மேதகுமாதுலர்க்குச்சாலை யேறு விடுத்தல் கலை, யோதுவார்க்குண்டி விலங்கிற்குணவொ டுயர்பிணிநோய்க், கிதன்மருந்து சிறைச்சோறளித்த லியல்பிறரின், மாதுயர்காத்தல் நற்கன்னியர் தானம் வழங்கலுமே"; "கற்றவறு சமயத்தார்க் குணவு கருதும்விலை, யுற்றதளித்துயிர் மீட்டல் சிறூர்க்குதவனற் பால், மற்றுமகப்பெறுவித்தல் சிறூரை வளர்த்தலெனப், பெற்ற விவற்றினை யெண்ணான்கறமெனப் பேசுவரே" என்பவற்று லுணர்க. தவளக் கவிகை - வெண்கொற்றக்குடை. தவளம் - வெண்மை. வெந்தழல் புரவி என மாறுக. 'வெங்கனற்பரி' என்றூர் முன்னரும் (செ: 65). 'சிலையெழுபது' என்பதற்கேற்ப எழுபதாஞ் செய்யுளில் "சிலையினை வாழ்த்தினமே" என வாழ்த்தொடு முடித்தார். இது, பாடினம், வாழ்த்தினம் என்ற இரண்டு தன்மைப்பன்மைமுற்றுக்களும் கவிக்குரித்தாகி ஒவ்வோரடியிலும் வருமாறு பாடிய நயம் ஓர்க. (70)

71. பூவாழி மறைவாழி புகல்செம்பொற் சிலைவாழி
பாவாழி சுடர்வாழி பகர்சம்பு முனிவாழி
மாவாழி யகளங்க வனியர்பெருந் தமர்வாழி
கோவாழி யிவர்தனிச்செங் கோல்வாழி வாழியவே.

(கு - ரை.) பூ - பூமி. புகல்-(யாவராலும்) சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, செம்பொற்சிலை - மேருமலை. "மாநிலத் திடைநின் றோங்கிய நெடுநிலை மேரு"வாதலின் வாழ்த்தினூர். இனி, 'செம்பொற்சிலைவாழி' - மிக்க அழகினையுடைய சிலை யெழுபது என்னும் இந்நூல் வாழி என்னவுமாம். முன்னர் "செம் பொற்சிலையெழுபதுவாமிந்நூல்" (செ: 2) என வந்ததுங் காண்க. 'செம்பொற்சிலையெழுபது' என்றே இந்நூற்குப் பெயர் உண்டு. பா-பாட்டு. சுடர்-முச்சுடர்; சூரியன், சந்திரன், அக்கினி. சம்பு முனிசெய் மாமகத்திற் போந்த சந்ததியார் வன்னியவேந்தராத லின், 'பகர்சம்பு-முனிவாழி' என்றூர். மா-இலக்குமி. அகளங்க வனியர்-களங்கமில்லாத வன்னியர். அகளங்கர்-மாசின்மை. 'தமர் வாழி' எனவே 'வனியர் வாழி' என்றது சொல்லாமையே பெறப் பட்டது. கோ-பசு. "வாழ்க அந்தணர் வானவர் **ஆனினம்**" (சம் பந்தர் தேவாரம்) "ஆவாழி வாழி அருமறையோர்" (தண்டியலங் காரம்) முதலியன ஒப்புக்காண்க. தனி-ஒப்பற்ற. இது, வாழ்த் தென்னும் அலங்காரமாம். (71)

சிலையெழுபது முற்றிற்று.

சுபம்.

சி லை யெ ழு ப து.

செய்யுண்முதற்குறிப்பகராதி

★

திருக்கைவழக்கம்

மூலமும் குறிப்புரையும்

வித்வான். C. ஜெகந்நாதாசார்யர்
M. A. (Hist), M. A. (Tamil), L. T., P. O. L., Dipl. Geog.
(தமிழ்த்துறைத்தலைவர், விவேகாநந்தர் கல்லூரி, மயிலை)

எழுதிய குறிப்புரையுடன்

அரவிந்தா பிரிண்டர்ஸில் பதிப்பிக்கப்பட்டது.

திருக்கைவழக்கம்.

திருக்கைவழக்கம் என்பது வேளாண் பெருமக்களின் கொடைக் குணத்தைச் சிறப்பித்துக் கூறும் ஒரு நூலாகும். ஏனைய குணங்கள் சிறப்பிக்கப்பட்டிருப்பினும் பெரும்பான்மை நோக்கிக் கொடைக்குணம் விதந்தோதப்பட்டது என்க. திருக்கையினது வழக்கம் எனப்பொருள்படுதலின், ஆறும்வேற்றுமைத் தொகை. 'திரு' என்பது மங்கலங்குறிப்பதோர் அடைமொழியாதலின், கையின் சிறப்பினைக் காட்டவந்தது. வழக்கம் - ஈகை; வழங்குதல் என்ற சொல்லினடியாப் பிறந்தது.

இந்நூலை இயற்றியவர் கம்பர். வேளாளரைச் சிறப்பித்து ஏரெழுபது பாடியதையொட்டி உடனே, அதன் பின்பு இத்திருக்கைவழக்கத்தையும் பாடியுள்ளார்: இதனை "பாவலர்தாம், ஏரெழுபதோதி யரங்கேற்றுங் களரியிலே, காரிவிடநாகங் கடிக்குங்கை" என்று திருக்கைவழக்கத்தில் கூறியதால் தேற்றமாயுணரலாம். இந்நூல் சைவப்பற்றுடைமை தோன்றக் கூறப்பட்டுள்ளது. சிலையெழுபதுக்கு ஈட்டியெழுபது போலே, [வேளாளர்] திருக்கைவழக்கத்துக்குச் [செங்குந்தர்] திருக்கை வழக்கமும் உண்டு. அதனைப் புகழேந்தி பாடினார் என்ப. இந்தத் திருக்கைவழக்கம் 59 கண்ணிகளைக் கொண்டு, வெண்டளையான் வந்த கலிவெண்பாகும்.

நூல்.

கங்கை குலந்தழைக்கக் காட்டும் பெருங்கீர்த்தி
மங்கை பிரியாமல் வாழுங்கை—திங்களணி
எம்பிரா னெம்பெருமா னிந்த்ராதி பர்க்கரிய
தம்பிரா னுக்குரைத்த சந்தனக்கை—யம்பொன்
வளைவாரி வையகமும் வானகமும் போற்ற
முளைவாரி வந்த முழுக்கை—கிளைவாழக்
கச்சித் தலத்தரனைக் கல்லா லெறியமறந்
தெச்சிற் றயிர்ச்சோ றெறிந்திடுங்கை—பச்சைமிகு
தேமா வடுக்கமரிற் சிந்திற்றென் றேகழுத்தை
யாமா மெனவே யரிந்திடுங்கை—வாமமறை
ஓதுபுகழ் நாயனுட னூரன் புறகென்றே
மோதுதடி கொண்டு முடுக்குங்கை—தீதகல
அஞ்செழுத்தே யொன்றாகி யப்பரெனத் தோன்றியரன்
செஞ்சரணத் தேபூசை செய்யுங்கை—வஞ்சியர்பாற்
றாதரனைத் தான்விடுத்த சுந்தரனைக் காணுமற்
பேதமறத் தன்வயிறு பீறுங்கை—பூதத்தின்
மிக்க புலவனுக்கா வேசிமனை மட்டாகத்

தக்க சிவிகைகளை தாங்குங்கை—மைக்கடுவாய்
மூக்கிற் புகைபுரிந்த மூதரவின் வாயிடத்து
நீக்கியகை நாக்கதனி னீட்டுங்கை—யாக்கமுடன்
ஏதமற்ற கீர்த்தியைக்கொண் டேட்டகத்தி லேயடிமைச்
சாதனமிட் டேகொடுத்த தங்கக்கை—மேதினியிற்
சூலி முதுகிற் சுடச்சுடவப் போதுசமை
பாலடிசி றன்னைப் படைக்குங்கை—சாலவே
நாணந் தராம னடுங்காமற் கூசாமற்
பாணன் பிணத்தைப் பரிக்குங்கை—காணவே
தண்டமிழோன் றன்மனத்திற் சந்தேகந் தீரக்கூழ்
உண்டவயிற் றைப்பீறி யூற்றுங்கை—கண்டளவில்
நீலிதனக் கஞ்சி நின்றவணி கேசனுக்காக்
கோலி யபயங் கொடுக்குங்கை—யாலமெனும்
வன்னி யிடைமூழ்கி வானோர் பழிகழுவிக்
கன்னிதனை யேமணந்த காட்சிக்கை—துன்னுமொரு
பேருலகை யெல்லாம் பிழைப்பிக்கு மோர்கொழுவின்
கூரிலொரு வன்கழுத்தைக் குத்துங்கை—பாரறிய
வீறு பெறும்பறையன் வீயாம லோர்கலத்திற்
சோறு பிசைந்துண்ட சுடர்மணிக்கை—யாருத்
தொடையி லெழுசிலந்தி தோற்றுவிக்கப் பட்டின்
புடைவை கிழித்த பெருங்கை—கடல்சூழ்ந்த
பார்பூட்டு மன்னர் பரிகரிபூட் டக்கதிரோன்
றேர்பூட்ட வேர்பூட்டுஞ் செம்பொற்கை—வீரமதன்
ஐங்கோ லொடுக்க வணைகோ லெடுக்கவுழும்
பைங்கோல் பிடிக்கும் பதுமக்கை—யிங்கிதமாஞ்
சீர்படைத்த பூபாலர் செங்கோல் பிடிப்பதற்குப்
பேர்படைத்த மேழி பிடிக்குங்கை—கார்படைத்த
மிஞ்சுமதி கீர்த்தியைப்போன் மேதினியெல் லாந்தழைக்கச்
செஞ்சாலி நாற்றைத் தெளிக்குங்கை—யெஞ்சாமல்
வெள்ளைக் களைகளைந்து வீறும் பயிர்தழைக்கக்
கள்ளக் களைகளைந்த கற்பகக்கை—வள்ளுறையும்
விற்போர் மதகரிப்போர் வெம்பரிப்போர் வெற்றிப்போர்
நெற்போர் முதற்போர் நெரித்திடுங்கை—கற்பகம்போன்
மேழிக் கொடிசிங்க வெற்றிக் கொடிகுயிலின்
வாழிக் கொடியே மருவுங்கை—நீளுலகில்
ஆதுலர்க்குச் செம்பொ னளிக்குங்கை யாகமங்கள்
வேத புராணங்கள் விரிக்குங்கை—நீதிநெறி
மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தருமந் தழைக்குங்கை—யானதமிழ்
கல்லார்க ளென்னுமற் கற்றோர்க ளென்னுமல்
எல்லாரை யுங்காத்தீ டேற்றுங்கை—வல்லமைசேர்
மைம்மா முகிலுலகை வாழ்விக்கு மேன்மைபோற்
கைம்மா றிலாதளித்த கற்பகக்கை—சும்மையார்
ஊருணி நீர்போ லுலகத் தவர்க்கெல்லாம்
பேரறிவா லீயும் ப்ரதாபக்கை—பாரில்

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
கொடுக்க விசைந்த குளிர்க்கை—யிடுக்கணின்றன்
மாமறையோர் மன்னர் வணிகர் முதலாகத்
தாமலையா மற்கொடுத்துத் தாங்குங்கை—தேமருவு
நாவிற் புகழ்கம்ப நாடற் கடிமையென்றே
மாவைக் கரைத்துமுன்னே வைக்குங்கை—பாவலர்தாம்
ஏரெழுப தோதியரங் கேற்றுங் களரியிலே
காரிவிட நாகங் கடிக்குங்கை—பாரறியச்
சங்கையிட்டுத் தள்ளாமற் றன்சோற்றை வந்தவர்க்குப்
பங்கையிட் டிரட்சித்த பங்கயங்கை—பொங்கமொடு
செம்பொன் விளைகளத்தூர் செந்நெல் விளைந்ததனை
நம்பிமறை யோர்க்களித்த நாணயக்கை—யம்பொன்
விளைபயிரைப் பார்த்து விரைகால் புலத்தை
வளையமதி விட்டு வருங்கை—களமதனில்
ஏற்கவந்த வாதுலருக் கில்லையென்று மற்செம்பொன்
கார்க்கையினுன் முக்கையிட்ட கற்பகக்கை—தீர்க்கமதாத்
திருப்பருத்திக் குன்றிற் சிவனு லயங்கள்
விருப்புடனே கட்டுவித்த மெய்க்கை—திருப்புகழை
எண்ணை யெழுத்தை யிசையை யிலக்கணத்தை
வண்மைபெற வுண்டாக்கும் வாகுளகை—பண்ணமைந்த
வேதமொரு நான்கினையு மிக்கதமிழ் நாலடியால்
ஓதியுரைத் தேகருணை யோங்குங்கை—பூதலத்திற்
பாவல னெச்சிற் படுமாங் கனியையெடுத்
தாவலுட னன்று வருந்துங்கை—காவலவன்
மண்ணிற் கடலின் மலையிற் பெரியதென
எண்ணியெழு திக்கொடுத்த வேற்றக்கை—திண்ணமதாய்
வையகமெங் குந்தேடி வந்ததமி ழோன்புகழச்
செய்யமுடி யைக்கொடுத்த செம்பொற்கை—துய்யபுகழ்
அட்டதிக்கு மெண்கீர்த்தி யாயிரத்தெட் டானைதனை
வெட்டிப் பரணிகொண்ட வீரக்கை—திட்டமுடன்
பொன்னு லமுதும் பொரிக்கறியுந் தான்கொணர்ந்து
நன்று வலர்க்களித்த நாணயக்கை—முன்னுள்
மனக்கவலை யுற்ற வணிகன்முன் னேநின்று
தனைக்கா வெனக்கேட்ட தங்கக்கை—கனக்கவே
அன்றீன்ற நாகெழுப தானவெரு மைத்திறத்தைக்
கன்றேடு நல்குங் கடகக்கை—வென்றிதரும்
ஓரானை நூறு யிரக்கலநெல் லோர்கவிக்குச்
சீராக நல்குந் தியாகக்கை—பேரியலைச்
சாற்றுமொட்டக் கூத்தன் சரசகவி சொல்லப்பா
லாற்றுநீர் காற்கொணர்ந்த வாண்மைக்கை—நேர்த்திபெற
வண்டமிழோன் றனுதைத்த வாகுளகா லுக்குப்பொன்
வெண்டயமிட் டேவணங்கும் வெற்றிக்கை—புண்டரிகக்
கையாற் புலவன் கனகமுடி மேற்குட்டச்
செய்யாழி பண்ணியிட்ட தீரக்கை—நொய்ய
எறும்புக்கு மாஸ்பதந்தா னில்லையென்ற மட்டுந்

றிறம்புக்க யானைதருஞ் செங்கை—பறம்புதனில்
எண்ணு யிரமுனிவர்க் கேற்றபடி யப்படியே
பண்ணுக் கொடுக்கும் பராக்ரமக்கை—விண்ணுடர்
கூர்த்த புகழுண்ட கோளமள வும்படர
நாற்றிக்கு மேருவினி னுட்டுங்கை—சீர்க்குகனை
ஆதார மானவனை யைங்கரனைச் சங்கரனைப்
பாதார விந்தம் பணியுங்கை—நீதி
நடக்கை யிருக்கை நகைக்கை மிடிதீர்க்கை
கொடுக்கை செழுங்கை குளிர்க்கை—தொடுத்ததெல்லாஞ்
சீராக வுண்டாக்குஞ் செங்கைப் பெருங்கருணைக்
காராளர் கற்பகப்பூங் கை.

உரைத்தொடக்கம்

கங்கை குலந்தழைக்கக் காட்டும் பெருங்கீர்த்தி
மங்கை பிரியாமல் வாழுங்கை—

(குறிப்புரை):— கங்கைகுலம் - வேளாண்மரபு. வேளாளர் கங்காகுலத்தினர் எனப்படுதலை "மந்தாகினியிற் றிரிவேணி சங்கத்தின் மாண்டொருவன், மந்தாகினியுற்ற பாதாளம்புக்கு வணங்கிநின்று, மந்தாகினிக்கு மகவாகக் கேட்ட வரங்கொடுப்ப, மந்தாகினிக்கு மரபானதுந் தொண்டைமண்டலமே" என்ற தொண்டைமண்டலச்சதகச் செய்யுளாலும், "கங்கைபெறுங் காராளர்" என்ற ஏரெழுபதினாலும் தெளியலாம். கங்கை புராணத்து வேளாளர் உற்பவச்சருக்கத்து "மஹாதேவ சிரோ கங்கா மோட்சார்த்தி சகராந்தகா, பூமிபாலன கர்த்தவ்யம் கங்காபுத்ராச்சகர்ம்மணு, வம்சோத்பவந்து புத்ராணும் விஷ்ணு பாத ஜலோத்பவம், கங்காபுத்ர விவாஹேச கல்யாணம் மங்களம் சுபம்" என்று கூறப்பட்டுள்ளதுங் காண்க. தழைக்கக் காட்டுங் கை, கீர்த்திமங்கை பிரியாமல் வாழுங்கை எனத் தனித்தனி இயையும்: தழைத்தற்குக் காரணம் - கீர்த்திமங்கை நீங்காது வாழ்தலாதல். கீர்த்தி மங்கை - புகழ்மகள். 'கீர்த்தி' என்ற வடசொல் அந்தப்பாஷையிற் பெண்பாலாதலால், 'மங்கை' என்றது. "புகழ்மகளைத்தழுவிய கை" என்றார் கம்பர் தமது இராமாயணத்தும். "பாணியிற் கங்கைநதி மலையினிற்கைலைமலை பாரமுகினிற் றண்டகம், பழமொழியிலெளவைசொல் லரசரிற் சேரமான் பத்தியிற் சிறியதொண்டன், காணியிற் றொண்டை யாம் புகழில்வேளாளர்புகழ் கான்முளையினிற் பகீரதன்" என்ற தனிப்பாடலில் வேளாளர் புகழைச் சிறப்புற எடுத்தோதி யிருத்தல் காண்க. மிக்க புகழுடையார் வேளாளர் என்பது தேர்ந்த கருத்து. (1)

—**திங்களணி**

எம்பிரான் எம்பெருமான் இந்த்ராதி பர்க்கரிய
தம்பிரா னுக்குரைத்த சந்தனக்கை—

(கு - ரை.) 'திங்களணி' என்ற அடை அடைக்கலம் புகுந்தாரை ஆதரித்துச் சிறப்பித்தல் காட்டுவது. பிரான், பெருமான், தம்பிரான் என்பன ஒருபொருளின்மேல் வந்த பலபெயர்கள்: சிவபிரானுக்காவன. 'எம்' என்றது அடியவர்க்கெளியனுந்தன்மை காட்டும். தேவேந்திரர்க்கும் அரியவன் எமக்கு எளியனுயினன் என்றபடி. உரைத்தல் - தேய்த்தல். விரிஞ்சிபுரத்தில் தன்னை வழிபட்ட ஒரு வேளாளச் சிறுவனுக்காகத் தனது திருமேனியைச் சாய்த்துக்கொடுத்தருளிய சிவபெருமானுக்குச் சாத்துஞ் சந்தனமாகத் தனது முன்கையைத் தேய்த்தான் அச்சிறுவன் என்பது வரலாறு. முழுவிவரம் வல்லார்வாய்க் கேட்டுணர்க. "சாய்த்திட்டவர்க்குத் திருமேனிமுன்கையைச் சந்தனமாத் தேய்த்திட்டவர்க்கெவர்நேரென்பரால்" என்றது தொண்டைமண்டலசதகம். முன்கையைத்தேய்த்த வேளாளச்சிறுனுக்கு ஒப்பாக வணிகர் பெருமானுகிய மூர்த்திநாயனுரை நினைக. (2)

—அம்பொன்

வளைவாரி வையகமும் வானகமும் போற்ற
முளைவாரி வந்த முழுக்கை—

(கு - ரை.) வாரி வளை வையகம் - கடல்சூழ்ந்த பூமி. வாரி - கடல். அம்பொன்முளை என இயைக்க. பொன்-நெல்: "பொன்னுர் வயற்பூம்புகலி" என்றது தேவாரம். நென்முளைவாரி வந்தவர் - இளையான்குடிமாற நாயனுராகிய வேளாளர். வானகமும் போற்றியது-சிவனடியார் வேடங்கொண்ட சிவபிரானுகிய விருந்தினரை நள்ளிரவில் உபசரித்தமைபற்றி. இதனை "கங்குன்மீது வருமரற்கன்பொடு கன்ன னேரும் முளையமுதீந்து" என்றது தண்டநாயகன் பள்ளு. இனி, மற்றொரு வரலாறும் உண்டு:—

திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப முதலியாராகிய வேளாளப்பிரபு யாசகர்க்கு ஈந்தமையால் செல்வங்குறைந்து, இனி இரப்போர்க்கு இல்லையென்பதனினும் வேற்றுதேசம் புகுதல் நலமெனத்துணிந்து ஓரிரவில் நித்திரையின்றிப் படுத்திருப்ப, அப்போது அப்பிரபுவின் வீட்டில் அவ்விரவு புலவர்கூட்டம் வந்து தங்கிப் பசிமிகுதியால் 'நம் பசிநோய்தீர எப்போது பொழுதுவிடியுமோ' என்று வாய்விட்டுச் சொல்லியதுகேட்டு, அவர் வருத்தம் பொருமல், உடனே தன் மனைவியோடு சென்று, தம் வயலில் விதைத்திருந்த நென்முளையைவாரி அலம்பி வீட்டிற்கொணர்ந்து உணவாக்கி அப்புலவர் கூட்டத்தை உண்பித்தார் என்பதும் நினைக்கத்தக்கதே. "சென்று நென்முளைய வாரிஞேன் புதிய திங்கள் வெண்முளையை வாரிலான்" என்று இவ்வரலாற்றினை யுட்கொண்டு கூறினது ஆறைக்கலம்பகம். (3)

—கிளைவாழக்

கச்சித் தலத்தரனைக் கல்லா லெறியமறந்
தெச்சிற் றயிர்ச்சோ றெறிந்திடுங்கை—

(கு - ரை.) கச்சித்தலம் - காஞ்சிப்பதி. இங்குக் குறிக்கப் பட்டவர் சாக்கிய நாயனாராகிய வேளாளர். சாக்கியநாயனார் 'சிவலிங்கம் கண்டபின் உண்பது' என்னும் நியமத்தினராய், அச்சிவலிங்கத்தின்மேல் கல்லையே மலராகவிட்டு அருச்சனைசெய்து வருநாளில், ஒருநாள் திருவருட்சோதனையினாலே கல்லெறிய மறந்து உணவுகொள்ளப்புகுந்தவர் 'இன்று எம்பெருமானைக் கல்லெறிந்து வழிபடாது மறந்தேனே' என எண்ணி இருக்கை விட்டெழுந்துபோய்ச் சிவலிங்கத்திருமேனியிற்படும்படி கல் லெறிய அவர் அன்பின் செயலினையும் வேட்கையினையும் கண்ட பரமசிவனார் உமையோடு விடையின்மேல் காட்சி தந்தருளினார் என்பது வரலாறு. ஈண்டு, கல்லுக்குப்பதிலாக எச்சில் தயிர்ச் சோறு என்றது - அவர் உணவுகொள்ளுதற்குச் சமைந்தாரென் பதைச் சூசிப்பிக்கும். "கல்லினால் எறிந்து கஞ்சி தாமுணுஞ் சாக்கியனார்" என்றார் அப்பர். "துன்னியமெய் யன்புடனே எழுந்த வினை தூயவர்க்கு, மன்னுமிகு பூசனையாம் அன்புநெறி வழக்கி னால்" என்றபடி கல்லெறிந்ததும் பூசனையாயிற்றாதலின் "கிளை வாழ" என்றது. "அல்லாதார் கல்லென்பார் அரனார்க்கஃதல ராமால்" என்றார் சேக்கிழாரும். "கொங்கலர்மாலையுங் கல்லாய் விடும் அன்பு கொண்டெறிந்தால், இங்கலராய்விடுங் கல்லானது மென்பதின்றறிந்தோம், செங்கலினாலெறிந்தே சிவனார்பதஞ் சேர்வர் சங்க, மங்கையின்மேவிய சாக்கியனார் தொண்டை மண்டலமே" என்றது சதகம். கிளை-சுற்றத்தார்க்கு, ஆகுபெயர்.

—பச்சைமிகு
தேமா வடுக்கமரிற் சிந்திற் றென் றேகழுத்தை
ஆமா மெனவே யரிந்திடுங்கை—

(கு - ரை.) இது வேளாளராகிய அரிவாட்டாயநாயனார் செயல் குறிப்பது. நாயனார் என்னும் சிவனடியார் உணவின்றிப் பலநாள் பட்டினிகிடந்ததால் பசிமிகக் கால் தள்ளாடிக் கீழே விழுந்தார்; விழுந்தபோது தாம் சிவபிரானுக்கமுது செய்யக் கையிற் கூடையில் எடுத்துச்சென்ற செந்நெல்லரிசி, நல்லசெங் கீரை, தூயமாவடு இவையாவும் கமரில் [நிலவெடிப்பில்] சிந்தின; இது கண்டு, "சிவபிரான் திருவமுது செய்தருளும் பேற்றினைப் பெற்றேனில்லை, இனி யானிருந்து என்பயன்" என்று எண்ணித் தம் கழுத்தை அரிந்துகொள்ள அரிவாளை வைக்க அத்தருணம் அவர் கையைப்பிடிக்கக் கமரினின்று உயரநீட்டிய இடக்கையும், அதனுடன் மாவடுவைக் கடிக்கும் "விடேல் விடேல்" என்னும் ஓசையும் ஒருசேர எழுந்தன; அப்போது அரிவாளினால் அரிந்த புண்ணும் உடனே மறைந்தது. ஆம் ஆம் எனவே-தாம் செய்யுஞ் செயல் தக்கதே என்பதைக் காட்டவந்தது. பச்சை - சமைத் தற்குரிய உணவுப்பொருள்; "நெடுநாள் பச்சைதேடி விருந்திட் டாய்" (ஈடு: 1, 6, 1.) "சிந்தித்தென்றே" என்றபாடஞ் சிறவாது.

—வாமமறை
ஓதுபுகழ் நாயனுட னூரன் புறகென்றே
மோதுதடி கொண்டு முடுக்குங்கை—

(கு - ரை.) வாமம் - அழகு. மறை - வேதம்: இதன்பின் மூன்றனுருபு தொக்கது. வேதத்தால் ஓதப்படுகின்ற புகழை யுடைய நாயன் - சிவபிரான்: ஈண்டு, திருவாரூர்த் தியாகேசரைக் காட்டும். நாயன் - நாயகன், தலைவன். ஊரன் - ஆரூரன், சுந்தர மூர்த்திநாயனார். புறகு - புறம்பாவான்; [புறம்பு - தனியானது]. புறகு என்றவர் விறன்மிண்ட நாயனாராகிய வேளாளர். ஒருநாள் சுந்தரர் திருவாரூரிலுள்ள தேவாசிரிய மண்டபத்திற் கூடியிருந்த சிவனடியார்களைச் சார்ந்து வணங்கிச் செல்லாமல் ஒருபுறமாக ஒதுங்கிச்செல்வதைக் கண்ட விறன்மிண்ட நாயனார் மனம்வருந்தி "அடியார்களை வணங்காமற் செல்லுகின்ற வன்றொண்டன் அவ்வடியார்களுக்குப் புறகு; அவனை வலிய ஆட்கொண்ட பரமசிவனும் புறகு" என்று கூறினார். இதனையே சேக்கிழார் "சேணார் மேருச் சிலைவளைத்த சிவனார் அடியார் திருக் கூட்டம், பேணாதேகும் ஊரனுக்கும் பிரானாந் தன்மைப் பிறை சூடிப், பூணார் அரவம் புனைந்தார்க்கும் புறகு என்றுரைப்ப" என்றார். மோதுதடிகொண்டு முடுக்குங் கை என்றவிடத்து அறியவேண்டிய சரிதம்:—விறன்மிண்டர் இருவரையும் புறகு என்ற பின்னர், தியாகேசர் வன்றொண்டருக்கு இரண்டாஞ் சுற்று வரவின் மதிற்சுவரையொட்டி வடக்குவாயிலில் காட்சி கொடுப்ப, அதனையறிந்த விறன்மிண்டர் வெகுண்டு, 'இனித் திருவாரூரில் அடியெடுத்தும் வைப்பதில்லை' என்று சூளுரைத்து, மனைவியுடன் புறப்பட்டுத் திருவாரூரின் வடக்கே புத்தாற்றங்கரையில் பந்த லமைத்து அடியார் பூசனை முதலியவற்றில் தவறாது ஒழுகிவந்தார்: இவ்வாறிருக்கும் நாளில் ஆங்குவரும் அடியார் யாராவது திருவா ரூர் என்றால் அவரது கால்களை மழுவினால் வெட்டும் விரதம் பூண்டிருந்தார். ஒருநாள் தியாகேசரே சிவனடியாராக வந்து 'நாம் இருப்பது திருவாரூர்' என்று கூற, அவரது கால்களை வெட்டுதற்கு மழுவுடன் நாயனார் துரத்த, அவர் ஓட, இருவரும் திருவாரூர் எல்லையை அடைந்தனர். அப்போது சிவனடியார் "வந்தோம் இப்பால்" என்று சொல்லி நின்றனர்; தம் சபதம் நிறைவேறாததுகண்ட நாயனார் தம் கால்களைத் தாமே வெட்டிக் கொண்டார். உடனே சிவபிரான் காட்சிதந்து அருள்புரிந்தார் என்பது. தடி - மழு. (6)

—தீதகல

அஞ்செழுத்தே யொன்றாகி யப்பரெனத் தோன்றியரன்
செஞ்சரணத் தேபூசை செய்யுங்கை—

(கு - ரை.) அப்பர் - திருநாவுக்கரசர்: இவர் வேளாண் மரபினர். அஞ்செழுத்து - பஞ்சாக்கரம்; நமசிவாய என்பது. "கருவாய்க்கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்" என்ற தனாலும், "உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்" என்றதனாலும் அவரது சிவவேடப் பொலிவழகு குறித்தும், "அஞ்செழுத்தே யொன்றாகி அப்பரெனத்தோன்றி" என்றது. "உனக்கே வருஞ் சைவநலங் கூர்ந்து மிளிர்தரு நாவரசே" என்றது நால்வர் நான் மணிமாலை. சரணம் - திருவடி. தீது - தீமை: அதாவது, திருந்தா அமணர்தம் தீநெறிப்பட்டுக் கிடந்தமை. (7)

—வஞ்சியர்பால்
தூதரனைத் தான்விடுத்த சுந்தரனைக் காணுமற்
பேதமறத் தன்வயிறு பீறுங்கை—

(கு - ரை.) வஞ்சியர் - திருவாரூர்ப் பரவைநாச்சியார். பால் - ஏழனுருபு. பரவையின் ஊடல்தீர்க்கத் திருவாரூர்ச் சிவபிரானை இரவில் இருமுறை சுந்தரமூர்த்திகள் தூதுவிட்டமை பிரசித்தம். காணுமல் - காண மனம் வராமல்; காணுதபடி; சுந்தரனைக் காண மனம் வராமல் தம் வயிற்றைப் பீறினவர்-ஏயர்கோன்கலிக்காமர்; இவர் வேளாண் மரபினர். தமக்கேற்பட்ட சூலைநோய் தீர்ப்பான் வரும் சுந்தரர் வரவுகேட்டுத் "தூதனுய் எம்பிரானை ஏவினுன் சூலை தீர்க்கும், ஏதமிங்கெய்த எய்தில் யான்செய்வதென்னும்" என்றுகூறி, 'மற்று அவன் இங்கு வந்து தீர்ப்பதன்முன் நான் மாயப், பற்றிநின்றென்னை நீங்காப் பாதகச்சூலை தன்னை, உற்ற இவ்வயிற்றினேடுங் கிழிப்பன்' என்று உடைவாள் தன்னுல் தம் வயிற்றைக்கிழித்துக் கொண்டவர் இந்த ஏயர்கோனுகிய நாயனுர். பேதம் அற - [தாம் கொண்ட] மாறுபாடு ஒழிய. (8)

—பூதத்தின்
மிக்க புலவனுக்கா வேசிமனை மட்டாகத்
தக்க சிவிகைகனை தாங்குங்கை—

(கு - ரை.) பூதத்தின் - பூதகணங்களைக்கொண்டு. மிக்க புலவன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள்; முதலையுண்ட பாலனை யழைத்தவரன்றே! வேசி - கணிகையர் குலத்தினளாய பரவை யார்: இச்சொல் சிறப்பின்று; 'ஏகி' என்றுபாடமிருக்க லாமோ எனத் தோற்றுகிறது. மனை - மனையளவுக்கு ஆகுபெயர். மட்டு ஆக - குறையும்படி: அதாவது, பரவையாரது மனையளவு மட்டுமின்றித் திருவாரூர் முழுதும் நிறையும்படி. நென்மலையைக் குண்டையூரிலிருந்து திருவாரூர்ப் பரவை மாளிகைக்குப் பூதகணங் கள் விடுத்தமை சுந்தரர்சரிதத்தில் பிரசித்தம். குண்டையூர்கிழார் தாம் நென்மலைபெற்ற திருவருட்செயலினைச் சுந்தரர்க்குத் தெரிவிக்கவேண்டி திருவாரூர்க்குப் புறப்பட, தேவர்தம்பெருமான் ஏவ நம்பியாரூரரும் குண்டையூரைநோக்கிவர, இடையே சுந்தர மூர்த்திநாயனுரைக் கண்டு குண்டையூர்கிழார் எதிர்கொண்டு அவரது பாதந்தன்னில் தொழுது வீழ்ந்தெழுந்துநின்று தாமும் அவருடன் கூடிச்சென்று குண்டையூரினையடைந்தார் என்ற விடத்து ஒருகால் அச்சுந்தரர் ஏறிவந்த சிவிகையின்கனையினைக் குண்டையூர்கிழாராகிய வேளாளர் தாங்கியிருப்பரெனக்கொண்டு 'சிவிகைகனை தாங்குங்கை' என்பதற்கு விளக்கம்கொள்க. இனி, எதிர்கொண்டழைத்தமையையே இலக்கணையாக இங்ஙன் கூறிய தாக்கொள்ளலுமாம். சிவிகை - பல்லக்கு. கனை - சிவிகையின் வளைகொம்பு (Curved pole of a palanquin); 'சிவிகைதனைத் தாங்கும்' என்றும் பாடம். 'பூதலத்தின்' என்ற பாடம் சிறப்பின்று.

மூன்றுங்கண்ணிமுதல் இது வரையில், வேளாண்மரபினராய சைவநாயன்மார்களின் கைவழக்கம் கூறப்பட்டது. இனி, பொது வாகக் கூறப்படும். (9)

—மைக்கடுவாய்
மூக்கிற் புகைபுரிந்த மூதரவின் வாயிடத்து
நீக்கியகை நாக்கதனி னீட்டுங்கை—

(கு - ரை.) கடு - விஷம். மூக்கிற்புகைபுரிதல் - சினந்து சீறுதலின் குறி. மூதரவு = மாணிக்கப்பாம்பு. கிழப்பாம்பின் தலையில் மாணிக்கமுண்டாம் என்பர். வாயிடத்து நாக்கதனில் நீட்டுங்கை என இயையும். நீக்கிய கை - நீக்கவேண்டிய கையை என்றபடி. இங்கு அறியவேண்டிய வரலாறு:—சடையப்ப முதலியாரிடத்து அழுக்காற்றினால் பகைமைபாராட்டிய சோழராசன் புலவர் கூட்டத்தை இரவில் விருந்தினராக அவரில்லிற்கு ஏவ, அவர்கள் வந்தமைகண்டு அமுதூட்ட வீட்டில் ஒன்றுமிராமையால் முதலியார் தமது மனைவியின் மாங்கலியத்தைவிற்றுப் பண்டங்கள் கொணர்ந்து சமைத்து அரிய விருந்திட்டு உபசரித்தனர்; பின்பு பரிசுகொடுக்கப் பொருளில்லாமை கண்டு, இல்லையென்பதைக்காட்டிலும் உயிரைவிடுதல் நலம் எனத் துணிந்து தம் வீட்டிற்கருகிலுள்ள பாம்புப்புற்றில் கையிட்டார்: சீறிவந்த நாகம் 'இஃது கொடையிற் சிறந்த கைத்தலமன்றோ, இன்று நம் மனைபுகுந்து கையேந்துவது' என்று கொண்டு, அக் கரத்தில் தனது மாணிக்கத்தை யுமிழ்ந்துகொடுக்க, பிரபு எடுத்துப் பார்த்து மகிழ்ந்து அவ்விலையுயர்ந்த மாணிக்கத்தை அப்புலவர்களுக்குச் சன்மானங் கொடுத்தனுப்பினூர் என்பது. இனி, புலவர்க்கு நாகரத்தினம் அளித்தது நின்றையூர் காளத்திப்பிள்ளை என்றுங் கூறுப. "பைந்நாக மணிகொடுத்தான் ஒருவேளாளன்'என்றதோர் தனிப்பாடல்;"கதிர்தரும் பணி மாமணி பாவலர் கையின்மீது கருத்துடனீந்து" என்றது தண்டநாயகன் பள்ளு (செ. 36.) "அங்கையாடரவின் வாயிலிட்டவ னெனல்குலாடரவு தீண்டிலான்" என்று இவ்வரலாற்றினையுட்கொண்டு கூறினது ஆறைக்கலம்பகம். (10)

—ஆக்கமுடன்
ஏதமற்ற கீர்த்தியைக்கொண் டேட்டகத்தி லேயடிமைச்
சாதனமிட் டேகொடுத்த தங்கக்கை—

(கு - ரை.) ஏதம் - குற்றம். ஏதமற்ற கீர்த்தியாவது-'மேழித் தேவர் பெருமைக்கு வேறேதேவர் கூறேனே' என்றும், "தாயனைய காராளர் கோதில் குலந்தனக்குநிக ருண்டாகிற் கூறீரே" என்றும் பேசும்படி நின்ற புகழ். அத்தகைய புகழைக் கொண்டிருந்தே, ஏட்டகத்தில் - வேதம் முதலிய நூல்களில், அடிமைச் சாதனம் இட்டே கொடுத்த - நாங்கள் தொண்டாய்ப்பணி செய்வோம் என்று உரிமைச்சாசனம் இட்டுக் கொடுத்த, தங்கக்கை - மேன்மையையுடைய கை என்றபடி. இஃது வேளாண்வாகை குறிப்பது. "மேன்மூவரு மனம் புகல, வாய்மையான் வழியொழுகின்று"; "மூவரு நெஞ்சமர முற்றி யவரவர், ஏவலெதிர்கொண்டு மீண்டுரையான்—ஏவல், வழுவான் வழிநின்று வண்டார்வயலுள், உழுவா னுலகுக் குயிர்" என்றது புறப்பொருள் வெண்பாமாலை.

மேல் "இடுக்கணினால்,மாமறையோர் மன்னர் வணிகர் முதலாகத், தாமலையாமற் கொடுத்துத் தாங்குங்கை" என்றதும் இக்கருத்துப் பற்றியே. ஏடு - நூல்: சுருதிஸ்மிருதிகள். சாதனம் - சாசனம்; அதிகாரச் சின்னம். பொன் [நெல்] விளைத்தலின் 'தங்கக்கை' என்றார். (11)

—மேதினியில்

சூலி முதுகிற் சுடச்சுடவப் போதுசமை
பாலடிசி றன்னைப் படைக்குங்கை—

(கு - ரை.) மேதினி - பூமி: மது கைடபர்களின் மேதஸினால் [உடற் கொழுப்பினால்] நனைக்கப்பட்டமைபற்றிப் பூமிக்கு 'மேதினி' என்ற இப்பெயர் வந்தது. தன்னிடத்து வந்த ஓர்புலவன் நிறைசூல்மடவார்முதுகினிற் சோறிடின் உண்பேன் என்ன, ஒருவேளாளன் சூலுற்றிருந்த தன்மனைவியைக் குப்புறக்கிடத்தி அவள்முதுகில் மகிழ்வோடு அன்னமிட்டு, அப்புலவனை யுவப்பித்தனன் என்ற கதை ஈண்டு கருதத்தக்கது. சூலி - கர்ப்பிணி. அடிசில்-சோறு. தண்டநாயகன்பள்ளு என்ற நூலில் இவ்வரலாறு "துங்க முலாவிய தமிழ்தெரியுஞ் சங்கமேய புலவர் மகிழச், சூலிமுதுகினிற் சுடுசோறளித்திடு துரங்கதாரி" (செ-9) என்றும், "துங்க மேவிய பாவலர் தங்கட்குச் சூலி வெந்நிற் சுடுமன்ன மிட்டு" (செ: 35) என்றும் குறிப்பிடப்படுகின்றது. "அன்று சூலிமுது கன்னமிட்டவன் என்னன்னை கூன்முதுகழிக்கிலான்" என்று இவ்வரலாற்றினையுட்கொண்டு கூறினது ஆறைக்கலம்பகம். "ஓர் புலவனுக்காத், தன்கண்மைசூலி முதுகினிற் சோறிட்ட தன்மையினால், வன்கண்மை செய்யவும் வல்லதன்றோ தொண்டை மண்டலமே" என்றது தொண்டைமண்டலசதகம். இங்ஙன், வேளாளரின் குடிப்பிறப்பிற்குரியவண்மை, இயல்வது கரவாமை முதலியன பெறவைக்கப்பட்டன. (12)

—சாலவே

நாணந் தராம னடுங்காமற் கூசாமற்
பாணன் பிணத்தைப் பரிக்குங்கை—

(கு - ரை) நாணம்-வெட்கம், கூசுதல்-அருவறுத்தல். இதிற் குறித்த செய்தி வருமாறு:—யாழில் வல்ல பாணனொருவன் அநாதரவாய் வந்திறந்தமையை வேளாண்மகனொருவன் கண்டு, "இறந்தார்க்கும் இல்வாழ்வானென்பான் துணை" என்பதற்கேற்பவும், இறந்தவன் கற்றுவல்ல பாணனாதலின் இழிஞர்கைக் கொடுத்தல் தகாதென்றுங்கருதித் தானே அவனுடலைத் தனது தோள்களிற்சுமந்து இடுகாட்டிலிட்டுத் தகனகிரியைகளைச் செய்துமுடித்தான் என்பது. இதனை "வரைத்திண்புயத்தே, பேருனபாணன் பிணஞ்சுமந்தேவரும் பெற்றிகொண்டே, மாறுத கீர்த்திபடைத்ததன்றோ தொண்டைமண்டலமே" என்று பாராட்டியது அம்மண்டல சதகம். பாணன்பிணத்தைப்பரித்தவன் மறவைப்பதியைச்சேர்ந்த வேளாண்மகனாகிய அரங்கேசன் என்னும் பெயரினன் என்பதைப்பின்வரும் பாடலால் தெளியலாம்: "உற

வைப் பிரிந்துவந் தேயிறந்தா னங்கொரு புலவன், மறவைப்பதி நதிவர்சம் வந்தோனரங்கேச வள்ளல், அறவைப் பிணஞ்சுடத் தான்செய் எண்ணுன்கின் அறத்ததென்றோ, பிறர்கைக் கொடாம லெடுத்தானப் பாணன் பிணத்தினையே". 'பாணன் வெம்பிண மெடுத்தவன் கொடியபாணன் வெம்பிணமெடுக்கிலான்' என்று இவ்வரலாற்றினையுட்கொண்டு கூறினது ஆறைக்கலம்பகம். (13)

—காணவே

தண்டமிழோன் றன்மனத்திற் சந்தேகந் தீரக்கூழ்
உண்டவயிற் றைப்பீறி யூற்றுங்கை—

(கு - ரை.) இதனிற் குறித்த விவரம்:—பேறையூரான் என்னும் ஒரு வேளாளன் தன்வீட்டில்வந்த புலவனுக்கு விருந்திட்டுப் பின் தான் உப்பில்லாத கூழையுண்டு வெளிப்போந்தபோது, அப் புலவன் "நீர்மாத்திரம் நல்ல உணவையுண்டு வந்தீரோ?" என்று கேட்க, உடனே அவன் கூரியவாளால் தன் வயிற்றைக்கீறி யுள்ளேயிருந்த உப்பில்லாத சோளக்கூழை வெளிச்சொரிந்து மெய்ப்பித்தான். "செம்பியன்முன் வயிறிடந்தான் பேறையூரான்" என்ற தனிப்பாடலால், 'தண்டமிழோன்' பெயர் 'செம்பியன்' என இருக்கலாம் எனத் தோற்றுகிறது. இவ்வரலாற்றினை, 'நறுங்கூழெனையன்றி யுண்டனையோவென நாணிவயி, றுறுங்கூர் நுதிவடிவாளாற் பிளந்திட்டிருங்கரினை, யுறுங்கூழ் புறத்திலிருந் தானுக்குய்த்துப்பிலாத புற்கை, வறுங்கூழ் சொரிந்திட்ட முற்ற வுண்டான் றொண்டைமண்டலமே" என்றது தொண்டை மண்டலசதகம். இனி, தன் வயிற்றிலிருந்த உணவைத் தன்னுயிர் போமென்பதுணர்ந்தும் அவ்வயிற்றைப் பீறியுங் கொடுத்தான் ஒரு வேளாளன் என்ற வரலாறும் நினைக்கத்தக்கது. (14)

—கண்டளவில்

நீலிதனக் கஞ்சி நின்றவணி கேசனுக்காக்
கோலி யபயங் கொடுக்குங்கை—

(கு - ரை.) இதிற் குறித்தகதை விவரம்:—பிறமகளிரைக் காமுற்றுத் திரிந்த ஒரு வணிகன் 'அவ்வொழுக்கந்தகாது' என மறுத்த தனது மனைவியான நீலி யென்பவளைக் கொன்றுவிட, அவள் தனக்குநேர்ந்த அகாலமரணத்தினுற் பேயாகிப் பழிக்குப் பழிவாங்க நினைத்துத் திருவாலங்காட்டைச் சேர்ந்ததொரு காட்டில் திரிந்துகொண்டிருக்கையில், அவளது கணவனான வணிகன் வியாபாரத்தின்பொருட்டுப் பழையனூர்க்குச் செல்லும்வழியில் அப்பேய் தனது முன்னையவடிவங்கொண்டு ஒரு கள்ளிக்கட்டையைப் பிள்ளையாக்கித் தன் இடுப்பிலெடுத்துக்கொண்டு அவனைத் தொடர, அவன் அவ்வடிவத்தைப் பேயென்று அறுதியிட்டு அப் பேயினது வஞ்சமொழிகளுக்கு இணங்காது போய்க்கொண்டிருக்க, பேயும் 'எனது பிராணநாயகரே! இது முறையோ! என்னைத் தனியே காட்டில் விட்டு அகலக் கருதினீரே!' என்று தொடர்ந்து

போய்ப் பழையனூரையடைந்து அங்கு அம்பலத்திற் கூடியிருந்த வேளாளரைச் சார்ந்து தனது வழக்கைக்கூறித் தனது குழந்தையை அவ்வணிகனிடஞ்செலுத்தி அவனைத் தன்கணவனென்று மெய்ப்பிக்க, அவ்வணிகன் 'இது பேய்க்கூத்து' என்ன, இருவர் வழக்கையுங்கேட்ட அவ்வேளாளர்கள் எழுபதின்மரும் 'நீ உயிரை யிழப்பின் நாங்கள் எழுபதின்மரும் எமது உயிரைத் தருவோம்; நீ இவளுடன் இணங்கியிருப்பாயாக' என அபயங் கொடுத்து அன்றிரவு தங்கும்படி அம்மையப்பர் சந்நிதியில் ஓர் அறையில் விடுத்தனர் என்பது. கோலுதல் - ஆலோசித்தல். அபயம் - 'பயப்படாதே' என அடைந்தோர்க்கு ஆதரவளித்தல். (15

—ஆலமெனும்

வன்னி யிடைமூழ்கி வானோர் பழிகழுவிக்
கன்னிதனை யேமணந்த காட்சிக்கை—

(கு - ரை.) ஆலம் எனும் - ஆலகாலமென்னும்படி கொடிதான, வன்னியிடை - நெருப்பிலே, மூழ்கி - குளித்து, வான் ஓர் பழி கழுவி- [தமக்கு ஏற்படவிருந்த சொல்திறம்பியமை என்ற] மிக்கபெரும் பழியைத்துடைத்து, (அச் செயலின்மூலம்), கன்னி தனையே - கீர்த்தி மங்கையையே, மணந்த - கூடிய, காட்சிக்கை - அழகியகை என்றவாறு.

நீலிக்கஞ்சிய வணிகனுக்கு அபயங்கொடுத்து அன்றிரவு ஓரறையில் தங்கும்படி வேளாளர்கள் எழுபதின்மரும் சொல்ல, அவ்வணிகனும் அம்பலத்தாரது சொல்லை மறுக்கமுடியாமல் அவளுடன் இணங்கியிருக்க, உடனே அப்பேய் அவனுயிரை மாய்த்து மறைந்துவிட, அதனையுணர்ந்த அம்பலத்தார் எழுபதின்மரும் தாம் அளித்த வாக்குறுதிப்படியே தீக்குழியிற் பாய்ந்து தமது உயிரை விடுத்தார்களென்பது அறியவேண்டிய விவரம். இதனை, "மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகனுயிரிழப்பத் தாங்கள், கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக் குழியிலெழுபதுபேரு முழுகிக்கங்கை, யாறணிசெஞ்சடைத் திருவாலங்காட்டப்ப னண்டமுற நிமிர்ந்தாடு மடியின்கீழ் மெய்ப், பேறுபெறும் வேளாளர்பெருமை யெம்மாற் பிரித்தளவிட் டிவளவெனப் பேசலாமோ" என்ற சேக்கிழார் புராணத்தாலும், "இன்னும் புகழ் நிற்க வோர்பழிக்கா மற்றெழுபதின்மர், துன்னுந் தழல்புக்கொளித்ததெல்லாஞ் சுருதிப்பொருளா,யுன்னும் புரிசைத் திருவாலங் காட்டி னிறைபதிக, மன்னுந் தமிழில் வகுத்ததன்றோ தொண்டைமண்டலமே" என்ற தொண்டைமண்டல சதகத்தாலும் அறிக. கன்னி - புகழ்க்கன்னியாதலை "இன்னும் புகழ் நிற்க" என்று மேற்குறித்த சதகத்தொடராலும் அறிக. 'பெருங் கீர்த்திமங்கை பிரியாமல் வாழுங்கை' என்றூர் தொடக்கத்தும். 'ஆலம்' என்ற சொல் விஷத்தையேயன்றி, ஆலங்காட்டையும் சூசிப்பிக்கும். வான்ஓர்- ஒருபொருட்பன்மொழியாகவுமாம். காட்சி

- அழகு: 'அணங்கு மெய்ந்நின்ற வமைவரு காட்சி' என்றது பொருநராற்றுப்படை (வரி, 20). (16)

—துன்னுமொரு
பேருலகை யெல்லாம் பிழைப்பிக்கு மோர்கொழுவின்
கூரிலொரு வன்கழுத்தைக் குத்துங்கை—

(கு - ரை.) மேற்குறித்த திருவாலங்காட்டு நீலிகதையி லோர் பகுதி ஈண்டு அறியவேண்டுவது:—வணிகனுயிரிழப்பின் நாங்கள் எழுபதுபேரும் உயிரிழப்போம் என்று உறுதிசொல்லிய எழுபது வேளாளர்களில் அறுபத்தொன்பதின்மர் தீயில் வீழ்ந்திறக்க, ஒருவன் அப்போதங்கில்லாமல் வயலில் உழுதுகொண்டிருக்க, அவ்வயலில் நீலிப்பேய் அவனது மனைவியுருவங்கொண்டு சென்று, "அறுபத்தொன்பதின்மரும் தீயில் வீழ்ந்திறக்க, நீ மட்டும் உயிர் வாழ விரும்புகின்றாயா; * முன்கையுடையவர்க்குக் கொழுவே படைக்கலம்" என்று சொல்ல, அதுகேட்ட எழுபதாமவன் தன் கையிலிருந்த கூரிய கொழுவினால் தன் கழுத்தைக் குத்திக்கொண்டு உயிர்கொடுத்துச் சொல்லையும் புகழையும் நிலைநிறுத்தினன் என்பது. இதனை "விழுவேமெனச் சென்று வீழ்ந்தாரிலோர் மைந்தன் வேறுபட, வுழுவேலியிற் சென்றொருநீலி முன்கை யுடையவற்குக், கொழுவே படைக்கலமென்று சொலாமுனங் கூறியசொல், வழுவேயெனப் பொன்று வல்லாளனுந் தொண்டை மண்டலமே" என்று பாராட்டியது தொண்டைமண்டலசதகம். கோதைவேல் மன்னவர்தங் குடைவளமுங் கொழுவளமே யாத லாலும், ஏர்ப்பின்னதுலகமாதலாலும், 'பேருலகையெல்லாம் பிழைப்பிக்கும் ஓர் கொழு' என்று சிறப்பித்தது. கொழு-கலப்பை யின் காறு. ஒருவன் - எழுபதாமவனாகிய வேளாண்மகன். (17)

—பாரறிய
வீறு பெறும்பறையன் வியாம லோர்கலத்திற்
சோறுபிசைந் துண்ட சுடர்மணிக்கை—

(கு - ரை.) வீறு - சிறப்பு. பறையன் - நந்தன்சாம்பான் என் பவன். வியாமல் - பசியாலிறவாதபடி. ஓர்கலத்தில் - ஓரே பரி கலத்தில். பரிகலம் - சோறுண்ணும் பாத்திரம் [Plate]. விவரம் பின் வருமாறு:—அரசனது பரிவாரத்தாரால் துரத்தப்பட்ட நந்தன்சாம்பான் என்னும் பறையன் பேராவூர் வேளாளப்பிரபு சாப்பிடுஞ்சமயத்தில் அவரது வீட்டுவாயிலிலோடி முறையோ வென்று கூவ, அப்பிரபு அவனைத் தடையின்றி விரைவிலே உள்ளே வரவழைத்துத் தன்னுடனிருக்கச்செய்து தன் பரிகலத் திலேயே உடனுண்ணச்செய்து அபயங்கொடுத்தார்; இதனைக் கண்ட அரசனது பரிவாரத்தார் அஞ்சிச்சென்றனர் என்பது.

---

* முன்கையுடையவர்-இரப்போர்க்குக் கேட்டதைக் கொடுக்க எப்போதும் முன்னே கைந்நீட்டிக் கொண்டிருக்கும் வேளாளர்.

இச்செயலைப்பாராட்டி "நந்தனுட னமுதுண்டான் பேராலூரான்" என்றது தனிப்பாடல். தொண்டைமண்டலசதகமும் "தரையார் மழையுந் தபனனும்போலத் தடையொன்றின்றி, யுரையாது நீசன்ற னுண்டமையாலுமோ ரூனமின்றித், திரையார்புவியிற் புகழேபடைத்துத் தினந்தினமும், வரையாது வள்ளன்மைகாட்டு வதாற் றொண்டைமண்டலமே" என்று சிறப்பித்தது. [ஈண்டு, சோணாட்டுத் திரிபுவனம் என்ற புவனையில் பெருஞ்செல்வனும் வள்ளலுமாகத் திகழ்ந்த சோமன் என்பவனைப்பற்றி "பறை யனோடொக்க வுண்டான் அன்னைசோமன்" என்று கூறும் தனிப் பாடல்ஒருசார் ஒப்பு நோக்கத்தக்கது.] (18)

—ஆருத்

தொடையி லெழுசிலந்தி தோற்றுவிக்கப் பட்டின்
புடைவை கிழித்த பெருங்கை—

(கு - ரை.) இந்தக் கதை வருமாறு:—புதிதாகப்பட்டம் பெற்ற சோழராசனொருவன் வெண்ணெய்நல்லூர் சடையப்ப முதலியார் தன்னைவந்து காணாமையால், அவர் வறுமையுறும்படி செல்வமனைத்தையும் கவர்ந்தபின்னும் அவர் அரசனைப்போய்க் காணாமலிருந்தார்; அக்காலத்தில் சீனவர்த்தகனொருவன் இழை யாயிரம் பொன்பெற்ற பட்டொன்று கொண்டுவந்து அரசனுக்குக் காட்ட, அவன் அதன் விலைக்கான பொருள் தன் கருவூலத்தில்லா மையால் வாங்காது விடுக்க, அவ்வர்த்தகன் அதனைச் சடையப்ப முதலியாரிடத்திற் கொண்டுபோக, அவர் அப்பட்டினை வாங்கித் தரித்துக்கொண்டார். இதனை அரசன் கேள்வியுற்று அவமானத் தால் மனம்புழுங்கி முதலியாரை வலுக்கட்டாயப்படுத்தித் தன் சமூகத்தில் வரவழைத்து "நான் அழைத்ததற்கு நீர் ஏன் வராமல் மறுத்தீர்" என்று வினவ, அப்பிரபு 'எனது துடையிற் சிலந்தி' என்ன, அரசன் நம்பாமையால், அவ்விலையுயர்ந்த பட்டைக் கிழித்துத் துடைபுண்ணைக் காட்டினார். அரசன் தன்செல்வத்தை விட விலையுயர்ந்த பட்டை இவர் வறுமையுற்ற காலத்தில் வாங்கி யதைக் காட்டிலும், அதனை மிக அலக்ஷியப்பொருளாக மதித்துக் கிழித்தது பேராச்சரியம் என்று அதிசயித்துப் பிரமித்து இவரைக் கொண்டாடி இப்பிரபுவை அரசர்தாமே சென்று காண்பது வழக்கம் என்பதையும் தெரிந்துகொண்டு களித்திருந்தனன் என்பது. இதனை "தெள்ளத்தெளிந்தவர் செய்தக்கதோர்முறை செய்யிலையா,எள்ளத்தனை மலையத்தனையாமென்பதின் றறிந்தோம், உள்ளற்கரிய தொடையாடைகீறிய தொன்றுமொரு, வள்ளற் றகைமையொடொத்துளதாற் றொண்டைமண்டலமே" என்று பாராட்டியது சதகம். "வென்றிமேவு துடையாடை கீறினவன் வேலையாடையது கீறிலான்" என்று இவ்வரலாற்றினை யுட் கொண்டு கூறியது ஆறைக்கலம்பகம். "பொதிதருங்கலை கீறிக் காலினிற் பொருந்து புண்ணினை வேந்தர்முன் காட்டி" (செ: 36) என்றது தண்டநாயகன்பள்ளு. ஆருச்சிலந்தி என இயைக்க. சிலந்தி-விஷக்கட்டி (ulcer). தோற்றுவிக்க-(அரசனுக்குக்) காட்ட.

புடைவை - ஆடை என்றபடி. பெருங்கை - பெருமைபொருந்திய கை. மோனைக்காக "பொருங்கை" என்ற பாடமும் உண்டு; அதற்கு அரசனோடு மாறுபட்ட கை என்னவேண்டும். (19)

—கடல்சூழ்ந்த

பார்பூட்டு மன்னர் பரிகரிபூட் டக்கதிரோன்
றேர்பூட்ட வேர்பூட்டுஞ் செம்பொற்கை—

(கு - ரை.) கதிரோன் தேர்பூட்ட அதனாலாகும் விடியற் காலையில் வேளாளர் ஏர்பூட்டுதலால் மன்னர் பரிகரிபூட்டல் நிகழ்கின்றது என்றபடி. 'பரிகரிபூட்ட' என்றது, தத்தம் தொழில் களில் முனைய என்ற கருத்தது. பரிகரி - உம்மைத்தொகை. பரி - குதிரை; கரி - யானை. இவை மன்னர்க்கு வாகனங்களாகும். பார் பூட்டல் - உலகையாளுதல். (20)

—வீரமதன்

ஐங்கோ லெடுக்க வணைகோ லெடுக்கவுழும்
பைங்கோல் பிடிக்கும் பதுமக்கை—

(கு - ரை.) வேளாளர் உழுங்கோலைக்கையிற் பிடித்தலால், மன்மதன் தன் வில்லெடுக்கவும் பஞ்சபாணங்களைத் தொடுக்கவும் ஆகின்றது என்றது கருத்து. மதன் - மன்மதன். ஆடவர் பெண் டிர்க்குக் காமத்தை விளைக்குங்கடவுள்: இவனை முற்றத்துறந் தார்க்கும் வெலல் அரிதாகலின், '**வீரமதன்**' என்றார். ஐங்கோல் - பஞ்சபாணம்: கோல் - அம்பு: மன்மதனுக்கு மலரம்புகள் ஐந்து: அவை தாமரை, மாம்பூ, அசோகு, முல்லை, நீலோற்பலம் என்பன. அணை - (தான்) பிடித்த. கோல்-வில்: இலக்கணை. மன்மதனுக்குக் கரும்பு வில். 'உழும் பைங்கோல்' என்றவிடத்துக் கோல் - தாற்றுக்கோல்; ஏரடிக்குஞ்சிறுகோல். ஈற்றுக்கோலுக்குப் பசுமை அடைகொடுத்தது, என்றும் தளராமைபற்றி. இதனால் காமமாகிய புருஷார்த்தம் மன்பதைக்கு வேளாளரால் சித்திப்பது கூறப்பட்டது: அச்சிறப்பு நோக்கிப் பதுமக்கையாயிற்று. பதுமம்- தாமரை. (21)

—இங்கிதமாஞ்

சீர்படைத்த பூபாலர் செங்கோல் பிடிப்பதற்குப்
பேர்படைத்த மேழி பிடிக்குங்கை—

(கு - ரை) இங்கிதமாஞ்செங்கோல் என இயைக்க. இங்கிதம் -இனிமை. மேழி-கலப்பை. "ஆழியால் உலகளிக்கும் அடல் வேந்தர் பெருந்திருவும்'****மேழியால் விளைவதல்லால் வேறொன் றால் விளையாவே" என்ற ஏரெழுபது ஒருசார் ஒப்பு நோக்கத் தக்கது. பூபாலர்-பூமியைக் காக்கும் அரசர். (22)

—கார்படைத்த

மிஞ்சுமதி கீர்த்தியைப்போன் மேதினியெல் லாந்தழைக்கச்
செஞ்சாலி நாற்றைத் தெளிக்குங்கை—

(கு - ரை) மேதினியெல்லாந்தழைக்கச் செந்நெற்பயிர் நாற்றை விடுபவர்கை வேளாளர் கை என்றபடி. செஞ்சாலி-செந்நெல். தெளித்தல்-(நாற்றுவிடுதற்காக) விதை தூவுதல்: இது நாறு வார்த்தல் எனப்படும். விதைநெல்லை நீரில்ஊறவைத்துச் சிறிது முளைதோன்றியபின் அவ்விதையைத் தூவுதலும் வழக்கம். கார்-மேகம். படைத்த மிஞ்சு மதி-சிருட்டிக்கப்பட்ட பூர்ணசந்திரன். கீர்த்தி-புகழ். மேகம், பூர்ணசந்திரனின் நிலவொளி, புகழ் இவை மேதினியெல்லாம் தழைக்கச்செய்து பரவியிருத்தல் கண்கூடு. "தண்மதியத்துதயத் தெழுந்த நிலாக்கற்றை,விண்ணும் மண்ணுந் திசையனைத்தும் விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப், பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன் புகழ்போ லெங்கும் பரந்துளதால்" என்றதும் ஒருபுடை நினைக. கார் மதிகீர்த்தி - உம்மைத்தொகை. மிஞ்சுதல்-மிகுதல்: வளர்தல்: "பகல்கண்மிஞ்சி" என்று சீவக சிந்தாமணி (செ:255). எனவே, மிஞ்சுமதி-வளர்மதி. கீர்த்தி-புகழ். கீர்த்தியை வெண்ணிறமுடையதாக வருணித்தல் கவிசமயம்என்பதும் நினைக்கத்தக்கது. (23)

—எஞ்சாமல்

வெள்ளைக் களைகளைந்து வீறும் பயிர்தழைக்கக்
கள்ளக் களைகளைந்த கற்பகக்கை—

(கு - ரை.) எஞ்சாமல்-குறைபடாமல். உழுது எருப்பெய்த பின் பயிர்தழைக்கக் களைகட்டல் இன்றியமையாதாகலின், 'களை களைந்து' என்றது. வெள்ளைக்களை-அசாரமான அற்பப் புல்பூண்டு முதலியன. வெள்ளை-அசாரம்; அற்பம். கள்ளக்களை-வஞ்சனை முதலிய குற்றம்: இருபெயரொட்டுப்பண்புத்தொகை. வேளாளர் கள்ளமின்றி இருந்தமையை, தொண்டைமான் சக்கரவர்த்தியாலாளப்பட்ட காஞ்சிபுரத்தில் காக்கை கரியதன்றி, அந்நாட்டு வேளாளர்மனம் அறியாமை வஞ்சனை முதலிய கருங்குணமுடையதல்ல என்னும் பொருள்படும்படி—"வஞ்சிவெளிய குருகெல்லாம் பஞ்சவன்றன், நான்மாடக்கூடலில் கல்வலிது, சோழனுறந்தைக் கரும்பினிது தொண்டைமான், கச்சியிற்காக்கைகரிது" என்ற ஔவைபாடலால் தெளியலாம். இரவா ரிரப்பார்க்கொன்றீவர் கரவாதாதலின், 'கற்பகக்கை' என்றது. கற்பகம் - தேவதரு: தன்னையண்டிவேண்டியவர்க்கு அவர் விரும்பியதைக் கொடுக்குந் தெய்வத்தன்மையது. (24)

—வள்ளுறையும்

விற்போர் மதகரிப்போர் வெம்பரிப்போர் வெற்றிப்போர்
நெற்போர் முதற்போர் நெரித்திடுங்கை—

(கு - ரை) வள் உறையும் வில்-வலிமை தங்கிய வில். வள்-வலிமை: 'வள்வார் முரசு' (புற. வெ.மாலை: 3,2,கொளு) விற்போரும் யானைப்போரும் குதிரைப்போரும் தம் மன்னர்க்கு வெற்றிப் போராகுமாறு தமது கையினால் நெற்போர் முதலிய குவியலிலுள்ள தானியங்களைமிண்டுவர் வேளாளர் என்றபடி. இவர்கள் கையால் நெற்போர்முதலாகிய போரை நெரிடுத்திடுதலால்

பகைப்புலத்துத் தம் மன்னரால் பகைவர் நெரிக்கப்படுவர் என்பது பாவம். 'பலகுடைநீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர், அலகுடை நீழலவர்'' என்ற திருக்குறளையும், 'தம்மரசனுக்குக் கொற்றம் பெருக்கி மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பர்' என்று பரிமேலழகர் கூறிய விசேடவுரையையும் காண்க. "புரப்போர் கொற்றமும்,உழவிடைவிளைப்போர்'' என்ற சிலப்பதிகாரமும், "பொருபடைதருஉங் கொற்றமு முழுபடை, யூன்றுசான் மருங்கினீன்ற தன் பயனே'' என்ற புறநானூறும் இங்குக் காணத்தக்கன. விற்போர், யானைப்போர், குதிரைப்போர் இவை செய்பவர் தம் நாட்டு வேந்தர்கள்: அவை வெற்றிப் போராகுமாறு செய்பவர் வேளாளர் என்றபடி. நெற்போர்-நெற்குவியல். போர்-கதிர் வைக்கோல் இவைகளின் படப்பு. முதல்-முதலாகிய, போர்-தானியக் குவியல்கள். நெரித்தல்-நிமிண்டுதல் (To rub or crush with the hand, as ears of grain). (25)

—கற்பகம்போல்

மேழிக் கொடிசிங்க வெற்றிக் கொடிகுயிலின்
வாழிக் கொடியே மருவுங்கை—

(கு - ரை.) வேளாளர்க்குரிய கொடிகளில் மேழி, சிங்கம், குயில் ஆகிய மூன்றும் கூறப்பட்டன. இங்கு, வேளாளர்க்கு இவை உரியன என்பதைப் **புராணசாரத்திரட்டு** கூறும் தசாங்கத்தில் "தாவறக் காட்டுந் தனிக்குறிக் கொடியாஞ் சிங்கங் குயிலொடு திகழ்தரு மேழியும்'' என்ற வரிகளாலறியலாம். ஆதிகாவியம் என்னும் கிரந்தம் வேளாளர்க்கு இந்தக் கொடிகள் தேவர்களால் கொடுக்கப்பட்டது என்று கூறும்: ''மயில்குயில் மீனஞ்சிங்க மன்னியதுவசமாக, இயலுறு தேவரெல்லா மின்பமோடளித்துப் பின்னர்'' என வந்துள்ளது. வாழி - அசை. (26)

—நீளுலகில்

ஆதுலர்க்குச் செம்பொ னளிக்குங்கை யாகமங்கள்
வேத புராணங்கள் விரிக்குங்கை—

(கு - ரை.) ஆதுலர் - வறியவர், தரித்திரர். ஆதுலர்க்குச் செம்பொன் அளிக்குங்கை என்பதற்குத் திருநின்றையூர்க் காளத்திவாணமுதலியாராகிய வேளாளப்பிரபுவை எடுத்துக்காட்டலாம். அவரிடத்துச் சென்ற புலவரொருவர்பாடிய"நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழற்போல, நாளைக் கிருப்பாயோ நல்குரவே - காளத்தி, நின்றைக்கே சென்றக்கா னீயெங்கே நானெங்கே, இன்றைக்கே சற்றே யிரு'' என்ற பாடல் அவர் வண்மைக்குச் சான்றாகும். இனி, ஆகமங்கள் வேத புராணங்கள் விரிக்கும்கை என்பதற்கு - வேளாளர் ஆகமம் வாசிப்பதுபோலவே வேதமும் வாசிக்கலாமென்பதற்குச் சிவஞானபோதஞ் செய்தருளிய மெய்கண்டதேவராகிய வேளாளர் தமது நூலில் "அக்கரங்களின்றாம் அகரவுயிரின்றேல், இக்கரமத்தென்னு மிருக்கு'' என்று பிரமாணித்தவிடத்து, அவர் வேதமுணர்ந்தவரென்றே தெள்ளிதிற்

றுணியப்படுதலாலும், இன்னுஞ் சுத்தசைவ வேளாளர்கள் வேத மாதாவாகிய பிரமகாயத்திரி, சிவகாயத்திரி இவைகளை ஜெபித்து வருகின்றார்களாதலாலும், சிலர் வேதத்தைப் பாஷியத்தோடும் ஆராய்ந்தறிந்து வருகின்றார்களாதலாலும் இங்ஙனம் வேளாளரைப்பற்றிக் கூறியது ஒக்கும் என அறிக. ஆகமங்கள்-காமிகம் முதல் வாதுளம் இறுதியாகக் கூறப்படும் இருபத்தெட்டாகும். இவைகளை வேளாளர் கற்றொழுகுவரென்பதை "காவியமாகிய காமிகங் கண்டுகங்காகுலத்தோர், ஓவியபாத்திரராக........." என வரும் தொண்டைமண்டலசதக வடியாலும் உணரலாம். வேதம்-ருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு. புராணங்கள் பதினெட்டு. அவற்றுள் சிவபுராணமாவன பத்தும் ஈண்டுக் குறிக்கப்பட்டன எனலாம். [சிவபுராணமாவன-சைவம், காந்தம்,இலிங்கம், கூர்மம், வாமநம், வராகம், பௌஷியம், மச்சியம், மார்க்கண்டேயம், பிரம்மாண்டம் என்பன] (27)

—நீதிநெறி

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தருமந் தழைக்குங்கை—

(கு - ரை.) பொருள் வெளிப்படை. மானமாவது-எஞ்ஞான்றும் தம்நிலையின் தாழாமையும், தெய்வத்தான் தாழ்வு வந்துழி உயிர்வாழாமையுமாம். குலம் - குடிமரபு. வண்மை-இன்னார் இனையரென வரையாது கொடுப்பது. தானம்-சத்பாத்திரத்திலிடுவது. தருமம்-நற்செயல். (28)

—ஆனதமிழ்

கல்லார்க ளென்னுமற் கற்றோர்க ளென்னுமல்
எல்லாரை யுங்காத்தீ டேற்றுங்கை—

(கு - ரை.) இக்கண்ணியால், அடுத்தோர் யாவராயினும் அவரை ஆதரிப்போர் வேளாளர் என்பதாயிற்று; உதாரணம்:— பாண்டிமண்டலத்திலிருந்து கணவனோடு தலயாத்திரையாகக் காஞ்சிபுரத்திற்கு வந்த அழகிய பெண்ணொருத்தி திசைதப்பிக் குன்றவர்த்தனம் என்னும் ஊரில் ஒரு வேளாளன் வீட்டில் அடைக்கலம் புகுத, அவ்வேளாளன் அவளைத் தன் சகோதரியாகப் பாவித்து உபசாரத்தோடு ஆதரித்துவைத்திருந்து, அப்பெண்ணைத் தேடிவந்த கணவனையும் மைத்துனமுறைகொண்டு உபசரித்து,அவ்விருவருக்கும் ஆடையாபரணமுதலிய வரிசைகொடுத்து, அவர்களுடன் தானுஞ்சென்று அவர்களூரைச் சேர்வித்து விட்டுவந்தான் என்பது நோக்கத்தக்கது. தமிழ்ப்புலவர்களை ஆதரித்தவேளாளப் பிரபுக்கள் பல்லோர் என்பது வெளிப்படை. (29)

—வல்லமைசேர்

மைம்மா முகிலுலகை வாழ்விக்கு மேன்மைபோற்
கைம்மா றிலாதளித்த கற்பகக்கை—

(கு - ரை.) முகில் உலகை வாழ்வித்தலைத் திருக்குறள் "வான் சிறப்பு" அதிகாரத்தால் உணரலாம். மை - கருமை. மா-பெருமை.

இனி, மா - கருமையெனக் கொண்டு, மைம்மா - ஒருபொருட்பன் மொழியெனவுமாம். கைம்மாறு - பிரதியுபகாரம். "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு" என்ற குறள் கருத்து வந்துள்ளது. வேளாளர் ஒப்புர வறிந்து ஒழுகுபவர் என்பது தேர்ந்தது. (30)

—சும்மையார்

ஊ நணி நீர்போ லுலகத் தவர்க்கெல்லாம்
பேரறிவா ளீயும்ப்ர தாபக்கை—

(கு - ரை.) சும்மை - ஆரவாரம். ஊருணி - ஊரின் வாழ்வார் தண்ணீருண்ணுங்குளம். "ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம், பேரறிவாளன் றிரு" என்ற குறட்கருத்து அமைந்துள்ளது. இதனால், வேளாளர் உலகவாம் பேரறிவாளர் என்பதும், அவர் செல்வம் ஊருணி நீர்போல் அனைவர்க்கும் உதவுவது என்பதும் பெறப்பட்டன. ப்ரதாபம் - வடசொல்: பெருமை, கீர்த்தி என்ற பொருளது. (31)

—பாரில்

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
கொடுக்க விசைந்த குளிர்க்கை—

(கு-ரை.) உடுக்கை-ஆடை; உடுக்கப்படுவது என ஆடைக்குக் காரணப்பெயர்: உடு-பகுதி, ஐ - செயப்படுபொருள்விகுதி, கு - சாரியை, க் - சந்தி; இதனை, 'கை' விகுதிபெற்ற தொழிலாகு பெயராகவுங் கொள்ளலாம். அற்றங்காத்தற்கண் கை தன் மனத் தினும் முற்படுதலின் அதனை உவமை கூறினார். இனி, ஆடை நெகிழ்ந்தவனுக்கு மறைத்து மானங்காக்கவேண்டிய உறுப்பைத் தானே சென்று மறைத்து மானங்காத்தல்பற்றிக் கை உவமை கூறப் பட்டதென்னலுமாம். "உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே, இடுக்கண் களைவதா நட்பு" என்ற குறட்கருத்து அமைந்துள்ளது. இதனால், வேளாளர் சிறந்த நட்பினர் என்பது பெறவைக்கப் பட்டது. பெருநகர்ப் பிச்சையப்ப முதலியார் என்னும் வேளாளப் பிரபு தம் மனைவியாருடன் ஏகமனதாய் விருந்திட்ட பெருமை கண்டு உளமகிழ்ந்து ஒரு பெரும்புலவர் பாடிய "உடையவிழ்ந் தான் கரம் போனட் பென்னு முயர்மொழியின், நடையுடை யாய் மிடியுற்றுழி நண்பர்க்கு நற்றமிழ்ச்சொற், படையுடை யார்க்கு நிதியா யினைவெள்ளைப் பங்கயத்தின், பெடையுடை வேதத் தனஞ் சேர் பெருநகர் பிச்சப்பனே" என்ற பாடல் நினைவுக்கு வருகிறது. ஆங்கே - அப்பொழுதே, அந்தவிடத்தே. ஆங்கே கொடுக்க இசைந்த குளிர்க்கை என்பதற்கோர் உதாரணம்:—தனக்கு அருமைத்துணையாயிருந்த சகோதரனிறந்துபோக, அவனுடலைத் தகனஞ்செய்தற்குரிய சடங்குகளைச்செய்து நெருப்புச்சட்டியையும் மூட்டிச் சித்தமாயிருக்கையிலே, தமிழிற் சிறந்த ஒரு புலவர் மிக்கபசியோடு தன்னிடம் வருவதறிந்து, அப்பிணத்தை மூடி மறைத்து நெருப்புச்சட்டியையும் அவித்துவிட்டு, மகவினைக் கண்ட தாய்போல எதிர்சென்றழைத்துவந்து அவருக்கு உண்ணும்

படி விருந்திட்டு, தன்னுடனிருந்துண்ணும்படி அவர்சொல்லிய சொற்கடவாமல் தானுமுடனிருந்துண்டு அவருக்குத் தக்க பரி சளித்துவிடுத்தான் செங்கலங்கையென்னும் வாயற்பதி வடுக நாதன் என்னும் வேளாளப்பிரபு. இவன் செயலினையறிந்து கொண்ட புலவர், "தன்னுடன்கூடப் பிறந்த வருந்துணைத்தம்பி யுயி, ரந்நிலை மாண்டது தோன்றுமன் மூடிவைத் தன்னமிட்டான், மன்னவர் போற்றிட வாழ்செங்கலங்கை வடுகனுக்குக், கன்னனுஞ் சோமனுமோ வினையாகக் கழறுவதே' என்று பாராட்டினர். (32)

—இடுக்கணினல்
மாமறையோர் மன்னர் வணிகர் முதலாகத்
தாமலையா மற்கொடுத்துத் தாங்குங்கை—

(கு - ரை.) இதனல், முதல் மூன்று வருணத்தார்க்கும் இன்ப மாகிய நிலைபேறு இவ்வேளாளர் தாங்குதலால் உண்டாகின்றது என்றது பெறவைத்தபடி. 'இடுக்கணினல் அலையாமல்' என இயைக்க. 'வேளாளர் திறத்தாலே மறைவளரும் வேந்தர் முடி வளரும் வணிகருக்குப் பெருநிதிய மிகவளரும்' என்ற ஏரெழு பது கருத்து நினைக.

இனி, வேளாள சூளாமணி என்னுமோர் நூலுள் :—

—இடுக்கணினல்
மாமறையோர் மன்னரொடு வந்தடுத்த சூத்திரருந்
தாமலையா மற்கொடுத்துத் தாங்குங்கை—தேமருவும்
பொன்முடி மன்னர் புனையத் தரிக்குங்கை
அன்னர்துலா பாரத் தளக்குங்கை—நன்னயத்து

என்ற வரிகள் இடையிற்செருகலாகக் காணப்படுகின்றன என்பர். (33)

—தேமருவு
நாவிற் புகழ்கம்ப நாடற் கடிமையென்றே
மாவைக் கரைத்துமுன்னே வைக்குங்கை—

(கு - ரை.) இங்கே அறிய வேண்டிய விவரம்:—கம்பர் தொண்டைநாட்டில் ஓர் ஏழையின் மனைக்குப்போனபோது, அவன் நல்லுணவில்லாமல் மாவையே நீரிற்கரைத்து அதனை இவர் முன்புவைத்து இவரைப்பார்த்து "யானும் என்னுரிமையும் நுமக்கே அடிமை" என்று கூறி, அதனை யமுது செய்தருளுமாறு வேண்ட, அந்த மா வுணவையும் அவனது அன்புடைமைக்கு மகிழ்ந்து பருகிப்போய்ப் பின்னர் அந்நாட்டுச் சான்றோர் பலரைப் பாடி அவர்களால் பல வரிசைகள் அளிக்கப்பெற்றுப் பலவூரார் கள் அடிமைசெய்ய வாழ்ந்திருந்தார் என்பது. மற்றும், வேளாளர் கம்பருக்கு அடிமைக்குற்றேவல் புரிந்தனரென்பதை, தம்மைப் பாடிய கம்பருக்குப் பசுமந்தைகளும் எருமைகளும் ஆடையாபர ணுதிகளும் கொடுத்துப் புறக்காவலாகவிருந்து பாதுகாத்து

ஆதரித்ததுமன்றித் தம் அடிமைகளுக்குள்ளே ஆள்முறையும் நாள்முறையும் வகுத்துக்கொண்டு, நாடோறும் சிற்சிலராக அடிமைத்தொண்டு செய்வித்து வந்தனரென்பதையும் "ஏத்தளித் தாயிரம் பாடல்கொண்டே சிரையிந்தெருமைப், போத்தளித் தாடையும் பூணூரமுந்தந்து போதரவாய்க், காத்தளித் தாதரித் திட்டதல்லாமலுங் கம்பருக்கு, மாத்தளித்தாட்பட்டு வாழ்வ தன்றோ தொண்டைமண்டலமே" என்ற சதகப்பாடலால் தெளியலாம். (34)

—பாவலர்தாம்

ஏரெழுப தோதியரங் கேற்றுங் களரியிலே
காரிவிட நாகங் கடிக்குங்கை—

(கு-ரை.) இதிலறியவேண்டிய விவரம் :—கம்பர் சடையப்பப் பிரபுவின் வேளாண்குலப் பெருமையை வெளிப்படுத்துபவராய் ஏரெழுபது நூலைச்செய்து முடித்தபிறகு, அதனை அரங்கேற்று கையில், முதலியார் இடையிலே வெளியிற்சென்றிருந்தபோது விடநாகமொன்று அவரைத்தீண்ட, அவர் நூலரங்கேறுதல் தடைப்படாதிருக்கும்பொருட்டு அதனை ஒருவர்க்குந் தெரியப் படுத்தாது மறைத்துச் சபையில் வந்திருந்து விஷவேகத்தால் மூர்ச் சையடைந்தனராக, சரசுவதீகடாட்சம் பெற்றகம்பரும் அதனை யறிந்து, "ஆழியான் பள்ளியணையே யவன் கடைந்த, வாழிவரை யின் மணித்தாம்பே - பூழியான், பூணே புரமெரித்த பொற்சிலை யிற் பூட்டுகின்ற, நாணே யகல நட", "மங்கையொருபாகன் மணி மார்பிலாரமே, பொங்குகடல்கடைந்த பொற்கயிறே-திங்களையும், சீறியதன்மேலூருந் தெய்வத் திருநாணே, ஏறிய பாம்பே யிறங்கு", "பாரைச் சுமந்த படவரவே பங்கயக்கண், வீரன் கிடந் துறங்கு மெல்லணையே, ஈரமதிச்,செஞ்சடையான் பூணுந் திருவா பரணமே,நஞ்சுடையாய் தூர நட"என்று மூன்று வெண்பாக்களைப் பாடி, அஷ்டமகாநாகம் முதலான சர்ப்பங்கட்கும் அதிபதியாகிய ஆதிசேஷனைப் பிரார்த்தித்தவுடனே, அங்கு ஒருபுற்றிலிருந்து ஒருசர்ப்பம் வெளிப்பட்டு வந்து யாவரும் அதிசயிக்கும்படி முதலி யாரைக்கிட்டி முன்புகடித்த வாயிலே மறுபடிகடித்துத் தலைக் கேறின விஷத்தை மீட்டுக்கொண்டுசெல்ல, சடையப்பமுதலி யாரும் மூர்ச்சைதெளிந்து அறிவுபெற்றெழுந்தனராக, கம்பர் ஏரெழுபதை யரங்கேற்றி, பின்பு, உடனே இயற்றிய திருக்கை வழக்கமென்ற இந்நூலில், இவ்விஷயத்தை இக்கண்ணியால் பாராட்டிக்கூறினர் என்பது. இனி, ஏரெழுபது அரங்கேற்று கையில் சடையப்பவள்ளலுடனிருந்துகேட்ட புதுவைச் சேதி ராயன் என்னும் ஓர் உபகாரியை விடந் தீண்ட, அச்செய்தியை இக்கண்ணி குறிப்பது என்பாருமுளர். களரி - தொழில் செய்யும் இடம். காரி - கருநிறம். (35)

—பாரறியச்

சங்கையிட்டுத் தள்ளாமற் றன்சோற்றை வந்தவர்க்குப்
பங்கையிட் டிரட்சித்த பங்கயக்கை—

(கு - ரை.) சங்கை - எண்: 'சங்கை தணிக்கும் கொட்டாரம்' என்றது சிவதருமோத்தரம். குமிழம்பட்டு என்னும் ஊரிலுள்ள வேளாளன் உலகத்திற்பஞ்சம் வந்தகாலத்து நாலூரிலிருந்த வித்துவான்களையும் வேறு தேயத்திலிருந்துவந்த வித்துவான் களையும் அப் பஞ்சம் ஒழியுமளவும் தன்னிடம் உள்ள அன்ன முதலியவற்றைக் கொடுத்து ஆதரித்தான்: மற்றும், இடையால மென்னும் ஊரில் வாழ்ந்த வேளாளப்பிரபு தன் "கடைவாயிலி னின்றியாசகர் கூப்பிடக் காதிலது, தடையாகவெம்பசியால் வருந்தாமற் றடையகற்றி, அடையாதவாசலுடையானெனும் பெயராதரித்தான்" என்ற தொண்டைமண்டல சதகத்தாலும், எத்தனைபேர் வந்தாலும், தள்ளாமற் சோற்றைப் பங்கிட்டு இரட்சித்தனர் வேளாண்பெருமக்கள் என்பது பெறப்பட்டது. ()

—பொங்கமொடு
செம்பொன் விளைகளத்தூர் செந்நெல் விளைந்ததனை
நம்பிமறை யோர்க்களித்த நாணயக்கை—

(கு - ரை.) பொங்கம் - மிகுதி; பொலிவு. பொன் விளைந்த களத்தூர் என்பது செங்கற்பட்டுக்கடுத்திருக்கும் ஊர். வயலில் பொன்விளைந்த காரணத்தால் இவ்வூர்க்கு இப்பெயர் வழங்கலா யிற்று. ஈண்டு அறியவேண்டிய விவரம்:—களத்தூரில் குடிதாங்கி முதலியார் என்பவர் தமது வயல்களில் நன்றாக விளைந்த நெல்லை யெல்லாம் அந்தணர்க்கே தானங்கொடுத்துவந்த புண்ணியத்தால் ஒரு வருடம் நெற்கதிரெல்லாம் பொற்கதிராக விளைய, அப்பொன்னையும் நெல்போலவே யடித்துக் குன்றுபோலக் குவித்து நெல்கொடுக்குமளவாகவே தானங்கொடுத்தார் என்பது. இதனை, "பொன்னெல்லையெல்லாம் பொதிப்பொதியாப் பூசுரர்க் குச், செந்நெல்லே போலச் சிறந்தளித்தான்-பன்னகத்தின், சீரார் மணியைவிலை செய்யானுஞ் செய்யகளத், தூரானுஞ் செய்கரும மொன்று" என்ற பாடலாலும் அறியலாம். இதனால் களத்தூரில் தமது கழனிகளில் விளைந்த செந்நெல்லை மறையோர்க்கு அளித்து வந்த பெருமையினர் குடிதாங்கி முதலியார் என்பது பெற்றாம். நம்பி-சிறப்புக்குறிப்பது. நாணயம்-நேர்மை. (37)

—அம்பொன்
விளைபயிரைப் பார்த்து விரைகால் புலத்தை
வளையமதி லிட்டு வருங்கை—

(கு - ரை) விரைகால் புலம்-விதைத்தற்குரிய நிலம். 'நிலம் புலந்து இல்லாளின் ஊடி விடுமாதலின 'பார்த்து' என்றார். பயிர் விளைந்திருக்கும் நிலங்களைப்பார்த்தபின், இனி விதைத்தற்குரிய நிலங்களை வேலியிட்டுக் காப்பர் என்றபடி. வளைய-வரப்பின் நாற்புறமும். மதிலிடுதல்-வேலிகட்டுதல். (38)

—களமதனில்
ஏற்கவந்த வாதுலருக் கில்லையென்னு மற்செம்பொன்
கார்க்கையினுன் மூக்கையிட்ட கற்பகக்கை—

(கு - ரை.) களம் - நெற்போர்க்களம். ஆதுலர் - வறியவர். கார்க்கை - கார்போன்றகை. முக்கை - மூன்றுதரம்: அறுவடை காலத்தில் களத்தில்வரும் அனைவருக்கும் மேரை முதலிய கொடுத்தலாலும், பலதேசத்து வித்துவான்களுக்கும் பெரும்பாலும் வேளாளரே பரிசுகள் கொடுத்துவந்ததாகக் கூறும் வரலாறுகளாலும் ஆதுலருக்கு ஈந்தமை நன்குபுலப்படும். ஏரெழுபதும் "போர்க்களத்தில் எதிர்நிற்பர் முத்தமிழ்தேர், பாவலோ ரிசைவல்லோர் பற்றுடைய பதினெண்மர், காவலோ ரெல்லாருங் கையேற்கும் பொருட்டாலே" என்றது. இவ்வாறு எல்லோரும் தத்தமக்குரிய ஒழுக்கங்களைச் சரிவர நடாத்துதற்கு வேளாண்குடியினரின் உதவி இன்றியமையாது வேண்டியிருத்தலால், இவர் நெறி "பெருநெறி" எனப்பட்டதென்ப. சம்பந்தரும் "வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந், தாளாள ராக்கூரிற் றென்றோன்றி மாடமே" என்றார். (39)

—தீர்க்கமதாத்

திருப்பருத்திக் குன்றிற் சிவனு லயங்கள்
விருப்புடனே கட்டுவித்த மெய்க்கை—

(கு - ரை.) தீர்க்கமதா - நிச்சயமாக. திருப்பருத்திக்குன்றம் - இது ஜினகஞ்சி என வழங்கப்படும். காஞ்சி நகருக்குத் தென்மேற்கே வேகவதி ஆற்றின்கரையில் இந்தத் திருப்பருத்திக் குன்றம் இருக்கிறது. இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் ஏராளமான ஜைன யாத்ரீகர்கள் இங்குள்ள ஸ்ரீமகாவீர வர்த்தமான ஸ்வாமியைத் தரிசிக்க வருகின்றனர். இங்ஙனம், சைன ஆலயங்களிற் சிறந்த இந்தத் திருப்பருத்திக்குன்றத்தில் சிவனுலயங்கள் கட்டினர் வேளாண்பெருமக்கள் என்று இக் கண்ணி கூறுகின்றது. 'சினனுலயங்கள்' என்று பாடமிருக்குமோ எனச் சங்கிப்பார்க்கு முன்பின்நோக்க ஈண்டைக்கு அப்பாடம் பொருந்துவதொன்றன்று எனலாம். சிலர் 'விருப்புடனே கட்டுவித்த' என இருத்தலால், வெறுப்பின்றிச் சினனுலயங்களையும் சைவவேளாளர் கட்டுவித்தனர் எனக்கொள்ளலாம் என்றும், அது சமயசமரசப்போக்கைக் காட்டுவதென்றும் கூறுப. பொருந்துமேற் கொள்க. [ஈண்டு, ராஜராஜசோழன் நாகபட்டினத்துப் புத்த விஹார அமைப்புக்கு உதவியமை நினைக.] 'விருப்புடனே கட்டுவித்து வீறுங்கை' என்ற பாட முண்டு. அப்பாடத்தில் 'திருப்புகழை' என மேல் காய் முன் நிரை வருதலின் அது தகாது எனக்கூறி, 'மெய்க்கை' என்ற பாடங் கொண்டனர்: இனி, 'விருப்புடனே கட்டுவித்த வெங்கை' என்ற பாடங்கொள்ளின் சிறப்பதாக அடியேனுக்குத் தோன்றுகிறது. 'வெம்மை வேண்ட'லாதலின் 'வெங்கை' என்பது கூறியதுகூறலாகாது முன்னருள்ள 'விருப்புடனே' என்றதை வலியுறுத்தி நின்றது:விதப்புக்கிளவி வேண்டியது விளக்குமன்றோ. 'குன்றில்' என்பதைக் 'குன்றுசூழ்' எனப் பொருள்காணல் இழுக்கன்று. மடத்திட்ட தீத்தழல் என்றவிடத்து மடப்புறம்பு குறித்தல் நோக்குக. (40)

—திருப்புகழை

எண்ணை யெழுத்தை யிசையை யிலக்கணத்தை
வண்மைபெற வுண்டாக்கும் வாகுளகை—

(கு - ரை.) எண் என்பது - தருக்கநூலுக்கும், எழுத்து என்பது - இலக்கணநூலுக்கும் பெயராம். (அதனை, "எண்ணு மெழுத்துங் கண்ணிவை யாய்ந்திந் நூற்பயனைக், கண்ணுக காண்பார் நற்கதி", "காண்டலனுமானம் கதையருத்தாபத்தியிவை, ஈண்டிசைத்த வெண்ணெனவேயெண்", "வழூப்பதத்தை வாக்கினுக்கு மாற்றி வரமாக்கும், எழுத்தெழுவாயைந்து மெழுத்து" என்னும் பரமததிமிரபானுத்திருக்குறள்களாலுணர்க.) "காணாதம் பாணினீயஞ்ச ஸர்வசாஸ்த்ரோபகாரகம்" என்னும் வடநூன் மேற்கோளாலும், தர்க்கவியாகரணங்கள் கற்கும் நூல்களெல்லாவற்றிற்கும் கருவியாதலை அறிக. இங்ஙன் தருக்கமே பிரதானமாக இருப்பதால், தருக்கத்தைக் கணிதத்திலடக்கி, எண் என்பது கணிதம் என்றார் பரிமேலழகர்.

"எண் - கணிதம்: அது - கருவியும், செய்கையும் என இரு வகைப்படும்; அவை ஏரம்பம் முதலிய நூல்களுட் காண்க. எழுத்து எனவே, அதனோடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று. இவ்விருதிறமும் அறமுதற்பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின் கண்ணெனப்பட்டன" என்ற பரிமேலழகர் உரைக் கூற்று ஈண்டு நினைக்கத்தக்கது. எண் - ஆராய்ச்சி: முதனிலைத் தொழிற்பெயர்: இது ஆராய்தலையுடைய நூலுக்கு ஆகுபெயர். எழுதப்படுவது, எழுத்து; இதுவும் - அதனிலக்கணத்துக்கு ஆகு பெயராம். இசை-சங்கீதசாஸ்திரம். 'இலக்கணத்தை' என்றது-சங்கீதத்தின் லட்சணங்களை என்றபடி; என்னை? முன்னை 'எழுத்து' என்றது இயலிலக்கணங்களைக் குறித்ததாகலின். இனி, 'எண்ணை எழுத்தை' என்றதால் இயற்றமிழையும், 'இசையை' என்றதால் இசைத்தமிழையும், 'இலக்கணத்தை' என்றதால் அழகுமிக்க நாடகத்தமிழையும் [இலக்கணம்-அழகு] குறிப்பதாக் கொண்டு முத்தமிழ்வித்தகரைப் போற்றுதலின்மூலம் அந்த முத்தமிழையும் உண்டாக்குகின்றனர் வேளாண்பிரபுக்கள் என்றபடியுமாம். இங்ஙன், எண் எழுத்து இசை இலக்கணங்களை வளம் பெறவுண்டாக்குதலால் 'திருப்புகழை' உண்டாக்குகின்றனர் என்க. திரு-மங்கலம் குறிப்பது. உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பதொன்றில்லாகலின், அதனை விளைவிக்கின்றனர் என்றார். அதனால் அவர் கை 'வாகுளகை' யாயிற்று. வாகு - ஒளி, ஒழுங்கு (Propriety), சாமர்த்தியம். உள - உள்ள. இடைக்குறை. வேளாளப்பிரபுக்கள் பல துறைப் புலவர்களையும் ஆதரித்து அன்னார் மூலம் நூற்றுறைகளைப் பெருக உண்டாக்கியமை பிரசித்தம். **(41)**

—பண்ணமைந்த

வேதமொரு நான்கினையு மிக்கதமிழ் நாலடியால்
ஓதியுரைத் தேகருணை யோங்குங்கை—

(கு - ரை.) இது நம்மாழ்வாரைக் குறிப்பது. இவர் வேளாள வருணத்தினர். இவர் பாடியருளிய திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்ற நான்கு பிரபந்தங்களும் முறையே இருக்கு யஜுஸ் அதர்வணம் சாமம் என்ற நான்கு வேதங்களின் ஸாரார்த்தத்தை வெளியிடுவனவாம். இவற்றுள், திருவாய்மொழி, "ஓதும் குருகையர்கோன் யாழினிசை வேதத் தியல்", "இசை, கூட்டி வண்சடகோபன் சொல்லமை, பாட்டோ ராயிரம்", "பண்டலையிற் சொன்ன தமிழாயிரம்", "செயிரில் சொல்லிசை மாலையாயிரம்", "பண்கொளாயிரம்" என்று பலவாறு போற்றப்படுதலால் 'பண்ணமைந்த வேதம்' என விதந்தோதப் பட்டதெனலாம். திருவாசிரியம் நாலடியிகப்பினும், மிகுதிபற்றி 'நாலடியால்' எனப்பட்டது, செட்டித்தெரு, கமுகந்தோட்டம் என்பதுபோல. 'ஓதி' என்ற சொல்லாற்றலால் நம்மாழ்வார் வாய் மொழி வேதமாயிற்றென்றபடி. அவர் ஓதியது பிரபந்நர் கருக்குழி யிற் புகாவண்ணங் காத்து ஈடேற்ற வாகலின் 'கருணை' என்றது, நிர்ஹேதுக கிருபையைக்காட்டிற்று. 'ஈன்ற முதல்தாய் சட கோபன்' என்ற பட்டர் அருள்வாக்கும்நோக்குக. இந்தக் கண்ணி கொண்டும் சடகோபரந்தாதி பாடியமைகொண்டும் கம்பரை வைணவரென்றே சாதிப்பாருளர். ஸ்ரீ ஆறுமுகநாவலர் பதிப்பு உட்பட எல்லா திருக்கைவழக்கப் பதிப்புக்களிலும் இந்தக் கண்ணியிருப்ப,தொழுவூர் ஸ்ரீ வேலாயுத முதலியார் பதிப்பில் இக் கண்ணி விடுபட்டிருக்கிறது என்று திருமணம் செல்வகேசவராய முதலியார் குறித்துள்ளார். (42)

—பூதலத்திற்
பாவல னெச்சிற் படுமாங் கனியையெடுத்
தாவ லுட னன்று வருந்துங்கை—

(கு - ரை.) புலவனெச்சிற்படுத்திய மாங்கனியை வெறுப் பின்றி விருப்புடன் உண்டான் ஓர் வேளாண்மகன் என்றதால் புலவோரை மகிழ்விப்பதில் ஊற்றமும், அவர் போனகம் செய்த சேடம் புனிதமென்ற மனப்பண்பும் உடைமை பெறவைக்கப் பட்டது. இதன் விவரம் வந்தவழிக் காண்க. (43)

—காவலவன்
மண்ணிற் கடலின் மலையிற் பெரியதென
எண்ணியெழு திக்கொடுத்த வேற்றக்கை—

(கு - ரை.) இது வேளாளர் மரபிலுதித்த சேக்கிழார் பெரு மானைப்பற்றியது. விவரம்:—ஒருநாள் சோழமன்னன் தன் சபையி லுள்ளோரைப்பார்த்து 'பூமியிற்பெரிது, கடலிற்பெரிது, மலையிற் பெரிது' எதுஎது என்று கேட்டு மறுநாள் விடைசொல்ல வேண்டுமென்ன, அச்சோழ சபையில் உத்தியோகத்திலேயிருந்த தந்தையார் வீட்டுக்குவந்து சிந்தனையிலாழ்ந்திருப்ப, மகனாகிய சேக்கிழார் அது கண்டு, மிக எளிதில் அவற்றிற்கு விடையாகத் திருக்குறளிலிருந்து பின்வரும் மூன்று குறட்பாக்களையும்

சொல்லித் தந்தையாரை வியக்கவைத்தார். அக்குறட்பாக்கள் முறையே:—"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது": "பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின், நன்மை கடலிற் பெரிது"; "நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம், மலையினும் மாணப் பெரிது" என்பன. இதனால், சேக்கிழார் இளமையிலேயே கல்வியில் மேம்பட்டு விளங்கினார் என்பது பெறப்பட்டது. இந்த வரலாற்றையொட்டிச் சபாபதி நாவலர் தமது சிதம்பர சபாநாத புராணத்திலே "ஞாலமலை கடல்தன்னிற் பெரியதெது எனவெடுத்து ஞால மாள்செங், கோலனநபாயன்வின வியமுத்தி றக்குறிப்பைக் குறிப்பினோர்ந்து, சாலவுயர் திருக்குறண்மூன் றிறையாக வெழுதியவனரசு தாங்கி, வாலறிவாற் றிருத்தொண்டர் புகழ்விரித்த சேக்கிழார் மலர்த்தாள் போற்றி" என்று துதித்துப்பாராட்டியிருத்தலையும் நோக்குக. காவலவன் - அநபாயசோழன். என - எது என என்றபடி. (44)

—திண்ணமதாய்
வையகமெங் குந்தேடி வந்ததமி ழோன்புகழச்
செய்யமுடி யைக்கொடுத்த செம்பொற்கை—

(கு - ரை.) முடி - தலை. இது, குன்றையூர் எல்லன் என்னும் பிரபுவின் தலையை ஒருபுலவன் கேட்கையில் அவருள்ளங்களிக்க மகிழ்ந்து தன்தலையை யறுத்துக்கொடுத்தார் என்பது கதை. இதனை "எல்லன் என்னும் பிரபு அறநெறியன்றிப் பிறநெறி செல்லானாதலின், சொன்ன சொல்லை மறுத்துரையாமல் தனது தலையையரிந்துகொடுத்தான்: இச்செயல் புறவின்பொருட்டுத் தனது உடற்றசையையரிந்து கொடுத்த சிபியின் செயலினும் சீரிதன்றோ" எனப்புகழ்ந்தது தொண்டைமண்டலசதகம். மற்றும் அச் சதகமே "......தலை கொடுத்தோனும் ......அனையோருளார் தொண்டைமண்டலமே" என இவன் செயலைப் பாராட்டியுள்ளது. மற்றுமோர் பிள்ளைத்தமிழ் தாலப்பருவத்தில் "தலையிந்தா வெனுமைந்தா தாலோ தாலேலோ, தரைகுன்றைப் பதியெல்லா தாலோ தாலேலோ" என இச்செயல் பாராட்டப்பட்டுள்ளது. வையகமெங்குந் தேடிவந்த தமிழ்ப்புலவன் குன்றையூர் எல்லனை அண்டியதற்கும் ஓர் மேற்கொள் வெண்பா காட்டலாம்: அஃது பின் வருமாறு:—"ஆலெங்கே யங்கே யரும்பறவை யாற்றுயினும், மாலெங்கே யங்கே மலர்மடந்தை—சோலைதொறும், செங்கே தகைமணக்குஞ் செங்குன்றை யெல்லனெங்கே, அங்கே யிரவலரெல் லாம்" என்பது. (45)

—துய்யபுகழ்
அட்டதிக்கு மெண்கீர்த்தி யாயிரத்தெட் டானைதனை
வெட்டிப் பரணிகொண்ட வீரக்கை—

(கு - ரை.) இது, வன்னியனாயினும் வேளாண்மையின் மிக்க கருணாகரத்தொண்டைமானைக் குறிப்பது. இவன் முதற்குலோத்துங்கன்படைத்தலைவனாய்க் கலிங்கத்துச்சென்று பலயானைகளை வெட்டிவீழ்த்தி மற்றும்பல யானைகளைச் சிறைபிடித்து வென்றி

யொடுவந்தமையைக் கலிங்கத்துப்பரணி கொண்டறியலாம். பரணி கொண்டவன் குலோத்துங்கனுயினும் அவன் படைத்தலைவனுக்கும் ஏற்குமெனச் சொன்னபடி என்க. "ஆனை யாயிரம் அமரிடை வென்ற, மானவனுக்கு வகுப்பது பரணி" யாதலின், 'ஆயிரத்தெட்டானை தனைவெட்டிப்பரணி கொண்ட' என்றது. 'துய்யபுகழ் அட்டதிக்கும் எண்கீர்த்தி' என்றது - இசையால் திசைபோயவன் என்றபடி. இவன் செயலினைத் தொண்டைமண்டல சதகமும், "பண்டையொர் நாளெயி லோரேழ் கலிங்கப்பரணிகொண்டு, செண்டையு மேருவிற் றீட்டுவித்தோன் கழற்செம்பியன்செய் தொண்டைநன்னாடு புரக்கின்ற கோனந்தித் தோன்றலெங்கள், வண்டையர் கோனங் கருணாகரன் தொண்டைமண்டலமே" எனப் பாராட்டியது. (46)

—திட்டமுடன்

பொன்னு லமுதும் பொரிக்கறியுந் தான்கொணர்ந்து
நன்னு வலர்க்களித்த நாணயக்கை—

(கு-ரை) பொன்னால்-பெற்ற பொருளால். இது, வேளாளராகிய மூனையடுவார் நாயனர் என்னும் சிவனடியாரைக் குறிப்பது. மூனையடுவார் போர்முனையெறிந்து தாம்பெற்ற பொருளினையெல்லாம் ஈசனடியார்க்கும் நன்னுவலர்க்கும் வழங்குவதோடு, நெய், கறி, தயிர், பால், பழம் முதலியவற்றோடு திருவமுது அளிப்பார் என்பதை "இன்ன வகையால் பெற்றநிதி யெல்லாம் ஈசனடியார்கள், சொன்ன சொன்ன படிநிரம்பக் கொடுத்துத் தூய போனகமுங், கன்னல் நறுநெய் கறிதயிர்பால் கனியுள் ளுறுத்த கலந்தளித்து, மன்னும் அன்பின் நெறிபிறழா வழித்தொண் டாற்றி வைகினர்" என்ற பெரியபுராணச்செய்யுளால் தெளிக. இதனையே ஈண்டு 'அமுதும் பொரிக்கறியும்......அளித்த' என்றது. நன்னுவலர் என்றது ஈசனடியார்க்குமாகும். 'நள்ளார்முனையெறிந்த வளங் கொடிறைவரடியார்க்கு மாறுதளிக்கும் வாய்மையார்' ஆதலின் 'நாணயக்கை' என்றது. நாணயம் - நேர்மை. (47)

—முன்னாள்

மனக்கவலை யுற்ற வணிகன்முன் னேநின்று
தனைக்கா வெனக்கேட்ட தன்கை—

(கு - ரை.) கேட்ட - கேட்க, [அவனுக்கு] உதவிய தன்கை என்க. இது ஒருகால் ஆறைநகர்மேவு பரமேசுரன் புதல்வன் எல்லன் என்பானைக் குறிப்பதாகலாம். அவனைப்பற்றிய ஆறைக் கலம்பகத்தில், 'செட்டிதன்பழி தவிர்த்தவன் பரிவுசெய்து பெண் பழிதவிர்க்கிலான்' என வருதலின். விவரம் வந்துழிக் காண்க. இனி, 15, 16-ஆம் கண்ணிகளிற் கூறியதையே திரும்பக் கூறியதாக் கொண்டாலும் இழுக்கின்று; என்னையெனில், அஃது அரும்பெருஞ் செயலென்று இம்மூலமாக வேளாளர்பெருமையை நன்கு விளக்குதற்கு என்க. இன்றும், பழையனூர்க்குச் செல்லும் வழியில் குழிமாண்டார்கோயிலையும் அதற்கு நேரெதிரே ஸ்ரீ சாக்ஷி

பூதேஸ்வரர் கோயிலையும் தரிசிக்கலாம். 'தங்கக்கை' என்றபாடம் உண்டு. அது, மேல்வரும் 'கனக்கவே' என்ற சீரோடு ஒன்ற வெண்டளை தட்டுதலின், 'தண்கை' என்ற பாடங் கொண்டாரு முளர். அதனையே இங்குக் கொண்டேன். இனி 'திண்கை' என்றும் இருக்கலாம். (48)

—கனக்கவே

அன்றீன்ற நாகெழுப தானவெரு மைத்திறத்தைக்
கன்றோடு நல்குங் கடகக்கை—

(கு - ரை.) நாகு - எருமையிற் பெண். எழுபதான எருமை நாகு என மாறுக. திறம் - கூட்டம், மந்தை; herd. அன்றீன்ற கன்றோடு நல்கும் எனக்கூட்டுக. வேளாளர் தம்பாலுள்ள பசு மந்தைகளையும் எருமைகளையும் புலவர்க்குக் கொடுப்பரென்பதை "நிரையிந் தெருமைப்போத்தளித்து......வாழ்வதன்றோ தொண் டைமண்டலமே" என்ற சதகச்செய்யுளாலும் தெளிக. கடகம் - கங்கணம்: Bracelet, armlet: இனி, கைக்குக் கடகம், இயற்கை யடைமொழியுமாம். கனக்கவே நல்கும் என இயையும். கனக்க - மிகுதியாக. (49)

—வென்றிதரும்

ஓரானை நூறு யிரக்கலநெல் லோர்கவிக்குச்
சீராக நல்குந் தியாகக்கை—

(கு - ரை.) ஒருகவிக்கு ஒருயானையையும் ஒருலக்ஷம் கலம் நெல்லையும் கொடுப்பர் என்றதால் யானையின் பராமரிப்புக்கேற்ற நிலபுலங்களையும் வழங்குவர் என்பது பெறப்படும். யானையைக் கொடுப்பதுண்டென்பதை "உலைக்குரிய பண்ட முவந்திரக்கச் சென்றால், கொலைக்குரிய வேழங் கொடுத்தான் - மலைக்குரிய, வாணர்கோ னுறை மகதேவன்" என்று ஏகம்பவாணனைப்பற்றிக் கூறியவிடத்தானும் உணர்க. (50)

—பெரியலைச்

சாற்றுமொட்டக் கூத்தன் சரசகவி சொல்லப்பா
லாற்றுநீர் காற்கொணர்ந்த வாண்மைக்கை—

(கு - ரை.) இயல் - இயற்றமிழ்; அதாவது, இலக்கணமரபு பிறழாத செய்யுள் உரைநடை நூல்கள். கால் - வாய்க்கால்: Irrigation channel. சரசகவி = பரிகாசமான பாட்டு. இந்தக் கவி யாதென விளங்கவில்லை. ஒருகால் ஒட்டக்கூத்தன் வாய்க்கால் களால் சோணாட்டை வளம்படுத்தும் காவிரியைப் புகழ்ந்து, தொண்டைநாட்டிற் பாயும் பாலாற்றை அத்தகைய வாய்க்கால் களில்லாமைகண்டு சரசகவி மூலம் கேலி செய்திருக்கலாமோ எனத் தோன்றுகிறது. அங்ஙன் கூத்தன் சரசகவி சொல்லவே, வேளாளப்பெருமக்கள் பாலாற்றின் நீரைக் கால்வாய்கள் வெட்டி அவற்றின் மூலம் பாயச்செய்து தொண்டைநாட்டை வளம் பெறச்செய்த வீரமுடையவர் எனப்பெறவைத்தபடி. எனவே,

''பாலாறு வளஞ்சுரந்து நல்கமல்கும் பாலைவிரிமணங்கமழ் பூஞ் சோலைதோறும், காலாறு கோலியிசைபாடநீடு களிமயினின்றாடு மியற்றொண்டை நாடு'' என்று உமாபதி சிவாசாரியர் பிற்காலத்துப் போற்றும்படியாயிற்று வேளாளர்செய்த அருஞ்செயலால். ()

—நேர்த்திபெற

வண்டமிழோன் றனுதைத்த வாகுளகா லுக்குப்பொன்
வெண்டயமிட் டேவணங்கும் வெற்றிக்கை—

(கு - ரை.) வாகு - அழகு: இங்கே இகழ்ச்சிக் குறிப்பினது. வெண்டயம் - காலணி, கட்டைவிரல் மோதிரம். இங்கே அறிய வேண்டிய விவரம்:—வல்லமென்னும் ஊரில் வாழ்ந்த கச்சியப்பன் என்னும் பிரபு பல்லக்கிலேறிப்போம் வழியிலே துடுக்கான வீரன் என்னுமொருபுலவன், தன்னைக்கண்டும் இறங்காமற் பல்லக்கிலேயே சென்றதற்காக அந்தப் பல்லக்கையிறக்கச்செய்து உள்ளேயிருந்த பிரபுவை வில்லைச்செருப்பையணிந்த தன்காலினால் உதைத்தான்: அப்பிரபு சிறிதும்கோபிக்காமலும் வெறுக்காமலும் பொறுத்து அப்புலவனுக்குப் பணிவுடன் உபசாரஞ்செய்து ஒரு பல்லக்குங்கொடுக்க, அப்புலவன் அப்பிரபுவை மிகப்புகழ்ந்து "பல்லக்கிலேயன்றி மண்படுமோ" என்னும் பாடலைப்பாடினான். அப்பிரபுவாகிய கச்சியப்பனும் தொண்டைமண்டலத்து வேளாண் பெருமகனாவன். "மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு, கண்படுமோ வன்பாகக் கற்றவர்கள்—மண்புகழ, மெச்சியப்பா லும்புகழும் வீறுவல்லை யாளவந்த, கச்சியப்ப னையுதைத்த கால்" என்ற வெண்பா அவர் பெருமை குறிக்கும். ஈண்டு, "வில்லைச்செருப் பிட்ட காலாலுதைத்து வியனுலகில், சொல்லற்கரிய புகழ்கொடுத் தோன்றுட்ட வீரன்றன்னுற், பல்லக்கிலேயன்றி மண்படுமோ வெனும்பாடல் கொண்ட, வல்லப்பதிக்கச்சியப்பனும் வாழ் தொண்டை மண்டலமே" என்ற சதகப்பாடலையும், "உதை கொடுக்க மார்கொடுத்தோனும் அனையோருளார் தொண்டை மண்டலமே" என்ற வரியையும் நோக்குக. 'பொன்வெண்டய மிட்டே வணங்கும்' என்றது-அவன் புலவனுக்குப் பொதுவாகச் சிறப்புச்செய்தபடி குறிப்பது என்க. (52)

—புண்டரிகக்

கையாற் புலவன் கனகமுடி மேற்குட்டச்
செய்யாழி பண்ணியிட்ட தீரக்கை—

(கு - ரை.) புண்டரிகம்-தாமரை. செய் ஆழி-செவ்விய மோதிரம். கனகமுடி-சிறந்த தலை என்றபடி. குட்டின கைக்கு மோதிரம் இட்ட தீரர் வேளாண்மரபினர் என்றபடி. விவரம் வந்துழிக் காண்க. (53)

—தொய்ய

எறும்புக்கு மாஸ்பதந்தா னில்லையென்ற மட்டிற்
றிறம்புக்க யானைதருஞ் செங்கை—

(கு-ரை.) நொய்ய-அற்பமான. ஆஸ்பதம்-ஆதாரம் (Support); இது வடசொல்: இதனை 'ஆற்பதம்' எனத் திருத்திக் கொண்டாருமுளர்: அருணகிரியார் திருப்புகழில் "சரணாஸ்பதமருள்வாய்" என அப்படியே அமைத்திருத்தல் நோக்கத்தக்கது. இங்குக்குறிப்பது-எறும்புக்கு உணவிடுமாறு கூட ஒரு அரிசியேனும் என்னிடம் இல்லை என்று புலவன் கூறியவுடனே மங்கையிற் புகுந்திருந்த [மங்கையாக விருந்த] யானையைத்தருகின்ற வண்கையினர் வேளாளர் என்றபடி. இஃது, சிறிது கேட்கப் பெரிது ஈயும் அவர் வள்ளன்மை குறிக்கும். "சேற்றுக் கமலவயற் றென்றுறை வாணனையான், சோற்றுக் கரிசிதரச் சொன்னக்கால்—வேற்றுக், களிக்குமா வைத்தந்தான் கற்றவர்க்குச் செம்பொன், அளிக்குமா றெவ்வா றிவன்" என்னும் ஏகம்பவாணனைப்பற்றிய பாடலை நினைக. ஆய்அண்டிரனுகிய வேளாள வள்ளலைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். திறம்-மங்கை. (54)

—பறம்புதனில்

எண்ணு யிரமுனிவர்க் கேற்றபடி யப்படியே
பண்ணுக் கொடுக்கும் பராக்ரமக்கை—

(கு-ரை.) 'பறம்பு' என்றதால் வேள் பாரியைக் குறிப்பதாக் கொள்க. [வேள் என்பது வேளாளர்பெற்ற சிறப்புரிமைப் பெயர்]. முந்நூறு ஊரையுடைய பறம்புநாட்டைப் பரிசிலர்க்கு ஈந்தனன் என்பதைப் புறநானூறு செய்யுள் (110) கொண்டு தெளியலாம். அஃதேபோல் தன்னையண்டிய பல அந்தணர்களுக்கு அவர்கள் பெருமைக்கேற்றபடி அவர்கள் விரும்பிய அளவுப்படியே தகுதியாகப் பொருள்களைக் கொடுத்த வீரக்கையினன் பாரி என்றபடி என்க. முனிவர்-அந்தணர்: கபிலர் என்ற புலனழுக்கற்ற அந்தணாளரும் பாரிபால் நட்புரிமை பூண்டிருந்தமை யோர்க. எண்ணுயிரம் என்றது மிகுதிகுறிக்கவந்த ஒருபேரெண். அப் படி - [அவர்விரும்பிய] அவ்வளவே: படி-அளவு. பண்ணு - தகுதியாக, வரிசையறிந்து என்றபடி: பண்-தகுதி. பராக்ரமம் - வீரம்:"கடந்தடு தானை மூவிருங்கூடி, உடன்றனி ராயினும் பறம்பு கொளற் கரிதே" என்ற கபிலர் வாக்குக்கொண்டு பாரியினது வீரம் ஓர்க. (55)

—விண்ணுடர்

கூர்த்த புகழண்ட கோளமள வும்படர
நாற்றிக்கு மேருவினி னட்டுங்கை—

(கு - ரை.) நாற்றிக்கும் அண்டகோளமளவும் விண்ணுடர் கூர்த்தபுகழ் படர மேருவினில் நாட்டுங்கை எனக்கூட்டுக. எல்லாத்திக்கிலும் வானத்திலும் தேவர்புகழ் பரவுமாறு இவ்வுலகத்து மேருவில் புகழ்க்கொடி நாட்டியவர் வேளாளர் என்றபடி. நிலவுலகத்தாரை உணவு உண்ணச்செய்தலோடு, அந்நிலவுலகத்தார் செய்யும் யாகங்களிற் கொடுக்கப்படும் அவிர்ப்பாகமூலமாகத் தேவர்களையும் திருப்தி செய்து பாதுகாத்தலால், அத்தேவர்கள்

புகழையும் குன்றாது நாட்டிப் படரச்செய்பவர் வேளாளர் என்பது தேர்ந்த கருத்து. மேருவில் [கொடி] நாட்டுதல் என்பது எல்லாருங்காணப் பரப்புதற்கு ஓர் வழக்கு. விண்ணோர் - தேவர். கூர்த்த:'கூர்' என்ற உரிச்சொல்லினடியாப்பிறந்த பெயரெச்சம். 'நாற்றிசைக்கு' என்ற பாடம் சில பதிப்பிற் காண்கின்றது. (56)

—சீர்க்குகனை

ஆதார மானவனை யைங்கரனைச் சங்கரனைப்
பாதார விந்தம் பணியுங்கை—

(கு - ரை.) குகனை - குகனுக்கும், ஐங்கரனை - கணபதிக்கும், ஆதாரமானவனை - தோற்றக்காரணமாயிருந்த சிவபிரானை எனப் பொருள் செய்க. அஞ்ஞான்று, மேல், 'சங்கரனை' என்பதோடு இயைந்து பொருள் சிறக்கும். இனி, மூவரையும் பணியுங்கை எனினுமாம். பாத அரவிந்தம் - திருவடித்தாமரைகள். இது, வேளாளரின் சைவப்பற்றுக் குறித்தது. (57)

—நீதி

நடக்கை யிருக்கை நகைக்கை மிடிதீர்க்கை
கொடுக்கை செழுங்கை குளிர்க்கை—

(கு - ரை.) நீதிநடத்துதல், நீதிதங்குதல், நீதி விளங்குதல், மிடிதீர்த்தல், ஈதல், இவற்றால் செழித்த கை எனப்பொருள் காண்க. 'நீதி' என்ற சொல் மேனின்ற 'கை' விகுதிபெற்ற மூன்று தொழிற்பெயர்களோடும் இயைந்தது. நகைக்கை - ஒளிர்தல். நகை - ஒளி: "நகைதாழ்பு துயல்வரூஉம்" (திருமுருகு: 86). மிடி-வறுமை: "மண்ணவர் வறுமைநோய்க்கு மருந்தன சடையன்" என்ற கம்பன் வாக்கும் நினைக. தீர்க்கை, கொடுக்கை-இரண்டும் 'கை' விகுதிபெற்ற தொழிற்பெயர்களே. நீதிநடக்கை யிருக்கை நகைக்கை - இதனை முன்னர்வந்த 15, 16, 17 கண்ணிகளால் தெளியலாம். மிடிதீர்க்கை கொடுக்கை என்பவற்றைப் பின்வரு மாற்றான் தெளியலாம்:—இரவலர்க்கு உணவு பசும்பொன் மணி அணி ஆடை கொடுத்து, பின்னும் லச்சையுடையவராய்த் தமக்கு வேண்டியவற்றை வாய்திறந்து கேட்கக் கூசுவோரு மிருப்பரென் றெண்ணி, அவர் மனத்தில் கருதியவற்றை எழுதும்படிசெய்ய முற்றத்தில் மணலைப் பரப்பிவைத்து அவ்விரவலர் எழுதுமட்டும் வீட்டினுள் மறைந்திருந்து பின்வெளிவந்துபார்த்து அவர்கள் எழுதினபடியே கொடுக்குங் கொடையாளனாகிய மாகறல் ஊரின னாகிய புண்யகோடி யென்னும் வேளாண்பிரபுவின் வரலாற்றால் அறியலாம். மற்றும், பஞ்சம் வந்த காலத்து அப்பஞ்சம் நீங்குமள வும் நாலூரிலிருந்த புலவர்களுக்கும் வேறு தேசத்திலிருந்துவந்த நாவலர்க்கும் அவர் விரும்பியபடியே அன்னம் முதலியன இட்டு ஆதரித்து, நாடு செழித்த பின் அவர்களுக்குத் தக்க பரிசளித் தனுப்பிய குமிழம்பட்டு ஊரினராகிய வேளாண்பிரபுவின் வரலாற்றானும் அறியலாம். "உணலைப்பசும்பொன் முதலான

வற்றை யுதவிப்பின்னும், குணலச்சை யுள்ளவர் கேட்கவுங் கூசுவர் கொல்லெனவே, எணலைக் கருதியெழுதிவைப்பீரென வின்மறைந்து, மணலைப்பரப்பிய முன்றிலுளான்தொண்டை மண்டலமே"; "கோலூருழவுக் குடியானவன்றன் குமிழம்பட்டு, வேலூர்க்கிழானொரு வேளாளன் பஞ்சம் விடியளவும், நாலூரி லுள்ள புலவோர்க்குந் தேசத்து நாவலர்க்கு, மாலூரிலன்னங் கொடுத்தளித்தான் தொண்டைமண்டலமே" என்பது சதகம். செழும் கை - மேற்குறித்த ஐந்தொழில்களாலும் வளமுற்ற கை. எனவே, குளிர்க்கையாயிற்று. குளிர்க்கை - இனியதாகுங்கை. குளிர்தல் - கண்முதலியபொறிகளுக்கு இனியதாதல். (58)

—தொடுத்ததெல்லாஞ்

சீராக வுண்டாக்குஞ் செங்கைப் பெருங்கருணைக்
காராளர் கற்பகப்பூங் கை.

(கு - ரை.) தொடுத்தது-புலவர் வளைத்துக் கேட்டது. தொடுத்தல் - வளைத்தல்: "தொடுத்துங் கொள்ளா தமையலென்"என்ற புறம் காண்க. (செ: 164). தொடுத்ததெல்லாம் - ஒருமைப்பன்மை மயக்கம். தொடுத்ததெல்லாம் சீராகவுண்டாக்குஞ் செங்கை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு:—வல்லாளன் என்னுமொரு வேளாண் பிரபு அரசன் அழைக்க அவன் சபைக்கு விரைந்து வந்துகொண்டிருக்கும்போது இடைவழியிலே ஓர் புலவன் தடுத்துத் தனக்கு உடுக்க உடையில்லை யென்றிரக்க, அதுகேட்டு அவனை மனைக்கு வரும்படி சொல்லமனமில்லாது, உடனே தான் உடுத்தியிருந்த ஆடைகளைக் களைந்து கொடுத்துவிட்டு, அருகிலிருந்த குளத்தினீரி லிறங்கித் தங்கியிருந்து, கரையிற்போவாரை யழைத்து ஆடை கொணர்வித்து உடுத்திக்கொண்டு அரசவைக்குச்சென்று புகழ் பெற்றார். இதனை "உளத்துத் தயையற்றவோர்புலவோனுக் குடையுதவிக், குளத்துப்புனலை யுடுத்துநின்றே பின்பு கூவியவைக், களத்துப்புகுதக்கலையுடுத்தேகரையேறிவந்த, வளத்துப் புகழ்பெற்ற வல்லாளனுந் தொண்டைமண்டலமே" என்ற சதகச்செய்யுளாலறிக. இவ்வாறு, மேல் 58 கண்ணிகளிலுங் குறித்துள்ள பெருமைகளைக் கொண்டிலங்குங் கை யாதெனில்: "பெருங்கருணைக்காராளர் கற்பகப்பூங்கை" என வினைமுடிபு செய்க. காராளர் - வேளாளர். இவர் கையின் சிறப்பினை, "மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர்நோக்குங்கை, ஆழிதரித்தேயருளுங்கை —சூழ்வினையை, நீக்குங்கை என்று நிலைக்குங்கை நீடூழி, காக்குங் கை காராளர்கை" என்று கம்பர் பிறிதொருசமயம் வயலிலுழும் வேளாளனிட்ட கூழுண்டு பாடியதாலும் உணர்க. (59)

திருக்கைவழக்கம் முற்றிற்று.

இதனடியிற் குறித்துள்ள புத்தகங்கள் வை. மு. நரசிம்மன், (வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் குமாரர்) வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியர் கம்பெனி, 17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5 என்ற விலாசத்திற் கிடைக்கும்:—

வை. மு. கோ. பதிப்புகள்.

கம்பராமாயணம்:—

பாலகாண்டம்	உரையுடன்	...	9—00
அயோத்தியா காண்டம்	,,	...	9—00
ஆரண்ய காண்டம்	,,	...	9—00
கிட்கிந்தா காண்டம்	,,	...	9—00
சுந்தர காண்டம்	,,	...	9—00
யுத்த காண்டம் 1-வது வால்யூம்	,,	...	9—00
,, 2-வது ,,	,,	...	10—00
உத்தர காண்டம் ,,	,,	...	(அச்சில்)

வில்லிபாரதம் :—

ஆதிபருவம்	உரையுடன்	...	4—50
சபாபருவம்	,,	...	4—50
ஆரண்ய பருவம்	,,	...	4—50
விராட பருவம்	,,	...	2—50
உத்தியோக பருவம்	,,	...	4—50
வீட்டும துரோண கன்ன பருவங்கள்	,,	...	9—00
சல்லிய சௌப்திக பருவங்கள்	,,	...	3—00
கன்ன பருவம் மட்டும்	,,	...	3—00

திருக்குறள் :—

மூன்றுபாலும் (புதிய பதிப்பு) ... 10—00

அறத்துப்பால் பரிமேலழகருரையுடனும் அதற்குக் குறிப்புரையுடனும் ... 3—00

பொருட்பாலும் காமத்துப்பாலும் ,, ... 6—00

(பரிமேலழகருரைக்கு எழுதியுள்ள குறிப்புரைகள் கற்போர்க்குப் பரிமேலழகரின் உரைக்கருத்துக்களை ஐயந் திரிபுஅற விளக்குவதோடு அவர்களைச் சிறந்த புலவராக்கும்.)

பத்துப்பாட்டு - ஆராய்ச்சியுரையுடன் ... 9—00

(இவ்வுரை நச்சினார்க்கினியருரை நயத்தைத் தெளிவுறுத்துவதுடன் கற்போர்க்கு ஆராய்ச்சித் திறனையும் ஊக்குவிக்கும்.)

பத்துப்பாட்டில் தனியே கிடைக்கும் பகுதிகள் :—

திருமுருகாற்றுப்படை	ஆராய்ச்சியுரையுடன்	...	0—62
பட்டினப்பாலை	,,	...	0—75
பொருநராற்றுப்படை	,,	...	0—75

தண்டியலங்காரம் :—

தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் முழுவதும்) மூலம், பழைய வுரை, குறிப்புரையுடன்	...	3—50

அஷ்டப்ரபந்தம் - உரையுடன்

திருவரங்கத்துமாலை, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, ஸ்ரீரங்கநாயகரூசல் முதலி யன (ஒரே பகுதியில்)			6—00
திருவரங்கக்கலம்பகம்	உரையுடன்	...	1—50
திருவரங்கத்தந்தாதி	,,	...	1—00
திருவேங்கடத்தந்தாதி	,,	...	1—25
திருவேங்கடமாலை	,,	...	1—00

கம்பர் இயற்றிய புத்தகங்கள் :—

சடகோபரந்தாதி	உரையுடன்	...	2—00
சரசுவதி யந்தாதி	,,	...	0—50
ஏரெழுபது	,,	...	1—00
சிலையெழுபது	,,	...	0—75

இதர புத்தகங்கள் :—

திருப்பாவை தமிழ்நடை	உரையுடன்	...	0—50
நன்னூற்காண்டிகையுரை	,,	...	3—50
மதுரைக்கலம்பகம்	,,	...	1—50
அழகர்கலம்பகம்	,,	...	0—62
ஆழ்வார்கள் சரித்திரம், பட்டர் வைபவம், பிள்ளைலோகாசாரியர் வைபவம்		...	2—00
சந்திராபீடசரிதம்		...	0—37

சிலப்பதிகாரம் :—

காட்சிக்காதை	உரையுடன்	...	0—60
நாடுகாண்காதை	,,	...	0—50

மணிமேகலை :—

பாத்திரம்பெற்ற காதை	உரையுடன்	...	0—25
மலர்வனம்புக்க காதை	,,	...	0—25

—:o:—